Koviloor Digital Library

கோயிற் பண்பாடு

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை – 2019)

ரூசா கட்டம் 2.0 ஆய்வுத்திட்ட நிதியின்கீழ் வெளியிடப்பெறுகிறது
(SPONSORED UNDER RUSA PHASE 2.0 SCHEME)

Acc. No. 30296
32-2

பதிப்பாசிரியர்கள்

பேரா சே. செந்தமிழ்ப்பாவை

முனைவர் கா. கணநாதன்

முனைவர் சொ. அருணன்

... மையம்

...

... – 3

Koviloor Digital Library

Koviloor Digital Library

32-2

கோயிற் பண்பாடு

[பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை – 2019]

பதிப்பாசிரியர்கள்

பேரா, **சே. செந்தமிழ்ப்பாவை**

இயக்குநர்,

முனைவர் **கா. கணநாதன்**

முனைவர் **சொ. அருணன்**

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30296

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி – 3

Koviloor Digital Library

நூல்	:	கோயிற்பண்பாடு பன்னாட்டுக் கருத்தரங்கம் ஆய்வுக்கோவை - 2019
பதிப்பாசிரியர்கள்:		பேரா. சே. செந்தமிழ்ப்பாவை முனைவர் கா. கணநாதன் முனைவர் சொ. அருணன்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
அளவு	:	1/8 டெமி
எழுத்து	:	12 புள்ளி
விலை	:	₹500/-
பக்கங்கள்	:	500
பதிப்பகம்	:	கபிலன் பதிப்பகம் 321, மூன்றாம் முதன்மைச்சாலை, மகாவீர் நகர், இலாசுப்பேட்டை புதுச்சேரி - 605008 arunankapilan@gmail.com

ISBN: 978-93-84428-37-2

Koviloor Digital Library

32-2

அழகப்பா பல்கலைக் கழகம்

(தேசியத் தர நிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+ தகுதி (CGPA:3.64) மற்றும்
மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக் குழுவின் முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதி பெற்றது)

காரைக்குடி - 630 003

2017	2018	2018	2018	
Accredited with A+ Grade by NAAC (CGPA : 3.64)	MHRD Graded as Category-1 & Granted Autonomy	Swachh Campus Rank : 4	nirf National Institutional Ranking Framework Rank : 27	World University Rankings India Rank : 20 BRICS Rank : 104 Asia Rank : 215



அணிந்துரை

தமிழ்ப்பண்பாட்டின் தோற்றமே கோயில்களிலிருந்து தொடங்குகிறது. மக்கள் கூடி வாழத்தலைப்பட்ட சமூகம் உருவாகியபோது கோயில் அதன் நடுநாயகமாக விளங்கியது. அதனால் தான் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் முதுமொழி தோன்றியது. கோயிலில் நிகழும் ஒவ்வொரு செயலும் தனிமனித வாழ்வுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் பயன்தரத்தக்க வகையிலேயே அமைகின்றன. பூசையும் வழிபாடும் தனிமனிதர்களுக்கு என்றால், திருவிழாக்களும் புனரமைப்பும் சமுதாயத்திற்குரியதாகின்றன. ஆகக் கோயில் என்பது குடிகளைத் தழுவியதாகவும் குடிகள் என்போர் கோயிலைத் தழுவியோராகவும் விளங்கிய சமுதாய அமைப்பு தமிழர்களுக்குரியது.

நடுகல் வழிபாட்டிலிருந்து தோன்றிய கோயில் கட்டடக்கலை பக்தி இயக்கக் காலத்தில் கலையுணர்ச்சியையும் பண்பாட்டுச் சிறப்பையும் வெளிப்படுத்தும் வண்ணம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. 20ஆம் நூற்றாண்டு திருக்கோயில் வழிபாட்டில்

Koviloor Digital Library

ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. எனினும் பக்தியின் மொழி என்று போற்றப் படுகின்ற தமிழ்மொழியில் திருக்கோயில் குறித்த சொல்லகராதி இல்லாதது ஒரு குறையாகவே இருந்து வந்தது. அக்குறையை நீக்கும் வகையில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பண்பாட்டுமையம் கோயில் களஞ்சியம் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை பாராட்டிற்குரியது. அதன் ஒரு கூறாகத் திருக்கோயில் பண்பாடு என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்துவது சாலச் சிறந்தது. என்றும் நிலைத்து நிற்கும் திருக்கோயில் களஞ்சியப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட கட்டுரையாளர்கள் அனைவருக்கும் வாழ்த்தும் பாராட்டும் உரியது.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கைத் திட்டமிட்டுச் சிறப்புற நடத்துகின்ற தமிழ்ப்பண்பாட்டு மைய இயக்குநர் பேரா.சே. செந்தமிழ்ப்பாவை அவர்கட்கும் துணைநிற்கும் அனைவருக்கும் எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

25.11.2019

காரைக்குடி

(நா.இராஜேந்திரன்)
துணைவேந்தர்

Koviloor Digital Library

அழகப்பா பல்கலைக் கழகம்

(தேசியத் தர நிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+ தகுதி (CGPA 3.64) மற்றும்
மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக் குழுவின் முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதி பெற்றது)

காரைக்குடி - 630 003

2017	2018	2018	2018	
Accredited with A+ Grade by NAAC (CGPA : 3.64)	MHRD Graded as Category-1 & Granted Autonomy	Swachh Campus Rank : 4	nirf National Institutional Ranking Framework Rank : 27	World University Rankings India Rank : 20 BRICS Rank : 104 Asia Rank : 216



வாழ்த்துரை

தமிழக நாகரிகத்தைக் கோயில் நாகரிகம் என்றழைப்பது மரபாகும். காணுமிடங்களிலெல்லாம் கலைக் கோயில்களைக் கட்டிக் காத்த பெருமை தமிழ் மாந்தர்க்குத் தனியுரிமையாகத் திகழ்கிறது. 'எண் தோள் ஈசற்கு எழுபது மாடம் அமைத்தோன்' என்ற தொடர் திருக்கோயில்களை எழுப்புவதில் வேந்தர்களின் செயன்மைகளையும் மக்கள் கொண்டிருந்த ஆர்வத்தையும் சுட்டுகின்றது. அவ்வகையில் சிவன், திருமால், முருகன், விநாயகர், அம்மன் காளி, பிடாரி, கொற்றவை என்பன போன்ற தெய்வங்களுக்குத் தமிழகத்தில் அமைந்துள்ள திருக்கோயில்கள் ஏறத்தாழ நாற்பதாயிரம் என்று கருதுகின்றனர்.

இதனால் கோயிலை அடியொற்றியே குடிகள் இடம் பெற்றிருந்தன என்பது புலனாகும். சமய உணர்வே மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. சமுதாய வளர்ச்சியையொட்டிச் சமயமும் பல பரிணாம வளர்ச்சியைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. இந்நிலை உலகம் முழுவதும்

Koviloor Digital Library

உள்ள மக்களிடம் காணக்கூடிய ஒன்றாகும். அவ்வகையில் தெய்வங்களுக்குரிய திருக்கோயில் வழிபாட்டுமுறைகள், மரபுச் சொற்கள், கட்டடக்கலைச் சொற்கள், சிற்பக்கலைச் சொற்கள், பூசைமுறைகள் என்பன போன்ற கட்டுரைப் பொருண்மைகளின் வழி கோயிற் பண்பாடு பற்றிய ஆராய்வதாக அமையும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கு காலத்தின் கட்டாயமாகும். எனவே இக்கருத்தரங்கைத் திட்டமிட்டுச் சிறப்புற நிகழ்த்தும் தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநர் பேரா.சே.செந்தமிழ்ப்பாவை, முனைவர் கா.கணநாதன், முனைவர் சொ.அருணன் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆகிய அனைவருக்கும் எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரியது.

29.11.2019 (பேரா.**ஹா.குருமல்லேஸ்பிரபு**)

காரைக்குடி பதிவாளர்

Koviloor Digital Library



பதிப்புரை

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிறுபெரு மானென்று
பாடுமின், பாடிப் பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே - திருமூலர்

தமிழ்நாடு வரலாற்றுப் புகழ்மிக்கநாடு. தமிழ் நாகரிகம், பண்பாடு மற்றும் கலைகளின் பதிவிடங்களாகத் திகழ்வன தமிழகத் திருக்கோயில்கள். கி.பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழர் வரலாற்றிலும் வாழ்விலும் திருக்கோயில்கள் பிரித்தறிய முடியாத அளவிற்குப் பின்னிப் பிணைந்தன. தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் திருக்கோயில்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற உலகநீதிப் பாடல் அடியும் திருக்கோயில்கள் தமிழ்மக்களின் வாழ்க்கையில் பெற்றுள்ள முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும்.

திருக்கோயில்கள் பரம்பொருளை உணர்வதற்குக் கருவியாகவும் பக்திநெறியைப் பரப்புவதற்குச் சாதனமாகவும் விளங்கி வருகின்றன. மேலும் தமிழர்களின் ஆன்மீகநெறி சமூக வாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, நுண்கலைகள் ஆகியவைகளின் மையமாகத் திருக்கோயில்கள் தொடர்ந்து இருந்து வந்துள்ளன.

இதனால் தான் கோயிலைச் சார்ந்த குடிகள் குடிகளைச் சார்ந்த கோயில் என்பது தமிழரின் வாழ்வியல் நெறியாக

Koviloor Digital Library

மாறியது. இதனைத் தமிழகம் முழுவதும் உள்ள நிமிர்ந்து நிற்கும் கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களும் அவற்றுள் எழுகின்ற நல்லிசை அரவமும், நான்மறை ஒலியும் நாள்தோறும் எடுத்துரைத்து வருதல் கண்கூடு. தமிழகத்தில் சைவக் கோயில்கள் 24,608 வைணவக் கோயில்கள் 10,033 பிறகோயில்கள் 10,346 என மொத்தம் 44,987 கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் ஏராளமான சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இப்பயன்பாட்டுச் சொற்களைத் தொகுத்துக் கலைச்சொல் அகராதி உருவாக்கும் பணியைத் தமிழ்ப்பண்பாட்டு மையம் மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு கூறாகக் கோயிற் பண்பாடு என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கம் சிறப்புற நடைபெறுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கியதோடு நல்லதொரு அணிந்துரையையும் நல்கிய எமது மாண்பமை துணைவேந்தர் பேரா.நா.இராசேந்திரன் அவர்கட்கு மனமார்ந்த நன்றி என்றென்றும் உரியது. இச்சிறப்பு வாய்ந்த கருத்தரங்கு நன்முறையில் நிகழப் பெரிதும் துணைநின்றதோடு வாழ்த்துரையும் வழங்கிய எமது மதிப்புறு பதிவாளர் பேரா.ஹா.குருமல்லேஸ்பிரபு அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறக்க, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் கட்டுரை வழங்கிய பேராசிரியப் பெருமக்கட்கும், ஆய்வாளர்கட்கும் மனம் கனிந்த நன்றி உரியது. மேலும் இக்கருத்தரங்கம் சிறப்புற நடைபெறுவதற்கு உடனிருந்து பணியாற்றிய முனைவர் கா.கணநாதன், முனைவர் சொ.அருணன், திரு.பெ.குபேந்திரன் ஆகியோருக்கும், பண்பாட்டு மையத் தட்டச்சாளர் அ.ஐஸ்வர்யா, அலுவலக உதவியாளர் சே.விஜயாள் ஆகியோருக்கும் என் நன்றி உரியது.

அன்புடன்

நாள்: 25.11.2019

சே.செந்தமிழ்ப்பாவை,

இடம்: காரைக்குடி

ஒருங்கிணைப்பாளர்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆலயங்களில் ஓதுவார் மரபு

(இலங்கையில் இருக்கும் சைவ ஆலய மரபினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

முனைவர் திருமதி சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை

அறிமுகம்

எல்லாம் வல்லவனாகி நின்றானை வழிபாடியற்றுவதற்கும் அவன் தாள் சரண்புகுவதற்கும் இலகுவான மார்க்கம் அவன்புகழ் பாடிப்பரவுதலாகும். சைவ சமய மரபிலே ஆரம்பகாலம் தொட்டு அதாவது காரைக்காலம்மையாரிலிருந்து பின்வந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் சரி இறைவனைப் பாடிப்பரவி இறைவன் தாள் புகுந்தனர். இது மாத்திரமல்லாமல் அவர்கள் தாம் வாழ்ந்து சென்ற சமூகத்திற்கும் அவன் புகழையும் இறைவனைப் போற்றிப்பாடுதலின் முக்கியத்துவத்தையும் எடுத்தியம்பிச் சென்றுள்ளமை வரலாறு நமக்குக் கூறும் உண்மைகள்.

இந்த நிலையிலே சைவசமய மரபிலே இறைவனை இசையோடு வாழ்த்திப்பாடுவோர் 'ஓதுவார்கள்' என்கின்ற சிறப்புப் பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றனர். சைவ சமய வரலாற்றிலே காரைக்காலம்மையார் அவர்களிலிருந்து ஆரம்பித்த இந்த ஓதுவார் மரபானது இலங்கையிலும் இந்து ஆலயங்களிலே தொடரத்தவறவில்லை. இலங்கையைப் பொறுத்தவரையிலே பண்பாட்டிலும், சமயத்திலும் பழக்கவழக்கத்திலும் இன்னும் பல சமூகநிலைகளிலும் தமிழகத்துடன் மிக நெருங்கிய தொடர்பு காலங்காலமாகப் பேணப்பட்டு வந்திருப்பது வரலாறு. காலத்திற்குக்காலம் இலங்கையானது அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்தபொழுதிலும் இந்த ஓதுவார்களது பணிகளே சைவத்தையும் தமிழியும் காத்து அடுத்த சந்ததிக்குக் கையளிப்புச்செய்தது என்றால் மிகையாகாது. இந்த வகையிலே இலங்கையிலே சைவம் தழைத்தோங்கிய இடமாகிய யாழ்ப்பாணத்திலே சமயம் தழைக்க ஓதுவார்கள் செய்த பணிகளை இந்த ஆய்வுக்கட்டுரை விபரிக்கமுயல்கின்றது,

Koviloor Digital Library

ஓதுவார் மரபு

திருமுறை ஓதலுக்கும் இலங்கைக்கும் மிக நீண்ட வரலாறு உண்டு. இதிகாச புராண காலங்களிலே குறிப்பிடப்படும் இலங்கை மன்னன் இராவணன் வீணை வித்தகன், சிவ பக்தன், கீதத்தை மிகப்பாடும் செம்மலாக விளங்கினான். இதனையே பக்திநெறிக்காலத்திலே தோன்றிய தேவார மும்மூர்த்திகளுள் இளையவரான திருஞானசம்பந்தர் அவர்கள் திருநீற்றின் மகிமையைப் போற்றிப்பாடும் திருநீற்றுப்பதிகத்தில்,'இராவணன் மேலது நீறு' என்று இலங்கை மன்னனது புகழையும் பெரிதுயர்த்திப் பாடியிருக்கின்றார். இது மட்டுமல்லாமல் ' பண்டையிராவணன் பாடி உய்ந்தனன்..' என்று சம்பந்தர் அவர்கள் இராவணனது இசைப்புலமை பற்றித் தனது பதிகத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது இலங்கை வேந்தன் இராவணன் இறைவனைப் போற்றிப்பாடி வாழ்ந்திருக்கின்றான் என்பது இதனின்றும் தெளிவாகின்றது.[1]

மேலும் தேவார மும்மூர்த்திகளால் பாடப்பட்ட திருத்தலங் களாக, திருக்கேதீச்சரமும், திருக்கோணேச்சரமும் திகழ்வதும், பின்வந்த காலங்களிலே சந்தப்பாவலர்பெருமான் அருணகிரிநாதர் அவர்களால் இலங்கையிலே இருக்கக்கூடிய கதிர்காமம், திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற திருத்தலங்களில் உறைந்திருக்கும் முருகப்பெருமான் மேல் புகழ் பாடியிருப்பதும் அவர்களது பாடல்களின் வழி அறியமுடிகின்றது. எனவே அந்தக்காலங்களிலும் 'பண் பாடுவது' என்பது இலங்கையிலும் வழக்கிலிருந்த ஒரு விடயமாகத் தெரிகின்றது.

இறைவனை இசையோடு போற்றித் துதித்து இசை ஓதி வழிபாடாற்றுபவர்களே ஓதுவார்கள். ஓதுவார்களது பணிக்கு முன்னோடியாக இருந்தவர்கள் பாணர்கள். யாழொடு பண்ணிணைப் பாடி இசையால் அர்ச்சனை புரிந்தவர் பாணர். யாழ்ப்பாணத்திலே பூர்வீகக் குடிகளாக பாணர் இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது.(யாழ் கொண்டு இசைமீட்டி அரசன் புகழ்பாடி 'மணற்றி' என்கின்ற இடத்தினை கவிவீரராகவன் பரிசாகப்பெற்ற பின் இந்த மணற்றி, யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது. இவன் வழியானோர் யாழ்ப்பாணத்திலே

Koviloor Digital Library

வசித்தனர். இவர்கள் 'பாணர்' என்று அழைக்கப்பட்டனர்.)[2] (எனவே இதன் வழி பண்பாடுவதற்கும், யாழ்ப்பாணனுக்கும் தொன்று தொட்டு உறவு நிலை தொடரப்பட்டுவருவது தெளிவாகின்றது.

திருமுறைகளைக் காத்து அதனைக் கோயில்களிலே வழிபாட்டின்போது பாடச் செய்வித்த பெருமை சோழப் பெருமன்னர்களையே சாரும். எவ்வாறு இந்தியாவிலே கோயில்களில் ஓதுவார்களால் தேவாரம் ஓதப்படும் மரபு காணப்பட்டதோ அவ்வாறே இலங்கையிலும் திருமுறைகள் ஓதப்பட்டு வந்தன.

இவ்வாறாக இலங்கையிலே வளர்ந்த பண்ணிசை மரபானது கி.பி 16, 17ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களினால் சற்றுப் புறந்தள்ளப்பட்டிருந்தாலும், கி.பி 18 19ம் ம் நூற்றாண்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன், சுவாமி விபுலானந்தர் அவர்களது அரும்பணியால் மீளவும் திருமுறை இசை புத்துயிர் பெற்றது.

நாவலர் அவர்கள் திருமுறைப் பாராயணத்துக்காகச் செய்த சேவைகள் அளப்பரியன. இவரது திருப்பணிகள் பற்றி இவரது மறைவின் போது தமிழறிஞர் தி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் அளிக்கப்பட்ட இரங்கற்பாவிலே 'நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே, சுருதியெங்கே, புராண ஆகமங்கள் எங்கே' என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களது பணிகளுக்கான ஒரு அளவீடாகக் குறிப்பிடமுடியும்.[3]

1874ஆம் ஆண்டிலே 'கந்தசுவாமி கோயிற்றிருவிழா சமீ-பித்தபடியால் தேவாரத்திருக்கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழாக்காலத்திலே சுவாமிக்குப்பின்னாக ஓதுவதாற் சனங்களுக்குண்டாகும் கடவுட் பக்தியையும், இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைந்து, திருவாவடுதுறையினின்றும் ஓதுவார் சிலரை அழைப்பித்து, திருவிழாக்காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைச் சைவர்களுக்கும் தெற்கு வீதி மடத்திலே புண்ணியவான்கள் சிலரைக்கொண்டு மாகேசுர பூசை செய்வித்து, சுவாமி வீதி-

Koviloor Digital Library

யிலே உற்சவங்கொண்டருளும்பொழுது, சுவாமிக்குப்பின்னாக அவர்களைக்கொண்டு தேவாரம் ஓதுவித்துக்கொண்டு வந்தார். இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத, அதனைக் கண்ட பிராமணர், தாங்களும் வந்து சுவாமிக்குப்பின்னாக வேதம் ஓதுவாராயினர். ஆவரம் விபூதி உத்தூளனஞ் செய்து, திரிபுண்டரம் தரித்து, தலையிலே சிர மாலையும், கழுத்திலே கண்டிகைளும் கையிலே பௌத்திரமம் தரித்து,யாவருக்கும் பக்தியை விளைவிக்கத்தக்க வகையிலே சிவவேடப்பொலிவோடு திருக்கூட்டத்தலைவராய் நின்றார். அத்திருக்கூட்டத்தின் சிறப்பை என்னவென்று சொல்வோம்! எதற்கொப்பிடுவோம்!! ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் 16000 திருக்கூட்டத்தோடு தோற்றிய சிறப்பிற்கொப்பிடலாம்' என்கின்ற வே. கனகரத்தின உபாத்தியாயர் அவர்களால் எழுதப்பட்ட 'ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்கின்ற நூலிலே காணப்படுகின்ற தகவல்கள், திருமுறை வளர்ச்சிக்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஓதுவார்களை போ~ஜீத்தவாற்றையும, அவர்களுக்கு ஆற்றிய பணிகளையும் ஆதாரபூர்வமாக எடுத்தியம்புவனவாக இருக்கின்றன.[4]

யாழ்ப்பாண நல்லூர் ஆலயத் திருமுன்றலில் தன் பொருட் செலவிலே தேவாரப் பாடசாலை ஒன்றை அமைத்தார். இங்கு ஓதுவார்மூர்த்திகளைத் திருவாவடுதுறை ஆதீனத்தினின்றும் வரவழைத்து. அவர்கள் தங்கியிருந்து பணி செய்வதற்கேற்ற வசதிகள் செய்தமை பற்றியெல்லாம் மேற்படி நூலின் வாயிலாக தெரிந்துகொள்ள முடிகின்றது.[5]

*1931*ல் இசை ஆர்வலர்களால் ஆரம்பிக்கப்பட்ட வட இலங்கை சங்கீத சபையினராலும், சேர் பொன் இராமநாதன் அவர்களின் சிந்தனை வழி ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக்கழகத்திலே பண்ணிசை ஒரு துறையாக இன்றும் போதிக்கப்படுகின்றது.[6]

கிபி 20ம் நூற்றண்டின் ஆரம்ப கால கட்டத்திலே தென்னிந்திய ஓதுவார்களுடைய தொடர்பு அதிகமாக இலங்கைக்குக் கிடைத்தது.

Koviloor Digital Library

இலங்கையிலிருந்து பலரும் தமிழகம் சென்று அங்கிருந்த சிறந்த ஓதுவார்களிடத்திலே சிறந்த பயிற்சி பெற்று மீண்டவர்களுள் காசி வாசி செந்திநாதையர் (சுப்பிரமணிய ஓதுவார் மூர்த்தி), கொக்குவில் குமாரசாமிப்பிள்ளை *1895 - 1987* (திருவாவடுதுறை ஆதீனம்), குப்பிளான் செல்லத்துரை, *1909 - 1968* (திருவாவடுதுறை ஆதீனம்) தாவடி எஸ்.ராசையா *1912 - 1975* (தமிழ்நாடு கல்யாண சுந்தரதேசிகர்), கீரிமலைச் செல்லையா *(1889)* (சென்னை இராகவ முதலியார்), கட்டுவனூர் M.K.M சுப்பிரமணியம் (இராஜராஜசேகரன் ஓதுவார்) போன்றோர் குறிப்பிட்டு சொல்லத்தக்கோர் ஆவர்.

இவர்களுள் காசிவாசி செந்திநாதையர் முதன்மையாகக் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவர். இவர் நாவலரவர்களின் மாணவன் நாவலரவர்கள் திருமுறை ஓதுவதற்குப் பண்முறை மிகவும் அவசியம் எனக் கண்டு, தமிழ் நாட்டில் பண்ணிசையில் பெரும் புகழ் பெற்றிருந்த சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி அவர்களையும் அவர் தம் கூட்டத்தினரையும் இங்கே அழைத்துப் பணி செய்யுமாறு வசதி செய்து கொடுத்தார்.

சுப்பிரமணிய ஓதுவார் பண்ணுக்கேற்ப சாரங்கி என்னும் வாத்தியமும் மீட்டிப் பாடவல்லவர். எனவே தம் மாணவனையும் அவ்வாறே பயிற்றுவித்ததன் பயனாக காசி வாசி செந்திநாதையரும் பண்ணோடு சாரங்கியையும் மீட்டிப்பாட வல்லமை பெற்றிருந்தார்.[7]

இவ்வாறு வளர்ந்த ஓதுவார் மரபினை இலங்கையிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே வளர்த்து போற்றிப் பாதுகாத்த பெருமை வீரசைவ குலத்தவரையே சாரும். இலங்கைத் தமிழ் கலை வடிவங்கள் பற்றி நீண்ட காலமாக ஆய்வுப் பதிவுகளை மேற்கொண்டு வந்த திரு.க.சண்முகசுந்தரம் அவர்கள் தனது 'இசையும் மரபும்' எனும் நூலிலே குறிப்பிடும்போது, பிரித்தானியஆட்சி இலங்கையிலே நிலவியபோது கலைகளுக்கு ஆதரவு நிராகரிக்கப்பட்டிருந்தது. 'அந்தக் காலத்திலே பொது மக்களோடு ஒட்டி உறவாடி வாழ்ந்து இசைக்கலைக்குத் தொண்டு செய்தவர் இருசாரார். இந்த இரண்டுசாராரும் இலங்கைக் கலை வாழ்வில் இரண்டு கண்போன்றவர்கள். இங்கு குறிப்பிடுகின்ற

Koviloor Digital Library

இரு சாரார், நாகசுரக்கலைஞரும், வீரசைவர் குலத்தில் வந்த கலைஞருமாவார். இந்த இரண்டு சாராரும் இல்லாவிட்டால் இன்று ஈழத்துக் கலைவயலுக்குப் பதிலாகக் கட்டாந்தரை ஒன்று உருவாகியிருக்கும்' என்று குறிப்பிடுவதிலிருந்து இசை வேளாளர்களும், வீரசைவ மரபினரும் இலங்கைக்கலை வளர்ச்சியிலே முக்கியப் பங்காற்றியிருக்கினறார்கள் என்பதனை ஆதாரபூர்வமாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. மேலும் திருமுறைகளை மக்கள் மத்தியிலே வழக்கப்படுத்திய வீரசைவ மரபினரைப் பற்றி திரு க சண்முகசுந்தரம் அவர்கள் தனது இசையும் மரபும் என்கின்ற நூலிலே பேசும்போது,

"பண்ணிசையைப் பரப்பியவர்கள் இவர்கள், தேவாரம், திருவெம்பாவை, திருப்புகழ், எல்லாவற்றையும் வீதி தோறும் பரப்பியவர்கள் இவர்கள்" என்றவாறு குறிப்பிட்டு நிற்கின்றார்.[9]

அதாவது வீரசைவர்கள் பண்ணிசையை சமூகமயப் படுத்துவதிலே முக்கியப் பங்காற்றியிருக்கின்றார்கள் என்பதனை உறுதியாகச் சொல்கின்றார். வீரசைவர்கள் எல்லோருமே பண்பாட வல்லவர்களாக இருந்தனர். பண்ணிசைப் பேராசன் கீரிமலை தம்பையா செல்லையா அவர்கள் தனது வாழ்க்கைக் குறிப்பிலே கூறும்போது, 'நாங்கள் வீரசைவ பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குத் தொழில் பூசையும் கலையுந்தான். கோயில்களுக்குப் பூசை செய்வோம். தமிழ்ப்பண்ணிசை, கூத்து, காவடி, கரகம், சோடனை எல்லாம் வீரசைவர் வளர்த்த கலைகள். இந்தக்கலைச்சூழலிலே தான் நான் பிறந்து வளர்ந்தவன். பிறந்த ஆண்டு சரியாக நினைவிலில்லை, எனக்கு வயது 85 இருக்கலாம்' என்று இவர் கூறியிருப்பது வீரசைவ மரபினர் இலங்கையிலே ஆலயச்செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாது திருமுறைகளை சமூகமயப்படுத்துவதிலும் வளர்ப்பதிலும் முக்கிய காரணமாகி இருந்திருக்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. அவரது வாழ்க்கைப் பதிவு இதற்குச் சிறந்த சான்றாயமைகிறது.[10]

இவ்வாறு இலங்கையிலேவழக்கத்துக்கு வந்த பண்ணிசையானது 1950களில் சுதந்திரத்தின் பின்னர் மன்றங்களாலும், ஆலய சபைகளாலும் வகுப்புக்கள் நடத்தப்பட்டு மக்கள் மத்தியிலே

Koviloor Digital Library

திருமுறைப் பாடல்களைப் பரீட்சயப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

1960களில் இலங்கை, இந்திய போக்குவரத்தில் ஏற்படுத்தப் பட்ட கட்டுப்பாடுகள் தென்னிந்திய ஓதுவார்களின் வருகையில் பின்னடைவை ஏற்படுத்த, இங்கிருக்கக் கூடியவர்களே இந்தப் பணிகளைச் செய்து வந்தனர். இசை பயிலவென தென்னிந்திய அண்ணாமலைப்பல்கலைக்கழகம் சென்ற பலர் பண்ணிசையையும் முறையோடு பல்கலைக்கழகத்திலோ, அன்றி ஓதுவார்களிடத்தில் தனிப்பட்டமுறையிலோ கற்று இலங்கை மீண்டனர்.

இன்று பாடசாலை மட்டத்திலே சமயப் பாடங்களில் ஒரு பகுதியாகவும், பல்கலைக்கழகங்களிலே சிறப்பாகப் பயிலக்கூடிய ஒரு பாடமாகவும் பண்ணிசை நடைமுறையில் இருப்பதுடன், அகில இலங்கை திருமுறை மன்றம், சைவ மங்கையர் கழகம், வட இலங்கை சங்கீதசபை, இந்து மாமன்றம் இந்துக் கலாசார அமைச்சின் கீழ் இயங்கக்கூடிய அறநெறிப் பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றமை இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமாகும்.

முடிவுரை

தொகுத்து நோக்கும்பொழுது நாயன்மார்களது வழிப் படுத்தலிலே தோற்றம்பெற்ற ஓதுவார் மரபானது இறை புகழ் பாடுதல் என்பதற்கப்பால் காலத்திற்குக்காலம் சமூகத்திற்குத் தேவையான வழிகாட்டுதல்களை மேற்கொண்டு வந்திருக்கின்றது என்பது இந்தக்கட்டுரை வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றது.

ஓதுவார்மரபு இன்றும் யாழ்ப்பாண ஆலயங்களிலே பேணப்பட்டு வருகின்றது என்கின்ற உண்மையினை மேற்படி கட்டுழரை வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. இது மாத்திரமல்லாமல் சமகாலத்திலே பண்பாட்டு மாற்றங்களுக்கேற்ப ஓதுவார் மரபானது சற்று மாற்றம் பெற்று சமூக விரிவாக்கம் பெற்று எல்லோரையும் சென்றடையக்கூடிய வகையிலே நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதும் இந்தக் கட்டுரை வாயிலாகத் தெளிவாகின்றது.

Koviloor Digital Library

அடிக்குறிப்புகள் :

1. சம்பந்தர் தேவாரம் :கழக வெளியீடு : 1972 பக்: 157
2. வையாபாடல்: வையாபுரிப்புலவர்
3. ஆறுமுகநாவலர்: சைவப்பெரியார் சு சிவபாதசுந்தரனார்: தமிழ்மொழிபெயர்ப்பு: வை. ஏரம்பமூர்த்தி: பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்: 1950 – பக் 67
4. 'ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்'– வே. கனகரத்தின உபாத்தியாயர் – யாழ்ப்பாணம் நாவலர் நூற்றாண்டு விழாச் சபையினரால் மறுபிரசுரமாக வெளியிடப்பட்டது. பக் : 110–111: 1968
5. பிரந்தத்திரட்டு – ஆறுமுக நாவலர்– பதிப்பு – இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு– 1996 – பக் :250
6. தினகரன் பத்திரிகை: 3–6–1974: 'இலங்கை பண்ணிசை மன்றம் அங்குரார்ப்பணம் ' –கட்டுரை
7. காசி வாசி செந்திநாதையர், வித்துவசிரோமணி, சி.கணேசையர், க.சி.குலரத்தினம், இலங்கைச் சுடர் மணிகள் 10, குமரன் புத்தக இல்லம், 2008, பக்.12
8. இசையும் மரபும் – திரு க சண்முகசுந்தரம் கலைப் பெருமன்றம், அம்பனை, தெல்லிப்பளை–1974,– பக்.2
9. இசையும் மரபும் – திரு க சண்முகசுந்தரம் கலைப் பெருமன்றம், அம்பனை, தெல்லிப்பளை–1974,– பக்.3
10. இசையும் மரபும் – திரு க சண்முகசுந்தரம் கலைப் பெருமன்றம், அம்பனை, தெல்லிப்பளை–1974.

Koviloor Digital Library

நகரத்தார் பண்பாட்டில் மூதாதையர் வழிபாடும் படைப்பும்

முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி,
மேனாள் விரிவுரையாளர்,
சமூக அறிவியல் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

முன்னுரை

நகரத்தார் சமூகம் அறப்பணியையும், ஆலயப்பணியையும் தம் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த சமூகம்என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஆதியில் சமணர்களாயிருந்த இச்சமூகத்தினர் சைவம், வைணவம், காணாபத்யம், சாக்தம் என்னும் நான்கு சமயக்கடவுளரை வழிபட்டும், இக்கடவுளர்க்கு ஆலயங்கள் சமைத்தும் இன்றளவும் சமயப்பணிகளிலும் பெருந்தெய்வவழிபாட்டு முறைகளிலும் தலைநிற்கின்றனர். மூதாதையர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு ஆகிய வழிபாட்டுமுறைகளும் கடந்த இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இச்சமூகத்தினர் மத்தியில் செல்வாக்குப்பெற்று விளங்கிவருவது இக்கட்டுரையாளருக்கு ஐயப்பாட்டையும் எழுப்பியது. மூதாதையர் வழிபாடு,சிறுதெய்வவழிபாடு ஆகியவை செல்வாக்குப்பெறக் காரணங்களையும், சமூகச்சூழலையும்குறித்துச் சிந்திக்கவைத்தன. அதன் விளைவே இக்கட்டுரை.

மூதாதையர் வழிபாடு- தோற்றமும் தொன்மையும்

மூதாதையர் என்பவர்களைத் திருவள்ளுவர் 'தென்புலத்தார்' என்று குறிப்பிடுவதோடு இல்வாழ்வோர் அவர்களைப் போற்றுவது சிறந்த அறம் என்னும் கருத்தினையும் கூறியுள்ளார். (குறள்-43). இறந்துபோன முன்னோர்கள் தென்திசையில் இருப்பதாகப் பழந்தமிழகத்தில் நம்பிக்கை நிலவியது என்பதற்குப் புறநானூற்றில் சான்று உள்ளது. "தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்" (புறநானூறு9-நெட்டிமையார் பாடல்). எனவே தென்புலவாழ்நர் எனக்கூறப்படுவோர் தென்புலத்தாரே. இவர்களை வழிபடும் வழக்கு தொல்வழக்காக இருந்திருக்கவேண்டும். வழிபாட்டுக்கு

Koviloor Digital Library

அடிப்படையான நம்பிக்கையின்பேரில் தென்புலத்தாரை மக்கள் வழிபட்டு வந்திருக்கவேண்டும்.

இவ்வழிபாடு உலகு தழுவிய நிலையில் பல இனத்தவராலும், பல சமயத்தினராலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று வள்ளுவர் கூறியபடி வாழ்ந்து காட்டிய மூதாதையர்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டிருக்கவேண்டும். மேலும் மனிதனும் தெய்வமாகலாம் என்ற நம்பிக்கையும், தெய்வநிலையை எட்டும் அளவுக்கு வாழும் வாழ்க்கை நெறியும் இந்த வழிபாட்டுமுறைக்கு அடிப்படை என்று கொள்வதில் தவறில்லை.

தொல்காப்பியம் "காட்சி,கால்கோள் " என்னும் நூற்பாவில் கூறப்படும் பெரும்படை என்பது படையல் என்னும் படைப்பைக் குறிப்பதாகவே அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். சிலப்பதிகார நடுகற்காதை, சங்ககால நடுகல் வழிபாடு ஆகியவை படைப்பின் தொன்மைக்குச் சான்றாய் அமைகின்றன.

படைப்பு என்னும் வழிபாட்டுமுறை:

மூதாதையர் வழிபாட்டில் முக்கிய அங்கமாகத் திகழ்வதுதான் படைப்பு என்னும் வழிபாட்டுமுறை. இதற்குப் பலவிதமான விளக்கங்கள் கூறப்படுகின்றன. படைப்பு என்பதற்கு 'அர்ப்பணித்தல்' என்னும் பொருள் உண்டு. அந்த அடிப்படையில் படை,படையல் எனப் பொருள் விளக்கம் உள்ளது. படைப்பு என்பதற்கு விளக்கம் அளிக்கும் அறிஞர் தமிழண்ணல் "திருவள்ளுவர் தென்புலத்தாரை ,தம் முன்னோரை முதலில் போற்றவேண்டும் என்பதுவும், (இழவு வீட்டில்) கல்லெடுத்தல் போல, இப்படைப்பு வழிபாட்டின் மூலவேர்களாக எனக்குப் படுகின்றன" (எஸ் ஆர். எம், 2012) என்று எழுதுவது இக்கட்டுரையாளர்க்கு முற்றிலும் உடன்பாடான கருத்தாகும். "படைப்புக்குத் திருவள்ளுவர் கொடுத்த பெயர் தென்புலத்தார் வழிபாடு. அவ்வழிபாடுதான் வாழ்க்கையில் முதலிடம் பெறவேண்டும் என்பதற்காகவே அவர் அதைப் பிள்ளையார்சுழியாகப் போட்டிருக்கிறார்" எனத் தமிழண்ணலின்

Koviloor Digital Library

கருத்தினை வேறு சொற்களால் வெளிப்படுத்துகிறார் வ. தேனப்பன்.(எஸ்.ஆர்.எம். 2012).

படைப்பு - ஏன்? :

போக்குவரத்து வசதிகள் இன்றுபோல் அன்றில்லைஎன்பது நாம் அனைவரும் அறிந்ததே.ஆயினும் மக்கள் அனைவரும் ஒன்று கூடி வழிபடுவதற்குப் படைப்பு என்ற வழிபாட்டுமுறை உதவியது. ஒற்றுமைக்குப் பாதை சமைத்தது. தனித்தனித்தீவுகள் போல வாழாமல் ஒன்றுகூடச்செய்தது. கூடிவாழ்தலின் நன்மையை உணர வாய்ப்பளித்தது. ஆகவேதான் குலதெய்வவழிபாடு போன்று முக்கியத்துவம் பெற்ற வழிபாடாகப் படைப்பு அன்றுதொட்டு இன்றுவரை திகழ்கிறது. ஏழை , பணக்காரர் என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றுகூடிப் படைப்பில் கலந்துகொண்டு,புள்ளிகள் பெருகவேண்டும் என்னும் பொதுநன்மை கருதி வழிபட்ட காரணத்தால்தான் இதனைப் பொதுப்படைப்பு என்று அழைத்தனர். ஆனால் பேராசிரியர் தே.சொக்கலிங்கம் கூறும் அளவுகோல் நம்மைச் சிந்திக்கவைக்கிறது. “1890க்கு முற்பட்ட படைப்பு நாயக நாயகியருக்குக் கோயில்களில் உருவச்சிலை இருக்கும் கோயில்களில் இடம்பிடித்துக் கொண்டுள்ள அவர்கள்தாம் பொதுப்படைப்புக்கு உரியவர்கள்” என்று கூறுகிறார். இதனால் குடும்பங்களில் மட்டுமே படைக்கப்படும் நாயக நாயகியர், பிற்காலத்தில் வழிபாட்டில் இடம்பெற்ற நாயக நாயகியர் ஆகியோருக்கு உள்ள இடம் என்ன? என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. செல்வச்செழிப்போடு வாழ்ந்த காலத்தைப் படைப்புடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் பார்வையும் உண்டு. காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரம்” பர்மா,இலங்கை ஆகிய நாடுகள் செழித்திருந்த வேளையில் அன்கு வாழ்ந்த நகரத்தார்களும் செழிப்புடன் வாழ்ந்த காலத்தில்தான் படைப்புகள் தோன்றி-யிருக்கவேண்டும்” என்ற கருத்தை முன்வைக்கிறார். வரலாறு பேணப்படாத காரணத்தால் விதவிதமான கருத்துகள் கூறப்படுவது இயல்பு தானே?

பெண்களை வழிபடுதல்:

மானிடப்பெண்ணாகப் பிறந்த கண்ணகி போன்று தெய்வநிலைக்கு உயர்ந்தவர்களை வழிபடுவது மரபுவழிப்பட்ட

Koviloor Digital Library

வழிபாடாக வரலாற்றில் வாழ்கிறது. கண்ணகி கணவனை இழந்து தெய்வமான மாதமாக ஆடிமாதம் கருதப்பட்டதால் நகரத்தார் படைப்புகள் பெரும்பாலும் ஆடி மாதத்தில்தான் நடைபெறுகின்றன. குடும்பப்படைப்புகள் திருமணத்திற்கு முன்னோ பின்னோ படைக்கப்படுகின்றன.

உரைசால் பத்தினிகள் மூதாதையர் வழிபாட்டில் பெரும்பாலும் மூதாதையர் வழிபாட்டில் பெண்கள் அதிக அளவில் வழிபடப்படுகின்றனர். இவ்வாறு வழிபடப்படும் பெண்களின் எண்ணிக்கையோடு ஆண்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால் ஆண்கள் குறைவான எண்ணிக்கையில்தான் வழிபடப்படுகின்றனர். இதற்குக் காரணம் முன்னர்க்கூறப்பட்ட நகரத்தாரின் நம்பிக்கையுடன் அவர்களின் அச்சவுணர்வுகூடக் காரணமாக இருக்கலாம். மூதாதையர்களை வழிபடாவிட்டால் தமக்கும்தம்வாரிசுகளுக்கும் கேடுவிளையலாம்என்ற அச்சமும்கூட அவர்களை வழிபடத் தூண்டியிருக்கலாமென எண்ணவேண்டி உள்ளது. தொடக்ககாலத்தில் இயற்கைச்சக்திகளை மனிதன் வழிபட ஆரம்பித்ததும் அச்ச உணர்வினால்தான் என்பதை எண்ணிப்பார்க்கும்போது இந்த வழிபாட்டின் அடிப்படையை நாம் ஏற்றுக்கொள்வதில் தடையொன்றும் இல்லை.

பிற இனப்பெண்கள் நகரத்தார் படைப்பில் ?

நகரத்தார் படைப்பில் பிற இனப்பெண்கள் ஆச்சிமார்களைவிட அதிக எண்ணிக்கையில் படைப்பு நாயகியராக இடம்பெறுகின்றனர். இதுவும் இக்கட்டுரையாளரை மேலும் சிந்திக்கவைக்கிறது. நகரத்தாரின் பண்பாட்டுச் சீரழிவைப் 'படைப்புகள் பலவிதம்' என்னும் நூலில் எஸ்ஆர் எம் அவர்கள் இதனை எள்ளி நகையாடியுள்ளார். ஆச்சிமாருக்கே உரிய கழுத்திர் எனப்படும் கழுத்துருவைக்கூட அயல் சமூகத்தவர் அபகரித்துக்கொண்டு விடுகின்றனர் என்று எழுதுவது "படைப்பு என்பது குருட்டுத்தனமான அன்பினாலும் நம்பிக்கையாலும் கொண்டாடப்படுவதோ?" என்று எண்ணவைக்கிறது. ஒழுக்கத்துக்கு உயரிய இடம் அளித்து வாழ்ந்த சமூகம் தற்கொலை செய்துகொண்டவர்களையும் அச்சத்தின் காரணமாகவே வழிபட்டு வந்துள்ளது என்று எண்ணவேண்டி

Koviloor Digital Library

உள்ளது. வணிகர்கள் என்பதால் பிற மரபினரோடு இணைந்து வாழ்ந்த நகரத்தார்கள் அம்மரபினருக்குத் தங்கள் மரியாதையைப் (படைப்புப் பள்ளயத்தில் பங்கு கொடுப்பதன் வழி) காட்டியுள்ளனர் போலும்! என்று சமாதானம் கூறும் பேராசிரியர் அண்ணாமலை போல் நாமும் நமக்குச் சமாதானம் கூறிக்கொள்ளவேண்டியதுதான்.

குடும்பப் படைப்பின் விரிவு:

இறந்தவர்கள் அனைவருக்கும் படைப்பு கொண்டாடப் படுவதில்லை என்னும் உண்மையை நாம் மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். முன்னர்க் குறிப்பிட்டபடி வாழ்வாங்கு வாழ்ந்தவர்களுக்குப் படைப்பு கொண்டாடப்படுகிறது. சில குடும்பங்களில் வாழ்வரசியாகப் பூவோடு பொட்டோடு இறந்தவர்களை வழிபடும் பழக்கம் உண்டு. உதாரணத்துக்கு முதல்மனைவியை சாகக்கொடுத்த ஒருவர் மறுமணம் செய்துகொண்டு முதல் மனைவியைத் தெய்வமாக வழிபடுகிறார். இவ்வாறு வழிபடும்போது தனது குடும்பம் மட்டுமின்றித் தன் உறவினர்களையும் அழைத்து வழிபட்டிருக்கவேண்டும். அக்காலத்தில் பெரும்பாலும் பெரிய குடும்ப அமைப்பு வழக்கில் இருந்ததால் குடும்ப உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகம். படைப்பு என்பதன் மையப்புள்ளி குடும்பப்படைப்பு என்பதில் தொடங்கியிருக்கவேண்டும். உறவுகள் பெருகப்பெருக -அதாவது புள்ளிகள் அதிகரிக்க அதிகரிக்க அப்படைப்பே விரிந்த அளவில் வளர்ந்திருக்கவேண்டும். சில பொதுப்படைப்புகளின் வரலாறுகளை நோக்கும்போது ஒன்பது நகரக்கோவில்களில் உட்பிரிவுகள் கொண்ட கோவில்களைச் சார்ந்தவர்கள் கொண்டாடும் பொதுப்படைப்பு பெரிய திருவிழாப்போலக் காட்சியளிக்கும். உட்பிரிவுகள் இல்லாத இரணிக்கோவில் படைப்பு போன்றவை ஏழூர்ப்பொதுப்படைப்பு என்ற பெயரில் அளகஞ்செட்டியார் காளியார் படைப்பாக மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவதை இக்கட்டுரையாளர் தன் சிறுவயது முதற்கொண்டே கண்டுவந்துள்ளார்.

மனித இயல்பும் படைப்பும்:

இன்னும் சில குடும்பங்களில் வாழ்வில் கஷ்டப்பட்டு

Koviloor Digital Library

இறந்தவர்களையும் வணங்குகின்றனர். பொதுவாக ஒருவர் வாழும் காலத்தில் அவரைக் கண்டுகொள்ளாமல் புறக்கணித்துவிட்டு அவர் இறந்த பிறகு அவரைத் தெய்வமாகக் கொண்டாடுவதும் போற்றுவதும் மனித இயல்பு என்ற நிலையில் சிற்சில படைப்புகள் கொண்டாடப்படுகின்றன. சிற்சில படைப்புகளில் இளம் வயதில் இறந்தவர்கள், அபவாதத்தைப்/பழிச்சொல்லைப் பொய்யாக்க உயிர் துறந்தவர்கள் போன்றோரும் நகரத்தாரின் மூதாதையர் வழிபாட்டில் இடம்பெறுகின்றனர். இறந்தவர்களுக்கு விருப்பமான பொருள்களைப் படைத்து வழிபடுவதன் மூலம் இறந்தவர்களின் ஆவி அமைதியடையும் என்ற நம்பிக்கையின் எதிரொலியாகவும் படைப்பு திகழ்கிறது.

காலந்தோறும் மாற்றம்:

பயன்கருதாத வழிபாடாக இருந்த நிலை மாறிப் பயன் கருதிய வழிபாடாகப் படைப்பு மாறிவருகிறது. கண்மூடித்தனமான அன்பில் உருவான படைப்பு இன்று பலரை அறிவுக்கண்ணோட்டத்துடன் பார்க்க வைத்துள்ளது. நன்றியுணர்வு, அச்சம் , நம்பிக்கை ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்த படைப்பு காலத்துக்கேற்ற வகையில் உருமாறிவருகிறது. ஆனால் பண்பாட்டின் எதிரொலியாகத் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பதே பலரின் விருப்பமாகும்.

Koviloor Digital Library

பெருஞ்சாந்தி என்னும் குடமுழுக்குக் கலைச்சொற்கள்

பேரா.சே.செந்தமிழ்ப்பாவை,
இயக்குநர்,
தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

இறைத்திருவுருவங்களுக்கு ஆற்றலை அதிகப்படுத்தச்செய்யும் ஒரு செயல் பெருஞ்சாந்தி எனும் குடமுழுக்கு ஆகும். பொதுவாகச் சிவாலயங்களில் முறைப்படி யாகசாலை அமைத்து, மந்திரசக்தியால் யாகசாலையிலமைக்கப் பெற்ற கலசநீரில் ஆற்றலுண்டாக்கி, அந்தக் கலசத் தீர்த்தத்தைக் கோபுரம், விமானம் ஆகியவற்றிலுள்ள கலசங்களில் வார்த்துத் தெய்வநல சக்தியை ஏற்றுதலே குடமுழுக்கு ஆகும். பெருஞ்சாந்தி என்னும் குடமுழுக்குக் கிரியை தொடர்பாக வழங்கப்பெறும் சொற்கள் குறித்து இக்கட்டுரை விளக்குகின்றது.

குடமுழுக்கு நடைமுறை

குடமுழுக்கு, திருவுருவ நிறுத்தக் குடமுழுக்கு, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தப்பெறும் குடமுழுக்கு என இருநிலைகளில் நடை பெறும். திருக்கோயில்களில் திருவுருவங்களை அமைத்த பின்னர் அத்திருவுருவங்களுக்கு உயிரூட்டுவதற்காக முதலில் குடமுழுக்கு நடைபெறும். இதில் 15-க்கும் மேற்பட்ட செயல்பாடு நிகழும். அவை குறித்த சொற்கள் பின்வருமாறு.

திருக்கோயில்களையும் வழிபடு படிமங்களையும் சிற்பி(ஸ்தபதி) யானவன் செய்து முடித்த பிறகு அவற்றைப் புகைப்படுத்திக் கடவுள் மங்கலம் (பிரதிட்டை) செய்து குடநீராட்டுவர். இதுவே குடநீராட்டுவிழா என்று அழைக்கப்பெறும். இக்குடமுழுக்குச் செய்வதற்கு ஆகம முறைப்படி வேள்வி நிகழ்த்தப்படும். அதற்கேற்ற வேள்விக் கூடம் ஒன்று நிறுவப்படும். இதனை

Koviloor Digital Library

யாகசாலை அல்லது யாக மண்டபம் என்பர். இதில் பல்வேறு குண்டங்கள் அமைக்கப்பெறும். அக்கினி வளர்க்கும் இக்குண்டங் களுக்குத் தலைமை ஏற்று சிவாச்சாரியர் ஒருவர் முன்னின்று நடத்துவார். முதல் கிரியை ஆசார்ய வரணம் என்பதாகும்.

ஆசார்ய வரணம்

இது கோயிலை நிருவகிப்போர் பிரதிட்டைக்கு உரிய சிவாச்சாரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் பிரதிட்டை செய்யும் பொறுப்பினை ஒப்புவிக்கும் செயல் ஆகும்.

பொருட் பங்கீடு (திரவிய பாகம்)

திரவிய பாகம் என்பது பொருளை உரியவாறு பங்கீடு செய்தலாகும். புதிதாகக் கோயில் கட்டுவதற்கு வேண்டிய பொருளைத் திரட்டியதும் அதை மூன்றாகப் பங்கிட வேண்டும். இம்மூன்றில் ஒரு பங்கு ஆலயம் நிறுவுவதற்கும் இன்னொரு பங்கைக் கிராமத்தை அலங்கரிக்கவும், நித்திய நைமித்தியப் பூசைகளுக்கும் ஒதுக்க வேண்டும். எஞ்சியுள்ள மூன்றாவது பங்கு குடமுழுக்கிற்குரியது.

அனுக்ஞை

குடமுழுக்கிற்கு ஆசார்யனாக இருந்து நடத்தக்கூடியவரைப் பெரியோர்கள் தேர்ந்தெடுத்துப் பின் இறைவனிடமும், இறைவியிடமும் அனுமதி பெறுவது அனுக்ஞை.

விக்னேசுவர பூசை

எடுத்த செயல் இடையூறின்றி முடிவதற்காக விநாயகப் பெருமானை வழிபடுதல்.

கிராமசாந்தி

கிராமத்தில் வசிக்கும் பிரம்ம ராட்சசர்கள், பைசாசங்கள், பூதங்கள் முதலியவற்றால் விளையும் குறைகளைச் களைவதற்காச் செய்யப்படுவது கிராமசாந்தி.

பிரவேச பலி

இடையூறுகள் நீங்கவும், தொல்லைகள் அகல்வதற்கும்,

Koviloor Digital Library

அசுரர்கள், பைசாசங்கள் முதலியவற்றை அவ்விடத்திலிருந்து நீக்குவதற்குச் செய்யப்படுவது பிரவேச பலி ஆகும். விக்னேசுவர பூசையையும், புண்ணியாக வாசனத்தையும் முடித்து ஆனைந்து (பஞ்சகவ்யம்) சேர்த்தபின் மந்திரம்முழங்க இச்செயல் நிகழும்.

ஓமம்

இப்பூசையில் பாத்தியம், அர்க்கியம் இரண்டும் கூட்டி யாக சாலையின் நடுவில் வேதியில் தானியம் பரவி, அதில் அஷ்டதள பத்மம் கீறி நடுவில் நிறுவிய கும்பத்தில் தேவதையை ஆவாகித்தல் வேண்டும்.

திசா ஓமம்

ஆலயத்தின் முற்பக்கத்தில் சங்கற்பம் விக்னேசுவர பூசை, சகஸ்ரநாமம், புண்ணியாவாசம் முதலியன முடிப்பர். புண்ணிய யாகநீரைத் தெளித்தபின் எள், அரிசி, நெய் முதலியவற்றைப் பரப்புவர். எள்ளில் தாமரை எழுதுவர். அதில் ஆடை, அணி, ஆகியவற்றால் அழகு செய்யப்பெற்ற கும்பத்தை வைத்து, அதில் சிவாத்திரத்தை ஆசன மூர்த்தி மூலம் அருச்சித்து, கும்பத்துக்கு முன் குண்டத்தில் அக்கினி காரியம் முறைப்படி செய்வர்.

சிவாத்திர தேவருக்கு பிரதான ஆகுதிகள் கொடுத்தபின் தனித்தனி ஆகுதி செய்து பூர்ணாகுதி நிறைவேற்றி பலிகளைக் குண்டத்திலிட்டு அக்கினியிலுள்ள தேவரைக் கும்பத்தில் சேர்ந்து அந்நீரை எங்கும் தெளித்தல் வேண்டும். இதனையடுத்துச் சாந்தி ஓமமும், மூர்த்தி ஓமமும் நிகழும். இவற்றை அடுத்து நவக்கிரக வேள்வி நடைபெறும்.

வாஸ்து சாந்தி

தண்டிலம் அமைத்து அதன் நடுவில் அறுபத்து நான்கு பதங்களால் அமையும் வாஸ்து மண்டலத்தை வரைவர். அதில் ஈசானத்தில் வாஸ்து கும்பம் வைப்பர். மண்டலத்தின் முன் குண்டம் அமைப்பர். இறவாவரம் வாங்கியவரான வாஸ்து புருஷன் என்ற அசுரனின் இடையூறில்லாமல் இருக்க அவனைக் காவல் புரியும் ஐம்பத்து மூன்று தேவர்களையும் பூசை, பலி முதலியவற்றால் திருப்தி செய்து இடையூற்றை நீக்குதல் வாஸ்து சாந்தியாகும். குடமுழுக்கில் சிறப்பிடம் வகிக்கும் ஆச்சாரியனுக்கும், கலந்து

Koviloor Digital Library

கொள்பவர்க்கும் இடையூறு உண்டாகாதபடி தேவதைகளை வணங்குவதே இதன் நோக்கமாகும்.

மிருத்சங்கிரகணம்

அங்குரார்ப்பணம் என்ற கிரியையைச் செய்வதற்குத் தேவையான மண்ணை வெட்டி எடுக்கும் முன் மண்ணுக்கு அதிபதியான பூமியையும், பூமியைக் காவல் செய்யும் திக்பாலகர்களான இந்திரன் முதலிய எண்மரையும், தலைவரான பிரமனையும் பிரார்த்தித்து அவர்கள் அனுமதி பெற்று மண்ணை வெட்டி எடுக்க வேண்டும். அதற்காகச் செய்யப்படுவதே மிருதசங்ககிரகணம். மண்வெட்டிய பள்ளத்தில் உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்பன போன்றவற்றை ஊற்றுதல் வேண்டும். சிலவேலைகளில் உவர்நீருக்கு மாறாக இளநீரையும் பிறவற்றையும் ஊற்றி வணங்குதல் வேண்டும்.

அங்குரார்ப்பணம்

நல்ல செயல்களின் தொடக்கத்தில் நிகழ்வது அங்குரார்ப்பணம் செய்யப்படும் கிரியையின் நன்மையினை அறிவதற்காக விதைகளைத் தெளித்து வளரவிட வேண்டும். பாலிகை பசுமையாக முளைத்தால் கிரியை சரியான முறையில் அமைந்தது என்றாகும். மாறுதலாக இருந்தால் கிரியாதோசம் இருப்பதாக உணர்ந்து அதற்குரிய பிராயச்சித்தம் செய்ய வேண்டும். இரவிலே இக்கிரியை நிகழ்த்தப்பட வேண்டும்.

ரக்சா பந்தனம் (காப்புக் கட்டுதல்)

குடமுழுக்குக் கிரியையைச் செய்யும் ஆச்சார்யனுக்கு செய்யப்படும் காப்பு நிகழ்ச்சியே இது. கிரியை முடிவதற்குள் அவருக்குத் துன்பம் எதுவும் வந்துவிடாமல் இருப்பதற்காக இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

குடநிறுத்தம் (கும்பஸ்தாபனம்)

பஞ்சலோகத்தில் ஒன்றாலான குடத்தினைத் தூய்மை செய்து நூல் சுற்றி அதனுள் தூபங் காட்டி அதைக் கவிழ்த்து வைத்துப் பின் அதனை நிமிர்த்தி உள்ளே நீர் நிறைத்துச் சந்தனம் முதலிய திரவியங்களால் நிரப்பி, பின் அதன் மேல் தங்கப் பிரதிமை,

Koviloor Digital Library

நவரத்தினம். மாந்தளிர் தேங்காய் முதலியவற்றைப் பொருத்திக் கும்பத்தை அமைத்து, பின் கும்பத்திற்குப் பட்டுப் பூணூல், சந்தனம், மலர் மாலையால் அழகு செய்வது குடநிறுத்தம் ஆகும்.

இறைவனை ஆவாகனம் செய்யும் பொருட்டுக் குடத்தை வித்யா தேகமாகப் பாவிக்க வேண்டும்.

கலாகர்சணம்

எந்த தெய்வத்திற்காகக் குடமுழுக்கு நிகழ்த்தப்படுகிறதோ, அத்தேவதையின் திருவுருவத்தை அலங்காரம் செய்து வித்யாதேகமாகிற குடத்தில் குரு உபதேச முறைப்படி ஆவாகித்து குறிப்பிட்ட காலம் வரை அக்குடத்தில் இருக்கச் செய்தல் கலாகர்சணமாகும். இலிங்கத்திலுள்ள இறைவனைக் கும்பத்தில் சேர்த்தலுக்காக, பிம்பத்தில் உள்ள கலைகள் அனைத்தையும் ஆகர்சித்துக் கும்பத்தில் சேர்ப்பிக்கும் கிரியை ஆதல் பற்றி இது கலாகர்சணம் எனப் பெயர் பெற்றது.

ஸ்பர்சாகுதி

யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் அக்கினி வளர்க்கப்படும் அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்த சந்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும். குண்டங்களைச் சுற்றிப் பசுந் தர்ப்பைகளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்தில் இட்டுக் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினிகொண்டு, அதற்குரிய மந்திரங்களைச்சொல்லி அதிதெய்வங்களை மனத்தில் தியானித்துச் சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய்சொரிந்து அவி வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும். ஓம குண்டத்தில் எழும் புகையும், வேதம், சிவாகமம், திருமுறை ஒலிகளும், அன்பர்களின் அருபசக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும் அப்போது கும்பம் முழுமையான தெய்வீக சக்தியோடு திகழும். இவ்வாறு யாகசாலையில் நடைபெறும் கிரியைகள் முற்றுப் பெற்றவுடன் அச்சக்தி ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்குத் தருப்பைக்கயிறு, பொன் வெள்ளிக் கம்பிகளால் சேர்ப்பிக்கப்படும். அதன்பின் கும்பத்திலுள்ள நீர். சிகரங்களுக்கும், பிம்பங்களுக்கும் அபிடேகம் செய்யப்பெறும்.

Koviloor Digital Library

ஒமம் நிகழ்த்த பின் யாகசாலையில் நிகழும் கிரியை ஸ்பர் சாகுதியாகும். யாக சாலையில் செய்யப்பட்ட ஓமங்களையும், தத்துவங்களையும், தத்துவ அதிபர்களையும் தங்கக் கம்பி, வெள்ளிக் கம்பி, தர்ப்பைக் கயிறு கொண்டு யாக சாலையின் கலசத்துக்கும் மூலப் படிமத்திற்கும் இணைப்பு ஏற்படுத்தி அதில் சேர்ப்பதாகும். இறை உருவிற்கு உயிர் ஊட்டுவதைப் போன்றது இச்செய்கை.

கும்பத்தை யாக சாலையிலிருந்து எழுந்தருளி வலமாகக் கொண்டு வருவர். பிரதான கும்பத்தைக் கூர்ச்சத்தினால் தொட்டவாறு மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டே வருவர். கும்பங்களைக் கருவறைக்குள் கொண்டே சென்று மூர்த்தியின் முன் வைப்பர். இதன்பின் கும்பத்தைச் சிவாச்சாரியர் விமானத்தில் கலசம் இருக்கும் இடத்திற்குக் கொண்டு செல்வர்.

குடமுழுக்கு

யாக சாலையில் பூசிக்கப் பெற்ற கலசத்தைக் கருவறை மூர்த்தி முன் வைத்து குரு உபதேச முறையில் குடத்தில் இருக்கும் இறைவனைப் பிம்பத்தில் சேர்த்துப் பின் அக்கலச நீரை விமானகலசங்களில் அபிடேகம் செய்து. அதன்பின் கருவறைப் படிமத்திற்கும் அபிடேகம் செய்வர். இப்போது அந்த பிம்பத்தில் குறிப்பிட்ட இறைவனுடைய சக்தியைத் தாங்கும் நிலை உண்டாகிவிடுகின்றது.

முடிவுரை

திருக்குடமுழுக்கின் பெருமையை மக்கள் நன்கு உணர்ந்து செயற்படவேண்டும் என்ற அருள்நோக்கினால் திருஞானசம்பந்தர் தம் பூம்பாவைபதிகத்தில்

> **“கருஞ்சோலை சூழ்ந்து கபாலீச் சரத்தான்றன்**
> **பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்”**

எனக் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்பின் மகாஅபிடேகமும், (குடமுழுக்கு முடிந்த 45 நாள்கள் கழித்து மண்டலாபிடேகமும் நடைபெறும்.) மேற்சுட்டிய சொற்களே திருக்குடமுழுக்கின்போது பின்பற்றப்பெறும் சொற்களாக உள்ளன.

Koviloor Digital Library

திருவாசகத்தில்
திருக்கோயிற் பண்பாட்டுக் கலைச்சொற்கள்

முனைவர் சு.இராசாராம்
பேராசிரியர் & தலைவர் (பொ)
நுண்கலைத்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி -3

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டுள்ள திருவாசகமும் திருக்கோவையாரும் மாணிக்கவாசகரால் அருளப்பெற்றதாகும். இவற்றுள் திருவாசகம் அனைவராலும் போற்றப்படுவதாகும். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. திருவாசகத்தின் பெருமையை இராமலிங்க வள்ளலார், "ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" எனச் சிறப்பிப்பர். திருவாசகம் சிவபுராணம் தொடங்கி அச்சோப் பதிகம் முடிய 51 திருப்பதிகங்களைக் கொண்டது. இவற்றில் 658 திருப்பாடல்கள் அமைந்துள்ளன. மாணிக்கவாசகர் தில்லை, திருப்பெருந்துறை, திருவுத்தர கோசமங்கை, திருவாரூர், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, திருத்தோணிபுரம் ஆகிய ஏழு தலங்களில் இருந்து இவற்றைப் பாடியுள்ளார். இவற்றில் 54 திருத்தலங்களின் பெயர்களைச் சுட்டியுள்ளார். இவ்வாறு திருக்கோயில்களோடு பெரிதும் தொடர்புடைய திருவாசகத்தில் திருக்கோயிற் பண்பாட்டுக் கலைச்சொற்கள் அமைந்து மாணிக்கவாசகர் காலக் கோயிற் பண்பாட்டைப் பறைசாற்றுகின்றன.

கலைச்சொற்களும் கோயிற் பண்பாடும்

சொல்லுக்கும் கலைச்சொல்லுக்கும் வேறுபாடு உண்டு. ஒரு மொழியிலுள்ள அனைவருக்கும் பொருள் உணர்த்தக்கூடியது சொல் ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் பொருள் உணர்த்தக்கூடியது கலைச்சொல் எனப்படும்.

Koviloor Digital Library

அவ்வகையில் அறிவியல், மருத்துவம், சட்டம், சமயம் என்று பல்வேறு துறைகளிலும் அவ்வத்துறை சார்ந்த கலைச்சொற்கள் வழங்கி வருகின்றன. சமயம் சார்ந்த துறையில் மெய்யியல் கருத்துக்களை விளக்குவதற்குப் பல்வேறு கலைச்சொற்கள் உள்ளன. சைவ சமயத்துறையில் பதி, பசு, பாசம் என்னும் சொற்கள் அவ்வகையினவாகும். அவ்வாறே திருக்கோயில்கள் சார்ந்தும் எண்ணற்ற கலைச்சொற்கள் உள்ளன. அக்கலைச்சொற்கள் திருக்கோயிலின் நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு, திருவிழாக்கள், நிருவாகம், பணியாளர்கள், திருக்கோயில் திருவுருவங்கள், கட்டட அமைப்பு ஆகியவற்றோடு தொடர்புடையனவாக உள்ளன.

திருவாசகத்தில் திருக்கோயிற் கலைச்சொற்கள்

மாணிக்கவாசகர் தம் இறை அனுபவங்களைப் பாடிய நூல் திருவாசகம். இதில் தமிழகத்திலுள்ள சைவ சமயத் தலங்களையும் திருக்கோயில்களையும் அடிப்படையாகக் கொண்டு, இறைவனின் தோற்றச்சிறப்பும், பெருமையும், அருட்சிறப்பும் பாடப்பட்டுள்ளன. அவ்வாறு இறைவனைப் பாடும் பாடல்களில் திருக்கோயில்கள் சார்ந்த கலைச்சொற்களும் இடம்பெற்றுள்ளன.

உள்ளுறை கோயில்

குயிற்பத்து என்னும் பதிகம் தில்லையில் அருளியதாகும். இப்பதிகத்தில் உள்ளுறை கோயில் என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. திருவுத்திரகோசமங்கை திருக்கோயில், இனிய பண்புகளைக் கொண்டது. மிகுந்த அழகுடன் திகழக்கூடியது. மணிகள் அழுத்திச் செய்யப்பெற்ற மாடங்களைப் பெற்றிருப்பது. பூங்கொடி போன்றவளாகிய உமையவள் தங்கியிருக்கும் கோயிலை உடையது. இவ்வுலகம் விளக்கம் அடையுமாறு எம் நாயகனாகிய சிவனும் அங்கு எழுந்தருளியுள்ளான். அவனை என்னிடம் வருமாறு கூவுக எனக் குயிலை விளிக்கும் மாணிக்கவாசகர்,

நீல உருவிற் குயிலே நீள்மணி மாடம் நிலவும்
கோல அழகில் திகழும் கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயக னைவரக் கூவாய் (திருவா. 18:3)

எனப் பாடுவர். இதில் இடம்பெற்றுள்ள உள்ளுறை கோயில்

Koviloor Digital Library

என்னும் சொல் கருவறையைக் குறிக்கும். கருவறை என்னும் சொல் கர்ப்பகிரகம் என்னும் சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் உமையவள் தங்கியிருக்கும் கோயிலை 'உள்ளுறை கோயில்' என மாணிக்கவாசகர் சுட்டுவதை நோக்கும் பொழுது அச்சொல் அவர் காலத்தில் வழங்கப்பட்ட கோயிலாட்சிச் சொல் என்பது திண்ணமாகும்.

கோயிற் பிணாப்பிள்ளைகள்

திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெண்பிள்ளைகள் 'கோயிற் பிணாப் பிள்ளைகள்' என அழைக்கப்பட்டுள்ளனர். திருவெம்பாவையில் இச்சொல் பயின்று வந்துள்ளது. இது திருவண்ணாமலையில் அருளப்பெற்ற பதிகமாகும். இதில் மாணிக்கவாசகர்,

கோதில் குலத்தரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்

(திருவா. 7:10:6)

எனப்பாடுவர். இதற்குச் சிவபெருமானது கோயிற்பணி செய்துவரும் குற்றமற்ற குலத்தில் பிறந்த மான் போன்ற பெண் பிள்ளைகளே எனப் பொருள் கூறுவர் மு.அண்ணாமலை. (திருவாசகம் தெளிவுரை, ப.181) திருக்கோயிலிலுள்ள குற்றமற்ற குலங்கொண்ட பணிப்பெண்களே எனப் பொருள் கூறுவர் பி.ரா.நடராசன். (திருவாசகம் மூலமும் உரையும், ப.331). இவற்றால் பிணா என்பதற்கு மான் என்றும் பணி என்றும் பொருள் கொள்ளப்பட்டிருப்பது விளங்கும். திருக்கோ-யில்களில் தம்மை அடிமையாக ஆக்கிக் கொண்டு திருப்பணி செய்யும் இளம்பெண்களைக் குறிக்கும் வகையில் 'பிணாப் பிள்ளை' என்னும் சொல் ஆளப்பட்டிருப்பதாகக் கொள்வது பொருந்துவதாகும். பிணை என்னும் சொல் பிணா என மருவியுள்ளது. பிணை என்பதற்குப் பிணைக்கப்பட்ட என்பதும் பொருளாகும். திருக்கோயிலோடு அடியாராகப் பிணைக்கப்பட்ட பெண்கள் என்னும் பொருளில் கோயிற் பிணாப் பிள்ளை என்னும் சொல் வழங்கப்பட்டிருப்பதாலேயே மாணிக்கவாசகர் அதனைப் பயன்படுத்தியுள்ளார். அவ்வகையில் கோயிற் பிணாப் பிள்ளை என்னும் சொல் ஒரு கோயிலாட்சிச் சொல் என்பது மிகையாகாது.

Koviloor Digital Library

அம்பலம், பொன்னம்பலம், சிற்றம்பலம்

தில்லையில் சிவபெருமான் திருநடனம் செய்யும் மண்டபம் அம்பலம், பொன்னம்பலம், சிற்றம்பலம் எனப் பலவாறாக வழங்கப்பட்டுள்ளது. திருப்பூவல்லி பதிகத்தில்,

தடமார் மதில் தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ (திருவா.13:14:3–4)

என அம்பலம் என்னும் சொல்லைக் குறிப்பிடுவர். தில்லையில் அருளிய கோயில் மூத்த திருப்பதிகத்தில் "அம்பலக் கூத்தன்" (திருவா.*21:7:1*) என்பதிலும் அம்பலம் என்னும் சொல் பயின்று வந்துள்ளது. இப்பதிகத்தின் பிற பாடல்கள் அனைத்திலும் பொன்னம்பலம் என்னும் சொல் பயின்று வந்துள்ளது. மாணிக்கவாசகர் இறைவனை,

"பொன் னம்பலத்தெம், முடியா முதலே" (திருவா.*21:1:3-4*), "பொன்னம் பலக்கூத் துகந்தானே" (திருவா.*21:2:4*), "பொன்னம் பலத்தெம் முழுமுதலே" (திருவா.*21:3:4*), "பொன்னம் பலத்தரைசே" (திருவா.*21:4:4*), "பொன்னம் பலத்தாடும் அமுதே" (திருவா.*21:5:1*), "பொன்னம் பலத்தாடும் எந்தாய்" (திருவா.*21:6:4*), "பொன்னம் பலக் கூத்தா" (திருவா.*21:8:2*), "பொன்னம் பலத்தாடும் தலைவா" (திருவா.*21:9:3*), "பொன்னம் பலமென்றே, ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய்" (திருவா.*21:10:3-4*) எனப் பலவாறாகப் போற்றுவதில் பொன்னம்பலம் என்னும் சொல்லை ஆள்வர். திருச்சதகத்தில், "திருச்சிற்றம் பலவ போற்றி" (திருவா.*5:67:3*) என இறைவனைப் போற்றுவதில் சிற்றம்பலம் என்னும் சொல்லைப் பயன்படுத்துவர். அம்பலம் என்னும் சொல் மக்கள் கூடும் பொதுவிடத்தைக் குறிப்பதாகச் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது. ஆனால் பக்தி இலக்கிய காலகட்டத்தில் அச்சொல் உயர்பொருட் பேறாக ஆகி அம்பலம் என்றும் பொன்னம்பலம் என்றும் சிற்றம்பலம் என்றும் நடராசராகிய சிவபெருமான் நடனமாடும் இடத்தைக் குறிக்கும் கோயிலாட்சிச் சொல்லாக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

Koviloor Digital Library

தூண்டா விளக்கு

தூண்டா விளக்கு என்பது திருக்கோயில்களில் பயன்படுத்தப் படும் விளக்கு வகைகளுள் ஒன்றாகும். இது இரவு முழுவதும் தூண்டாமல் எரிவதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். திருப்பெருந்துறையில் அருளிய பிரார்த்தனைப் பத்தில் இறைவனைப் போற்றும் மாணிக்கவாசகர்,

தூண்டா விளக்கின் சுடர்அனையாய் (திருவா.32:4:3)

என்பதில் தூண்டா விளக்கு என்னும் சொல்லை ஆள்வர்.

மூலபண்டாரம்

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் அருளிய திருப் பாண்டிப் பதிகத்தில்,

ஆலமுண் டானெங்கள் பாண்டிப்பிரான்தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின் றான்வந்து முந்துகவே

(திருவா. 36:5:3–4)

என்னும் பாடலடிகளில் மூலபண்டாரம் என்னும் சொல்லைப் பயன்படுத்துவர். இதற்கு மு. அண்ணாமலை "முத்தி" என்றும் (திருவாசகம் தெளிவுரை, ப.435) பி.ரா. நடராசன் "கருவூலம்" என்றும் (திருவாசகம் மூலமும் உரையும், ப.572) பொருள் கூறுவர். குமரகுருபரர் பாடிய பண்டார மும்மணிக்கோவையின் பெயரில் பண்டாரம் என்னும் சொல் அமைந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயப் பிரிவினரைக் குறிக்கும் வகையில் இச்சொல் ஆளப்பட்டு வந்தாலும் பக்தி இலக்கியக் காலகட்டத்தில் இறைவனோடு தொடர்புடைய கோயிலாட்சிச் சொல்லாக வழங்கப்பட்டு வந்திருப்பது புலனாகும்.

நாதப்பெரும்பறை, நாதப்பறை

மாணிக்கவாசகர் தில்லையில் அருளிய கீர்த்தித் திருஅகவலில் 'நாதப்பெரும்பறை' என்னும் சொல்லை எடுத்தாளுவர். இதனை,

நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்

(திருவா. 1:108–109)

Koviloor Digital Library

என்னும் பாடலடிகள் உணர்த்தும். இதற்குச் சிவபெருமான் கையிலுள்ள நாதப்பெரும்பறை ஒலித்துக்கொண்டே இருக்க, அடியவர்களின் உள்ளம் அழுக்கடைந்து போகாமல் ஆட்கொள் பவன் என்பது பொருளாகும். நாதப்பெரும்பறை என்பதற்கு மு. அண்ணாமலை "உடுக்கை" என்றும் (திருவாசகம் தெளிவுரை, பக்.30-31) பி.ரா. நடராசன் "முரசு" என்றும் (திருவாசகம் மூலமும் உரையும், ப.113) பொருள் கூறுவர். மாணிக்கவாசகர் தில்லையில் அருளிய அன்னைப்பத்து பதிகத்தில்,

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும் (திருவா.17:1)

என்னும் பாடலிலும், தில்லையில் அருளிய திருத்தசாங்கத்தில்,

இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் - அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை (F¼õ£.19:8)

என்னும் பாடலிலும் நாதப்பறை எனச் சுட்டுவது ஒப்புநோக்கத்தக்கதாகும். அவ்வகையில் நாதப்பெரும்பறை, நாதப்பறை ஆகிய சொற்கள் கோயிலாட்சிச் சொல்லாக விளங்குகின்றன.

போனகம்

மாணிக்கவாசகர் தில்லையில் அருளிய திருப்பூவல்லி பதிகத்தில் 'போனகம்' என்னும் சொல்லைப் பயன்படுத்துவர். போனகம் என்பதற்கு உணவு என்பது பொருளாகும். சிவபெருமான் நெடுங்கடலில் தோன்றிய ஆலகாலம் என்னும் நஞ்சினை அமுதத்தினைப் போல உணவாக உண்டவன் எனப் போற்றும் மாணிக்கவாசகர்,

நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ (திருவா.13:12:3–4)

Koviloor Digital Library

எனப் பாடுவர். இதில் போனகம் என்பது கோயிலாட்சிச் சொல்லாகப் பயின்று வந்துள்ளது.

திருவோலக்கம்

மாணிக்கவாசகர் தில்லையில் அருளிய கோயில் மூத்த திருப்பதிகத்தில் திருவோலக்கம் என்னும் சொல் பயின்று வந்துள்ளது. அடியார்கள் சூழ்ந்திருக்கும் உனது திருவோலக்கக் காட்சியினைக் காண இனியாவது என்னிடம் சற்று இரக்கம் காட்டுவாயாக என வேண்டுவதில் மாணிக்கவாசகர், "நேசர் சூழ்ந்திருக்கும் திருவோலக்கம் சேவிக்க......தாய் இனித்தான் இரங்காயோ" (திருவா.21:6:3-4) எனத் திருவோலக்கம் என்னும் சொல்லை எடுத்தாளுவர். திருவோலக்கம் என்னும் சொல் சங்க காலத்தில் மன்னர்கள் வீற்றிருக்கும் அரசவையைக் குறிப்பதாகப் பயின்று வந்து, பக்தி இலக்கியக் கால கட்டத்தில் திருக்கோயில்களில் இறைவன் எழுந்தருளும் மண்டபத்தைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் இன்று திருவோலக்கம் என்னும் சொல் கோயிலாட்சிச் சொல்லாக வழங்கி வருகிறது.

முடிவுரை

தொன்றுதொட்டு மக்களிடையே வழங்கிவரும் பண்பாடுகளுள் கோயிற் பண்பாடு குறிப்பிடத்தக்கதாகும். வழிபாடு, விழாக்கள் போன்றன அப்பண்பாட்டை உணர்த்துவனவாக இருந்தாலும் கோயில்களில் வழங்கி வரும் சொற்களில் கோயிற் பண்பாடு பெரிதும் காணப்படுகின்றது. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறை அனுபவத்தைப் பாடியிருந்தாலும் அவற்றுள் கோயிற் பண்பாட்டை விளக்கும் பல்வேறு கோயிலாட்சிச் சொல்லையும் பதிவு செய்துள்ளார். அவ்வகையில் உள்ளுறை கோயில், கோயிற் பிணாப் பிள்ளைகள், அம்பலம், பொன்னம்பலம், சிற்றம்பலம், தூண்டா விளக்கு, மூலபண்டாரம், நாதப்பெரும்பறை, நாதப்பறை, போனகம், திருவோலக்கம் ஆகிய சொற்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

Koviloor Digital Library

திருப்புவனம் கோட்டை பகுதிவாழ் மக்களின் ஊர்ச்சாமி திருவிழா கலைச்சொற்கள்

முனைவர் கா.கணநாதன்
உதவிப்பேராசிரியர்,
தமிழ்ப்பண்பாட்டு மையம் அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-3

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

திருப்புவனம் என்ற ஊர் சிவகங்கை மாவட்டத்தில் திருப்புவனம் வட்டத்தில் திருப்புவனம் பேரூராட்சியாக உள்ளது. இவ்வூர் திருப்புவனம் கோட்டை, புதூர், நெல்முடிக்கரை, பழையூர் என்ற நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் கோட்டைப் பகுதிவாழ் மக்களின் ஊர்ச்சாமியாக அக்கினி வீர பத்திரன் கோயில் உள்ளது. தேரடியில் அமைந்துள்ள அக்னி வீரபத்திரன்கோயிலில் முற்காலத்தில் ஆண்டுதோறும் தைமாதம் இரண்டாவது வாரம் செவ்வாய்க்கிழமை பேசி முடித்து ஊர் எல்லையில் காப்புகட்டி ஊர்ச்சாமி திருவிழா கொண்டாடப்பெற்றது. காலப்போக்கில் மக்களின் குடிபெயர்தல் மற்றும் பொருளாதாரச்சூழலால் மாற்றம் ஏற்பட்டு பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் திருவிழாவாக மாற்றம் பெற்றுள்ளது. இந்த தைத்திருவிழாவில் இடம்பெற்றுள்ள முக்கிய நிகழ்வுகளில் பல கோயிற் பண்பாட்டு மரபுக்கலைச்சொற்கள் இடம் பெற்றுள்ளதை இக்கட்டுரையின் கண் காண்போம்.

ஊர்ச்சாமி

அக்கினி வீரபத்திரன் ஊர்ச்சாமியாக நிரந்திரமாக கற்சிலை வடிவில் உள்ளது. சிறிய கருவறையில் விமானமற்றதாக அமைந்துள்ளது. முன்மண்டப வாயிற்கோபுரம் சிறிய அளவில் 5அடி உயரத்தில் சுதை சிற்பங்களால் நிறைந்துள்ளது. தெற்குத்

Koviloor Digital Library

திசை பார்த்த நிலையில் மூலவர் சன்னதி உள்ளது. வெளியில் விநாயகர், முருகன் சிலைகள் உள்ளன. தைமாதம் இரண்டாவது வாரம் களரிக்காலத்தில் தென்னை மரத்தின் பச்சை கீற்றுக்களால் சிறிய குடிசை அமைக்கப்பெற்று முதல் நாள் கரகம் பாசாங்கரை காளியம்மனும், இரண்டாவது நாள் கரகம் மாரியம்மன் ஆகியோர் அக்குடிசையில் சாமிகளாக எழுந்தருளச் செய்து விழா நடைபெறும்.

தைத்திருவிழாவும் நடைமுறையும்

ஒருமாதத்திற்கு முன்பு விரதம் இருந்து ஒரு வாரம் நடைபெறும் திருவிழாவில் அக்கினி வீரபத்திரரை வணங்கி சிவன்கோயில் மேளதாளம் முழங்க பாசாங்கரைக் காளியம்மன், முனியாண்டி கோயில் சாமியாடிகள், கரகம் தூக்குபவர், காவக்காரர், ஊர்மக்கள் புடைசூழச்சென்று அக்கினி வீரபத்திரன் கோயிலுக்கு மேற்கே உள்ள ஆற்றின் படித்துறையில் கரகம் அமைத்து நீராடி, பூமாலைகள் அணிந்து மேளதாளம் முழங்க கோட்டைப் பகுதியைச் சுற்றி சாமி ஆடி காவக்கொடுத்து வருவார்கள். எட்டாம் நாள் மாவிளக்கு எடுத்தல், தேங்காய்ப்பழம் பூசை செய்தல் முடித்து பச்சைக் குடிசை முன்பு பாசாங்கரை காளிக்கு, முனியாண்டிக்கு, மதுரைவீரனுக்கு முறையே ஒரு செம்மறிக்கிடாய் வெட்டுவார்கள். மாரியம்மனுக்கு வெட்டுகிடாய் தண்ணீர் தெளித்தவுடன் ஊரின் கிழக்கே உள்ள மாரியம்மன் கோயில் கொடிமரத்திற்கே சென்று விடும் அதை அங்கேதான் வெட்டுவார்கள். பின் காளிச்சாமியாடியும், கரகக்காரரும் பச்சைக்குடிசையில் உள்ள கரகத்தை எடுத்து தேர்முட்டியில் உள்ள ஆற்றுத் துறையில் கரைத்து விடுவார்கள். ஒன்பதாவது நாள் ஓய்வெடுத்து விட்டு பத்தாம் நாளில் வைகை ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள முனியாண்டி சுவாமி கோயில் அருகில் ஆற்றின் தென்கரையில் தென்னை மரத்தின் கீற்றுகளால் பந்தல் அமைத்துக் காளியம்மன், முனியாண்டி, மாரியம்மன், மதுரைவீரன் ஆகியோருக்கு வனபூசை நடைபெறும். ஊர்மக்கள் விருந்தினர் அனைவருக்கும் நள்ளிரவு ஒரு மணிக்கு மேல் இனிப்பு ரொட்டி மற்றும் ஆட்டுக்கறிக்குழம்பும் சோறும்

Koviloor Digital Library

சக்கரைவள்ளிக்கிழங்குப் பொரியலும் வேண்டுமளவு ஒரே முறையாக வழங்குவர். இது சமபந்தி எனப்படும். அவ்வேளையில் ஏறக்குறைய 2 கி.மீ. தூரம் சாலையில் மக்கள் அமைதியாக அமர்ந்து உணவு உண்பதனை இறையருள் எனலாம்.

இடம்பெற்றுள்ள கலைச்சொற்கள்

திருவிழாவில் கரகக்காரர், தைத்திருவிழா, காப்புக் கட்டுதல், பச்சைக் குடிசை, காளிச்சாமியாடி, முனியாண்டி சாமியாடி, காவக்காரர், முளைப்பாரி, கரகம், காவக்கொடுத்தல், அடைபூசை, வனபூசை, இனிப்பு ரொட்டி, எறிசோறு, சமபந்தி போன்ற கலைச்சொற்கள் இடம்பெறுகின்றன.

தைத்திருவிழா

தை மாதம் வளர்பிறையில் காப்பு கட்டிய சாமியாடிகள் தென்னை மரத்தின் பச்சைக்கீற்றுகளால் பச்சைகுடிசை கட்டி முதல்நாள் கரகம் அமைப்பர். 2-7 வரை எடுத்து வரும் கரகம் மாரியம்மன் கரகமாக வைத்து ஒருவார காலமாக இரவு வழிபாடு நடத்தி சாமியாடிகள் காவக்கொடுக்கும் திருவிழா தைத்திருவிழா எனப்படும். எட்டாம் நாள் சாமியாடிகள் ஊர்சுற்றி வந்தவுடன் ஊர்மக்கள் மாவிளக்கு, தேங்காய், பழம் பூசை செய்வார்கள்.

காப்பு கட்டுதல்

தைத்திருவிழாவிற்கு தை மாதம் இரண்டாவது வாரம் செவ்வாய்க்கிழமை காப்பு கட்டுவர். சாமியாடிகள் ஒரு முனை முறியாத விறலி மஞ்சளை மஞ்சள் நிறத்துணியில் வைத்து வலது கையின் மணிக்கட்டில் மேல்புறமாக வைத்துக்கட்டும் நிகழ்வு 'காப்புகட்டுதல்' ஆகும். மேலும் கோட்டை பகுதி எல்லையில் தேங்காய் நார் கயிற்றில் வேப்பிலையை கொத்துக் கொத்தாகக் கட்டி சாலையின் இருபுறமும் கம்பு ஊன்றிக்கட்டுவர். இது ஊர்க் காப்புக்கட்டுதல் எனப்படும். அன்றைய தினத்திலிருந்து அப்பகுதி வாழ் மக்கள் தொழில் காரணமாக வெளியூர் சென்றால் அன்று மாலை 6மணிக்கே திரும்பி விடுவர்.

பச்சைகுடிசை

முஸ்லீம் மக்கள் சார்பாக பச்சை நிறமுள்ள தென்னங்கீற்றைப் பின்னிக் கிடுகாகக் கொடுக்க அகத்தி மரத்தைப் பச்சையாக

Koviloor Digital Library

வெட்டி அதன் மேல்பட்டைகளை சீவி 10 அடி அகலமும் பத்து அடி நீளமும் உள்ளதாக பச்சைக்குடிசை அமைக்கப்படும். மேற்பகுதி பந்தல் போலவே வேயப்படும். வண்ணான் (சலவைத்தொழிலாளி) மூலம் பச்சைக்குடிசைக்கு சேலைகள் மேலிருந்து கீழே வரை கட்டப்படும்.

கரகக்காரர்

புதிய மண்பானையைக் கழுவிய பின் கரகக்காரர் வைகை ஆற்றில் குளித்து விட்டு கரகப்பானையில் வைகை ஆற்றுத் தண்ணீர் நிரப்பி எடுத்து வருவார். பூசாரி கரகப்பானையைப் பூச்சுற்றி அலங்கரித்து மட்டை உரித்த குடும்பி உள்ள தேங்காயைப் பானையின் வாய்ப்பகுதில் நேராக வைத்து அதைச் சுற்றிலும் தென்னை மரக்குருத்துப் பாளையை வைத்துக் கட்டி, மாரியம்மனாகப் பாவித்து ஏற்று அதற்குத் திலகமிட்டுப் பூவைப்பார். பின்னர் கரகம் தூக்குவோருக்கு மாலை அணிவித்து சந்தனம், திருநீறு பூசி கரகப்பானையைத் தூக்கி கரகக்காரர் தலையில் வைப்பார். மாரியம்மனாகக் கருதப்படும் கரகத்தைத் தலையில் சுமந்து வரும் கரகக்காரர் பாசாங்கரைக்காளி, முனியாண்டி சாமியாடிகளுடன் சேர்ந்து ஊர் சுற்றி வருபவர் ஆவார்.

காளிச்சாமியாடி

பச்சைகுடிசையில் சாமி கும்பிட்டு மேளதாளத்துடன் வைகை ஆற்றங்கரைக்குச்சென்று நீராடி விட்டு வண்ணான் தரும் மாத்து வேட்டியைத் தார்ப்பாய்ச்சலாக இடுப்பில் கட்டி சந்தனம் திருநீறு அணிந்து மாலைகளை இரண்டு புசங்களிலும் குறுக்கு மறுக்காகப் போட்டு, மேலும் ஒரு மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு வடக்குத் திசையில் உள்ள பாசாங்கரை காளியம்மனை உளமாற வேண்டிக்கொண்டு இரு கைகளில் வேப்பிலைக்கொப்புகளை வைத்து மேலும் கீழும் அடித்துக்கொண்டு பூமி அதிர நடந்து ஊர்சுற்றி வந்து பொதுமக்களுக்கு அருள்வாக்கு கூறுவார்.

முனியாண்டிச்சாமியாடி

அக்கினி வீரபத்திரனை வணங்கி விட்டு, காளிச்சாமியாடி போன்றே வைகை ஆற்றங்கரைக்குச் சென்று குளித்துவிட்டு

Koviloor Digital Library

வண்ணான் தரும் மாத்து வேட்டியைத் தார்ப்பாய்ச்சலாக கட்டி திருநீறு, சந்தனம், குங்குமம் பூசி பூ மாலைகளைக் குறுக்கு மறுக்காக அணிந்து வேப்பிலைக்கொப்புகளுடன் தென்திசையில் உள்ள ஆலமரத்து முனியாண்டியை வழிபட்டு மேலும் கீழும் கைகளில் உள்ள வேப்பிலைக் கொப்புகளை அடித்துக்கொண்டு துள்ளிக்குதித்து ஆடிக்கொண்டு ஊர்சுற்று வருவார். அச்சமயத்தில் மக்கள் தங்களது குறைகளைக் கூறுவார்கள். அதைத் தீர்த்து வைப்பதாக உறுதியளித்து அருள்வாக்குத் தருவார்.

காவக்காரர்

காளி, முனியாண்டிச் சாமியாடிகள் காவக் கொடுக்க ஓடும் போது அவர்கள் நிலைதடுமாறி கீழே விழாதவாறு மதுரைவீரன் காவலாகப் பின்னால் ஓடி வருபவர் காவக்கரர். இவரும் சாமியாடிகள் போலவே ஆற்றில் நீராடி, சந்தனம், திருநீறு அணிந்து கழுத்தினில் ஒரு மாலை மட்டும் போட்டுக்கொண்டு சாமியாடிகளுடன் வருவார்.

காவக்கொடுத்தல்

சாமியாடிகள் ஊர்சுற்றி வரும்போது காவக்காரர் உடன் சென்ற பக்தர்களுடன் நிற்க, கொடி கட்டப்பட்டுள்ள கோட்டைப் பகுதியின் எல்லைக்குச் சாமியாடிகள் விரைந்து ஓடிச்சென்று விபூதியை எறிந்து காத்தருள வேண்டுதல். அப்போது காவல்காரரும் உடன் ஓடிச்சென்று சாமியாடிகளை நிலைதடுமாறாமல் அழைத்து வருவார்.

அடைபூசை

முதன்முதலில் முட்டையிடும் விடைக்கோழியை ஒன்றுக்கு மேற்பட்ட முட்டையிட்ட பிறகு காளியம்மனுக்கு அதைப் பலியிட்டு அது இட்ட முட்டைகளையும் அதன் கருவில் இருக்கும் முட்டைக்கருக்களுடன் கறி சமைத்து படையல் போடுவா. அப்போது அந்த முதல் முறையாக முட்டை-யிட்ட கோழியின் வயிற்றில் இருந்து முட்டைக் கருக்களையும் அப்படியே கோர்வையுடன் எடுத்து படையலில் வைப்பர். அவை பெரிதாகவும் பிறகு வரவரச்சிறிய அளவினதாகவும் காணப்பெறும். அப்படையலுடன் தேங்காய் உடைத்து

Koviloor Digital Library

காளியம்மனுக்குத் தீபதூப ஆராதனைகள் செய்து வழிபடும் பூசை 'அடைபூசை' எனப்படும்.

வனபூசை

காளியம்மனுக்கும் முனியாண்டிக்கும் சேர்த்து இரவு 12 மணி அளவில் சமைத்த ஆட்டுக்கறி, சேவல்கறி, சோறுசமையல், இனிப்புரொட்டி ஆகியவற்றுடன் தேங்காய், வாழைப்பழம், மாம்பழம், ஆப்பிள் பழம், மாதுளைப்பழம் ஆகியவற்றைப் படையலாகப் படைத்து தீப தூப ஆராதனைகள் செய்யும் பூசை முறையில், வடக்குதிசையில் உள்ள 'நடுக்காட்டாள்' என அழைக்கப்பெறும் 'பாசாங்கரை காளியம்மனுக்கு'ச் செய்யப்பெறும் பூசை என்பதால் நடு வனப்பகுதியில் உள்ள காளியம்மனுக்கு என்ற முதன்மைத்தன்மையில் இப்பூசையானது வனபூசை என இன்றளவிலும் அழைக்கப்பெறுகின்றது.

இனிப்புரொட்டி

பச்சரிசி மாவில் வெல்லம் ஏலக்காய், சுக்கு, கலந்து பிசைந்து அன்றே ரொட்டியாகச் சுட்டு வைத்து, வனப்படையலில் வைத்து பூசை செய்யப்படுவது. மேலும், வனபூசை சமபந்தியில் அமர்ந்த அனைவருக்கும் வழங்கப் பெறுவது குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பாக உள்ளது.

எறிசோறு

வானத்தில் உள்ள தேவதைகளுக்கு உணவு வழங்கும் முறையாக எறிசோறு வழங்கப்பெறும். காளியம்மன், முனியாண்டிக்கு நடக்கும் வனபூசையின் இறுதியில் கறியும் சோறும் கலந்து உருண்டையாக உருட்டி வானத்தை நோக்கி சாமியாடிகள் ஆளுக்கு மூன்று முறை அருளுடன் எறிவது எறிசோறு எனப்படும்.

சமபந்தி

திருப்புவண ஊர்மக்களும் அவர்களது உறவினர், நண்பாகள என அனைவரும் முனியாண்டி கோவிலில் இருந்து அக்கினி வீரபத்திரன் கோவில் வரை சாலையின் இரு மருகிலும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிசையில் ஒரே பந்தியாக அமர்ந்து இருப்பர். அவர்களுக்கு வாழை இலை வழங்கப்பெற்று இனிப்புரொட்டி,

Koviloor Digital Library

பழக்கலவை, சோறு கறிக்குழம்பு சமமாக சாதிமத வேறுபாடுகள் இன்றி வழங்கப்பெறும். அதை மக்கள் பிரசாதமாக ஏற்று உண்பார்கள். உணவை உண்டால் நோய் நொடி, காத்துக் கருப்பு அண்டாது என்ற நம்பிக்கை அவ்வூர் மக்களிடம் இன்றும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

இவ்வாறாக ஆண்டுதோறும் தைமாதம் கொண்டாடப் பெறும் இவ்வூர்சாமி கும்பிடும் திருவிழாவின் மூலம் மக்களிடையே ஊர் ஒற்றுமை என்ற ஒருமைப்பாட்டுச்சிந்தனை ஏற்படுகிறது. மேலும் ஊர்ச்சாமியாடி கும்பிட்டால், மக்களை நோய்நொடி அண்டாது என்பதும் நிகழ்கால நம்பிக்கையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது எனலாம்.

தகவலாளி:

1. காளிதாஸ் த பெ. மு.முத்தையாபிள்ளை (காளிச்சாமியாடி)
2. மணிவீரன் த பெ. கணபதி (மாரியம்மன் கரகக்காரர்)
3. கா.காளிதாசன், முன்னாள் தமிழ்த்துறைப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, திருப்புவனம்.

Koviloor Digital Library

குன்றக்குடி குறவஞ்சியில் காணலாகும் வழிபாட்டு மரபுகள்

முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல்கல்லூரி, திருவாடானை

1837 ஆம் ஆண்டளவில் வீரபத்திரக் கவிராயர் என்பவரால் குன்றக்குடி குறவஞ்சி என்ற சிற்றிலக்கியம் பாடப்பெற்றுள்ளது. இது 'குன்றாக்குடி குறவஞ்சி' எனவும், 'குன்றக்குடியில் எழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணியக் கடவுள் குறவஞ்சி' என்றும் அழைக்கப்பெறுகின்றது. குன்றா வளமுடைய இக்குறவஞ்சி குன்றாக்குறவஞ்சி என்று அழைப்பது மிகவும் பொருத்தமுடையதாகும்.

இக்குறவஞ்சி சொல்நலம், பொருள் நலம், உவமை நலம் பெற்று விளங்குவதுடன் குன்றக்குடி கோயில், மடம் ஆகியன பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டுள்ளது. மேலும் குன்றக்குடியைச் சுற்றியுள்ள வயல்களின் பெயர்கள், அங்கு திரிந்த கொக்குகளின் வகைகள், குன்றக்குடி மட வரலாறு, குன்றக்குடி சந்நிதானப் பெருமை போன்ற பலவற்றையும் அழகுபட மொழிகின்றது. குறவஞ்சிக்கான இலக்கணக் கட்டமைப்பு மாறாமலும் அதேநேரத்தில் குன்றக்குடி பற்றிச் சொல்லவேண்டிய செய்திகளை சொல்லிய நிலையிலும் இக்குறவஞ்சி குறவஞ்சிவகை வரலாற்றில் குறிக்கத்தக்கதாக விளங்குகிறது. இக்குறவஞ்சி தரும் வழிபாட்டு மரபுகள் பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் தொகுத்து உரைக்கப்பெறுகின்றன.

குறத்தி குறி சொல்லிய இடங்கள்

குன்றக்குடியில் அமைந்துள்ள குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன மடம் ஆன்மிக மையமாகத் தொன்று தொட்டு விளங்கிவந்துள்ளது. இம்மடத்துடன் பல மடங்கள், பல மடாதிபதிகள், மக்கள், கோயில் பணியாளர்கள், ஊரார்கள் போன்றோர் ஞானத்தொடர்பும் பக்தித் தொடர்பும் கொண்டு விளங்கினர்.

Koviloor Digital Library

குன்றக்குடி திருவண்ணாமலை மடத்தை உருவாக்கியவர் பற்றிய செய்தி குன்றக்குடி குறவஞ்சியில் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

"ஆழிசூழ் உலகின்மீது ஆர்குன்றை நகரினும்
ஊழிதொறும் அழிவிலாது ஓங்குபுகழ் புண்யநிலை
நிற்கட்டும் என்றே நினைத்தல்செய்து எழில்குலவு
கற்கட்டு மடமும் கவின்தரப் பிரதிட்டை
செய்சபா பதிமுனி"

என்று இந்நூலில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அருள்திரு சபாபதி தம்பிரான் காலத்தில் கல் மண்டபமாகக் கட்டப்பெற்ற செய்தி பதிவாகியுள்ளது.

மேலும் இக்குறவஞ்சியில் இடம்பெறும் குறத்தி, இம்மலை சார்ந்தவள் என்பதால் அவள் இங்கிருந்து கிளம்பி பல ஊர்களுக்குச் சென்று குறி சொல்லியுள்ளாள். இவள் குறி சொல்லச் சென்ற இடங்களில் பல இடங்கள் மடங்களாக உள்ளன. இதன் காரணமாக இம்மடம் பல மடங்களுடன் தொடர்பு கொண்ட நிலை தெரியவருகிறது. அதனை குறவஞ்சியில் இடம் பெறச் செய்துள்ளார் வீபபத்திர கவிராயர்.

கூடல் கொடுங்குன்ற ஸ்தானீகனாம் குப்பு
தேசிகர்க்குக் குறி சொன்னேன்.

என்பதன் வழி திருக்கொடுங்குன்றம் எனப்படும் பிரான்மலையில் ஒரு மடம் இருந்ததும் அம்மடத்தை அப்போது கவனித்து வந்தவர் அருள்திரு குப்பு தேசிகர் என்பதும் தெரியவருகிறது.

நீதர் திருக்கோள நாதர் தன் கோயில் ஸ்தா
னீகருக்கும் குறி சொன்னேன்

என்ற நிலையில் குன்றக்குடி ஆதீனக் கோயில்களில் ஒன்றாக விளங்கும் திருக்கோளக்குடி என்ற கோயில் சார்ந்த மடம் ஒன்று அங்கு இருந்ததும் தெரியவருகிறது.

என் குல தெய்வமாம் துங்க மலைக்கு
மரேசர்தம் கோயில் ஸ்தானீகர்
எந்தன் அருமை அறிந்து மகிழ்ந்தவர்
ஈய்ந்த முத்தாரம்

Koviloor Digital Library

என்ற பாடலடியில் குறிப்பிடப்பெற்றுள்ள துங்கமலை என்பது குன்றக்குடி மலையாகும். அருணகிரிநாதர் குன்றக்குடி மலையை துங்க மலை என்று குறிப்பிடுகிறார். இம்மலை சார்ந்த மடத்தில் இருந்த ஆதீன ஸ்தானிகர் குறவஞ்சி எழுதிய புலவர் மீது தனித்த அன்பு கொண்டவர். அவ்வன்பு குறத்தியின் மீதும் இருப்பதாக இக்குறவஞ்சியில் பாடப்பெற்றுள்ளது.

சக்தி உமைவாழ் சிராசையில் மேவிய
ஸ்தானிகர்க்குக் குறி சொன்னேன்

என்ற பகுதியின் வழி சிராமலை எனப்படும் திருச்சிராப்பள்ளி மலை சார்ந்த இருந்த மடத்தின் பொறுப்பாளர்க்கும் குறத்தி குறி சொல்லியுள்ளாள்.

வய்யம் புகழும் பிரமானூர் மேவும்
மகாசனங்கட்கும், ஊரவர்க்கும்
வைத்ததெல்லம் சொன்னேன்

என்ற அடிகளில் திருப்பூவனம் வட்டத்தில் உள்ள பிரமனூர் என்ற ஊர் குன்றக்குடியுடன் தொடர்புடைய ஊராக விளங்கியுள்ளது என்பது தெரியவருகிறது. அங்கும் சென்று குறத்தி குறி சொல்லியுள்ளாள்.

இதுபோன்று மங்கைபதி (பட்டமங்கலமாக இருக்கலாம்) ஸ்தானீகர், சொர்ணகாளீஸ்வர தேசிகர் (காளையார் கோவில் சார் மடத்தில் இருந்தவராக இருக்கலாம்) சுப்பிரமணிய தேசிகர், பால சுப்பிரமணியன் போன்றோருக்கும் கோயில் உத்யோகர், வயிராவி, தலத்தார் போன்ற கோயில் பணியாளர்களுக்கும் குறத்தி குறி சொல்லியுள்ளாள்.

இவ்வகையில் குன்றக்குடி மடத்தின் ஆன்மிகத் தொடர்புகளை இக்குறவஞ்சி பதிவு செய்துள்ளது.

வயல்கள்

குறவன் கொக்குகளைத் தேடிச் செல்லும் நிலையில் பல வயல்களுக்குச் செல்கிறான். அவ்வகையில் கொக்குகள் சென்ற வழிகளில் இருந்த பல வயல்களின் பெயர்கள் இக்குறவஞ்சியில் சுட்டப்பெற்றுள்ளன.

Koviloor Digital Library

"கார்த்திகைக் கட்டளைச் சாத்தனேந் தல் - அழ
கானஇடைய னேந்தல் மீனை மிகவும் மேய்ந்து
சாற்றும் சிவரியேந்தல் சிங்கமங்கை வயலும்
தழைக்கும்நெற் குப்பைவயல் விளக்கும்பளச் செய்யிலும்" (வந்து)

என்று பல்வேறு நிலங்கள் குறிக்கப்பெறுகின்றன.

கார்த்திகைக் கட்டளைக்காக விடப்பட்ட சாத்தனேந்தல், இடையனேந்தல், சிவரியேந்தல் சிங்கமங்கை வயல், நெற்குப்பை வயல், நியமம் (நேமம்) ஒகந்தா வயல், பலவான்குடிச் செங்கணி வயல் (திருவிளக்கு ஏற்றும் மானியத்திற்காக விடப்பட்டது.) ஊழியேந்தல், பெருச்சாளியேந்தல், குடிக்காடன்வயல், தேவனேரியுடன் மணியத்தூர்வயல், நாடுமேரி, சுன்ன ஓடை, குமிழாங்குண்டை, பிடாரியேந்தல், விபிரனேரி, இடும்பனேரி, குறும்பன் வயல், வலையனேரி, சிந்தாவடியேந்தல், வைய்யாபுரிக் கண்மாய், செய்ய வயல், மதுராபுரிக் கரைத் தென்னந்தோப்பு போன்றனவற்றைச் சிங்கன் குறிப்பிடுகிறான். இவற்றில் நிலங்களும் நீர்நிலைகளும் குறிப்பிடப்பெற்றுள்ளன. இப்பகுதிகளில் கொக்குகள் திரியும் என்பதால் அவற்றை வேட்டையாட குறவன் செல்கிறான். இவற்றில் வையாபுரிக் கண்மாய், மதுராபுரிக் கரை தென்னந்தோப்பு போன்றன இன்றும் இருக்கின்றன என்பது முக்கியமான செய்தியாகும். இப்பட்டியல் இக்குறவஞ்சியில் இன்னும் தொடர்கிறது.

"கதிக்கும் பிச்சைப் பண்ணைக் குரிமையாய் சொக்கநாதன்
வயக்கலிற் பெருமையாய்
மதிக்குமீனாம் பிகைவயலிலே சுப்பிரமணிய வயக்கலின் '
செயலிலே
நாயகர் வயக்கல் நடவிலே செங்கால் நாரை வருமந்தக்
கடலிலே
சாயாமல் கண்ணியை நாட்டடா சேவல் தட்டினிலே
கண்ணிபூட்டடா
மருத நாயகர் திருத்தல மாம்அதில் வரிசையாய்க் கண்ணி
பரத்தலாம்"

என்ற நிலையில் வயல்களின் பட்டியல் தரப்பெறுகிறது.

பிச்சைப் பண்ணை, சொக்கநாதன் வயக்கல், மீனாம்பிகை வயல், சுப்பிரமணிய வயக்கல், நாயகர் வயக்கல், தியாகராஜர்

Koviloor Digital Library

வயல், சங்கரலிங்க முனீஸ்வரர் வயல், சாமி சபாபதி வயல், குன்றக்குடி சண்முகநாத மூர்த்தி செம்மை வயல் போன்ற நிலப்பகுதிகள் மேற்காட்டிய அடிகளில் சுட்டப்பெற்றுள்ளன. குன்றக்குடியைச் சுற்றியுள்ள நிலங்களின் பட்டியல் இதுவாகும். இதனுள் குன்றக்குடி மடத்திற்கு, குன்றக்குடி கடவுளுக்கு உரிய நிலங்களும் இனம் காட்டப்பெற்றுள்ளன. இவ்வாறு சூழல் அறிவுடன் இச்செய்திகளை இக்குறவஞ்சி பதிவு செய்துள்ளது.

சந்நிதானப் பெருமை

குறத்தி குன்றக்குடி சந்நிதானத்தின் பெருமையைப் பாடுகிறாள். அவ்வாறு பாடும் அவளின் பாடலடிகள் வழி பல வழிபாட்டு மரபுகள் தெரியவருகின்றன.

"உபதேசக் குருவாகித் தாதைதனைப் பணிவித்த உம்பர் பெருமான்சன்னிதி என்று சாமிநாதக் கடவுள் வீற்றிருக்கும் சந்நதி" குன்றக்குடி சந்நிதானம் என்று குறத்தி பாடுகிறாள். மேலும் அவள் "சீதரன் போலவளர் சிம்மாசனாதிபதி தென்குழந்தாபுரி செழிக்க வரு நீதன் பூதலம் புரக்கும் எங்கள் போதகுரு சாமி" எனும் பூபதிசெங் கோல்நிதமும் பொங்கமுட னோங்க - நிற்கும் சந்நதி என்று சிவகங்கை மன்னர் போதகுருசாமி என்னும் பூபதி வணங்கம் சந்நதியாகக் குன்றக்குடி சந்நிதானம் விளங்குகிறது.

"ஆதிகொடுங்கிரிமுதல் ஆறுதலமும் கூடல் அங்கயற்கண்ணி சொக்கலிங்கருடன் வாழும் ஊதியமதாகிய விழா, பூசைக் கட்டளை" விளங்கும் சந்நதி"எந்நாளும் சைவசித்தாந்த வேதாகமம் வழாது சிவ சமயப் பரிபாலன் கிருபால குண சீலன் தெய்வசிகாமணி யென்னும் திருவணாமலையாதீனதேசிகர் உரைக்கும் உபதேசவகை" சந்நிதி என்று குன்றக்கு திருவண்ணாமலை ஆதீனம் தெய்வசிகாமணி தேசிகர் வணங்கும் சந்நதியாகக் குன்றக்குடி முருகப்பெருமான் சந்நிதி விளங்குகின்றது.

"பரதேசி முத்திரை அகுதார் விசாரணைபெறு - சுபாஷி தசு சீலன் வேலாயுதயோகி திரமாய் இயற்றும் உயரதிகார சட்டங்கள் செயும்படி நடாத்தும் உத்தியோகர் நெறியாலும் காலகாலங்கள் அபிஷேக நைவேத்தியமொடு கட்டளை வழாதியற்றக் கதிக்கும்

Koviloor Digital Library

சன்னிதானம்" என்று குன்றக்குடி சந்நிதானம் பாராட்டப் பெறுகிறது. இவ்வடிகளில் அகுதார், விசாரணை, அபிஷேகம், நைவேத்தியம், கட்டளை போன்ற கோயில் நடைமுறை சார்ந்த சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

"மாலயன் முதலினோர் வந்து நிதம் தொழுதேத்த வரம்வேண்டு வனஅருள் மகாசன்னிதானம்" என்று தேவருலகத்தவர்கள் வழிபடும் சந்நிதானமாகக் குன்றக்குடி சந்நிதானம் விளங்குகிறது.

"தென்கோடியாதிபதி தொண்டைமானார்செயும்- உச்சிக் காலக் கட்டளை சிறக்கும் சன்னிதானம்" என்ற நிலையில் தொண்டைமான் மரபினர் செய்யும் உச்சிக்கால பூசை அறக் கட்டளை குறிக்கப்படுகிறது. இவ்வறக்கட்டளை ஏற்று நிற்கும் சந்திதானம் என்று சந்நிதானம் போற்றப்படுகிறது.

"நன்காமதேனுவெனும் திருப்புனல்வை முதன்மையர் சேனாபதிக் குருபணி பிரதாப சன்னிதானம்" என்றும் நிலையில் காமதேனு வணங்கும் பெருமை உடைய சந்நிதானமாகக் குன்றக்குடி சந்திதானம் விளங்குகிறது.

"கார்த்திகைக்குக் கார்த்திகை பிரார்த்தனைசெய்வோர் நினைக்கும் கருத்தின்வழி அருள்புரியும் கருத்தன் சன்னிதானம்" என்று குன்றக்குடியில் கிருத்திகை விழா சிறப்புடன் நடப்பதைக் குறிக்கிறது இக்குறவஞ்சி. "மூர்த்தி கரம் மேன்மேலும் முக்கிய முடனுண்டாக முத்தியடியார்க்கருள் சண்முகவர் சன்னிதானம்" என்று முத்தி தரும் சந்நிதானமாகக் குன்றக்குடி சந்நிதானம் விளங்குகிறது. இத்தகைய பெருமையும் நடைமுறையும் உடையதாகக் குன்றக்குடி சந்நிதானம் விளங்குகின்றது.

இவ்வாறு குன்றக்குடி மடத்தின் அருள் பெருமை, அருள் பொங்கும் குன்றக்குடி முருகன் சந்நிதானப் பெருமை, குன்றக்குடியைச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள் போன்ற இக்குறவஞ்சியில் குறிக்கப்பெற்றுள்ளது. குறவஞ்சிக்கான இலக்கணத்தைத் தாண்டி குன்றக்குடி குறவஞ்சி கோயில் நடைமுறைச் செய்திகளையும், பண்பாட்டுச் செய்திகளையும் கொண்டு விளங்குகிறது என்பது இதன்வழி கிடைக்கும் முடிபாகும்.

Koviloor Digital Library

கிருங்காக்கோட்டை சடையாண்டி கோயிலின் வழிபாட்டு மரபுகள்

முனைவர் சொ. சேதுபதி
தமிழ்த்துறைத் தலைவர்,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவையின் வாக்கு தொடங்கி, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'திருக்கோயில் இல்லா ஊர் திருவிலூர்' என்றெல்லாம் வழங்கப் பெறும் தொடர்கள், ஊர்களானது கோயில்களைக் கொண்டே சிறப்புப் பெறுகின்றன என்பதை உணர்த்துகின்றன.

தமிழகத்தின் பல ஊர்கள் கோயில்களை அடிப்படையாகக் கொண்டே உருவாகியிருப்பதையும் பார்க்கலாம். வழிபடு மரபில் பெருந்தெய்வம் என்றும் சிறுதெய்வம் என்றும் பகுத்துணரப் பெறுகிற இறைவன் திருவோலக்கம் கொண்டிலங்கும் புனித இடம் திருக்கோயில். பெருந்தெய்வ வழிபாட்டுக் கூடங்கள், கல்மாடங்களாகப் பெருங்கோபுரங்களுடன் விளங்குகின்றன. சிறுதெய்வ வழிபாட்டிடங்களோ, இன்னும் இயற்கைச் சூழல் மாறாமலேயே, இருக்கின்றன. அதேபோல, அவற்றுக்கான வழிபாட்டு முறைகளும் தனித்தமைகின்றன.

ஊர்க்காவல் தெய்வங்களாக, ஆண், பெண் தெய்வங்கள் விளங்குகின்றன. பிடாரியம்மன், மாரியம்மன் ஆகிய பெண்தெய்வங்களும், ஐயனார், கருப்பர், உள்ளிட்ட ஆண் தெய்வங்களும், வாழ்வாங்கு வாழ்ந்து ஊர்நலனுக்காக உயிர்நீத்த இருபால் பட்ட தெய்வங்களும் இவ்வகையினவாக அமைகின்றன. இவற்றுக்கிடையில் தவவலிமையால் சித்துக்கள் புரிந்து சமாதி மற்றும் ஜீவசமாதி அடைந்த சித்தர்களின் கோயில்களும் சில ஊர்களில் அமைந்துள்ளன. குலதெய்வமாகவும், வழிபடுதெய்வமாகவும், ஊர்க்காவல் தெய்வமாகவும் பலதெய்வவழிபாடு, தமிழகத்தில் தவிர்க்க இயலாதமைகின்றன.

Koviloor Digital Library

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று திருமந்திரம் சொன்னாலும், பல்வேறு குலங்களும் குடிகளும் தத்தமக்குரிய தெய்வங்களை, எழுந்தருள்வித்து வழிபடுவது தவிர்க்க இயலாதது என்பதை,

நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலா
பதி வாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறு ஆக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறு அறி மரபின் அறிந்தோர் செய்யுமின்

என்னும் மணிமேகலைத் தொடரால் அறியலாம். இன்றளவும், சிற்றூர்களில் நடைபெறும் திருவிழாக்களில், ஊர்க்காவல் தெய்வவழிபாடு நிகழ்கிற அதே வேளையில் உள்ளூரில் பின்னர் எழுந்துள்ள விநாயகர், முருகன் சிவன், திருமால் உள்ளிட்ட பிறதெய்வங்களுக்கும் அவ்வவற்றுக்குரிய வழிபாட்டு மரபில் பூசனைகள் செய்யப்பெறுவதைப் பார்க்கலாம்.

பொதுவான நிலையில், பூவும் புனலும் சொரிந்து வழிபடுவது இருதெய்வ வழிபாட்டு முறையாக இருந்தாலும், சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடுதல் முக்கிய இடம்பெறுகிறது.

இவ்விரு நிலைகளுக்கும் இடையில், தனித்துவமிக்க வழிபாட்டு மரபுகள் சில திருக்கோயில்களில் நடைமுறையில் உள்ளன.

அவற்றுள் ஒன்று, கிருங்காக்கோட்டையில் கோயில் கொண்டருளிய சடையாண்டித் தெய்வ வழிபாடாகும்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியை அடுத்துள்ள இவ்வூரின் நுழைவாயிலில் அமைந்துள்ளது சடையாண்டி கோயில். இத்தெய்வம் இவ்வூருக்கு எழுந்தருளிய வரலாறு. ஊர்ப் பெயரோடு தொடர்புடையது. வழிபாட்டு மரபும் தனித்துவமானது. அதுகுறித்த தேடலின் தொகுப்பு இக்கட்டுரை.

சடையாண்டி வரலாறு

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சடையாண்டி எனும் பெயரிலான தெய்வ வழிபாடு நிகழ்ந்து வருகிறது. பெரும்பாலும், அவை சித்தர் வழிபாட்டு மரபிலானதாகக் காணப்பெறுகின்றன.

Koviloor Digital Library

ஆனால், கிருங்காக்கோட்டை சடையாண்டி வழிபாடும் வரலாறும் அவற்றினின்று வேறுபட்டதாகும்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையை அடுத்துள்ள, கிருங்காக்கோட்டை எனும் ஊரில் இருந்து சந்தி பண்டாரம் என்னும் தவசீலர், தவமிருத்தல் வேண்டி, அமைதியான இயற்கை சூழ்ந்த பகுதியைத் தேடி வந்திருக்கிறார். பறம்புமலைச் சாரலில், மூன்று மலைகள் வடபுறமாக இருக்க, செங்கணான் மலையில் இருந்து இறங்கிவரும் அருவிப்பெருக்கால் குளிர்நீர் சலசலத்தோடும் சிற்றாற்றங்கரை, அவர் விரும்பிய இடமாக இருந்தது. நாளும் நீராடி, தான் கொண்டுவந்த இரும்பு உலோகத்தால் ஆன சிறியதொரு சூலத்தைப் புளிய மரத்தடியில் எழுந்தருளுவித்து நன்னீராட்டி வணங்கியிருக்கிறார். வழிபாடு முடிந்தபிறகு துணியால் அதனைச் சுற்றி வைத்துத் தாம் குடிலமைத்துத் தங்கியிருந்த பக்கத்து இடத்திற்குக் கொண்டு செல்வது அவர்தம் வழக்கமாய் இருந்திருக்கிறார். இந்தச் சூலத் திருமேனியே, சடையாண்டி என்ற பெயர் கொண்டமைகிறது. வேறு உலோக, மர,கற்சிற்பங்கள் எதையும் அவர் இப்பெயரில் நாட்டி வழிபடவில்லை.

இந்த இடத்திற்குத் தெற்கேதான் பழைய ஊரான வீரபாண்டி நல்லூர் அமைந்துள்ளது. இது கேரளவளசிங்க நாட்டின் உள்ளமைவான சிற்றூராகும். (இதற்குச் சான்றுபயக்கும் ஒரு கல்வெட்டு பிரான்மலை திருக்கொடுங்குன்ற நாதர் திருக்கோ-யிலின் பெருமதிற்சுற்றுச் சுவரில் காணப்பெறுகிறது. பிரான்மலை வள்ளல் பாரி மேனிலைப்பள்ளிக் கட்டடத்தின் எதிர்ப்புற மதிற்சுவரில் உள்ள ஒரு நெடுங்கல்லில் கேரள சிங்க வளநாடு என்ற குறிப்புக் காணப்பெறுகிறது.)

நல்லூர் என்றும் பெயர் பெறும் இவ்வூரில் முன்னர் மூன்று கரைகளில் வாழ்ந்த மக்கள் அந்தப் பகுதியில், ஊருணி தோண்டிப் பிள்ளையார் கோயில் அமைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். அந்த ஊருணி, ‘நல்லூருணி’ என்றும், அந்தப் பிள்ளையார், ‘முக்கரைப் பிள்ளையார்’ என்றும் பெயர்பெற்றமைகின்றன.

இந்தப் பகுதிக்கு வடக்கே, அடவியாய் இருந்த இடம்தான் இப்போதுள்ள சடையாண்டி கோயில் அமைந்த பகுதி.

Koviloor Digital Library

பின்னரே ஊர்மக்கள் இங்கு பெயர்ந்து வந்து வாழத் தொடங்கியிருக்கின்றனர்.

கிருங்காக்கோட்டை பெயர்க் காரணம்

சந்தி ஐயா வந்தபிறகு. அவர்தம் ஆற்றலை உணர்ந்த இவ்வூர் மக்கள் அவரைப் போற்றிப் பரவினர். காலப்போக்கில், அவர் இறையடி எய்துதற்குமுன்னர், ஊர் மக்களை அழைத்து, தன்னைச் சமாதிகூட்டி, அந்த இடத்தில் ஒரு பிள்ளையாரை எழுந்தருள்வித்து வழிபடச்சொல்லியிருக்கிறார். பூசை செய்தற்குத் தான் பிறந்த கிருங்காக்கோட்டையில் இருந்து தன்குலத்துப் பங்காளிகளை, அவர்கள் வேண்டும் பொருள் கொடுத்து அழைத்துவரப் பணித்திருக்கிறார்.

அவர் சொல்லியவண்ணமே அமைத்த வழிபாட்டுத்தலம்தான் இன்றைக்குப் பொல்லாக்குளம் என்று சுட்டுப் பெயர் கொண்ட 'நல்லபாகன் குளத்தின் தென்கரையில் அமைந்துள்ளது. அங்கு எழுந்தருள்விக்கப்பெற்ற விநாயகர், சந்தி ஐயா பெயரால், 'சந்திவிநாயகர்' என்ற பெயர் சூட்டப்பெற்றிருக்கிறது. கற்சிற்பமாக அமைந்துள்ள அவ்விநாயரின் கருவறைப்பகுதி-தென்மூலையில் சந்திஐயாவின் சமாதி அமைந்துள்ளது. அவர் விரும்பிய வண்ணமே, மானாமதுரைக் கிருங்காக்கோட்டையில் இருந்து வருவிக்கப்பெற்ற அவர்தம் குலத்தவர்களுக்கு ஊரார் வேண்டியன கொடுத்துப் புரந்திருக்கின்றனர். அதுவரை வீரபாண்டி நல்லூர் என்றும் நல்லூர் என்றும் பெயர் பெற்றமைந்த இவ்வூர், அவர்களால் கிருங்காக்கோட்டை என்று ஆயிற்று என்று செவிவழிச்செய்தியாகக் கூறப்பெறுகிறது. கோட்டை சூழ்ந்த பகுதியாக இது இருந்து, கெரங்காக்கோட்டை எனப் பெயர் பெற்றதுதான் பின்னர், கிருங்காக்கோட்டை ஆயிற்று என்று சொல்பவர்களும் உளர்.

இவ்விரு உண்மைகளுக்கு இடையில், இங்கு வருகைதந்த பண்டார குலத்தவர்கள், சந்தி ஐயா வழிபட்ட, சடையாண்டித் தெய்வத்தையும் ஊரார்களுடன் இணைந்து வழிபட்டுவந்தனர்.

சந்தி ஐயா மறைவுக்குப் பின்னர், அந்த இடத்தில், புளிய மரத்தடியில், ஒரு பீடம் அமைத்து, இரும்பாலான சிறு சூலத்தை

Koviloor Digital Library

ஊன்றி நெடுங்காலமாக வழிபட்டுவந்திருக்கின்றனர். இது சித்தர்பீடமோ, ஜீவசமாதியோ இல்லை.

சடையாண்டி கோயில் அமைப்பு

புளிய மரம் இல்லாதுபோன பிறகு, அந்த இடத்தைத் தூய்மைசெய்து, பெரிய அளவிலான இரும்புத்திரிசூலம் ஊன்றி, இப்போதிருக்கும் வடிவில் சடையாண்டி கோயிலை ஊர்மக்கள் எழுப்பியிருக்கின்றனர். உடன் வழிபாட்டுப்பொருள்களாக, சிறிய வடிவிலான சூலம், வேல், இரு சுக்குமாந்தடிகள், ஆணிகள் பதிக்கப்பெற்ற மரத்தாலான திருவடிகள் ஆகியன உள்ளன. (இந்தச் சூலம் தவிர்த்த ஏனைய பொருள்கள், சந்தி ஐயா பயன்படுத்திய பொருள்களா? அல்லது அவர்தம் நினைவுச் சின்னங்களா என்பது ஆய்வுக்குரியது. இன்றளவும் சடையாண்டிக்குப் பானகம் கரைக்கும் பக்தர்கள், சுருட்டு வாங்கி வைப்பது வழக்கம். இது, சடையாண்டியை வழிபட்ட சந்தி ஐயா பயன்படுத்தியதன் காரணமாக வைக்கப்பெற்றுப் பின்னர், சந்தி ஐயா சமாதிக்குக் கொண்டு செல்லப்பெறுகிறது.)

பெருங்கோயிலுக்குரிய கோபுரங்களோ, கூடங்களோ, மாடங்களோ கிடையாது. சிமெண்ட் ஓடு வேய்ந்த கூரை மட்டுமே நிழல் தருகிறது. ஒரு சில படிகள் வைத்து ஏறும் வண்ணம் சதுர வடிவில் உயர்ந்த பரப்பில், அமைக்கப்பெற்ற தளத்தில், சடையாண்டித் தெய்வத்தின் வழிபடு பொருள்கள் இருக்கின்றன. அந்த இடத்தைச் சுற்றி, நாற்புறமும் இரும்பு உலோகத்தாலான வேல்கள் கொண்ட சிறிதே உயரமுள்ள வேலிப்பகுதி அமைக்கப்பெற்றுள்ளது. உள்பகுதியின், தென்மூலையில் பானகத்திற்கான வெல்லம் தகைக்கும் கல் உள்ளது. உட்புறம் குழிந்து அகன்ற பள்ளமான பாறையொத்த அக்கல்லில் ஏலம், சுக்கு ஆகியவற்றைப் பொடித்த பிறகு வெல்லம் தகைக்கப்பெறும் வகையில் ஆட்டுக் குழவிக்கல் போன்ற ஒரு கல்லும் இருக்கிறது. கூடவே, கல்லில் ஒட்டிய வெல்லத்துணுக்குகளைப் பெயர்த்தெடுக்க உதவும் சிறு இரும்புக் கரண்டியும் உள்ளது. இந்தப் பகுதிக்குப் பானகம் கரைக்க வேண்டிக் கொண்ட பக்தர்கள் மேலாடையை நீக்கிவிட்டு

Koviloor Digital Library

உள்ளே சென்று வெல்லம் தகைப்பார்கள். பூசை புரிபவர்கள் பண்டாரங்கள் மட்டுமே ஆவர்.

சடையாண்டி வழிபாடு

சிவபெருமானின் அம்சமாகக் கருதத்தக்க சடையாண்டித் தெய்வத்தின் வழிபாடு அமைதியான வழிபாடு ஆகும். கொட்டு முழக்கமோ, மேளவாத்தியமோ, சங்குசேகண்டி மற்றும் மணி முழக்கமோ இல்லாத அமைதியான வழிபாடுதான் இங்கு நடைபெறுகிறது. சடையாண்டி சந்நிதியில், அருச்சனையோ, மந்திர உச்சாடனங்களோ, பாடல்கள் ஓதுவதோ கிடையாது. முற்றிலும் அமைதியான வழிபாடுதான்.

வழிபடு பொழுதும் நாள்களும்

வாரத்தின் இருநாட்கள் அதாவது, திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளின் மாலைப்பொழுதுக்குப் பின்னர் மட்டுமே இந்த வழிபாடு நடைபெறும் அதுவும் தொடர்ந்து நடப்பதில்லை. வேண்டுதலை நிறைவேற்றவரும் பக்தர்களுக்காக நடத்தப்பெறும்.

அபிடேகமும் நைவேத்தியமும்

நித்திய பூசையோ, பலியிடுதல் போன்றவையோ இங்கு நடைபெறுவதில்லை. பானகம் மட்டுமே சடையாண்டித் தெய்வத்திற்கான நைவேத்தியப் பொருள்.

வழிபாட்டின்போது, சடையாண்டியின் சூலத்திருமேனிக்கு நல்லெண்ணெய்க் காப்பு மட்டுமே உண்டு. பின்னர் நன்னீரால் நீராட்டி, காவி உடையணிவித்து, உருத்திராக்க மாலை சூட்டப்பெறும். அண்மைக்காலமாக, விழாக் காலங்களில் பசும்பால் அபிடேகம் செய்யப்பெறுகிறது. மாலைகளும் பூச்சரங்களும் அணிவிக்கப்பெறுவதோடு, சூலத்தின் முனைகளில் எலுமிச்சங்கனிகள் செருகப்பெற்று, சந்தனம், குங்குமம் தீற்றப்பெறுகின்றன.

பானகம் தயாரிக்கும் முறை

தூளாக்கப்பெற்ற வெல்லத்தை நீரில் கரைத்து, ஏலம், சுக்கு ஆகியவற்றையும் பொடித்து அவற்றோடு சேர்ப்பதுண்டு.

Koviloor Digital Library

எலுமிச்சம்பழச்சாறும் அதில் பிழியப்பெற்று இருக்கும். முன்னர்ச் சுட்டிய எளிய அலங்காரம் முடிந்த பின்னர், நைவேத்தியமாக அண்டாவில் கரைத்து வைக்கப்பெற்றிருக்கும் பானகம் படைக்கப்பெறும், பூசை புரியும் பண்டாரம், சாம்பிராணிப் புகை ஊட்டி, மௌனமாகக் காட்டுவார். பானகம் இருக்கும் பாத்திரத்தைத் தன் விரல்களால் மும்முறை சுண்டிக் காட்டுவார். பின்னர் திருநீறு வழங்கப்பெற்று, வந்திருக்கும் அனைவருக்கும் பானகம் பகிர்ந்தளிக்கப்பெறும்.

சிறப்புப் பூசனை

ஆண்டுக்கொரு முறை, ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை அன்று, ஊர்ப்பொதுவில் அன்னதானம் சடையாண்டி பூசையாகச் செய்து நடைபெறும். சந்திவிநாயகர் கோயிலின் முகப்பில் உள்ள பெரிய கூடத்தில் பெருஞ்சோறு குவிக்கப்பெற்று, பண்டாரத்தார் கூடி, சங்கு சேகண்டி முழங்க, 'அரகரா' சொல்லி வழிபடுவர். பின்னர் அனைவருக்கும் அன்னதானம் நடக்கும். இது இப்போதும் தொடர்கிறது.

சடையாண்டியின் அருள்வளம்

சடையாண்டித் தெய்வம் இவ்வூர் மக்களின் ஊர்க்காவல் தெய்வங்களுள் தலையாயது. வேண்டியதை வேண்டியவண்ணம் அருளும் அறத்தெய்வமாக, ஏழை எளிய மக்களின் இன்னல்களைக் களைபவராகச் சடையாண்டி விளங்குகிறார்., நீதியை நிலைநாட்டச் சட்டத்தை நாடுவதைவிடவும் சடையாண்டியை வேண்டுபவர்களாக இவ்வூர் மக்கள் விளங்குகின்றனர். இக்கட்டான சில காலக்கட்டங்களில் இத்தெய்வம் முன்னின்று ஊர் காத்த பெருமையை இவ்வூர் மக்கள் இன்றும் சொல்வதுண்டு.

செவிவழிச் செய்தியாகக் கேட்டது கொண்டும், கள ஆய்வில் கண்டது கொண்டும் பதிவிடப்பெறுகிற இக்கட்டுரையைத் தொடர்ந்து கூடுதல் தகவல்கள் தேடிப் பெற்று விரிவாக எழுத வாய்ப்புண்டு.

Koviloor Digital Library

பட்டுக்கோட்டை நாடியம்மன் வழிபாட்டு மரபில் மேனிலையாக்கம்

முனைவர் தெ. அகிலா,
தமிழ் உதவிப் பேராசிரியர்,
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.

மனிதன் தொடக்க காலத்தில் இயற்கையை வழிபட்டான். அவனது அச்ச உணர்வே வழிபாட்டுக்குக் காரணமாக இருந்தது. நாளடைவில் உருவ வழிபாடு தோற்றம் பெற்றது. தெய்வங்கள் பலவாகப் பெருகின. அவைகளுக்கிடையே உறவுமுறைகள் கொண்டு ஒன்றொடொன்று பிணைக்கப்பட்டன. இக்கடவுளர்களின் அடிப்படையில் சமயங்கள் தோன்றின.

தெய்வங்கள் வழிபாட்டு அடிப்படையில் பெருந்தெய்வம், சிரு தெய்வம் என இருவகையாகப் பாகுபடுத்துவர். சிவன், திருமால், முருகன் முதலான தெய்வங்கள் பெருந்தெய்வங்களில் அடங்கும். இக்கடவுள்களுக்கான கோவில்கள் ஆகம விதிமுறைகளுக்கேற்ப கட்டப்பெற்றும், பூசைகளும் வழுவாமல் நடைபெறும். அய்யனார், கருப்பர், முனியம்மா, மாரியம்மன், காளியம்மன் போன்றவை சிறு தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் பெரும்பாலும் ஊரின் எல்லைப்பகுதியில் அமைந்திருக்கும். இவ்வகையில் தோற்றம் பெற்ற தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில், அமைந்த ஸ்ரீநாடியம்மன் எல்லைப்புறக் காவல் தெய்வமாகத் தோற்றம் பெற்றது. ஆலயம் அமைந்திருக்கும் பகுதியும் அதனைச் சுற்றியுள்ள பகுதியும் தற்போது, நாடியம்மாள்புரம் என்றே வழங்கப்படுகிறது.

கோவில் உருவான வரலாறு

தஞ்சையை மராட்டியர் ஆண்ட காலத்தில் தற்போது இருக்கும் நாடியம்மன் ஆலய அமைவிடம் வனமாகத் திகழ்ந்தது. அச்சமயம் இங்கு வேட்டைக்கு வந்த தஞ்சை மராட்டிய மன்னன், முயல் ஒன்றின் மீது அம்பு தொடுக்க முயன்றான். ஆனால் அம்முயல், அருகில் இருந்த புதருக்குள் சென்று மறைந்தது. மன்னனுடன் வந்த வீரர்கள், புதரை வாளால் வெட்டி அகற்றுகின்றனர்.

Koviloor Digital Library

அப்போது உள்ளே இருந்து ரத்தம் வரக்கண்டு மன்னன் அதிர்ந்தான். புதரை விலக்கிப் பார்த்தபோது, உள்ளே அம்மன் விக்கிரகம் தென்பட்டது. பய பக்தியுடன் அம்மனை வணங்கிய மன்னன், விக்கிரகத்தை அங்கேயே பிரதிட்டை செய்து, சிறிய அளவில் ஒற்றை விமானக் கோயிலும் கட்டி முடித்தான்.

இவ்வகையில் சிறுதெய்வமாக எல்லைப்புறக் காவல் தெய்வமாகத் தோற்றம் பெற்ற அருள்மிகு நாடியம்மன் பட்டுக்கோட்டையில் இன்று பொது மக்கள் அனைவரும் வணங்கும் பொதுத் தெய்வமாக பெருந்தெய்வ வழிபாட்டு முறைகளால் மேனிலையாக்கம் பெற்றுள்ளது.

மேனிலையாக்கம் என்பது சிறுதெய்வ வழிபாட்டிலிருந்து பெருந்தெய்வ வழ்பாட்டுக்குரிய கூறுகளைப் பெற்று வளர்வது ஆகும். நாடியம்மன், பெருங்கோவிலின் அமைப்பு முறை, பூசை முறைகள், பரிவாரத் தெய்வங்கள், பெருந்திருவிழா மற்றும் பொதுமக்கள் வழிபாடு போன்ற கூறுகளால் பெருந்தெய்வ வழிபாட்டு முறைக்கு மேனிலையாக்கம் பெற்றுள்ளதை அறிகின்றோம்.

அமைப்பு முறையால் மேனிலையாக்கம்

நாடியம்மன் கோவில் இன்று கருவறை, அர்த்தமண்டபம், முன் மண்டபம், மகா மண்டபம், என்ற நான்கு பகுதிகளை உள்ளடக்கி மூன்று நிலைக் கோபுரத்துடன் திகழ்கிறது. சிறுதெய்வக் கொவில்களில் இத்தகைய அமைப்புகள் கிடையா. பெரும்பான்மை கோவில்கள் மரத்தடியிலோ குளத்தங்கரை-யிலோ அமைந்திருக்கும். சில கோவில்களில் சிறு மண்டபங்கள் அமைந்து காணப்படும். இச்சிறுதெய்வக் கோவில்களுக்கென்ற ஒழுங்குபட்ட அமைப்பினைக் கட்டிடக் கலை நுட்பத்தினை, வேலைப்பாடுகள் நிறைந்த கோபுரங்களைக் காணவியலாது. நாடியம்மன் கோவிலும் இதுபோன்று தொடக்கத்தில் வனப்புதரில் அம்மன் சிலை எடுக்கப்பெற்று சிறியதான அமைப்பில் கோவில் கட்டப்பட்டு இருந்தது. இதுபோன்ற நிலையிலிருந்து வளர்ந்து இன்று ஆகம விதிக்குட்பட்டு பெருந்தெய்வக் கோவிலுக்குரிய விதிமுறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதுவே, இக்கோவில்

Koviloor Digital Library

சிறுதெய்வ வழிபாட்டிலிருந்து பெருந்தெய்வ வழிபாட்டிற்கு மேனிலையாக்கம் பெற்றமைக்குத் தக்க சான்றாகும்.

சிறுதெய்வ வழிபாட்டு எச்சம்

நாடியம்மன் கோவில் முன்பாக, அம்மனுக்கு ஒன்றும் வாயிலில் உள்ள முன்னடியார்களுக்கு இரண்டுமாக மூன்று சேமங்குதிரைகள் உள்ளன. கோவிலின் முன்பாக உள்ள குதிரைக்கு முன்னர் ஒரு சிம்மம் அம்மனை நோக்கியவாறு உள்ளது. சிங்கத்தின் பின்பு பலிபீடம் அமைந்துள்ளது. சேமக்குதிரைக்குப் 'புரவியெடுப்பு' என்னும் நிகழ்வு முன்பு நடைபெற்றிருக்க வேண்டும். இப்போது இல்லை. இத்தகைய குதிரை உருவங்கள் சிறு தெய்வங்களுக்கு மட்டுமே அமைக்கப்பெறும். இக்குதிரைகள் நாடியம்மன் சிறுதெய்வமாக இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

பூசை முறைகளில் மேனிலையாக்கம்

இக்கோவிலில் தீபாராதனையுடன் மந்திரங்கள் கூறிப் பூசைகள் நடத்தப்படுகின்றன. பெருந்தெய்வங்களுக்குரிய அன்னப் படையலும் சந்தனக் காப்பு போன்ற பலவிதமான அபிசேகங்களும் நடத்தப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டில் இத்தகைய பூசனை முறைகளைக் காணவியலாது. மேலும், சிறுதெய்வ வழிபாட்டுக் கூறுகளில் பலியிடுதல் முதன்மையானதும் சிறப்பானதுமாகும். இக்கோவிலுக்குள்ளே ஆடு, கோழி போன்றவை பலியிடும் மரபு முன்னர் இருந்த வழக்கம் மாறி கோவிலுக்கு வெளியே உயிர்ப்பலியிடும் மரபு தொடர்கிறது. திருவிழா தொடங்கும்முன் நாடியம்மனுக்கு நடுச்செவ்வாய் அசைவப் படையலொன்றைப் பட்டுக்கோட்டை சேனைத்தலை செட்டியார் இன மக்கள் செய்து வருவது குறிக்கத்தக்கது. இம்முறை நாடியம்மன் சிறு தெய்வமாக இருந்தபோது வழிபட்ட வழிபாட்டின் எச்சமாகும்.

பரிவாரத் தெய்வங்கள்

சிறுதெய்வக் கோவில்கள் அனைத்திலும் ஒவ்வொரு தெய்வமே இருக்கும். கிராமத் தெய்வ உருவங்கள் பெருகிய பின்னர் கோயிலின் பரப்பு விரிவடைந்தது. உள்ளே அமையும் சந்நதிகளும் பெருகின. சிவன் கோயில்களைப் போல கிராம தேவக் கோயில்களும் கட்டப்பட்டன. சிவன் கோவில்களிலும்,

Koviloor Digital Library

திருமால் கொவ்வில்களிலும் உள்ள சில பரிவாரத் தெய்வங்களும் கிராம தேவதைக் கோவில்களிலும் இடம் பெற்றன.

முதற்கண் வணங்கத்தக்க விநாயகர், நாகர் இவ்விரண்டும் மகாமண்டபத்துள் கிழக்கு நோக்கியவாறு இடம்பெற்றுள்ளன. பாம்புகள் ஒன்றுடன் ஒன்று இணைந்த நிலையில் நாகர் சிலை ஒன்றும் ஐந்து தலை கொண்ட நாகம் ஒன்று படமெடுத்த நிலையில் ஒன்றுமாக இரண்டு நாகர் சிலைகள் இடம் பெற்றுள்ளன. கோவில் பின்புறம் 100 அடிகள் உயரத்தில் மூன்று பனைமரங்கள் வரிசையாக அமைந்துள்ளன. அங்கு ஜடாமுனி உள்லது. உருவம் ஏதுமில்லை. பனைமரத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு வழிபாடு நிகழ்கிறது. இவ்விருப்பிடத்தை சடாமுனி இருப்பிடம் என்று மக்கள் வணங்குகின்றனர். இதனைத் தவிர வீரன் ஒன்றும் துவாரபூதங்கள், துவார பாலகியர் சிலைகள், ஆகியன இடம் பெற்றுள்ளன. பெருந்தெய்வ வழிபாட்டிற்கு அம்மன் வழிபாடு உயர்த்தப்பட்டமையை இதனால் அறிய முடிகிறது.

பெருந்திருவிழா மரபும் மேனிலையாக்கமும்

இக்கோவிலில் நடைபெறும் பெருந்திருவிழாக்கள் பெருந்தெய்வமாக நாடியம்மன் வழிபாட்டு மரபுகள் மேனிலை பெற்றதைச் சுட்டுகிறது. சிவன் கோவில்களில் பிரம்மோற்சவம் எனப்படும் பெருந்திருவிழாக்கள் நடைபெறும் மரபு உள்ளது. இம்மரபு நாடியம்மன் கோவிலிலும் பின்பற்றப்படுகிறது. இப்பெருந்திருவிழாக் காலங்களில் மட்டும் சிவன் கோவில் அந்தணர்கள் பூசைகள் செய்கின்றனர். கோவில் பூசாரிகள்(வேளாளர்) இருப்பினும் அம்மன் கோவில் பெருந்திருவிழாவின்போது பெருந்தெய்வ முறைப்படி அந்தணர்களே பூசை முறைகளைச் செய்வது பெருந்தெய்வ வழிபாட்டுகுரிய மேனிலையாக்க முயற்சியின் விளைவாகும்.

பெருந்தெய்வக் கோவில்களில் இருப்பது போன்ற அன்னம், காமதேனு, பூதகன், சிம்மம் போன்ற பலவகையான வாகனங்களில் காலை மாலை என்று இரு வேளைகளிலும் அம்மனை வீதியுலா வரச் செய்வது நேனிலையாக்கத்தின் மரபேயாகும், பெருந்தெய்வ வணக்கத்திற்கே உரிய தல விருட்சம் இக்கோவிலில் அமைந்துள்ளது சிறப்பாகும்.

Koviloor Digital Library

கோயிலின் ஸ்தல விருட்சமான நாகலிங்க மரத்தில் திருமண பாக்கியம் வேண்டுவோர் மஞ்சள் சரடு கட்டியும், பிள்ளை வரம் வேண்டுவோர், தொட்டில் கட்டியும் அம்மனிடம் வேண்டிக் கொள்கின்றனர். மேலும், இத்திருவிழாக்களில் வைணவச் சார்புடைய நவநீதசேவை எனப்படும் வெண்ணைத்தாழி வைபவம், பெருந்தெய்வக் கூறுகளில் ஒன்றான தேர்த்திருவிழா, புதுமை பூப்போடும் புதுமைத் திருவிழா, மாவிளக்குத் திருவிழா நாளன்று நேர்த்திகடன்களில் பச்சைக் காளி, பவளக்காளி, சிவன் நடன நிகழ்ச்சி போன்ற பலவகையான வழிபாட்டு மரபுகளும் நாடியம்மன் பெருந்தெய்வமாக மேனிலையாக்கம் பெற்றமைக்கான சான்றுகளாகும்.

பொதுமக்கள் வழிபாட்டால் மேனிலையாக்கம்

சில இனத்தவர்களுக்கு மட்டுமே சிறு தெய்வமாக விளங்கிய நாடியம்மன் இன்று பட்டுக்கோட்டையில் வாழக் கூடிய மக்கள் அனைவருக்கும் பொதுவான தெய்வமாக விளங்குகின்றது. மக்களின் நம்பிக்கையுடன் நேர்த்திகடன்களைச் செய்கின்றனர். உறுப்புகள் வாங்கி வைத்தல், மாவிளக்குப் போடுதல், பெயர் சூட்டடல்,கும்பிடு தண்டம், பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல்,அலகு குத்தல், மொட்டையடித்தல், எழுமிச்சை மாலை, தாழம்பூ பாவாடை, பாட்டுப் பாவாடை சாத்துதல் மற்றும் சந்தனக்காப்பிடுதல் போன்ற பெருந்தெய்வ நேர்த்திக் கடன்கள் அனைத்தும் நாடியம்மனுக்கு செய்யப் பெறுகின்றன.

இவ்வாறு பட்டுக்கோட்டையில் உள்ள அருள்மிகு நாடியம்மன் தொடக்கத்தில் சிறு தெய்வ வணக்கத்தில் இருந்து பெருந்தெய்வ வழிபாட்டு முறைக்கு மேனிலையாக்கம் பெற்றுள்ளது. பெரும்பாலும் செல்வவளம் உள்ள நகரங்களில் மட்டுமே இத்தகைய சிறுதெவக் கோவில்கள் மேனிலையாக்கத்தை விரைவில் அடைகின்றன. இதற்குச் செல்வந்தர்களின் பொருளுதவியும் இறையருளும் மக்களின் நம்பிக்கயும் காரணியாக அமைகின்றன.

Koviloor Digital Library

நல்லூர் திருக்கோயில்

திருமிகு. க.அம்பேத்கார்,
உதவி ஆய்வாளர்,
வரலாற்றுத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம் -காரைக்குடி

முன்னுரை

கும்பகோணம் வட்டம் பாபநாசத்தை அடுத்த சுந்தரப் பெருமாள் கோயிலில் இருந்து 3கி.மீ தொலைவில் அமைந்துள்ளது நல்லூர். அப்பர் சம்பந்தரால் பாடப் பெற்ற இவ்வூருடன் தொடர்புடைய நாயன்மார் அமர்நீதிநாயனார் ஆவார். திருக்குனமும் ஐந்து தளக் கோபுரமும் பெற்றுள்ள கோயிலின் வாயிற் கதவுகள் ஆடற்பெண், கோலாட்டம், விலங்குகள், இறைவடிவங்கள், அமர்நீதிநாயனாரின் வரலாறு முதலான மரச்சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. உயரமான துணைத்தனம், பாதப் பந்தத் தாங்குனம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் என அமைந்துள்ள கோபுரக் கீழ்த்தனம் கருங்கல் பணியாக உள்ளது. ஆர உறுப்புகளும் மேற்றளங்களும் செங்கல் கட்டுமானமாய்க் குறைவான சுதையுருவங்களுடன் உள்ளன.

வெளிச்சுற்று

வாயிலுள் நுழைந்ததும் காட்சியாகும் வெளிச்சுற்றில் தென்கிழக்கில் மடைப்பள்ளியும் தெற்கில் எண்கைக் காளியின் ஒரு தளச் சாலைத் திருமுன்னும் வடக்கிழக்கில் பின்னாளைய மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளன. மேற்கிலும் கோபுரம் பெற்றுள்ள இத்திருச்சுற்றின் வெளிப்புறத்தே தெற்கு, மேற்கு இரு திசைகளிலும் நந்தவனம் அமைந்துள்ளது முதல் வாயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் முன்றிலுடனான ஒருதள வேசரத் திருமுன்னில் பிள்ளையாகும் அடுத்தக் கொடிமரமும் பலித்தளமும் நந்தி மண்டபமும் அமைந்துள்ளன.

இரண்டாம் கோபுரம்

கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக

Koviloor Digital Library

அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டும் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் எனக் கருங்கல் பணியாகக் கீழ்த்தள பெற்றுள்ள இரண்டாம் கோபுரத்தின் ஆரஉறுப்புகளும் மேற்றளங்களும் செங்கல் கட்டுமானமாய் உள்ளன. கீழ்த்தள ஆரஉறுப்புகள் ஆறங்கம் பெற்றுள்ளன. இவ்வாயிலை ஒட்டி வடபுறத்தே வண்டிக்கூடு கூரையுடன் பிற்கால மண்டபம் ஒன்று அமைந்துள்ளது.

மண்டபச்சுற்று

இரண்டாம் வாயிலை அடுத்துக் கிழக்கில் மண்டபமாய்த் தொடங்கி மும்புறத்தும் விரியும் இடைச்சுற்றில் வாயிலுக்கு எதிரிலுள்ள ஒருதள வேசரதி திருமுன்னில் காசிம் பிள்ளையார் காட்சிதருகிறார். கோபுரத்தை ஒட்டிய பாதபந்தத் தாங்குதளம் பெற்ற தென்கிழக்கு அறைகளில் இலிங்கத்திருமேனிகள் உள்ளன. வடகிழக்கில் பைரவர்,சூரியன், அம்மன் சிற்பங்கள் காணப்படுகின்றன. கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், பட்டாடை அணிந்து சமபங்கத்தில் இருக்கும் கதிரவனின் கைகளில் தாமரைகள்.

ஆடவல்லான்

வடக்கில் கபோதபந்தத் தாங்குதளம் பெற்ற மண்டபத்தில் ஆடவல்லானும் உமையும் காட்சிதருகின்றனர். கடைமகுடமும் விரிசடையுமாய் வலக்காலை முயலகன் மீது இருத்தி, இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்தத்தாண்டவமிடும். இறைவனின் பின்கைகளில் உடுக்கை, தீயகல், வலமுன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இடமுன் கை வேழ முத்திரையில் உள்ளது. கொக்கிறகும் பிறையும் உள்ள தலையின் முகப்பில் மண்டோடு வலச் செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், தோள்,கடக, கை வளைகள், புலித்தோலாடை,முப்புரிநூல், உதரபந்தம் அணிந்து ஆடும் இறைவனின் விரி சடையில் வலப்புறம் கங்கை, இடப்புறம் பாம்பு. முடிச்சிட்ட உதரபந்தத்தின் முனைகளும் முப்புரிநூலாய் போர்த்தியுள்ள துணியின் தோள் மடிப்பும் ஆட்ட விரைவிந்தோப் இடப்புறம் பறக்கின்றன.

Koviloor Digital Library

ஆடவல்லான் தளத்தின் கீழே சிற்றடையும் வணங்கிய கையுமாய்க் காட்சிதரும் அடியவர் இதைச் செய்தளித்தவராகலாம். தனித் தளத்திலுள்ள உமை சடைமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, தோள்மாலை, பட்டாடை அணிந்து வலக்கையைக் கடகத்திலிருத்தி, இடக்குகையை நெகிழ்த்தியுள்ளார். மகித்தலையும் நீள் செவிகளுமாய் முப்புரிநூல் சிற்றாடை அணிந்து வலப்பாத்தைத் திரயசரத்திலும் இடப்பாதைப் பார்சுவத்திலும் இருத்தி ஆடவல்லான் அருகே நிற்கும் மாணிக்கவாசகரின் வலக்கை சின்முத்திரை காட்ட இடக்கையில் சுவடி.

சுற்றுமாளிகை

சுற்றின் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் கபோதபந்தத் துணைத்தளத்தின் மீதமைந்துள்ள சுற்றுமாளிகையின் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. மாளிகையில் தென்புறத்தே வணங்கிய நிலையில் உழவாரப்படையுடன் அப்பர், தாளங்களுடன் சம்பந்தர், துணைவியுடன் சுந்தரர் சிற்பங்கள் உள்ளன.

சுற்றாலைத் திருமுகம்

தென்மேற்கு மூலையில் பிள்ளையாரும் மேற்கில் தெய்வானை வள்ளியுடன் முருகன் வடமேற்கில் யானை திரு மவடக்கு மாளிகையில் அமர்நீதி நாயனாரின் நெடிய சிற்பமும் குழந்தையை ஏந்திய அவர் துணைவியார் சிற்பமும் இலிங்கத்தின் வணங்கும் அடியவர் ஒருவர் சிற்பமும் உள்ளன தொடக்கத்தில் ஒருதலை விமானத்தில் சண்டேஸ்வரர் வகையில் உறுவி தங்கையை தொடையிலிருந்து சுகாசனத்தில் உள்ளார்.

வெற்றுத்தளம்

4.58 நீ உயரம் கொண்ட வெற்றுத்தளம் முழுமையும் கருங்கல் பணியாக உள்ளது உபானம் ஜகதி குமுதம் கண்டனம் தாங்குதளம் எதுகையும் அமைய சுவர் அனைத்து உறுப்புகளும் பெற்ற நான்முக அரைத்தூண்கள் பெற்றுள்ளது மேலுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம் வாஜனம் தாமரை தோழிகளான இவற்றை அடுத்து நீளும் உரையின் வெளியில் வெளியில் உப்பான எப்போதும் ஆழமற்ற குடுகுடு

Koviloor Digital Library

விளைவுகளை பெற்றுள்ளது மேலே பூமி தேசம் கட்டமைப்பு வடக்கில் அம்மன் விமானம் வரை தொடர்கிறது.

கோட்டச் சிற்பங்கள்

தென்புற கோட்டங்களில் 2 ஆலமர் அண்ணலும் உச்சிஷ்ட கணபதியும் விளங்க வட கோட்டங்களும் ஒன்றில் கொற்றவையின் சிற்பம் உள்ளது. மூன்றில் பெற்றுள்ள ஆலமர் அண்ணல் கோட்டத்தில் முயலகன் முதுகின்மீது வளக்கலை நன்றி பின் கையில் அக்க மாலை தியானம் தியானம் கொண்டுள்ள இறைவன் பிரதேசத்தில் உள்ளது. சடைய பாரம் உதரபந்தம் முப்புரிநூல் தோள் கை வளைகள் வேறு செவிலியர் உள்ள அவரது வலது முன் கையில் சின்முத்திரை காட்ட இடக்கையில் தொடைமீது உள்ளது. அவர்களில் வீரக்கழல் இறைவன் அமர்ந்துள்ள இருக்கையின் கீழ் பகுதியில் பக்கத்தில் ஒருவராக நான்கு முனிவர்கள் காட்டப்பட்டுள்ளன. மூன்றில் பாதத்தில் அடுத்தவரின் வரும் மாதன மங்கல முடையான் ஸ்ரீ மகாதேவ பிரியாணி ஒளியின்றி வந்தான் என அவருடைய ஊரும் பெயரும் உள்ளன. கிரந்தமும் உதரபந்தம் சிற்றாடை அணிந்து லலித சாதனத்தில் உள்ள உச்சிஷ்ட கணபதி வல முன் கை மோதகம் கொள்ள பின்கையில் அங்கும் அவரது துளைகளை இடத்தில் அமர்ந்துள்ள கேபியின் தொடைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளது இடப் பின் கையில் ஒன்று பாசமுள்ள மற்றொன்று தேவியை அனைத்து உள்ளதாக கொள்ளலாம் கரண்டமகுடம் கழுத்தணி கொண்டுள்ள தேதி இடக்கையில் மலர் மொட்டு வழக்கை பிள்ளையாரின் ஆணுறுப்பை பிடித்துள்ளது.

அம்மன் விமான வெற்றுத்தளம்

அம்மன் விமானம் தாங்கி வெற்றுத்தளம் கட்டமைப்பு உபானம் தாபனம் பாதபந்தத் தாங்குதளம் வேதிகை தொகுதி எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர் வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று பெரிதாகிறது சுவரிலுள்ள தளபதி கோட்டப் பஞ்சரங்கள் இடைப்பட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன.

இறைவன் விமானம்

மண்டபச் சுற்று முகமண்டபம் விமானம் என அமைந்துள்ள

Koviloor Digital Library

திருக்கோயில் வளாகம் கிழக்குப் பார்வையில் உள்ளது மண்டபத்தின் கீழ் பகுதியில் உள்ள முத்துச் சரங்கள் வெட்டுப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்குகின்றன தென்மேற்கு மேற்கு புறத்தில் காணப்படும் கல்வெட்டு அத்துணை எடுத்த வராக பழைய துணியை சேர்ந்த திருப்பெருந் நம்முடைய பெயரை தருகிறது கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் முகமண்டபம் விமானம் இவற்றைச் சுற்றி விரியும் உட்சுவரின் புறச் சுவர் திசைகளிலும் பக்கத்திற்கு இரண்டு சாளரங்கள் கொண்டுள்ளது

இருதலை திராவிடம் ஆக அமைந்துள்ள விமானத்தின் கீழ் தளம் பாதபந்தத் தாங்குதளம் மீது விழுகிறது 5மீட்டர் பக்கம் உடைய சதுரமாக அமைந்திருக்கும் இத்தலத்தில் க்கு மேல் பகுதியில் எளிய நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர் பொறுப்புகளும் உள்ளன போதிகைகள் திரிகோணத்தில் பெருமையாக உள்ளது சுற்றிவரும் விமானத்தின் சுவரும் திசைகளும் படிப்படியாக ஒன்றிணைக்கப்பட்டு பலகையால் மூடப்பட்டுள்ளன முறையை நினைவூட்டும் கட்டுமானமும் விமானத்தை சூழ அமைந்திருக்கும் சுற்றி அமைப்பும் விமானத்தை சாந்தார விமானமாக கொள்ள வழி வகுத்து சாரா அமைப்பு விமானத்தின் கிழக்கில் இடம்பெற அமையும் வெளிச்சுவர் பெறவேண்டிய தாங்குதளம் போன்ற தல கூறுகளை விமான சுவர் பெற்றிருப்பதும் கருதுகோள் குவிட் அடைகின்றன 9.15 மிட்டாய் பக்கம் உடைய சுற்றுச்சுவரின் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம் மட்டும் கருங்கல்லால் ஆனது நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர் கூரையுறுப்புகள் செங்கல் கட்டுமானங்கள் ஆகவே உள்ளன சுவரின் கோட்டத்தில் சட்டைநாதர் இடம் பெற்றுள்ளார் கவலைகளும் அற்ற கட்டுமானமும் காட்சி தருகிறது.

இரண்டாம் தளம்

விமானத்தின் முதல்தள ஆறு உறுப்புகள் விமானத்தின் இரண்டாம் தளத்திலிருந்து விலகி கீழ்தளம் போலவே விமானத்தின் இரண்டாம் தளத்தையும் சுற்றிவர இடைவெளி அமைந்துள்ளது கூரையின் மீது உள்ள கிழக்குச் சாலை இரண்டாம் தளத்திற்கான நுழைவாயிலாக அமைந்துள்ளது விதியின் மீது உயரமான நான்முக அரைத்தூண்கள் அணைத்த இரண்டாம் தளத்தில் 42 பஞ்சரங்கள் கட்டப்பட்டுள்ளன ஒவ்வொன்றும் நான்முக அரைத்தூண்கள்

Koviloor Digital Library

அணைத்த சுவர் பகுதி விரிகோணம் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று இரண்டாம் தடவைப் கூட்டை திறமாக கொண்டு விடுகின்றன இவற்றின் கிரிப பகுதியில் ஆடல் பெண்கள் காட்டப்பட்டுள்ளனர்.

முகமண்டபம்

முகமண்டப வாயிலின் தென்புறத்தே திண்ணை ஒன்றின் மீது காட்சி தரும் பிள்ளையார் பின் கையில் பாசம் அங்கும் ஏன் விவரம் உன் கையில் வந்ததும் இடம் உன் கையில் பாதகமும் கொண்டு இல்லாத சாசனத்தில் உள்ளனர் கருவறை வாயிலை நோக்கியவாறு பெருமண்டபத்தில் ஆன்மாவை விளக்கும் இன்று காட்சிதர முகமண்டபத்தின் வடமேற்கு மூலையில் இன்பவல்லி அன்னையின் செப்புத்திருமேனி இடம்பெற்றுள்ளது சடைமகுடம் மகர குண்டலங்கள் சரப்பளி முப்புரிநூல் தோள் கை வளைகள் பட்டாடை அணிந்து சுகாசனத்தில் உள்ள இவ் அமைப்பின் விளக்கைக் இடத்தில் உள்ளது.

கருவறை

கருவறையில் சதுர ஆவுடையாரின் மீது மெல்லிய நீளமான உருளை பணம் துறைகளுடன் காட்சி தருகிறது கருவறையின் சுவரில் நான்முகனும் பட சுவரில் வீசினோம் தேரை இழுக்க பின் சுவரில் தளம் ஒன்றின் மீது சிவபெருமான் அமையும் சுகாதாரத்தை இரங்காய் அன்ன பூச்சியில் எண்ணுகின்றனர் சடைமகுடம் மகர குண்டலங்கள் முப்புரிநூல் உதரபந்தம் சிற்றாடை பெற்றுள்ள இறைவனின் கையில் மானும் முன்கையில் வழக் கை காக்கும் குறிப்புக் காட்ட இடமும் உள்ளது கரண்டமகுடம் மகர குண்டலங்கள் அனைத்து உள்ள இறைவி வழக்கை கையில் ஏந்தி இடக்கையில் காக்கும் குறிப்பில் வைத்துள்ளார் கிரிடம் பட்டாடை அணிந்து கையில் சங்கு சக்கரம் ஏந்தி உள்ள விஷ்ணு இறைவன் இறைவியையும் வணங்கி சடைமங்கை அக்கமாலை குண்டிகை இறையாண்மையையும் வாழ்த்துகிறார் இக்காட்சி தமிழ்நாட்டின் வேறெந்த கருவறையிலும் இல்லை எனலாம்.

வழிபாடு - படையல்

பெரும்பாலான கல்வெட்டுகள் இக்கோயில் இறைவனின்

Koviloor Digital Library

வழிபாடு நிலக்கொடை அளிக்கப்பட்ட தகவலைத் தருகின்றன. கோயில் திருமடை வளாகத்தில் கும்பிட்டு இருக்கும் திருமேனி குறிக்கப்பெறும் அகோர தேவர் திருநாமத்துக்காணியாக நிலம் வழங்கினார். சிதைந்திருக்கும் கல்வெட்டொன்று கோயிலுக்கு திருநாமத்துக்காணியாக நிலம் வழங்கப்பட்ட தகவலை தருகிறது. இறைவனுக்கு செங்கழுநீர்ப்பூ மாலை சூட்டவும் மாசித்திருவிழா செலவில் செலவினங்களும் சில தூண்களும் வழங்கப்பட்டன. இறைவனின் மேற்பூச்சு, திருப்பாவாடை அமுது, விளக்கெண்ணெய் இவற்றிக்காக பண்டாரத்தில் இருந்து நெல் அளிக்கப்பட்டது. ராஜராஜப் பெருவிலையில் சிவபிராமணக்காணிக்கையாகப் பெறப்பட்ட நிலம் இறைவனுக்கு வழங்கப்பட்டது. இறைவன் இறைவி (பெரிய நாச்சியார்_ இவர்தம் இரவு, அர்த்தசாம அமுதிற்காக நிலத்துண்டொன்று கொடையளிக்கப்பட்டது. இறைவன் உச்சி சந்தி அமுது கொள்கையில் மாகேசுவரருக்கு ஒடுக்கு அளிக்க வாய்ப்பாக 5250 காசுக்கு நிலம் ஒன்று வாங்கிய திருநீறு பரமனார் அதைக் கோவிலுக்கு தந்தார். மன்னர் மூன்றாம் இராஜேந்திர சோழரின் நலம் கருதி ஆளவந்தான் சதுர்வேதி மங்கலம் உருவாக்கப்பட்டது.

துணை நூற்பட்டியல்

1. .பனந்தரம், திருவுடைமருது, திருமழபாடி, ஈங்கோய்மலை, வலஞ்சுழி, திருவையாறு, சிற்றமபலம், இருள் நீக்கி.
2. .ARE 1911 : 43,51,59
3. .ARE 1911 : 56
4. .மு.நளினி. கோவண நாடகம், பாதைகளைத தேடிய பயணங்கள்,
5. .நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம் வெளியீடு, சென்னை 1973
6. .கலைக்கோவன், இரா.காட்டுக்குள் ஒரு கலைக் கோயில், கழகம் சென்னை, 1986
7. Longhurst A.H. Pallava Architecture, two wols. Cosma Publications, New delhi 1982
8. Sathyanatha Aiyar. R History of the Nayaks of Madura University of Madras, 1980
9. ARE 1911 : 60
10. ARE 1911 : 40, 456, 47,54
11. ARE 1911 : 44, 50
12. ARE 1911 : 43

Koviloor Digital Library

வைணவத் திருவிழாக்கள்

முனைவர் சொ. அருணன்,
முனைவர் பட்ட மேலாய்வாளர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி 3.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

தொல்காப்பியர் காலந்தொட்டு தமிழ்மரபின் வணங்குதற்குரிய கடவுளாகத் திகழ்பவர் திருமால் ஆவார். திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம். அச்சமயம் கொண்டாடும் விழாக்களைக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

திருவிழா (உற்சவம்)

'திருவிழா' என்பது வடமொழியில் உற்சவா (Utsava) என்று கூறப்படுகிறது. உற்சவம் என்பது 'துன்பங்களைக் களைவதற்கான' ஒரு செயல்' என்றும், 'தடைகளை நீக்குவதற்கான ஒரு செயல் என்று நம்பப்படுகிறது. ஆதலால் நம்பிக்கையுடன் ஒருவர் ஒரு விஷ்ணு கோயிலில் ஒரு விழாவை நடத்த முயன்றால் அது அத்திருவிழாவை நடத்த உதவியாய் இருந்தவருக்கும் மக்களுக்கும் நன்மைகளைத் தரும் என்று நம்பப்படுகிறது.

திருவிழாக்களும் காலங்களும்

ஒரு சூரிய ஆண்டானது கடவுளின் ஒரு நாளாகக் கருதப் படுகிறது. ஒரு சந்திர மாதம் இறந்த முன்னோர்களின் ஒரு நாளாகக் கருதப்படுகிறது. சந்திரன் ஒருமுறை பூமியைச் சுற்றி வரும் காலம் ஓர் ஆண்டு பலிக்குச் சமம். ஒரு சடங்கிற்கு இயைபான சூரியநாள், ஆண்டு, சந்திரமாதம் ஆகியவற்றை தனித்தன்மை அவற்றின் பண்புநலன்களை அடிப்படையாகக் கொண்டு அறியலாம். நாள், பௌர்ணமி, அமாவாசைகள், உத்தராயணம், தட்சிணாயன காலங்கள் ஆகியவற்றைக் கணக்கிட்டே திருவிழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன.

Koviloor Digital Library

ஆகமங்கள் காட்டும் வைணவத் திருவிழாக்கள்

வைணவ ஆகமங்கள் பாஞ்சராத்திரம், வைகானசம் எனும் இருவகை வழிபாட்டு முறையைப் பின்பற்றுகின்றன. இவை வைணவ ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்தும் முறைகளைப் பற்றி விளக்குகின்றன. பாஞ்சராத்திர ஆகமத்தின்படி மூன்று வகையான திருவிழாக்கள் வைணவக் கோயில்களில் நடைபெறும்.

இதில் முதலாவது தினந்தோறும் அல்லது மாதந்தோறும் கோயிலில் நடத்தப்படும் நித்ய உற்சவங்கள் (முறைத் திருவிழாக்கள்) ஆகும். மற்றவை நைமித்திக, காமிய உற்சவங்கள் ஆகியனவாகும். இவை தவிர ஆண்டுதோறும் முக்கிய நாள்களில் கொண்டாடப்படும் உற்சவங்களும் உள்ளன.

திருவிழாவும் நியதிகளும்

தினந்தோறும் நடைபெறும் நித்ய உற்சவத்தில் பள்ளியறை திறப்பதிலிருந்து சயனாலய பூசைவரை பல நிகழ்ச்சிகள், சடங்குகள் இடையில் நிகழ்த்தப்படுகின்றன. இதில் இறைவன் தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பன எடுத்துக் காட்டப்பெறுகின்றன. தினந்தோறும் இந்நிகழ்ச்சிகள் காட்டப்படுவதால் பெரிய திருவிழாக்களாகிய இதனை வரிசைமுறைப்படுத்த வேண்டும் என்பதில்லை. ஆனால் ஓர் ஆண்டில் நடைபெறும் விழாக்களும் வரிசை முறையில் இறைவனின் தொழிலை எடுத்துக்காட்டுவன. தினந்தோறும் இது காட்டப் பெறுவதால் உறக்கத்திலிருந்து விழித்தெழுதல் என்ற உற்சவத்திலிருந்து ஆண்டுத் திருவிழாத் தொடங்க வேண்டும் என்பது சில கோயில்களில் நியதி.

திருவரங்கக் கோயில் பாஞ்சராத்திர ஆகமத்தின் பரமேஸ்வர சம்ஹிதையை பின்பற்றியவை. வைகானச ஆகமத்தை அடியொற்றிய கோயில்கள் வேறுவிதமான திருவிழா முறைகளை உடையனவாக இருக்கும்.[14]

வைணவத் திருவிழாக்களை நடத்தும் முறை

காமிக, நைமித்திக உற்சவங்களை முறையாகச் செய்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. கோ-யிலொழுகு முற்காலங்களில் திருவிழா நிகழ்வுகளில் பங்கேற்ற

Koviloor Digital Library

பணியாளர்களின் செயல்பாடுகளையும் விவரிக்கின்றது. திருவரங்கத்தில் இராமானுசர் கோயில் சடங்குகளைச் செய்வதற்காகப் பணியாட்களின் ஒவ்வொரு கடமையையும் வரையறுத்துள்ளார். அவர்களுக்கான ஊதியங்கள் கூடக் கோயிலொழுகில் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

பெருந்திருவிழா (மகோத்சவம்) நடைபெறும் விதம்

பாஞ்சராத்திர நூல்களின்படி இந்த மகோத்சவங்கள் 9 அல்லது 10 நாட்கள் நடைபெறும். அந்நாட்களில் நடைபெற வேண்டிய முக்கியமான நிகழ்ச்சிகள் குறித்து இவை விவரிக்கின்றன. இவ்விழாவுக்கு மகோத்சவம், பிரம்மோத்சவம், ஸ்ரத்தோற்சவம் என்ற பெயர்களும் உண்டு. பொதுவாக 1,3, 5, 7, 12, 15, 30 நாட்கள் வரை நடைபெறும்.

இப்பெருந்திருவிழாவில் நாள்தோறும் புறப்பாடு நிகழும். அவ்வேளையில் உற்சவ மூர்த்திகள் அவ்வக்கோயில் தெருக்களில் பலவித வாகனங்களில் குறிப்பிட்ட நாட்களில் வெவ்வேறு வழியாகக் கொண்டு வரப்படும். இவ்விழாவில் சில நாட்கள் மிகவும் முக்கியமானவை. தேர்த்திருவிழா இவ்விழாவிலேயே இடம்பெறுகிறது.

நீராட்டு (தீர்த்தோத்சவம்)

இவ்விழாவும் மகோத்சவத்தின் முக்கிய விழா. மூலவரின் உற்சவப் படிமம், அருகில் உள்ள நீர்நிலையில் நீராட்டப்பெறும் நிகழ்ச்சியாகும். வாசனைப் பொருள்களால் அதனைத் தூய்மை செய்து நீராட்டுவர். இந்நிகழ்ச்சி கோயிலிலிருந்து தொடங்கி நீர்நிலை வரை பெரிய ஊர்வலமாகச் செல்லும். அவ்வேளையில் இறைவனோடு சேர்ந்து நீராடுபவர்களின் பாவங்கள் நீங்கி, பரகதி கிடைக்கும் எனப் பாஞ்சராத்திர ஆகமம் கூறுகிறது. இவ்விழாவுக்கு அவபிர்தோத்சவா, தீர்த்தோத்சவா, தீர்த்தயாத்ரா, தீர்த்த யாத்ரோத்சவா என்று பல பெயர்கள் உண்டு.

கோயில் மூலவர் பிறந்த நாள் விழா (ஜெயந்தி விழா)

இரண்டாவது பெரிய விழாவும் பாஞ்சராத்திர ஆகமத்தில் முக்கியமான விழாவுமாகிய இது சதுர் மாதத்தில் நடைபெறும். இவ்விழாவுக்காகக் கோயிலின் பிற செயல்பாடுகள் அனைத்தும்

Koviloor Digital Library

தள்ளி வைக்கப்படும். கிருஷ்ணஜெயந்தி பல வைணவக் கோயில்களில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவும் 1, 3, 5, 7, 9, 15, 30 நாட்கள் வரையிலும் நடைபெறம். இந்தப் பிறந்தநாள் விழா மூலவருக்கு அல்லது அவரது மனைவிக்கு அல்லது பிற தெய்வங்களுக்கு மற்றும் ரிஷிகள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் ஆகியோருக்கும் நடைபெறக் கூடும். கேசவர், நாராயணன், வாமனர், திருவிக்ரமர், நரசிம்மர், ஹனுமான், லட்சுமி முதலியோருக்கும் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட வேண்டிய முறைகள் பற்றி பஞ்சராத்திரம் விளக்குகிறது.[16]

யோக நித்திரை விழிப்பு நாள் விழா (திருப்பள்ளியெழுச்சி)

இறைவன் இவ்வுலகைக் காக்க நான்கு மாத ஓய்விற்குப் பின்னர் விழித்து எழுகிறார். கார்த்திகை வளர்பிறையின் பதினோராவது நாள் ஒரு விருந்திற்குப் பின் கோயில் மூலவரின் உற்சவப் படிமத்தை நன்கு நீராட்டி அணிகலன்கள் பூட்டி 12-ஆவது நாளில் உற்சவர் வீதி உலா நிகழும். இவ்விழாவில் வீதிகளும் அணிபூணும். இறைவன் வருகை பஞ்சம், நோய்கள், இறப்பு அத்தனையும் அழிந்து ஒழியும். இவ்விழா உத்ரபனோத்சவம், பிரபோதோட்சவம், போதனோத்சவம், பிரிவர்த்தனம் என்று பல பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

திருக்கார்த்திகை விழா (கார்த்திகை தீபோற்சவம்)

இறைவன் விழித்து எழுந்த பின்பு ஒரு தீப விழா விமரிசையாக நடத்தப்பட வேண்டும். இவ்விழா, கிருத்திகோத்சவா, தீபோத்சவா, தீபரோபனா, கார்த்திகை தீபோத்சவம் எனப் பலபெயர்களில் வழங்கப்படுகின்றது. கார்த்திகையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது கோயில் புதுப்பிக்கப்படும். இறைப்படிமத்திற்கு எண்ணெய் முழுக்குச் செய்யப்பட்டு கோயிலில் ஒளிவிளக்குகளால் ஒளிரும். இவ்விழா 15 நாட்கள் வரை நிகழும்.

சில ஆகமங்கள் இவ்வுற்சவத்தின்போது இறைவனின் உற்சவ படிமம் ஒரு ரதத்தில் தெருவழியே கொண்டு செல்லப்பட வேண்டும். அந்த ரதம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். கோயிலும் அதன் விமானமும் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.[18]

Koviloor Digital Library

சொக்கப்பனை

இவ்விழா மகாபலியை விஷ்ணு அழித்த திருவிக்கிரம அவதாரத்தையும் நாளையும் நினைவுபடுத்துவதாகக் கூறுவர். கோயிலுக்கு முன்னால் ஒரு ஓலைக்குடிலைக் கம்பத்தினால் சுற்றி அடைத்து அதன் உச்சியில் தீபத்தை ஏற்றி வைக்க வேண்டும். இவ்விழாவின் முடிவில் அவ்வோலைக் குடில் தீக்கிரையாக்கப்படும். இது சொக்கப்பனை என்று அழைக்கப்படுகிறது.

அத்யாயமோத்சவம்

இவ்விழா தனு மாதத்தில் ஒரு மாதம் அல்லது இருபது நாட்கள் கொண்டாடப்படுகிறது. இறைவனை மகிழ்ச்சியூட்டுவதற்காக இந்நாட்களில் மாலையில் அத்யாயமோத்சவ என்ற நிகழ்ச்சி நடைபெறும். தினந்தோறும் வேதங்களும் பிற நூல்களும் ஓதப்படும். பௌர்ணமி முதல்நாள் தொடங்கும் இவ்விழாவின் 11வது நாளில் மோத்சோத்சவ விழா நிகழும். இதில் அர்த்த மண்டபத்தின் வெளியே ஒரு முக்கியக் கதவு திறக்கப்பட்டு அதன் வழியாக இறைவனும் பக்தர்களும் நுழைவர். வைகுந்த ஏகாதசி சொர்க்கவாசல் போல் அல்லாமல் இது வேறுவிதமாகக் கொண்டாடப்படுகிறது.

வேட்டைத் திருவிழா (மிருகயோத்சவம் - மிருகயாத்ரா)

இறைவன் வேட்டைக்குப் போவதாகக் கொண்டாடப்படும் இவ்விழாவிற்கு மிருகயோத்சவம் அல்லது மிருகயாத்ரா என்று பெயர்கள் உண்டு. இறைவனின் படிமம் ஒரு மரத்தின் நிழலில் வைக்கப்பட்டு இறைவனின் சார்பாக ஒருவர் வில்லை எடுத்து அம்புகளை அனைத்துத் திசைகளிலும் செலுத்துவார். இதைத் தொடர்ந்து முக்கியப் பூசையொன்று நடத்தப்பட்டு. பூசைப் பிராசாதம் வழங்கப்படும்.

ஊஞ்சல் திருவிழா

இவ்விழா 3, 5, 7, 9 நாட்கள் தனி உற்சவமாக வைணவக் கோயில்களில் கொண்டாடப்படுகிறது. அல்லது மகோத்சவ

Koviloor Digital Library

விழாவின் எட்டாவது நாள் அல்லது கிருஷ்ண ஜெயந்தி விழாவில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாக்களில் ஓர் ஊஞ்சல் தயாரிக்கப்பட்டு அதில் இறைவன் படிமம் அவரது மனைவியுடன் இணைத்து வைக்கப்பட்டு விசேடமான மண்டபத்தில் தொங்க விடப்படும். இந்த விழா ஹோமங்களும், ஸ்நானங்களும் கேளிக்கைகளும் நிறைந்ததாகக் காணப்படும்.

இவ்விழாவினைக் கண்டு களிப்பவர்கள் நல்ல பயன்களைப் பெறுவர் என்ற நம்பிக்கை உண்டு. இவ்விழாவின் முடிவில் இறைவனும் இறைவியும் ஒரு வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவார்கள்.[19]

வசந்தவிழா (வசந்தோற்சவம்)

வசந்த காலத்தில் பல உற்சவங்கள் நடைபெறும் என்று பாஞ்சராத்திர ஆகமங்கள் விவரிக்கின்றன. மகம (ஜனவரி - பிப்ரவரி) மாதத்தில் அல்லது வைகாசி (ஏப்ரல் - மே) மாதத்தில் நடைபெறும் இவ்விழாவில் இறைவனின் படிமம் ஊர்வலமாகத் தோட்டத்திற்கு வந்து ஓய்வு கொள்ளும். இவ்விழா மூன்று நாட்கள் நடைபெறும்.

வைகாசி விழா

வைகாசி மாதத்தில் (ஏப்ரல் - மே) வைகாச நட்சத்திரத்தில் இவ்விழா நடக்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இந்த உற்சவத்தில் பருவ மலர்கள் இறைவனுக்கு வழங்கப்பெறுகின்றன. அத்துடன் சடங்குகளும் விசேடங்களும் நடைபெறுகின்றன.

அறுவடைத் திருவிழா

வசந்த காலம் (Spring season) முடிந்தவுடன் கோடை காலம் தொடங்குகிறது. பருவ காலமும் பூ என்ற நிலையிலிருந்து பழுத்த பழம் என்ற நிலைக்கு வருகிறது. விவசாயமும் விதை விதைதல் என்ற நிலையிலிருந்து அறுவடை என்ற நிலைக்கு வருகிறது. காலம் உத்தராயணத்திலிருந்து தட்சிணாயணத்திற்கு மாறிச் செல்கிறது. திருவிழாக்களில் மலர்களுக்குப் பதிலாக உணவு வகைகள் படைக்கப்படுகின்றன. பழவகைகள் இறைவனுக்கு வழங்கப்படுகின்றன. இது அறுவடைக் காலத்தை

Koviloor Digital Library

உணர்த்துவதாக அமைகின்றன. இந்தக் கோடை அல்லது அறுவடைக்கால உற்சவத்திற்குப் பாலோத்சவம் என்று பெயர். இது மே -சூன் மாதத்தில் அல்லது சூலை - ஆகத்து மாதங்களில் நடத்தப்படுகிறது.[20]

இவ்விழாவில் இறைவனுக்குப் பழவகைகள் அளிப்பதும் அலங்கார வகைகளும் மிகுதி. இவ்வகை அறுவடை விழாக்களுக்கு அக்ரயனோத்சவா, அக்ரனோத்சவா என்றும் பெயர். இவ்விழாவில் ஹனுமான், விஷ்வக்சேனர், கருடர் யாரேனும் ஒருவர் ஊர்வலமாக வயல்வெளிக்கு வந்து நெற்கதிரைச் சிறிது கோயிலுக்குக் கொண்டு வருவர். அதைப் பொடியாக்கி இறைவனுக்கு உணவாகப் படைத்துப் பக்தர்களுக்கு வழங்குவர். எதிர்காலத்தில் விளைச்சல் பெருக இவ்விழா நடத்தப்படுகிறது.

ஊடல் விழா

கோடைகாலங்களில் நடக்கும் இவ்விழாவில் இறைவனுக்கும் இறைவிக்கும் ஊடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்விழாவில் பட்டர்களில் சிலர் கோயில் வாசலில் இரு குழுவாகப் பிரிந்து நின்று ஒருகுழு இறைவனுக்குச் சார்பாகவும் பிறதொரு குழு இறைவிக்குச் சார்பாகவும் நின்று எதிருரை நிகழ்த்துவர். இவ்வேளையில் பூப்பந்துகள், நீர், பொடிகள் ஆகியவை மாறி மாறி எறியப்படும். இறைவி இறைவனைக் கோயிலுள்ளே மும்முறை அனுமதியாது நான்காம்முறை தன் சன்னதிக்குள்ளேயே ஏற்பாள். இந்த உற்சவம் மிகவும் விமரிசையாகவும் சிறப்பாகவும் நடைபெறும்.

தெப்பத் திருவிழா

இது சதுர் மாதம் தொடங்கப்படுவதற்கு முன்பே நடத்தப் படும் மிகச் சிறந்த விழாவாகும். இறைமூர்த்தப் படிமங்கள் ஒரு பெரிய தெப்பத்தில் வைத்துக் கோயில் செலுத்தப்பட்டு குள மைய மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படும். ஒளி, மலர்கள் நிறைந்த தெப்ப மத்தி மேடையில் இறைவன் இறைவியின் படிமங்கள் வைக்கப்படும்.இதில் வாண வேடிக்கைளும் நடைபெறும்.

Koviloor Digital Library

திருப்பள்ளி விழா

பாஞ்சராத்திர உற்சவ ஆண்டின் இறுதியாக சயன உற்சவம் அல்லது சுவாயோத்சவ விழா நடைபெறுகிறது. தட்சணாயன காலம் தொடங்கும் முன்னரே இவ்விழா நடத்தப் பெறுகிறது. இவ்விழாவினைத் தொடர்ந்து நான்கு மாதங்கள் இறைவன் ஓய்வு எடுத்துக் கொள்வதால் பெரிய விழாக்கள் எதுவும் நடைபெறாது. இவ்விழாவின்போது பக்தர்கள் தனக்கென்று தனித்த விரதங்களை மேற்கொள்கிறார்கள். சயன உற்சவம் நடைபெறுவதற்கு முன்னால் இறைவனின் படிமத்தைக் குளிப்பாட்டி, ஆடை அணிகலன்களைக் களைந்து ஓய்வுக்குத் தயார்ப்படுத்துவர். இதனை ஜேஷ்டாபிஷேகம் என்பர். வெவ்வேறு கோயில்களில் சூலை மாதத்தில் வெவ்வேறு நாட்களில் இதனை நடத்துவர். சற்று இடைவெளி விட்டு இந்த விழா மீண்டும் தொடங்கும்.[21]

பிற விழாக்கள்

இடைப்பட்ட காலங்கள் (transitional time) சில முக்கிய சடங்குகள் நடத்த நிர்ணயிக்கப் படுகின்றன. பிரதோச காலம் என்பது சூரியன் மறைவதற்கு 1.5 மணிக்கூர் முந்தியதும் பிந்தியதுமாகக் கருதப்படுகிறது. பிரதோசம் என்பது தூய்மையற்ற (Corrupt) கொடூரமான (wicked) என்று பொருள்படும். மோசமானது எனவும் கூறலாம். மகாபிரதோசம் அல்லது சிவராத்திரி என்பது வருடந்தோறும் இறுதிக்கு முந்தைய அமாவாசையில் சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்து செல்லும்போது நடைபெறுகிறது. பிரதோசத்தைத் தொடர்ந்து விஜயம் சடங்கு (வெற்றிச் சடங்கு) நடத்தப் பெறுகிறது. இதில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன. எந்தச் சடங்குகளும் நடத்துவதற்கு உகந்த காலமாக இது கருதப்படுகிறது. விஜய நவராத்திரியில்தான் துர்க்கா பூசை இறுதியில் நடத்தப்பெறுகிறது.[22]

முடிவுரை

வைணவ சமயம் வாழ்க்கையைக் கொண்டாட்டமாகவே வழிநடத்துகிறது. அதனால் அச்சமயத்தில் விழாக்களும், திருநாட்களும் அதிகமாக விளங்குகின்றன. இறைவனைக் கொண்டாடுவதன்மூலமாகத் தாங்களும் அந்த இறையின்பத்தை

Koviloor Digital Library

அடைய முடியும் என்பது வைணவர்களின் நம்பிக்கையாகும். ஆகமங்களில் குறிப்பிட்டுள்ளபடி வைணவர்கள் இத்திருவிழாக் களைமுறைப்பட நடத்திவருகிறார்கள். வைணவத்திருவிழாக்களின் விமரிசையை இக்கட்டுரை எடுத்துரைப்பதாக அமைகிறது.

சான்றெண் விளக்கம்:

1. குளத்தூரான், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள், ப.14
2. மேலது, பக்.24-25
3. பரமசிவம், தொ., அழகர்கோயில், ப.55
4. ராமதுரை, என்., சூரியமண்டல விந்தைகள், ப.65
5. குளத்தூரான், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள், ப.27
6. மேலது.
7. பவானந்தம்பிள்ளை, ச., தமிழ்ச் சொல்லகராதி, ப.73
8. குளத்தூரான், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள், ப.12
9. மேலது, ப.13
10. மேலது, ப.14
11. மேலது, ப.15
12. மேலது ப.17
13. மேலது, ப.20
14. மேலது, ப.24
15. மேலது

முதன்மை ஆதாரம்

1. குளத்தூரான், க, முனைவர், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மு.ப.2006

Koviloor Digital Library

சிவாலயங்களில் நாள் வழிபாடும் கலைச்சொற்களும்

முனைவர் ஆ.அருள்சாமி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை.

முன்னுரை

மனித வாழ்வினைச் செம்மையுறச் செய்வது வழிபாடாகும். அத்தகைய வழிபாட்டில் பல்வேறு விதமான ஒழுகலாறுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. பூசகர்கள் தினந்தோறும் இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டே நாள் வழிபாடாகும். இத்தகைய நாள் வழிபாட்டில் பூசகர் செய்யும் சிவாலாய நாள்வழிபாட்டு முறைகளையும் அதற்குரிய கலைச்சொல்லாக்கத்தையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவாலய வழிபாடு

சிவாலயங்களில் வழிபாடுகளை நிகழ்த்தும் அர்ச்சகர்கள் சிவதீக்சையில் இரண்டாம் நிலையாகக் கொள்ளப் பெறும் சிறப்புச் சிவதீக்கை பெற்றவராக இருப்பர். அர்ச்சகர் தன் வழிபாட்டை ஆன்மார்த்தமாகச் சிறப்புற ஆற்றி அமைத்த பின்தான் பிறர்பொருட்டு பரமார்த்த வழிபாட்டினைச் செய்யத் தகுதி பெற்றவராவார். பிறர் பொருட்டுச் செய்யும் கோயில் வழிபாடுகளை நிகழ்த்துவது அந்தந்தக் கோயில் அமைப்புகளைப் பொறுத்தது. கோயில் அமைப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆகமத்தைச் சார்ந்து அமைக்கப்படும். ஒவ்வொரு ஆகமமும் ஒவ்வொரு வகைக்கொள்கையும், ஒவ்வொரு வகை வழிபாட்டு முறையும் எனச் சிறுபான்மை வேறுபாடுகளை உடையது. ஆனால், காலப்போக்கில் அவ்வக்கால அரசியல் சூழ்நிலையால் கோயில் வழிபாட்டு முறைகளால் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டன.

கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அகோர சிவாச்சாரியார் இயற்றிய சிவாலாய பூஜா விதி என்னும் நூலில் கோயில்

Koviloor Digital Library

வழிபாட்டு முறைகளை நுட்பமாக அறிந்து கொள்ள முடிகின்றது. இன்றுள்ள பெரும்பாலான சிவாலயங்களில் பின்பற்றப் பெறும் வழிபாட்டு முறையானது அகோர சிவாச்சாரியார் வகுத்த வழிபாட்டு முறையே ஆகும்.

பூசகர் இல்லத்தில் சைவ ஒழுகலாறுகளைச் செய்து கொள்ளும் முறைக்கு சைவ அனுட்டானங்கள் என்று பெயர். பூசகர் சூரியன் உதிப்பதற்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்னதாகவே சிவாலயத்திற்குச் சென்று சிவவழிபாட்டிற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்து கொள்வார். கோயிலின் முற்புறத்தை நீரால் தூய்மை செய்து கொண்டு உள்ளே நுழைந்து ஆலயத்தின் சுற்றாலைகளை வலம் வந்து கோயில் வாயிற் காவலர்களை வணங்கிய பிறகு, நந்தியின் முன்புள்ள சிவபெருமானை வணங்கி மூலமந்திரமான ஐந்தெழுத்தை (ஓம் சிவாய நம) ஓதி மலரிட்டு வணங்குவர். பின்னர் புனித நீர்க்குடம் ஆயத்தம் செய்யும் இடத்திற்குச் சென்று வடக்குப் பார்த்து அமர்ந்து ஓம் இறைத் திருக்கருவியால் கடித்தேகுக என்று மூன்று முறை கையால் தாள ஒலி எழுப்புவர். பின்பு புனித நீரினைப் பூசகர் தன் உடல்மீது தெளித்துக் கொள்வார். இந்தப் புனித நீரானது வடமொழியில் சாமான்யார்க்கியம் என அழைக்கப் பெறுகின்றது.

சிவாலய நாள் வழிபாட்டு முறைகளில் பஞ்சகவ்விய முறையானது பின்பற்றப் பெறுகின்றது. பசுவினிடத்தில் இருந்து பெறப்படும் பால், தயிர், நெய், பசுவின் சிறுநீர், பசுச்சாணம் ஆகிய ஐந்து பொருட்களும் அபிடேகப் பொருட்களாக உள்ளன. மேலும், பஞ்சகவ்வியம் என்ற சொல் ப + ச + க + வ்யம் என்று பிரிக்கப்பட்டுப் பொருள் காணப்பட வேண்டும் எனத் தத்புருஷ தேசிகர் தனது சிவபூஜா விதியும் விளக்கமும் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். ப = பாவநீக்கத்தையும், ச = ஆன்ம சுத்தியையும், = க = பிறவி நீக்கத்தையும், வ்யம் = முக்திப் பேற்றையும் குறிப்பிடுகின்றன என விளக்கம் தருகிறார் தத்புருஷ தேசிகர்.

சிவ வழிபாட்டைச் செய்வதற்கு முன்னால் பூசகர்கள் செய்ய வேண்டிய தூய்மை முறைகளாக ஐந்து வழிமுறைகள் பின்பற்றப் பெறுகின்றன.

Koviloor Digital Library

1. பூத சுத்தி - உடல் தூய்மை
2. தான சுத்தி - இடத்தூய்மை
3. திரவிய சுத்தி - பொருட் தூய்மை
4. மந்திர சுத்தி - மந்திரத் தூய்மை
5. லிங்க சுத்தி - லிங்கத் தூய்மை

சிவபெருமானை எழுந்தருள்வித்தல் முறைக்கு ஆவாகணம் எனவும் தான்தோன்றி லிங்கத்திற்கு சுயம்பு லிங்கம் எனவும் தெய்வ லிங்கத்திற்கு தைவிக லிங்கம் எனவும் முறைவழக்குண்டு.

தியானம் - சிவமூர்த்தி உள்கல்
தண்டபங்கி நியாசம் - ஒளித்தூண் நிறுவல்
முண்டபங்கி நியாசம் - ஒளிமுகம் பதித்தல்
வக்தர பங்கி நியாசம் - கண்கள் பதித்தல்
சிவாகம நியாசம் - ஆகமங்களைப் பதித்தல்
கோளக நியாசம் - அம்மையப்பர் மந்திரத் திருமேனி பதித்தல்

தத்துவ வழிபாடு

இறைவன் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று நிலைகளிலும் உடையவன் ஆவான்.

அருவம் -இறைவனது தன்னிலை

அருவுருவம் - இறைவனின் தன்னிலையும் உருவ அடையாளங்களும் கலந்திருப்பது

உருவம் - சிவலிங்கத்தை மனித உடல்போலவே முகம், கை, கால் ஆகிய உருவமாகக் கண்டு வழிபடுவது.

மனித உடலானது நம தத்துவங்களைக் கொண்டது. அதைப் போலவே முப்பத்தாறாகும். மனித உடலின் தத்துவத்தைச் சிவலிங்க உருவில் பொருத்தி வணங்கும் முறைக்குத் தத்துவ வழிபாடு என்று பெயர். இதனால் மனிதனைப் போலவே லிங்க உறுப்புகளைக் கொண்டே சிவலிங்கத்திற்கு கைகால்கள், மார்பு, முகம் அமைத்து வழிபடுவதால் இவ்வழிபாடு உருவ வழிபாடாயிற்று.

நாள் உலா வழிபாடு

நாள் உலா வழிபாட்டிற்கு நித்யோற்சவம் என்று பெயர்.

Koviloor Digital Library

உலாப்புறம் போதல் என்பது உற்சவ மூர்த்திக்குரியது. உற்சவமூர்த்தி உலாச் செல்கையில் ஆங்காங்கே பலியிடுதல் நடைபெறும். எனவே, சிவாச்சாரியார்கள் உற்சவ மூர்த்தியைப் பலிநாதர் என்று அழைக்கின்றனர். உற்சவ மூர்த்திக்கு வழிபாடு நிகழ்த்தப் பெறும் பொழுது உற்சவத் தேவிக்கும் வழிபாடு நிகழ்த்தப் பெறுகின்றது.

நாள் உலா வழிபாட்டில் மங்கல வாத்தியங்கள் முழங்கத் திருமுறைகள் ஓதக் கோயிலின் உட்புறத்திலேயே உற்சவர் சுற்றி வருவர். பூசகர் பொதுவருள் நீர் தூக்கிக் கொண்டும் பரிசாரகர் பலியமுது எடுத்துக் கொண்டும் உலா வருவர். பூசகர் ஒற்றை மணி ஒலியாக ஒலித்துக் கொண்டு நேரே கோயிலின் வாயில் மலர்தூவி வாயிற் காவலர்க்கும் நந்திக்கும் பலியிடுவார்.

இதன்பின்னர் பூசகர் சண்டீசுவரருடைய சந்நிதிக்குச் சென்று படிமத்தை நீரால் தூய்மை செய்து, ஆடை, ஆபரணங்கள் அணிவித்து இறைவனுக்குப் பூசித்த மலர்களைச் சொரிந்த அவர் உண்ட உணவினை அமுதூட்டி, தூபதீபம் காட்டி மும்முறை கைகளைத் தட்டி வழிபாடு நடத்துவார்.

ஆறுகாலப் பூசை வழிபாடு

தமிழ்நெறிமுறையின்படி சூரியன் உதித்தபின்புதான் ஒருநாள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். வைகறை வழிபாடானது ஆறுகாலப் பூசையில் அடங்காது. ஆறுகாலப் பூசையின் முதற்காலப் பூசையானது சூரிய உதயத்துடன் தொடங்குகிறது. இது காலசந்தி என அழைக்கப்படுகின்றது. காலசந்தி என்பது காலை சந்தி என்பதன் மரூஉ ஆகும். காலை சந்தி, உபசந்தி, உச்சிக்காலம், பிரதோஷ காலம், மாலை சந்தி, இரவுக் காலம் என ஆறுகாலப் பூசைகள் சிவாலயங்களில் நிகர்த்தப் பெறுகின்றன.

விநாயகருக்குரிய நாள் வழிபாடுகள்

சிவாலயங்களில் விநாயகருக்கு வழிபாடு செய்யும் முறைக்கு ஐந்திருக்கை வழிபாடு என்று பெயர். அனந்தாதனம், சிம்மாதனம், யோகாதனம், பதுமாதனம், விமலாதனம் என்பன விநாயகருக்குரிய ஐந்து முறை வழிபாடாகும்.

Koviloor Digital Library

திருமுருகன் வழிபாடு

சிவனுக்குரிய வழிபாட்டு முறைகளை ஒத்தே திருமுருக வழிபாடும் நிகழ்த்தப் பெறுகின்றது. வாயில் வழிபாடு, உட்புகுதல், கருவறை வழிபாடு, ஐந்திருக்கை வழிபாடு, எழுந்தருளல் (ஆவாகணம்) போன்ற வழிபாட்டு முறைகள் முருகப் பெருமானுக்குப் பின்பற்றப் பெறுகின்றது.

தேவி வழிபாடு

தேவி வழிபாட்டினைச் சத்தி வழிபாடு எனக் குறிப்பிடுகின்றனர். சத்தி வழிபாடானது யோகசத்தி, போக சத்தி, மனோன்மணி சத்தி என்ற மூன்று நிலைகளில் நிகழ்த்தப் பெறுகின்றன. சத்தி வழிபாட்டில் போக சத்தி முறையானது கருவறையினை ஒட்டி அமைந்த சந்நதியில் அமைத்து வழிபாடு செய்யப்பெறும். தேவிக்கென்று தனி ஆலயம் இருக்கும்பொழுது ஒருசில வழிபாட்டு முறைகள் மட்டும் வேறுபடுகின்றன. மெய்யொன்றல் என்னும் (சகலிகரணத்தில்) மட்டும் வேறுபாடு உண்டு. அதாவது அம்பிகையை 25 கலைகளிலும் பூசகர் தன்மீது பதித்துக் கொண்டு திருமந்திரப் பாடல்களை ஓதி 25 இடங்களில் கலைச்சக்திகளை மெய்யொன்றாக்கி வழிபாட்டினை நிகழ்த்துவர். தேவிக்குக் கருவறை வழிபாடு, ஐந்திருக்கை வழிபாடு, சுற்றுப்பூசை வழிபாடு என நாள்வழிபாட்டு முறையானது நிகழ்த்தப் பெறுகிறது.

முடிவுரை

மனித வாழ்வினையும் மனத்தினையும் செம்மையுறச் செய்வது வழிபாடாகும். அத்தகைய வழிபாட்டில் பூசகர்கள் தினந்தோறும் இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டே நாள் வழிபாடாகும். சிவாலயங்களில் பின்பற்றப் பெறும் வழிபாட்டு முறையானது அகோர சிவாச்சாரியார் வகுத்த வழிபாட்டு முறையே ஆகும். பூசகர் இல்லத்தில் சைவ ஒழுங்காறுகளைச் செய்து கொள்ளும் முறைக்கு சைவ அனுட்டானங்கள் என்று பெயர். பூசகர் தன் உடல்மீது தெளித்துக் கொள்ளும் புனித நீரானது சாமான்யார்க்கியம் என அழைக்கப் பெறுகின்றது. சிவனுக்குரிய நாள்வழிபாட்டில் தத்துவ வழிபாடு நாள் உலா

Koviloor Digital Library

வழிபாடு, ஆறுகாலப் பூசை வழிபாடு இடம்பெறுகின்றன. விநாயகருக்குரிய நாள் வழிபாட்டில் அனந்தாதனம், சிம்மாதனம், யோகாதனம், பதுமாதனம், விமலாதனம் என்று ஐந்திருக்கை வழிபாடு இடம்பெறுகின்றன.

சிவனுக்குரிய வழிபாட்டு முறைகளை ஒத்து திருமுருக வழிபாடும் நிகழ்த்தப் பெறுகின்றன. தேவி வழிபாடானது யோகசத்தி, போகசத்தி, மனோன்மணி சத்தி என்ற மூன்று நிலைகளில் நிகழ்த்தப் பெறுகின்றன. இத்தகு வழிபாட்டில் மெய்யொன்றல் என்னும் சகலிகர்ணத்தில் மட்டும் வேறுபாடு காணப் பெறுகின்றது.

Koviloor Digital Library

தெய்வச் சிலை வடித்தபிறகு செய்ய வேண்டிய நிகழ்வுகள் குறித்த சொற்கள்

பேரா. சே. செந்தமிழ்ப்பாவை,
இயக்குநர்,
தமிழ்ப்பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 3.

திருமிகு.சே.அறிவுடை நம்பி,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப்பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 3.

*(அழகப்பா பல்கலைக்கழகம் ரூசா **2.0**நிதி ஆய்வுத் திட்டத்தின் கீழ் எழுதப்பட்ட கட்டுரை)*

முன்னுரை

திருக்கோயில்களில் மூலத்தெய்வம் முதல் பரிவார தெய்வங்கள் வரையுள்ள அனைத்துப் படிமங்களையும் செதுக்கியதன் பின் செய்ய வேண்டிய நிகழ்வுகளில்கையாளும் கலைச் சொற்கள் குறித்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நீர்ப்படுத்தல்(சலவாசம்)

திருக்கோயிலில் நிறுவப்பெறும் திருவுருவத்தைத் தண்ணீரில் குறிப்பிட்ட காலம் வைத்திருப்பதே சலாதிவாசம் எனப்படும். அளவாகவும், அழகாகவும் செய்யப்பெற்ற தெய்வ உருவங்களை சலாதிவாசம் செய்விக்க வேண்டும். பொதுவாக ஒரு பெரிய பாத்திரத்தில் கங்கைநீர், பஞ்ச கவியம், விபூதி, ஆகியவற்றைப் போட்டு அதில் இறைப்படிமத்தை வைக்க வேண்டும்.

இரண்டு தருப்பைகளையும், இரண்டு ஆடைகளையும் சுற்றி பாத்திரத்தில் வைத்து இடதுகையினால் பாத்திரத்தைப் பிடித்து அக்கடவுளுக்குரிய மந்திரத்தை முறை கூற வேண்டும் ஒரு வாரமோ, ஒரு பட்சமோ, ஒரு மண்டலமோ இறைப்படிமத் தண்ணீரை தினம்தினம் அப்புறப்படுத்துவதோடு தெய்வத்திற்குரிய மந்திரத்தையும் சொல்லி வரவேண்டும். பிறகு குறித்த தினத்தில் தெய்வ படிமத்தைப் பாத்திரத்திலிருந்து எடுத்து ஆடையையும்,

Koviloor Digital Library

தருப்பையையும் அவிழ்த்து சுத்தோதஅபிடேகம் செய்ய வேண்டும். பின் பஞ்சோபகாரத்தால் பூசை செய்ய வேண்டும். பாத்திரங்களில் திருவுருவங்களை வைக்காமல் ஆறு, தடாகம், புஷ்கரணி ஆகிய நீர் நிலைகளின் கரையில் தூய்மையான இடத்தில் குழி தோண்டி கிணறாக அகழ்ந்தெடுத்து அதைக் கேமேயத்தினால் மெழுகி அலங்கரித்து விக்னேசுவர பூசை, புண்ணியாகவாசனம் முதலியன செய்ய வேண்டும். பின் புனிதத் தீர்த்தங்களால் புதிதாக அமைத்த கிணற்றினை நிரப்பி மூர்த்தியை பஞ்சகவியத்தால் அபிடேகத்து லம்பக்கூர்ச்சம் கட்டி, கீழே பலகையின்மேல் கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கியவாறு பாம்பு, தேள் முதலிய நீர்வாழ் உயிரினங்களை இடுதல் வேண்டும்.

ஐந்து நாள்களோ, மூன்று நாள்களோ ஒரு நாளோ சலாதி வாசம் செய்யும் நிலையில் விக்கிரகம் இருத்தல் வேண்டும். அங்கு தீபம் அணையாது எரிதல் வேண்டும். எட்டுத் திசைகளையும், லோக பாலகர்களையும், எட்டு பைரவர்களையும், எட்டு சக்கதிகளையும் பூசித்தல் வேண்டும். தொடர்ந்து பல தினங்கள் சலாதிவாசம் நிகழின் தினந்தோறும் பூசித்தல் வேண்டும். அதன்பின் சாந்தி ஓமம் நிகழ்த்தி சிலையை எடுத்தல் வேண்டும்.

தான்யாதிவாசம்

இறைப்படிமத்தை தானியங்களில் மூழ்கச் செய்தல் தானியாதிவாசமாகும். நீர்ப்படுத்தல் முடிந்தபின் எட்டுத் துரோணம் தானியத்தாலும், பாதியளவு அரிசியாலும் அதில் பாதி எள்ளாலும் விக்கிரகத்தை மூடி தான்யாதிவாசம் செய்தல் மரபு, ஈசான்ய திசையில் இடத்தைச் சுத்தி செய்து அஷ்டதள கமலக் கோலமிட்டு அதன்மீது நெல், அரிசி, நிறைந்த பாத்திரத்தை வைத்து அதில் விக்கிரகத்தை இலையினால் சுற்றி கிழக்குத் திசையில் தலை இருக்கும்படியும் தேகம் தெற்கு நோக்கியபடியும் வைப்பர்.

சலாதிவாசத்தில் சொல்லிய மந்திரத்தை நூற்றெட்டுமுறை சொல்லுவர் குறித்த காலத்தில் விக்கிரகத்தை எடுத்து பஞ்சபிரம மந்திரங்களினால் சலாபிடேகம் செய்து மூலத்தானத்திலுள்ள அலங்கார பீடத்தில் இருத்தி ஜடி பந்தனம் செய்தல் வேண்டும்.

Koviloor Digital Library

நித்திராவாசம்

தான்யாதவாசம் முடிந்தபின் யாகசாலையில் கிழக்கில் அல்லது வடக்கில் நெல், அரிசி முதலிய தானியங்களை ஒன்றன்மேல் ஒன்றாகப் பரவி அதன்மேல் கவரிமா மயிர், பறவை இறகு, இலவம் பஞ்சு. பருத்தி, தோல் முதலிய பொருள்களால் தனித்தனி மெத்தைகள் விரித்து தலையணை விரிப்பு முதலியவற்றுடன் படுக்கையை அமைத்தல் வேண்டும்.

ஐந்து மெத்தைகளிலும், ஐந்து தத்துவங்களையும் பூசித்த பின் மூர்த்தியை எழுந்தருளச் செய்து கிழக்கே தலையும் மேல் நோக்கி முகமும் இருக்கும் வண்ணம் சயனிக்க வைத்துச் சிவந்த நிறமுள்ள துணியால் மூடுதல் வேண்டும். தலைக்குப் பக்கத்தில் கும்பங்களை வைத்து உரியவாறு பூசித்து லோக பாலகர்களை அருச்சித்து காவல்காக்கும் பணியில் அவர்களை நியமித்தல் வேண்டும்.

கண் திறப்பு

தெய்வீகத் திரு உருவங்களைக் கல்லால் செங்கலால் இரத்தினத்தால், சுதையால், உலோகத்தால், மரத்தால் செய்கின்றனர். இப்பொருள்களைக் கொண்டு சிற்ப அளவு முறைகளைச் செயற்படுத்திப் படிம இலக்கணங்கள் துலங்கச் செய்யப்படும் கடவுட் படிமங்களின் உடற்கூறுகளையெல்லாம் செம்மையாக அமைத்து முடித்த பின்னர் இறுதியாக அப்படிமங்களின் கண்களைத் திறக்கும் நற்பணியை புனிதமானதொரு நிகழ்ச்சியாகச் சிற்பிகள் கொள்வது தொன்று தொட்டு வருமு; ஒரு நெறியாகும். புடிமங்களின் கண் திறப்பை நயனோன்மிலனம் என்றும் நேத்ரோன் மீலனம் என்றும் சிற்ப ஆகம நூல்கள் பேசும். மூடிய கண்களையுடைய படிமங்களை வழிபடுவது வழக்கன்று. கடவுட் படிமங்களின் கண்கள் திறக்கப்படாமல் இருப்பின் அவற்றை வழிபடுவதும் நன்றன்று, கடவுட் படிமத்தின் கண்மலர் மூடியிருக்குமாயின் உலக அழிவைச் செய்யும் என்றும். திறந்திருக்குமானால் அப்படிமம் உலக வளர்ச்சிக்கு உதவும் என்றும் ஆகமம் கூறுகிறது. எனவே கண் திறத்தில் மிக இன்றிமையாத ஒன்றாகும்.

Koviloor Digital Library

நடைமுறையில் கடவுட் படிமங்களின் இமைகள் எப்பொழுதும் திறந்திருக்குமாறே செய்யப்படும். ஆனால் விழி மண்டலம், ஒளி மண்டலம் ஆகிய இரண்டும் புலப்படுத்தப்படாதிருக்கும். எனவே கண் திறத்தல் ஒளி மண்டலத்தையும், விழி மண்டலத்தையும் விளங்கச் செய்வது ஆகும். பொன்னாலான உளி கொண்ட வெள்ளியாலான சுத்தியால் அவ்விரு மண்டலங்களுக்கேற்ற ரேகைகளை விளம்பி, அதன்மேல் இயல்பான ஆயுதங்களைக் கொண்டு, மண்டலங்களைப் பதியச் செய்தல் தொழில் வழக்கு. இம்முறையானது கற்படிமங்களுக்கும் செப்புத் திருமேனிகளுக்கும் பொருந்தும்.

மர, சுதைப்படிமங்கள் கண்திறப்பு

மரப்படிமங்களுக்கும், சுதைப் படிமங்களுக்கும், மண், கடு சர்க்கரை ஆகிய பொருள்களாலான படிமங்களுக்கும், பொன் வண்ணத்தால் தூரிகை கொண்டு அம்மண்டலங்களைச் துலங்கச் செய்து, பிறகு இயல்பான வண்ணங்களால் தூரிகை முதலிய கருவிகளைக் கொண்டு தெளிவுறச் செய்தல் வேண்டும். அங்ஙனம் சிற்பிகள் செய்த பின்னர் பூசகர் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு மீண்டும் தங்க ஊசியால் அல்லது தர்ப்பையால் அம்மந்திரங்களை விளம்பிக் கண் திறக்கும் பணியை நிறைவு செய்வார்.

சிற்பி(ஸ்தபதி)யானவன் குளித்துப் புத்தாடை உடுத்தி, நெற்றிக்கு இட்டு, விரல்களிலே மோதிரங்கள் அணிந்து இடது தோளில் மேலாடை தரித்துக்கொண்டு விநாயகர் பூசையினை முதலில் செய்தல் வேண்டும். பிறகு பிம்பத்திற்கு அருகில் ஓரிடத்தில் அரிசியினால் பீடம் அமைத்து, அதன்மீது கலச ஸ்தாபனம் செய்து, கலச பூசை செய்து. அக்கலச நீரால் உரிய தேவதையைப் படிமத்தில் ஆவாஹனம் செய்து தேவதையின் மந்திரத்தைச் செபித்து அப்படிமத்தைப் பூசை செய்தல் வேண்டும். இத்தருணத்தில் மணி மங்கல வாத்தியங்கள், மங்கல கோசங்கள் முழங்கச் செய்திடல் வேண்டும்.

பிறகு சிற்பி பிரம்மனைச் சிந்தித்து வணங்கி. அவன் அனுமதி பெற்றக் கொண்டு கண் திறக்கப் படிமத்தினருகில் சென்று பொன்னாலான உளியால் அல்லது ஊசியால் முதலில் வலது

Koviloor Digital Library

கண்ணைத் திறத்தல் வேண்டும். பிறகு இடது கண்ணையும். நெற்றிக்கண்ணையும் திறத்தல் வேண்டும்.

இறைவனின் வலது கண், சூரியனைக் குறிப்பதால் சூரியனுக் குரிய மந்திரத்தை மனதில் தியனித்துக் கொண்டு துலக்கிட வேண்டும். அங்ஙனமே இடது கண் சந்திரனைக் குறிப்பதால் சந்திரனுக்குரிய மந்திரத்தையும், நெற்றிக்கண் அக்னியைக் குறிப்பதால் அக்னிக்குரிய மந்திரத்தையும் மனதில் தியானித்துக் கொண்டே செதுக்குதல் அல்லது குறியிடல் வேண்டும். இதற்குப்பின் சூரிய ஒளியால் ஒளி மண்டலம், வழி மண்டலம் ஆகிய இரண்டையும் செம்மையாகத் தெளிவுறச் செய்தல் வேண்டும். அது மட்டுமல்ல, காது, வாய், மூக்கு, நாபி, புட்டம், குறி, நகங்கள் ஆகிய ஒன்பது துவாரங்களையும் உளியால் திறந்திட வேண்டும். படிமத்திற்குக் கண் திறக்கும் போது சிற்பியைத் தவிர வேறு எவரும் படிமத்தைப்பார்த்தல் கூடாது. எனவே படிமத்திற்கு நாற்புறமும் திரையிட்டடே இப்பணியைச் செய்திட வேண்டும். தூப தீபம்காட்டி பாலும். பழமும் தேனும் படைக்க வேண்டும். இதுவும் திரைக்குள்ளேயே நிகழும்.

அடுத்து சிற்பி தூயோனே! மக்களைக் காப்பதற்காகவும் துன்பங்களை துடைப்பதற்காகவும் இந்தப் படிமத்தில் எழுந்தருளி நிலைத்திருக்க வேண்டுகிறேன் என்று பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

திறந்துவிடப்பட்ட கண்களையுடைய அப்பிம்பம் முதலில் பசுவின் பின்பாகத்தைப் பார்த்திட வேண்டும். இது கோ தரிசனம் என்று சொல்லப்படும். பசுவடன் கன்றும் இருத்தல் நன்றாகும். பிறகு பசுமையான நெற்கதிர், கன்னிமார்கள். சுமங்கலிகள். நவதானியங்கள், கண்ணாடி, சன்னியாசி, துறவி வேத விற்பன்னர் அடியார்கள், இறுதியாக அப்பணியை முன்னின்று நடத்துபவர் என ஒவ்வொன்றையும் பார்த்த பின்னர் திரையிட்டும் நீக்கியும் தரிசனங்களைச் செய்து வைத்தல் மரபாகும். இதன்பின் மக்களுக்குத் தரிசனம் தந்தருளச் செய்வர்.

முடிவுரை

நீர்ப்படுத்தல், தான்யப்படுத்தல், நித்திரைப் படுத்தல், கண்திறத்தல் போன்றவை தெய்வச்சிலைகளை வடித்ததன் பின் செய்யும் நிகழ்வுகளில் இடம் பெறும் கலைச்சொற்களாகும்.

Koviloor Digital Library

சிறுதெய்வ வழிபாட்டில் கொல்லிமலை மாதா கோயில் வழிபாட்டு மரபுகள்

முனைவர் சு. அன்பரசன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

சிறு தெய்வ வழிபாட்டு மரபில் கொல்லிமலை மாதா கோயில் வழிபாடு குறித்த மக்களின் சடங்குகளையும் சடங்குகள்சார் நம்பிக்கைகளையும் பதிவுசெய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தங்கள் வாழ்வில் நன்மை நடந்திடவும், எவ்வகையான துன்பமும் ஏற்படாது சுகமாக வாழ்ந்திடவுமே விரும்புவான். மனிதன், இயற்கையோடு இயைந்து தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டு வாழ்ந்த கற்காலத்தில் தன் தேவைகளை நிறைவு செய்து தன்னைக் காப்பது, இயற்கையே என்று உணர்ந்தான். அவ்வியற்கையே சீற்றம் கொண்டு அவனுக்குத் துன்பம் தரும் காலத்தில் அவற்றால் ஏற்படும் அத்துன்பத்தைக் கண்டு பெரிதும் அஞ்சினான். அத்துன்பத்தைப் போக்கும் வழி அறியாது தவித்தான். தாகம், பசி, நோய், விலங்கு, பறவை போன்றவற்றால் ஏற்படும் துன்பங்களில் இருந்து தன்னைக் காத்துக் கொண்ட மனிதனால் பூகம்பம், இடி, மின்னல், நெருப்பு, சூறாவளி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள முடியவில்லை. அவற்றைக் கண்டு பெரிதும் அச்சம் கொண்டான். அவ்வச்சமே அவற்றை அவன் தெய்வங்களாக வணங்குவதற்குரிய காரணமா-யிற்று. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் அவற்றை வழிபடத் தொடங்கினான்.

சிறுதெய்வம் தோன்றிய வரலாறு

மனிதன் தன் வழித்தோன்றும் வாரிசுகள் நலமுடனும்;, வளமுடனும் வாழ வேண்டுமென்று பெரிதும் பாடுபட்டும், முயன்றும் பொருள்களைச் சேர்த்து மறைந்த முன்னோர்களுக்கு

Koviloor Digital Library

நன்றி பாராட்டும் வகையில் அவர்களைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினான். அவ்வழிபாட்டின்போது அவர்களுக்குப் பிடித்த உணவு வகைகளையும், உடை வகைகளையும் வைத்து வழிபட்டான்.

நாளடைவில் இவ்வழிப்பாட்டு முறையில் வேறுபாடுகள் ஏற்பட்டன. அதாவது உயர்நிலையினர் என்று சொல்லிக்கொண்ட ஒரு பிரிவினர் பெருந்தெய்வ வழிபாட்டையும், அடுத்த நிலையினர் பெருந்தெய்வ வழிபாட்டுடன் சிறுதெய்வ வழிபாட்டையும் பெரிதும் கடைபிடித்தனர்.

சிவன், பிரம்மா, விட்ணு போன்ற மும்மூர்த்திகளையும், அவர்களின் உறவுத் தெய்வங்களையும், இயற்கைச் சக்திகளான பஞ்சபூதங்களையும் பெருந்தெய்வ வழிபாட்டினர் வணங்கினர்.

கண்டியம்மன், மாரியம்மன், அங்காளம்மன், கன்னிமார், கருப்பன், கருப்பனார், முனியப்பன், ஐயனார், பெரியண்ணன் போன்ற தெய்வங்களை சிறு தெய்வ வழிபாட்டினரும் வழிபட்டனர்.

இவ்விருவகை தெய்வங்களின் வழிபாட்டு முறைகளிலும் பெரிதும் வேறுபாடுகள் உண்டு. இவ்விருவகை வழிபாட்டு முறைகளின் விளைவாக பல்வேறு திருவிழாக்களும், பண்டிகைகளும் மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கின.

கொல்லிமலையில் வாழ்ந்த பழங்குடி இனத்தைச் சேர்;ந்த மக்கள் கல்வி அறிவு, பொருளாதார வசதி, சமூகவளமை எதுவும் அதிகம் இல்லாதவர்கள். எனவே, அவர்களிடம் பெருந்தெய்வ வழிபாட்டு முறையைக் காட்டிலும், சிறுதெய்வ வழிபாட்டு முறையே பெரிதும் காணப்பட்டது.

சொல்லான் குலம்

பழங்குடிகளின் குலங்களில் இதுவும் ஒன்றாகும். இதன் தோற்றத்தை, "கொல்லிமலையில் உள்ள மாதாகோவில் என்ற ஊரில் ஒரு முறை நெல் அறுவடை செய்தனர். அப்பொழுது நெல் வயலில் இருந்த வலைகளில் பதுங்கி இருந்த எலிகள்

Koviloor Digital Library

சிறவற்றை கரியன் என்பவர் பிடித்துக் கறி செய்து அங்கு இருந்த மற்றவர்களுக்குக் கொடுக்காமல் தான் மட்டும் உண்டுவிட்டார். மற்றவர்கள் வலையில் இருந்த எலிகள் எங்கே என்று கரியனிடம் கேட்க அதற்குச் சொல்லமாட்டேன் என்று கரியன் கூறியுள்ளார். அதனால் அன்று முதல் ஆவ்வூரினர் கரியனை 'சொல்லான்' என்று அழைத்தனர். சொல்லான் என்ற அப்பட்டப் பெயரே பின்னாளில் அவன் வழியில் வந்தவர்களுக்குக் குலப்பெயராக வழங்கப்பட்டு இன்றளவும் வழக்கில் உள்ளது"1 என்பர்.

மாதா கோயில் உருவான வரலாறு

சொல்லான் குலத்தினரின் குல தெய்வம் மாதாக்கோவில் என்ற ஊரில் உள்ள மாதாப்பட்டி ஆகும். இத்தெய்வம் மரங்கள் அடர்ந்த சோலையில் கற்சிலையாக உள்ளது. இதனை, "ஊர்முடி என்ற ஊரில் பிறந்த மாதா என்ற பெண்ணை மாதாக்கோவில் ஊரில் உள்ள சொல்லான் குலத்தில் திருமணம் செய்து வைத்தனர். திருமணமான சில ஆண்டிலேயே கணவன் மனைவிக்குள் சண்டை ஏற்பட்டது. அதன் காரணமாக மாதா தற்கொலை செய்துக் கொண்டார். தற்கொலை செய்து கொண்ட

அப்பெண்ணையே தங்கள் குல தெய்வமாக சொல்லான் குலத்தினர் வழிபடத் தொடங்கினா"2 என்று கூறப்படுகின்றது. அவ்வூருக்கும் அப்பெண்ணின் பெயரையே வைத்து மாதாக்கோவில் என்று அழைக்கின்றனர்.

திருவிழா நடைபெறும் முறை

சொல்லான் குலத்தினர் அனைவரும் பூசாரி தலைமையில் ஒன்று கூடி விழா நடத்த முடிவு செய்வர். பின் வரி நியமித்து நல்ல நாள் பார்த்து திருவிழா நடத்துவர். திருவிழா அன்று ஊரின் பொதுச் செலவிலேயே பொங்கல் வைப்பர். ஊர் பொதுச் செலவிலேயே குழம்பு தயார் செய்து அனைவருக்கும் விருந்து வைப்பர். அக்கோவிலுக்குத் தற்போது பிடரான் என்பவர் பூசாரியாக உள்ளார். அக்கோவில் திருவிழா மேளதாளம், வான வேடிக்கைகள் எதுவும் இல்லாமல் மிகவும் அமைதியான முறையில் நடைபெறும். திருவிழாக் காலங்களில் மட்டுமல்லாது மற்ற நாட்களிலும் பூஜைகள் நடைபெறும். பூஜை செய்ய

Koviloor Digital Library

விருப்பம் உடையவர்கள் பிடாரனை அழைத்தே பூஜை செய்வர். மாதாக்கோவிலில் 21 குடும்பங்கள் மட்டுமே வசிக்கின்றனர். இவ்வூரில் உள்ள அனைவரும், "சொல்லான் குலத்தைச் சார்ந்தவர்களே ஆவர்"3 என்பர்.

பழக்க வழக்கம்

ஒரு சமுதாயத்தின் சிறப்பினை அம்மக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டே அறியமுடிகின்றது. இவ்வூர் மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றவர்களிடம் இருந்து சற்று மாறுபட்டு காணப்படுகிறது. இதை, "மாதாக்கோவில் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் தரையிலேயே படுத்து உறங்குகின்றனர். கட்டில் போட்டு படுக்கும் பழக்கம் இம்மக்களிடம் இல்லை. இவ்வூரில் வசிப்பவர்கள் அனைவரும் காலணிகளை அணிவதில்லை. வெளியூரில் இருந்து மமாதாக்கோவிலுக்கு வரும் நபர்களையும் ஊரின் எல்லையிலேயே காலணிகளை வைக்குமாறும்"4 என்று கூறுவர் என்பதனால் அறியமுடிகின்றது. கோவிலுக்கு அடுத்தே மக்கள் வசிப்பதால் கோவிலைத் தாண்டி செல்லும் எவரும் வாகனங்களில் செல்வதில்வீலை. வாகனங்களை தள்ளிக்கொண்டு நடந்தேச் செல்வர். பெண்கள் மாதவிடாய் காலங்களில் ஏழு முதல் ஒன்பது நாட்கள் ஊரின் வெளிப்பகுதியில் உள்ள முட்டு வீட்டில் தங்கிடுவர்.

மேலும், "மாதாக்கோவில் ஊரில் எவர் இறந்தாலும் அழுதல், மேளம் கொட்டுதல், தேர்க்கட்டுதல் போன்ற சடங்குகள் செய்யும் வழக்கங்கள் எதுவும் இல்லை. இறந்தவர்களைத் தூளி கட்டியே தூக்கிச் செல்வர். கோவிவீலைக் கடந்து இடுகாட்டிற்குச் செல்லும் போது தூளியைத் திரைபோட்டு மறைத்தே எடுத்துச் செல்கின்றனர். மேளம் கொட்டும் தோட்டி அவ்வூர் மக்களைப் பார்க்க வந்தால்

ஊரின் எல்லைப் பகுதிகளிலேயே நின்று விடுவர். ஊர் மக்கள் எல்லைப் பகுதிகளிலேயே சென்று அவர்களைப் பார்த்து வருவர். அவ்வூரில் உள்ள அனைவரும் கூரை வீடுகளிலேயே வசிக்கின்றனர். சோலையில் திறந்த வெளியில் தெய்வம் இருப்பதால், தாங்களும் மாடி வீடு கட்டி வசிப்பதில்லை என்று சொல்லான் குலத்தினர் ஒரு காரணம் கூறுகின்றனர்"5.

Koviloor Digital Library

சொல்லான் குலத்தினரிடம் அதிக தெய்வ நம்பிக்கை இருப்பதை உணர முடிகிறது. தங்களின் வாழ்வுக்கும், வளமைக்கும், வளர்ச்சிக்கும் அச்சிறுதெய்வங்களே பெரிதும் காரணமானவர்கள் என்ற நம்பிக்கை அவர்களிடம் மேலோங்கி இருக்கின்றது. சிறுதெய்வ வழிபாட்டின் முன்னோர் (மூத்தோர்) வழிபாடு பெறும் இன்றியமையாமையை மாதா கோயில் வழிபாட்டு மரபுகளினால் உணர முடிகின்றது.

தகவலாளிகள்

1. இராமசாமி .மு த/பெ. முத்துச்சாமி மேக்கனிக்காடு, கொல்லிமலை
2. பிரபு .பொ த/பெ. பொன்னுச்சாமி செம்மேடு, கொல்லிமலை
3. இராஜசேகர் சத்துணவு அமைப்பாளர் பூங்குளம்பட்டி, கொல்லிமலை
4. பிடாரன் .வே பூசாரி த/பெ. வேங்கையன், மாதாக்கோவில், கொல்லிமலை
5. மேலது.

Koviloor Digital Library

பர(றை) நாச்சியார் மரபும் வழிபாடும்

திருமிகு. சே. கண்மணி சுப்பிரமணியன்
தமிழ்த்துறைத் தலைவர்
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
மாதனாங்குப்பம், சென்னை - 600 099

முன்னுரை

பரந்துபட்ட இவ்வுலகில் அனைத்து மக்களும் தெய்வ நம்பிக்கையோடு வாழ்ந்து வருகின்றனர். தெய்வங்கள் பெருந் தெய்வங்கள், சிறுதெய்வங்கள் என்ற பிரிவுகளில் வழிபட்டு வருகின்றனர். நகர்புறங்களில் பெருந்தெய்வ வழிபாடும், கிராமப்புறங்களில் சிறுதெய்வ வழிபாடும் இருந்து வருகிறது. சிறுதெய்வ வழிபாட்டை நாட்டுபுற வழிபாடு என்றும் வழங்குகின்றனர். சிறுதெய்வங்களாக ஆண் தெய்வங்களையும், பெண் தெய்வங்களையும் வணங்குகின்றனர். சிவகங்கை மாவட்டத்தில் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள் மிகுதியான அளவில் காணப்படுகின்றன. குறிப்பாகப் பெண் தெய்வங்கள் குல தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும், பொது நிலையிலும் வணங்குகின்றனர். சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா பட்மங்கலத்திற்கு அருகில் உள்ள கருங்குளம் என்ற கிராமத்தில் அருள்நிறை அம்மனாகக் குடிகொண்டுள்ள பரநாச்சி அம்மனைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

ஒருமை வழிபாடு : 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றார் ஔவை மூதாட்டி. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றார் மகாக்கவி பாரதி. சாதி பேதமற்ற வழிபாட்டு முறையைப் பரநாச்சியம்மன் கோயிலில் காணமுடிகிறது. இக்கோயிலில் பூசை செய்பவர்கள் பறையர் இனத்தவர்கள். வழிபாடு செய்பவர்கள் பிராமணர்கள், செட்டியார், கள்ளர், குயவர்கள், நாடார் எனப் பல்வேறுபட்ட இனத்தவர்களும் சாதி வேறுபாடின்றி வழிபட்டு அம்மன் அருள் பெறுகின்றனர். ஒருமைப்பாட்டு உணர்வுடன் வழிபடும் சிறுதெய்வமே பரநாச்சியம்மன். பறையர் இனத்தவர் பூசை செய்வதால் இத்தெய்வத்திற்குப் பறை நாச்சியார் என்று

Koviloor Digital Library

வழங்கப்பட்டு பின்பு பரநாச்சியார் என்று மருவி இருக்கலாம். அம்மன் மேல் உள்ள பக்தியின் காரணமாக இத்தெய்வத்தைக் கருங்குளத்து அம்மன் என்றும் அழைக்கின்றனர்.

நாச்சியார் பெயர் விளக்கம் : நாச்சியார் என்பதன் பொருள் அரசி , தலைவி, பெண் தெய்வம் மற்றும் ஆண்டாள் என்று அகராதி சுட்டுகிறது. பெண்களுக்கான மதிப்புப் பெயராகவும் வழங்கப்படுகிறது. சிவகங்கை அரசி வீர மங்கை வேலு நாச்சியார் அவர்களின் பெயரும் எண்ணிப் பார்க்கத்தக்கதாக உள்ளது. தேனாட்சி, காட்டுநாச்சி, பெரியநாச்சி, கொங்கநாச்சி, அழகுநாச்சி, வயல்நாச்சி, மாணிக்கநாச்சி, பரநாச்சி என்ற எண்மரும் சகோதரிகள் என்று கூறுவாரும் உள்ளனர்.

பரநாச்சியார் வரலாறு சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு திண்டுக்கல் மாவட்டம் உலுப்பகுடி கரந்தை மலையில் கோயில் கொண்டிருந்தாள் இந்த அம்பிகை. அங்கு பிராமண குலத்தைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் பூசை செய்து வந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன். ஒரு நாள் பூசைக்குச் செல்லும் பொழுது அவரது சிறுபாலகனும் அவர் பின்னே சென்றுவிடுகிறான். மகன் வந்ததை அறியாத அந்தணர் கோயிலில் சென்று பூசை முடித்துக் கருவறையைப் பூட்டிவிட்டு வந்துவிடுகிறார். இரவு பூசை முடித்துக் கதவைப் பூட்டிவிட்டால் பின்பு கதவைத் திறக்கக் கூடாது என்பது மரபு. அவர் வீட்டிற்கு வந்தவுடன் மனைவி மகன் எங்கே? என்று வினவுகிறார். அப்பொழுதுதான் மகன் தன் பின்னே வந்ததை அறிந்து, கோயிலுக்குச் செல்கிறார். கதவைத் திறக்க முற்படும் பொழுது அசரீரியாக, ‘உன் குழந்தை என்னுடன்தான் விளையாடிக் கொண்டு இருக்கிறான். காலையில் வந்து அழைத்துச் செல்.’ என்று கேட்கிறது. அது கேட்ட அந்தணர் அம்மன் மீதுள்ள பக்தியால் திரும்பி வீட்டிற்கு வந்து, தன் மனைவியிடம் நடந்தவற்றைக் கூறுகிறார். மனைவி தன் பிள்ளைப் பாசத்தால், கற்சிலை பேசுமா? உடனே என் பிள்ளையை அழைத்து வா என்று கணவனிடம் சண்டை போடுகிறாள். உடனே சென்று தன் குழந்தையை அழைத்து வருமாறு கூறுகிறாள். அந்தணர் மீண்டும் கோயில் சென்று கதவைத் திறக்க முற்படுகிறார். கதவைத் திறக்க முடியவில்லை. கதவை உடைக்கிறார். அசரீரி ஒலிக்கிறது.

Koviloor Digital Library

நான் கூறியதை நீ கேட்கவில்லை, எனக்கு இல்லாத குழந்தை உனக்கு எதற்கு என்று அக்குழந்தையை வதம் செய்துவிடுகிறாள் அம்பாள். கதவைத் திறந்த அந்தணர் உயிரற்ற தன் குழந்தையைக் கண்டு, இறைவியோடு சண்டையிட்டு உனக்கு இனிமேல் எந்த அந்தணனும் பூசை செய்ய மாட்டான். என்று சொல்லி அம்மன் சிலையைத் தூக்கி ஒரு பேழையில் வைத்து உப்பாற்றில் போட்டுவிடுகிறார். அந்தப் பேழை மேலைப் பட்டமங்கலம் அருகில் கண்மாய்க்கு வந்து பாலாற்றில் மிதந்து வருகிறது. அதுகண்ட ஊர்ப் பெரியவர்கள் சென்று எடுக்க முற்படு கின்றனர். யாருடைய கைகளிலும் அகப்படவில்லை. எடுக்கச் செல்பவர்கள் முன்பு தீப்பிழம்பு தோன்றித் தடுக்கின்றது. அப்பொழுது அவ்வழியாக வந்த பறைய இனத்தவரை நீ சென்று எடு என்கின்றனர். அவர் தன் மண்வெட்டியை அப்பேழை அருகில் கொண்டு செல்லும் போது அதில் வந்து அப்பேழை அமர்ந்து கொள்கிறது.

அந்தவேளையில் அங்கிருந்த கோட்டி அம்பலம் என்பவரின் மீது அம்மன் வந்து அருள் வாக்கு சொல்லுகிறாள். "நான் இந்த ஊரில் குடிகொண்டு ஊர் மக்களைக் காக்கின்றேன். எனக்கு நிலையான கோயில் வேண்டாம். கற்சிலை வேண்டாம். எளிமையான முறையில் விளாரிமாரால் வேயப்பெற்ற குடிலே இருப்பிடமாக இருக்கட்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடிலைப் புதுப்பித்துப் புதிய மண்சிலை செய்து வழிபட வேண்டும். ஒரு பெண் என் மீது நம்பிக்கை வைக்காமல் அகம்பாவம் கொண்டு சண்டையிட்டதால், இங்கு எந்தப் பெண்களும் நான் குடிகொண்டுள்ள குடிலுக்குள் வந்து வணங்கக் கூடாது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெண்கள் என்னைத் தரிசிக்கலாம். ஆண்கள் அகம்பாவம் களைந்து, திறந்த மார்புடன் மண்டியிட்டு வணங்கக் கூடியவர்களே என்னை வணங்க வேண்டும். கோட்டி அம்பலம் இன்று முதல் என்னுடன் ஐக்கியமாகி விட்டார். எனக்கு செய்யும் அனைத்து பூசை முறைகளும் கோட்டி அம்பலத்துக்கும் செய்ய வேண்டும். முக்கியமாக எனக்கு எந்த அந்தணர்களும் பூசை செய்ய வேண்டாம். பறைய இனத்தவர்களே பூசை செய்ய வேண்டும். என்னை நம்பிக்கையோடு வணங்குவோர்க்கு வேண்டிய

Koviloor Digital Library

நலன்களை அருள்வேன்" என்று கூறிகிறாள். அம்மன் கூறியது போலவே இன்று வரை நடைபெற்று வருகிறது சிறப்பான ஒன்றாகும்.

திருவிழாக்கள்

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருவிழா நடைபெறுகிறது. குடிலைப் புதுப்பித்தும் புதிய சிலை அமைத்தும் விழாக் கொண்டாடுகிறார்கள். தை மாதம் கோயில் பூசாரி 'பிடி மண்' எடுத்து பரம்பரை பரம்பரையாகச் சிலை செய்யும் குயவர்களிடம் கொடுக்கிறார். குயவர்கள் சிலை செய்யத் தொடங்குகின்றனர். மாசி மாதம் கடைசிச் செவ்வாய்க் காப்புக் கட்டுகிறார்கள். பங்குனி மாதம் முதல் செவ்வாய்க் கிழமை திருவிழாவிற்குள் புதிய அம்மன் சிலை மற்றும் பரிவாரச் சிலைகளையும் செய்துவிடுகின்றனர். செவ்வாய்க் கிழமை காலையில் கருங்குளம் ஊருக்குள் உள்ள சவுக்கையில் புதிய சிலைக்கு எண்ணெயால் திருமுழுக்கு நடைபெறுகிறது. அந்த இடத்தில் கோயிலில் பூசை செய்பவர் பெரிய அரிவாள் மேல் நின்று சாமியாட்டம் ஆடுவது சிறப்பான நிகழ்வாகத் திகழ்கிறது. பின்பு கோட்டி அம்பலக்காரரர் வீட்டில் உள்ள கோயில் உரிமை பற்றி எழுதிக் கொடுத்த பட்டயத்தை தாரை தப்பட்டையுடன் சென்று எடுத்து வந்து கோயிலில் வைக்கின்றனர். செவ்வாய்க் கிழமை இரவு மின் விளக்குகள் மற்றும் தெரு விளக்குகளும் அணைக்கப்பட்டு தீவட்டி ஒளியில் அம்மனின் திருவீதி உலாவாகப் புதிதாக விளாரி மாரால் வேயப்பெற்ற குடிலில் அமர்த்தப்பெற்று வணங்கப்படுகிறாள். திருவிழாவன்று பெண்கள் மாவிளக்கு வைத்து வழிபடுகின்றனர். மாவிளக்கிற்கான மாவை கோயிலில் உள்ள உரலில்தான் இடித்து வைக்க வேண்டும். வீட்டில் இருந்து இடித்துச் செல்லுதல் கூடாது.

கோயில் அமைப்பு

விளாரிமாரால் அமைக்கப்பெற்ற குடிலே கோயிலாகக் காட்சியளிக்கிறது. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருவிழா நடைபெறும் காலத்தில் வெள்ளிக்கிழமை அன்று ஊர் மக்களும் வேண்டுதல் உள்ளவர்களும் விரதம் இருந்து, நாச்சியாபுரம் பகுதிகளில் விளாரிமார் சேகரிக்கப் பாதயாத்திரையாகச்

Koviloor Digital Library

செல்கின்றனர். அவ்வாறு செல்பவர்களுக்கு நீர்மோர், ரொட்டி, பழங்கள், உணவு போன்றவற்றை வழங்க மக்கள் கூடிநிற்பர். விளாரித் தழைகளைச் சேகரித்து வருபவர்கள் இரவு கண்டரமாணிக்கம் சிறுமைக் கண்மாயில் தங்குவார்கள். சனிக்கிழமை விடிகாலையில் விளாரித் தழைகளை சுமந்து செல்கின்றனர். ஞாயிற்றுக் கிழமை பழைய குடில் களையப்பெற்று புதுக்குடில் கட்டப்பெறுகிறது. மிகச்சிறிய வாயில் அமைக்கப் பெறுகிறது. உள்ளே செல்பவர்கள் குனிந்துதான் செல்லமுடியும். ஆண்கள் மட்டும் தங்கள் மேல்சட்டையைக் கழற்றி விட்டு உள்ளே சென்று வழிபட வேண்டும்.

அம்மன் எட்டுத் திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறாள். அம்மனுக்கு அருகில் கோட்டி அம்பலத்துக்குத் தனிச் சிலை வைத்து, அம்மனுக்குச் செய்யும் அனைத்து ஆராதனைகளும் செய்யப்படுகின்றது. குடிலாக உள்ள கோயிலுக்குப் பின்புறம் பழைய சிலைகள் வைக்கப் பெற்றுள்ளன. முன்புறம் சூலாயுதங்கள் வைத்து வழிபடுகின்றனர். நேர்த்திக்கடனாக கோழி, ஆடு மற்றும் மாடுகளையும் கொண்டு வந்து கோயிலில் விடுகின்றனர்.

முடிவுரை

அன்பைப் பெருக்கி உண்மை உணர்வுடன் மக்கள் வாழ்ந்திடவே கோயில்கள் வழிகாட்டுகின்றன. நற்பண்புகளை வளர்த்து ஒருவருக்கு ஒருவர் உதவியும் ஒற்றுமையுடன் வாழ வழிகாட்டுகிறாள் பரநாச்சியம்மன். உள்ள உணர்வுடன் ஒருமை எண்ணத்துடன் அம்மனை வழிபட்டு அவள் அருள் பெற்று மேன்மையுறுவோம்.

Koviloor Digital Library

அருள்மிகு கொடுமுடி மகுடேசுவர வீரநாரயணப் பெருமாள் வரலாறும் பண்பாடும்

முனைவர் பொன். கதிரேசன்
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி - 622 403, புதுக்கோட்டை (மாவட்டம்)

1.தலம் தோன்றிய வரலாறு

ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியில் மேருமலை சிதறிவிழுந்த துண்டுகள் ஐந்து மணிகளாகச் சிதறியபோது அவற்றில் ஒன்று கொடுமுடியாகிற்று என்பது தொன்மநம்பிக்கையாகும்.

ஐந்து மணிகள்

1. நிகழும் பாண்டிக்கொடுமுடி மூலதலமாக முதல்தலம் அமைந்துள்ளது.
2. இரண்டாவது தலமாகச் சிகப்பு மணியாகத் திகழும் திருவண்ணாமலை அமைந்துள்ளது.
3. மூன்றாவது தலமாக மரகத மணியாகத் திகழும் திருஈங்கோய்மலை அமைந்துள்ளது.
4. நான்காவது தலமாக மாணிக்கமணியாகத் திகழும் திருவாட்போக்கி அமைந்துள்ளது.
5. ஐந்தாவது தலமாக நீலமணியாகத் திகழும் பொதியமலை அமைந்துள்ளது.

கொடுமுடி திருத்தலத்தில் அகத்தியர், திருமால், பிரம்ம தேவர், பரத்துவாஜர், மலையத்துவச பாண்டியர் ஆகியோர் வழிபட்டுள்ளனர் என்பது மிகவும் சிறப்பாகும்.

2.கோவிலின் அமைவிடம், சிறப்பும்

கொடுமுடி பேரூராட்சிக்கு வடக்கில் 40 கி.மீ தொலைவில் ஈரோடு உள்ளது. இதன் கிழக்கில் நாமக்கல் 42 கி.மீ மேற்கில்

Koviloor Digital Library

காங்கேயம் 40 கி.மீ தெற்கில் கரூர் 28 கி.மீ. தொலைவில் உள்ளது.

கொடுமுடியில் கொடுமுடி மகுடேசுவரர் கோயில், கொடுமுடி நட்டாற்றீஸ்வரர் கோவில், கோபால பெருமாள் கோவில், புதுமாரியம்மன் கோயில் ஆகிய கோயில்கள் அமைந்துள்ளன.

3.சுந்தரர் பாடிய திருத்தலம்

தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமுடியில் அமைந்துள்ள மகுடேசுவரர் கோயில் (திருப்பாண்டிக் கொடுமுடி) தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் கொங்கு நாட்டத் தலங்களில் ஒன்றாகும். சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரது பாடல் பெற்றது. சுந்தரர் நமச்சிவாயப் பதிகம் பாடிய தலமாகும்.

4.கோவிலின் பெயர்கள்

தேவாரம் பாடல் பெற்ற பாண்டிக்கொடுமடி மகுடேசுவரர் கோயில் பெயர் புராண திருப்பாண்டிக் கொடுமுடி. பாண்டிக்கொடுமுடி மகுடேசுவரர் கோயில் என்பன கோவிலின் பெயர்களாக மக்கள் அழைக்கின்றனர்

5.மூவகைத் தீர்த்தம்

மூலவராக மகுடேஸ்வரர், கொடுமுடி நாதரும், தாயாராக திரிபுர சுந்தரரி மதுரபாஷினி, பன்மொழிநாயகி, வடிவுடை நாயகியும், வீற்றருந்து அருள்பாலிக்கின்றனர். தல விருட்சமாக வன்னி மரம் அமைந்துள்ளது. தேவ தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், காவிரி அகிய மூவகை தீர்த்தம் கொண்ட புண்ணியதலமாக இது விளங்குகின்றது. இத்தலம் ஈரோட்டில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் கொடுமுடியில் உள்ளது. கரூரிலிருந்து ஈரோடு வழியாக சுமார் 25 கி.மீ. தொலைவில் கொடுமுடி அமைந்துள்ளது. திருச்சி - ஈரோடு ரயில் பாதையில் கொடுமுடி ரயில் நிலையம் இருக்கிறது. கோவில் ரயில் நிலையத்திற்கு அருகிலேயே அமைந்துள்ளது. காவரி ஆற்றின் கரைக்கருகில் இக்கோயில் உள்ளது. வடக்கிருந்து தெற்கு நோக்கி ஓடிவரும் காவிரி அமைவிடம் கோயில் முன்புறம் திசைமாற்றிச் செல்லும்.

Koviloor Digital Library

6.மகா திருக்குடமுழுக்கு

நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்றது. சௌமியல் சித்திரை 4ந் தேதி வெள்ளிக் கிழமையன்று மகாகும்பாபிடேகம் நடைபெற்றது. *16.04.1909* அன்று கொடுமுடி கோயிலின் மகாதிருக்குட முழுக்கு நடைபெற்றது.

7.திருமணத் தடை பரிகார தலம்

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம் பகுதியில் அமைந் துள்ள இந்திருத்தலம் அப்பர் திருஞானசம்ந்தர், சுந்தர் ஆகிய மூவரால் பாடப் பெற்றுள்ளது. பிரம்மா, விஷ்னு, சிவன் ஆகிய மும்முர்த்திகள் வீற்றியிருந்து அருள்பாலிக்கும் தலமாகும். சிவன்பெருமான் அகத்திய முனிவருக்குத் திருமண கோலத்தில் காட்சி அளித்தமையால் திருமண தடை பரிகார தலமாக இந்தக் கோவில் விளங்குகிறது. இந்திருத்தலத்தில் திருமணம் செய்வோர் வாழ்வில் எல்லா வளங்களும் பெருவர் என்பது ஐதீகம்.

8.கொடுமுடி பிரம்ம தேவரின் வரலாறு

முன்னொரு காலத்தில் பிரம்மா, திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் கூடியிருந்தபொழுது உலகிற்குத் தலைவர் யார் என்ற கேள்வி பிறந்தது. திருமாலும் தாம் தாமே தலைவர் என்று கூறி வாதிட்டனர். அப்பொழுது வான்வரை நின்றார். அங்குவந்த நாரதமுனிவர் அவர்களை அந்த நெருப்பு மலையின் அடிமுடி காணவல்லவர் எவரோ அவரே என்று கூறினார். உடனே பிரம்மதேவர் யானே இதன்முடி காண்பேன் என்று அன்னவடிமாய் ஆகாயத்திற்குப் பறந்ததார். திருமால் யான் இதன்அடி காண்பேன் என்று வராத வடிவமாய் நிலத்தை தோண்டிச்சென்றார். முடிவில் அவ்விருவரும் தோற்றனார். முடியைக் கண்டதாகச் சிவபெருமான் மற்றும் திருமாலின் முன்பு வந்து தாழம்பூவைத்துப் பொய் கூறினார். இதனால் கோபித்த சிவனிடமிருந்து தோன்றிய பைரவர் பிரம்மாவின் ஐந்து தலைகளில் கிள்ளி எறிந்தார். பிரம்மா உயிற்றுச் சாய்ந்தார். இதனால் தேவர்கள் வருந்தினர். எனவே தன் பத்திரனாகிய பிரம்மாவை மீட்க வேண்டி திருமால் சிவபூசை செய்து

Koviloor Digital Library

வேண்டினார். இதில் மகிழ்நத சிவபெருமாள் பிரம்மாவை நான்முகனாக எழச்செய்தார். பிரம்மா பொய் உரைத்த காரணத்தால் இந்த துன்பம் வந்ததென்றும் மேலும் பூமியில் பிரம்மாவிற்குக் கோயிலும், பூசையும் இல்லாமல் போகும்படி செய்ய நேர்ந்தது என்பதை சிவபிரான் உரைத்ததர். இந்த குற்றம் நீங்கக் கொடுமுடி சென்று காவிரியில் நீராடி வன்னி மரத்தின் உருவாய் பிரம்மா தவம் இயற்றினார். திருமாலும் கொடுமுடி அருள்மிகு மகுடேசுவரரை பூசை செய்து வழிபட்டார். பிரம்மதேவரும் சிவபிரானுக்குக் கோயிலும், நகரமும் செய்தார். எனவே இந்த தலத்திற்கு பிரம்மபுரி என்ற பெயரும் உண்டு. இங்கு பிரம்மதேவர் தம் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கினார். இதற்கு பிரம்மதீர்த்தம் என்று பெயர். சிவ வழிபாடு செய்த திருமால் வீரநாராயணர் என்ற பெயருடன் அருள்கிறார்.

9.பண்பாடும் பழக்கவழக்கமும்

கொடுமடி காவிரியாற்றுடன் உள்ள ஒரு புனிதத்தலமாகும். அதனால் பல்வேறு ஊர்களிலிருந்து காவடி தீர்த்தம் எடுக்க பல்வேறு பக்தர்கள் வந்து செல்கின்றனர். காவிரி நீருடன் வன்னி இலைகள் கொண்ட காவடியுடன் பழனிமலை செல்வது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். பல்வேறு ஊர் பக்தர்கள் கொடுமுடிக்கு வரும்பொழுது தப்பட்டை, பம்பை, நாதசுவரம், திருச்சின்னம், துத்தரி போன்ற வாத்தியங்கள் வாசித்து வருகின்றனர். ஆட்டம் பாட்டங்களுடன் மனமகிழ்ச்சியாக ஆன்மீக பண்பாட்டை பக்தர்கள் காத்து வருகின்றனர்.

கொங்கு நாட்டின் பாடப் பெற்ற எழு திருத்தலங்களான கரூர், பவனி, அவனாசி, திருமுருகன்பூண்டி, வெஞ்சமாங் கூடலூர், திருச்செங்கோடு வரிசையில் ஆறாவதாய் இடம்பெற்ற திருத்தலம் திருப்பாண்டிக் கொடுமுடியாகும்.

10.கொடுமுடி சனீஸ்வரர் சிறப்புகள்

கொங்குநாட்டுத் திருத்தலங்களில் தனி சன்னிதி கொண்டது நவக்கிரகபீடத்தில் இருப்பது மேற்கு நோக்கிய பார்வையாகும். காக்கை வாகனத்தில் அமர்ந்து அருள்பளிக்கும் திருக்கோலம்

Koviloor Digital Library

கொடுமுடி சனீஸ்வாரை வணங்குவோர் சகல நன்மைகளையும் பெறுகின்றனர்.

இத்திருக்கோயிலில் ஆயுள் காரணாகிய சனிபகவனுக்கு மேற்கு நோக்கி தனிச்சன்னதியில் காக்கை வாகனத்தில் அமர்நது அருள் பாலிக்கிறார். இங்கு சனிபகவானின் வலது கரத்தில் திரிசூலமும் இடது கரத்தில் நாகமும் கொண்டு அபூர்வ அமைப்பில் உள்ளார். அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்த அன்பர்கள் இவ்விடத்திற்கு வந்து வழிபடுவது மிகச் சிறப்பாகும். மேலும் தோஷ நிவர்த்திக்காக கருப்பு எள்ளு, நல்லெண்ணை கலந்து பொட்டலம் ஏற்றி வழிபடுவது சிறப்பாகும்.

1. சனி தோஷம் நீங்க - 1 எள்ளு பொட்டலம், 2.கண் திருஷ்டி நீங்க - 9 எள்ளு பொட்டலம், 3.ஜென்ம சனி உடல் பாதிப்பு நீங்க - 12 எள்ளு பொட்டலம், 4.புத்திர தோஷம் நீங்க - 24 எள்ளு பொட்டலம், 5. 7-மிடம் கூட்டுத்தொழில், திருமண தடை தோஷம் நீங்க - 48 எள்ளு பொட்டலம், 6.8-மிடம் சனியால் உடல் பீடைமரண பயம் மனபலம் பாதிப்பு நீங்க - 1048 எள்ளு பொட்டலம், 7. ஏழரைச்சனி நீங்க 365 எள்ளு பொட்டலம், 8.விரையச்சனி தோஷம்,சத்துரு ஸ்தானம் கர்மஸ்தானம் நீங்க - 501 எள்ளு பொட்டலம், 9.சனிபெயர்ச்சி 2 லு ஆண்டு காலம் தோஷம் நீங்க - 1008 எள்ளு பொட்டலம ஏற்றி வழிப்பட்டால் பக்தர்களுக்கு மிகப்பெரும் பலன்கிடைக்கும் என்பது ஐதீகமாகும்.

14.கால பைரவர் துதி

காலபைரவரை வழிபட்டால் கடன் தொல்லையிலிருந்து நீங்கி வாழலாம் என்றும் நம்பிக்கை காட்டும் தலமாக இது உள்ளது.

'விரித்தபல் கதிர்கொள்சூலம் வெடிபடுத் தமதருகங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகிவேழம்
உரித்துமை அஞ்சக்கண்டு உன்திருமணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார்சோறச் செந்நெறிச் செல்வனாரே"

என்று கால பைரவர் துதி பாடி அஷ்டமி தேய்பிறை நாளன்று பக்தர்கள் இறைவனை வேண்டி வழிபடுகின்றனர்.

Koviloor Digital Library

முடிவுரை

நூற்றாண்டுப் புகழ் நிறைந்த கொடுமுடி மகுடேசுவரர் கோயில் மிகச் சிறந்த பண்பாட்டு மையமாகத் திகழ்கின்றது. பெருந்தெய்வங்களாகிய சிவனும் பெருமாளும் பிரம்மாவும் ஓரிடத்தில் இருந்து அருளும் அற்புத தலமாக இருப்பது மிகவும் சிறப்புடையதாகும். சைவம் வைணவம் இரண்டும் ஓரிடத்தில் போற்றப்படும் அதிசயம் இங்கு நாளும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. திருமணத்தடை, குடும்ப தோஷம், பூர்வீக சாபதோஷம், நாகதோஷம், பிதுர்சாபம், புத்திர தோஷம், நவகிரக சாந்தி, ஆயுள்ஹோமம், சனிகிரக சாந்தி, செவ்வாய் தோஷம், ராகு - கேது தோஷம், களத்தர் தோஷம், தார தோஷம், தொழில் அபிவிருத்தியாகம் என்று பல்வேறு பரிகார செய்யும் இடமாகக் கொடுமுடி கோவில் திகழ்கின்றது. உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் வந்தவண்ணம் உள்ளனர் என்பதே இதற்குச் சான்றாகும்.

ஆகவே, சமரச சுத்த சன்மார்க்க சங்கம் அமைத்து, அறுபத்து மூவர் மடம் கொண்டு சமயப் பணிகள், திருவிழாக்கள், என்று நாள்தோறும் கோலாகலமாக திருத்தலம் திகழ்கின்றது. இந்து சமய அறிநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இத்திருத்தலம் ஆன்மீக நம்பிக்கையின் பண்பாட்டு மையமாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

Koviloor Digital Library

தி.புதுப்பட்டி அகத்தீசுவரர் ஆலயம்

திருமிகு. வி. கலாவதி
உதவிப் பயிற்றுநர், உடற்கல்வியியல் கல்லூரி,
அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி-3

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மண்ணே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அண்ணே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

–சுந்தரர்

எழில்மிகு சிவகங்கைச்சீமை, திருப்பத்தூர் நகரில், புதுப்பட்டியில் அமைந்த சுயம்புவாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீ அகத்தீசுவரர் திருக்கோவிலைப் பற்றிக் காண்போம்.

அமைவிடம்:

தேவாரப் பாடல் பெற்ற தலங்களைக் கொண்ட கொன்றை வனம், புத்தூர் எனப் புராணப் பெயர்களை பெற்ற திருப்புத்தூரில், மதுரை புதுகோட்டை சாலையில் 2.கி.மீ தொலைவில் தி.புதுப்பட்டியில் இக்கோவில் அமைந்துள்ளது

தலவரலாறு

இச்சிறு கோவிலானது வயற்பகுதிக்கு நடுவே இயற்கை எழிலுடன் காணபடுகிறது. சில நூறு வருடங்களுக்கு முன்பு சுயம்புவாகத் தோன்றியவரே ஸ்ரீ அகத்தீசுவரர். இவருக்கு எதிரில் நந்தீசுவரர் அமர்ந்த கோலத்தில் வீற்றிருப்பார்.மேலும் மற்றொரு நந்தீசுவரர் சிலை அகதீசுவறருக்கு நேர் எதிரே இல்லாமல் சற்று வலப்புறம் தள்ளி வீற்றிருப்பபார். சுமார் 25 வருடங்களுக்கு முன்பு வரை திறந்தவெளியிலே விற்றிருந்து அருள் பாலித்தார்.

திருக்கோவில் அமைப்பு:

இங்கு மூலவராக உள்ள அகத்தீசுவரர் லிங்க வடிவில் வீற்றிருந்தது பக்தர்களுக்கு அருள் புரிகிறார். மூலவர் அகத்தீசுவரருக்கு, வலதுபுறம் ஸ்ரீ விநாயக பெருமான்

Koviloor Digital Library

வீற்றிருக்கிறார். இடது புறத்தில் ஸ்ரீ முருக பெருமான் அழகுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

மூலவருக்கு இடப்புறத்தில் சிறு சன்னதியில் தேவி ஸ்ரீ உமையாம்பிகை அழகே உருவாக நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள் புரிகிறாள்.

அம்பிகைக்கு அருகே மற்றொரு சிறு சன்னதியில் நவகிரகங்களையும் அடக்கி ஆளும் ஸ்ரீகால பைரவர் வீற்றிருக்கிறார்.

தெற்கு நோக்கி சிறு சன்னதியில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி மிடுக்குடன் அமர்ந்து வேண்டும் வரங்களை அருள்கிறார். வடக்கு நோக்கி தேவி ஸ்ரீ துர்க்கை அம்மன் நின்ற கோலத்தில் வீற்றிருக்கிறார். அருகில் சிறு சன்னதியில் தெற்கு நோக்கி சண்டிகேஷ்வரர் அமர்ந்துருக்கிறார்.

இரண்டாம் சுற்றில் மூலவரின் வலப்புறம் இராகு, கேது இருவரும் வீற்றிருக்கிறார்கள். இடப்புறம் வலிமை பொருந்திய ஸ்ரீ ஆஞ்சிநேயர் அமர்ந்த நிலையில் உள்ளார். இவ்வாறு அணைத்து தெய்வங்களும் இக்கோவிலில் இருந்து அருட்கொடையை அனைவருக்கும் வழங்குகின்றனர்.

அண்மையில் நடந்த அதிசயம்.

இக்கோவிலை சீரமைக்கும் பணியை ஊரில் சிலர் தொடங்கியபோது, வேறு சிலர் "இங்கு தெய்வம் இல்லை, பொய் சொல்லி ஏமாற்றுகிறார்கள்" என்று பேசினார். இதனையறிந்த செலவில் பணி செய்வோர் இறைவன் இக்கோவிலில் உள்ளார் என்பதை நிருபிக்க இறைவனுக்கு யாகங்கள், பூசைகள் செய்து, மஞ்சள் துணியால் கட்டிய கலசம் ஒன்றை இறைவன் முன்பு வைத்தனர். மூன்று நாட்களில் இறைவன் இங்கு உள்ளார் என்பதை அனைவரும் அறிவர் என்று நம்பினர்.

அதே போல் கலசம் வைத்த இடத்தில் 3ம் நாள் இரண்டு நாகங்கள் வந்து கலசத்தை சுற்றி படம் எடுத்து நின்றது. ஊர் மக்கள் அனைவரும் கூடினர். அனைத்து மக்கள், நீண்ட நேரமாக இவ்விரு நாகங்களும் படமெடுத்து ஆடின. அங்கிருந்து செல்லவில்லை மக்கள் அனைவரும் இக்கோவிலில் இறைவன்

Koviloor Digital Library

இருந்து அருள்புரிவதை உணர்ந்தனர். மேலும், அடிக்கடி, நாகங்கள் வந்து அகத்தீசுவரரின் மேல் சுற்றி கொண்டு படமெடுத்துக் காட்சி தருகின்ற நிகழ்வு இன்றளவும் நடக்கின்றது.

சிறப்புகள்:

இக்கோவிலில் அமைந்துள்ள நந்தி சிலையின் அருகே பக்தியுடன் அமர்ந்து இறைவனை வணங்கும் வேளையில் அந்த நந்தி சிலையானது மூச்சு விடுவது போன்ற உணர்வை நாம் உணர முடியம்.

பக்தியுடன் இறைவனடி தேடி வரும் பக்தர்களின் அனைத்து வேண்டுதல்களையும் நிறைவேற்றும் வல்லமை பெற்றவர் ஸ்ரீ அகத்தீசுவரர்.

பூசை விழாக்கள் விபரம்

பிரதோச நாளில் சிறப்பான பூசைகள் நடைபெறும் சிவராத்திரி அன்று சிறப்பு பூசைகளும் ஆராதனைகளும் விடிய விடிய நடைபெறும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும், சஷ்டி, சதுர்த்தி அஷ்டமி, போன்ற திதிகளிலும் இங்கு பூசைகள் நடைபெறும், நவராத்திரி, பூசைகள், இராகு, கேது பரிகார பூசைகள் நடைபெறும். குருப்பெயர்ச்சி நாளில் சிறப்பு பூசைகள் நடைபெறும்.

முடிவுரை:

அனைவரும் சென்று வழிபடுவோம்
அற்புதங்கள் பல நிகழ்த்தும்
அகத்தீசுவரர் திரு அருளைப்பெறுவோம்
தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் நமச்சிவாய நமஹ!

Koviloor Digital Library

கொல்லங்குடி அறியாக்குறிச்சி வெட்டுடையார் காளியம்மன் கோவில் மக்களும் பண்பாடும்

திருமிகு **ச.கலைச்செல்வன்,**
ஆசிரியர் (ப.நி),
சிவகங்கை.

கோயில் என்பது இறைவன் வாழும் இடம். கோ என்றால் அரசரையும் நம்மைவிட மிகப்பெரிய இடத்தில் இருப்பவரையும் குறிக்கும். கோயில் மற்றும் கோவில் என்ற சொற்கள் அரசன் வாழும் இடம் என்றும் இறைவன் வாழும் இடம் என்று பொருள் உணரலாம்.காளையார்கோவில் வட்டம் கொல்லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோயில் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

சக்தி இல்லாமல் சிவமில்லை. சிவமில்லாமல் சக்தி இல்லை என்ற விதிப்படி சிவன் லிங்க வடிவமாகவும் சக்தி பெண் வடிவமாகவும் விளங்குகின்றனர். சில இடங்களில் சக்தியும் சிவனுமாய் சேர்ந்து விளங்குகின்றனர். (எ.கா) பாகம்பிரியாள் கோவில் என்ற திருவெற்றியூர் உமையொரு பாகனாக மற்றும் மங்கை பாகராக பிரான்மலையிலும் திருச்செங்கோட்டிலும் காட்சியளிக்கின்றனர். இறைவனின் விருப்பத்தை இச்சா சக்தி அறிவை ஞானசக்தி எனவும் கூறுவர். யோகநிலையில் இருக்கும் போது, மனோன்மணி என்ற கோப வடிவத்தில் கொற்றவை மற்றும் காளி எனவும் வழங்குவர் தீமைகளை களையவும் தீயவர்களை திருத்தவும் இறைவன் காளி வடிவம் பூண்டார் எனவும் கூறப்படுகிறது. கல்கத்தாவில் வாழ்ந்த இராமகிருஷ்ணருக்கு கொற்றவை ஞானசக்தி வழங்கி பல நல்ல காரியங்கள் மற்றும் மடங்கள் நிறுவ கல்வி, அறிவு, ஆன்மீகம் யோகநிலை ஆகியவற்றை போதிக்கலானார். தமிழகத்தில் பாரதியார் காளியை வழிபாடு செய்யும் போது

யாதுமாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் - காளி

Koviloor Digital Library

தெய்வீகலீலை யன்றோ
பூத மைந்தனும் ஆனாய் - காளி
பொறிகள் ஐந்துமானாய்
போத மாகிநின்றாய் - காளி
பொறியை விஞ்சி நின்றாய்

என்று பாடினார். தமிழக மக்கள் பழங்காலத்திலிருந்து கொற்றவை வழிபாடு செய்து வந்தமைக்கு இளங்கோ அடிகள்.

"அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்கான்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்

என்று கோபத்தோடு வந்த கண்ணகியை சிலப்பதிகாரத்தில் இடம் பெறச் செய்துள்ளார்.

தலவரலாறு :

கொல்லங்குடியில் பல நூற்றாண்டுகளாக அமைந்திருந்து காரைச்செடி ஈச்சமரம் ஆகியவை காணப்பட்ட இடத்தில் புதருக்கும் இடையில் காணப்பட்ட அய்யனாரை வேளார் மரபினர் வழியில் வந்த காரி வேளார் கருப்பவேளார் என்பார் முறை வைத்து பூசை செய்து வந்தனர். பின்னொரு காலத்தில் வெட்டி எடுத்து கோயில் கட்டி வழிபட்டனர். மண்ணிலிருந்து வெட்டி எடுக்கப் பெற்றமையால் வெட்டுடைய ஐயனார் என வழங்கப்பட்டது. அந்த இடத்தில் சில எழுத்துக்கள் எழுதப்பட்டு மறையாமல் இருந்ததைக் கண்டு காளிக்கு உரியவை என அறிந்து காளியைத் தோற்றுவித்தனர்.

சிவகங்கை அரசும் காளி கோயிலும் :

சிவகங்கை அரசர் முத்துவடுகநாதர் காளையார்கோவிலில் ஆங்கிலேயருடன் போர் புரிந்தார் ஆங்கிலத்தளபதி கர்னல் ஜோஸப் என்பவரால் கொல்லப்பட்டார். மருதுபாண்டியரோடு காளையார்கோயிலுக்கு வந்த அரசியார் வேலுநாச்சியார் மாலையீடு அமைத்துவிட்டு திரும்பும் போது ஆங்கிலப் படைகளிலிருந்து வேலுநாச்சியாரை அடையாளம் காட்டச் சொல்லி ஆடு மாடு மேய்த்த உடையாள் என்ற பெண்ணிடம்

Koviloor Digital Library

வற்புறுத்தினர். அப்பெண் நாட்டு நலன்கருதி வேலுநாச்சியார் சென்ற வழி தெரியும் சொல்லமாட்டேன் என்றார். உடனே அப்பெண்ணை வெட்டிவிட்டனர். அந்த வெட்டப்பட்ட பெண்ணே காளியாக விளங்குகிறார் என்ற மரபு வழிச்செய்தியும் உண்டு. வேலுநாச்சியார் தன்னுடைய வைரத்தாலியை காளிக்கு அணிவித்துக் காரிவேளார் மற்றும் கருப்ப வேளார் இருவரையும் பூசாரிகளாக (அர்ச்சகர்) நியமித்தார் எனவும் வரலாறு கூறுகிறது. கொல்லங்குடி வேளார் மரபினர் எங்கு சென்றாலும் திருநீறு பை வைத்திருப்பர் அவர்களிடமிருந்து திருநீறு பெற்றால் காளியின் பிரசாதமாக மக்கள் கருதுகின்றனர்.

அய்யனார் வழிபாடு :

அய்யனார் ஒரு கிராமத்தின் காவல் தெய்வமாக கருதப்படுகிறார். தமிழர் நாகரிகத்தில் பெரும் தெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாடு (நாட்டுப்புற வழிபாடு முறையை சார்ந்துள்ளது. இவ்வழிபாட்டு முறை சமயம் சாதி சம்பிரதாயங்களுடன் தொடர்பு வைக்கும். எதை சாதிக்க முடியாது என கருதுகிறோமோ அதை எல்லாம் வழிபாட்டால் சாதிக்கலாம் என தத்துவஞானி டென்னிசன் என்ற அறிஞரின் கூற்று. தமிழகத்தின் விளைநிலங்களுக்கும் ஒருகண்மாய் (ஏரி) உண்டு. அதன் கரையில் ஒரு அய்யனார் கோவில் இருக்கும். அவ்வூரின் விளை நிலங்கள், பயிர்கள், நன்மை தீமைகள் வறுமை மற்றும் நோய்கள் ஆகியவற்றிலிருந்து அய்யனார் காப்பாற்றுவார் என்பது நம்பிக்கை.

சிவன், திருமால் மூலம் அவதரித்தமையால் (அய்+அன்) அய்யப்பன் எனப்பெயர் பெற்றார் அய்யப்பனின் அம்சமே அய்யனார் ஆயிற்று.

கொல்லங்குடி கோவில் நடைமுறை

திருக்கோவில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை திறந்திருக்கும். நடை சாத்துவதே இல்லை, பல ஊர்களிலிருந்து பல சமுதாய மக்களும் வந்திருந்து வழிபடுவர். காளிஅம்மன் உக்ர கோலத்தில் காட்சி அளித்தாலும் சாந்தி தரும் அம்மனாக காட்சி அளிப்பாள். பரிவார தெய்வங்களும்

Koviloor Digital Library

கிராம தேவதைகளும் உண்டு. குலாளர் மரபினரே அர்ச்சகராக உள்ளனர்.

திருவிழாக்கள் :

மார்ச் மாதம் (பங்குனி) திருவிழா திருவாதிரையன்று தொடங்கப் பெற்று மார்ச் 24ந் தேதி வரை நடைபெறும். பெருங் கூட்டம் கூடும், ஆடிமாதம் மற்றும் தை மாதம் திருவிளக்குப் பூசை நடைபெறும்.

பிற செய்திகள் :

1. உற்றோர் நம்பிக்கையின் ஸ்தலம்
2. குழந்தை வரம் வேண்டும் தலம்
3. திருமணங்கள் நடக்கும் தலம்.
4. சித்த வைத்தியர் தயாரிக்கும் மருந்துகள் அம்மனுக்கு காணிக்கை ஆக்கப்படும். இந்த மருந்தின் ஒரு பகுதி "பூ நீர்" எனப்படும். இது இயற்கையாகவே சில நாட்களில் மண் மீது பூத்திருக்கும் இது அம்மனின் கொடை எனக் கருதுவர்.
5. சண்டை சச்சரவு செய்து கொண்டவர்கள் மனம் திருந்தி "திரு நீறு பூசி" சேர்ந்து கொள்வர்.
6. பகைமை பழி ஆகியவற்றை உடையவர்கள் காசு வெட்டிப் போட்டு உண்மையை வரவழைப்பர். இப்பழக்கம் இப்போது நிறுத்தப்பட்டு முறையீட்டுச் சீட்டு கட்டுவதுண்டு.
7. 15 நாள் திருநாளில் ஒவ்வொரு திருநாளுக்கும் ஒரு சமுதாயம் விழாச் செலவுகளை (மண்டகப்படி) ஏற்றுக்கொள்ளும்.
8. அம்மனுக்கு காப்பு கட்டிய பிறகு காப்புத் தடையாக கருதி சுற்று வட்டார மக்கள் வெளியூர்களுக்குச் செல்ல மாட்டார்கள்.
9. குலாளர் பரம்பரையினரே கோவில் அர்ச்சகர்கள்.

Koviloor Digital Library

10. இவ்வூரின் வட பகுதியில் அய்யனார் கோவில் உண்டு. நகரத்தார் பெரு மக்களின் கோவில் கட்டிய காலத்திலிருந்து பொருளுதவி மிக உண்டு.

11. தற்போது கோவில் நிர்வாகம் வேளார் மரபினரிடமிருந்து மாறித் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.

12. தினமும் அன்னதானம் திட்டம் செயல்பட்டு வருகிறது.

புரவி எடுப்பு, முளைப்பாரி, மழை வரம் வேண்டுதல், மதலை எடுப்பு (மழலை எடுப்பு), சாமியாட்டம் (அருள் இறங்குதல்), தீச்சட்டி எடுத்தல் போன்றவை இங்கு சிறப்பாக நடக்கும்.

சான்றாதாரங்கள்: பார்வையும் கேட்டறிந்ததும் :

1. சுந்தரம் சொ.சொ.மீ டாக்டர் வெட்டுடையார் காளி அம்மன் திருக்கோவில் ஸ்தல வரலாறு.

2. சேது ராம சிவம் சுப.டாக்டர்.அய்யனார் வழிபாடு

3. உடையார்.கே மன்னர் மேல்நிலைப்பள்ளி சிவகங்கை.

Koviloor Digital Library

அருள்மிகு பூமிதேவி என்ற பூமாயி அம்மன் திருக்கோயில் தோற்றமும் வழிபாட்டு மரபும்

திருமிகு. க.கலைச்செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப்பண்பாட்டு மையம். அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-3.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

தமிழர் நாகரிகம் பண்பாடு மற்றும் கலைகளின் இருப்பிடங்களாகத் திகழ்வன தமிழகத் திருக்கோயில்கள், திருக்கோயில்கள் வழிபாட்டு நிலையில் சிறுதெய்வ வழிபாடு பெருந் தெய்வ வழிபாடு என்ற இருநிலைகளில் அமைந்துள்ளது. சிறுதெய்வ வழிபாட்டுத் திருக்கோயில்களில் ஒன்றான பூமாயி அம்மன் திருக்கோயின் தோன்றிய வரலாறு, திருக்கோயிலின் அமைப்பு, வழிபாடு, விழாக்கள் போன்றவற்றைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அமைவிடம்

அருள்மிகு பூமாயி அம்மன் திருக்கோயில் மதுரையிலிருந்து கிழக்கே 65கி.மீ. தொலையிலும் காரைக்குடியிலிருந்து 20 கி.மீ தொலைவிலும் உள்ள திருப்பத்தூர் என்னும் நகரில் அமைந்துள்ளது.

தலவரலாறு

ஆதிகாலத்தில் இவ்வாலயம் அமைந்துள்ள பகுதி வனப்பகுதியாக விளங்கியது. இவ்வனப்பகுதியில்தான் வால்மீகி முனிவர் தவம் இருந்து இராம காவியம் படைத்தார் எனக் கூறப்படுகிறது. வால்மீகி முனிவர் வாழ்ந்த இடம் என்பதால் வான்மீகபுரம் என அழைக்கப்பட்டது. வால்மீகி முனிவரின் ஞான கடாட்சத்தாலும் தவ வலிமையினாலும் உருவாக்கப்பட்டது தான் இங்குள்ள சப்தமாதாக்கள் என செவிவழிச் செய்தி

Koviloor Digital Library

கூறுகிறது. (பூமாயி அம்மன் திருக்கோயில் பூச்சொரிதல் விழா, சிறப்புமலர், ப.5)

இராமபிரானைப் பிரிந்த சீதை இங்கு வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் தங்கியிருந்தார் எனவும் இராமனின் புதல்வாரன லவகுசர் இங்குதான் அவதரித்தனர் எனவும் கூறப்படுகிறது. சீதை வழிபாடு செய்யும்போது தாமரைப்பூ தேவைப்பட அதைக் கொண்டுவரக் குசன் சென்றான். லவன் விளையாடிக் கொண்டிருந்த பொழுது அங்கு இராம, இலக்குவரால் அனுப்பப்பட்ட குதிரை இப்பகுதிக்கு வந்தது. அதைப்பார்த்த லவன் குதிரையை அடக்க முற்படுகிறான். குதிரையுடன் வந்த இலக்குவன் லவனை மயக்கம் அடையச் செய்கிறான். தாமரையைக் கொண்டு வந்த குசன் அதைத் தாயிடம் கொடுத்துவிட்டுத் தன் தமயனைக் காண வான்மீகபுரம் சென்றான். இலக்குவனுடன் நடந்த போரில் குசன் வெற்றி பெறுகிறான். இதையறிந்த இராமனும் அனுமனும் வர குசனும் லவனும் இராமன் மீது பானம் தொடுத்தனர். இராமர் மகன் மீது பானம் விடப் போனார். அப்போது சீதை தன் குழந்தைகளைத் தேடி வந்தாள். அப்போது அங்கிருந்த சூழலைக்கண்டு குழந்தைகளை கட்டியணைக்க பூமி இரண்டாகப் பிளந்தது. சீதையையும் குழந்தைகளையும் விழுங்கியது. சீதை பூமிக்குள் சென்ற இடத்திலேயே இத்திருக்கோயில் அமைந்துள்ளது. சீதைக்காக எழுப்பப்பட்டதே இத்திருக்கோயில். சீதை மண்மகள் ஆதலால் ஆதியில் இவ்வம்மன் பூமிதேவி என்று அழைக்கப்பட்டாள். அதன்பின் பூமாதேவி - பூமாயி எனவும் அழைக்கப்பட்டு வருகிறது.

'பூப்பதுவாய்க் காப்பது வாய்ப் போக்குவதாய்த்
தேக்குவதாய் நீர்ப்பதுவாய் தன்னுள் நிறுத்துவதாய்'

விளங்கும் அம்மனுக்குத் தனிக் கோட்டமோ தனிச் சந்நிதியோ இல்லை. கருவறையின் உள்ளே பூமாயியுடன் சப்த மாதர்கள் உருவங்களும் அமைத்துள்ளனர்.

தலத்தீர்த்தம்

மக்கள் வாழ்க்கைக்கு நீரே அடிப்படை. இதனால் திருக்கோ-

Koviloor Digital Library

யில்களில் குளம் அமைக்கும் முறை தோன்றியது. நவக்கிரக சந்நிதியை ஒட்டியுள்ள கிணற்று நீரே திருக்கோயில் வழிபாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

தல விருட்சம்

விருட்சம் என்பதற்குப் பெருகுதல் என்பது பொருளாகும். அனைத்துக் கோயில்களிலும் ஒவ்வொரு மரம் தல விருட்சமாக விளங்குகிறது. இக்கோயிலுக்குத் தல விருட்சமாக வேப்ப மரம் விளங்குகிறது.

திருக்கோயிலின் அமைப்பு

பூமாயி அம்மன் திருக்கோயில் ஊரின் நடுவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, இடைநாழி, அர்த்த மண்டபம் இம்மண்டபங்களை இணைக்கும் திருச்சுற்று அதில் பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகள் என்பன போன்ற பகுதிகளைப் பெற்றுள்ளது. வடக்கு நோக்கி அமைந்துள்ள நுழைவாயிலின் மேல் இராசகோபுரம் உள்ளது.

கருவறை

திருக்கோயிலில் மூலவர் உறையுமிடம் கருவறையாகும் இக்கோயிலின் கருவறை நிள் செவ்வக வடிவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. அம்மன் கோயில் கருவறையிலிருந்து மாறுபட்ட அமைப்பில் உள்ளது. கருவறையின் உள்ளே கன்னிமார் எழுவர் விரிசையாக இருப்பதால் கருவறை நீள்செவ்வக வடிவில் அமைந்துள்ளது. கருவறை விமானம், அதிட்டானம், சுவர், கூரை, கீரிவம், சிகரம், ஸ்தூபி ஆகிய ஆறு அங்கங்களைக் கொண்டு விளங்குகிறது.

கொடிமரம்

அர்த்த மண்டபத்தில் கருவறையை நோக்கியவாறு ஒரு கொடிமரம் அமைக்கப்பட்டுள்ளது. சமசதுர மூன்றடி உயரப் பீடத்தில் கொடிமரம் அமைந்துள்ளது. கொடிமரம் முழுவதையும் தாமிரத் தகட்டால் முடியுள்ளனர். தாமரை மலரினைப் போல் பீடத்தின் அமைப்பு காணப்படுகிறது. கொடி மரத்தில் 16 மணிகள் தொங்கவிடப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இராச கோபுரம்

பூமாயி அம்மன் சந்நதியின் நேர் எதிரே அமைந்திருப்பது இராசகோபுரம். விமானத்தின் மேல் ஐந்து கலசங்கள் உள்ளன. ஒவ்வொரு மாடத்திற்குப் பக்கத்திலும் இரு காவலர்கள் கதையுடன் காணப்படுகின்றனர். கோபுரத்தின் நான்கு புறங்களிலும் பூத கணங்கள் உள்ளன. ஏனைய சிற்பங்களும் அழகுடன் காணப்படுகின்றன. இக்கோபுரம் நாகர அமைப்பினது. கீழே அகன்றும் மேலே போகப் போகக் குறுகியும் உள்ளது.

பூமாயி அம்மனின் சிலையமைப்பு

பூமாயி அம்மன் சிறிய பீடத்தின் மீது அமர்ந்த கோலத்தில் வடக்கு நோக்கி வீற்றிருக்கிறாள். இவளுக்கு நான்கு கைகள். வலது மேல் கையில் சக்கரமும், இடது மேல் கையில் சங்கும் வலது கீழ்க் கை அபயமாகவும் இடது கீழ்க் கை வரதமாகவும் விளங்குகின்றது. வலது காலைத் தொங்கலிட்டும் இடது காலை மடித்து ஆடனத்தின் மீது வைத்த நிலையிலும் காட்சி தருகிறார். இவ்வம்மன் தலையில் கரண்ட மகுடம் தரித்துக் காதணிகளும் கழுத்தணிகளும் தோள்ளணிகளும் அணிந்து கண்ணைக் கவரும் வண்ணம் அழகாக வழக்கப்பட்டுள்ளன்.

வழிபாடு, திருவிழா

பூமாயி அம்மன் திருக்கோயிலில் நான்வழிபாடு, சிறப்பு வழிபாடு மற்றும் மாத வழிபாடு போன்றவை சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. விழா என்பது விழைவு என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. திரு எனும் அடைமொழி சேர்த்துத் திருவிழா என்று அழைக்கப்படுகிறது. பூச்சொரிதல் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டடப்படுகிறது. அம்மனுக்கு வருடந்தோறும் சித்திரை மாதம் வளர்பிறைப் பஞ்சமி நிதியன்று பூச்சொரிதல் விழா மிகக் சிறப்பாக நடத்தப்பட்டு வரகிறது. பூச்சொரிதல் திருவிழா ஒருநாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது எல்லா ஊர்களிலிருந்து மக்கள் பூச்சொரிதல் விழாவில் கலந்து கொள்வர். பூத்தட்டுக்களைக் கையில் ஏந்திக் கொண்டோ அலங்கார ஊர்திகளிலோ கொண்டு வருவர். இப்பூத்தட்டுகள் ஒரு இடத்தில் ஒன்றாக வைக்கப்படும் இவ்விழாவை முன்னிட்டு

Koviloor Digital Library

கரகம் ஒயிலாட்டம் தெருக்கூத்து, பட்டிமன்றம், இசைக்குழு போன்ற கலைநிகழ்ச்சிகளும். வானவேடிக்கைகளும் நிகழும். வியாபாரிகள் கைகளில் பூத்தட்டுகளுடன் ஊர்வலமாக கோயிலுக்கு வருவார்கள். அம்மன் சந்நிதியின் முன்பு மக்கள் பல வண்ணப்பூக்களைக் கொண்டு வந்து கொட்டுவர். பின்னர் பால், இளநீர், சந்தனம் முதலியவற்றால் அம்மனுக்கு அபிடேகம் செய்து வழிபாடு செய்வர். இத்திருக்கோயிலின் பூசையாக நித்திய நைமித்தக பூசை, காமிக பூசை, நான்கு காலப் பூசைகள், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் எனும் பூசைகள் நிகழ்த்தப் பெறுகிறது.

திருவிளக்குப் பூசை

நவராத்திரியின் ஒரு செவ்வாய் இப்பூசை நடைபெறும். பூமாயி, அம்மன் கோயிலில் திருவிளக்குப் பூசைக்கு ஒரு சீட்டுக்கு நூற்றி ஒரு ரூபாய் கட்டி விரும்பியவர்கள் இதில் சேர்ந்து கொள்ளலாம்.

"திருவிளக்கின் ஐந்து முகங்களும் பெண்களுக்கு இருக்க வேண்டிய ஐந்து முக்கிய குணங்களான அன்பு, அறிவு, உறுதி, நிதானம், பொறுமை ஆகியவற்றை வலியுறுத்துகிறது." இப்பூசை பெண்களால் விரும்பி மேற்கொள்ளப்படுகிறது. (பூமாயி அம்மன் பூச்சொரிதல் விழா சிறப்பு மலர். ப.15)

திருவிழாவில் பொங்கலும் பலியிடுதலும்

பூமாயி அம்மனின் பூச்சொரிதல் விழா முடிந்து மறுவாரத்தில் பொங்கல் வைத்து சேவல்களை அறுத்து படையல் செய்வர்.

அறங்காவலர் குழு

பூமாயி அம்மன் கோயிலில் அறங்காவலர் குழுத்தலைவராக நா.ஆறு. தங்கவேலு என்பவர் இருந்து வருகிறார். இவரின் கீழ் நா.ராமேசுவரன், சோ.சண்முகம், ஆ.கண்ணகி என்ற மூவர் குழு செயல்பட்டு வருகிறது. இத்திருகோயில் செயல் அலுவலரும் தக்காரும் இணைந்து நிருவாகத்தை நடத்தி வருகிறார்கள்.

குருக்கள்

குருக்களாகத் தற்பொழுது இருவர் பணியாற்றி வருகின்றனர்.

Koviloor Digital Library

இவர்கள் ஒவ்வொருவரும் பத்து பத்து நாட்களாப் பிரித்து கொண்டு பூசை செய்வர். இவர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்படுகிறது.

குடமுழக்கு

பூமாயி அம்மன் *21.6.1981-* முதல் குடமுழக்குச் செய்யப்பட்டது. அதன்பின் **1994**-ம் ஆண்டு இரண்டாவது குட முழுக்கு நிகழ்த்தப்பெற்றது

வருமானங்கள்

இத்திருக்கோயிலில் வருமானமாக அர்ச்சனைச் சீட்டு, உண்டியில் காணிக்கை, முடிகாணிக்கை, கோயிலுக்குரிய இடத்தில் கடைகள் வைத்திருப்பதால் அக்கடையிலிருந்து வரும் வாடகை என்று பல்வேறு வழிகளில் கோயிலுக்கு வருமானம் வருகிறது.

கோயிலுக்குரிய சொத்துக்கள்

பொதுவாக கோயிலுக்குரிய சொத்துக்கள் அசையாச் சொத்துக்கள் அசையும் சொத்துக்கள் என இருவகைபடும். புஞ்சை நிலமாக *3086.5* சதுர அடி உள்ளது. நஞ்சை நிலம் இல்லை. எல்லோரும் வணங்கும் தெய்வமாக உள்ளமையால் மக்களின் குறைத்திர்க்கும் தெய்வமாக விளங்குகிறது. இக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்தால் வேண்டுதல் நிறைவேறி மக்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும் தெய்வமாகவும் இருந்து வருகிறது.

முடிவுரை

சீதைக்காக எழுப்பப்பட்ட இத்திருக்கோயில் அப்பகுதியில் வாழும் மக்களின் குறைகளைத் தீர்க்கும் கோயிலாகவும் காட்சி தருகிறது.

Koviloor Digital Library

அரவான் திருவிழா வழிபாட்டு மரபுகள்

முனைவர் ச. கவிதா,
பேராசிரியர்,
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்- 613 010 .

முன்னுரை

மகாபாரதக் கதையில், கூறப்படும் கிளைக்கதையின் தலைவனாக வருபவன் அரவான். பாணடவ அரசன் அர்ச்சுனனுக்கும், உலூபி என்னும் நாககன்னிகைக்கும் மகனாகப் பிறந்தவன் அரவான். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நிகழும் பாரதப்போரில் பாண்டவர்கள் வெற்றிபெறுவதற்கு அனைத்து இலட்சணங்களும் பொறுந்திய வீரனான அரவான் களப்பலி இடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறான். அரவான் கண்ணனிடத்தில் மூன்று வரங்களை வேண்டிப் பெறுகிறான். ஒரு பெண்ணை மணம்முடிக்க வேண்டும், பலியிடப்பட்டாலும் தனது தலைக்கு எப்போதும் உயிர் இருக்க வேண்டும், பாரதப் போரை முழுவதுமாக இறுதிவரையில் காண வேண்டும் என்பன அவை. தாய், தந்தையற்ற அநாதைப் பெண்ணை அரவான் திருமணம் செய்துகொள்கிறான். மறுநாள் காளியின் முன் அரவான் களப்பலியிடப்படுகின்றான். அரவானின் மனைவி விதவைக் கோலம் பூணுகிறாள். பாண்டவர்கள் போரில் வெற்றி பெறுவதற்கு, அரவான் தன்னையே பலியிட்டு, தியாகத்தின் மொத்த உருவமாகத் திகழ்கின்றான். பாண்டவர்களுக்குப் போரில் வெற்றி குறித்த நம்பிக்கையை ஊட்டியவன் அரவான். தன்னைப் பலியிட்டு, தன்னைச் சார்ந்த சமூகத்திற்கு வாழ்வளித்தவன். இத்தகைய தொன்ம உருவாக்கத்தை நிகழ்த்திக்காட்டுதல் மற்றும் அரவானின் தியாக உள்ளத்தைப் போற்றுதல் எனும் நிலையில், தமிழகம் முழுவதும் ஆங்காங்கு அரவான் வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. அரவான் கதைமரபானது வழிபடு மரபாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கூத்தாண்டவர் வழிபாட்டு மரபானது அரவானொடு தொடர்புடையது. இவ்வழிபாட்டு

Koviloor Digital Library

மரபின் கடவுளாகக் கூத்தாண்டவர் இடம்பெறுகின்றார். இதில் அரவானுக்கு வழங்கப்படும் பெயர் கூத்தாண்டவர் என்பதாகும். இவ்வழிபாட்டு மரபானது அரவானை, கிராமதெய்வமாக வழிபடும் பகுதியிலிருந்து தோன்றியதாகும். கோவையில், குறிச்சி கிராமத்தில் நிகழ்த்தப்படும் அரவான் திருவிழா - சடங்குகள், சடங்குகளுக்கும் சாதிகளுக்குமான உறவுநிலை, பார்வையாளர்களின் முன்னிலையில் சடங்கு நிகழ்த்தும்முறை, வழிபாட்டில் காணப்படும் புராணச் சார்பு ஆகியன குறித்து ஆராய்வதாக இவ்ஆய்வுஅமைகின்றது.

அரவான்வழிபாடு

கோவை மாவட்டம், சுந்தராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட குறிச்சி கிராமத்தில் அரவான் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. தொடர்ந்து 8 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமல்லாது, கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்களும், பிற மாவட்ட மக்களும் கலந்துகொள்கின்றனர். 200 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து நிகழ்த்தப்படுவதாகக் கூறப்படும் இவ்வழிபாட்டில், குறிச்சி கிராமத்தில் உள்ள 18 சமூகத்தைச் சார்ந்த மக்களும் ஒருங்கிணைந்து, இவ்வழிபாட்டினைத் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். முன்னர் பாரதப்போரை நினைபடுத்தும் வகையில் 18 நாள் சாட்டாக வழிபாடு நிகழ்ந்துள்ளது. திருவிழாவின் போது வேறு சுபநிகழ்ச்சிகள் கிராமத்தில் கொண்டாடப்படுவதில்லை, கிராமத்து மக்களும் வெளியூர்களுக்குச் செல்லக்கூடாது என்பதனால் மக்களின் வசதிகருதி பின்னர் 8 நாள் வழிபாடாகத் தற்பொழுது நிகழ்த்தப்படுகின்றது.

விழாவிற்கான நாள் குறித்தல்

குறிச்சி கிராமத்தில் ஊர்ப்பொதுக்கோயிலான மாகாளியம்மன் கோயிலில் வழிபடு விழா நிகழ்த்துவதற்கான நாள் குறிக்கப்படுகின்றது. ஊர் முகாமைக்காரரர்கள் என்றழைக்கப்படும், ஊர்க்கவுண்டர், முக்கந்தர், சேர்வைகாரர் ஆகிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும், கிராமத்துக் கணக்குப்பிள்ளைக் குடும்பத்தைச்

Koviloor Digital Library

சேர்ந்தவர்களும் கூடி விழாவிற்கான நாள் குறிக்கின்றனர். இது முதல் வாரம் வெள்ளிக்கிழமை தொடங்கி எட்டாவது நாள் வெள்ளிக்கிழமை நிறைவுறும் வகையில் விழா சாட்டப்படுகின்றது.

விநாயகர் வழிபாடு

முதல் நாள் - கிராமத்தில் உள்ள விநாயகர் கோயிலில் பூசைகள் மேற்கொள்ளப்பட்டு, வெள்ளிக்கிழமை விழா தொடங்குகின்றது. முதுப்பார் சமூகத்தைச் சார்ந்தவர்கள் இப்பூசையைச் செய்து விழாவினைத் தொடங்கி வைக்கின்றனர். விழாவின் நிறைவு பூசையைச் செய்பவர்களும் இவர்களே ஆவர்.

எல்லை கட்டுதல்

ஊர் முதன்மைக்காரரர்கள் குறிச்சி கிராம எல்லைக்குச் சென்று எட்டு திசைகளிலும் பூசைகள் செய்து எல்லை கட்டுதல் சடங்கினைச் செய்கின்றனர். குறிப்பாக நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இதனை நிகழ்த்துகின்றனர்.

உயிர் பிடித்தல்

ஆத்தி மரத்தாலாகிய பாச்சாங்கோளில் அரவான் சாமி உயிர் பிடித்தல் நிகழ்ச்சி நிகழ்த்தப்படுகின்றது. ஆத்தி நாரால் சுற்றப்பட்ட இக்கோளில் சாமிக்கு உயிர் ஏற்றப்பட்டு அரவான் கோயிலில் வைத்து 5 நாட்கள் தொடர்ந்து பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன. சேர்வைக்காரர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த உயிர் பிடிக்கும் உரிமை உடையவர்களாகப் பூசைகளை மேற்கொள்கின்றனர். அரவான் கட்டுவதற்கு பிள்ளைமார் சமூகம் ஆத்திநார் கொடுக்கின்றனர், ஆஞ்சனேயர் கட்டுவதற்கு உடையார் சமூகம் ஆத்தி நார் கொடுக்கின்றனர்.

கம்பம் நடுதல், பூ ஓடு இடுதல்

அரவான் கோயிலின் முன்னர் கம்பம் நடுதல், பூ ஓடு இடுதல் ஆகியன நிகழ்த்தப்படுகின்றன. தேவேந்திரகுல சமூகத்தினர் கோயிலுக்குக் கம்பம் கொடுத்து அதனை நடுபவர்களாக உள்ளனர். உடையார் சமூகத்தினர் கோயிலில் பூ ஓடு இடுபவர்களாக உள்ளனர்.

Koviloor Digital Library

அம்மையை அழைத்தல்

நான்காம் நாள் திங்கட் கிழமை - கிராமத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ள பொம்மி அம்மன் சிலைக்கு ஆற்றல் ஏற்றும் நிகழ்வு நிகழ்கின்றது. இதற்கு 'அம்மையை அழைத்தல்' என்று பெயர்.

அரவான் ஒப்படைத்தல், காவல் காத்தல்

ஐந்தாம் நாள் செவ்வாய்க் கிழமை - அரவான், ஆஞ்சநேயர் சிலைகள் குறிச்சி கிராம, பெருமாள் கோயிலுக்கு எடுத்துவரப்பட்டு உடையார் சமூகத்தினர், ஊர்க்கவுண்டர் சமூகத்தினரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர். அரவான், ஆஞ்சநேயர் ஆகியோரை உப்பிலிய நாயக்கர் சமூகத்தினர் இரவு முழுவதும் கோயிலில் வைத்து, உறங்காமல் காவல் காக்கின்றனர்.

உருமால் கட்டு சீர்

ஆறாம் நாள் புதன் கிழமை -அதிகாலை 4 மணியளவில் அரவான்,ஆஞ்சநேயர் சிலைகள் ஊர் முகாமைக்காரரர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அரவானுக்கு, திருமணத்திற்கு முந்தைய நாள் மணமகனுக்குச் செய்யப்படும் 'உருமால் கட்டும் சீர்' பெருமாள் கோயிலில்செய்யப்படுகிறது. அலங்காரம் செய்யப்பட்டு, அணிகலன்கள் பூட்டப்படும் அரவான், குறிச்சி குளக்கரை விநாயகர் கோயிலுக்குஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீர்த்தமாடுதல் நிகழ்வுக்குப் பின்னர் சீர் செய்தல் நடத்தப்படுகின்றது. 6 சமூகத்தைச் சார்ந்தவர்கள் (தேவர், வண்ணார், நாவிதர், ஆசாரி, செட்டியார், அருந்ததியர்) இங்கு அரவானுக்குச் சீர் செய்கின்றனர். அரவானை கிராமத்தின் மாப்பிள்ளையாகவே பாவித்து, இச்சீர் செய்யும் நிகழ்வினைச் செய்கின்றனர் கிராமத்தார். அரவானை மாப்பிள்ளையாக அலங்காரம் செய்யும் பொழுது ஆடை கொடுத்தல், உருமால் கட்டுதல் ஆகியவற்றை வண்ணார் சமூகத்தைச் சார்ந்தவர்களே செய்கின்றனர். முக்குந்தர் சமூகம் அணிகலன்களை வழங்கக்கூடியவர்களாகவும், உடையார் சமூகம் அலங்காரம் செய்யும் உரிமை உடையவர்களாகவும் உள்ளனர். அரவான் மற்றும் ஆஞ்சநேயர் உருவாக்கத்திற்கான

Koviloor Digital Library

பாச்சாக்கோள் செய்தல், கம்பம் செதுக்குதல் ஆகிய பணிகளை ஆசாரி சமூகத்தினர் செய்கின்றனர். அரவான் உருவாக்கம், அரவானை மாப்பிள்ளையாக அலங்காரம் செய்தல், சீர் செய்தல் ஆகிய நிகழ்வுகளில் கிராமத்தைச் சார்ந்த எல்லா சமூகத்தினரும் இடம்பெறுகின்றனர். அரவான் உருவமானது சிங்கார மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பெண்கள் நளங்கு சீர் செய்கின்றனர். பின்னர் அரவான் உருவம் அரவான் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

திரி, ஆணிப் படுகை எடுத்தாடல்

அரவான் கோயிலில் பூசாரி, காவல் தெய்வமாகிய முனியப்ப சாமியாகக் கையில் திரியை வைத்துக் கொண்டு, காலில் ஆணிப் படுகை(செருப்பு) அணிந்து வலம்வருகின்றார். இது 'திரிசுத்தி விளையாடுதல்' என்றழைக்கப்படுகின்றது. பின்னர் பூசாரி சமூகத்தினரின் கோயிலுக்கு அரவானை எடுத்துச் சென்று, அங்கு உப்பிலிய நாயக்கர் சமூகத்திலிருந்து அரண்மனை மாவிளக்கு முதலில் எடுத்துவரப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து, பிற சமூகத்தைச் சார்ந்தவர்களும், பொதுமக்களும் மாவிளக்கு எடுக்கின்றனர்.

அரவான் திருமண நிகழ்ச்சி

புதன் கிழமை, இரவு 7 மணியளவில் அரவான் திருமண நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. முகூர்த்தக் காலிடுதல், சாலுங்கரகம் (கும்பம்) எடுத்தல், தீர்த்த நீர் எடுத்து வருதல் நிகழ்வுகளைத் தொடர்ந்து உப்பிலி நாயக்கர் சமூகத்திலிருந்து பொம்மி அம்மனை அழைத்து வருகின்றனர். மணமேடையில் கங்கணம் கட்டுதல், திருமண நிகழ்வு, மொய் எழுதுதல் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து அரவான், பொம்மியம்மன், ஆஞ்சநேயர் உருவங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பண்டாரம் சமூகத்தைச் சார்ந்தவரின் வீட்டில் 'பள்ளியறை விடுதல்'நிகழ்ச்சியைச் செய்கின்றனர். பாரதப் போரில் களப்பலி இடப்படும் அரவானுக்குப் பெண் கொடுக்க ஒருவரும் முன்வராத நிலையில் நாயக்கர் சமூகத்தினர் எடுத்து வளர்க்கும் ஆதரவற்ற பெண்ணாகிய பொம்மியம்மனுக்கு எடைக்கு எடை பொன்

Koviloor Digital Library

கொடுப்பதற்குச் சம்மதம் பெறுவதும், நாயக்கர் சமூகத்தினர் பெண் வீட்டாராக, பண்டாரம் சமூகத்தினர் மாப்பிள்ளை வீட்டாராகக் கருதப்படுவதும் இக்கிராம வழிபாட்டு மரபாக உள்ளது. முதல் நாள் வரை ஆத்தி நார், வாழை மட்டை கொண்டு உருவாக்கப்படும் அரவானின் முகம் திருமண நிகழ்வில் வெள்ளி முகமாக வைக்கப்படுகின்றது. அரவானின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் குறியீடாக இது அமைந்துள்ளது.

அரவான் தேடுதல் நிகழ்ச்சி

ஏழாம் நாள் வியாழக்கிழமை - களப்பலி இடப்படும் அரவானை ஆஞ்சநேயர் பலஇடங்களில் தேடி, பின்னர் கண்டறிந்து கையோடு அழைத்து வந்துபோர்க்களத்தில் விட்டுச்செல்வது இங்கு வழிபாட்டு மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. வியாழக் கிழமை காலை அரவான் தேடுதல், அரவான் கண்டறிதல், தீர்த்தமாடுதல், சீர் செய்தல் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து இரவு, ‘சாமி கட்டுதல்’ செய்யப்படுகின்றது. அரவான் தலைப்பகுதி மட்டும் மண்ணால் செய்யப்படுகின்றது.திருவிழாவில் உடையார் சமூகத்தினர் முகம் செய்தல் பணியைமேற்கொள்கின்றனர்.

அரவான் களப்பலி

எட்டாம் நாள் வெள்ளிக் கிழமை - காலை அரவான் கண் திறப்பு பூசை நிகழ்த்தப்படுகின்றது. பண்டாரர், ஊர்க்கவுண்டர், சேர்வைகாரர், தேவேந்திரகுல வேளாளர், தேவர், கோனார், போயர், அருந்ததியர் ஆகிய சமூகத்தைச் சார்ந்தவர்களது அழைப்பின் பேரில் அவரவரது மேடைகளுக்குச் சென்று வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. பின்னர் களப்பலிக்குச் செல்லும் அரவான் சாமிக்கு கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலில், கிருஷ்ணர் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. பின்னர் கிராமத்து மணியகாரர் வீட்டிற்குச் சென்று பூசைகள் செய்யப்படுகின்றன. குறிச்சி குளத்து விநாயகர் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, உடையார் சமூகத்தினரால் அங்கு ‘கட்டுச் சோறு சீர்’ செய்யப்படுகின்றது. சிறய அளவுத் துணியால் சோறு மூட்டையாகக் கட்டப்பட்டு அதை அரவானின் கையில் கட்டுகின்றனர். பின்னர் அங்கிருந்து

Koviloor Digital Library

குறிச்சி போயர், வேளாளர், பண்டாரம் சமூகத்தினரின் மேடைக்கு எடுத்துச்சென்று தேங்காய் உடைத்து பூசைகள் செய்யப்படுகின்றன.பின்னர் அரவான் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பூசைகளை முடித்து இரவு பொம்மியம்மனுடன் களப்பலி மேடைக்கு அரவான் எடுத்துச் செல்லப்படுகின்றார். அங்கு காளி கோயிலிலிருந்து வருகைதந்திருக்கும் வீரகாளி முன் அரவான் களப்பலி இடப்படுகின்றார். பண்டாரம் சமூகத்தினர் களப்பலி சடங்கினைச் செய்கின்றனர். தலை நீக்கம் செய்யப்படுவதில்லை, பெருவிரலால் முகம் அழிக்கும் சடங்கு மட்டுமே நிகழ்த்தப்படுகின்றது. சதை நீக்கும் நிகழ்வாக உடலில் உள்ள வாழைமட்டை களையப்படுகின்றது. வெள்ளைச் சேலை போர்த்தி பொம்மியம்மனை எடுத்துச்சென்றுவிடுகின்றனர். அப்பொழுதே கோயிலில் நடப்பட்ட கம்பம், பூச்சட்டி ஆகியவற்றைக் குளத்தில் இடுகின்றனர். களப்பலி மேடைக்குச் செல்லும் பொழுது தேவேந்திரகுல வேளாளர் உடன் அழுதுகொண்டு செல்கின்றனர். 8 நாட்களும் அரவான் பிறப்பு முதலான அவரது வாழ்க்கை, பாட்டாகப் பாடப்படுகின்றது. கடைசி நாளன்று களப்பலி பாடல் பாடப்படுகின்றது. இதற்காகவே பாட்டுக்காரர்கள் வரவழைக்கப்படுகின்றனர். வளமைச்சடங்காகக் கொண்டாடப்படும் இவ்விழாவில் ஆற்றல் தேக்கிவைக்கப்படும் முகத்தில் உள்ள மண், உடலில் உள்ள ஆத்தி நார் ஆகியன ஊர்மக்களால் அவரவர் வீடுகளில் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

சடங்குகளுக்கும் சாதிகளுக்குமான உறவுநிலை

சாதிகளில் யாருக்கு முதன்மை என்பதை நிரூபிக்கும் வகையில் திருவிழாவில் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. திருவிழாவிற்கு நாள் குறித்தல், திட்டமிடுதல், எல்லை கட்டுதல், உயிர் பிடித்தல் ஆகிய விழாவின் முக்கிய நிகழ்வுகள் பிள்ளைமார், தேவர், சேர்வைகாரர், ஊர்க்கவுண்டர் ஆகியோர் மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு சாதியினருக்கும் ஒரு பணியை நியமிப்பவர்களும் இவர்களே ஆவர். திருவிழாவின் அனைத்து நாட்களிலும் அருந்ததியினர் மேளம் அடிப்பவர்களாக, பண்டாரம் பூசை, சடங்குகளைச் செய்பவர்களாக உள்ளனர், அதிகாரத்தின்

Koviloor Digital Library

அடிப்படையிலான சமூக ஒழுங்கமைப்பைப் பின்பற்றும் சமூக மரபு இங்கு காணலாகின்றது. திருவிழாவின் பொழுது ஒவ்வொரு சடங்குகளைச் செய்பவர்கள் தொழில் அடிப்படையிலும், குறியீட்டு நிலையிலும் சடங்குடன் தொடர்புடையவர்களாக உள்ளனர். சான்றாக, வண்ணார் சாதியினர் அரவானுக்கு ஆடை தயார்செய்து அதனை அணிவிக்கும் உரிமை பெற்றுள்ளனர். அழுக்கை நீக்கி, துவைத்தல் தொழிலாக உள்ளது. கறை நீக்குதல் சமூகத்தை சுத்தமாக்குதல் என்ற குறியீட்டினை உணர்த்தும் வகையில் அவரது பங்களிப்பு உள்ளது. உப்பிலிய நாயக்கர் மாப்பிள்ளைக்கு உருமால் கட்டும் சீரின்போது உருமால் கட்டும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். திருமணத்தின் போது அரண்மனை மாவிளக்கினை முதலில் வீட்டிலிருந்து எடுத்து வருபவர்கள். இவர்களின் பின்னரே பிற சாதியினரும், பொதுமக்களும் மாவிளக்கு சீர் செய்கின்றனர். எல்லை கட்டுதல், அரவானைக் காவல் காத்தல் ஆயிவற்றைச் செய்யும் உரிமை நாயக்கர் சாதியினரைச் சேரும். ஊரின் வளத்தையும் மக்களையும் காத்தல் எனும் குறியீட்டு நிலையிலும் திருவிழாவில் உரிமை பெறுகின்றனர். இங்ஙனமாக ஒவ்வொரு சாதியினருக்கும் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்கு தொழில் நிலையிலும், குறியீட்டு நிலையிலும் ஆராய்வதற்கு இடமளிக்கத்தக்கதாக இவ்வழிபாட்டு மரபு அமைந்துள்ளது.

சடங்கு நிகழ்த்தும் முறை

வழிபாட்டில் ஒவ்வொரு சடங்கையும் ஒவ்வொரு சாதியினர் நிகழ்த்தும்பொழுது சடங்குடன் உள்ளனர். அரவான் 'களப்பலி' சடங்கு நிகழும் போது, தெய்வ ஆற்றலும், கிடைக்கும் வளமையும் அந்த கிராமத்து மக்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்பதற்காக சடங்கில் வெளியூர் மக்களையும், பிற சாதியினரையும் பார்வையாளர்களாக அனுமதிப்பதில்லை, பண்டாரம் சமூகத்தினர் மட்டுமே இச்சடங்கில் இடம்பெறுகின்றனர். தெய்வ ஆற்றல் மிக்கதாக மாற்றப்பட்ட, அரவான் முகம் செய்யப்பட்ட, மண் வெளியூர் மக்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.ஆற்றலைப் புதுப்பித்தல், வளமையைச் சேர்த்தல் எனும் நிலையில்இறுக்கமான உறவுக்கட்டமைப்பு

Koviloor Digital Library

இருப்பதை அறியலாம். இங்கு வழிபாட்டில் களப்பலி அன்று அரவாணிகள் பார்வையாளர்களாக மட்டுமே பங்கேற்கின்றனர். சடங்கில் பங்குபெறுவதில்லை.

வழிபாட்டில் காணலாகும் புராணச் சார்பு

தன் உயிரை பலியிட்டுத் தான் வாழும் சமூகத்திற்கு வெற்றிக்கான நம்பிக்கையையும், பாதுகாப்பையும் வழங்கியவன் அரவான். அத்தொன்மம் மக்கள் வழக்காறாக, வழிபாட்டு மரபாக உள்ளது. களப்பலி செல்லும் அரவானுக்குக் கிருஷ்ணர் மாலை அணிவிப்பதும், ஆஞ்சனேயர் அரவானைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்துவருவதும், பார்ப்பனர் முந்நிலையில் அரவான் திருமணம் நடைபெறுவதும் செவ்வியல் தன்மை உடையதாக உள்ளது.

முடிவுரை

உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றின் இயக்கமும் ஒட்டுமொத்த உடல் இயக்கத்திற்கு உறுதுணையாக இருப்பதைப் போல சமூக அங்கத்தின் ஒருங்கிணைந்த இயக்கம் சமூகத்தின் உறுதியையும், நிலைத்த தன்மையையும் மேம்படுத்தும் என்ற சமூகவியலாளர்களின் கூற்றுக்கிணங்க மக்கள் தங்கள் சாதி உரிமைகளை நிலைநிறுத்தும் விதமாக ஒருங்கிணைந்து சமூகத்தை மேம்படுத்துவதற்கு இவ்வழிபாடு துணைநிற்கின்றது. தன் சமூகத்தைக் காப்பதற்காகத் தன்னையே பலியிட்ட கதைத்தலைவனது கதையை நிகழ்த்திக் காட்டுவதன் மூலமாகத் தம் சமூகத்தின் பாதுகாப்பையும் நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்துகின்றனர் கிராமமக்கள்.

Koviloor Digital Library

வாங்கல் அருள்மிகு மகாமாரியம்மன் திருவிழா வழிபாட்டு மரபுகள்

முனைவர் சு.கார்த்திகேயன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

நாட்டுப்புற மக்களின் வழிபடு தெய்வங்களுள் மாரியம்மனும் ஒன்று. மாரியம்மனை மக்கள் மழைக் கடவுளாகவும், பிணிகளில் இருந்து காக்கும் கடவுளாகவும் ஊரைக்காக்கும் காவல் தெய்வமாகவும் கொண்டு வழிபட்டு வருவதைக் காணமுடிகின்றது. இத்தகைய காவல் தெய்வத்திற்கு நன்றிக்கடனாக ஆண்டிற்கு ஒருமுறை விழா எடுத்துச் சிறப்பு வழிபாடுகள் செய்யும் வழக்கம் மக்களிடையே தொன்றுதொட்டு மரபாகப் பின்பற்றப்படுகின்றது. அவ்வகையில் கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம் வாங்கல் குப்புச்சிபாளையம் கிராமத்தில் இருந்து அருள்பாலிக்கும் வாங்கல் மகாமாரியம்மன் திருவிழா வழிபாட்டு மரபுகள் குறித்த பதிவாக இக்கட்டுரை அமைகின்றது.

மாரியம்மன் வழிபாடு

மாரியம்மன் வழிபாடு தொடர்பாக மக்களிடையே பல மாறுபட்ட கதைகள் வழங்கப்பெற்று வருகின்றன. இருப்பினும் அவற்றிற்கிடையே கதைக்கருவில் ஒத்திசைவு இருப்பதைக்; காணமுடிகிறது. "ஆ.சிங்காரவேலுமுதலியார் மாரியம்மன் வழிபாட்டை இரேணுகாதேவி வழிபாட்டுடன் தொடர்புபடுத்துகின்றார் (அபிதான சிந்தாமணி: ப.1575)"1

மாறிய அம்மன்

மாரியம்மன் முதலில் மாறிய (தன்னுருவம்)அம்மன் என்று வழங்கப்பெற்றுப் பின்னாளில் மாரியம்மன் என மருவி வழங்கப்பெற்றதாக அறியமுடிகின்றது.

"சமதக்கனி முனிவனின் தேவியான இரேணுகா கங்கைக்குச் செல்ல அவ்விடம் அந்தரத்தில் சென்ற சித்திரசேனன் என்னும்

Koviloor Digital Library

கந்தர்வனின் மேல் கவனம் சென்று கற்புக்குலைந்து கணவன் முன் நிற்கிறாள். முனிவர் தன் மகன் பரசிராமனை நோக்கித் தாயைக் கொலை செய்க என்கிறார். தந்தையின் சொற்படி தாயைக் கொலைபுரியச் செல்லுகையில் பலர் விலக்க (மீனவர், வண்ணார், புலையர்) அவர்களையும், தன் தாயையும் பல துண்டங்களாக வெட்டிக் கொலை செய்து மனக்கவலையுடன் நிற்கிறான் பரசிராமன். மகனின் கவலையை அறிந்த முனிவர் மந்திர நீர் தந்து தாயை எழுப்பிவரக் கூறுகின்றார். மந்திர நீரைப் பெற்ற பரசிராமன் பல உடல்களுடன் கலந்திருந்த தன் தாய் ரேணுகையின் தலையுடன் வேறு மூன்று உடற்பாகங்களை (இடுப்புப் பகுதி வரை உள்ள ஒருபாகம், இடுப்பில் இருந்து கழுத்து வரையிலான மற்றொரு பாகம், தாய் இரேணுகையின் தலைப்பாகம்) இணைத்து விடுகிறான். உயிர்பெற்று எழுந்த இரேணுகா கணவரைச் சென்று காண அவர் 'நீ 'இருடி' (ஈருடல்களைப் பெற்றவள்) அதனால் இனி கிராமங்களில் தங்கி மக்களுக்கு ஏற்படும் நோய்களைப் போக்கி அவர்தரும் பலியைப் பெறுவாயாக"2 என்று கூறியதாகப் புராணக் கதை-யிடம் பெறுகிறது.

மேலும் "மாரியம்மன் பார்வதி தேவியின் மாறுவடிவம் என்றும் சமதக்னி முனிவர் சிவபெருமானே"3 என்றும் மக்களிடையே கதை வழங்கப்பெற்று வருவதையும் காணமுடிகின்றது. "மாரியம்மனின் நான்கு ஆண்பிள்ளைகளுள் ஒருவரே (தன்னுவன், அனுவன், விசுவாவசு, பரசிராமன்) பரசிராமன் என்றுங்கூறுவர்."4 இங்ஙனம் மாரியம்மன் குறித்த கதைப்பதிவுகள் மக்களிடையே சிறிதும், பெரிதுமாகப் பல திரிபுகளுடன் சொல்லப்பட்டு வருவதை அறியமுடிகின்றது.

வாங்கல் மகாமாரியம்மன் திருவிழா மரபுகள்

வாங்கல் காவிரியின் தென்கரையில் பதினெட்டுக் கிராமங்களைத் தன்னுள் கொண்டதாக அமைந்துள்ள கழனியூராகும். இவ்வூரைச் சார்ந்த நிலையில் ஆண் இறைகளைவிடப் (ஆண் தெய்வங்கள்) பெண் இறைகளே மிகுதியும் இடம் பெற்றிருக்கக் காணமுடிகின்றது. அவ்வகையில் மாரியம்மன், வாங்கலம்மன், துர்கையம்மன், அங்காளம்மன்,

Koviloor Digital Library

பகவதியம்மன் (பொதியில் அம்மன்-பௌதியம்மன்) காமாட்சியம்மன், பெரியக்காள், மங்கம்மாள் சகோதரிகள், அரிய நாச்சியம்மன், பொற்கொடியாள் (ஹைமவல்லி-சிவன் கோயில் அம்மன்), தங்காயி அம்மன், பெரியகாண்டியம்மன் என்று தனித்த கோவில்களில் அருள்பாலித்திருக்க அறியமுடிகிறது.

மகாமாரியம்மனுக்குத் திருவிழா ஆண்டுதோறும் பங்குனி மாதம் இறுதியில் தொடங்கப்பெற்று சித்திரை மாதம் பத்து தேதிக்குள் 18 நாட்கள் நடைபெறுகின்றது. இவ்விழா காப்புக்கட்டு தொடங்கிக் காப்பு அவிழ்ப்பு வரை பல நிகழ்வுகளைக் கொண்டது.

கம்பம்

மாரியம்மன், தங்காயி அம்மன், என்னும் பெண் தெய்வங்களுக்கு மட்டும் கம்பம் நட்டு வழிபாடு இயற்றும் மரபு இவ்வட்டாரப் பகுதிகளில் மிகுதியும் காணப்படுகின்றது.

கம்பம் என்பது வேப்பமரத்தில் மூன்று கிளைகளுடன் இயற்கையாய் அமைந்த பகுதியைக் குறிக்கும். இக்கம்பம் மாரியம்மனின் கணவனின் குறியீடாகப் பார்க்கப்பெறுகின்றது. இதனைப் பின்வரும் பழமரபுக் கதையால் அறியமுடிகின்றது.

"அரச குலத்தில் தோன்றிய பெண்ணான மாரியம்மன் தாழ்ந்த குலத்தில் பிறந்த ஒரு வீரனை விரும்பி எவருக்கும் தெரியாமல் திருமணம் செய்து கொள்கின்றாள். பெண்ணின் (மாரியம்மனின்) திருமணம் பற;றிய தகவல் 15-நாட்களுக்குப் பிறகு மன்னருக்கு தெரிய வருகின்றது. கடுங்கோபம் கொண்ட மன்னர் மகளின் கணவனைக் கொல்ல முற்படுகின்றார். பின் மகளின் (மாரியம்மனின்) வேண்டுகோளின்படி அவள் கணவன் கொல்லப்படாமல் பிரித்து வைக்கப்படுகிறான். பதினைந்து நாள் மாரியம்மனுடன் வாழ்ந்த கணவனின் அடையாளமாகக் (குறியீடாக) கம்பம் நடப்படுகிறது."5

கம்பம் குறித்து மற்றொரு மரபுக்கதையும் வழங்கப்படுகிறது. "திருமண முடிந்த சில நாட்களில் மாரியம்மனுக்கும் அவரது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில் கோபமுற்ற மாரியம்மன் அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த எண்ணெய்ச்

Koviloor Digital Library

சட்டியைத் தூக்கிக்; கணவனின் தலையில் போட தலை மூன்றாகப் பிரிந்துவிடுகின்றது. அதன் அடையாளமாகவே மூன்று பிரிவுகளை உடைய வேப்பங்கம்பம் நடப்படுகின்றது"6 என்றும் கூறுகின்றனர்.

கம்பம் தேர்வு

திருவிழாவின் காப்புக்கட்டு நிகழ்விற்குச் சிலநாட்களுக்கு முன்னர் கோவிலின் பரம்பரைத் தோட்டியால் கம்பம் தெரிவு செய்து வைத்துக் குறித்த நாளுக்கு முதல்நாள் வெட்டிக் கோயில் வளாகத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. சிலர் "கம்பம் இருக்கும் இடத்தை மாரியம்மனே தோட்டியின்; கனவில் சென்று சொல்லுவதாகவும்"7 கூறுவது உண்டு.

கம்பம் செப்பம் செய்தல்

திருவிழா காப்புக்கட்டு அன்று காலையில் நல்ல நேரத்தில் கோவில் பரம்பரை ஆசாரியால் கம்பம் செப்பம் செய்யப்படுகின்றது. கம்பத்தில் ஆசாரியால் ஓர் ஆண்உருவம்; வடிக்கப்பெறுகின்றது. இந்த ஆண்உருவம் மாரியம்மனின் கணவனின் உருவம் என மக்களால் இன்றளவும் நம்பப்பட்டு வருகின்றது.

காப்புக் கட்டுதல்

கம்பம் நடும் முன்பு காப்புக்கட்டு என்னும் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. காப்பு என்பது விரலிமஞ்சள் கிழங்கை மஞ்சளில் தோய்த்து கயிறில் கட்டுவதாகும். இக்காப்பானது மாரியம்மனின் மூலவர் சிலையின் வலக்கரம், பஞ்ச உலோகச்சிலை, பலிபீடம், கம்பம், பூசாரியின் வலக்கை என அனைத்திலும் கட்டப்படுகின்றது. பிறகு வைக்கோல் பிரியால் வேப்பிலை, மாயிலை சேர்த்து ஊரைச்சுற்றிய முக்கிய நுழைவுகளில் கட்டப்படுவதையும் காணமுடிகின்றது.

கம்பம் நடுதல்

செப்பம் செய்யப்பட்ட கம்பத்தில் காப்பு, சிவப்பு நிறத்தால் ஆன துணி, வெள்ளியால் ஆன உலோகக்கம்பி, காதோலைக் கருகமணி, நவதானியம் போன்றன கட்டப்பெற்றுக் காவிரி

Koviloor Digital Library

ஆற்றுக்கு அருகில் ஓடும் பெரிய கால்வாயில் முழுக்கு செய்யப்பட்டுப் பூசை செய்யப்படுகின்றது. பூசையின் முடிவில் கம்பத்தின் அருகில் தீமூட்டப்படுகின்றது. பறையிசையின் முழக்கத்தோடு அருள்வந்த பூசாரி கையில் வைத்திருக்கும் பழமையான சாட்டையால் கம்பத்தின் காவலர்களாக வழிவழியாகச் சொல்லப்பெறும் அம்பலக்காரரர்களில் (முத்துராஜா வகுப்பினர்-காவல்காரரர்கள்) மூத்தவரையும் கோவில் தோட்டியையும் அடித்து தீயை மிதித்து ஊர்க்காவலுக்கு உறுதிகொடுத்துக் கம்பத்தைத் தூக்கிக் கொள்ள கோவிலுக்கு அழைத்து வரப்பெறுகிறார்.

சாட்டையால் அடிக்கும் வழக்கமானது மாரியம்மனால் முற்காலத்தில் "மேற்படியார்களின் முன்னோர்களிடம் கம்பத்தின் காவலுக்கும், ஊரின் காவலுக்கும் சாட்டையால் அடித்து வாக்குறுதி பெற்றதின் அடையாளமாகக்"8 கூறப்படுகின்றது.

அலங்கரித்துக் கொண்டு வரப்படும் கம்பம் தொடர்ந்து கோயிலின் உட்சுற்றை வலம் வந்து கோயிலின் மகா மண்டபத்தை அடைகின்றது. மகாமண்டபத்தில் கருவறைக்கு எதிரில் இடம் பெற்றுள்ள இரண்டாவது பலிபீடத்தை நகர்த்தி விட்டு கம்பம் அங்கு நடப்படுகின்றது. கம்பம் நடும் முன் ஆட்டுக்கிடாய்க் குட்டியின் காதில் சிறிது அறுத்துக் கம்பத்திற்கப் பலிகொடுக்கப்படுகின்றது.

கம்பத்திற்கு நீர் ஊற்றி வழிபாடு

நாள்தோறும் ஊர்மக்கள் குழுவாகக் காவிரி ஆற்றுக்குச் சென்று நீராடிய பின்னர் வேப்பிலை மஞ்சள் கலந்த தூய நீரைக் கம்பத்திற்கு ஊற்றி அம்மனையும் கம்பத்தையும் வழிபாடு செய்கின்றனர். இந்நிகழ்வு திருவிழாவின் இறுதிநாள் வரையில் நடைபெறுகின்றது.

படிவிளையாடும் பூசை

திருவிழா காப்புக்கட்டிற்குப் பிறகு நாள்தோறும் சிறப்பு பூசைகள் செய்யப்பட்டு வழிபாடு நிகழ்த்தப்பெறுகின்றது. திங்கட்கிழமையன்று காப்புக் கட்டுவது வழக்கம். அதைத்தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை முதல் மாரியம்மன்

Koviloor Digital Library

வாங்கலைச் சார்ந்த 18-கிராமங்களுக்கும் பயணம் மேற்கொண்டு வீடுதோறும் செய்யப்படும் பூசையை ஏற்றுக் கொள்கின்றாள். இதற்குப் 'படி விளையாடும் பூசை' என்று பெயர். மாடக்குழி போன்ற அமைப்பிலான தட்டியில் மாரியம்மனின் வெள்ளியால் ஆன குடை, முகம், காது, கழுத்து, மார்பகங்கள், இடுப்பணி போன்றவை வைத்து அலங்கரிக்கப்படும். அவ்வடிவத்தையே காப்புக்கட்டியான பூசாரி துணைமைப் பூசாரிகள் சூழப் பறையோசையுடன் வீடுகள் தோறும் எடுத்துச் செல்வார்.

ஒவ்வொரு வீட்டிலும் பூசை அறையில் வேப்பிலையால் அலங்கரிக்கப் பெற்ற பலகையின் மீது அம்மனை வைத்துப் பூசை செய்யப்படும். பூசையில் துளிர் மாவு, இளநீர், பானகம், பால் போன்றவை இடம்பெறும். அந்தணர் குடியிருப்பில் தொடங்கப்பெறும் படிவிளையாடும் பூசையானது 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது.

மஞ்சள் நீர் விளையாட்டு

படிவிளையாடும் பூசையின்போது பூசாரி உட்பட அனைவரின் மீதும் வீடுதோறும் வேப்பிலை, மஞ்சள் கலந்த நீர் ஊற்றப்படுகின்றது. பிறகு மாமன், மைத்துனர் உறவுடைய ஆண் பெண் என இருபாலரும்; ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீரை ஊற்றி விளையாடும் வழக்கம் நடைபெறுகின்றது.

தேர் நிலை நாட்டல்

காப்புக் கட்டிய 15 ஙீ ஆம் நாள் கோவிலின் முன்பு தேர்நிலை நாட்டப்பெற்று வழிபாடு செய்யப்படுகின்றது. இது ஓடாத தேராக கோவிலின் எதிரில் அமைக்கப்படுகின்றது.

நேர்த்திக்கடன்கள்

காப்புக் கட்டிய 16, 17, 18, (திங்கள், செவ்வாய், புதன்) ஆகிய மூன்று நாட்கள் திருவிழாவின் முக்கிய நாட்களாகக் கருதப்படுகின்றது.

16-ஆம் நாள் திங்கள் அன்று மக்கள் அம்மனிடம் வைத்த வேண்டுதல்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நாளாக அமைகின்றது. மக்களின் குறைகளை அம்மன் நிவர்த்தி (தீர்த்தல்)

Koviloor Digital Library

செய்தமையால் அவளுக்கு நன்றிக்கடன் செலுத்துகின்றனர். நிவர்த்திக்கடன் என்னும் சொல்லே காலப்போக்கில் மருவி நேர்த்திக்கடன் என வழங்கப்பெற்றதாகக் கருதமுடிகிறது.

நேர்த்திக்கடன்களில் அக்னிச்சட்டி எடுத்தல், அலகு குத்திக்கொள்ளுதல் (நாக்கு அலகு, கன்னத்தலகு, 1008 அலகு (உடல்முழுவதும்) பறவைக்காவடி, முதுகுத் தோலில் கொக்கி மாட்டித் தேர் இழுத்தல்) உருவங்கள் எடுத்தல், (ஆடு, மாடு, நாய், கை, கால், குழந்தை வடிவங்கள்) கரும்பால் தொட்டிகட்டிப் பிள்ளையைத் தூக்கி வருதல், கரும்புள்ளி, செம்புள்ளி குத்திவருதல் (மனிதர், ஆடு, மாடு) போன்றவை செலுத்தப்படுகின்றன. இச்சடங்குகளை மக்கள் காப்புக்கட்டு முதல் கடுமையான விரதம் இருந்து மேற்கொள்கின்றனர்

வீட்டில் மாரியம்மன் வழிபாடு

17-ஆம் நாள் செவ்வாய் அன்று பலிபூசை நடைபெறுகின்றது. அன்றே மக்கள் தங்கள் வீடுகளில் மாரியம்மனுக்குத் தனித்தனியே வழிபாடு செய்கின்றனர். (மாரியாயி கும்பிடுதல்) இவ்வழிபாட்டின்போது வீட்டின் வழிபாட்டு அறைச் சுவரில் கம்பம் போன்று வரைந்து அதன் முன்பு வேப்பிலைக்கரகம் (மஞ்சள் கயிறு, தாழைமடல், மல்லிகைப்பூ) அமைத்து மூன்று வாழையிலைகளில் படையலிடப்படுகின்றது.

இப்படையலானது மாரியம்மனின் மூன்று உடற்பாகங்களுக்கானதாக நம்பப்படுகின்றது. முதற்படையலில் (தலைப்பகுதிக்கு) துளிர்மாவு, இளநீர், பானகமும், இரண்டாவது படையலில் (கழுத்து முதல் வயிற்றுப் பகுதிக்கு) தயிர்சாதமும் (உப்பில்லா பச்சை நெல் சாதத்தில் சிறிய வெங்காயம், பச்சைமிளகாய், தயிர் கலந்தது) மூன்றாவது படையலில் (இடுப்பு முதல் பாதம் வரையிலான பகுதிக்கு) கருவாட்டுக் குழம்புடன் சாதமும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

மாவிளக்கு பூசை

செவ்வாய்க்கிழமையன்று மாலை பெண்கள் வீடுதோறும் பச்சரிசி மாவு, வெல்லம், எள், பொட்டுக்கடலை, ஏலக்காய் சேர்த்துப் பிசைந்த மாவில் விளக்கு அமைத்து எடுத்துச்சென்று

Koviloor Digital Library

கோவிலில் அம்மனை வழிபாடு செய்வர். இந்நிகழ்வில் பல இசை முழக்கங்களும், நாட்டுப்புறக் கலைகளும் இடம்பெறும்.

வடிசோறு

வீட்டில் படைக்கப்பெற்ற (மாரியம்மன் வழிபாட்டில்) உணவினை மக்கள் வழிபாடு முடிந்ததும் (எச்சில்; படாமுன்) அம்மனுக்கு ஒரு தூக்குச்சட்டியில் எடுத்து வந்து கோவிலில் கொடுத்துவிட்டுச் செல்வர். இதற்கு வடிசோறு என்னும் பெயர் வழங்கப் பெறுகின்றது. இந்நிகழ்வு புதன் கிழமையன்றும் சில வீடுகளில் கடைபிடிக்கப்படுகின்றது.

காப்பு அவிழ்ப்பு

18-ஆம் நாள் (புதன்) அன்று மாலை நல்ல நேரத்தில் காவல்காரர்கள் சமூகத்தின் துணையோடு காப்பு அவிழ்ப்பு என்னும் நிகழ்வு நடைபெறுகின்றது.

கம்பம் பிடுங்குதல்

காப்பு அவிழ்ப்பிற்குப் பிறகு பூசாரி, தீ மிதித்து சாட்டையால் அடித்து (அம்பலக்காரரர்கள் மற்றும் தோட்டிகளை) கோவிலை அருள் கொண்ட நிலையில் வலம் வந்து கம்பத்தின் அருகில் நிற்கின்றார். அங்குத் தயார் நிலையில் வைக்கப்பெற்று இருக்கும் தயிர் சாத மூடை கம்பத்தில் கட்டப்பெறுகிறது. பிறகு அங்கு நிறுத்தப்பெற்று இருக்கும் ஆட்டுக்குட்டியின் தலை அறுக்கப்படுகிறது. அடுத்துக் கம்பம் பிடுங்கிய உடன் ஆட்டின் தலை கம்பக் குழியில் இடப்பட்டுப் பலிபீடத்தால் மூடப்படுகின்றது.

கம்பம் - பயணம்

பிடுங்கப்பெற்ற கம்பம் கோவிலை வலம் வந்து வெளியில் கொண்டு வரப்பெறுகின்றது. கோவிலின் வாசலில் அலங்கரித்து வைக்கப்பெற்றிருக்கும் தட்டிப் பூப்பந்தலின் கீழ் கம்பம் காவி-ரியை நோக்கி கொண்டு செல்லப்படுகின்றது. வழி முழுவதும் மக்களின் மல்லிகைப்பூ வழிபாட்டோடு கொண்டு செல்லப்படும் கம்பத்திற்கு ஆற்றில் விடும் முன் பூசை நடைபெறுகின்றது. பூசை முடிந்தவுடன் கம்பத்தில் கட்டப்பெற்றிருக்கும் தயிர்சாத மூடை

Koviloor Digital Library

அவிழ்க்கப்பெற்று தட்டிப்பறித்தல் நிலையில் (நான் முந்தி நீ முந்தி என்னும் தன்மையில்) பங்கிட்டு உண்ணப்படுகின்றது. பிறகு கம்பம் ஆற்றில் விடப்படுகின்றது.

மாரியம்மன் தன் கணவனுடன் (கம்பம்) 18 ரீ நாட்கள் மட்டும் மகிழ்ச்சியாக வாழ்ந்து, பின் ஆண்டு முழுவதும் தனிமையில் இருந்து மக்களைக் காத்து வருவதாக நம்பப்படுகிறது. இதில் இராசிபுரத்தில் உள்ள மாரியம்மன் மட்டும் ஆண்டு முழுவதும் கம்பத்துடன் இருப்பதால் நித்திய சுமங்கலி மாரியம்மன் என அழைக்கப்படுவது நோக்கத்தக்கதாகும்.

இவ்விழாவில் இடம்பெறும் பல்வேறு விதமான வழிபாட்டுச் சடங்குகளின் அடிப்படையில் மாரியம்மன் சார் தொன்மக்கூறு இன்றளவும் நிலைபெற்று மக்களால் தொடர்ந்து காக்கப்பெற்று வருவது சிறப்பான ஒன்றாகின்றது. மேலும், இதன்வழி மாரியம்மன் வழிபாடு குறித்த தொன்மம் சார்ப்பதிவுகளை வைதீகம் சாராத் தளத்தில் நின்று ஆராயின் புதிய பல மெய்மைகளைப் பெறலாம் என்பதும் இவண் கருதத்தக்கது.

சான்றெண் விளக்கம்

1. சிங்காரவேலு முதலியார். ஆ – அபிதானசிந்தாமணி ப. 1575
2. சிங்காரவேலு முதலியார். ஆ, மற்றும் தகவல் க.தினேஷ்; பூசாரி த.பெ. கதிர்வேல் (ப. 249)
3. சிங்காரவேலு முதலியார். ஆ – அபிதானசிந்தாமணி ப. 249
4. மேலது – ப. 249
5. தகவல் – தினேஷ்; . க பூசாரி த.பெ. கதிர்வேல்
6. தகவல் – மல்லிகா. சு. க.பெ. சுப்பிரமணியன்
7. தகவல் – தளபதி. க. பூசாரி த.ஃபெ. கண்ணன்
8. தகவல் – தினேஷ். க பூசாரி த.பெ. கதிர்வேல்

Koviloor Digital Library

ஓடைக்கால் வேட்டை அழகர் சுவாமி

திருமிகு ப. கார்த்திகேயன்,
உதவிப்பயிற்றுநர்,
தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை.

சங்ககாலம் தொட்டு தமிழ் மண்ணில் கோயில் மன்னர்களாலும் மக்களாலும் கட்டி வழிபடப்பட்டு வருகின்றது. மக்களிடம் இறை நம்பிக்கை மிக ஆழமாக இருக்கின்றது என்பதை வெளிக்காட்டும் வகையில் இல்லங்கள்தோறும் இறைவனுக்கு இருப்பிடமும் தெருமுனைகள், திரும்பும் திசைகள் எங்கும் திருக்கோயில்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. அந்தவகையில் ஓடைக்கால் அருள்மிகு வேட்டைய அழகர் சுவாமி கோயிலின் தோற்றம், வளர்ச்சி, அமைவிடம், வழிபாட்டு முறை மற்றும் விழாக்கள் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

கோயில் அமைவிடம்

இராமநாதபுரம் மாவட்டம் இராஜசிங்கம் மங்கலம் வட்டத்தில் வற்றாத தண்புனலைத் தன்சிற்றாடையாய் உடுத்தியோடும் கோட்டைக் கரையாற்று வடகரையில் அமைந்துள்ளது ஓடைக்கால் என்னும் சிற்றூர். அவ்வூரில் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஆலமரத்தின் அருகில் அருள்மிகு வேட்டையழகர் சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

திருக்கோயில் தோற்றம் வளர்ச்சி

ஆரம்ப காலத்தில் ஆலமரத்தின் கீழ் மேடையிட்டு அழகர் மலையில் அருள்பாலிக்கும் கள்ளழகரை நினைத்து விளக்கேற்றி வழிபட்டு வந்தனர். வருடத்தில் ஒருமுறை இவ்வூர் மக்கள் அனைவரும் வண்டிகட்டி, மதுரையில் நடக்கும் சித்திரைத்திருவிழாவைக் காணச்சென்று வருவது பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. அவ்வாறு ஒரு வருடம் ஊர்மக்கள் அனைவரும் மதுரை சித்திரைத் திருவிழாவுக்குச்

Koviloor Digital Library

செல்லும்போது அந்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த திருடர்கள் கால் நடைகள் மற்றும் நவதானியங்களைத் திருடிச்செல்லும் நோக்கில் ஊருக்குள் நுழைய அவர்களால் ஊர் எல்லையில் இருந்த ஆலமரத்தைக் கடந்து ஊருக்குள் செல்ல முடியவில்லை எனவும் அதற்கு மாறாக திருடர்கள் கண்பார்வை இழந்துகைகால்கள் கட்டப்பட்டதுபோல் ஆலமரத்தின் அடியிலேயே அமர்ந்துவிட்டனர். திருவிழா முடிந்து திரும்பிவந்த ஊர் மக்கள் நடந்தவற்றைக் கண்டுவியந்தனர். மேலும், தவறுசெய்தவர்களை மன்னித்து தாங்கள் கொண்டு வந்த அழகர்கோயில் தீர்த்தத்தை அவர்களுக்கு வழங்க அவர்கள் பார்வை பெற்றதாகவும் நடந்த நிகழ்ச்சிக்கு மன்னிப்புக் கேட்டதாகவும் நாங்கள் மட்டுமல்ல எங்கள் சந்ததியினரே இனி இவ்எல்லைக்கு வரமாட்டோம் என உறுதியளித்துச் சென்றதாகவும் முன்னோர்கள் வழி அறிய முடிகிறது.

அன்று முதல் இன்று வரை தங்கள் ஊரில்களவு நிகழாது என்று மக்கள் நம்புகின்றனர். இவ்வூர் மக்கள் வழிபடும் அந்த அழகர் மலைத்தெய்வம் மக்காக இங்கு வந்து அருள் புரிந்ததால் அம்மக்கள் சித்திரைத் திருவிழாக்காண மதுரை செல்லும் வழக்கத்தினைக் கைவிட்டனர். மாறாக, ஆலமரத்திலேயே மாலிருஞ்சோலைமாயவனாக எண்ணி அந்த ஆலமரத்திற்கே பொங்கல் படையல் பூசை என மக்கள் தங்கள் வழிபாட்டினைத் தொடங்கினார்கள் எனவும் சிறிது காலம் கழித்து ஆலமரத்தின் கீழ் மேடையிட்டுக் கல்நட்டு வழிபடும் முறையினை மக்கள் கடைப்பிடித்தனர் என்றும் காலஞ்செல்லச்செல்ல சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் கல்லால் ஆனதிருமேனியும், ஓட்டுக்கொட்டகைக் கோயிலுமாக வளர்ச்சி பெற்று நின்றதாகவும் அறிய முடிகிறது. கடந்த ஆண்டு 12.09.2018 ஆம் நாள் துவிதள விமானம் மற்றும் மகாமண்டபத்துடன் கூடிய கோயில் கட்டி குடமுழுக்கும் அதனைத் தொடர்ந்த புதிய வழிபாட்டு முறைகளும் வகுக்கப்பட்டு இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

திருவிழாக்களும் வழிபாடுகளும்

சித்திரை மாதம் மதுரையில் கள்ளழகர் வைகையாற்றில்

Koviloor Digital Library

இறங்கும் எட்டு நாட்களுக்கு முன் ஊர்மக்கள் இறைவனுக்கு மாவிலை தோரணத்துடன் காப்புக்கட்டும் நிகழ்வு நடைபெறும். முதலில் தெய்வத் திருமேனிக்கும் பின் ஊர்ப்பெரியவர்க்கும் கோயில் பூசாரிக்கும் கைகளில் மஞ்சளுடன் கூடிய காப்புக் கயிறுகட்டப்படும். அன்றிலிருந்து ஏழாம் நாள் இரவில் கோயிலில் அபிடேகங்களும், சிறப்பு வழிபாடுகளும் ஊர்ப்பொதுமக்களால் நடத்தப்பெறும். மறுநாள் அதிகாலை மூன்று மணி அளவில் பூக்குழி இறங்கும் உற்சவத்திற்காக பூவளர்க்கும் நிகழ்வினை மேற்கொள்வர். காலை விடிந்தவுடன் ஊர்மக்கள் கோயிலின் முன்பு பொங்கல் வைத்து வழிபட்டுப் பின்னர் பத்துமணியளவில் காவடி, பால்குடம் போன்றவைகளுடன் பூக்குழி உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறும். அன்று இரவு பத்து மணி அளவில் ஊர் மக்களால் புராண நாடகம் வெகுசிறப்பாக நடத்தப்பெறும். மறுநாள் காலை ஏழு மணியளவில் கட்டப்பட்ட காப்புகள் களையப்பட்டு அருகில் உள்ள நீர் நிலையில் கொண்டு சேர்க்கப்படும். இந்தநிகழ்வோடு சித்திராபௌர்ணமி திருவிழா நிறைவு பெறும்.

முக்கிய விழாக்கள்

சித்திரை மாதம் சித்திராபௌர்ணமி விழாவும், ஆவணி மாதம் வருடா பிடேகம், கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி விழாக்களும், மார்கழி மாதத்தில் அனுமன் ஜெயந்தி விழாவும் இக்கோயிலில் நடைபெறும் முக்கிய விழாக்களாகும். மேலும், ஒவ்வொரு வார சனிக்கிழமையிலும் வார வழிபாடு இன்று வரை நடைபெற்று வருகிறது.

கோயில் அமைப்பும், சிற்ப அமைப்பும்

கலை வேலைப்பாடுகள் நிறைந்த புதிய கோயில் கட்ட ஊர் மக்கள் முடிவு செய்தனர். அதற்காக 2016 ஆம் ஆண்டு சித்திரைத் திருவிழா நிறைவடைந்தவுடன் பழைய ஓட்டுக் கோயிலில் உள்ள தெய்வத் திருமேனிகள் பாலாலயம் செய்யப் பெற்று புதிய இடத்திற்கு மாற்றப் பெற்றது. பழைய கோயில் இருந்த இடத்தில் கிழக்குத்திசை நோக்கிய கருவறை, மகாமண்டபம் மற்றும் துவிதள விமானத்துடன் கூடிய புதிய கோயில் கட்டி

Koviloor Digital Library

முடிக்கப்பட்டது. விமானத்தில் கருடாழ்வார், சிம்மயாளி, மற்றும் தசாவதாரச் சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தில் முகப்பக்கத்தில் தென் பகுதியில் விநாயகர் சிலை, வடபகுதியில் வீர ஆஞ்சனேயர் சிலையும் நடுமையத்தில் வேட்டையழகர் சிலையும் மிகுந்தகலை நயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மண்டபத்தின் மேற்பகுதியில் நரசிம்மர் உக்கிரத்துடன் அமர்ந்த நிலையிலும் வடபகுதியில் திருமால் சாந்த முகத்துடன் அமர்ந்த நிலையிலும் மண்டபத்தின் நான்கு மூலையிலும் கருடாழ்வார் சிற்பம் அமைக்கப்பட்டு கோயில் எழில் மேவும் சுதை சிற்பங்கள் நிறைந்து காட்சி தருகின்றது.

கருவறையில் அருள்மிகு வேட்டையழகர் சுவாமி வலக்கையில் சக்கரமும், இடக்கையில் சங்கும் கொண்டு இரு கரங்களுடன் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். அழகர் திருமேனிக்கு நேர் எதிராக மண்டபத்தின் நடுமையத்தில் கருடாழ்வார் தனது இருகரங்களையும் கூப்பியபடி நின்ற நிலையில் பெரிய திருவடியாகக் காட்சி தருகிறார். அவருக்குப் பின்னால் பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறை சந்நிதியின் வலப்பக்கம் விநாயகர் திருமேனி சேனை முதலியாக அமர்ந்த நிலையிலும் இடப்பக்கம் வீரஆஞ் சனேயர் திருமேனி சிறிய திருவடியாக கையில் கதையுடன் நின்ற நிலையிலும் காட்சி தருகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு 12.09.2018 விளம்பி வருடம் ஆவணி மாதம் 27ஆம் தேதி புதன்கிழமை திருக்குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது.

பயன் அல்ல செய்து பயனில்லை நெஞ்சே
புயன்மலை வண்ணர் புரிந்து உறைகோயில்
வருமலை தவமும் மாலிருஞ் சோலை
திருமலை யதுவே அடைவது திறமே

என்று நம்மாழ்வார் உருகிக் கொண்டாடும் வைணவத்தின் முழு முதற்கடவுளான மாயோனை எந்தவொரு ஆகமவிதியும் இன்றி தங்கள் முன்னோர்கள் கடைபிடித்த சடங்குகள், வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றி வழிபட்டு வருகின்றனர்.

Koviloor Digital Library

வேப்பங்குளத்துத்துக் காளியம்மன்

திருமிகு. **சே. கிரிஜா**
உதவிப்பேராசிரியர் சேதுபாஸ்கரா வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், விசாலயன்கோட்டை

முன்னுரை:

எனது ஊருக்கு அருகில் இருக்கும் பிரபலமான கோவில்களில் வேப்பங்குளத்துக் காளியம்மன் கோவிலும் ஒன்று.பிரமாண்டமும் ஆச்சரியமும் நிறைந்த அந்தக் கோவில் எளிதில் மறக்க இயலாது.

கோவில் முன்தோற்றம்:

பரந்த வெளிப்பரப்பில் அமைந்த இந்தக் கோவில் வெயிலும் மழையும் படும்படி அமைந்து இருக்கிறது. இந்தக் கோவிலைச் சுற்றி பூச்செடிகள் மற்றும்ஆலமரம் உள்ளது. ஊரை விட்டு தள்ளி காட்டுக்குள் உள்ளது.

கோவில் என்றாலே செவ்வாய் வெள்ளிதான் விசேடம் ஆனால் இந்தக் காளி கோவிலில் எல்லா நாளும் விசேடம்தான். இந்த ஊரில் இரண்டு பூசாரிகள் உள்ளனர்.ஒரு வாரம் ஒருவர் மற்றொரு வாரம் ஒருவர் என்று மாறி மாறி பூசை செய்வர். குறை என்று வந்தவர்களுக்குக் கோவிலில் ஒரு சித்தர் இருந்துகொண்டு பரிகாரம் சொல்வர் ஆனால் இந்தக் கோவிலில் அவ்வாறு கிடையாது.குழந்தை இல்லை, திருமணம் தள்ளிப்போதல், குடும்பப்பிரச்சனை போன்ற எல்லாப் பிரச்சனைகளுக்கும் கோவிலில் வேண்டிக்கொண்டு செல்வர்.அடுத்த வாரமே நடந்து விடும். இதனால் இந்தக் கோவில் மிகுந்த சக்தி வாய்ந்தது.ஒரு சிறிய கிராமம் காளி கோவிலின் சிறப்பால் இந்த ஊரும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.பக்தர்கள் தங்கள் பிரார்த்தனை நிறைவேறியஉடன் அம்மனுக்குச் சந்தனக்காப்பு அலங்காரம் செய்தும் பொங்கல் படைத்தும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

வழிபடும் நேரம்:

காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரைபக்தர்கள் வர வர

Koviloor Digital Library

வழிபாடு நடந்து கொண்டே இருக்கும்.

பலி கொடுத்தல்:

அவ்வப்போது கோழி,கிடாய் பலி கொடுப்பர். இந்தக் கோவிலில் தினமும் பூசைதான். கோழி, சேவல், கோவில் மரங்களில் நுற்றுக்கணக்கானவைகள் இருக்கும்.பூசாரி இரை போடுவார்.பாதுகாப்பார்.பக்தர்கள் நேர்த்திக்கடன் செய்ய கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து பலி போடுவர். இதனால் கோவிலில் எப்பொழுதும் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். நேர்த்திக்கடனுக்கு விட்ட கால்நடைகள் தினமும் பூசை நடந்தாலும் குறையாமல் நின்று கொண்டே இருக்கும். இதுதான் அந்தக் கோவிலுக்கும் ஊருக்கும் உள்ள சிறப்பு மனக்குழப்பத்தில் வரும் பக்தர்கள் கோவிலை விட்டு செல்லும் போது மனநிம்மதியோடு செல்கிறார்கள்.

கோவில் குளம்:

இந்தக் கோவில் உருவாகியது ஆயிரம் ஆண்டுகள்.ஆயிரம் ஆண்டுகளாகவே அங்கு குளம் உள்ளது. குளத்தின் பெயர் வானியந்த்தம்மம்.இதனால் வானியந்த்தம்மதுக்காளி என்று பெயர் வந்தது. பூசாரி மட்டுமே குளத்து நீரை பயன்படுத்துவார். எப்பொழுதும் தண்ணீர் வற்றாத நிலையே இருக்கும். மழை இல்லை தண்ணீர் இல்லை என்று வரும்போது ஆண்கள் மட்டும்மே அந்த குளத்தில் இறங்கி தண்ணீர் எடுத்துச் செல்வர். நீராடி விட்டுதான் வருவார்களாம். கோவிலுக்கு வரும் பெண்கள் குளத்துப்பக்கம் வரக்கூடாதாம்.வழிபடுவதும் பத்து அடி தள்ளிதான் வழிபட்டனர்.இவ்வாறு இருப்பதால் தான் அதிக சக்தி வழங்குகிறது.என்று ஊர்மக்கள் கூறுகின்றனர்.

திருக்கோவில் வரலாறு:

சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே வேப்பங்குளத்தில் அமைந்துள்ளது. காளியம்மன் கிழக்கு நோக்கிக் காட்சி அளிக்கிறாள். மற்ற தெய்வங்கள் சற்று தள்ளியே தான் இருக்கிறது.காளி என்பவர் இந்து சமயத்தின் ஒரு பெண் கடவுள் ஆவார்.இவர் சக்தியின் தசமகா வித்யாக்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். பல வருடங்களுக்கு முன் ஒரு சிறிய கல்லை வைத்துதான் ஒரு முதியவர் வழிபட்டார்.

Koviloor Digital Library

காலம் செல்லச் செல்ல அப்பகுதி மக்கள் கோவில் வழிபாடிற்காக வேறு எங்கும் போகக் கூடாது. நம் காளியம்மனை சிலை வைத்து வழிபட்டனர். இவ்வாறு அந்த தலைமுறையில் இருந்துதான் இன்று வரை பூசாரிகள் வழிபாடு செய்து வருகின்றனர்.

திருவிழாக்கள்:

சித்திரை மாதப் புழுதி பத்தரை மாதத்து தங்கம் என்ற பழமொழிக்கு சித்திரை மாதத்தில் திருவிழா கொண்டாடப்படுகிறது. கலைநிகழ்ச்சிகள் மற்றும் பூசை முறைகள் சிறப்புடன் நடைபெறுகிறது.திருவிழா முடிந்த மறுநாள் மஞ்சுவிரட்டு வைக்கப்படுகிறது. மூன்றாவது நாள் வரவு செலவு கணக்குகளை சரிப்பார்ப்பர்.இவ்வாறு ஒவ்வொரு வருடமும் திட்டமிட்டு மறுவருடம் கோவிலுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஊர்மக்கள் கலந்துரையாடல் செய்வர்.

முடிவுரை:

வானியந்தம்மத்துக்காளியம்மனின் வழிபடும் முறையும் சிறப்பும் பற்றி தெளிவான முறையில் தெரிந்து கொண்டோம்.காவல் தெய்வமான கருப்பர் அய்யனாரைப் போன்று காளியம்மனும் காவல் தெய்வம் ஆகும். இவ்வாறுவேப்பங்குளத்தைக் காத்து வருகிறது. ஊரின் சிறப்பு காளியே ஆகும். காளி என்ற பெயர் வடமொழியில் உள்ள காலா பெயரின் பெண் சொல் ஆகும். காளிதேவியானவள் காலத்திற்கும் மாறுதல்களுக்கும் தேவியாகக் கருதப்படுகிறாள்.காளி என்பதற்கு காலம் மற்றும் கருப்பு என்று பொருள் காலனின் துணைவி தான் காளி. இவரே ஆதிபராசக்தி என்றும் அழைக்கப்படுகிறாள். இவரைப் பற்றிய செய்திகள் அதர்வண வேதங்களிலும் தேவி மகாத்மியதிலும் விரிவாக வழங்கப்பட்டுள்ளது. இவரை வழிபடும் முறைகள் பல தந்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. காளிதேவி காலங்களை கட்டுப்படுத்தக் கூடியவர் என்பது இந்துக்களின் நம்பிக்கை. அவர் தெய்வீக பாதுகாப்பாளராகவும் மோட்சம் அல்லது விடுதலையை வழங்குபவராகவும் கருதப்படுகிறார்.

Koviloor Digital Library

கம்பனி சக்தி ஸ்ரீ பூமாரி அம்மன் வரலாறும் நம்பிக்கைகளும்

திருமிகு. பெ. குபேந்திரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

திருக்கோயில்கள் மிகுந்த நாடு தமிழ்நாடு நீண்ட நெடுங் காலமாக இறைவழிபாட்டில் சிறந்து விளங்கும் தமிழகத்தில் பண்டைக் காலந்தொட்டே தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றுவிட்டது. தமிழகத்தில் சுமார் 40,000 கோயில்கள் உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன எனவே மக்கள் ஒற்றுமையோடு வாழ கோயிலும், கோயில் சார்ந்த விழாக்களும் காரணமாக அமைகின்றன. தெய்வ வழிபாட்டில் பெருந்தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இருவகைகள் உண்டு. எல்லா மக்களையும் எளிதில் சென்றடையும் வழிபாடு சிறு தெய்வ வழிபாடே. சிறு தெய்வ வழிபாட்டில் சக்தி வழிபாடு குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். அவ்வகையில் சக்தி வழிபாட்டில் சிறந்ததாக சக்தி ஸ்ரீ பூமாரி அம்மன் திருக்கோயில் விளங்குகின்றது. இக்கோயிலின் வரலாற்றினையும் நம்பிக்கைகளையும் ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

கோவில் அமைவிடம்

சக்தி ஸ்ரீ மாரி அம்மன் திக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில், தேவகோட்டை தாலுகாவிலுள்ள செலுகை பஞ்சாயத்தின் உட்பி-ரிவிலுள்ள கம்பனி என்னும் ஊரில் இக்கோயில் அமைந்துள்ளது.

சக்தி ஸ்ரீ பூமாரி அம்மன் பெயர்க்காரணம்

இத்திருக்கோயிலில் திரு சக்தி பூமாரி அம்மன் முதன்மைத் தெய்வமாக விளங்குகிறாள். சக்தி + ஸ்ரீ + பூமாரி = ஆற்றல், திறமை,

Koviloor Digital Library

பலம், செல்வம், நிறைந்து மக்களைக் காப்பவள் ஆதலால் பூமாரி என அழைக்கப்பட்டாள். சக்தியின் வடிவமே காளி, பராசக்தி, மகாசக்தி, சிவசக்தி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும் சக்தியின் பெயரிட்டே அழைக்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இத்திருக்கோயிலிலும் சக்தி வழிபாடே முதன்மையானதாய் விளங்குகிறது.

சக்தி ஸ்ரீ பூமாரியம்மனின் தோற்றம்

"ஒரு தலத்தைப் பற்றி மக்களால் பெறும் பழங்கதைகளை நல்லிசைப் புலவர்கள், பெரியவர்கள் கேட்டுத் தங்கள் கற்பனையாலும், நாவன்மையாலும் விரித்து யாவரும் விரும்பும் வண்ணம் தொடர் நிலைச் செய்யுளாக்கினர். இவைகள் புராணம் என்னும் பெயரால் வழங்கப் பெறுகின்றன. எனவே பழமை, பழங்கதை போன்றவை புராணம் என வழங்கப்படும்"[1] அவ்வகையில் கம்பனி சக்தி ஸ்ரீ பூமாரி அம்மன் கோயிலின் தோற்றம் பற்றியும் ஒரு பழங்கதை கூறப்படுகிறது.

"அக்காலத்தில் இராமேஸ்வரம் செல்லும் சுவாமிகள் கம்பனி கிராமத்தில் அமர்ந்து செல்வர். இக்கோயில் ஏரியின் நடுவில் இருந்தது அவ்வகையில் ஏரியைச் சுற்றி உள்ள வயல்வெளிக்கு காலையில் முத்து அம்பலம் வகையறா (முன்னோர்கள்) போகும் போது அங்கு ஒரு பெண் இருப்பதைக் கண்டு அந்த பெண்ணிடம் விசாரித்தனர் அவ்வாறு விசாரித்தபோது இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டு கேரளா போகும் போது இருள் விடிந்து விட்டதால் அந்தப் பெண் அங்கேயே தங்கி விட்டாள் என்றும் பின்னர் மூதாதையர் உங்களுக்குச் சம்மதம் இருந்தால் இங்கே இருந்து தங்கும்படி வேண்ட அந்த பெண் தெய்வமாக மாறிவிட்டாள்"[2] என்றும் கூறப்படுகிறது.

"இங்குள்ள கருப்பர் மலையாள கருப்பரான களியன் பூசாரியிடம் ஆட்கொண்டு பின்னால் அவர் கேரளா (மேற்குத் தொடர்ச்சி மலையின் இருக்கையில் அவருடன் வந்ததாகத் தகவல்"[3] குறிப்பிடப்படுகிறது.

Koviloor Digital Library

சிறுதெய்வ வழிபாடு

சிறுதெய்வ வழிபாட்டில் முதன்மையாக இருப்பது அம்மன் தெய்வமாகும். சிறுதெய்வக் கோவில்கள் அமையும் இடங்களாக ஊரின் எல்லைப்புறம், குளக்கரை, கண்மாய்க்கரை, ஊர், மந்தை போன்றவையாகும். "பொதுவாகப் பெண் தெய்வ வழிபாடுகள் உடல்வளம், மண்வளம், மகப்பேறு வளம், பயிற்வளம் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டு நடைபெறும், அதாவது மக்களையும் பயிர்களையும் நோய் வராமல் காத்தல், வந்த நோயிலிருந்து காத்தல், மனநலக் குறையைச் சரி செய்தல், மகப்பேறு வரந்தருதல், பயிரை நன்றாக விளையச் செய்தல் ஆகியவையே பெண் தெய்வத்தின் கடமைகளாக அமைகின்றன"4 என்கிறார் தொ.பரமசிவம். அவ்வகையில் இக்கோயில்,

சிறுதெய்வ வழிபாட்டு நெறிகளைக் கொண்டு கம்பனி சக்தி ஸ்ரீ பூமாரி அம்பாள் கிழக்கு முகமாக இருந்து அருள் புரிகின்றாள். சில தெய்வ வழிபாட்டு முறைகளோடு அருளுகின்றாள் சக்தி ஸ்ரீ பூமாரி அம்பாள்.

திருக்கோயிலின் அமைப்பு

இத்திருக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் பரிவார தெய்வங்களாகிய சங்கிலி கருப்பர், சோனைக் கருப்பர், நெருஞ்சுகுடி பெரிய கருப்பர், சூத்திரகாளி, லாடசந்நியாசி, பேச்சியம்மன், ராக்கச்சியம்மன், காந்தாரி அம்மன் போன்ற தெய்வங்கள் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன.

பூமாரி அம்மனின் விமான அமைப்பு வட்ட வடிவிலும், கருவறை செவ்வக அமைப்பிலும் அமைந்து காணப்படுகின்றது.

கருவறையை அடுத்துக் கருவறையைவிடச் சற்றுப் பெரியதாக அர்த்த மண்டபம் சதுர வடிவில் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நந்தி வாகனமும், முருகன் வாகனமும் கருவறைக்கு நேராக அமைந்துள்ளது.

கருப்பர் சன்னதி தனிக் கருவறை மற்றும் விமானம் கொண்டு அமைந்து காணப்படுகின்றது. இவர் மேற்கு நோக்கி அமர்ந்த நிலையில் கம்பீரமாக காட்சியளிக்கிறார்.

Koviloor Digital Library

ஐந்து ஏக்கர்களைக் கொண்ட திருக்கோயில் தற்போது முள்வேலிகள் கொண்டும் கோயிலைச் சுற்றி மரங்கள் வளர்க்கப் பட்டுள்ளது.

தலத்தீர்த்தமாக கோயிலின் வடக்கு புறத்தில் குடிநீர்க் குளமும் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. தல விருட்சமாக பழங்கால 'ஆலமரம்' ஒன்று அமைந்து காணப்படுகிறது.

குடமுழுக்கும் நிர்வாகமும்

கம்பனி சக்தி ஸ்ரீ பூமாரி அம்மன் மண் சிலையாக இருந்தது. பின்னர் 1990-இல் கற்சிலையாக மாற்றி அமைக்கப்பட்டது. பின்னர் குலதெய்வக்காரர்கள் மற்றும் கிராமத்தினர்கள் முயற்சியால் மூன்று நிலை இராஜகோபுரம் கட்டி 08.02.2017 அன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து முடிந்தது.

சிறு தெய்வக் கோயில்கள் பெரும்பாலும் பரம்பரை நிருவாகத்தின் கீழ் செயல்படும் நிலை உள்ளது அவ்வகையில் சக்தி ஸ்ரீ பூமாரி அம்மன் கோயிலும் பரம்பரை நிருவாகம் நடைபெற்றும் இக்கோயில் கண்டு பிடித்தும் வழிபட்டும் வருபவர்கள் கம்பனி முத்து அம்பலம் வகையைச் சேர்ந்தவர்கள் பரம்பரை நிருவாகிகளாக உள்ளனர். தற்போது அவர்கள் வழி வந்த மகன்கள் நிர்வகித்து வருகின்றனர் இவர்களே நிர்வாகப் பொருப்பினை ஏற்று நடத்தியும் வருகின்றனர் இவர்களை பெரிய பூசாரி என்றும் அழைப்பர்.

இத்திருக்கோயிலில் கீக்குடியைச் சார்ந்த நாடார் இனத்தைச் சார்ந்தவர் பூசாரிகளாக விளங்குகின்றனர். தினசரி பூசாரியாக கருப்பையா பூசாரி பணியாற்றி வருகின்றார்.

சிறுதெய்வ வழிபாடு குறித்த நம்பிக்கைகளும், சமூகத்தினரும்

இக்கோயிலை பல்வேறு சமூகத்தினர் வழிபட்டு வருகின்றனர். கம்பனி, தளுதனூர், கரையக்கோட்டை, ஆனந்தூர், சின்னவாடகை, கீக்குடி, புதுக்குடி ஆகிய ஊர்களில் உள்ள அனைத்து சமூகத்தினர் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

இக்கோயிலின் முக்கியத் திருவிழா மாசித் திருவிழாவாகும். மாசி மகா சிவராத்திரி என்பது புனிதமான நாள் என்பதால்

Koviloor Digital Library

பத்து நாட்களுக்கு முன்பே கோயில் காப்பு கட்டி மக்கள் விரதம் எடுப்பர். அவ்வகையில் குலதெய்வக்காரர்கள் ஒவ்வொரு நாளும் மண்டகப்படி அடிப்படையில் இரவு பிரசாதம் வழங்கி வருவர்.

மண்டகப்படியில் முதல்நாள் மண்டகப் படியாக முத்து அம்பலம் வகையறா குடும்பத்தினர் நடத்துவர். இரண்டாம் நாளாக கம்பனி குலசாமி வகையறாக்களும், மூன்றாம் நாள் தளுதனூர் வடக்கி வீட்டார்களும், நான்காம் நாள் கணக்க வீட்டார்களும், ஐந்தாம் நாள் ஆனந்தூர் குலதெய்வக்காரர்களும், ஆறாம் நாள் சின்னவாடகைக் குடும்ப வகையாறாக்களும் மண்டகப்படியை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இக்கோயில் நம்பிக்கை வழிபாடாக திருமணம் முடிந்த தம்பதியினர் நீண்ட நாள்கள் குழந்தைப் பேறு இல்லை என்றால் அப்போது வேண்டி இங்குள்ள இறைவனை வணங்குகின்றனர். மேலும் குழந்தைகளுக்கு நோய் தீண்டினாலோ அவை தீர வேண்டியும் நோய் தீர்ந்த பிறகு மாவிளக்குப் பார்த்து அம்மனை வழிபட்டால் இந்நோய் குணமாகும் என்றும் மாதவிடாய் பிரச்சனை பெண்கள் மாவிளக்கு ஏற்றியும் வழிபட்டு வருகின்றனர்.

வீடுகளில் கால்நடைச் செல்வம் விருத்தியாக வேண்டும் என்பதற்காகவும் பசு வாங்கி இக்கோயிலுக்கு விட்டால் விருத்தியாகு, பாவம் நீங்கிப் புண்ணியம் கிடைக்கும் என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

சிவராத்திரியன்று அம்பாளுக்கும், கருப்பருக்கும் ஐந்து வேளைகளில் பூசை செய்வர். அன்று இரவு பூசைகள் முடிந்த பின்பு நேர்த்திக் கடனாக வளர்கப்பட்ட ஆடு, கோழிகளை மஞ் சள் நீர் ஊற்றி கருப்பர் சன்னதிக்கு நேராக பலியிட்டு அதனை வீட்டிற்கு எடுத்துச் செல்வர்.

கம்பனி, தளுதனூர், கரையக்கோட்டை, சின்ன வாடகை, புதுக்குடி போன்ற கிராமங்களில் உள்ள மக்கள் இவ்விழாவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவர் உற்றார் உறவினர்களை அழைத்து வந்தும், வெளியூரில் வேலை செய்பவர்கள் இத்திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து கொண்டாடி வருகின்றனர்.

Koviloor Digital Library

இத்திருவிழாவில், முடி இறக்குதல், கூழ் ஊற்றுதல், அடி மற்றும் அங்கப் பிரதோஷம் செய்தல், பால்குடம், காவடி எடுத்தல் மற்றும் தாங்கள் நினைத்த நல்ல காரியங்கள் கைகூடிய காரணத்தினால் பூக்குழி இறங்கியும் வழிபடுகின்றனர்.

இக்கோயிலில் சிவராத்திரி அன்று குலதெய்வக்காரர்களும், நேர்த்திக் கடன் செய்வோர்களும் வள்ளிதிருமணநாடகம், அரிச்சந்திர மயானகாண்டம், கருப்பர் நாடகம் மற்றும் ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது

முடிவுரை

உயிர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை இன்று வழிபாடும், தெய்வ நம்பிக்கைகளும் இருந்து வருகின்றன. இவ்வழிபாட்டால் மக்கள் மன அமைதியுடனும் மரபு நீட்சியுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

சான்றெண் விளக்கம்

1. குன்றக்குடி அடிகளார்; நமது நிலையில் சமயம் சமுதாயம், ப–3
2. கள ஆய்வில் கேட்டது மு.பாலசுப்பிரமணியன்
3. தொ. பரமசிவம், அழகர்கோயில், ப.15

Koviloor Digital Library

மகாபாரதம் : சமகாலச் சூழலில் திரௌபதியம்மன்

திருமிகு. க. கோபிகா
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -6

முன்னுரை

இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி ஒருபுறம் இருக்க, இறையுணர்வின் பல நம்பிக்கை மறுபுறம் வளர்ந்து கொண்டுதான் வருகிறது. புராண இதிகாச வரலாறுகள், பல நூல்களில் பலமாறுபட்ட முறைகளில் கூறப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் உள்ள பொதுவான தத்துவங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை இன்றும் மக்கள் ஏற்றுக்கொண்டு பின்பற்றி வருகின்றனர். காலங்கள் பல கடந்து வந்தாலும், தலைமுறைகள் பல சென்றாலும் புராண இதிகாசங்களில் கூறப்பட்டு வரும் இறைமாண்பை மாற்றவும் மறைக்கவும் இயலாது. அவ்வாறு புராணங்கள் மூலம் இன்றும் மக்களின் இறை நம்பிக்கையையும் வழிபாட்டு முறையையும் பின்பற்றப்பட்டுவரும் திரௌபதியம்மன் குறித்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமையவுள்ளது.

இறைச் சொற்களுக்கான பெயர்க் காரணம்

இவ்வுலகில் வாழும் மக்கள் இன்பத்தை அடைய எண்ணுகிறார்கள். ஆனால், இன்பம் - துன்பம் இரண்டையும் மாறிமாறி அனுபவித்து வருவதை உணர்கிறோம். இப்படி உலகப் பொருள்கள் வழியாக மக்கள் அனுபவிப்பவை சிற்றின்பமாகும். அவை நிலையானது அன்று. ஆனால் அழியாது நிலைபெற்று மக்கள் அனுபவிக்கத் தக்க வகையில் உள்ளதை பேரின்பம் என்கிறார்கள். அப்பேரின்பம் என்பது பெரியோர்களால் இறைவன் அருளோடு வகுத்த வழியே மதம் என்று கூறுகின்றனர்.

மகாபாரதத்தில் திரௌபதி

மகாபாரதத்தில் துருபத மன்னனின் மகளும் திட்பத்தும்மனின்

Koviloor Digital Library

உடன் பிறந்தவளுமான வீர சபதத்தில் தோன்றியவள் திரௌபதி எனும் துருவபதி. அக்னியில் பிறந்ததால் யாகசேணி, கிருஷ்ணை என்றும், பாஞ்சால நாட்டு இளவரசி என்பதால் பாஞ்சாலி என்றும் அழைக்கப்பட்டாள்.

மகாபாரதத்தில் வரும் மன்னன் பாண்டுவின் ஐந்து மகன்கள் அவர்களுள் தர்மன், பீமன், அர்சுனன் ஆகியோர் குந்தி மூலமும் கடைசி இருவரான நகுலன், சகாதேவன் ஆகியோர் மாத்ரி மூலமும் பிறந்தவர்கள் ஆவர். இவர்கள் ஐவர் என்பதால் பஞ்ச பாண்டவர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இப் - பஞ்ச பாண்டவர்களை திரௌபதி மணந்தாள்.

அன்று முதல் இன்று வரை ஊருக்கு ஒருத்தி மனைவியாகலாமா? என்ற கேள்வி கேட்கப்படுகிறது. அதற்கு நில மத்வாசாரியார், தனது மகாபாரத தாத்பாய நிர்ணயத்தில் ஐந்து இந்திரர்களின் மனைவியர் திரௌபதியின் அம்ச அவதாரமாக உள்ளனர் என்கிறார்.

இந்திரர்களும் அவர்களது மனைவியுமானவர்கள்

யமராஜன் (தர்மன்) மனைவி - சியாமளாதேவி
வாயுபகவான் (பீமன்) - மனைவி - பாரதி
இந்திரன் (அர்ச்சுனன்) - மனைவி - சசி

அசுவினி குமாரர்கள் (நகுல சகாதேவன் - உஷா என நால்வரும் திரௌபதியின் அம்ச அவதாரம் என்கிறார்.

சுயம்வரம் நடக்கும் போது விதித்த நிபந்தனைகளை அறிந்து வெற்றி கொண்டது அர்ச்சுனன் தான். ஆயினும் அப்போது வனவாசத்தில் இருந்த பாண்டவர்கள். தன் தாய் குந்தியிடம் சென்று "பிச்சை கொண்டு வந்துள்ளோம்" எனக் கூற குந்திதேவியோ, அவர்கள் கொண்டு வந்தது கனி என்று எண்ணி ஐவரையும் பகிர்ந்து கொள்ளச் சொல்கிறாள். பாண்டவர்கள் ஐவருடன் திரௌபதி நிற்பதைக் கண்டு, சொல்லிய தவறை உணர்ந்து வேதனை அடைகிறாள். பின்னர், திரௌபதி முற்பிறவியில் பெற்ற வரத்தை கிருஷ்ணர் விளக்க, தர்மன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என ஐவரையும் வரிசையாக மணந்து கொள்கிறாள்.

Koviloor Digital Library

திரௌபதியம்மன் திருக்கோயில்

தெய்வத்தோடு தொடர்புடைய மனிதர்களாக இருந்தனர். தெய்வங்களாக உயர்ந்த அவர்களில் திரௌபதி முதலில் மணந்த தருமருடனே கோயில்களில் காட்சி தந்து அருள்பாலிக்கிறாள்.

தமிழ்நாட்டில் இது தொடர்பாக உள்ள மொத்தக் கோ-யில்கள் 275. அதாவது 27 நட்சத்திரங்களுக்கும் 10 கோயில்கள் என 270 கோயில்களும், அதில் 27 + 5 = பஞ்ச ஙதங்களுக்கு என 275 கோயில்கள் உள்ளன. அவற்றில் 32 கோயில் திரௌபதிக்கு மட்டும் உள்ளன.

அக்கோயில்களுள் ஒன்று கோவை வைசியாள் வீதியில் ஸ்ரீமத் தருமராஜா திரௌபதியம்மன் கோயில். அங்கு கடந்த 318 ஆண்டுகளாகக் குண்டம் திருவிழா நடக்கிறது. சுமார் 1000 ஆண்டுகள் பழமை மிக்க இக்கோயில் பாண்டவர்கள் வனவாசம் செல்லும்போது, தங்களை யாரும் அடையாளம் தெரிந்து கொள்ளாதபடி மாறுவேடத்தில் இருந்தனர். அப்போது அவர்கள் அஷ்டபானங்கள் பெறுவதற்காகச் சிவனை தரிசிக்க வெள்ளியங்கிரி மலைக்குச் சென்று வரும் போது இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் ஓய்வு எடுத்துச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதனால் இக்கோயில், "ஸ்ரீமத் தர்மராசா திரௌபதியம்மன் கோயில்" என்று அழைக்கப்படுகிறது. இங்கு குண்டம் இறங்கும் திருவிழா பிரசித்தி பெற்றது. சுமார் 60 அடி குண்டம் அமைத்துத் திருவிழா கொண்டாடுகின்றனர்.

திருவிழாவும் வழிபாடும்

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் அமாவாசை அன்று 60 அடி குண்டம் திருவிழா கொண்டாடப்படுகிறது. அப்போது, "குண்டத்தில் எலுமிச்சை பழங்கள் உருட்டி விடப்படுகிறது. அப்பழம் கிடைத்தால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் என்பது சிறப்பு. இதற்காகக் குண்டம் அருகே, நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் காத்திருப்பார்கள். ஆனால், குறைந்த அளவிலான எண்ணிக்கையிலே பழங்கள் கிடைக்கும்.

நவராத்திரியில் ஆடி வெள்ளி அன்று, அம்மனுக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதமான அலங்காரம் செய்து சிறப்பு

Koviloor Digital Library

வழிபாடு நடைபெறுகிறது. இக்கோயிலில் சுப நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

திருவிழாவின் போது அம்மன் மேல் 50 கிலோ வெண்ணெய் ஙசப்படுகிறது. அவ்வெண்ணெய் உருகிவந்தவுடன், பிரசாதத்தில் கலந்து பக்தர்களுக்குக் கொடுப்பார்கள். அதை சாப்பிட தீராத நோயும் தீரும் என்கிறார்கள். இக்கோயில் தினமும் காலை 6 மணிமுதல் மதியம் 12 மணிவரையும், மாலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரையும் நடைதிறந்திருக்கும்.

இக்கோயிலில் நாகலிங்கம், வில்வம், வன்னியம், அரச மரங்களும், அரச செண்பகச் செடிகளும் உள்ளன. இங்கு போத்திராஜா சிலை உள்ளது. கோயிலின் வலது புறம் நாக விநாயகர் மற்றும் ராகு கேதுவிற்குத் தனி கோயில் உள்ளது. இடதுபுறம் நாகதுர்க்கையும், கோயிலின் பின்புறம் நாக சிலையும் உள்ளது. அர்த்தமண்டபம், மகா மண்டபம் வசந்த மண்டபங்களும் உள்ளன.

இங்குள்ள வன்னியம் மரம் அன்று மகாபாரதத்தில் ஆயுதங்களை மறைத்து வைத்து குலம் காத்த பெருமையையும் சிறப்பும் உடையது. அரச மரத்தில் மஞ்சள் கயிறு கட்டி, அம்மனை வேண்டினால் திருமண தடைநீங்கும் என்றும் கூறுகின்றனர்.திரௌபதி அம்மனுக்குக் கோயில் எண்ணிக்கை மிகக் குறைவு எனினும் கோயில் கொண்ட இடங்களில் வாழும் மக்கள் அம்மனை மிகவும் போற்றுகின்றனர்.

முடிவுரை

நாட்டுப்புறக் கலைகளும், பழங்கதைகளும் மனிதனாக இருந்து தெய்வ நிலைக்கு வளர்ந்தவர்கள் பற்றிய கதைகள், தெய்வத்தோடு தொடர்புடைய மனிதர்களின் கதைகள், பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் எனப் பலவற்றை கூறுகின்றன. அவை மக்களின் மனதில் ஆழப்பதிந்துள்ள நம்பிக்கைகளின் வெளிப்பாடேயாகும்.

Koviloor Digital Library

துணைநின்ற நூல்கள்

1. சைவமும் வைணமும் – அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பழனி (2002)
2. இந்துமத இணைப்பு விளக்கம் – அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பழனி (2002)
3. மகாபாரதம் சுருக்கம்
4. ஸ்ரீ ஐசுவரியம் தமிழ் மாத இதழ்
5. கட்டுரை சார்ந்த இணையம்

Koviloor Digital Library

இலுப்பைக்குடி நீலியம்மன் கோயில் உருவாக்க மரபு

திருமிகு. ஆ. சகுந்தலா,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

மக்கள் தம் வாழ்க்கை அனுபவங்களால் தம் சமுதாயத் தேவைகளுக்காகச்சில நடைமுறைகளை வகுத்துக் கொள்கின்றனர். தமிழர் தம் வழிபாட்டு மரபு தாய்தெய்வ மரபின் அடிப்படையில் அமைந்தது. இறைவழிபாடு பெருந்தெய்வ வழிபாடு சிறுதெய்வ வழிபாடு என்னும் இருநிலைகளில் அமைகிறது. இதில் சாக்கோட்டை வட்டாரத்திற்குரிய தெய்வமான நீலியம்மன் உருவாக்க மரபு பற்றி இக்கட்டுரையின் நோக்கம் அமைகிறது.

சிறுதெய்வம் சொல்விளக்கம்

சிறுதெய்வம் என்ற சொல் முதன்முதலாக "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்" என்று அப்பர் தேவாரத்தில் பயின்று வருகிறது. இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது. சிறுதெய்வங்களின் முதற்பண்பு அவை பிராமணரால் பூசை செய்யப் பெறாதவை. பிராமணப்பூசை இன்மையால் இவை இயல்பாகவே இரத்தப்பலி பெறும் தெய்வங்களாகும்.

கோயில் அடையாளம் மற்றும் அமையும் இடங்கள்

சிறுதெய்வக் கோயில்களின் அளவு மிகச்சிறியது. சில இடங்களில் கட்டடமின்றி அமைதலும் உண்டு. இன்னும் சில இடங்களில் மரங்களும், புதருமே தெய்வமாகக் கருதி வழிபடப்பெறும். மரங்கள் பெரும்பாலும், வேம்பு, பனை, பூவரசு, உடை ஆகியவையாக இருக்கும். பெண் தெய்வக் கோயில்கள்

Koviloor Digital Library

பெரும்பான்மை வடக்கு நோக்கியும் சிறுபான்மை கிழக்கு நோக்கியும் அமைந்திருக்கிறது. சிறுதெய்வங்கள் பொதுவாக ஊர்மந்தை, ஊரின் எல்லை, குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளில் வாசற்பகுதி இருந்த இடம் நெடுஞ்சாலை ஓரம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கிறது.

இலுப்பைக்குடி ஊர் பெயர்க்காரணம்

காரைக்குடிக்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் இலுப்பைக்குடி என்னும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அதிகமாக இலுப்பை மரங்கள் அதிகமாக வளர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இவ்வூரக்கு இலுப்பைக்குடி என்ற பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். இன்றும் இவ்வூரில் இலுப்பை மரங்கள் உள்ளன.

நீலி பெயர்க்காரணம்

நீலி என்னும் சொல்லுக்கு நீலனின் சகோதரி என்றும் "அவளா நீலி" கொடுந்தெய்வம் என்றும் அடங்காப்பிடாரிகளைக் குறிப்பிடுவர் என்றும் போலி அழுகை அழுபவள் என்றும் "நீலிக்கு கண்ணீரு நெற்றியில்" என்றும் பழமொழி கூறப்படுகிறது. நீலிக்கும் இயக்கிக்கும் (இசைக்கிக்கும்) தொடர்புபடுத்துவர். இவள் முற்பிறப்பில் 'தவஞானி' என்று அழைக்கப்பட்டாள். இவளை புவனமதி காசியில் இரண்டாம் தாரமாக மணம் செய்து கொண்டான். காஞ்சிபுரத்திற்கு வரும் வழியில் அவன் அவளைக் கொன்றுவிட்டான். பின்னர் அவளது அண்ணன் சிவஞ்ஞானியும் தற்கொலை செய்து கொண்டான். பின்னர் இவர்கள் இருவரும் நீலன் நீலி என்ற பெயருடன் பிறந்தனர். இவர்கள் குழந்தைகளாக இருக்கும் பொழுதே இரவில் பேய்களாகப் பேரழிவு செய்தனர். இதனால் இவர்களது தந்தை காட்டில் விட்டுவிட்டார். அவர்கள் இருவரும் வேப்பமரத்தில் குடியேறினர். அம்மரத்தை திருவாலங்காடு மக்கள் வெட்ட நீலன் அதில் இறங்க நீலி திருச்செங்காடு சென்றாள். புவனமதி மீண்டும் தரிசனச் செட்டியாகப் பிறந்தான். அவனை நீலி வழிமறித்து வஞ்சகமாகக் கொன்றாள். இவ்விடம் நீலி குளம் என்றும் இப்போம் அழைக்கின்றனர். இது ஒரு கதை, பல்வேறு கதை மாறுபாட்டுடன் வழங்கப்படுகின்றது. (நீலன் சரிதம், ப.1)

Koviloor Digital Library

நீலியம்மன் உருவாக்க மரபு

இலுப்பைக்குடி கிராமத்தில் அமைந்துள்ள நீலியம்மன் 400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாகக் கூறப்படுகிறது. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவும் அதன் காரணமாகத் தன் கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு அழுதபடியே வந்ததாகவும் கொழுத்தும் வெயிலின் தாக்கமானது அதிகமானவுடன் கையில் இருந்த குழந்தையை நின்றபடியே கீழே போட்டுக் குழந்தையின்மீது அப்பெண்ணானவள் ஏறி நின்றதாகவும் பின் இருவரும் அதே இடத்தில் இறந்துபட்டதாகவும் கூறப்படுகிறது. பெயருக்கு ஏற்றார்போல் நீலியாக இல்லாமல் இவளை வேண்டி நிற்பவர்களுக்கு வேண்டும் வரம் தருபவளாக விளங்குகிறாள்.

வழிபாட்டுமுறைகள்

பௌர்ணமி தோறும் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது. வாரத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பால், தயிர், இளநீர் அபிடேகத்துடன் சிறப்பு அபிடேகமாகக் குங்குமத்தை வைத்து செய்யப்படுகிறது. இந்த குங்குமமானது மங்கலப் பொருட்களில் முதலிடம் பெறுகிறது. சுமங்கலிப் பெண்கள் நெற்றி வகிட்டில் குங்குமம் இட்டுக் கொண்டால் தன் கணவனின் ஆயுள் நீடிக்கும் என்ற நம்பிக்கையில் இங்குள்ள குங்குமத்தை அவர்களின் வீட்டில் வைத்து தினசரி இட்டுக் கொள்கிறார்கள். சீதாதேவி இராமனின் ஆயுள் பெருவதற்காக நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டதாக புராணங்கள் கூறுகின்றது.

ஊரில் இருக்கும் ஒருவரால் கோயில் நிருவாகம் செய்யப்படுகிறது. இவர் ஒருவர் மட்டுமே கோயிலின் அனைத்து செலவுகளையும் செய்கிறார். வருடம் தோறும் நீலியம்மனுக்கு விளக்குப் பூசை செய்யப்படுகிறது. இதில் ஊர்மக்கள் மட்டுமல்லாது அக்கம் பக்கத்தில் இருக்கும் கிராம மக்களும் கலந்து கொள்கின்றனர்.

முடிவுரை

மனிதன் தான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பலன்கள் உண்டாகுமாறும் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி

Koviloor Digital Library

அதற்கு ஒரு நெறிமுறைகளை வகுத்தும் வைத்துள்ளான். இறைவழிபாடு என்பது ஆதிகாலம் முதல் இன்றுவரை நம்பிக்கையாக அமைந்து வரும் பண்பாகும். இயற்கைச் சீற்றங்களில் இருந்து நம்மைக்காக்கும் பொருட்டுத் துவங்கப்பட்ட வழிபாடு இன்று மக்களின் மண் மனம் சார்ந்த வழிபாடாக பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளன. இதில் பெண் தெய்வமாகிய நீலியம்மன் கிராம தேவதையாக அனைத்துத்தரப்பு மக்களாலும் வழிபடப்பெறும் சிறப்புப் பெற்றுத் திகழ்கிறது.

Koviloor Digital Library

குலசேகராழ்வாரின் பாசுரங்களில் திருமால் வழிபாட்டு முறைகள்

முனைவர் மா. சங்கீதா
உதவிப் பேராசிரியர்
புனித சிலுவைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 2

முன்னுரை

திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் சமயமாகும். அவர்கள் உண்ணும் சோறும், தின்னும் வெற்றிலையும், பருகும் நீரும் இவையாவும் கண்ணனாய் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள். பசுவின் உடல் முழுவதும் பாலானது குருதியாய் எங்கும் வியாபித்திருந்தாலும் மடியின் வாயிலாகத்தான் அது சுரக்கும் அதுபோல, எம்பெருமான் எங்கும் இருப்பினும், திவ்ய தேசங்களில் அவரது திருவருளானது கூடுகிறது. குலசேகராழ்வார் பெரிய பெருமாளாகிய இராமனிடத்தே அதீத பக்திப் பூண்டு எப்பொழுதும் இராமக காதையைக் கேட்டு இன்புற்றவராகையால் இவர் தமிழில் பாடியருளிய பாசுரங்களின் தொகைக்கு 'பெருமாள் திருமொழி' எனப் பெயர் வழங்கலாயிற்று. வடமொழியிலுள்ள முகுந்த மாலையும் இவர் இயற்றியதே. அவரது பக்திச் சிறப்பு, திருமால் வழிபாடு, திருத்தலப் பெருமைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திருவரங்கம்

தேன் மிகுந்த மலர்கள் நிறைந்த சோலைகளையுடையது திருவரங்கம். காவிரியால் சூழப்பட்டு அழகுடன் மிளிர்கிறது. மீன்கள் நிரம்பப்பெற்ற வயல்களாலும், சோலைகளாலும் சூழப் பெற்றதாகும். திருவரங்கம் மாட மாளிகையால் காட்சித் தருகின்றனவாம். பந்தப் பாசங்களை உதறி அரங்கனிடம் ஆழ்ந்த பக்தர்கள் நித்தியவாசம் செய்யும் திருத்தலமாக திருவரங்கம் திகழ்கிறது. திருவரங்கத்தில் பள்ளிக் கொண்டுள்ள பெருமானின் அருட்செயல்களையும், அருட்கோலத்தையும் தம் கண்களால்

Koviloor Digital Library

கண்டுக் களிக்கும் நாள் எந்நாளோ? என்று ஏங்குகிறார். அவரது ஏக்கம் பாசுரங்களில் வெளிபடுவதைத்,

கருமணியை கோமளத்தைக் கண்டு கொண்டு என்
கண்ணிணைகள் என்று கொலொ களிக்கும் நாளே
(பெருமாள் திருமொழி 1:1)

காண முடிகிறது. மேலும்,

ஆவினை யன்று உயக்கொண்ட ஆயமேற்றை
அமரர்கள் தலைவனை அத்தமிழ்இன்ப
பாவினை என் கைகள் மலர்த்தூவி வணங்கும் நாள் எந்நாளோ?
(பெருமாள் திருமொழி1:4)

என்று தவிக்கிறார் குலசேகர ஆழ்வார்.

ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்டு என்
உள்ள மிக என்று கொலோ உருகும் நாளே
(பெருமாள் திருமொழி1:6)

என்று உருகியவர். மாயோனின் வடிவழகைக் கண்டு நீர் மல்க நிற்கும் நாள் எந்த நாளோ? என்று பாடுகிறார். இறைவனை தரிசிக்க விரும்பும் அவரது வேகமும், இறைவனை என்று தரிசிக்க போகிறோம் என்று விழையும் அவரது உள்ளமும் இப்பாசுரத்தின் வாயிலாகப் தெரியவருகிறது.

திருவேங்கடம்

திருவேங்கடவன் பாஞ்சசன்யம் எனும் திருசங்கினை ஏந்தியுள்ளான். சிவன், திருமால், இந்திரன் மற்றும் தேவர்கள் ஒருவொருக்கொருவர் நெருங்கியும் உள்ளே புகமுடியாமல் இருக்கின்ற நீண்ட பெரிய திருவாசலையுடையது என்பதை,

எம்பெருமான் ஈசன்எழில் வேங்கடமலை மேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே
(நான்காம் திருமொழி 4:5)

எம்பெருமானது பழவினைகள் காண்பதற்கு வண்டினங்கள் வருமாம் பண் பாடுமாம் அத்தகைய திருமலை மேல், தான் வடிவாய் கிடந்து அவனது பவள வாய் பார்க்க விரும்பியவர் குலசேகரர். இறுதியில் எம்பெருமானது திருவருள்படி திருவேங்கட

Koviloor Digital Library

மலையில் 'ஏதேனுமாவேனே' என்று பாடிப் பரவுகிறார். இத்திவ்ய தேசத்தோடு ஏதோ ஒருவகையில் உறவுக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவருடைய உள்ள வேட்கையானது. அவருடைய பாடல்களில் மிளிர்வதைக் காணமுடிகிறது. வேங்கடமலையில் குருகாய் பிறப்பேனே என்று தொடங்கி, சுனையில் மீனாய் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே. செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே என்றும்,

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே

(நான்காம் திருமொழி 4:9)

என்றெல்லாம் பாடிப்பரவுகிறார். இறுதியில் செம்பவள வாயான் திருவேங்கடம் என்னும் இறைவனிடம் நெருக்கமின்றி வாழும் மனிதப் பிறவியை விட இறைவனின் திருவடியைச் சேர்ந்து வாழும் எப்பிறவியும் ஏற்புடையதே என்பது இப்பாசுரங்களின் வாயிலாகப் புலனாகிறது. இன்றும் பெருமாள் திருத்தலங்களில் கருவறைக்கு அருகில் உள்ள வாசற்படியைக் குலசேகராழ்வார் படி என்றே அழைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பாற்கடல்

குலசேகராழ்வாரின் இரண்டு பாசுரங்கள் திருப்பாற்கடல் பற்றிய பாடலாக அமைகிறது.

'மாலையுள்ள கடல் கிடந்தவன்'
'பையர வின்னணைப் பள்ளியினாய்'
'ஒண்பவள வேலை உலவுதன் பாற்கடலுள்
கண்டுயிலும் மாயோன்'

என்றெல்லாம் திருபாற்கடலில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நிலையைப் பாடிப் பரவுகிறார். மேலும், எம்பெருமான் திருபாற்கடலில் பள்ளிக் கொண்டிருக்கையில் கடல் மகன் அவனுடன் உரைகிறான். அக்கடல் தேனால் குளிர்ச்சியுடையதாகத் திகழ்கிறது.

Koviloor Digital Library

திருவித்துவக் கோடு

இத்திருத்தலமானது சரணாகித் தத்துவத்தின் சாரமாக விளங்குகிறது. நீர், நில, செல்வவளங்களை ஒருங்கே பெற்ற திருவித்துவக்கோட்டில் மீன்களும் எம்பெருமானை நோக்கிப் பக்தியில் ஆழ்கிறதாம். எம்பெருமான் மின்னலைப் போல ஒளி பொருந்திய சக்கராயுதத்தை தம் கரத்திலே ஏந்தியுள்ளளான். என்பதை,

விரைகுழுவும் மலர்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே
(ஐந்தாம் திருமொழி 5:1)

என்று பாடியருளுகிறார்.

திருக்கண்ணபுரம்

திருக்கண்ணபுரத்தானை, இராமனாக எண்ணி தாலாட்டுப் பாடுகிறார். இவ்வூரில் வண்டினங்கள் இசை பாடுகின்றன. செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து தேன் சிந்திக் கொண்டிருக்கின்றன. இவ்வூரில் திருமால் பக்தர்கள் மட்டுமின்றி அனைத்துயிர்களும் மகிழும்படி திருவருள் புரிகிறார் என்பதை,

..............வண்டினங்கள்
சாமரங்கள் இசைபாடும் கண்டிரத்தென் கருமணியே
(எட்டாம் திருமொழி 8:4)

களைகழுநீர் மருங்கலரும் கண்ணபுரத்தென் கருமணியே
(எட்டாம் திருமொழி 8:9)

என்று ஆற்றுணர்ந்த ஞானிகள் வாழுமிடம்; சாத்திரங்கள் அனைத்தையும் கற்றுணர்ந்த பெரியோர்கள் வாழுமிடம் திருகண்ணபுரம். திருகண்ணபுரமானது அழகிய, பெரிய அளவற்ற தீர்த்தங்களையுடையது; காவிரி பாய்வது; காற்றானது கடலின் விலையுயர்ந்த மணிகளைச் சேர்க்கும் இயல்புடையது என்றெல்லாம் திருகண்ணபுரத்தின் பெருமைகளைப் பேசுகிறார்.

திருவாலி

திருவாலி திருத்தலத்திலுள்ள இறைவனை எட்டாம் திருமொழியில் பாடுகிறார். ஏழாம் திருமொழியில் திருவாலி

Koviloor Digital Library

யாற்றின் குறிப்பு இடம் பெறுகிறது. திருக் கண்ணபுரத்து எம்பெருமானைக் குழந்தை இராமனாகக் கொண்டு கலசேகராழ்வார் தாலாட்டுகையில், 'ஆலிநகர்க்கு அதிபதியே அயோத்தி மகனே தாலேலோ' திருவாலி திருநகர்க்குத் தலைவனே; அயோத்தியின் மன்னனே; உன்னைத் தாலாட்டுகிறேன் என்று பாடி அருள்கிறார்.

திருஅயோத்தி

இராமபிரான் அவதரித்த இத்திவ்யதேசத்தை ஆழ்வார் குலசேகரர் ஐந்து இடங்களில் குறிப்பிட்டுப் பாடுகிறார். இவ்அயோத்தி நகரம் மதில் அரண்களால் சூழப்பெற்ற வளமான, செழிப்பு மிக்க நகரமாகக் காட்சியளிக்கிறது. இராமபிரானை இவ்வுலகிற்கு அளித்த திருநகரைத் தொழுது வழிபடலாம்

அங்கண் நெடுமதில் புடைசூழ் அயோத்தி
வளநகரம் தொழுதேத்த
நீ பிறந்த வளநகரைத் துறந்து

என்று பாடித் திளைக்கிறார். மேலும்,

அங்கண் நெடுமதில் புடைசூழ் அயோத்தி என்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய் தோன்றி
விண் முழுதும் உயக்கொண்ட வீரன்தன்னை
செங்கணெடும் கருமுகிலை இராமன் தன்னை

(பத்தாம் திருமொழி 10:1)

என்று பத்தாம் திருமொழியில் புகழ்ந்துப் பாடுகிறார்.

தில்லைத் திருச்சித்திரக் கூடம்

தில்லைத் திருச்சித்திரக் கூடத்தில் எழுந்தருளியுள்ளவர் கோவிந்தராசப் பெருமாள், தாயார் புண்டரீகவல்லி ஆவார். இரண்டாம் நந்திவர்மனால் நிறுவப்பெற்றது. இவ்ஆலயத்திலிருந்து இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லையிலிருந்த கோவிந்தராசப் பெருமாளை அப்புறப்படுத்தினார். ஆனால், மீண்டும் 'அச்சுதராயர்' என்பவர் அப்பெருமானை அதே கோவிலில் நிறுவியதாக வரலாறு கூறுகிறது. குலசேகராழ்வார்

Koviloor Digital Library

தில்லை திருச்சித்திரக் கூடத்து கோவிந்தராசப் பெருமானைப் பதினோரு பாசுரங்களால் பாடி மகழ்ந்திருக்கையில் குலசேகரர்க்கு இராமனாகக் இறைவன் காட்சித் தருகிறார். மேலும் இராமபிரானது வரலாற்றினைக் கூறும் குட்டி இராமாயணமாகவும் அது திகழ்கிறது எனலாம். தில்லையின் இயற்கை எழில் மதிலால் சூழப்பட்ட அரணின் நலம் ஆகிய செய்திகளை இப்பெருமாள் திருமொழியில் பாடி மகிழ்கிறார் என்பதை,

தில்லை திருச்சித்திரக் கூடந்தன்னுள்
திறல்வளங்கு மாருதி தன்னை அமர்ந்தான் தன்னை
எல்லையின் கண் தசரதன் தன் மகனாய் தோன்றி
றதுமுதலாத் தனனுலகம் புக்கத் தீரா
கொல்லியலும் படைத்தானை ஒற்ற ஒள்வாள்
கோழிய கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ் நாராயணனடிக் கீழ் நந்துவாரே

(பெருமாள் திருமொழி 10:11)

தில்லைநகர் திருச்சித்திரக் கூடத்தில் ஆற்றல் வாய்ந்த, அனுமனுடன் உறையும் பெருமானைக் குறித்து எல்லையற்ற கீர்த்தியையுடைய தசரத சக்கரவர்த்தியின் புதல்வனாகப் பிறந்தது முதல் வைகுண்டத்துக்குத் திரும்பியது வரையிலான வரலாற்றினைப் பாடுகிறார். மேலும், எதிரிகளை அழிக்கும் ஆயுதங்களைக் கொண்டவரும், பிரகாசமான வாளைத் தரித்தவரும் உறையூரின் அரசரும், வெண்கொற்றக் குடையையும் உடையவரான குலசேகராழ்வார் பாடியருளிய தமிழ் இலக்கணம் பொருந்திய இப்பத்து பாசுரங்களை பக்தியோடு கற்றுப் பாட வல்லவர்கள் திருநாராயணனுடைய திருவடிகளை அடைய வல்லவர்கள் என்று குறிப்பிடுகிறர்.

நாயகன் நாயகி பாவம்

இறைவனிடம் பேரன்பினால் அவரை அடைய துடிக்கும் ஆன்மா தன்னைப் பெண்ணாகப் பாவித்து அன்பு செலுத்துகிறது. இத்தகைய அன்பு நிலையானது. இதனை குலசேகர ஆழ்வாரிடமும் காண முடிகிறது. "கண்ணன் அவதாரம் கோபியருடன் செய்த

Koviloor Digital Library

லீலைகளையும், கோபியர் அவன்பால் கொண்ட அன்பையும் தருவதால் வைணவ பக்தி நெறியில் அக்காதல் நெறி வாய்ப்பாகப் பொருந்தி இயற்கையாக அமைகிறதென்பர்" என்று ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுகிறார். ஆழ்வாரும் இறைவனிடம் தனது அன்புணர்வினை வெளிப்படுத்துவதை,

செய்ய உடையும் திருமுகமும்
செங்கனி வாயும் குழலும் கண்டு
பொய்யொரு நாள் பட்டதே யமையும்
புள்ளுருவம் பேசாதே போகு நம்பீ (பெருமாள் திருமொழி 6:7)

தமது பாசுரத்தில் தன்னை கோபியராகப் பாவித்து கண்ணனிடம் காதலை மிக ஆழமாக வெளிப்படுத்துகிறார். யமுனை ஆற்றங்கரையில் கண்ணனுக்காகக் கோபியர்கள் காத்து நிற்கின்றனர். இதனையுணர்ந்து குலசேகராழ்வார், யமுனையாற்றங்கரையில் கண்ணன் நிகழ்த்திய லீலைகளை எண்ணி, தன்னைக் கோபியராக நினைத்துக் காதல் உணர்வில் திழைத்து அன்பை வெளிப்படுத்துகிறார்.

தாய்மை நிலையில் அனுபவித்தல்

ஆயர்பாடியில் தன்னை கோபியராகக் கருதிக் காதலை வெளிப்படுத்தியவர். பிறிதொரு நிலையில் கண்ணன் தரிசனத்தைக் கண்டு விட்டக் கண்கள் பிறிதொரு நிலையில் தேவகியாக மாறி கண்ணில் நீலீ சொரிக்கின்றன. தெய்வீகக் குழந்தையின் அழகு முகமும் தளிர் நடையையும், அவன் செய்யும் குறும்பு விளையாட்டுக்களையும் தன் கண் குளிரக் கண்டும், கேட்டும் இன்புறவில்லையே என்று தாயின் மனநிலையிலிருந்து தவித்தக் குலசேகர ஆழ்வாரின் தவிப்பு தேவகி புலம்பலாக வெளிபடுகிறது என்பதை,

அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் தவிர்ப்பதுவும்
தொழுகையும் இவை கண்ட யசோதை
தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே

(பெருமாள் திருமொழி 7:8)

கலையத்திலுள்ள வெண்ணெயை மேலெழுந்தவாறு

Koviloor Digital Library

எடுக்காமல் கை முழுவதும் அளைந்து எடுத்து உண்கின்ற தளிர் போன்ற தாமரைக் கையும், உன்னைத் தீண்டும் பாக்கியத்தைப் பெற்ற தாம்புக் கயிற்றோடு யசோதை நிற்க, அதற்கு அஞ்சுவதுப் போன்ற பாவனையும், வெளுத்தத் தயிர் பசிய சிவந்த வாய் இதழும், முழுவதும் பயம் தோய்ந்த பார்வையும் அழகிய சிவந்த அவரது அறிய வாய் துடிப்பதும் கைக் கூப்பிக் கெஞ்சுவதுமாகிய இவற்றையெல்லாம் அனுபவித்த யசோதை ஆனந்தத்தின் எல்லையைக் கண்டிருக்கிறாள் என்று பாடுகிறார். கண்ணனின் குழந்தை உருவம் இராமனின் மனிதில் ஆழமாக பதியவில்லை என்பது தெரிய வருகிறது எனவே, இராமனின குழந்தைப் பருவக் குறும்பு விளையாட்டைவிட பெருவீரனாகிய இராமனின் வீரச் செயல்களை விவரித்துப் பாடியுள்ளார். திருகண்ணபுரத்தைத் தரிசிக்கச் சென்ற நிலையிலேயே இராமனை இராமாயணக் காட்சியோடு ஒன்றிப் பாடுகிறார். இதனை,

சாமரங்கள் இசைபாடும் கணபுரத்தென் கருமணியே
எங்கள் குலத்து இன்னமுதே இராகவனே தாலேலோ

(பெருமாள் திருமொழி 8:4)

இராம காதையில் இன்புற்று ஈடுபாடு கொண்ட குலசேகர ஆழ்வாரின் தாய்மை குணம், இங்கு அன்பாக மாறி தாலாட்டுப் பாடுகின்றது. இவ்வாறு தமது பாசுரத்தில் தாய் யசோதையாக, தாய் தேவகியாக, தாய் கோசலையாகத் தானே மாறிப் பாடுவது தாய்மையின் அற்புதத் தத்துவத்தை உணர்த்துகிறது.

தந்தையர் நிலையை அனுபவித்தல்

குலசேகர ஆழ்வார் தாயாக மாறி தாய்மையை முழுமையாக அனுபவித்த நிலையில், இப்பொழுது தந்தையாகவும் மாறி இராமனின் பிரிவால் தசரதனாக நின்று புலம்புவதை,

அம்மா வென்று உகந்தழைக்கும் ஆர்வச் சொல்
கேளாதே அணிசேர் மார்வம்

(பெருமாள் திருமொழி 9:6)

என்று தவிக்கின்றார். தந்தையாகத் தன்னை மாறி மகனை பிரிந்து தாளாதத் துயரில் வாடுகிறார். தனது அன்பு மகன், ஆசை மகன் செல்வ வாழ்க்கையினை துறந்து மரத்தின்

Koviloor Digital Library

அடியில் படுத்து உறங்கும் நிலை உருவானதைகச் கண்டு கலங்குகிறார். இராமனின் முகத்தைப் பார்க்க முடியாமல் அவர் துடிக்கின்ற துடிப்பு குலசேகர ஆழ்வாரின் பக்தியினை உச்சநிலைக்கு எடுத்துச் செல்கிறது. இராம காதையின் மீது அவர் கொண்டுள்ள அதீதப் பற்றினையும் காணமுடிகிறது. இவ்வாறு தாயாகவும், தந்தையாகவும் மாறி இறையுணர்வின் ஆழமான வெளிப்பாட்டினை அனைவரின் நெஞ்சம் உருகும் அளவிற்குப் பாடியுள்ளமை பாராட்டிற்குரியது.

முடிவுரை

சேர அரசர். திருமால் மீது கொண்ட தீராத காதலால், அன்பால் அரச வாழ்வைத் துறந்து ஆழ்வாராக மாறி, பல திருத்தலங்களுக்கும் சென்று, பாடல்கள் பல புனைந்து திருத்தலப் பெருமைகளை எடுத்துரைக்கிறார்.

துணை நின்ற நூல்கள்

1. அனுமந்தன். கி., பார்த்தசாரதி.ஆர்., வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 40-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098
2. சீனிவாசன்.ம.பெ., திவ்வியப் பிரபந்த இலக்கிய வகைகள், மெய்யப்பன் தமிழாய்வகம், 53. புதுத்தெரு, சிதம்பரம் - 608 001
3. பன்முக நோக்கில் வைணவ இலக்கியம், டுடே பப்னிஐகேஷன்ஸ், 192- பெல்ஸ் ரோடு, எஸ்.ஆர் காம்ப்ளக்ஸ், சேப்பாக்கம், சென்னை - 600 005
4. ராம சுப்ரமணிய சர்மா, பொன்னம்மாள்.ஆர். (உ.ஆ)இ, ஸ்ரீ நாலாயிர திவ்விய பிரபந்தம் முதலாயிரம், கங்கை புத்தக நிலையம், 21. தீனதயாளுத் தெரு, தியாகராய நகர் - 600 017
5. வைத்தியநாதன்.ஞான., பன்னிரு ஆழ்வார் கதைகள், பிரேமா பிரசுரம், 59 ஆற்காடு சாலை, கோடம் பாக்கம், சென்னை 34

Koviloor Digital Library

கோவிலூர் திருக்கோவிலும் திருமடமும்

முனைவர் ஆறு. சரவணக்குமார், **திருமிகு. சி. புளோரால் ஜெயா**
துறைத்தலைவர் (பொ) வரலாற்றுத்துறை, கல்வியியல் ஆய்வாளர்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

முன்னுரை

முதலில் இயற்கையை வழிபட்ட மனிதன் இன் இயற்கை அழகும் அமைதியும் நிறைந்த இடத்திலே இறை உரு அமைத்து வழிபடத் தொடங்கினார். தொடக்க காலத்தில் கோயில்கள் மண்ணாலும் மரத்தாலும் அமைந்து பின்னர் கருங்கல்லால் கட்டப்பட்ட அதன்பின் மலைகளைக் குடைந்து குடைவரை களும் கற்கோயில்கள் அமைக்கப்பட்டன அவ்வகையில் பழமையான பெயர் பெற்ற கோவிலூர் கொற்றவாளீஸ்வர் கோவில் அமைப்பையும் கலைச்சொற்களையும் விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

கோவிலூர் வரலாற்றுக் குறிப்பு அறிமுகம்

கோவிலூர் என்பது தமிழ்நாட்டில் பத்தாவது நூற்றாண்டில் மிகப் பிரபலமாக இருந்த கழனிவாயில் என்ற ஏழகப் பெருந் தெருவின் ஒரு பகுதியாகும். இதைப்பற்றிய குறிப்பு இங்குள்ள பெருமாள் கோவில் கல்வெட்டில் உள்ளது.

கோவிலூர் நகரம் பல பெரும் தெருக்களை கொண்டு விளங்கியது அக்கால மக்கள் ஓர் ஊர் பகுதியை பெருந்தெரு என்று வழங்குவார்கள் இந்த ஊர் கோட்டையும் கொத்தளமும் அங்காடியுமாக விளங்கியது.

பாண்டிய நாட்டிற்குப் பெரும் புகழ் நீட்டிக்கொண்டிருந்த படைக்கு இவ்வூர் தான் இருப்பிடம் இரவு பகல் எந்நேரமும் இந்த நகரமும் கலகலப்பாக இருக்கும் இந்நகரத்தைக் கண்டு ஒரு புலவர் அடையாத வாயில் அகம் பாராட்டி பாடியிருக்கிறார்.

இந்த நகரின் பெயர் தான் ஏழகம் என்பது. அதனால் இங்குள்ள புகழ்பெற்ற படைக்கு ஏழகப் பெரும்படை என அழைக்கப்பட்டது வடபகுதிக்கு ஏழகப் பெருந்தெரு என்பது பெயராகும். அதை

Koviloor Digital Library

ஏழகச் சக்கரவர்த்தி பெருந்தெரு என்றும் கூறுவார்கள். இந்தப் பெருமாள் கோயிலுக்கு ஏழகப் பெருமாள் கோயில் என்பதே பெயர். வீரபாண்டியன் காலத்தில் இதற்கு வீரபாண்டியபுரம் என்று மற்றொரு பெயரும் உண்டு. எனவே இதுவே ஏழகப் பெருந்தெரு என்று சாசனத்தில் குறிக்கப்படுகிறது. ஏழ்வகை நகரத்தார்களுள் ஒருவகையினரான வைரவன் கோயிலாருக்கு ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டிய புரமுடையார் என்றே கோத்திரப் பெயர் வழங்கி வருகிறது. பரகேசரி மூன்றாவது குலோத்துங்கச் சோழன் குலசேகரப் பாண்டியன்மீது கடுஞ் சினம் கொண்டு போர்செய்ய வந்தான். அப்படி வந்தவனை ஏழகப்படை மட்டியூரில் எதிர்த்துப் போரிட்டது.

ஏழகத்தாரைப் பற்றியும் ஏழகப்படையைப் பற்றியும் சாசனங்களில் உள்ள காணும் இடங்களைக் கொண்டும் அவர்கள் பாண்டியர்களின் ஒரு பிரிவினராகவே இருத்தல் வேண்டும் என்பதாயினும் அவர்கள் பாண்டிய நாட்டை விட்டு வெளியே இருந்து வந்தவர்கள் என்பது விளங்குகிறது.

கோயில் முதலில் தோன்றி அக்கோயிலை மையமாகக் கொண்டு ஊர்தோன்றியமையால் கோயிலூர் எனப்படுகிறது. மேலும், கோயிலூரின் வேறு பெயர்களாக அக்காலத்தில் சிறுகுளம், கழனிவாயில், மருதேந்திரபுரம் என்றும் இவ்வூர் அழைக்கப்படுகிறது. அரசர்கள் காலத்தில் ஐயர்களுக்குத் தானமாகக் கொடுத்ததால் தர்மாசனக் கிராமம் என்றும் அழைக்கப்பட்டது.

கோயில் அமைப்பு

கொற்றவாளீசுவரர் கருவறையில் சுயம்பு லிங்கமாகவே காட்சி தருகிறார். இத்திருக்கோயிலில் கீழ்த்திசையில் ஒரு இராஜகோபுரமும் இரண்டு சாதாரணக்கோபுரங்களும் தெற்குத் திசையில் ஒரு கோபுரமும் உள்ளது. கிழக்கு நோக்கிய மூன்று வாயில்களில் முதல் வாயில் தவிர, ஏனைய இரு வாயில்கள் பூட்டிய நிலையில் உள்ளன. இறைவனுக்கென்று தனிக்கோயிலும் இறைவிக்கென்று தனிக்கோயிலும் பைரவ, முருகன், விநாயகர், சோமாஸ்கந்தர் ஆகியோருக்குத் தனிச்சந்நிதிகளும் உள்ளன. கிழக்கு வாயில்களின் எதிர்ப்புறம் குளம் உள்ளது.

Koviloor Digital Library

சுற்றுப்பிரகாரங்களை உடையது. இக்கோயில் தூண்களில் பலவிதச் சிற்பங்கள் செதுக்கப்பெற்றுள்ளன.

கற்சிற்பங்கள்

இந்தியக் கோயில் கட்டிடக் கலையுடன் இணைந்த முக்கியச் சிற்பமாக அமைவது கற்சிற்பங்களே ஆகும். அவ்வகையில் இத்திருக்கோயிலில் உள்ள மகாமண்டபத்தின் உள்ளே பிரகாரப்பத்தியின் அருகில் பதினாலு தூண்கள் உள்ளன. அவற்றில் பல்வேறு கற்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அந்தத் தூண் விக்கிரகங்கள் சப்தஸ்வரம் எழுப்பக் கூடிய கற்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. பதினாலு சிற்பங்களும் மிகுந்த வேலைப்பாட்டுடன் திருவுருவ அங்கங்களின் பரிமாணங்கள் மிகச் சிறப்பான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நாயக்கர் பாணியில் அமைந்துள்ளது.

புடைப்புச் சிற்பங்கள்

இக்கோயிலில் குதிரை வீரன் சிங்கத்தின்மேல் அம்பாள் அமர்ந்தநிலை நடனமாது, பெண்தலையில் பானையுடன் வேடன் மன்மதன் சிற்பம், வைரவர், பூதம், அன்னத்தின் மேல் பெண், சிவலிங்கத்தின்மேல் பசு பால்பொழியும் காட்சி, கண்ணனின் காளிங்க நர்த்தனம், கண்ணன் கால்விரலைச் சுவைத்தல், கண்ணன் ராதை, கண்ணன் லீலை, திருமால் சயனநிலை ஆகியன இக்கோ-யிலில் புடைப்புச் சிற்பங்களாக அமைந்து காணப்படுகின்றன.

சுதைச் சிற்பங்கள்

கோபுரத்தில் அம்பாள் வடிவங்கள், மன்மதன் லிங்கத்தின்மேல் பாம்பு படமெடுத்தல், அதை வணங்கும் பக்தர்கள், திருமால் சயன நிலை, லட்சுமி இருபுறமும் யானைகளுடன் இருத்தல் ஆகியவை இக்கோயிலில் சுதைச்சிற்பங்களாக உள்ளன.

ஓவியங்கள்

கட்டட அமைப்பில் சிற்பங்கள் குறிப்பிட்ட இடங்களில்தான் அமைய முடியும். ஆனால், ஓவியங்களின் மூலம் மத நிகழ்ச்சிகளைச் சித்தரிப்பது கோயிலின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் இடம்பெற முடியும். கோயில்களை

Koviloor Digital Library

வண்ணப் பொலிவுடன் கண்ணுக்கு இனியதாகக் காட்சியளிக்கச் செய்ய ஓவியக்கலையாலேயே முடியும். எனவே, ஆரம்பக் காலத்திலிருந்தே ஓவியக் கலை ஆலய நிர்மாணக் கலையுடன் இணைந்த ஒன்றாக உள்ளது.

கோவிலூர் மடத்தின் சிறப்பு

முதன்முதலில் அத்வைதக் கருத்துகளைத் தமிழ்நாட்டில் தமிழ்வாயிலாகப் பாடங்களை மடத்திலேயே இலவசமாகத் தங்க இடமும் உணவும் அளித்துப் பல மாணாக்கர்களைப் பயிற்றுவித்த பெருமையும், தமிழ்நாட்டில் பல மடங்கள் உருவாவதற்கு அடிப்படைக்காரணமாக அமைந்ததும், சாதாரண தமிழ்க் குடிகளில் கூட அத்வைதக் கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்குத் தமிழில் பல நூல்கள் வெளியிட்ட பெருமையும் இம்மடத்திற்கு உண்டு.

மடத்தின் நோக்கங்கள்

சாதி, மத, இனவேறுபாடு இல்லாமல் துறவு ஒழுக்கமுள்ள சன்னியாசிகளுக்கும் ஆத்மசாதனம் பணிபயில வரும் அன்பர்களுக்கும் உணவு, உடை, உறையுள் அளித்தல், அவர்கள்தத்துவ விசாரம் செய்யவும், வேதாந்த சாத்திரப் பயிற்சி பெறவும், கருமம், பக்தி, யோகம், தியானம் ஆகிய சாதனங்களில் பயிற்சி பெறவும் வடமொழி, தென்மொழி இலக்கண இலக்கியங்கள் கற்கவும் இக்கோயிலில் தங்கிப் பயில வசதிகள் செய்து தருகிறது இத்திருமடம்.

மகான்களுக்கும் பெரியோர்களுக்கும் குருபூசை ஜெயந்தி முதலிய விழாக்கள் நடத்துவதற்கும் வெளியிடங்களில் இருந்து வரும் மகான்கள், பெரியோர்கள், வித்துவான்கள் முதலியவர்களை உரிய மரியாதையுடன் வரவேற்று உபசரிப்பதற்கும், அத்வைத சித்தாந்த சம்பந்தமான நூல்கள் பக்தி இலக்கிய நூல்கள் நீதிநூல்கள் முதலியன பதிப்பிப்பதற்கும் வேதபாடசாலைகள், தேவாரப் பாடசாலைகள் ஏற்படுத்தி நிர்வகிப்பதற்கும் விசேட விழாக்காலங்களில் சாதி மத இனவேறுபாடுகளின்கீழ் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்து வைப்பதும் இம்மடத்தின் சிறப்பு நோக்கமாகும்.

Koviloor Digital Library

முடிவுரை

தமிழர் வாழ்வியலில் கோயில்களுக்குச் சிறப்பிடம் உண்டு. கோயில்கள் காலந்தோறும் வளர்ச்சியினையும் மாற்றங்களையும் பெற்று இன்றுள்ள நிலையினை அடைந்துள்ளன. அவ்வகையில் அக்காலக்கோயில்களான கோவிலூர்த் திருக்கோவிலில் பழமைக்கு எடுத்துக்காட்டாய் இக்கோயிலில் உள்ள கற்சிற்பங்களும் புடைப்புச் சிற்பங்களும் சுதைச் சிற்பங்களும் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சான்றெண் விளக்கம்

1. சா.கணேசன், கலைமகள், பக்.44–46
2. தி.நா.சுப்பிரமணியன், கலைமகள், பக்.457 – 461
3. இனியவன், நனிபுகழ் நகரத்தார், பக். 184–185.

Koviloor Digital Library

திருப்புத்தூர் திருத்தளிநாதர் திருக்கோயில் வழிபாடும் திருஉருவ அமைதியும்

முனைவர் ஆறு. சரவணக்குமார், முனைவர் கு. இரா.பத்மினிதேவி
துறைத்தலைவர் (பொ) வரலாற்றுத்துறை, முனைவர் பட்ட ஆய்வாளர்,
கல்வியியல் துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

முன்னுரை

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே

என்ற அடிகளுக்கு ஏற்ப தமிழர் நாகரிகம் பண்பாடு மற்றும் கலைகளின் பதிவிடங்கள் ஆக திகழ்வன தமிழகத் திருக்கோயில்கள் ஆகும். கிபி ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழர் வரலாற்றிலும் வாழ்விலும் திருக்கோயில்கள் பிரித்து அறிய முடியாத அளவிற்கு பின்னிப் பிணைந்தன. இதனை உணர்ந்த மக்கள் கோயில்களில் ஆன்மீகத்தோடு கலைகளையும் வளர்த்தனர்.

ஆடல் பாடல் இசை கூத்து சிற்பம் ஓவியம் ஆகிய அனைத்து விதங்களிலும் கோயில்களை மையமிட்டு வளர்ந்தன அவ்வகையில் இறை அருளுடன் கலை அழகும் கூடியிருக்கும் திருக்கோயில்களில் ஒன்றாய் திகழ்வது திருப்புத்தூர் திருத்தளிநாதர் திருக்கோயில் ஆகும் இக்கோவிலின் தல வரலாறும் வழிபாட்டு மரபும் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

திருக்கோயில் அமைவிடம்

சிற்பங்கள் நுட்பங்கள் ஓடும் என்கிற ஓவியங்கள் உணர்ச்சி பாவங்களோடு ஒளிர உலகெல்லாம் கடந்தானின் உறைவிடங்கள் நிறைந்த தமிழகத்தில் முக்கண்ணனே போற்றி பரவிய மூவேந்தர் ஊர் பாண்டியர்கள் கட்டிய திருத்தளிநாதர் திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாட்டின் முக்கிய நகரம் ஆகிய காரைக்குடியில் இருந்து 21 கிலோமீட்டர் தொலைவில்

Koviloor Digital Library

மதுரை செல்லும் பேருந்து வழியில் திருப்புத்தூர் என்ற தலத்தில் அமைந்துள்ளது.

ஊர்ப்பெயர்க் காரணம்

பண்டைக் காலத்தில் இவ்வூர் சிதம்பரம் புத்தூர் கொன்றை வனம் நவ புரம் கௌரிபுரம் வால்மீகி புரம் என்றெல்லாம் பல பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. எனினும் இவ்வூர் தற்காலத்தில் பேச்சு வழக்கில் திருப்பத்தூர் என்றும் எழுத்து வழக்கில் திருப்புத்தூர் என்றும் வழங்கப்படுகிறது திருப்பூர் தான் சரியான பெயர் என்பதற்கு.

திருப்புத்தூரில் மருவி உறைதரு பெருமாளே (திருப்புகழ் 990)

என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார் இருப்பினும் புத்தூர் என்பதுதான் பெயர் மாதிரி பின் திரு என்ற அடைமொழி சேர்த்து திருப்புத்தூர் ஆயிற்று என்பாருமுளர் தோற்றமும் வளர்ச்சியும் திருப்புத்தூரில் நாள்தோறும் மாடு ஒன்று காட்டிற்கு செய்யப்போவது பழக்கமாக இருந்தது அப்படி செல்லுகின்ற பொழுது ஓரிடத்தில் தினமும் பாலைத்தானே சுரந்து நின்றது. இதனைக் கண்ட மக்கள் அவ்விடத்தை வெட்டி ஆராய்ந்தனர் என்றும் அங்கே சுயம்பு லிங்கம் ஒன்று இருந்ததைக் கண்டு அவ்விடத்தில் ஒரு கோயிலை கட்டினார் என்றும் செவிவழியாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கதையை உறுதியாக்கும் வண்ணமாக பசு லிங்கத்தின் மீது பால் சுரப்பது போன்ற ஒரு புடைப்புச் சிற்பம் இன்றும் திருத்தளிநாதர் கோயிலில் ஆடல்வல்லான் சந்நிதியில் உள்ள தூணில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்பே கிபி எட்டாம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டியன் மாறன் சடையன் ஆகிய வரகுணன் இக்கோயிலை கற்கோயில் ஆக்கினான் என்று தனி கற்களில் அமைக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள் உறுதி கூறுகின்றன. இந்தக் கல்வெட்டுகளில் இத்திருக்கோயில் ஸ்ரீ தளி, திருத்தளி என்றே குறிப்பிடப்படுகிறது.

ஆலயத்தின் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுகளிலிருந்து காலம்தோறும் இக்கோயில் புதிதாக கட்டப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வந்துள்ளமை புலனாகிறது.

Koviloor Digital Library

சுவாமி பெயர்க்காரணம்

எழுந்தருளியுள்ள கடவுளைக் கொண்டே உருவாக்கியுள்ள திருக்கோயில் அப் பெயராலேயே அழைக்கப்பெறுவது இயல்பு. அவ்வகையில் அக்காலத்து தோன்றியதோ என எவரும் அறிய இயலாத வகையில் திருத்தளியின் கருவறையில் சுயம்பு லிங்கமாய் தோற்றம் தந்து அருள்பாலித்து வருகின்றது. அவ்வாறு திருப்புத்தூரில் கோயிலை வைத்து குடிகொண்டு அருள்பாலிக்கும் பரம்பொருள் திருத்தளி என புகழ் பெற்று வீற்றிருக்கும் மூர்த்தியாகிய திருத்தளிநாதர் எனவும் திருத்தளியார் எனவும் போற்றப்படுகிறார்.

அம்மன் பெயர்க் காரணம்

இத்திருக்கோயிலில் உள்ள அம்மனின் பெயர் சிவகாமி சுந்தரி என்பதற்கும் கிபி 12 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் குறிப்பு தருகின்றன. அவ்வகையில் அம்மையை சிவகாமி சுந்தரி என்ற தற்போதைய பெயரால் வழங்குவது பொருத்தமுடையதாகிறது.

பைரவர் பெயர்க் காரணம்

திருத்தளிநாதர் கோயில் ஊர் மக்கள் வைரவர் கோயில் என்று அழைக்கின்றனர் இக்கோயிலில் பைரவருக்குச் சிறப்பு அதிகம் என்பதால் பைரவர் கோயில் என்றே மக்கள் வழங்குகின்றனர் இதற்கு இக்கோயிலில் பூசை செய்யும் அர்ச்சகர் ஒருவர் பைரவருக்கு அடுத்த கால பூசை முடித்து வீடு சென்றார் வீட்டில் அவருடைய மனைவி உடன் அழைத்துச் சென்று குழந்தை எங்கே என்று கேட்க அப்போது தான் குழந்தையை கோவிலிலேயே விட்டுவிட்டு வந்ததை உணர்ந்தார் அந்த அர்ச்சகர் மனைவியிடம் கூறிவிட்டு மறுபடியும் கோயிலுக்குச் சென்று குழந்தையை தேடினார் அப்பொழுது காலையில் வந்து குழந்தையை கூட்டி செல் என்று அசரீரி கேட்டது அதை மனைவியிடம் திரும்பி வந்து அவர் கூற ஆனால் அவளோ குழந்தை வேண்டி அர்ச்சகர் மீண்டும் திரும்பி வந்து குழந்தை வேண்டும் என கேட்க அதற்கு நான் வேண்டாமா என்ற அசரீரி மீண்டும் கேட்டது அதைக்கேட்ட கதவைத் திறக்க முயல தெய்வம் குழந்தையின்

Koviloor Digital Library

கால்களை பிய்த்து திருச்சுற்று மதில் உள்ள சாளரத்தின் வழியாக எறிந்தது.

இதனால் துன்பம் அடைந்த அர்ச்சகர் என் குழந்தையை இவ்வாறு கொடுத்ததால் உனக்குச் சக்தியே இல்லாது போகட்டும் என்று சபித்து ஊரை விட்டுச் சென்று விட்டதாகவும் அதன் பின்பு சக்தி இல்லாமலேயே பைரவர் இருந்தார் என்றும் சில ஆண்டுகளுக்கு முன்புதான் கணபதி முத்தையா ஸ்தபதி என்பவரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வைரவருக்குச் சக்தி ஏற்பட்டது என்றும் பல தகவல்கள் கூறுகின்றன.

திருக்கோயில் அமைப்பும் தெய்வங்களும்

பாண்டியர்கள் மற்றும் நாயக்க மன்னர்களின் காலக் கட்டிடக் கலையை நன்கு விளக்கும் வண்ணம் திருப்புத்தூர் திருக்கோயில் அமைப்பும் தெய்வங்களும் ஆகம முறைப்படி கட்டப்பட்டுள்ளன. அவ்வகையில் இத்திருக்கோயில் அமைப்புகளில் திருத்தளிநாதர் கருவறை அர்த்தமண்டபம் துவாரபாலகர்கள் மகா மண்டபம் நந்தி பொல்லாப்பிள்ளையார் நால்வர் சண்முகநாதர் பன்னிருதிருமுறை பெட்டகம் ராமர் லட்சுமணர் சீதை செப்புத்திருமேனிகள் நடராசரை சக்தி விநாயகர் தட்சிணாமூர்த்தி லிங்கோத்பவர் வருணலிங்கம் மகாகணபதி காசிவிசுவநாதர் விசாலாட்சி தலவிருட்சம் அகத்தியலிங்கம் மகாலட்சுமி சண்டிகேஸ்வரர் துர்க்கை ஆடல்வல்லான் மண்டபம் தூண்கள் ஸ்ரீ கொன்றை யோக நாராயணப்பெருமாள் சூரியன் மகாலட்சுமி கொடிமரம் பலிபீடம் சூல தேவர் சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை வன்னி மரத்து விநாயகர் வன்னிமரம் மருதுசகோதரர்கள் மண்டபம் பைரவர் சன்னதி திருநாகேஸ்வரர் சன்னதி அம்மன் சன்னதி அம்மன் சன்னதி கோபுரம் ராஜ கோபுரம் போன்ற பல்வேறு வகையான தெய்வங்களும் கட்டிட அமைப்பு கொண்டு இக்கோவில் அமைந்து காணப்படுகிறது.

திருக்கோயிலில் உள்ள திருவமைதிகள்

கருவறையில் திருத்தளிநாதர் சுயம்பாக அமர்ந்த நிலையில் உள்ளார் கருவறையின் வெளிப்புறத்தில் முன் மண்டபத்தில்

Koviloor Digital Library

துவார பாலகர்களின் உருவங்கள் பெரிய வடிவில் அமைந்து காணப்படுகின்றன.

கருவறை தேவ கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி கல்லால் ஆன மரத்தடியில் அமர்ந்த வடிவில் காட்சி தருகின்றார் மேற்கு தேவ கோட்டத்தில் சிறிய லிங்கம் ஒன்று உள்ளது.

முன் மண்டபத்தின் வடக்குப் பக்கம் சண்முகநாதர் ஆறு முகங்களுடன் மயில் மீது அமர்ந்த வண்ணமும் தெற்கே பொல்லாப்பிள்ளையார் காட்சி தருகின்றனர் மேலும் நால்வர் நின்ற நிலையில் இருப்பதையும் காண முடிகிறது.

முதல் திருச்சுற்றில் கிழக்கு நோக்கி சூரியன் நின்ற வடிவில் உள்ளார் இவருக்கு அருகில் உள்ள சிறிய சிற்பத்தை பைரவர் என்றும் கூறுகின்றனர் வடக்கு நோக்கி மகாலட்சுமி பத்ம பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ளார் மேலும் வீரபத்திரர் திருவுருவம் தட்சிணாமூர்த்தி என்று என்னும் படியாக உள்ளது.

மேற்குத் திருச்சுற்று மாளிகையில் சக்தி விநாயகர் அமர்ந்த வடிவில் அருள்பாலிக்கின்றார் வருணலிங்கம் மகாகணபதி காசி விஸ்வநாதர் மகாலட்சுமி ஆகியோரின் திருஉருவம் மிகச்சிறப்பாக அமைந்து காணப்படுகின்றது.

கொன்றை யோக நாராயணப்பெருமாள் திரு உருவம் மிகப் பெரிய வடிவம் கொண்டு இவர் யோக நிலையில் அமர்ந்து இவருக்கு இருபுறமும் முனிவரும் ஸ்ரீதேவியும் உள்ளனர் ஸ்ரீதேவிக்கு அருகில் அனுமன் நின்ற வடிவில் காட்சி தருகிறார்.

சண்டிகேஸ்வரர் மலர்ந்த முகத்துடன் வேடத்தில் இடக்காலை மடக்கி வலது காலை தொங்கவிட்ட நிலையில் அமர்ந்த வடிவில் ஆடை அணிகலன்கள் அணிந்து காட்சி தருகின்றார். துர்க்கை நின்ற வடிவில் பீடத்தில் நான்கு கைகளுடன் காட்சி தருகிறார் இவள் தடித்த ஆடை அணிகலன்கள் அணிந்து அருள் பாலிக்கின்றாள்.

முதல் திருச்சுற்றில் ஆடல்வல்லான் சன்னதியாகும் இவர் இருபுறமும் அமையும் நந்திகேஸ்வரர் நின்றபடி வில் நின்றும் வல்லான் பத்து கைகளுடன் ஆயுதம் தாங்கி தாண்டவ நிலையில் காட்சி தருகிறார்.

Koviloor Digital Library

வள்ளியும் தெய்வானையும் திரிபங்க நிலையில் ஆடை அணிகலன் அணிந்து இரு கைகளுடன் நின்ற வடிவிலும் முருகன் கோயிலுக்கு அருகில் நான்கு கைகளுடன் காட்சி தருகின்றார்.

வன்னிமரத்து விநாயகர் மிகப்பெரிய வடிவில் அமர்ந்த வடிவில் தனிச்சன்னதியில் அமர்ந்துள்ளார்.

பைரவர் யோக பைரவர் ஆகும் கரண்ட மகுடம் தரித்து பத்ம பீடத்தில் யோகாசனத்தில் உள்ளார் இருக்கைகள் கொண்டு வலக்கையில் அசனி தரித்த பரியங்க நிஷ்டையிலும் இடக்கையினைத் தொடை மீதும் வைத்துக் காட்சி தருகிறார்.

சிவகாமியம்மை நின்ற வடிவிலும் இருக்கைகளில் வலக்கையில் கிழியும் இடக்கையில் தொங்கிய நிலையிலும் உள்ளன நாட்டியமாடும் பாவனையில் திரிபங்க நிலையிலும் நின்று காட்சி அளிக்கிறார்.

செப்புத்திருமேனிகள் கொண்டு ராமர் லட்சுமணர் சீதை நடராஜர் சிற்பங்கள் அமைந்து அவ்வகையில் திருக்கோயிலில் உள்ள திருவமைதிகள் காட்சியளிக்கின்றன.

முடிவுரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட திருப்பதிகளுள் ஒன்றாய் இத்திருக்கோயில் புகழ்பெற்று விளங்குகிறது.

இதன்வழி பழமை பழம் பெருமையையும் இத்திருக்கோயில் மக்கள் மனதில் நிற்பது போல் சிவகங்கை மாவட்டத்தில் மிகப் பழமையான கோயில்களில் ஒன்றாய் திகழ்வதோடு புண்ணிய தலமாகவும் இக்கோயில் விளங்குகிறது என்பதனை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

Koviloor Digital Library

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் வழிபாட்டு முறைகள்

திருமிகு. ஆர். செந்தில்குமரன்,
இயக்குநர்,
உடற்கல்வி இயக்குனரகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

திருமிகு. எஸ். சரோஜா,
உதவிப் பேராசிரியர்,
உடற்கல்வியியல் கல்லூரி,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

முன்னுரை

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவை பிராட்டி குறிப்பிடுவார். "மாலற நேயமும் மலிந்தவர் வேடமும், ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" என்று சித்தாந்த சைவ மெய்கண்ட நூல்களின் தலைமணி நூலான, மெய்கண்டாரின் சிவஞான போதம் குறிப்பிடும். மெய்யன்பு உடைய அடியார்களின் திருவேடத்தையும் சிவனின் திருக்கோயிலையும் பரம்பொருளின் வடிவாகவே கண்டு வணங்க வேண்டும் என்று சிவஞானபோதம் குறிப்பிடுகின்றது.

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்,
தேடித் திரிந்து சிவபெருமான் என்று,
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்,
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். திருக்கோயில்களைத் தேடிச் சென்று, திருமுறைகளை ஓதி வழிபட்டால் நம் உள்ளம் ஒன்று படும். ஒன்று பட்ட உள்ளத்தைப் பெருமான் அவன் வாழும் கோயிலாக் கொள்வான் என்று திருமூலர் குறிப்பிடுவார்.

பசுவின் உடலில் உள்ள குருதிதான் பாலாக மாறினாலும் பசுவின் மடியில் கறந்தால்தான் அது பாலாகக் கிடைப்பதுபோல் பரம்பொருள் எங்கும் எதிலும் விரவி இருப்பினும் அப்பரம்பொருளின் திருவருள் வெளிப்பட்டு விளங்கும் அருள்மையமாகத் திருக்கோயிலை அறிவியல் ஆராய்ச்சியுடனும்

Koviloor Digital Library

அருள் விளக்கத்துடனும் நம் முன்னோர் அமைத்துள்ளனர்.

தஞ்சை பெருவுடையால் கோயில் என்கிற பிரகதீசுவரர் கோவிலின் வழிபாடு முறையைப் பற்றி கீழ்கண்ட கட்டுரையில் விரிவாக காணலாம்

தஞ்சைப் பெரிய கோயில்

தஞ்சைப் பிரகதீசுவரர் கோயில் என்றும், தஞ்சைப் பெரிய கோயில் அல்லது தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் அறியப்படும் தலம் தஞ்சாவூரிலுள்ள சோழ நாடு காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள திருவிசைப்பா பாடல் பெற்ற சிவன் கோயிலாகும். இக்கோயில் உலகப் பாரம்பரியச் சின்னமும் ஆகும். இந்தியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய கோவில்களில் இதுவும் ஒன்றாகவும், தமிழர் கட்டிடக்கலைக்குச் சான்றாக விளங்கும் இக்கோவில் அற்புதமான கட்டிடக்கலை அம்சத்தைக்கொண்ட இந்தியா கோவில்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. கிபி 10-ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற தமிழ் மாமன்னர் முதலாம் இராஜராஜ சோழன் இக்கோயிலைக் கட்டுவித்தார்.. 1003-1004 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கோயிலுக்கு 2010 ஆவது ஆண்டோடு 1000 ஆண்டுகள் நிறைவடைந்தன

கோயில் அமைப்பு

முக்கியமான கட்டடம் 150 அடி நீளம் இருக்கிறது. மிகப் பிரம்மாண்டமான விமானம் எகிப்தியப் பிரமிடுகளைப் போல கூர்நுனிக் கோபுரமாக அமைந்து கர்ப்பக்கிரகத்திலிருந்து 190 அடி உயரத்திற்கு ஓங்கி வளர்ந்திருக்கிறது. அக்காலத்தில் புவனேஸ்வரத்தில் கட்டப்பட்ட லிங்கராஜர் கோயிலின் உயரம் 160 அடியாகும். இராஜராஜேஸ்வரம் அதையும் மிஞ்சி விட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கோயிலில் பிற்காலத்தில் கட்டப்பட்டவை - முன் தாழ்வாரம், நந்தி மண்டபம், கருவூர்த் தேவர் கோயில், அம்மன் கோயில், சுப்பிரமணியர் கோயில் ஆகியன.

இவை தவிர இந்த மாபெரும் கோயிலின் ஏனைய பகுதிகள் யாவும் ஒரே காலத்தவை. இவற்றினுடைய பெருமிதத்

Koviloor Digital Library

தோற்றத்தையும் ஒருங்கிணைந்த திட்டத்தின் எளிமையான இயல்பையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. துணைச் சார்ந்த (Axial) மண்டபங்களும், விமானமும் அர்த்த மண்டபமும் மகாமண்டபமும் பெரிய நந்தியும் அவற்றிற்கேற்ற பொருத்தமான அளவுகளையுடைய ஒரு சுற்றுச் சுவருக்குள் அடங்கியிருக்கின்றன. இச்சுவரில் கிழக்கே ஒரு கோபுரம் இருக்கிறது. மதிலை ஒட்டி உள்பக்கமாக பல தூண்களுள்ள ஒரு நீண்ட மண்டபம் செல்லுகிறது. இது 35 உட்கோயில்களை இணைக்கிறது. நான்கு திக்குகளிலும் பல இடைவெளிகளுக்கு நடுவே கேந்திரமான இடங்களில் இந்த உட்கோயில்கள் கட்டப் பெற்றிருக்கின்றன. இரண்டாவது வெளிப் பிரகாரத்தின் வாயிலாக இருந்த இடத்தில் முன் பக்கத்தில் இரண்டாவது கோபுரம் இருக்கிறது.

நந்தி மண்டபம்

தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள பெரிய நந்தி ஒரே கல்லால் செய்யப்பட்டது. இதன் உயரம் 14 மீ, நீளம் 7 மீ, அகலம் 3 மீ ஆகும். நந்தி மண்டபம் தஞ்சை நாயக்க மன்னர் செவ்வப்ப நாயக்கரால் கட்டடப்பட்டது.

நந்திமண்டபத்திற்கு தெற்கே உள்ள திருச்சுற்று மாளிகையில் வடதிசையை நோக்கியபடி உள்ள நந்தியே இராஜராஜனால் பெருவுடையாருக்கு எதிரே அமைக்கப்பட்டதாகும். பின் தஞ்சை நாயக்க மன்னர்கள் சிவலிங்கத்துக்கு இணையான பெரிய நந்தியை நிறுவினர். முதலில் அமைக்கப்பட்ட நந்தி கேரளாந்தகன், இராஜராஜன் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதிக்கும் பின்னர் திருச்சுற்று மாளிகைக்கும் மாற்றப்பட்டது.

தஞ்சைப் பெரிய கோயிலின் சிறப்பு

- இக்கோவில் விமானத்தின் உயரம் 216 அடி (66மீ) உயரம் கொண்டது.

- இக்கோவிலில் தமிழின் சிறப்புக்களும் மாமன்னர் இராஜ ராஜ சோழனின் தமிழ் பற்றும் கோயிலில் உள்ள சிவ லிங்கத்தின் உயரம் 12 அடி தமிழின் உயிர் எழுத்துக்கள் 12, சிவ லிங்கத்தின் பீடத்தின் உயரம் 18 அடி தமிழின் மெய் எழுத்துக்கள் 18,

Koviloor Digital Library

கோயிலின் கோபுரத்தின் உயரம் 216 அடி தமிழின் உயிர் மெய் எழுத்துக்கள் 216, சிவ லிங்கத்திற்கும் நந்திக்கும் உள்ள இடைவெளி 247 அடி தமிழின் மொழியின் மொத்த எழுத்துக்கள் 247 ஆகும்

- இரண்டு அல்லது மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வந்த காலத்தில், கற்களே கிடைக்காத காவிரி சமவெளிப் பகுதியில், 15 தளங்கள் கொண்ட சுமார் 60 மீ உயரமான ஒரு கற்கோயிலை ராஜராஜன் எழுப்பினார்.

- இத்தகையதொரு பிரம்மாண்டமான கோயில் சுமார் 7 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது

- கருவறையில் உள்ள சிவலிங்கம் உலகிலேயே பெரிய சிவலிங்கமாகும். 6 அடி உயரம், 54 அடி சுற்றளவு கொண்ட ஆவுடையார், 23 அரை அடி உயரம் கொண்ட லிங்கம் ஆகியன தனித்தனியாக கருங்கற்களால் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

- இக்கோவிலின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான நந்தி சிலையின் உயரமும், அகலமும் முறையே: 13 அடிகள் மற்றும் 16 அடிகள் ஆகும்.

- தமிழகத்தில் சற்றொப்ப இதே அமைப்பிலுள்ள கோயில்கள் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீசுவரர் கோயில், தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில், திருபுவனம் கம்பஹரேஸ்வரர் கோயில் ஆகியவையாகும்.

- 1010 ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட இந்தக் கோயிலுக்கு 2010 ஆவது ஆண்டோடு 1000 வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

கோவிலின் வழிபாட்டு முறைகள்

காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையும் கோவில் திறந்து இருக்கும்

சித்திரை மாதம் பிரம்மோற்சவம் 18 நாட்கள் திருவிழா சதய நட்சத்திரம் அன்று கொடி ஏற்றி சித்திரை நட்சத்திரம் அன்று தீர்த்தவாரி நடக்கும்.மாதாந்திர பிரதோஷ நாட்கள் அன்று

Koviloor Digital Library

பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். ராஜராஜசோழன் பிறந்தநாள் விழா சதய நட்சத்திரத்தன்று சுவாமிக்கு அபிஷேகம் சிறப்பாக நடைபெறும்.

இந்தக் கோவிலில் உள்ள லிங்கம் மத்திய பிரதேசம் மாநிலம் நர்மதா நதிக்கரையில் இருந்து ஒரு மலையில் எடுக்கப்பட்டது. சுவாமி உடுத்தும் வேஷ்டியின் நீளம் 35 மீட்டர். பக்தர்கள் வஸ்திரம் சாத்த விரும்பினால் இதற்கென முன்னேற்பாடு செய்யவேண்டும். அபிஷேகம் செய்ய லிங்கத்தின் இருபுறமும் படிக்கட்டுகளுடன் கூடிய மேடை மேடை அமைக்கப்பட்டு உள்ளது. உலகிலேயே இங்குதான் சண்டிகேஸ்வரர்க்கு மிகப்பெரிய சன்னதி உள்ளது. இங்கு நவகிரஹ சன்னதி இல்லை. சிவனே நவகிரஹ நாயகனாக உள்ளதால் நவகிரகங்களுக்குப் பதில் நவ லிங்கங்கள் உள்ளது. மிகப்பெரிய லிங்கம் இருந்தாலும் இங்கு பீடம் இல்லை. இங்கு உள்ள வராகி அம்மன் சன்னதியில் பிராத்தனை செய்து கொண்டால் திருமணம் நடக்கும் என்பது நம்பிக்கை.

குழந்தை இல்லாதவர்களுக்கு இங்கு மனமுருகி பிராத்தனை செய்வதால் குழந்தை பெரு கிடைக்கிறது. மூலவரை தரிசனம் செய்தால் மன அமைதி கிடைக்கும். மன துயரம் நீங்கும்.

பால் தயிர் பஞ்சாமிர்தம் அரிசி மாவு தேன் பன்னீர் இளநீர் சந்தனம் விபூதி மஞ்சள் போடி போன்றவை சுவாமிக்கு அபிஷேகம் செய்யப் பயன்படுகிறது.

சிவனுக்கு பிடித்த வழிபாடு முறை

சிவமந்திரம்

சிவபுராணத்தில் சிவபெருமானுக்கு அவரின் துதிபாடும் மந்திரங்கள் பிடிக்குமென கூறப்பட்டுள்ளது. அதன்படி ஒரு வெண்கலப் பாத்திரத்தில் சுத்தமான தண்ணீரை எடுத்துக்கொண்டு சிவமந்திரங்களை கூறிக்கொண்டே சிவனுக்கு அபிஷேகம் செய்வது அவருடைய உக்கிரத்தை அணைப்பதோடு நம் வாழ்விலும் அமைதியை கொண்டுவரும்.

Koviloor Digital Library

குங்குமப்பூ

குங்கமப்பூ என்பது மக்களால் ஆரோக்கியத்திற்குப் பயன்படுத்தபட்டு வருகிறது. ஆனால் அது சிவனுக்கு மிகவும் பிடித்த பொருள் என்பது பலரும் அறியாத ஒன்று. குங்குமப்பூவை கொண்டு சிவனை வழிபடுவது வாழ்வில் செல்வத்தையும், அதிர்ஷ்டத்தையும்அள்ளித்தரும்.

பன்னீர்

சிவபுராணத்தின்படி ஈசனுக்குப் பன்னீர் அபிடேகம் செய்வதோ அல்லது வைத்து வழிபடுவதோ சிவபெருமானைக் குளிர்விக்கும் அதோடு தூய்மையையும் பரப்பும். மேலும் இவ்வாறு வழிபடுவது பக்தர்களுக்கு அவர்கள் வாழ்க்கையின் இலட்சியத்தில் கவனம் செலுத்த உதவுவதோடு அதனை அடையவும் அருள்புரியும்.

முடிவுரை

உயிரை ஒருமுகப்படுத்தும் நிலையமாக விளங்க வேண்டியத் திருக்கோயில்கள், அந்நோக்கத்தில் இருந்து தவறி, மன அமைதிக்கும் ஆறுதலுக்கும் இறை அன்பினைச் செலுத்துவதற்கும் வழிவிடாமல் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஆரவாரத்திற்கும் பகட்டிற்கும் வணிகத்திற்கும் துணைபோகின்ற கூடாரமாக மாறிவிட்டச் சூழலும் இன்று பலர் திருக்கோயில்களுக்குச் செல்வதனைத் தவிர்த்து விட்டதற்குக் கரணியமாய் அமைந்து விடுகிறது.

எனினும் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாதது என்று சைவ மெய்கண்ட நூல்களும் திருமுறைகளும் சிவ ஆகமங்களும் அடியார்களின் வரலாறுகளும் குறிப்பிடுவதால் எக்கரணியத்தையும் முன்வைக்காமல் திருக்கோயில் வழிபாட்டினைச் செய்வதற்குக் கடப்பாடு உடையவர்கள் ஆகின்றோம். குடும்பத்தோடு திருக்கோயில்களுக்குச் செல்வோம், அடுத்த தலைமுறையினருக்கு வழிகாட்டுதலாய் அமைவோம்.

Koviloor Digital Library

திருக்கோயில்களின் கட்டடக்கலை நுட்பங்களும் கலைச் சொற்களும் - ஓர் ஒப்பீடு

முனைவர் செ. சாந்தி
கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

ஆய்வுச்சாரம்

கட்டடக்கலையமைப்புகளைப் பற்றியும் கலைச் சொற்களைப் பற்றியும் ஆய்வு மேற்கொள்வதற்குச் சில நூல்களின் தரவுகளும் பின்பற்றப்பட்டுள்ளன. பெர்ஸி பிரௌன் என்பவர் எழுதிய Indian Architecture என்னும் நூலினையும், ழுவேதுப்ராய் என்பவர் எழுதிய Dravidian Architecture என்ற நூலினையும், ஜே.சி.கார்லே என்பவர் எழுதிய The Art and Architecture of Indian subcontinent என்ற நூலினையும், கே.ஆர்.சீனிவாசன் என்பவர் எழுதிய Temples of South India போன்ற கலை வரலாற்று நூல்களையும், பி.கே.ஆச்சார்யா என்பவர் எழுதிய Indian Architecture According to Manasara A Dictionary of Hindu Architecture என்னும் ஆகம நூல்களின் தரவுகளையும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதுக் குறிப்பிடத்தக்கது.

கட்டடக்கலையானது நாகரிகத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுவதைப் போல தமிழகக் கோயில்களின் கட்டடக்கலையும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. சங்ககாலத்தில் செங்கற்களாலும், சுண்ணாம்புகளாலும் கோயில்களை எடுப்பித்து பின்பு கி.பி.6ம் நூற்றாண்டில் பல்லவர் மற்றும் முற்காலப்பாண்டியர்களின் காலத்தில் குடைவரைகள் மலைத்தளிகளாகவும் சோழர்களின் காலத்தில் அதிட்டானவர்க்கங்களாக, பித்தி, பிரஸ்தரம், விமானம் போன்றக் கலைக் கூறுகளுடன் அமைந்தக் கற்றளிகளாகவும், உயர்ந்த மண்டபங்கள், உயர்ந்தக் கோபுரங்களைக் கொண்டக் கற்றளிகளாகவும் வளர்ச்சிப் பெற்றுள்ளன. மேலும் இலக்கியங்கள், கல்வெட்டுகள , செப்பேடுகளின் அடிப்படையில் கோயில்களின் வரலாற்றை தொகுப்பதைப்

Koviloor Digital Library

போல் இச்சான்றுகள் கிடைக்கவில்லையெனினும் கோயில்களில் கட்டடக்கலைப்பாணியைக் கொண்டும் இதன் காலத்தை நிர்ணயம் செய்யமுடியும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கருவறை அதிட்டானம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில்கள் ஆகம விதிமுறைப்படி அமைந்திருந்தன என்பதைப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து அதிட்டானம் குறித்தச் சான்றுகளை புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலின் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்றுபகர்கின்றன. பொதுவாகக் கோயிற் கட்டடக்கலையின் மரபானது கருவறை, விமானம், கோபுரம், மண்டபம், திருநடைமாளிகை, பிரகாரம் போன்றக் கட்டடக்கலை உறுப்புகளின் தாங்குதளம் அதிட்டானத்தைக் கொண்டே அமைந்துள்ளன. ஆகம நூல்களுல் மானசாரம், காரணாகமம், சுப்ரபேதாகமம், விசுவகர்ம வாஸ்து சாஸ்திரம், தீப்தாகமம், அம்சுமத் பேதாகமம் போன்ற ஆகமங்கள் அதிட்டானங்களின் வகைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவ்வதிட்டான வகைகளில் பாதபந்தம், பிரதிபந்தம் தமிழகக் கற்றளிகளில் அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

உபபீடம்

உபபீடம் என்பது கருவறையின் அதிட்டான அடிதளத்தின் முதல் அங்கமாக அடிப்பகுதியில் மறைக்கப்பட்டவாறு அல்லது உயரமானதாகக் காட்டப்படும்.

ஜகதி

உபபீடத்திற்கு மேலுள்ள உறுப்பானது ஜகதி அல்லது பத்மஜகதி எனக் குறிப்பிடப்பெறுகின்றது. கோயிலின் கருவறை அதிட்டானத்தின் ஜகதி அமைப்பானது பத்ம ஜகதியாகவே காட்டப்பட்டுள்ளன. பத்மம் விரிந்த நிலையில் தலைகீழாக கவிழ்த்து வைத்தது போல் மிகவும் நேர்த்தியாக காட்டப்பட்டிருக்கும்.

Koviloor Digital Library

பட்டிகை

அதிட்டானத்தில் ஜகதிக்கு அடுத்த உறுப்பு பட்டிகையாகவும். இப்பட்டிகைக்கும் ஜகதிக்குமிடையே ஒரு சிறிய சட்டத்தைப் போன்று கம்பு அமைப்பு காட்டப்படுகின்றது. பட்டிகையமைப்பானது மகாப்பட்டிகையாகவும், பத்மப் பட்டிகையாகவும் காணப்படுவதோடு அதிட்டானத்தை எடுப்பான தோற்றத்துடன் காட்டுவதற்கு இப்பட்டிகையமைப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

குமுதம்

பட்டிகைக்கு அடுத்த உறுப்பு குமுதமாகும். பட்டிகைக்கும் குமுதத்திற்குமிடையே சிறியளவில் உள்பதுங்கியவாறு அதிட்டானத்தை எடுப்பானத்தோற்றத்துடன் காட்டப்படுவதற்கு கண்டம் என்னும் பகுதி அமையப்பெற்றுள்ளது. இக்கண்டத்திற்கு மேல் குமுதமானது மூன்று பட்டைகளுடன் கூடிய முப்பட்டைக் குமுதமாகவும், வட்டவடிவில் விருத்தக் குமுதமாகவும், விருத்தக் குமுதத்தில் வரிமானங்களுடன் அலங்கரிக்கப்பட்டக் கடகவிருத்தக் குமுதமாகவும் காணப்படுகின்றன.

கண்டம்

குமுதத்திற்கு மேலுள்ளக் கண்டத்தில் பாதவர்க்கங்கள் காட்டப்பட்டுள்ளன. பொதுவாக கண்டத்தினுள் குள்ளப்பூதம், யாளி போன்றச் சிற்பங்கள் காணப்படுவதுண்டு.

பட்டிகை

கண்டத்தின் மேல் பட்டிகைப் போன்ற அமைப்பு காணப்படுகின்றது. சிறிய அளவிலான பட்டிகையமைப்பானது கபோத அலங்காரங்களுடன் பட்டிகையின் முனைப்பகுதி நீள்சதுரமாக இல்லாமல் பத்மம் போன்று சற்று வளைந்தவாறு இலை அலங்காரத்துடன் பத்ரலதாவும், கர்ண அலங்காரங்களுடனும் காணப்படுவதுண்டு.

கம்பு

பட்டிகைக்கும், கண்டத்திற்கும் இடையே கம்பு போன்ற சிறிய அளவிலான சட்டம் காணப்படுகின்றது. இச்சட்ட

Koviloor Digital Library

அமைப்பில் கபோதப் பட்டிகையை ஒட்டினாற்போல் கோயில் கருவறையின் அதிட்டானத்தில் வியாழவரி என்னும் யாளிச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கண்டம்

பட்டிகைக்கும், வேதிகைக்குமிடையே பாதவர்ககங்களுடன் கூடிய கண்டமைப்பானது காணப்படுகின்றது.

வேதிகை

கண்டத்தின் மேல் பத்மவரிகளும், பத்மம் கவிழ்த்து வைக்கப்பட்டதைப் போலும், விரிந்த நிலையிலும் அதன்மேல் சிறியப்பட்டிகையும், கம்பும் இடம்பெற்றவாறு வேதிகையமைப்பானதுக் காணப்படுகின்றன. மேலும் பித்தி, எழுதகம், கபோதம், பிரஸ்தரம், விமானம் போன்றக் கலையமைப்புகளை பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

பிரநாளம்

கருவரையின் அபிஸேக நீர் வெளியேறுவதற்கு அமைக்கப்படும் ஒருக் கலைக் கூறாகும். இவ்வமைப்பு சாதாரணக் கலையமைப்பாகவும் தாமரை இதழ் ஆபான்றக் கலையமைப் பாகவும் சிம்மமுக கலையமைப்பாகவும் காட்டப்படடிருக்கும்.

பித்தி

பித்தி என்பது அதிட்டானத்திற்கு மேலுள்ளக் கருவறையின் சுவர் பகுதியாகும். இச்சுவர் பகுதியை அலங்கரிக்கும் விதமாக அரைத்தூண்கள், தேவகோட்டங்கள், பஞ்சரங்கள் போன்றவை இடம்பெறுவதைக் கீழ்கண்டவாறு விளக்கப்படுகின்றன.

அரைத்தூண்கள்

அரைத்தூண் என்பது சுவர் பகுதியில் அலங்கரிக்கப்படும் கலையமைப்புகளுல் ஒன்றாகும். சதுரம், அரைவட்டம், பதினாறுபட்டை என்னும் வரிமானங்களுடன் அரைத்தூண்கள் காட்டப்படுகின்றன. அரைத்தூண்களின் சதுரப்பகுதியில் சிற்றுருவச் சிற்பங்கள் இடம் பெறுவதை தென்திருப்பேரை மகரநெடுங் குழைக்காதன் கோயிலில் காணலாம் என்பது

Koviloor Digital Library

குறிப்பிடத்தக்கது. அரைத்தூண்களுள் போதிகையமைப்பானது வெட்டுப்போதிகை, தரங்கப்போதிகை, பூமுனைப்போதிகை என்னும் கலை அலங்காரங்களுடன் காணப்படுகின்றன. இப்போதிகை அமைப்பைக் கொண்டுக் கோயில்களின் காலத்தையும் கணக்கிடமுடியும். இக்கோயிலில் பூமுனைப் போதிகை அரைத்தூண்களின் கலைக் கூறுகளாக சதுரப்பகுதி, நாகபந்தம், கம்புப்பகுதி, மாலசுதானம், பத்மபந்தம், கலசம், தாடி, குடம், பத்மஇதழ், பலகை, வீரகண்டம், போதிகை என அமையப்பெற்றுள்ளது.

தேவகோட்டம்

தேவகோட்டம் கருவறையின் பத்ராப்பகுதி என்னும் மையப்பகுதியில் தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் மூன்று திசைகளிலும் அமையப்பெறும் கட்டடக்கலைக்கூறாகும். தேவகோட்டங்கள் சாலையமைப்புடையத் தேவகோட்டம், தோரணமாலைத் தேவகோட்டம் என இருவகைப்படுகின்றன. இவற்றுள் சாலையமைப்புடைய தேவகோட்டமானது கபோதத்தில் கர்ண அலங்காரங்களும் அதன்மேல் சாலையமைப்பைக் கொண்டும் தோரணமாலை தேவகோட்டமானது பலகை அல்லது கபோதத்தின் மேல்பகுதியில் பத்ர, சித்ர, மகர என்னும் மூன்று தோரணங்களில் ஏதேனும் ஓர் அமைப்புடன் காணப்படும். மேலும் இதைப்போல் கோட்டப்பஞ்சர அமைப்பானது கருவறையின் சுவர்ப்பகுதியில் தேவகோட்டத்தின் இருமருங்கிலும் அகாரை மற்றும் கர்ணப்பகுதியில் ஓர் அலங்கார வேலைப்பாடாக அமைக்கப்படுகின்றன. இக்கோட்டப் பஞ்சரங்கள் விஜயநகர நாயக்கர் காலம்வரை வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இவற்றுடன் கும்பப்பஞ்சரம் என்பது கிழிருந்து மேலாகக் கலசம், கால்பகுதி, பஞ் சரம் என அமைந்து சுவர்பகுதியை அலங்கரிக்கின்றன. கும்பப்பஞ் சாரத்தைப் போல் அல்லாமல் சற்று வேறுபாட்டுடன் கம்பப்பஞ் சார அமைப்பானதுக் காணப்படுகின்றது. கும்பப் பஞ்சாரத்தின் கிழேக் காணப்படும் கலசம் போன்ற அமைப்பானது கம்பப்பஞ் சாரத்தில் காட்டப்படாமல் கம்பு போன்ற அமைப்புடன் நீண்டுக் காணப்படுவது கம்பபஞ்சாரமாகும். இக்கோயிலில்

Koviloor Digital Library

சாலையமைப்புடையத் தேவகோட்டங்கள் காணப்படுகின்றன. தோரணமாலையமைப்பு பெரும்பாலும் அம்மன் கருவறையில் இடம்பெற்றுள்ளன. இத்தேவக்கோட்டங்களில் ஆகம் இலக்கணக் கட்டடக்கலைக் கூறுகளாக அதிட்டானம், கால், மாலசுதானம், பத்மபந்தம், கலசம், தாடி, குடம், பத்ம இதழ், பலகை, வீரகண்டம், அமுதகம், கபோதம், சாலை, கபோதம், கலசம் என இடம்பெற்றிருக்கின்றன.

சாளரம்

கோயில்களின் கட்டடக்கலைக் கூறுகளில் சாளரங்கள் அலங்கார வேலைப்பாட்டுடன் பயன்பாட்டுத் தேவைக்காக கருவறையின் வெளிச்சுவரிலும், அர்த்தமண்டபச் சுவரிலும், இடம்பெறுகின்றது. பெரும்பாலும் திருச்சுற்று இல்லாதக் கருவறைச் சுவரில் சாளரங்கள் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சாளரங்கள் தமிழகத்துக் கோயில்களில் பல்லவர் காலந்தொட்டே இடம்பெற்றுவந்துள்ளன. பிற்காலத்தில் சாளரங்கள் பல்வேறு அமைப்புகளில் செதுக்கப்பட்ட தோடல்லாமல் அவற்றினிடையே சிறு அளவிலான சிற்பங்களையும் இடம்பெறச் செய்துள்ளனர். இச்சாளர அமைப்புகள் இக்கோயிலின் அர்த்த மண்டபங்களில் அதிகமாக இடம்பெறுகின்றன. அம்மன் கருவறையின் முன்பு பெரிய அளவிலானச் சாளரங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சாளரம் அம்மனைத் தரிசிப்பதற்காக அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு வழிபாட்டு முறைக்கும் சாளரங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதைக் கோயில் சாளரத்தின் மூலம் அறியமுடிகின்றன.

எழுதகம்

கருவறையின் பித்தி மற்றும் கபோதத்தின் இடையேயுள்ள புடைப்புப் பகுதியே எழுதகம் எனக் குறிப்பிடப்பெறுகின்றன. பல்லவர்களின் காலத்திலிருந்து சோழர், பிற்காலப் பாண்டியர்களின் காலம் வரை எழுதகப் பகுதியில் குள்ளப்பூதங்களின் சிற்பமும், பத்மம், அன்னவரிசை என்னும் அலங்கார வேலைப்பாடுகள் காணப்படும். விஜயநகர, நாயக்கர்களின் காலத்தில் இவை மாற்றப்பட்டு பெருமளவில் வளைந்தக் கட்டையமைப்பு இடம்பெறுகின்றது. சிலக்

Koviloor Digital Library

கோயில்களில் எவ்வித வேலப்பாடுமின்றி புடைப்பாகவே அமைந்திருக்கும்.

கபோதம்

எழுதகத்தின் மேலும் பிரஸ்தரத்தின் கீழும் காணப்படுவது கபோதப் பகுதியாகும். கபோதத்தில் கர்ணக்கூடுகள், சிம்மமுகக் கர்ணக்கூடுகள், மகாநாசிக் கர்ணக்கூடுகள், பத்ரலதா போன்ற அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இக்கபோதப் பகுதியானது மழைநீர் உள்ளே வருவதை தடுப்பதற்காக அமைக்கப்பெறும் கட்டடக்கலைக் கூறுகளில் ஒன்றாகும். கோயிலின் மண்டபக் கபோதத்தில் கர்ணக்கூடுகளும் கூடுகளில் சிற்பங்களும் மிக நேர்த்தியாக அமையப்பெற்றுள்ளன.

பிரஸ்தரம்

பிரஸ்தரம் என்பது எழுதகம் கபோதம் போன்ற கூறுகளைக் கொண்ட அமைப்பாகும். இப்பிரஸ்தரம் பகுதியில் யாளிசிற்பங்கள் இடம்பெறுகின்றன. இப்பிரஸ்தரத்திற்கு மேல் கருவறையின் விமானங்கள் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

விமானம்

விமானம் என்பது அதிட்டானம் பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி போன்றக் கலைக்கூறுகளைக் கொண்டதாகும். விமானமானது நாகரம், திராவிடம், வேசரா போன்றக் கலையமைப்புகளைக் கொண்டு அமையப் பெற்றுள்ளன. இக்கலையமைப்புகளில் ஸ்தூபி வரையில் சதுரமாக காணப்படுவது நாகரமாகவும், கிரீவத்திலிருந்து எட்டுப்பட்டையாக காணப்படுவது திராவிடமாகவும், கீரிவத்திலிருந்து வட்டவடிவமாகக் காணப்படுவது வேசரம் என ஆகமக் கலைப்பாணிகளாகக் குறிப்பிடப்பெறுகின்றன. கோயில்களின் கருவறை விமானமானது திராவிடக் கலைப்பாணியில் ஏகதள் அமைப்புடன் காணப்படுகின்றன. இவ்விமானங்கள் கிரீவம், மகாநாசிக்கூடுகள், பதினாறு பட்டைகள் தீட்டப்பட்ட ஸ்தூபியுடன் பத்மம் கவிழ்த்து விரிந்த நிலையில் வைக்கப்பட்டதைப் போல் அதன்மேல் கலசமானது அமையப்பெற்றுள்ளது.

Koviloor Digital Library

மண்டபங்கள்

பல்லவர் காலத்திலிருந்து விஜயநகர நாயக்கர் காலம்வரை கோயில்களின் கருவறை அர்த்த மண்டபத்தில் தொடங்கி முகமண்டபம் வசந்த மண்டபம், நடன மண்டபம், கல்யாண மண்டபம் என வளர்ச்சி நிலையில் பல்வேறு கட்டடக்கலைக் கூறுகளுடன் அமையப் பெற்றுள்ளன. மதுரை, தென்காசி போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் மண்டபங்களின் வளர்ச்சி நிலையைக் காணமுடிகின்றது. கருவறையிலிருந்து தில்லைமண்டபம் வரை பிற்காலப் பாண்டியர்களின் கலையமைப்பையும், பஞ்சாட்சர மண்டபத்திலிருந்து ரகுநாதபூபால மண்டபம் வரை தஞ்சை நாயக்கர்களின் கலைப் பாணியைக் கொண்டு இம்மண்டபங்கள் கம்பீரமான தோற்றத்துடனும், மிகப்பெரிய நீண்ட கொடுங்கை கலையமைப்பினையும் பின்வருமாறு விளக்கப்படுகிறது.

மண்டப அதிட்டானம்

மண்டபத்தின் உபபீடம் மறைக்கப்பட்டவாறு அதிட்டானம் கபோதபந்த வகையைச்சார்ந்ததாக இருக்கும். குமுதம் முப்பட்டைக் குமுதமாகவும் பத்மம், கம்பு, காலபாதம், கம்பு, கபோதகம், கம்பு போன்ற அமைப்புகள் கொண்டதாக காணப்படும். மண்டபத்தின் தூண்களாகக் கூட்டுத் தூண், இந்திரக்காந்த தூண்கள், யாளித்தூண், குதிரைத்தூண், சதுரப்பட்டைத்தூண், மனித உருவம் நிற்கும் தூண், தூவாரபாலகர் நிற்கும் தூண் எனப் பலவகையானத் தூண்கள் காணப்படும். இம்மண்டபங்கள் விஜயநகரர் மற்றும் நாயக்கரின் கலையமைப்பைக் கொண்டும் இம்மண்டபத்களின் விதானத்தின் கபோதக் கொடுங்கை அமைப்பானது நேர்த்தியாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும்.

மண்டபங்களின் கொடுங்கை

கருவறைகளின் கால்பகுதிக்கு மேலாக உச்சியில் திகழும் பூதவரிமானத்தினை அடுத்துக் காணப்பெறும் வளைந்தத் தளத்தின் விளிம்பிற்குக் கபோதகம் எனப் பெயர். மண்டபங்களுடன் ஒப்பிட்டுக் கூறும் போது கொடுங்கை என அழைக்கப்படும். கட்டடக்கலை வளர்ச்சியில் விஜயநகர

Koviloor Digital Library

நாயக்கர்களின் கலைப்படைப்புகளுள் மிகச் சிறந்த இடத்தைப் பெறுவது கொடுங்கை அமைப்புகளே எனலாம். சோழர் காலத்திய மண்டபங்களில் தஞ்சைப் பெரிய கோயில் கருவறை முதல்தள் கபோதகத்தின் உட்பகுதி மரவேலைப்பாடுகள் போன்ற குறுக்கு நெறுக்குச் சட்டம் ஆணி போன்ற கருங்கள் வேலைப்பாடுகளைக் காணலாம். இதே அமைப்பு மூன்றாம் குலோத்துங்கன் கோயிலான மாத்தூர், கீழப்பழையாறை போன்ற இடங்களில் வளர்ச்சிப்பெற்ற நிலையில் காணப்படுகின்றது. இவையனைத்தையும் மிஞ்சும் வண்ணம் மிகச்சிறந்த நேர்த்தியான ஒரு கலை மரபை விஜயநகர நாயக்கர்களின் மண்டபக் கொடுங்கைகளிலும் விதானங்களிலும் மரவேலைப்பாடுகள் போன்று செதுக்கப்பெறும் கலைப்பாணியை காணமுடிகின்றது.

தூண்கள்

தூண் என்னும் சொல் ஸ்தூன் என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததாக மானசாரம் என்னும் ஆகம நூல்களில் குறிப்பிடப்படுகின்றன. தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே தூண் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளதை இலக்கியங்களின் மூலம் அறியமுடிகின்றன.

வேள்வி முற்றி பூபநட்ட வியன்களம்" என்னும் புறநானூற்று வரிகள் யாகங்களில் தூண் நடப்பட்டதையும் அகன்ற வேள்விச் சாலைகளையும் இச்சாலைகள் முழுவதும் நெடியத் தூண்கள் அமைந்திருந்ததையும் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டுக்களில் தூண் பற்றியச் செய்திகள் கால், தூண், ஸ்தம்பம் என்னும் சொற்களில் குறிக்கப்படுகின்றன. நம் பல்லவர் குடைவரைகளில் திருக்கழுக்குன்றம் ஒருகல்மண்டபம் என அழைக்கப்பட்டச் செய்தியும், குரங்குநிலைமுட்டம், சித்தன்னவாசல் குடைவரைக்கல்வெட்டுக்களில்கால்மண்டபம்எனவும்பதினோராம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் திருநிலைக்கால், தோரணக்கால், எனவும் கி.பி.12ம் நூற்றாண்டுகளில் நூற்றுக்கால் மண்டபம் பற்றியச் செய்திகளும் கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்றன. சோழர்காலக் கல்வெட்டுக்களில் போதிகைப்படை என தூணின் மேல்பகுதியைப் பற்றி குறிப்பிடப்படும் சொற்களும். விஜயநகர நாயக்கர்களின் காலத்தில் ஜெயஸ்தம்பம், கருடஸ்தம்பம், மானஸ்தம்பம் எனப்

Koviloor Digital Library

பல்வேறுவகையானத் தூண்களைப் பற்றியும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டுள்ளன.

பல்லவர்களின் காலத்தூண்களுள் எண்கோணச் சதுரத தூண்களும், சிம்மத்தூண்களும் சுருள் இதழ் வட்டம், அன்னக்கொடி வட்டம், மதங்கமகர வட்டம், கின்னாரிவட்டம் போன்ற அலங்காரங்களுடன் கூடிய தூண்களை திருச்சி லலிதாங்குரன் குடைவரைகளில் காணமுடிகின்றன. முத்தரையர் மற்றும் இருக்குவேளிரின் தூண்கள் பதினாறு கோணத் தூண்களாகவும் இடம் பெறுகின்றன. முற்காலப் பாண்டியரின் குடைவரைகளில் எண்கோணதூண், பதினாறுக்கோணத் தூண், சதுரத்தூண், கூட்டுத் தூண்களும் பழுவேட்டரையரின் தூண்களும் காணப்டுகின்றன. சோழர்காலக் கலைப்பாணியில் வட்டத்தூண்களை திருவெறும்பூர், திருவிடைமருதூரிலும் பிற்காலச் சோழரின் கலைப்பாணியில் சிம்மத் தூண், கட்டுமஞ்சத்தூண், கூட்டுத்தூண், யாளிப்பாதமுடைய பதினாறு கோணச்சித்திரத் தூண்களும் அமையப்பெற்றுள்ளன. இதைப்போல விஜயநகர நாயக்கர்களின் காலத்தூண்களாக அணிவெட்டுக்கால்தூண், கூட்டுத்தூண், யாளித்தூண், குதிரைத்தூண், சுழல்தூண் போன்ற கலையமைப்புகளில் தூண்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

கோபுரம்

தமிழகக் கலைவரலாற்றில் கோபுரங்கள் குட்டைக் கோபுரங்களிலிருந்து உயர்ந்தக் கோபுரங்களாக வளர்ச்சிப் பெற்றுள்ளன. கோயில்களில் பொதுவாக கிழக்குத் திசையை நோக்கியவாறு - இராஜகோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. பலதிருச்சுற்றுகளை கொண்டக் கோயில்களில் நான்கு திசைகளிலுமே கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் நடுவேயுள்ளக் கோபுரம் மத்தியக் கோபுரம் எனவும் கிழக்கில் உள்ளக் கோபுரம் பூர்வக் கோபுரம் என்றும், தெற்கில் உள்ளக் கோபுரம் தட்சிணக்கோபுரம் என்றும், மேற்கில் உள்ளக் கோபுரம் உத்திரக் கோபுரம் என்றும் வடக்கில் உள்ளக் கோபுரம் உத்திரக் கோபுரம் என்றும் இக்கோபுரங்களை சிற்பநூல்கள் பஞ்சக் கோபுரங்கள் எனக் குறிப்பிடுகின்றன. ஐந்துப் பிரகாரங்களைக்

Koviloor Digital Library

கொண்டக் கோயில்களில் இப்பஞ்சக் கோபுரங்களும் அமைக்கப் படுகின்றன. இக்கோபுரங்களில் மூன்று முதல் பதினொன்று வரை கலசங்களும் கோபுரத்தின் முன்பக்கமும், பின்பக்கமும் அகன்றவாறுக் காட்டப்பட்டு திறந்தநிலையில் சாளரங்களும் அமைக்கப்படுகின்றன.

மானசாரம் என்னும் சிற்பநூலானது அர்த்தமண்டபத்துக்கு அருகில் உள்ள கோபுரம் துவாரசோபை என்றும், இரண்டாம் பிரகாரத்தில் உள்ளக் கோபுரம் துவாரசாலை என்றும் மூன்றாம் பிரகாரத்தில் உள்ளக் கோபுரம் துவாரப்பிரகாரம் என்றும், நான்காம் பிரகாரத்தில் உள்ளக் கோபுரம் துவாரக் ஹர்மியம் என்றும், ஐந்தாம் பிரகாரத்தில் உள்ளக் கோபுரம் மாகமர்யதை என்றும் இவ்வைந்துக் கோபுரங்களும் மகாகோபுரம் மற்றும் இராஜகோபுரம் என குறிப்பிடப் படுகின்றன.

பரிவாரச் சன்னதிகள்

கோயில்களில் கருவையைச்சுற்றி பரிவாரசன்னதிகள் அமைக்கப்படுவது ஆகம முறைகளாகவும் கலைவரலாற்றோடு தொடர்புடையதாகவும் உள்ளன. இவை மட்டுமல்லாமல் நளபாகசாலை, யாகசாலை, கோசாலை, கஜசாலை, வாத்யசாலை, வாகனச்சாலை போன்றவையும் தனலாபம், தான்யாலய், சுரங்கப்பாதைகளும் அமையப்பெறுகின்றன.

முடிவுரை

திருக்கோயில் கட்டடங்களுக்குரிய கலைச்சொற்கள் இதில் விளக்கப்பெற்றுள.

நூற்பட்டியல்

1. எல்.மணிவண்ணன், பாண்டியநாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக்கலையும்,
2. ஜி. சேதுராமன், ஜி.தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, மதுரை 2004
3. குடவாயில் பாலசுப்பிரமணியன், தஞ்சை நாயக்கர் வரலாறு (கி.பி.1535-1675),தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
4. புறநானூறு, 15,21,224.

Koviloor Digital Library

5. இராசுபவுன்துரை, தமிழகக் கோயிற்கட்டடக்கலைத் தொழில் நுட்பம் அதிட்டானம், மணிவாசகர் நூலகம் சிதம்பரம் 2002
6. Acharya, PK. An Encyclopaedia of Manasara Series Hindu Architecture,Vol.VII, Jk.Publishing House, Bhopal.1978
7. Anuval Report of Epigraphy: 1930 no 202, 316, 1935 no 316,1938 no 517, 1941 no 143
8. Burgess,J.,Indian Architecture,John Murry,London, 1910
9. Burton Stein., South Indian Temple,Vikas Publishing House,New Delhi, 1978
10. Havell.EB., Indian Architecture,Co., New Delhi, 1976
11. Joveau-Dubreuil,Dravidian Architecture,S.P.C.K. Press,Madras, 1917
12. Kramrisch Stella., The Hindu Temples I volumes,University of Culcutta,Calcutta 1946
13. M.W. Meister M. W. and Other (Ed.) Encyclopaedia of India Temple Architecture, South India,Lower Dravidadesa, Jk.Publishing House,Bhopal. 1999
14. Mahalingam, T.V. Studies in the South Indian Temple Complex, New Era Publicatoins, Madras.2002
15. PK.Acharya PK.., Architecture of Manasara,The Oxford University Press.London,1927
16. Saletore,R.N. Vijayanagara Art,Sundeep Prakashan, Delhi.1982
17. Sethuraman,G, Origin and Evolution of the Jalas "Facets of Indian Art and Culture,Mk.University,Mathurai, 2005
18. South Indian Inscription- Vol. II, P.143.Srinivasan,Kr. Cave Temple of the Pallavas, Archaeological Survey of India, The Oxford University Press.London, 1999

Koviloor Digital Library

சாந்தநாத சுவாமி திருக்கோயில் ஓர் வரலாற்றுப் பார்வை

முனைவர் ஜி. பரந்தாமன்
உதவிப்பேராசிரியர்,
வரலாற்றுத் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்.
காரைக்குடி

திருமிகு. சே.சாந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்
வரலாற்றுத் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

புதுக்கோட்டை நகரின் மத்தியில் அமைந்திருக்கும் இத்திருக்கோயிலுக்கு கீழ ராஜவீதியில் இருந்து கோயிலுக்கு செல்ல அலங்கார நுழைவு வாயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் வெளியே விநாயகர் கோயில் ஒன்று காணப்படுகிறது. இது சற்று மேடான பகுதியில் காணப்படுகிறது. இம்மேட்டின் தரைப்பகுதியில் கருங்கற்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த விநாயகர் கோயிலில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.

கோயிலின் அமைப்பு

சுவாமி திருக்கோயிலில் வெளி மண்டபம் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. வெளி மண்டபத்தை அடுத்து மூன்று நிலை ராஜகோபுரம் அமைந்துள்ளது. இது பிற்காலப் பாண்டியர் காலக் கோபுரமாகும். இந்த ராஜகோபுர நுழைவு வாயில் முன்பாக வடக்கு, தெற்குப் பகுதிகளில் காசி விசுவநாதர் சந்நிதியும், காலபைரவர் சந்நிதியும் விமானங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. இவை சுமார் 70 ஆண்டுகளுக்கும் பழமையானதாகும். ராஜகோபுர நுழைவு வாயிலின் குடவரை பகுதியில் தெற்கில் மிகப்பெரிய சேவை விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பிள்ளையார் சுமார் 100 ஆண்டுகள் பழமையானது என்று கருதப்படுகிறது.

ராஜகோபுரத்தை அடுத்து கொடிமர மண்டபம், பலிபீடம் நந்தி அமையப்பெற்றுள்ளது. பிரகார மண்டபத்தில் உள்ள இந்த நந்திக்கு பிரதோஷ நந்தி என்று பெயர். இந்த நந்திக்குத் தான் அடிக்கடி அபிஷேகங்கள் நடைபெறும் சாந்த நாதர் கோயில்

Koviloor Digital Library

கருவறை அர்த்த மண்டபம் முதலானவற்றை கொண்டுள்ளது சிவன் கோயில் கருவறை கிழக்கு நோக்கி அமையப்பெற்றுள்ளது வேதநாயகி அம்பாளின் கருவறை தெற்கு நோக்கியபடி உள்ளது. இக்கோயில் கருவறை அர்த்த மண்டபம் முதலான வற்றை கொண்டுள்ளது. மகாமண்டபம் சிவன் சக்தி ஆகியோருக்குப் பொதுவானதாக உள்ளது. இரு கோயில்களுக்கும் தனித்தனியே நந்திகள் உள்ளன. மேலும் ஸ்வாமி மற்றும் அம்பாள் விமானங்கள் ஆகம விதிகளின்படி முறையே மூன்று தளம், இரண்டு தளம் ஆகியவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் சுற்று பிரகாரத்தில் வடக்குப் பகுதியில், ராமநாதர்-பர்வதவர்த்தினி அம்பாள் சந்நிதியும், இதனை அடுத்து சாந்தநாதரின் கருவறை வெளிச்சுவரில் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி சந்நிதியும் அமைக்கப்பட்டுள்ளது.

தெற்குப்பகுதியில் 63 நாயன்மார்களும், தென்மேற்கு மூலையில் அமையப்பெற்றுள்ளன. விநாயகர் சந்நிதியும் (கன்னி மூல கணபதி), நுழைவு வாயில் முன்பாக 63 நாயன்மார்களும் காட்சி கொடுத்த நாயனார் ரிஷபாரூடத்துடன் அம்பாளுடன் சேர்ந்து கிழக்கு நோக்கியபடி காட்சி அளிக்கிறார்.

மேற்குப்பகுதியில் சகஸ்ரலிங்கமுகம், சோமாஸ்கந்தர் சந்நிதியும் அமையப்பெற்றுள்ளது. சோமஸ்கந்தர் சந்நிதியில் உற்சவ விக்ரகங்கள் பார்வதி, பரமேஸ்வரர், குழந்தை முருகன், உலோகப் படிமங்கள் உள்ளன. இவை தவிர அன்னை வேதநாயகி அம்மனின் உலோகம் ஒன்றும் உள்ளது. மேலும் இங்கு அழகிய விளக்கை ஏந்தியபடி உள்ள உலோக படிமமும் உள்ளது. இங்கு உள்ள அணைத்து படிமங்களும் ஒப்புயர்வற்ற கலைச்செல்வம் ஆக உள்ளது. சுற்றுப் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர் காட்சி தரும் கோயில் உள்ளது. மேலும் சுவாமி சந்நிதியில் கருவறையில் பிரகார சுற்றில் வடக்குப் பகுதியில் துர்க்கை அம்மன் மாடச்சந்நிதியும் அதன் முன்பாக சண்டிகேஸ்வரர் சன்னதியும் விமானத்துடன் அமைந்துள்ளது.

ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் கொடிமர மண்டபத்தில் நவகிரகங்கள் சந்நிதியும் இதனையொட்டி நடராஜர் மற்றும்

Koviloor Digital Library

பள்ளியறை சொக்கர் சந்நிதியும் ராஜ கோபுரத்தின் உட்பகுதியில் வடக்குப் பகுதியில் மேற்கு நோக்கியபடி ஆதி பிள்ளையார் காலபைரவர் யோகீஸ்வரர் முதலான தெய்வங்கள் உள்ளன. கோபுரத்தின் வடதிசை அருகில் சந்திரனும், தெந்திசை அருகில் சூரியனும் மேற்கு நோக்கியபடி உள்ளனர். தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளி அமையப்பெற்றுள்ளது. இரண்டாம் பிரகாரத்தின் வடக்குப் பகுதியில் ஹனுமான் கோயில் உள்ளது. வெளி மண்டபத்தின் தெற்குப் பகுதியில் ஏழாம் திருவிழா மண்டபமும், ஆலய நூல் நிலையமும் உள்ளது. அம்பாள் சந்நிதியில் தெற்குவெளி மண்டபத்தில் ஆலய அலுவலகமும் அமைந்துள்ளது.

தெற்கு வெளிப்பிரகாரத்தில் ஆலய நித்ய பூசைக்கு உதவும் வண்ணம் மலர்ச்செடிகள் வைத்து நந்தவனம் பராமரிக்கப்பட்டு வருகிறது

கோயில் கிழக்குக் கோபுரம்

மாவட்டத்தின் பிற கோபுரங்களுடன் ஒப்பிடுகையில் இது அளவில் மிகவும் சிறியதாகும். திருமயம், திருவரங்குளம் போன்ற இடங்களில் அமைந்துள்ள கல்வெட்டுகடன் உள்ள பாண்டியர் காலக் கோபுரங்கள் நாகபந்தங்களுடன் கூடிய அரைத்தூண்களையும், நன்கு மலர்ந்த பூவிதழ்களையும், வளர்ச்சி அடைந்த போதிகைகளையும் கொண்டுள்ளது என்பது நினைவில் கொள்ளத்தக்கது. எனவே கோயிலில் பிற கலை அம்சங்கள் கோபுரத்தின் எளிமை மற்றும் காலத்தால் முற்பட்ட கலையம்சம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இக்கோபுரம் கிபி 13ம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கணிக்கப்படுகிறது. எனவே இக்கோபுரம் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலமாகவே அல்லது முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் காலமாகவோ இருக்க வேண்டும்.

தெற்கு வெளி மண்டபம்

தெற்கு வெளி மண்டபம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேர்ந்ததாகும். எனவே வெளி மண்டபத்தில் அமைந்துள்ள தூண்கலள் யாவும் பிற்காலப் பாண்டியர் காலம்

Koviloor Digital Library

(கிபி 13 ஆம் நூற்றாண்டு) என்று தெளிவாக அறியலாம்.

பிரகார மண்டபம்

தெற்கு வெளி மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் முதலில் பிரகாரம் மண்டபமும் அதன் பின் சிவன், அம்மன் சன்னதிகளுக்குரிய மகா மண்டபமும் காணப்படுகிறது. பிரகார மண்டபம் முழுவதும் பிற்காலப் பாண்டியர்களால் அமைக்கப்பட்டது. இங்குள்ள தூண்கள் பாண்டியர்கள் கால கலை அம்சம் கொண்டவையாக உள்ளது. மேலும் இங்குள்ள தூண்களில் எங்குமே நாகபந்தம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இது தோல்களில் பிற கலை அம்சங்களும் அதிகம் காணப்படவில்லை எனவே இவை பாண்டியர் காலம் என்பது உறுதிப்படுகிறது.

பிரகாரம் மண்டபத்தின் கிழக்கே உள்ள அலங்கார மண்டபம், அதன் அருகில் உள்ள நடராஜர் மண்டபம், கிழக்கு வெளிமண்டபம், பிரகார மண்டபத்தில் கிழக்கு, மேற்கு ,வடக்கு, தெற்கு முதலான அனைத்து பகுதிகளும் பிற்காலப் பாண்டியப் பேரரசு காலக் கட்டுமானம் ஆகும். இங்குள்ள தூண்களில் காணப்படும் போதிகைகளும், வளர்ச்சியுறாத நாகபந்தங்களம், நாகபந்தங்களே காணப்படாத தூண்களும் இதற்குச் சான்றாய் விளங்குகின்றன.

கிழக்கு வெளி மண்டபம்

கிழக்கு வெளி மண்டபத்தில் காலபைரவர் காசிவிஸ்வநாதர் ஆகியோருக்கான சந்நிதிகள் உள்ளன. இவை காலத்தால் மிகவும் பிற்பட்டதாகும். இவை சுமார் 70 ஆண்டுகள் பழமையானதாக கருதப்படுகிறது. கால பைரவர் சந்நிதிக்கு தென்புறம் ஒரு சிறிய மண்டபம் உள்ளது. இம்மண்டபம் கி.பி 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் கால மண்டபம் ஆகும்.

சாந்தநாத சுவாமி கோயில்

சிவன் கோயில் கருவறை விமானம் சோழர்கால அடித்தளத்தை கொண்டுள்ளது இதன் மேல் பகுதியில் உள்ளவை பிற்காலப் பாண்டியர் கலையாக காணப்படுகின்றன. போதிகையின்

Koviloor Digital Library

மேல் உத்திரமும் அதன் மேல் கபோதமும் காணப்படுகின்றன. கபோதத்தின் மீது யாழி வரிசைகள் காணப்படுகின்றன. யாளி வரிசைகளின் மீதுள்ள பகுதிகள் தற்கால சிமெண்ட் சுதையால் அமைக்கப்பட்டுள்ளது.

சிவன் கோயில் கருவறையின் மூன்று புறமும் மாடங்கள் உள்ளன. வடதிசை மாடத்தில் பிரம்மாவும், துர்க்கையும், தென்திசை மாடத்தில் ஒன்று வெறுமையாகவும் மற்றொன்றில் தட்சிணாமூர்த்தியும் இடம்பெற்றுள்ளனர்.

வேதநாயகி அம்மன் கோயில்

அம்மன் கோயில் கருவறையில் வெளி சுவரில் காணப்படும் அனைத்தும் கிபி 12ஆம் நூற்றாண்டு சோழர் கால கலையாக உள்ளன அம்மன் கோயில் கருவறை அர்த்த மண்டபம் முதலானவை சோழர் காலத்தைச் சார்ந்தவை ஆகும்.

கருவறை எதிரே உள்ள பொது மகாமண்டபம் பிற்காலப் பாண்டியர் காலமாகும் இங்குள்ள தூண்கள் பிற்காலப் பாண்டியர் கலையைக் காட்டுகின்றன. சிவன் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், அதன் எதிரே உள்ள பொதுவான மகாமண்டபம் யாவும் பிற்காலப் பாண்டியப் பேரரசு காலம் ஆகும். சிவன் கோயிலை கி.பி 13ம் நூற்றாண்டில் பாண்டியர் புதுப்பிக்கும்போது கருவறை விமானம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் முதலானவை கட்டப்பட்டிருக்க வேண்டும்.

சிற்பங்கள் - உலோகப்படிமங்கள்

பிரகாரத்திலுள்ள நடராஜர் படிமம், சிவகாமி அம்பாள் படிமம், மாணிக்கவாசகர் படிமம் முதலானவை பிற்காலப் பாண்டியர் காலமாகும். மேற்கு பிரகார மண்டபத்திலுள்ள சோமஸ்கந்தர் படிமம் (சிவப்பெருமான், அன்னை பார்வதி, குழந்தை முருகன் இம்மூன்று படிமங்களும் சேர்ந்து காணப்பட்டால் அத்தொகுதி சோமஸ்கந்தர் எனப்படும்), அன்னை வேதநாயகி அம்பாள் படிமம், விளக்கு ஏந்திய பாவை படிமம் ஆகியவையும் பாண்டியர் காலம் ஆகும். வாகன மண்டபத்தில் வெள்ளி நந்திகள் உள்ளன. இவை பல்லவராயர்கள் காலத்திலும், தொண்டைமான்கள் காலத்திலும் செய்யப்பட்டவையாகும்.

Koviloor Digital Library

கருவறையில் இருந்து கொண்டு அருள்பாலிக்கும் அன்னை வேதநாயகி அம்மன் சிற்பம், கருவறையில் உள்ள சிவலிங்கம் முதலானவை சோழர் காலமாகும்.

63 நாயன்மார்கள் சிலை பிற்காலப் பாண்டியர் காலம் ஆகும். நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் நாயனார் பிறந்த நாளை விழாவாகக் கொண்டாடும் கல்வெட்டும் இக்கோயிலில் உள்ளது. எனவே மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திலேயே நாயன்மார்களை கொண்டாடும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது எனினும் நாயன்மார்கள் சிலைகள் பாண்டியர்கால மண்டபத்திலேயே உள்ளதால் இவை பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவை என்று கருதப்படுகிறது.

பிரகார மண்டபத்தில் மேற்கில் உள்ள ஒரு சிறு அறையில் புதுக்கோட்டை நகரக் கோயிலுக்குரிய உயர்ந்த உலோக படிமங்கள் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. இவை பார்ப்பதற்கு விழா காலங்களைத் தவிர பிற நாட்களில் அனுமதி இல்லை. இவை அனைத்தும் உற்சவ விக்ரகங்கள் ஆகும்.

சாந்தநாத சுவாமி கோயில் கொடி மரச்சிற்பங்கள்

இராஜகோபுரத்தை அடுத்து பிரகாரமண்டபத்தின் கிழக்குப் பகுதியில் கொடிமரம் உள்ளது. இப்பகுதியை கொடிமர மண்டபம் என்றும் அழைப்பதுண்டு. இங்குள்ள கொடிமரத்திற்குப் பதினெட்டாம் நூற்றாண்டில் தொண்டைமான் மன்னர்களால் பித்தளை தகடுகள் வேயப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

அனுமார் கோயில்

இரண்டாம் பிரகாரத்தின் வடக்குப் பகுதியில் ஆஞ்சநேயர் கோயில் அமையப் பெற்று உள்ளது. இக்கோயில் தொண்டைமான் மன்னர்கள் காலத்தில் வளாகத்தில் இடிந்து கிடந்த பழைய தூண்கள், விதானப் பலகைகளைக் கொண்டு கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஏனெனில் விதான பலகைகளில் மீன் சின்னங்கள் காணப்படுகின்றன. இப்பலகைகள் பாண்டியர்கால மண்டபத்தில் இடிந்த பகுதியில் இருந்து எடுக்கப்பட்டவை ஆகும். இக்கோயில் வளாகத்தில் பல பகுதிகள் அழிந்துள்ளது

Koviloor Digital Library

என்பதற்கான தடயங்கள் காணப்படுகின்றன. கற்களால் ஆன யாளிகள் சில சிதறுண்டு நந்தவனத்திற்கு அருகில் உள்ளன. இவை பாண்டிய பேரரசுக் காலமாக இருக்கலாம் எனவே இப்பகுதியில் ஏதோ ஒரு கோயில் ஒரு காலத்தில் இருந்திருக்கலாம் என்று உணரலாம். இந்த அனுமார் கோயிலின் காலம் சுமார் 150 ஆண்டுகளாக இருக்கலாம்.

திருக்கோயிலின் வரலாறு

இங்குள்ள சிவன் கோயிலும், வேதநாயகி அம்மன் கோயிலும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டது. சிவன் கோவிலின் அதிட்டானத்தில் காணப்படும் மூன்றாம் குலோத்துங்க சோழன் கால கல்வெட்டு ஒன்று இக்கோயிலை குலோத்துங்க சோளீச்சுரமுடைய நாயனார் கோயில் என்று குறிப்பிடுகிறது.

இங்குள்ள வேதநாயகி அம்மன் கோயிலின் புஷ்பபோதிகைகள் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகும். சிவன் கோயிலின் கருவறையின் வெளிப்புற சுவர்கள் தூண்கள் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்தவையாகும்.

சிவன் கோயிலின் கருவறையின் அடித்தளம் மட்டுமே சோழர் காலமாகும். அடித்தளத்தின் மீது அமைந்துள்ள கட்டுமானப் பகுதி கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் பேரரசு கால கலை அமைப்பில் உள்ளது. எனவே கருவறை பாண்டிய பேரரசு காலத்தில் பல்லவராயர்கள் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் வேதநாயகி அம்மன் கோயில் சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும். இக்கோயில் கருவறை அடித்தளம் முதல் மேலே உள்ள கட்டுமானம் வரை மாற்ற மாற்றப்படவில்லை.

வேதநாயகி அம்மன் கோயில் அரைத்தூண்களின் புஷ்பபோதிகைகள் சோழர் காலத்தை சார்ந்தவையாகும்.

சிவன் கோயில் அதிட்டானக் கல்வெட்டில் சிங்கமங்கலம் என்ற பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டையின் மேற்கில் உள்ள பகுதிகள் சிங்கமங்கலம் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதன் மூலம் சிங்கமங்கலம் வேறு

Koviloor Digital Library

புதுக்கோட்டை வேறு என்று அறியப்படுகிறது. மேலும் இக் கல்வெட்டில் புதுக்கோட்டை என்ற பெயர் ஆளப்பட்டுள்ளது. எனவே சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் புதுக்கோட்டை என்ற பெயருடன் சிறு குடியிருப்பு பகுதியாக விளங்கிய இதை அறியலாம்.

பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் இக்கோயில் சாந்தாரைக் காத்த நாயனார் கோயில் என்று அழைக்கப்பட்டது. சாந்தாரைக் காத்த நாயனார் கோயில் என்றால் தன்னை சார்ந்தவரை காக்கும் தெய்வம் என்பது பொருளாகும்.

இக்கோயிலில் திருவிழா ஆறு நாட்கள் நடைபெற்றதை மேற்கண்ட மூலம் அறிய முடிகிறது. கோயில் எடுப்பிக்கப்பட்ட காலத்திலேயே திருவிழா முறைகளை வரையறுத்திருக்க வேண்டும். திருநாவுக்கரசர் திருநாளில் "நாற்பத்தெண்ணாயிரப் பெருந்தெரு" என்ற வணிகர் குடியிருப்பு பகுதி முறைப்படி விழாவாகக் கொண்டாடியது. அதேபோல் ஒவ்வொரு ஊரும் பூசைமுறை கொண்டாடி திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடியது. திருநாடு, புதுக்கோட்டை, இளம்பிறைக்குடி, சிங்கமங்கலம் போன்ற ஊர்கள் திருநாள், பூசை முறைகளை முறைவைத்து விழாவாகக் கொண்டாடின. பூசை முறைகளை எந்தெந்த ஊர் எப்போது செய்ய வேண்டும் என்ற குழப்பமில்லாமல் இருக்கவே இக்கல்வெட்டு ஏற்பட்டது எனலாம்.

இக்கோயிலின் சுற்று மதில் சுவரின் வெளிப்பக்கம் உள்ள துவக்கமும், முடிவும் அற்ற மூன்று துண்டுக் கல்வெட்டுக்கள் பிற்காலப் பாண்டியர் கால கல்வெட்டுகள் ஆகும்.

பாண்டியர் காலத்திலும் இங்கு பல்லவராயர்களே குறுநில மன்னர்களாக ஆட்சி செய்துள்ளனர். திருக்கோகர்ணம் கோயிலில் உள்ள குலசேகர பாண்டியன் இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று பல்லவராயர் பூசைக்கும் பிறந்தநாளுக்கும் நிலம் பரிசாய் கொடுத்ததை குறிப்பிடுகிறது.

பல்லவன் குளத்தின் கரையில் கிழக்கு இராஜகோபுரத்தின் அருகில் உள்ள கல் மேடையும் விநாயகர் கோயிலும் பல்லவராயர்கள் உபயமாகும். இங்குள்ள கல் மேடையில்தான்

Koviloor Digital Library

புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தினரின் ஈமச்சடங்குகள் நடைபெற்றதாகவும், பிற்காலத்தில் அனைத்து தரப்பினருக்கும் இவ்விடத்தில் ஈமச் சடங்குகள் செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

அடிக்குறிப்புகள்

1. ராஜாமுகமது. ஜெ – புதுக்கோட்டை மாவட்ட வரலாறு,1992
2. மைதிலி.சௌ – தலவரலாறு, சாந்தநாத சுவாமி திருக்கோயில்.
3. ஆவணம் இதழ் 13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
4. புதுக்கோட்டைக் கல்வெட்டு எண்.649

Koviloor Digital Library

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில் வழிபாட்டு முறைகள்:

திருமிகு. பா.சாந்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

முன்னுரை:

ஆதியந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன் இப்பூவுலகில் ஆங்காங்குள்ள தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகிறான். தமிழ் சமுதாய் மக்கள் கடவுள் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அவற்றின் வெளிப்பாடுகள் தான் ஒவ்வொரு கோயிலிலும் நடைபெறும் வழிபாடுகள் அதைப்போலவே அருள்மிகு பிரகதாம்பாள் ஆலயத்திலும் வழிபாடுகள் மிகச் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கோயில் வரலாறு:

இக்கோயில் திருநாவுக்கரசரால் பாடப்பட்டதாகும் கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. புதுக்கோட்டை மன்னர்களின் குலதெய்வக் கோயிலாகும். தற்போது இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. கி.பி.7ம் நூற்றாண்டில் திருக்கோயிலில் உள்ள மலைகளைக் குடைந்து சப்தமாத சன்னதிகள் முதலில் உருவாக்கப்பட்டது.

குடைவரை கோயிலுக்கு ஆதாரமாக கோகர்ணேசுவரர் சன்னதியும், பெரிய பிள்ளையாரும், சாமி சன்னதியும் கங்காதரரும் பல்லவர் காலத்துக்குச் சான்று. திருக்கோயில் தலவிருட்சம் மகிழமரம், தொன்மையான கோயில் என்று சொல்வோமானால் மூர்த்தி, தீர்த்தம், விருட்சம் என்று சொல்லப்படும். மூர்த்தி என்பது மகிழவனேசுவரர் (தல விருட்சத்தை சார்ந்தது) தீர்த்தம்

Koviloor Digital Library

என்பது அம்பாளைச் சார்ந்துள்ளது. மங்களநாயகி (மங்கள தீர்த்தம்).

சிவபெருமான், உமாதேவி, பிள்ளையார், முருகன் ஆகியோருடன் விரும்பி வீற்றிருக்கும் முக்கிய இடங்களில் திருக்கோகர்ணமும் ஒன்றாகும். ஆதிகாலத்தில் மகிழமரங்கள் நிறைந்த காடாக இருந்ததால் மகிழவனம் என்று அழைக்கப்பட்டது. இத்தலத்தில் கபிலமுனிவரும், மங்கள முனிவரும் ஆசிரமம் அமைத்து தவம் செய்து சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.

ஒருநாள் தேவலோகத்தில் இந்திரசபை கூடியது. தேவர்களும், முனிவர்களும் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தனர். ஆனால் தேவலோகப் பசுவான காமதேனு குறித்த நேரத்தில் வராமல் காலதாமதமாக வந்தது. இதனால் சினம் கொண்ட தேவேந்திரன் காமதேனுவைப் பூமியில் காட்டுப் பசுவாக ஆகும்படி சாபம் இட்டான். இதனால் மனம் வருந்திய காமதேனு இந்திரன் மனைவியான இந்திராணியின் வழிகாட்டுதலால் கபிலவனத்தில் காட்டுப்பசுவாக வந்து சேர்ந்தது.

கபிலவனத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத்தை தினமும் கங்கை நீரைக் கொண்டு வந்து பூசித்தால் சாப விமோசனம் கிடைக்கும் எனக் கபிலமுனிவரும் மங்கள முனிவரும் கூறினர். அதன்படி அப்பசு கங்கை நீரைத் தன் காதுகளில் நிரப்பிக் கொண்டு வந்து மகிழவனேசுவரனுக்குத் தினம் அபிசேகம் செய்து வழிபட்டு வந்தது. அபிசேகம் செய்த பின்னர் பசு எஞ் சிய நீரைத் தன் கொம்புகளால் பாறையைக் கீறி ஏற்படுத்திய பள்ளத்தில் விட்டு வந்தது. அதற்கு இப்போதும் கங்கா தீர்த்தம் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது. பசு இத்தலத்தில் ஒரு கன்றை ஈன்றதாகவும் புராண வரலாறு கூறுகிறது.

இவ்வாறு காமதேனுப் பசு இறைவனை வழிபட்டு வரும் நாளில் ஒரு நாள் பசுவின் பக்தியைச் சோதிக்க விரும்பிய இறைவன் வேங்கை வடிவம் கொண்டார். பசு வழிபடச் செல்லும் வழியில் அவ்வேங்கை நின்று பசுவைத் தின்னப் போவதாக அச்சுறுத்தியது. அப்போது பசு வேங்கையிடம் இறைவனை வழிபட்டுத் தன் கடமைகளை முடித்து திரும்பி வந்து வேங்கைக்குத் தான்

Koviloor Digital Library

உணவாக ஆவதாகச் சத்தியம் செய்துவிட்டு சென்றது.

“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்”

என்ற குறள் வாக்கிற்கு இணங்க பூசை முடித்துக் கன்றுக்குப் பால் கொடுத்துத் தன் கடமைகளை முடித்த பசு வேங்கை-யிடம் திரும்பி வந்தது. பசுவின் சொல்லிய வண்ணம் செய்த கடமை உணர்வையும் கடவுள் பக்தியையும் கண்டு வியந்து புலி உருவத்துடன் இருந்த சிவபெருமான் உமாதேவியுடன் காளை மீதமர்ந்து காமதேனுப் பசுவுக்குக் காட்சித் தந்து சாப விமோசனமும் மோட்சமும் தந்தருளினார். காமதேனுப் பசு தன் காதுகளில் அபிசேக நீர் கொண்டு வந்து வழிப்பட்டதால் இத்தலத்திற்கு 'திருக்கோகர்ணம்” (கோ-பசு, கர்ணம்-காது) என்ற பெயர் ஏற்பட்டது. வேங்கை வடிவாக இறைவன் நின்ற இடம் “திருவேங்கைவாசல்” என்று இன்றும் அழைக்கப்படுகிறது. இவ்வூர் திருக்கோகர்ணத்தில் இருந்து திருச்சி நெடுஞ்சாலையில் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

பெருமான் புலியாகத் தோன்றிப் பசுவுக்குக் காட்சி கொடுத்த நிகழ்ச்சி ஆவணி மாதம் மூல நாளில் இக்கோயிலில் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பொம்மை வடிவில் அமைக்கப்பட்ட பசுவையும் கன்றையும் முன்னே வைத்து புலி வேடமிட்டு ஒருவர் ஆடுவார். பிறகு சிவபெருமான் உமாதேவியுடன் காளை மீதமர்ந்து பசுவுக்குக் காட்சி தந்து பசுவுக்கு மோட்சம் கொடுப்பார்.

திருக்கோகர்ணத்தில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு பிரகதாம்பாளைத் தம்முடைய குலதெய்வமாகத் தொண்டைமான் மன்னர்கள் கருதுகின்றனர். பிரகதாம்பாளின் பெயரைத் தங்களது பெயருக்கு முன் அடைமொழியாக சேர்த்துக்கொள்ளும் பழக்கத்தை ராமச்சந்திரத் தொண்டைமான் தொடங்கி வைத்தார். இதற்கு ஆங்கிலேய அரசின் அங்கீகாரமும் கிடைத்தது. இவருக்குப் பின்வந்த மன்னர்களும் ஸ்ரீபிரகதாம்பாள்தாஸ் என்ற அடைமொழியையும் தங்கள் பெயருடன் சேர்த்து வைத்துக்கொண்டனர்.

Koviloor Digital Library

வழிபாடுகள்:

மக்களின் நலன்குறித்துக் கோயில்களில் நாள்தோறும் வெவ்வேறு பொழுதுகளில் வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. தெயவங்களை வண்ண நறுமலர்களால் தூவி வழிபாடு செய்யும் செயல் மிகத் தொன்மையானதும் தூய்மையானதும் ஆகும். பூவினால் கடவுளுக்கு வழிபாடு செய்வதால் பூ செய்- பூசை என வழங்கப்படுகிறது. இவ்வாறு வண்ண மலர் தூவி வழிபட்டால் வாழ்வில் பெறுதற்கரிய பேறாகிய வீடுபேற்றினையும் பக்தியினையும் அடையலாம் என்பது ஆன்றோரின் வாக்கு.

இந்துக்கள் கடவுளை வணங்கும் போது தனக்கென்று ஒரு பாணியை வைத்துக்கொண்டனர். அதாவது தெய்வத்தை புனித நீரால் நீராட்டி, மலர் தூவி, வெற்றிலைப்பாக்கு வைத்து, பொட்டு வைத்து, சந்தனம் பூசி, திருநீறு பூசி, ஆடை அலங்காரங்கள் செய்து கடவுளை வணங்குகின்றனர்.

வழிபாட்டுத் தத்துவம்:

இறைவனுக்குப் பஞ்ச பூதங்களும் பணியும் என்பதைக் காட்டுவதற்காகவும், மனிதன் பஞ்ச பூதங்களையும் பயன்படுத்தியே இறைவனை வணங்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகவும் பூசைகள் நடத்தப்படுகின்றன.

நீர் என்ற பூதத்தின் அடையாளமாகச் சுவை உணர்வைக் குறிக்கும் உணவுப் பொருட்களை இறைவனுக்குப் படைக்கின்றனர். மண் என்ற பூதம் மணத்தை நுகரும் பலன்களோடு சம்பந்தப்பட்டது ஆகும். அதற்கு அடையாளமாகச் சந்தனத்தையும், சாம்பிராணிப் புகையையும் இறைவனுக்கு அனுப்புகின்றனர். காற்று என்ற பூதம் "ஸ்பரிசம்" என்ற தொடு உணர்ச்சியோடு தொடர்புடையது ஆகம். இதற்கு அடையாளமாக மலரிடுதல், சாமரம் வீசுதல் போன்ற வழிபாடுகளைச் செய்கின்றனர். ஆகாயம் என்ற தத்துவம் ஒலியோடு தொடர்புடையது ஆகும். இதற்கென மணி அடித்து சங்கு ஊதுதல் ஆகிய சடங்குகளைச் செய்கின்றனர். தீ என்ற தத்துவம் கண் பார்வையுடன் தொடர்புடையது. இதற்கெனக் கற்பூரம், தீபம் ஆகியவற்றை ஏற்றித் தீபாராதனை செய்கின்றனர். இப்படி ஐம்புலன்களால் பஞ்சபூதங்களைப் பயன்படுத்தி

Koviloor Digital Library

கோவிலிலும், வீட்டிலும் பரம்பொருளை வழிபடுகின்றனர். உலக இயக்கம் பஞ்ச பூதங்களினால் நடக்கிறது. பஞ்ச பூதங்களும் இறைவனின் படைப்பே ஆகும்.

பூசைகளின் பெயர்களும் காலமும்:

திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை கோகர்ணேஸ்வரர் திருக்கோயிலின் காரண ஆகம விதிப்படி அன்றாடப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. காலை 05.30 மணிக்குக் கோவில் திறக்கப்பட்டு மதியம் 12.00 மணிக்கு மூடப்படும். பின்னர் மாலையில் 04.00 மணிக்குத் திறக்கப்பட்டு இரவு 08.30 மணிக்கு மூடப்படும்.

பூசை நேரங்களில் தேவாரம் ஓதுவதுடன் 3 சதை பாரி நாதசுரம் வாசிக்கப்படும். வழிபாட்டிற்கு மங்களநாயகி சந்நிதிக்கு எதிரில் உள்ள திருக்கோயில் கிணற்று நீர் பயன்படுகிறது.

திருவனந்தல்:

இப்பூசை காலை 06.00 மணியிலிருந்து 06.30 மணிக்குள் நடைபெறும். இப்பூசையின் போது கோகர்ணேஸ்வரர் பள்ளியறையிலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்திற்கு வருவார். அப்போது கோயில் குருக்கள் ஒளி வழிபாடு செய்வார். அச்சமயம் திருப்பள்ளியெழுச்சியைத் திருக்கோயிலின் ஓதுவார்கள் பாடுவர். இப்பூசையின் போது, சுவாமிக்கு கறந்தபால், நெல்பொறி, நாட்டுச் சர்க்கரை, வெற்றிலைப்பாக்கு, வாழைப்பழம் முதலியவை நிவேதனமாகப் படைக்கப்படும்.

உஷக்காலம்:

உஷக்காலம் என்பது சூரியன் வெளிப்படத் தோன்றும் காலமாகும். இப்பூசையானது காலை 06.30 முதல் 07.00 மணிக்குள் நடைபெறும் கிணற்று நீரைக்கொண்டு அம்பாளுக்கு அபிசேகம் செய்யப்படும். இப்பூசையின்போது படையல் உணவாக வெண்பொங்கல் வைத்து அபிசேக ஆராதனை நடைபெறும்.

காலை சந்தி:

காலைச் சந்தி பூசையானது காலை 08.30 முதல் 09.00

Koviloor Digital Library

மணிக்குள் நடைபெறும். நீர் அபிசேகமும், பால் அபிசேகமும் நடைபெறும். படையல் உணவாக பொங்கல் படைக்கப்படுகிறது.

உச்சிக்காலம்:

உச்சிக்கால பூசையானது காலை *11.30* மணி முதல் *12.00* மணி வரையில் நடைபெறும். இப்பூசையிலும் இறைவனுக்குப் படையல் நடைபெறும். படையலில் உணவாக முறுக்கு அதிரசம், வடை, புளிச்சாதம், தயிர்சாதம் படைக்கப்படும்.

மாலை சன்னதி திறந்த உடன் முதலில் நடராசர் சன்னதி பூசைகள் தொடங்கி, அதற்குப் புட்டு நெய்வேத்தியம் படைப்பர். அதற்குப் பிறகு மாலைக் காலப் பூசைகள் நடைபெறும்.

சாயரட்சை:

மாலைக்காலப் பூசையை சாயரட்சை என்று அழைப்பர். இப்பூசையானது மாலை *05.30* முதல் *06.30* மணி வரை நடைபெறும். இப்பூசையில் அம்மனுக்கும் பெருமானுக்கும் அபிசேகமும் வழிபாடும் நடந்த பிறகு பாடல்களை ஓதுவார்கள் பாடுவார்கள். இறைவனுக்குப் படையல் உணவாகச் சாம்பார் சாதம், சர்க்கரைப் பொங்கல், அதிரசம் படைக்கப்படும்.

அர்த்த சாமம்:

அர்த்த சாம பூசையானது இரவு *07.30* மணி முதல் *08.30* மணி வரை நடைபெறும். அம்மனுக்கு அபிடேகமும் வழிபாடும் நடந்த பிறகு பிரகதாம்பாள் சந்நிதியில் உள்ள பள்ளியறைக்குப் பெருமானைப் பல்லக்கில் ஏந்திச் செல்வர். படையல் உணவாக அம்மனுக்குப் புளியோதரை, வடை, காய்ச்சின பால் படைக்கப்படும். கோயிலில் வரும் வருமானத்தை அடிப்படையாக வைத்து படையல் உணவுகள் தயாரிக்கப்படுகிறது.

சிறப்பு பூசைகள்:

நைமித்திய பூசை, காமிய பூசை என சிறப்பு பூசை இரண்டு வகைப்படும்.

நைமித்திய பூசை:

நைமித்தியம் என்பது ஒரு காரியத்தின் நிமித்தமாகச் செய்யும்

Koviloor Digital Library

பூசைகள் ஆகும். சான்றாக கிரகணம், தீட்டு முதலிய காலங்களில் அவற்றின் பொருட்டு செய்யும் பூசைகளாகும்.

காமிய பூசை:

'காமியம்' என்பது 'விருப்பம்' ஒரு விருப்பத்தின் பொருட்டுப் பலனை எதிர்பார்த்தோ பாவங்களைப் போக்குவதற்கோ வழிபாட்டில் ஏற்படும் தவறுகளை ஈடுசெய்வதற்கோ பூசை செய்வது காமிய பூசையாகும்.

பிரகதாம்பாள் கோயிலில் நித்திய நைமித்திய, காமிய பூசைகள் விழாக்காலங்களிலும், சிறப்பு பூசைக் காலங்களிலும் நடைபெறுவதாகத் தகவலாளிகள் கூறுகின்றனர். தினமும் சுவாமிக்குப் பூசைகள் நடந்தாலும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட சுவாமிக்குச் சிறப்புப் பூசை நடைபெறுகிறது.

ஞாயிறு	--	சூரியன்
திங்கள்	--	சந்திரன்
செவ்வாய்	--	சிவதுர்க்கை
வியாழன்	--	குரு
வெள்ளி	--	சுக்கிரவார பூசை

சனி மற்றும் புதன் கிழமைகளில் அனைத்து சுவாமிகளுக்கும் பூசை நடைபெறும்.

மாதத்திருவிழாக்கள்: பௌர்ணமிவிழா :

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் மாலை 06.00 மணிக்கு தெட்சிணாமூர்த்தி பிள்ளையார் சந்நிதியில் தொடங்கி அன்னை பிரகதாம்பாள் சந்நிதி ஈறாக எல்லாச் சந்நிதிகளிலும் பல்வகை அபிசேகங்கள் சிறப்புற நடைபெறுகின்றன. அதன் பின்னர் வாசல் பிள்ளையாருக்கு அபிசேக ஆராதனை நடைபெற்று மெய்யன்பர்கள் தேவாரம் திருவாசகம் முதலான பன்னிரு திருமுறைப்பாடல்களைப் பாடியும் திருவைந்தெழுத்தை ஓதியும் சுற்றுக் கோயில்களை வணங்கியும் மலையை வலம் (கிரிவலம்) வருகின்றனர். பௌர்ணமி பூசையில் கலந்து கொள்வோர் வாழ்வு பௌர்ணமி போல் பிரகாசம் பெறும் என்பது மக்களின் நம்பிக்கை.

Koviloor Digital Library

பிரதோச விழா

பிரதோச தினம் என்பது அமாவாசைக்கும், பௌர்ணமிக்கும் இரண்டு நாட்கள் முன்னதாக அதாவது திரயோதசி திதி உள்ள தினமாகும். பிரதோச விழாவுக்குப் பெயர் பெற்ற முக்கியக் கோயில்களில் திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை கோகர்ணேசுவரர் ஆலயமும் ஒன்றாகும். பிரதோச அபிசேகம் மாலை 04.30 மணிக்குத் தொடங்கி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

ஆண்டுத் திருவிழாக்கள்:

இக்கோயிலில் 12 மாதங்களும் திருவிழாக்கள் நடைபெறும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சித்திரைப் பெருவிழா, ஆடிப்பூரவிழா, நவராத்திரி விழா ஆகியவை ஆகும். இவை பெருந்திருவிழாக்களாகும்.

ஆவணி மாதம் மூலநாளில் காமதேனுப் பசுவுக்கு மோட்சம் கொடுக்கும் விழா ஏழு நாட்கள் சிறப்பாக நடைபெறுகிறது. புரட்டாசி மாதம் ஒன்பது நாள் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு பத்தாம் நாள் அம்பு போடும் விழா நடைபெறும். ஐப்பசி மாதம் கந்த சஷ்டி விழாவும், சூரசம்கார விழாவும் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் திருக்கார்த் திகைப் பெருவிழாவில் சொக்கப்பனை கொளுத்துதல் முக்கிய நிகழ்வாகும். மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம் பாவைத் திருவிழா, திருவாதிரைப் பெருவிழா போன்ற விழாக்கள் சிறப்பாகக் கொண்டாப்படுகின்றன.

தை மாதத்தில் தைபூசத்திருவிழா வெள்ளாற்றில் உள்ள பூசத்துறைக்குத் திருக்கோகர்ணம், சாந்தநாதர், திருவேங்கை வாசல், வெள்ளனூர், திருமயம், விராச்சிலை, கோட்டூர் ஆகிய ஏழு ஊர் சுவாமிகள் அம்பாளுடன் எழுந்தருளி தீர்த்தம் கொடுக்கும் விழா, தீர்த்தவிழாவாகத் தை மாதத்தில் கொண்டாடப்படுகிறது. மாசி மாதத்தில் மகா சிவராத்திரி விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்படும். பங்குனி மாதத்தில் பங்குனி உத்திரப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதத்தில் சித்திரைப் பெருவிழாவும், வைகாசி மாதத்தில் வைசாகி

Koviloor Digital Library

விசாக விழாவும், ஆனி மாதத்தில் ஆனி திருமஞ்சனமும், ஆடி மாதத்தில் ஆடிப்பூரமும் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு கோகர்ணேஸ்வரர் ஆலயத்தில் ஆண்டு முழுவதும் வழிபாடுகளும் விழாக்களும் வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முடிவுரை:

எழுத்தின் ஒலி வடிவம் உணர்த்துவதற்கு வரிவடிவ எழுத்து அமைந்தது போலக் கட்புலனால் காணமுடியாத கடவுளைக் காட்டும் சாதனங்களாக கோயில்கள் விளங்குகின்றன. இதைத் திருவள்ளுவர்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்று கூறியிருக்கிறார். அதாவது இறைவனது திருவடிகளைப் பொருந்தி நிற்கின்றவரே பிறவியாகிய கடலைக் கடக்க முடியும் என்பதை வழிபாட்டின் மூலம் உணரலாம்.

Koviloor Digital Library

சைவ சமயக்கோவிற் பண்பாடு

திருமிகு. மு.சிவசுப்பிரமணியன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி-3.

முன்னுரை

இந்து சமயம் நுட்பமான கொள்கைகளை உடையது. அதில் ஒரு கடவுள் வழிபாடும் உண்டு. பல தெய்வ வழிபாடும் உண்டு. இந்து சமயத்தினர் பிரபஞ்சத்தை இயக்கும் ஒரு மகத்தான சக்தியிடம் நம்பிக்கை கொண்டவர்கள். அதே சமயம் வழிபாட்டுக்கென்று ஆண் தெய்வங்களையும் பெண் தெய்வங்களையும் நிறையப்பெற்றிருப்பவர்கள். பிரபஞ்சத்தை இயக்கும் மகத்தான சக்தியை நிர்குண பிரம்மம் என்றழைக்கிறார்கள். நிர்குண பிரம்மம் என்றால் எந்த வருணனைக்கும் கட்டுப்படாதது என்று பொருள். இந்து சமயத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற தொழில் முறையின் அடிப்படையில் பிரமன், விட்ணு, சிவன் ஆகிய மூவருமே மும்மூர்த்திகளாவர். அதில் சைவ சமய முழுமுதற் கடவுளாகச் சிவன் போற்றப்படுகிறார்.

சைவம்

சைவர்கள் சிவனை மிக உயர்ந்த தெய்வமாக வழிபடுகிறார்கள். சிவ வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் ஞானமர்க்கத்தில் நம்பிக்கை உடையவர்கள். ஞான மார்க்கம் என்பது சிவனை உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் அல்லது வடிவங்களையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை அறிவால் வழிபடுதலாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல், என்னும் நான்கு அங்கங்கள் இந்நெறிக்கு உண்டு. முன்னைய மூன்று நெறிகளிலும் நின்று பக்குவம் பெற்ற சாதகனை சிவன் குரு வடிவிலே வந்து தீட்சை உபதேசம் செய்து ஞானத்தை அளித்து முத்தியை வழங்குவார். சிவன் தெட்சிணாமூர்த்தி, குரு ஆகிய வடிவங்களில் விளங்குவது அதன் சான்றாகும்.

Koviloor Digital Library

சிவம் என்றால் மங்கலம் என்பது பொருள். சைவத்தின் அடிப்படைக் கொள்கை பிறரிடத்து அன்பு செலுத்துவதாகும். ‘அன்பே சிவம்’ என்பது திருமந்திரம். விரதம் என்பது உணவு நியமத்தை முதலாகக்கொண்டு உள்ளம் ஒடுங்குதலே ஆகும். ‘அன்னம் அடங்க அஞ்சும் அடங்கும்’ என்ற பழமொழி வழக்கில் உள்ளது. இதன்வழி பொறி அடக்கம் உணவொடுக்கத்தில் இருக்கிறது என்பதை அறியலாம். விரதங்களில் சோமவார விஜரதமும், திருவாதிரை விரதமும் உமையொரு பாகனாகிய சிவனுக்கு உரியது.

பதி-பசு-பாசம்

எங்கும் பரந்து, நிறைந்து காணப்படுவது பரம்பொருள் எனப்படும். பரம்பொருளே பதியாகும். பசு என்பது உயிர் அல்லது ஆன்மா. இது இறைவனிடம் இருந்து பிரிந்து மறுபடியும் அவரோடு இணைவது. பாசம் என்பது ஆன்மாவைப் பிணைத்திருக்கும் அழுக்கு என்பர். பாசத்தினை ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படுத்துவர்.

சிவபெருமானின் பேதங்களாகச் சிவம், சக்தி, நாதம், விந்து, மகேசுவரன், உருத்திரன், திருமால்,பிரமன், சதாசிவன் என்ற எட்டு வடிவங்களைக் கூறுவர். சிவன் கோயில்களில் பெரிதும் இலிங்க வடிவத்தில் காணப்படுகிறார். இது உருவம், அருவம், அருவுருவம் என்பதைக் குறிப்பது ஆகும். சிவலிங்கம் என்பது பிரமன், விட்ணு, சிவன் என்ற மூன்று சக்திகளும் இணைந்த உருவமாகும். இதில் அடிப்பாகம், நாற்கோண வடிவாய் பூமிக்கு அதிபதியும் சிருஷ்டி கருத்தாவுமான பிரம்ம பாகத்தைக் குறிக்கும்.

மேல்பாகம் நெருப்பிற்கு அதிபதியும், அழித்தல் எனப்படும் சம்காரம், மறைத்தல் எனப்படும் திரௌபம், அருளல் எனப்படும் அனுக்கிரகம் ஆகிய முத்தெழில்களுக்கும் அதிபதியாகிய சிவபாகமாகும். இலிங்கத்தின் வகைகளில் நிஷ்களம், சகல நிஷ்களம், சகலம் என்ற மூன்று கூறப்படுகின்றன. நிஷ்களம் என்பது லிங்கம், சகலநிஷ்களம் என்பது முகத்துடன் கூடிய லிங்கம், சகலம் என்பது நடராசர், தட்சிணாமூர்த்தி போன்ற உருவங்கள் ஆகும்.

Koviloor Digital Library

சிவச்சின்னங்கள் - விளக்கம்

சிவனது அடையாளமாக திருநீறு, ருத்திராட்சம், பஞ்சாட்சரம் எனப்படும் ஐந்தெழுத்து ஆகிய மூன்றும் இன்றியமையாது விளங்குவன.

ஆன்மாவின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் ஞான ஒளியினால் சுட்டழிக்கப்பட்டதன் சின்னம் திருநீறு. பசுஞ்சாணம் கொண்டு விதிமுறைப்படி சுட்டு எரித்துத் தயாரிக்கப்படும் சாம்பலே திருநீறு. அதனை கிழக்கு அல்லது வடக்கு முகமாய் நோக்கியே தரித்திட வேண்டும். இது வடமொழியில் விபூதி எனப்படுகிறது. விபூதி என்பதற்குச் சிறந்த ஐசுவரியம் என்று பொருள். வி-மேலான பூதி-ஐசுவரியம். மேலும் பஸ்மம், பசிதம், சாரம், இரட்சை என்ற பல பேர்களையுடையது திருநீறு. அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவதத்துவத்தை விளக்குதலால் பசிதம். ஆன்மாக்களின் மனமாசினைக் கழுவுவதால் சாரம். ஆன்மாக்களைத் துன்பத்திலிருந்து நீக்கி இரட்சிப்பதால் இரட்சை எனப்படுகிறது.

ருத்திராட்சம்

ருத்திராட்சத்தில் ஒரு முகம் முதல் பதினான்கு முகங்களுடைய ருத்திராட்சம் வரை உள்ளன. நெல்லிக்காய் அளவுள்ள ருத்திராட்சம் உத்தமம். இலந்தைப்பழ அளவு மத்யமம். கடலை அளவு அதமம். பிறப்பு - இறப்பு தீட்டுக்காலங்களில் ருத்திராட்சம் அணியக்கூடாது. ருத்திரன் என்னும் சிவ வடிவின் கண்களிலிருந்து தோன்றியது ருத்திராட்சம் ஆகும். முற்றிய மாற்றுள்ள உருத்திராட்ச மணி மீது செப்புக்காசுகளை வைத்தால் செப்புக்காசு சுற்றும் என்பர்.

திருவைந்தெழுத்து

முன்வினையையும், பின்வினையையும் அகற்றி மாயையை விலக்கி ஆன்மாவை இறைவனிடம் சேர்க்கும் தன்மையது 'நமசிவாய' என்னும் திருஐந்தெழுத்து. அதில் 'வ' என்ற நாலாம் எழுத்தினைப் பிஞ்செழுத்து, அருளெழுத்து என்பர். 'சி' என்ற மூன்றாம் எழுத்தினை பேசா எழுத்து, சீரெழுத்து என்பர். அதுவே மனம் ஆகும். 'ம' என்ற இரண்டாம் எழுத்து நிலவெழுத்தாகும்.

Koviloor Digital Library

'ந' என்ற முதல் எழுத்து நீரெழுத்தாகும். 'ய' என்ற ஐந்தாம் எழுத்து உயிரினைக் குறிக்கும் எழுத்தாகும். இந்த ஐந்தெழுத்தினை பஞ் சாட்சரம் என்பர். இதனை ஐந்து வகைப்படுத்தி உள்ளனர். அவை: ஸ்தூல பஞ்சாட்சரம்: நமசிவாய, சூட்சும பஞ்சாட்சரம்: சிவாய நம, காரண பஞ்சாட்சரம்: சிவாய சிவ, மகாகாரண பஞ் சாட்சரம்: சிவ, மகாமனு பஞசாட்சரம்: சி. இதனை முக்திபஞ் சாட்சரம் என்றும் அழைப்பர்.

சிவபெருமானின் முகங்கள்

சிவனின் முகங்களாக ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சக்தியோஜாதம் என்ற ஐந்து கூறப்படுகின்றன. ஈசானம் நடுவேயுள்ள முகம், பளிங்கு நிறம் - கிழக்குமுகம். தத்புருஷம் என்பது பொன்னிறமுடையது- தெற்குமுகம். அகோரம் கருமை நிறம் - வடக்கு முகம். வாமதேவம் என்பது சிவப்பு - மேற்குமுகம். சக்தியோஜாதம் என்பது வெண்ணிறம் என ஆகும். இந்த ஐந்து முகங்களைக் கொண்டு தான் சிவன் இருபத்தெட்டு ஆகமங்களைச் செய்ததாகக் கூறுகின்றனர்.

சிவ வடிவங்களில் நடராசர் என்னும் ஆடலரசனாக விளங்கும் தலத்தில் சிதம்பரம் என்பது இன்றியமையாதது. சிதம்பரம் என்பதற்குச் சிதாகாசம் அல்லது ஞானவெளி என்று பொருள். சித் - ஞானம், அம்பரம் - ஆகாயம். சிதம்பரம் 'சிற்சபை' என்று அழைக்கப்படுகிறது. தில்லை என்றும் பெரும்பற்றப்புலியூர் என்றும் வேறு பெயர்கள் சிதம்பரத்திற்கு உண்டு.

உத்தரகோசமங்கை

பார்வதிக்குச் சிவன் பிரணவ மந்திரத்தை உபதேசித்த தலம் உத்தரகோசமங்கை ஆகும். இதன் உத்தரம் என்பது உபதேசம், கோசம் என்பது பரமரகசியம், மங்கை என்பது பார்வதி என்று பொருள். சிவபுராணம் தோன்றக் காரணமான ஊர். இத்திருத்தலத்தின் பொன்னூஞ்சல் பாடல்கள் புகழ் பெற்றன. இக்கோயிலில் உள்ள 6அடி உயர மரகத நடராசர் வருடம் முழுவதும் சந்தனக்காப்பு அலங்காரத்தில் இருப்பார். இந்தச் சிலையின் கருவறை வாயில் சிலையை விடச் சியதாக இருக்கும். மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தின் போது

Koviloor Digital Library

சந்தனக்காப்பு களையப்பட்டு, பச்சை மரகத நடராசர் காட்சி அளிப்பார். அதுவே ஆருத்ரா தரிசனம் என்று அழைக்கப்படுகிறது. அப்போது சுவாமியின் முன்பாகக் காட்டப்படும் தீபம் நடராஜர் திருஉருவுக்குள் ஊடுருவி மறுபுறதத்தில் தெரியும். நடராஜர் மேனியில் சாற்றிய சந்தனம் மருத்துவ குணம் நிரம்பியது.

சிவத்தலங்களின் பாகுபாடு

சிவத்தலங்களில் ஆறு தலங்கள், ஆறு சக்கரங்களான மூலாதாரம், சுவாரிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பதனைக் கூறுவதாக உள்ளன.

பஞ்ச பூதங்கள் எனப்படுகிற நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தின் குறியீடாகச் சிவனின் பஞ்சபூதத் தலங்கள் உள்ளன. சிவனின் லிங்க வடிவங்களில் சோதிலிங்கம் என்பது சிறப்பானது. இதற்கு ஒளிமயமான லிங்கம் என்று பொருள். திருவாதிரை நட்சத்திர நாளில் சிவன் தன்னை சோதிலிங்க வடிவில் வெளிப்படுத்தியதாகக் கூறுகின்றனர். இந்த லிங்கம் தமிழ்நாட்டில் இராமேசுவரத்தில் மட்டுமே உள்ளது. இவ்வாறான சோதிலிங்கத்தலங்கள் பன்னிரெண்டு கூறப்படுகின்றன.

சிவன் நடன வடிவில் காட்சி தரும் ஐந்து திருத்தலங்கள் பஞ்ச சபைகள் என்றழைக்கப்படுகின்றன. அவை: திருவாலங்காடு - இரத்தினசபை, சிதம்பரம் - கனகசபை, மதுரை - ரஜத சபை, திருநெல்வேலி - தாமிர சபை, திருக்குற்றாலம் - சித்திரசபை என்பன ஆகும். சபை என்பதற்கு அம்பலம் என்ற பொருள் உண்டு. கூத்துக்கலையின் தலைவனாகிய சிவன் ஊர்ச்சபையில் நடனக்கோலத்தில் அருள்புரிகிறார்.

திருவாலங்கோடு கோயிலில் காளி தாண்டவம், சிதம்பரம் கோயிலில் ஆனந்தத் தாண்டவம், மதுரை கோயிலில் சந்தியா தாண்டவம், திருநெல்வேலி கோயிலில் முனி தாண்டவம், குற்றாலத்தில் திரிபுர தாண்டவம் என சிவபெருமான் காட்சி தருகிறார்.

கடவுளர்களான விநாயகர், முருகன், பார்வதி, திருமால், இந்திரன், பிரமன் ஆகியவர்கள் சிவனை வழிபட்ட தலங்களும் உள்ளன.

Koviloor Digital Library

முடிவுரை

தமிழகத்தில் இறைவழிபாட்டில் கோயில்கள் இன்றியமையாதனவாகும். சிவநெறியில் கடைபிடிக்கப்படும் சொற்களுக்கான விளக்கம் தரப்பட்டுள்ளன. சிவனடியார்களின் அடையாளமானவற்றிற்கான பொருளும் விளக்கமும் கூறப்பட்டுள்ளன. சிவபெருமானின் முகங்களுக்குரிய நிறங்கள், திசைகள், வடிவங்களின் பொருள், விளக்கம் எடுத்துக்காட்டப்பட்டு உள்ளன. இதன் காரணமாக, சிவன் கோயில்களில் வழங்கப்படும் சொற்களின் பொருளை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

ஸ்ரீ மதுரை காளியம்மன் திருவிழாக்கள்

முனைவர் அ. சின்னதுரை
தமிழ் உதவிப்பேராசிரியர்,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

முன்னுரை

நாகரிகம் வளர வளர சமுதாய அமைப்பும் மாறி வருகிறது. இருப்பினும் நமது பழக்கவழக்கங்கள் யாவும் இன்றும் எச்சங்களாக நிலைத்து நிற்கின்றன. அத்தகைய எச்சங்கள் சிறுதெய்வ வழிபாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. மரபு வழியாக உள்ள இந்த வழிபாட்டு முறைகள் எந்நாளும் நம்மைவிட்டு விலகாத ஒன்று. நமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்த வழி திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பழங்காலத்திலிருந்தே இந்தத் திருவிழாக்கள் மக்களின் வாழ்க்கை நடைமுறைகளில் மகிழ்ச்சி அடைந்து இன்பமாக வாழ்வதற்கு இன்றும் அமைந்திருக்கின்றன. தொட்டியம் ஸ்ரீ மதுரை காளியம்மன் திருவிழாக்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கோயில் வரலாறு

திருச்சி மாவட்டம் முசிறி அருகில் தொட்டியம் என்னும் ஊரில் ஸ்ரீ மதுரை காளியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. தொட்டியம் பகுதியிலிருந்து மதுரைத் திருவிழாவிற்குச் சென்ற இரண்டு பறை இசைக்கலைஞர்கள், விழா முடிந்து திரும்பி வருகையில், தங்களின் களைப்புத் தெரியாமல் இருப்பதற்கு இசைத்துக் கொண்டே வந்தனர். அவர்களின் பறை இசையில் மயங்கிய மதுரை காளியம்மன் அவனுடன் அவனுடைய ஊருக்குச் செல்வதற்குச் சித்தம் கொண்டு 'ஈ' வடிவம் எடுத்துச் சென்றாள். சின்னான் மாடுகள் மேய்க்கும்போது அடிக்கும் பறை இசையைத் தினந்தோறும் காளியம்மன் கேட்டாள். ஒரு நாள் அப்பகுதியை ஆண்ட குறுநில மன்னனின் சகோதரன் குதிரையில் வந்தபோது, குதிரையின் குளம்படி பட்டு, புதரிலிருந்த புற்று சிதைந்தது. புற்றிலிருந்த காளியம்மன் கோபமுற்றதால், சகோதரன் அந்தக்கனமே மதியை இழந்தான்.

Koviloor Digital Library

செய்வதறியாது திகைத்த மன்னனின் கனவில் தோன்றிய காளியம்மன், மதுரையிலிருந்து இசைக்கு மயங்கி வந்து தொட்டியத்தில் தான் சங்கமித்துள்ளதைச் சொன்னாள். உடனடியாக அரசன் அம்மன்னன் காளியம்மனுக்குத் திருக்கோயில் எழுப்பி, உற்சவம் நடத்தினான். சகோதரனின் மதியும் தெளிந்தது. பறையடிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த சின்னானுக்கும் அவனின் சகோதரன் செல்லானுக்கும் கோ-யிலினுள் சிலை அமைத்தான்.

பங்குனிப் பெருந்திருவிழா

ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் இரண்டாம் செவ்வாய்க்கிழமை அம்மனுக்குக் காப்புக்கட்டி கதவடைத்துப் புதன்கிழமை அடைத்த கதவிற்கு ஆயிரம் பானைப் பொங்கலிட்டு, திருத்தேர் அலங்காரம் செய்து, காளியம்மன் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றாள். இக்கோயில் திருவிழா ஐந்து நாட்கள் நடைபெறும். இந்தத் திருவிழாவில் மிகவும் சிறப்பு வாய்ந்தது, கடைசி நாள் அன்று எருமைகிடா வெட்டுவதாகும். இதன் சிறப்பம்சமே அடுத்தநாள் காலையில் அவ்விடத்தில் இரத்தம் இருக்காது. இந்த இரத்தத்தை மதுரை காளியம்மன் உறிஞ்சிவிடுவாள் என்று மக்கள் நம்புகின்றனர். மேலும், எதிரிகளால் ஏற்படும் துயரம் காளியம்மனுக்கு வடை மாலை சாற்றி வழிபட்டால், அத்துயரம் நீங்கும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

முதல்நாள் திருவிழ£

காளியம்மனுக்கு ஆபரணங்களால் அலங்காரம் செய்து பட்டாடை உடுத்தி, சந்தனம், பால், நெய், வாழைப்பழம் ஆகியவற்றைக் கொண்டு அபிழி~கம் செய்வார்கள். பின்னர், காளியம்மனைத் தேரில் அமர்த்தி, வீதிஉலா நடைபெறும். அனைத்து வீடுகளிலிருந்தும் தேருக்குத் தண்ணீர் ஊற்றி, காளியம்மனைப் பக்தர்கள் வணங்குவார்கள்.

இரண்டாம் நாள் விழா

அவ்வூர் மக்களும் அவரின் உறவினர்களும் மற்றும் பொது

Koviloor Digital Library

மக்களும் கோயிலுக்குச் சென்று சேவல், கிடா (ஆடு) வெட்டி, பொங்கல் வைத்து அம்மனை வணங்குவார்கள். இரண்டாம் நாள் அம்மன் ஊர்வலம் செல்லமாட்டாள்.

மூன்றாம் நாள் விழா

தேர் ஊர்வலம் வரும் மூன்றாவது நாள் வான்றப்பட்டரை என்னும் இடத்தில் தேரை நிறுத்துவார்கள். அப்போது பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் கண்டு மகிழ்வார்கள். பின்னர், இரவு வானவேடிக்கை நடைபெறும்.

நான்காம் நாள் விழா

எருமைகிடா வெட்டி, பொங்கலிட்டு பூசைசெய்து வழிபடுவார்கள். அன்று இரவு, நாடகம் நடைபெறும்.

ஐந்தாம்நாள்

காளியம்மனுக்கு மஞ்சள் நீர் விழா நடைபெறும். பின்னர் காளியம்மன் தேரானது, கோயிலுக்கு அழைத்து செல்வார்கள். இரவு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். இன்றுடன் திருவிழா நிறைவுபெறும்.

திருவிழாவின் சிறப்புகள்

- ஆயிரம் பானையில் பொங்கல் வைத்தல்
- பதினெட்டுப்பட்டி கிராம மக்கள் அனைவரும் கலந்துகொள்தல்
- கிடா (ஆடு) வெட்டுதல்
- எருமைக்கிடா பலி கொடுத்தல்
- இரண்டு தேர்கள் ஊர்வலம் வருதல்
- வாணவேடிக்கை நிகழ்த்துதல்

மக்களின் நம்பிக்கைகள்

மதுரை காளியம்மனை வழிபடும் மக்கள் பல்வேறு விதமான நம்பிக்கைகளை வைத்துள்ளனர். இவர்களின் வாழ்வில் நடைபெறும் அனைத்துவிதமான இன்ப, துன்பங்களுக்கு அம்மனே காரணம் என நம்புகின்றனர். இவர்களுடைய சில நம்பிக்கைகள்

Koviloor Digital Library

1. சத்தியம் பலித்திடல்
2. பிள்ளைப்பேறு
3. திருமணம் கூடல்
4. பிணிகள் அகலுதல்
5. தொழில் மேம்பாடு
6. வேளாண்மை சிறத்தல்
7. வாகனங்களைப் பாதுகாத்தல்
8. எதிரிகள் பற்றிய அச்சம் விலகல்
9. ஈடு போடுதல்
10. மந்திரம் செய்வினைகளிலிருந்து விலகுதல்

எருமைக்கிடா பலி

ஆடு, பன்றி, கோழி என முப்பலிகளைத் தருவது பழைய வழக்கமாக இருந்து வருகிறது. அந்த வழக்கம் இன்றும தொட்டியம் மதுரை காளியம்மன் கோயிலில் நடைபெறும். பொதுவாகக் கோழியும் ஆட்டுக்கிடாயும் பலி தரப்பட்டாலும் எருமக்கிடா பலி திருவிழாக்காலங்களில் நடைபெறுகிறது. வெட்டப்பட்ட எருமைக்கிடாவைப் புதைப்பதற்கான பெரும் நிலப்பரப்பு இக்கோயிலின் அருகில் உள்ளது.

முடிவுரை

தொட்டியம் மதுரை காளியம்மன் கோயிலில் தோன்றிய சூழ்நிலை, திருவிழாக்கள், சடங்குமுறைகள், மக்களின் உறுதியான நம்பிக்கைகள், வழிபாடுகள், சிறப்புகள், எருமைக்கிடா பலி கொடுத்தல் ஆகியவை பற்றி இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

திருக்கோயில்களின் பூசை முறைகள்

முனைவர் ஜி.பரந்தாமன்
உதவிப்பேராசிரியர்,
வரலாற்றுத்துறை.
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

திருமிகு. அ.சீனிராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
வரலாற்றுத்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

முன்னுரை

பூசை ஆத்மார்த்தம் எனவும்,பரார்த்தம் எனவும் இரு வகைப்படும். ஆத்மார்த்த பூசை என்றால் பூஜிப்பவன் தனக்கும், தன் குடும்பத்திற்கும் நன்மை உண்டாகும்போருட்டுதன் வீட்டில் தன் சக்திக்கியன்றவாறு பூஜிப்பதாகும். இலிங்கம், சாளக்கிராம்ம், பிம்பம்,சக்கரம் முதலியவற்றை வைத்து பூஜிப்பர். இதற்குள் விதிகள் ஒருவாறு ஆலய பூசை விதிகளை ஒக்கும். மந்திரம்,யந்திரம் ,தந்திரம் இவற்றை இதன் அங்கங்களாகவும்கொல்வர். மந்திரத்தோடு செய்து 16 உபசாரங்களால்பூஜிப்பர். குருமுகமாகத் தீட்சை பெற்றவர்களே இப்பூசைக்கு உரியவர்கள் ஆவர்.

பூசை முறைகள்

பூசை என்பது ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளுக்கு ஆகம முறைப்படி ஆச்சாரியர்களைக் கொண்டு பூசை செய்தல் ஆகும். அது நித்தியம், நைமித்திகம் காமிகம் என மூன்று வகைப்படும். நித்திய பூசை என்பது நாளும் நாள்தோறும் பகலில் நான்கு காலங்களும் இரவில் நான்கு காலங்களுமாக எட்டு கால பூசை செய்யப்படும் ஆலயங்கள் சில உள்ளன. பகலில் மூன்றும், இரவில் மூன்றுமாக ஆறு கால பூசை நடக்கும் கோவில்களும், பகலில் இரண்டும், இரவில்இரண்டுமாக நான்கு கால பூசை நடக்கும் கோயில்களும், பகலில்ஒன்றும், இரவில் ஒன்றுமாக இரண்டு கால பூசை நடக்கும் கோவில்களும் பல உள்ளன. ஆலயங்களில் பொருள் வருவாய்க்கு ஏற்ப பூசை காலங்கள் நடந்து வருகின்றன.

பஞ்ச சுத்தி

பூசைசெய்பவர்உடல் சுத்தமும், உள்ளச்சுத்தமும்

Koviloor Digital Library

உடையவராக இருத்தல் வேண்டும். உடல் சுத்தத்திற்கு நீரோடுதல், தோய்த்துலர்ந்தஆடைகட்டுதல், விபூதி, உருத்திராக்கம் அணிதல், நாமதாரணம், துளசி மாலை அணிவது முதலியன இன்றியமையாதவையாகும். உள்ளச்சுத்தத்திற்கு ஐம்புலனடக்கலும்,தீக்கை பெறுதலும் அவசியமானவை. பூசை முறைகளை காரியகாரணத்தோடு அறிந்திருத்தல் நலம். இவ்வித சத்திகளை பஞ்சசுத்தி எனக்கூறுவர். பஞ்ச சுத்தி என்பது ஆத்ம சுத்தி, ஸான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என ஐந்து வகைப்படும்.

ஆத்மசுத்தி

பூசை செய்யும் ஆச்சாரியன்தனது உடம்பை திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனி போல சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸதானசுத்தி

பூஜிக்கும்ஆலயம், மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பக் கிரகமும்,இதரமூர்த்திகள் வீற்றிருக்கும் இடங்களும் எப்போதும் சுத்தமாக இருக்கச் செய்ய வேண்டும். அர்க்கிய நீரை பூமியில் தெளித்துஇடத்தைசுத்திகரிக்கவேண்டும்.

திரவிய சுத்தி

பூசை பாத்திரங்கள் நன்றாக கழுவி, சங்கு நீர் முதலிய பூசைக்குரிய பதார்த்தங்களில்அர்க்கிய நீரை தெளித்துசுத்தி செய்யவேண்டும்.

மந்திர சுத்தி

பிஜாட்சர மந்திரத்தை சுஷீம்னைநாடியில்அடக்கி அந்தந்த மூர்த்திகக்குரிய மூலமந்திரத்தை 10 முறை ஜெபிக்க வேண்டும்.

இலிங்கசுத்தி

அபிடேகப் பாத்திரத்தில் நீர் பரப்பி, கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களையும் அதில் ஆவாகனம் செய்து ,லிங்கத்தில் அபிஷேகம் செய்யவேண்டும், விக்கிரகங்களில் ஒட்டிக்கிடக்கும் மெழுக்கினைக்களைந்துசுத்த ஆடை கட்ட வேண்டும்.

Koviloor Digital Library

"பஞ்ச சுத்தியினைப் பண்ணிடுக பாங்காக
பஞ்சவிதப் பாசமறுப்பார்" (சைவ சமயநெறி)

"பஞ்சவித சுத்தி செய்து பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சியஞானம் விளங்கும் பராபரமே" (தாயுமானவர்)

சோடசோபசாரங்கள்

இது இறைவனுக்குரிய பூசையில் செய்யப்படும் *16* உபசாரங்களாகும்.

ஆவாகனம்

இறைவனை வரவழைத்து நேர்முகப்படுத்தி, விக்ரகத்தில் சேர்ப்பதற்கு ஆவாகனம் என்று பெயர். இது மூலாதாரத்திலுள்ள ஜீவசைதன்யத்தை எடுத்துச் சுஷீம்னை வழியாக மேலேற்றிக் கொண்டு வந்ததாக சங்கற்பம் செய்தல்.

ஸ்தாபனம்

இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டும் என்று பிராத்தித்து பீடத்தில் உள்ள விக்கிரகத்தில் இறைவனை அமர்த்துதல்.

சந்நிதானம்

இது பூஜிக்கப்படும் மூர்த்தி நமக்கு அனுக்கிரகம் செய்யும் முறையும், பூசைகள் அருள்பெறும்முறையும் ஆகும்.

சந்நிரோதனம்

இறைவா! அடியேனிடம் என்றும் கருணையோடு இருக்க வேண்டும் என வேண்டி ,பூசை முடிவுரை சாந்நித்யம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுதலாம்.

அவகுண்டனம்

விக்ரகத்தைச் சுற்றி கவச மந்திரத்தால் மூன்று அகழ் உண்டாக்கித் தடைகள் வராமல் அம்மந்திரத்தாலேயே அதனை மூட வேண்டும்.

அபிஷேகம்

மாப்பொடி, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சகவ்வியம், பஞ்

Koviloor Digital Library

சாமிருதம், பால், தயிர்,தேன்,கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சை பழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம்,பத்றிரோதகம், கும்போதகம் இவற்றை வரிசைப்படி அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகத்திற்கு தேனு முத்திரை காட்ட வேண்டும். தேனு முத்திரை என்பது பசிவின்அகடு போன்ற முத்திரையாகும்.

பாத்தியம்

சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருட்களையும் பாத்திய நீரில் கலந்து பாதத்தில் விட வேண்டும்.

ஆசமநீயம்

நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ என்ற பொருட்களை இட்டுச் சம்கிதா மந்திரம் சொல்லி பாதத்தின் அடியில் வைக்கவேண்டும்.

அர்க்கியம்

இறைவனுக்கு மூலமந்திரம் கூறி எள், நெல், தர்ப்பைநுனி ,பால், அரிசி, புஷ்பம், வென்கடுகு முதலியவை கலந்த நீரால் அர்க்கியம் கொடுக்க வேண்டும்.

மாலை சாத்தல்

அழகிய புஷ்பங்களால் இறவனைஅலங்கரித்துக்கண்கள்குளிரக் கண்டுகளிக்க வேண்டும்

"உன்னை அலங்கரித்து உன் அழகைப் பாராமல்
என்னை அலங்கரித்து இழந்தேன் மனோன்மணியே"

என்ற பாடல் இறைவனை அலங்கரித்து பார்ப்பதன் சிறப்பை கூறுகின்றது.

தூபம்

சன்னிதியில் சாம்பிராணி புகைத்தல்தூபம் எனப்படும். இது கிரியாசக்தியைக் குறிக்கும். ஆவணமலமான அஞ்ஞானத்தை கிரியாசக்தி அகற்றலாம் என்பது தத்துவம். கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் முதலியவை தூபப்பொருள்களாகும். தூபம்பாபங்களை அகற்றும்.

Koviloor Digital Library

தீபம்

தீபம் ஆத்மாவின்மலத்தைப் போக்கி ஞானத்தைக்கொடுக்கிறது. தீபத்திற்குத் திரி, கற்பூரம், துணி, நூல், பஞ்சு,இவைகளில் எதையாவது உபயோகிக்கலாம். பசுவின்நெய் உபயோகிப்பது உத்தமம். எண்ணை மத்திமம். தீபத்தை ஏற்றி நிரீட்சனம்செய்து பூக்களால் அர்ச்சித்துத் தீபம் காட்டி, மணியடித்து, மந்திரங்கள் கூறிக் கிரீடம் முதல் பாதம் வரை காட்ட வேண்டும்.

நெய்வேத்தியம்

இதற்கு நெல் அரிசி, கோதுமை, முளை அரிசி இவை உத்தமம். வெள்ளை அரிசியை விட சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு மிக உத்தமம். நெல்,கல், உமி,ரோமம் இவை அரசியல் கலந்து இருக்கக்கூடாது. சுத்த அன்னம், பாயசம், பொங்கல் முதலிய ஆதாரங்களும் நிவேதனத்துக்கு உகந்தவை ஆகும். ஆத்மாவின் இடமாகிய அகங்காரம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்குச் சமர்ப்பிப்பதைஇது குறிக்கிறது.

பாநீயம்

வாசனையுள்ளதீர்த்தத்தைஈசுவரப்பிரீதிக்காகச்சமர்ப்பித்தல்.

ஜபசமர்ப்பணம்

மூல மந்திரத்தை 108 முறை ஜெபித்து இதை ஈஸ்வரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஜபம், பூசை, ஹோமம் முதலிய எல்லா புண்ணியச் செயல்களையும் அர்ச்சகர் ஈஸ்வரனுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.பகவான்அதனை ஏற்றுக்கொண்டு பக்தி,முத்திகளை நமக்கு அருளுகிறான்.

தீபா ஆராதனை

பலவித திபங்களை ஈஸ்வர சன்னிதியில் காட்டி செய்யும் ஆராதனைக்கு தீபாராதனை என்று பெயர். தீபாராதனை வேளையில் உண்டாகும் மேளதாளங்கள்,மணிகளும், சங்க நாதங்களும், பிசாசு, பிரம்ம ராட்சஷன் முதலியோரை வெகுதொலைவில் ஓட்டுகின்றன. தீபாராதனை என்பது 16 வகைப்படும். அவையாவன;

Koviloor Digital Library

- தூபம்
- புஷ்ப தீபம்
- நாக தீபம்
- விருஷபதீபம்
- மேருதீபம்
- புருஷா மிருக தீபம்
- கும்ப தீபம்
- ஆராத்திரிகம்
- நட்சத்திர தீபம்
- கற்பூரதீபம்
- பஸ்மோபசாரம்
- கண்ணாடிகாட்டல்
- குடைபிடித்தல்
- கொடிகாட்டல்
- சாமரம் வீசுதல்
- விசிறி வீசுதல்

தீபாலங்காரங்களின் தத்துவம்

ஊர்வன, பறப்பன ,விலங்குகள்எனும் முறையில் விரிந்து, பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி, இறுதியில் கற்பூர தீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றி-விடுதல்ஆகும்.

குண்டலினி ஆறு ஆதாரங்களின் வழியாக மேலேறிச்செல்லும் பொழுது அந்தந்த ஆதாரங்களை உண்டாகும் அனுபவங்கள் ஒளி,ஓசை, தீபம், ருசி ,தரிசனம் முதலியவற்றைத் தீபம், வாத்தியம், அலங்காரம், நைவேத்தியம், மூர்த்தி என்று விளக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

மேற்கூறியதிலிருந்துஆத்மார்த்தமாகவும்,பரார்த்தமாகவும் பூசை செய்ய வேண்டிய முறைகளும் அவற்றின் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன

Koviloor Digital Library

தமிழர்களின் திங்கள் வழிபாடு

பேரா. சே. செந்தமிழ்ப்பாவை,
இயக்குநர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

திருமிகு. **கா.சுபா,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

அச்சத்தின் காரணமாக இயற்கையை வழிபடத் தொடங்கிய ஆதித்தமிழர்கள் அதன் ஒரு பகுதியாக திங்களையும் வழிபட்டனர். திங்கள் நிலவு, நிலா, வெண்ணிலா, சந்திரன் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறுகிறது. தமிழர்களின் திங்கள் வழிபாடு குறித்த செய்திகளை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்ககாலத் தமிழர்களின் திங்கள் வழிபாடு

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"

என்னும் இளங்கோவடிகளின் கூற்றிலிருந்து பண்டைத்தமிழர் திங்களை வழிபட்டதன் தொன்மை புலப்படும்.

"தொழுது காண் பிறையின் தோன்றி" (குறுந். 178: 5)

"வளை உடைத் தனையது ஆகிபலர் தொழ
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி
இன்னாப் பிறந்தன்று பிறையே" (குறுந்.307:1–3)

என்னும் அடிகள் சங்க காலத் தமிழர்கள் நிலவை வழிபட்டமையை உணர்த்தி நிற்கிறது. பிறையை மட்டுமல்லாது முழுநிலவையும் தமிழர்கள் இன்றுவரை வழிபட்டு வருகின்றனர்.

சித்திரை முழுநிலவு நாள்

சித்திரை மாதம் வரும் முழுநிலவு நாள் 'சித்திரா பௌர்ணமி'

Koviloor Digital Library

என வழங்கப்படுகிறது. சித்திர குப்தனின் பிறந்த நாளாகச் சித்திரை மாத முழுநிலவு நாள் கொண்டாடப்படுகிறது. அன்று சித்திரகுப்தனுக்குப் பொங்கல் வைத்து வழிபடும் வழக்கம் தமிழர்களிடம் உள்ளது. மேலும் அன்று மதுரையில் சித்திரைத் திருவிழா நடைபெறும். அவ்வமயம் கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் விழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. பல ஊர்களிலிருந்தும் மக்கள் இவ்விழாவைக் காண மதுரையில் திரள்கின்றனர். மேலும், சித்திரை முழுநிலவு நாள் அன்று விளக்கேற்றி வழிபாடு செய்ய நீண்ட ஆயுள், குழந்தைப் பேறு கிட்டும் என்னும் நம்பிக்கை நிலவுகிறது.

வைகாசி விசாகம்

வைகாசி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் 'வைகாசி விசாகம்' என வழங்கப்படுகிறது. முருகனுக்கு உகந்த நாளாக வைகாசி விசாகம் கருதப்பட்டு அன்றைய தினம் முருக வழிபாட்டை மேற்கொள்கின்றனர். ஆலயங்களில் முருகனுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. மேலும் புத்த பூர்ணிமா விழாவும் வைகாசி மாத முழுநிலவு நாள் அன்று கொண்டாடப்படுகிறது.

சாவித்திரி விரதம்

ஆனி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் அன்று பெண்கள் சாவித்திரி விரதத்தை மேற்கொள்கின்றனர். தன் கணவனான சத்தியவானை எமனிடம் இருந்து மீட்ட சாவித்திரியை விரதமிருந்து வழிபடுவதன் மூலம் மாங்கல்ய பலம் பெருகும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இவ்விரதம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஆனி மாத முழுநிலவு நாள் அன்று இறைவனுக்கு மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளையும் படைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது. அன்றைய தினம் கண்ணனை நினைத்து விரதம் இருந்தால் விரும்பிய மணவாழ்க்கை அமையும் எனும் நம்பிக்கை நிலவுகிறது.

அம்மன் வழிபாடு

ஆடி மாத முழுநிலவு நாள் அன்று அம்மனுக்குச் சிறப்பு அபிடேகம், வழிபாடு நிகழ்த்தப்பெறுகிறது. அன்று அம்மனுக்குப் புடவை சார்த்தி, பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். கூழ் தயாரித்துக்

Koviloor Digital Library

கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வழங்குகின்றனர். மேலும் ஆடி மாத முழுநிலவு நாள் சிவனுக்கு உகந்த நாளாகக் கருதப்பட்டு சிவன் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

ஆவணி அவிட்டம்

ஆவணி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் 'ஆவணி அவிட்டம்' என்னும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்று விசுவகர்மா சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் பூணூல் அணிந்து வழிபாடு நிகழ்த்துவர்.

அம்மை அப்பர் வழிபாடு

புரட்டாசி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் அன்று உமாமகேசுவரனை வழிபடும் மரபு காணப்படுகிறது. இவ்வழிபாடு 'அம்மையப்பர் வழிபாடு' என வழங்கப்படுகிறது. மேலும் அன்றைய தினம் விளக்கேற்றி வழிபட காரியத் தடைகள் விலகும் எனும் நம்பிக்கை நிலவுகிறது.

அன்னாபிடேகம்

ஐப்பசி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் அன்று சிவபெருமானுக்கு அன்னாபிடேகம் செய்து வழிபடுகின்றனர்.அன்றைய தினம் தஞ்சை பெரிய கோயில் உள்ளிட்ட சிவ தலங்களில் சிவபெருமானுக்கு அன்னாபிடேகம் செய்து வழிபடுகின்றனர்.

கார்த்திகைத் திருநாள் வழிபாடு

கார்த்திகை மாத முழுநிலவு நாள் கார்த்திகைத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. அன்று ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்குகளால் அலங்கரித்து வழிபடுவர். விளக்குகள் தரும் ஒளியைப் போல தங்கள் வாழ்க்கையிலும் ஒளி பரவ வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

நடராசர் வழிபாடு

மார்கழி மாத முழுநிலவு நாள் அன்று சிவபெருமான் ஆனந்த நடனமாடி நடராசராக அவதரித்த நாள். அன்றைய தினம் நடராசருக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெறுகிறது.

Koviloor Digital Library

தைப்பூசம்

தை மாதத்தில் வரும் முழுநிலவு நாள் தைப்பூசத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்று முருகனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது. பழனியில் தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். தமிழகத்தின் பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் பழனிக்குப் பாதயாத்திரை மேற்கொள்வர். பலர் காவடி எடுத்தும் வழிபடுவர்.

மாசிமகம்

மாசி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் மாசி மகமாகக் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் புனித நீராடுதல் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. கும்பகோணத்தில் மாசி மகத் திருவிழா சிறப்பாக நடைபெறுதல் குறிக்கத்தக்கது.

பங்குனி உத்திரம்

பங்குனி மாதத்தில் வரும் முழுநிலவு நாள் பங்குனி உத்திரத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் முருகனுக்கு உகந்த நாளாகக் கருதப்பட்டு முருகனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும். மேலும் அன்றைய தினம் மக்கள் அவரவர் குலதெய்வ கோயிலுக்குச் சென்று வழிபடும் முறை காணப்படுகிறது.

பொதுவான சில வழிபாட்டு முறைகள்

பன்னிரு மாதங்களிலும் முழுநிலவு வழிபாடு நடைபெறுதல் கருதத்தக்கது. தமிழர் வழிபாட்டு மரபில் ஒவ்வொரு மாத முழுநிலவு நாளும் ஒவ்வொரு வகையில் தனித்துவம் பெறுகிறது. எனினும் அனைத்து முழுநிலவு நாட்களிலும் மேற்கொள்ளத்தக்க வழிபாட்டு முறைகளும் தமிழகத்தில் நிலவி வருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவையாக மலைவலம் (கிரிவலம்) வருதல், விளக்கேற்றி வழிபடுதல், கூட்டுப்பிரார்த்தனை செய்தல், விரதமிருத்தல், பைரவர் வழிபாடு போன்றவற்றைக் கொள்ளலாம்.

மலை வலம் வருதல் (கிரிவலம்)

ஒவ்வொரு மாத முழுநிலவு நாளின் போதும் பக்தர்கள்

Koviloor Digital Library

மலைவலம் வந்து இறைவனை வழிபடுகின்றனர். திருவண்ணா மலை வலம் மிகவும் பிரசித்து பெற்றதாக விளங்குகிறது. மலையை வலம் வருதல் என்பது அறிவியல் ரீதியாகவும் உடல் ஆரோக்கியத்திற்கும், மன அமைதிக்கும் வழி வகுக்கிறது. தற்போது திருவண்ணாமலை மட்டுமல்லாது திருச்சி மலைக்கோட்டை உள்ளிட்ட சில தலங்களிலும் பக்தர்கள் மலைவலம் வந்து வழிபடுகின்றனர்.

விளக்கேற்றி வழிபடுதல்

> **"............ கணங்குழை மகளிர்**
> **கையுறையாக நெய்பெய்து மாட்டிய சுடர்"** (குறுந்.398:3-4)

என்னும் அடிகள் முழுநிலவு அன்று பெண்கள் விளக்கேற்றி வழிபட்டமையை உணர்த்தும். ஒவ்வொரு முழுநிலவு நாள் அன்றும் பெண்கள் தங்கள் இல்லத்தின் வாயிலில் கோலமிட்டு அதில் மஞ்சள், குங்குமம் வைத்து, அக்கோலத்தின் நடுவே காமாட்சியம்மன் விளக்கினை ஏற்றி வழிபடும் மரபு தமிழகத்தில் பழங்காலம் தொட்டே நிலவி வருகிறது. இவ்வாறு வழிபடுவது வறுமையைப் போக்கி, செல்வ வளத்தைப் பெருக்கும் என்னும் நம்பிக்கை காணப்படுகிறது.

கூட்டுப் பிரார்த்தனை செய்தல்

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உயர் பண்பாடு கொண்டவர்கள் தமிழர்கள். எனவே தான் தமிழகத்தின் பல கோயில்களிலும் குறிப்பாக அம்மன் கோயில்களில் முழுநிலவு நாள் அன்று கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுகிறது. சான்றாக, சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமைந்துள்ள 'பேசும் தெய்வம் காமாட்சி அம்மன்' திருக்கோயிலில் ஒவ்வொரு முழுநிலவு நாள் அன்றும் மகளிர் பலர் கூடி கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்துகின்றனர். யாரேனும் ஒருவருடைய பிரச்சினையைக் கூறி அது தீர வேண்டும் என்று அம்மனை வேண்டி வழிபாடு செய்கின்றனர். அது தவிர, ஒவ்வொரு முழுநிலவு நாள் அன்றும் இக்கோயிலில் அன்னதானம் நடைபெறுகிறது.

Koviloor Digital Library

சமூக ஒற்றுமை என்ற மிகப்பெரிய சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட கூட்டுப்பிரார்த்தனை காரணமாக உள்ளது என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

விரதமிருத்தல்

தாயை இழந்த ஆண்கள் தன் தாயை நினைத்து ஒவ்வொரு முழுநிலவு நாள் அன்றும் விரதமிருக்கின்றனர். காலையில் உணவருந்தாது, இவ்விரதத்தை மேற்கொள்கின்றனர்.

பைரவர் வழிபாடு

ஒவ்வொரு முழுநிலவு நாள் அன்றும் பைரவருக்கு விரதமிருந்து வழிபடும் முறை காரைக்குடி, தேவகோட்டை வட்டாரப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகிறது. அன்றைய தினம் காலை முதல் உணவருந்தாமல் விரதமிருக்கின்றனர். அன்று மாலை கோயிலில் பைரவருக்கு வழிபாடு நடைபெறுகிறது. ஒரு குடத்தில் தீர்த்தம் வைத்து அதன் மேல் கும்பம் வைத்து வழிபடுகின்றனர். வழிபாடு நடைபெற்றவுடன் அனைவரும் முழுநிலவைத் தரிசிக்க வேண்டும். தரிசித்த பின்னர் கும்பத்திலுள்ள நீரை அனைவர் மீதும் தெளிக்கின்றனர். வழிபாடு முடிந்தவுடன் விரதத்தைப் பூர்த்தி செய்கின்றனர். இவ்வாறு 9 முழுநிலவு நாட்கள் விரதமிருந்து வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும் என்னும் நம்பிக்கை அப்பகுதி மக்களிடையே நிலவுகிறது.

முடிவுரை

தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே திங்கள் வழிபாடு நிகழ்ந்து வருகிறது. திங்கள் வழிபாட்டைப் பொறுத்தவரை ஒவ்வொரு முழுநிலவு நாளும் ஒவ்வொரு வகையில் தனித்துவம் மிக்கதாக விளங்குகிறது. மேலும் அனைத்து முழுநிலவு நாட்களிலும் வழிபடக் கூடிய சில பொதுவான வழிபாட்டு முறைகளும் தமிழகத்தில் காணப்படுகின்றன. நம் தமிழ் மண்ணில் இயற்கையை வழிபடுதல் என்னும் மரபில் திங்கள் வழிபாடு குறிக்கத்தகுந்த சிறப்பானதொரு இடத்தைப் பெற்று, மிகச்சிறந்த பண்பாடாகத் திகழ்கிறது.

Koviloor Digital Library

இறை காப்போர்

திருமிகு. மு.செண்பகவள்ளி
முனைவர்பட்ட ஆய்வாளர் தமிழ்ப்பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி-3

முன்னுரை

மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்று வாழ்ந்த குடிகளும் மன்னவனுக்கு எவ்வாறு மதிப்பு, பாதுகாப்பு செலுத்தி வந்தனரோ அதன்படியே மனிதனால் படைக்கப்பட்ட கோயில்களில் உள்ள இறைவனுக்கும் அத்தகைய பாதுகாப்பை அளித்து, பாதுகாத்து வழிபட்டு வந்தனர். கோ+இல் கோயில் அரசன் குடியிருக்கும் இடம் என்ற அடிப்படையில் மன்னவனுக்கு இரு மருங்கிலும் இரு காவலாளிகள் இருப்பது படியே இறைவனுக்கும் கருவறை வாயிலின் இருமருங்கிலும் காவலாளிகளான துவார பாலகர்களை நியமித்தனர். இத்தகைய துவார பாலகர்கள் என்பவர் யார் என்பதைப் பற்றி விரிவாக ஆய்வதாக இக்கட்டுரை அமையும்.

துவார பாலகர்கள்

துவார என்பதற்கு வாயில் என்றும், பால என்பதற்குக் காப்போன் என்றும் பொருள் கொண்டு வாயில் காப்போன் எனத் துவார பாலகர்களை அழைக்கின்றோம். இத்துவார பாலகர்களின் உருவங்கள் இராஜகோபுரங்களிலும் கருவறையின் இருபுறங்களிலும், தேர்களிலும், தெப்பக்குளங்களிலும் தெய்வீக முகம் கொண்ட சாதாரண போர்வீரன் போன்றோ அல்லது பார்ப்பதற்கே அச்சுறுத்தும் கோர முகம் கொண்ட அரக்கர்கள் போன்றோ காணப்படும்.

துவார பாலகர்களின் பெயர்கள்

இத்துவார பாலகர்கள் இந்துக்களின் சைவம், வைணவம் என்ற இரு சமயங்களிலும் காணப்படுகின்றனர். ஒவ்வொரு சமயத்திலும் இவர்களின் பெயர்களும் அச்சமயக் கடவுளர்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றன.

Koviloor Digital Library

சைவ சமயத்தில்

சிவன் வீற்றிருக்கும் சைவ ஆலயங்களில் பல்வேறு துவார பாலகர்கள் வீற்றிருக்கின்றனர். அவர்கள் சண்டி, முண்டி, சண்டன், பிரசண்டன், திரிசூலநாதர், மழுவுடையார் எனவும் அறுவகைப் பெய்களில் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய அறுவருள் சண்டன், பிரசண்டன் என்ற இணைத் துவார பாலகர்கள் மிகுந்த வலிமை பெற்றவர்கள் என்பதால் பெரும்பாலான சிவாலயங்களில் வீற்றிருப்பவாகளாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

சண்டி, முண்டி:

தங்களது தவ வலிமையால் பிரம்மனிடம் வரம் பெற்ற மூன்று அரக்கர்கள் தங்கம், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று பறக்கும் கோட்டைகளைப் பெற்று அதில் ஏறி, அதன் மூலம் பல உலகங்களைப் பிடித்து ஆட்சி செய்து தேவர்களை மட்டுமின்றி அனைவரையும், அனைத்து உயிர்களையும் துன்பப்படுத்தினர்.

இதனால் கதிகலங்கிய தேவர்கள் சிவனிடம் முறையிட சிவன் அம்மூவரையும், முப்புரங்களையும் எரித்த பின் பூவாகக் காட்சி தந்தனர். இப்போது இரு அரக்கர்கள் அப்பூவாக உள்ள லிங்கத்தைக் கட்டி அணைத்தனர். அவ்விருவரே பின்னாளில் சிவன் வீற்றிருக்கும் கருவறைக் காப்பாளர்களாகச் சண்டி, முண்டி என அழைக்கப்பட்டனர்.

திரிசூலநாதர் - மழுவுடையார்

இவ்இணையர்களான துவார பாலகர்கள் சிவனது பெயர்களைத் தாங்கியவர்கள் என்பதற்கு ஏற்ப இவர்களில் திரிசூலம் என்ற சிவனின் திருக்கை ஆயுதமான திரிசூலநாதரின் தலைப் பகுதியின் பின்பக்கத்தில் சிவனின் திரிசூல வடிவம் காணப்படுகிறது. இத்துவார பாலகருக்கு நந்திகேசுவரர் என்ற பெயருண்டு. சிவன் கையின் மற்றொரு ஆயுதமான மழுவைத் தாங்கிய பெயரை உடைய பாதுகாவலர் நாற்பத்தின் நெற்றிப்பகுதியில் மழுபோன்ற ஆயுதம் செதுக்கப்பட்டுள்ளது.

வைணவத்துவார பாலகர்கள்

வைணவக் கடவுளரான திருமாலின் கருவறை வாயில்

Koviloor Digital Library

பாதுகாவலர்களாக ஐயன், விஜயன் ஆகிய இருவரும் வீற்றிருக்கின்றனர். இவர்கள் வைகுண்டத்தின் பாதுகாவலர்களாக இருந்த போது பிரம்மனின் மனத்தில் தோன்றிய மகன்களான சனகாதி முனிவர்கள் திருமாலைச் சந்திக்க வந்தபொழுது அவரைத் தடுத்ததன் விளைவாகப் பெற்ற சாபத்தால் மனிதர்களாக மண்ணில் தோன்றினர். அவர்களைத் திருமால் தன் கருணையால் இரணியகசிபு, இரணியாட்சன், இராவணன், கும்பகர்ணன் போன்ற அரக்கர்களாகத் தோன்ற வைத்து அவர்களுக்கு முக்தியைக் கொடுத்து தன் அருகிலேயே என்றும் பாதுகாவலர்களாக வைத்துக் கொள்ள எண்ணினார். ஆதலால் இன்றளவும் விட்ணு கோவில்களில் இவரிருவரே பாதுகாவலர்களாக உள்ளனர்.

ஒற்றைத் துவார பாலகர்

பெரும்பாலும் தமிழகக் கோவில்களில் இரட்டைத் துவார பாலகர்கள் இருப்பது போல் அமைப்பது மரபு. ஆனால் சென்னைக்கு அருகே உள்ள திண்டிவனத்தில் திந்திரிணீ-ஸ்வரர் என்ற சிவன் ஆலயத்தில் சண்டி, முண்டி, திரிசூலநாதர், மழுவுடையார், சண்டன், பிரசண்டன் என்ற மூவினை துவார பாலகர்களைத் தாண்டி திண்டி என்ற ஒற்றைத் துவார பாலகர் கருவறை வாயிலில் காணப்படுகின்றனர். இவர் திந்திரிணீ-ஸ்வரரை வேண்டி காலம் முழுவதும் வழிபட்டமையால் இவர் பெயராலேயே இவ்வூர் பின்னாளில் திண்டிவனம் என அழைக்கப்பட்டது. தமிழகத்தில் இங்குள்ளது போல் எவ்வாலயத்திலும் ஒற்றைத் துவார பாலகர் காணப்படாதது இக்கோவிலின் சிறப்பம்சமாகும்.

தஞ்சைக் காப்போன் உணர்த்துவது:

தஞ்சை இராஜராஜ சோழன் கோவிலின் கோபுரத்தில் உள்ள ஒரு துவாரபாலகன் சிற்பம் உலகத்துக்கே நமது பெருமையைப் பறை சாற்றுவது போல உள்ளது. அக்காப்போன் சிற்பத்துக்கு நான்கு கரங்கள் உள்ளன. அவன் காலடியில் பெரிய பாம்பு ஒன்று அக்காப்போனுக்கு அரைஞாண் கயிறு போன்றும் அப்பாம்பு ஒரு பெரிய யானையை விழுங்குவது போன்றும் படைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பெரிய உருவமான ஒரு யானையையே உண்ணும் பாம்பைத் தன் காலடியில் கிடத்தியுள்ளான் என்றால் அவன் எத்தகைய வலிமை உள்ளவன் என்பதைப் பறைசாற்றும். அவனது நான்கு கரங்களும் உள்ளே உள்ளவர் எவ்வளவு வலிமை மிக்கவர் என்பதையும், தன் வலிமையையும், அமைதி காத்து இறைவனை வணங்க வேண்டியதையும் அவனன்றி வேறு எதுவும் பெரி-தில்லை, இறைவன் ஒருவனே வலிமை மிக்கவன் என்பதையும் நன்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது.

அம்மன் கோயில்களில்

ஆண் தெய்வங்கள் மட்டுமின்றி பெண் தெய்வங்களான அம்மன் வீற்றிருக்கும் கருவறைகளிலும் துவார பாலகர்கள் அவ்வம்மனின் பெயருக்கும் குணத்துக்கும் ஏற்றாற்போல சாந்தசொருபினியாகவோ, காளி கோவில்களில் அரக்கியர் போன்ற தோற்றத்துடனேயே காணப்படுகின்றனர். இத்துவார பாலகிகள் அரபத்ரா, சுபத்ரா என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

முடிவுரை

மனிதனைப் படைத்தது இறைவன் என்றாலும் அவ்விறைவனுக்கென வழிபட இருப்பிடங்களாகிய ஆலயங்களை மனிதர்கள் தங்களது சமயக் கடவுள்களுக்குக் காப்போர்களாகக் கருவறை வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்களை அவ்வவ் இறைவர்களால் முக்தி அளிக்கப்பட்ட தவமுனிவர்கள், அரக்கர்களைப் படைத்திருப்பது மன்னனுக்குப் பாதுகாவலர்கள் இருந்ததைப் போல் இறைவர்க்கென்ற ஏவலர்களாகப் படைக்கப்பட்டிருப்பது தெளிவாகின்றது.

Koviloor Digital Library

திருப்பாவை உணர்த்தும் பாவை நோன்பும் திருமால் வழிபாடும்

முனைவர் பி. செல்வக்குமாரன்,
இணைப் பேராசிரியர் - மேனாள் துறைத்தலைவர்,
தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி -2

உலகிலுள்ள பல சமயங்கள் தோன்றியுள்ளன. அச்சமயங்களுள் வைணவமும் ஒன்று. இவ்வைணவ சமயம் பல உயரிய உண்மைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பரந்து விரிந்த சமயமாகும். தன் சமயக் கோட்பாடுகளை நற்றமிழில் வலியுறுத்தியும், மக்களிடத்தே செல்வாக்குப் பெற்றதாகும். வைணவ நெறியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் பன்னிரு ஆழ்வார்களாவர். முதலாழ்வார் தொடங்கி, கோதை எனும் ஆண்டாள் வரை பலர் பாடல்களும் இயற்றியுள்ளனர். இவர்கள் உலகம் எனும் பிரபஞ்சத்திற்கும், உலகியல் எனும் வாழ்வியல் தத்துவத்திற்கும் இணைப்பாக பல சமயக் கருத்துக்களை முன் வைக்கின்றனர். தமிழ் பக்தி இலக்கியலங்களின் வரிசையில் சிறப்பிடம் பெற்றவை கோதை நாச்சியாரின் திருப்பாவை கண்ணனை நாயகனாக எண்ணி எண்ணி நாச்சியார் மொழிந்த மொழிகள் திருப்பாவைக்கு தேன் சொட்டாய் விளங்குகின்றன. இவ்வழகு நயமிக்க திருப்பாவையை ஆய்வுக்கு எடுத்தாண்டு அவற்றில் காணலாகும் பாவை நோன்பின் சிறப்புகளையும் திருமாலின் வழிபாடு பற்றியும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

வைணவ தத்துவ நெறிகள்

வைணவ சமயம் தனது தத்துவக் கோட்பாடாக முன் வைப்பது, இறைவனை சிக்கெனப் அடைந்து விட்டால் அனைத்து உயிர்களும் உய்வதோடுப் பேரின்ப நிலையையும் எய்திவிடலாம் என்று குறிப்பிடுகிறது. இந்த சரணாகதி நிலையை இரண்டு விதமாக வகுத்துக் காட்டுவர். 1. குரங்கு வாதம் (மார்க்கட் ஜாலம்), 2. பூனை வாதம் (மார் ஜாலம்) எனக் கூறுவர். பூனை வாதத்தை அறிமுகப்படுத்தியவர் இராமானுஜர் எனலாம். அதாவது, இம்மண்ணில் பிறந்த அனைத்து உயிர்களையும் இறைவனே தாய்ப்பூனை போல உடனிருந்து

Koviloor Digital Library

உலக மாயையிலிருந்து அவற்றை மீட்டு, பேரின்பத்தை அருளும் வல்லமை கொண்டவர். அதாவது,

1. மார் ஜாலம் எனும் பூனை வாதம், பூ+னை தான் ஈன்ற குட்டிகளை தான் இடம் மாறும் போதெல்லாம் தன் வாயால் கவ்வி தன்னோடு கொண்டு செல்லும் அப்பூனை போல மாயையில் உழலும் ஆன்மாக்களை இறைவனே தானே முன் உவந்து வந்து அவற்றிற்கு நற்கதி அளிப்பான் என்பது இக்கோட்பாட்டின் விளக்கமாகும்.

2. மார்க்கட் ஜாலம் எனும் குரங்கு வாதம் குரங்கு தான் ஈன்ற குட்டியைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. குட்டி தான் தன் பாதுகாப்பைக் கருதி, தாயின் இசைவைக் கூர்ந்து கவனித்து தாய் புறப்படும் சமயம் அறிந்து தாவிப் பற்றிக் கொள்ளும் இந்த வகையில்தான் மண்ணில் பிறந்த ஆன்மா உயிர் (ஆன்மா) தன்னையறிந்து இறைநிலை உணர்ந்து மாயையிலிருந்து விடுபட்டு பேரின்பத்தை அடைய வேண்டும்.

இவ்விரு நெறிகளில் தமிழகத்தில் பூனைவாதக் கொள்கை பெரும் செல்வாக்கைப் பெற்றது. இவ்வாதங்களில் காணப் படுகின்ற வைணவ தத்துவ நெறிகளை ஆண்டாள் பாடல்களிலும் காண முடிகிறது.

தமிழகத்தில் பூணைவாதக் கோட்பாடே அதிகமாகவும் பெரும் செல்வாக்கைப் பெற்றும் இருக்கிறது. இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் நெற்றியிலே திருமண் இடும் காலை மூக்குப்பட்டையின் அருகே ஐந்து புள்ளிகள் போல இறைவனின் பாதத்தைக் குறியீடாகக் காட்டும்படி திருமண் அணிவர். குரங்கு வாதத்தை ஏற்றுக் கொண்டோர் பாதமில்லாத திருமண்ணை அடையாளக் குறியாக ஏற்றுக் கொள்வர். இந்த தத்துவ வாதங்கள் எல்லாம் மிகப் பிற்காலத்தே எழுந்ததாகக் கருதலாம். ஆழ்வார்கள் காலத்தில் இத்தகைய வாதங்கள் எல்லாம் இல்லை. அவர்களின் அருளிச் செயல்களெல்லாம் தன்னை இறைவனிடம் முழுமையாக ஒப்படைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். ஆண்டாள் அருளிய இரண்டு படைப்புகளில் திருப்பாவையில் பாவை நோன்பு வாயிலாக வைணவ நெறிகள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவை உணர்த்தப்படுகின்றன.

Koviloor Digital Library

பாவை நோன்பு நோற்றல்

துயில் தூங்கும் மார்கழியில் காலைப்பொழுதில் துயிலெழுந்து தோழியரையும் துயிலெழுப்பி, கன்னியர்கள் நீராடிச் செல்கின்றனர். தங்களுக்கு நல்ல கணவர் வேண்டியும் நாடு செழிக்க வேண்டியும், பாவை நோன்பு நோற்கின்றனர். ஆரம்பக் காலத்தில் தை நீராடலாக இருந்தது காலப்போக்கில் மார்கழி நீராடலாக மாறியது. "பனிநீர் தோய்தலும் பாவையாடலுமாக திகழ்ந்த இளம் பெண்களின் விளையாட்டு காலப்போக்கில் வழிபடும் பாவை நோன்பாக பரிணாமம் பெற்றது" கன்னியர் நோன்பையும், கடவுள் வழிபாட்டையும் இணைக்கும் பாவை நோன்பையே திருப்பாவை தித்திக்கப் பேசுகிறது. பாவை நோன்பின் இருப்பு பற்றியும், அவற்றின் சிறப்புப் பற்றியும் கீழ் காணும் பாடல் எடுத்துரைக்கிறது.

,,,,,, பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்

அரிதுயிலின் அழகு எடுத்துரைக்கப்படுகிறது. இப்பரமன் அடியினைப் பாடும் வழிபாடு வலியுறுத்தப்டுகிறது. எந்த கணத்தில் பரந்தாமன் திருவடிகள் நினைவிற்கு வருகிறதோ, அந்த கணத்தில் மற்றைய விருப்பங்கள் மாறிப்போய் விடுகின்றன. அதனாலே நெய், பால் உண்ணாது விரதமிருக்கச் சொல்கிறார்கள். இறைவனின் அன்பைப் பெறும் வரை கண்ணுக்கு மை தீட்டுவதில்லை. இறைவன் அணிந்து களைந்த மாலையை வாங்கும் வரை அலங்காரமான மலர் மாலையைச் சூடுவதில்லை என்று விரதம் இருக்கிறார்கள். 'தீக்குறளைச் சென்றோ தோம்' இந்த புனிதமான பொழுதில் யாரைக் குறித்தும் பொய்யும், கோளும் சொல்லி நோன்பைப் பழுதுபட விடமாட்டோம் என்று நோன்பின் மகிமை பற்றிக் கூறுகிறார். அவ்வாறு செய்தால் 'வையத்து வாழ்வீர்கால்' என்று எடுத்துரைக்கிறார். திருவள்ளுவரும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்று கூறுகிறார்.

Koviloor Digital Library

திருமால் வழிபாடு

இறைவனுக்கு ஒரு வருடம் என்பது மானிடர்களுக்கு ஒருநாளாகக் கணக்கிடப்படுகிறது. நமக்கு அதிகாலை பொழுது வருவதைப்போன்று இறைவனுக்குரிய அதிகாலைப் பொழுது என்பது மார்கழி மாதமாகச் சொல்லப்படுகிறது. இதை, பகவத்கீதையில் பகவான் மாதங்களில் நான் மார்கழி என்று குறிப்பிடுவதைக் காண முடிகிறது. அதனையே திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியார்,

"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழைழயீர்
....
கார் மேனி ச்செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணன் நமக்கோப் பறை தருவான்

என்று குறிப்பிடப்படுகிறார். மார்கழி மாதம் பாவை நோன்பு நோற்பதற்குகுரிய மாதமாக மிளிர்கிறது. யசோதையின் திருமகனாகிய கண்ணனை, சூரியன், சந்திரன் போல் ஒளி வீசுகின்ற நாராயணனாகிய பரம்பொருளை வணங்கினாள் அவன் நமக்குக் கட்டாயம் நோன்பின் பலனை அருள்வான் ஆதலால் உலகோர் நம்மைப் புகழ்வார்கள் "வாருங்கள்" என்று அழைப்பதாக அமைகிறது. கண்ணனைக் கண்டு ஒளி பெறுவதால் மதி நிறைகிறது. இங்கு கண்ணனைச் சூரிய சந்திரனாகக் குறிப்பிடுகின்றனர். தாய் யசோதைக்கு அடங்காதக் குறும்புக்கார சிறுவனின் முகம் பகைவர்களைச் சுட்டெரிக்கும் சூரியனாகவும், பக்தியுடையோரைக் குளிர்விக்கும் சந்திரனாகவும் தென்படுகிறது.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்று நீராடினால்

மாவலி சக்கரவர்த்தியிடம் வானனாக மூன்றடி மண் கேட்டுப் பெற்ற அளவில் திரு விக்கிரனாக உயர்ந்த உத்தமனின் திருநாமங்களைப் பாடி பரவினால் நாடெல்லாம் மும்மாரி மழைப் பொழியும் நெற்பயிர்கள் ஓங்கி வளரும். மீன்கள் துள்ளி விளையாடும். மலர்களில் வண்டுகள் துயிலும். நீர் வளத்தால்

Koviloor Digital Library

நிலவளம், நிலவளத்தால் பயிர் வளம், பயிர் வளத்தால் செல்வ வளம் வள்ளல் தன்மையால் பசுக்கூட்டங்கள் நிறைந்திருக்கும். "ஆண்டாள் திருமாலை வழிபட்டு பாவை நோன்பு நோற்றால் நாட்டில் செல்வ வளம் பெருகும்" என்று குறிப்பிடுகிறார். இப்பாடலில் ஓங்கி உலகளந்த உத்தமனாக வருகிறார், வாமனனின் கர்வத்தை அடக்குவதற்காக வாமனனாகக் குள்ள வடிவம் எடுக்கிறார். இதனைக் கம்பர் குறிப்பிடுகையில் 'பயந்தவரும் இகழ்குறளை' என்பார். யாருடைய மார்பில் செல்வங்களின் தலைவி உறைகிறாளோ, அவளிடம் தானம் வாங்கச் செல்பவதென்றால் எத்தனைப் பெரியவரும் கூனிக் குருகித் தான் செல்ல வேண்டும் என்பதைப்

பல்லெல்லாம் தெரியக்காட்டி பருவரல் முகத்தில் ஊட்டி
சொல்லெல்லாம் சொல்லி நாட்டில் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெல்லாம் அகல ஓட்டி மான என்பதனை வீட்டி
இல்லெல்லாம் இரத்தல் அன்றோஇழிவழி வெந்த ஞான்றும்

என்று குசேலபாக்கியான ஆசிரியர் குறிப்பிடுகிறார். அத்தகைய இழிந்த தொழிலை இறைவன் செய்தான். இறைவனுக்கே இந்த நிலை ஆதலால் நாம் யாரிடமும் சென்று இரக்காத நிலையை அடைய வேண்டுமானால் பாவை நோன்பு நோற்று, வளத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. மேலும், ஓங்கி உலகளந்த உத்தமனின் பார்வையால்

பாழியந் தோளுடைய பத்மனாபன் கையில்
ஆழிபோல் மின்னி ....

வானமெங்கும் பரந்து விரிந்து கிடக்கின்ற கருமேகங்கள் போல் இறைவனின் திருவருள் கிடைக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

துயிலெழுப்புதல்

துயிலெடு நிலை என்பது திருப்பள்ளி எழுச்சி என்றாயிற்று. தன் தோழியரை மார்கழி நீராடுவதற்கு எழுப்புகிறாள்.

புள்ளும் சிலம்பினன்காண் புள்ளறையன் கோயிலில்
வெள்ளை விரிசங்கின் பேரரவம் கேட்டிலையோ

பறவைகளின் சத்தம் விடியற்காலையில் கேட்கக் கூடியது

KOVILOOR ... A. No. 30296

Koviloor Digital Library

பறவை, கூட்டிலிருந்து எழுந்து தன் கடமையைச் செய்வதற்காகப் புறப்படும் ஓசையைக் கேள் என்று கூறாமல், காண் என்று கூறுகிறாள். அடுத்த அடியில் அச்சிறிய ஒலிதான் கேட்கவில்லை ஆனால், பறவைகளுக்கு தலைவனாக விளங்கக் கூடிய திருமால் கோயிலில் அந்த கருடன் சந்நதியிலிருந்து வருகின்ற வெண்சங்கின் பேரொளி கூட கேட்க வில்லையா? என்று கேட்கிறாள். இப்பாடலின் உட்பொருளாக ஆண்டாளுக்குச் சங்கின் மீதுள்ள பேரொலி கேட்கிறது. சங்கு பிரணவ வடிவம் கொண்டது அதன் வெண்மை நிறம் தூய்மையையும், அதன் ஒளி மனதிற்கு அமைதியையும் ஏற்படுத்துகிறது. மேலும்,

கீழ் வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான பரந்தனன்காண் மிக்குள்ள பிள்ளைகளும்

சூரியோதயத்திற்கு முன்னுள்ள காலம் அருணோதயம். இதனைக் கிழக்கு வெளுத்தல் என்பார்கள் அதாவது அசேதனமான (அறிவில்லாத) பொருள் கிழக்கும் கூட ஞானம் பெற்றுவிட்டது. அதாவது வெளுத்து விட்டது உனக்கு இன்னும் அஞ்ஞானமா? என்று கேட்கிறாள். இங்கு ஒரு பெண்ணை எழுப்புவதாக என்று பொருள் கொள்ளாமல் ஆறு முதல் பத்து வரையிலுள்ள பாசுரங்களில் பத்து ஆழ்வார்கள் எழுப்பப்படுவதாகக் கூறுவார்கள். அதவாது பத்து வகையான ஆழ்வார்களுக்கு ஒப்பான பக்தர்களைக் குறிப்பிடுவதாகக் கொள்கின்றனர். ஆயர்குல மகளிரை மணிக்கதவம் தாள் திறந்து உள்ளே செல்லும்படி அனுமதித்திருக்கிறார்கள். அவர்கள் கண்ணன் யசோதைபிராட்டி கண்ணன் ஆகியோரை எழுப்புவதாக அமைந்துள்ளன.

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமாள் நந்த கோபால் எழுந்திராய்

ஆண்டவனாகிய இறைவன் ஆடைகள், உண்ண உணவு, பருகும் நீர் ஆகியவற்றை வேண்டும் வரை வழங்கும் வள்ளல் தன்மைக் கொண்டவன். எங்கள் இறைவன் வள்ளல் தன்மை கொண்டவன். எங்கள் குலத் தலைவன் நந்த கோபாலன், யசோதை பிராட்டி, பலராமன் ஆகியோரை எழுப்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

அம்பரமே மூடறுத்தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்

ஆண்டாளுக்கு வாமனாவதாரத்தில் ஈடுபாடு அதிகம் கண்ணனை ஒத்த சிறுவடிவம் வாமனனுடையது. இவனது முதலடி பூவுலகை அளந்தது. இரண்டாம் அடி வானுலகை அளந்தது. அம்பரம் என்பது வானத்தைத் துளைத்து சென்று தோய்த்த திருவடியாகும். அத்திருவடியை திருமங்கை யாழ்வார்

ஒண்மிதியிற் புனலுருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருநீர் அவுணனை உள்ளத்து
எண்மதியும் கடந்து அண்டமீது போகி
இருவிசும்பின் ஊடுபோய் எழுந்து மேலேத்
தண்மதியுமட் கதிரவனும் தவிர ஓடி
தாரகைபிடை பறம் தடவி அப்பாவும் மிக்கு
மண்முழுதும் அகப்பெடுத்து நின்றளந்தை
மலர்புரையும் திருவடியை வணங்கினேனே

திருமங்கை மன்னன் தேவர்களுக்காகச் செய்த காரியம் அது. இங்கு தேவராசனே உறங்காது எழுந்திருக்க வேண்டும் என்று பாடுகிறார். ஆண்டாள் இரண்டாவது முறையாக, வாமன அவதாரத்தைப் பேசுகிறாள். இராமாவதாரத்தில் இலக்குவனாக அவதரித்து, இராமனைத் துயிலாமல் பாதுகாத்தவரே, பலராமரே உறக்கம் கொள்ளாமல் எழுந்து வாருங்கள் என்று எழுப்புகிறாள். இதிலிருந்து பலராமருக்குத் தமிழகத்தில் தனிக்கோயிலும் வழிபாடும் நடந்தது என்பது புலனாகிறது.

நோன்பின் நம்பிக்கை

நமது முன் சென்ப வினைகளால் ஏற்படும் துன்பங்களால் என்ன செய்வது என்று வினவ தமது நெஞ்சார்ந்தத் தொழுகையால் மன, மொழி மெய்களால் ஒன்றி வழிபட்டால் நாம் செய்த தீவினைகள் அடியோடு அழியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

தூயோமாய் வந்து தாம் தூவித்தொழுது ....
தீயினால் தூசாகும் செப்பேலோர் என்பாவாய்

பாவை நோன்பு என்ற காரணத்தைக் கொண்டு கண்ணன் அன்பில் ஆராது திளைக்கும்பேறு நிறைவேறி விட்டால்

Koviloor Digital Library

தீங்கில்லாது நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து வளம் செழிக்கச் செய்யும் என்று பாடுகின்றனர். "பெருமாளிடத்தில் பக்தியை வைத்து வைணவன் என்று எவன் சொல்லிக் கொள்கிறானோ, அவன் மானிடத்தின் மீது மானிடப் பண்புகளின் மீதும் அளவில்லாத பற்று மிக்கவனாக இருந்தான். இதை வைணவ குரு பரம்பரை எடுத்துக் காட்டுகிறது" என்று பி.வி. ரங்கநாதன் குறிப்பிடுகிறார்.

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துன்போம்
அறிவொன்றும் இல்லாத ஆயர் குலத்த உன்தன்னைப்
பிறவி பெறுவதனைப் புண்ணியம் யாமுடையோம்
குறையொன்றும் இல்லாத கோவிந்தா

மாடு மேய்க்கும் எங்கள் ஆயர்குலத்தில் உன்னைப் பிள்ளையாகப் பெற்று வளர்த்து எங்களுடன் ஒருவனாகக் கலந்து பழகும் பேறு பெற்றவர்கள் நாங்கள் எங்களுக்கு அறிவில்லாவிட்டால் என்ன? உன்னிடம் நிறையவே நிறைந்திருக்கிறது. உன்னோடு எங்களுக்கு உள்ள தொடர்பு நீக்க முடியாதது நாங்கள் அறிவில்லாத பாமரர்கள். உன்மீது கொண்ட அன்பின் காரணத்தால் உன் பெருமையறியாது சிறு சிறு பெயர்களால் உன்னை அழைத்திருப்போம். அவற்றையெல்லாம் பொறுத்து எங்களுக்கு அருள் செய்யவேண்டும் என்று வேண்டுகிறார். கோவிந்தா! என்று அழைக்கையில் உனக்கும் எங்களுக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது அது உனக்கும் முடியாது எங்களுக்கும் முடியாது இறைவனும் உயிரும் என்று இணைந்திருப்பவர்கள் இறைவனிடம் விளக்கத்திற்காகப் பட்டியலிட்டாலும் இறைவனிடம் செல்கையில் நம் தகுதியின்மையைப் பட்டியலிட்டே சொல்ல வேண்டும்.

நிறைவாக

திருப்பாவையின் முப்பது பாடலையும் சொல்ல இயலாதவர்கள் இருபத்தொன்பதாவது பாசுரமாகிய

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியை போற்றும் பொருள் கேளாய்

என்னும் இந்த ஒரு பாடலையேனும் சொல்லுங்கள் கன்றுக்கு

Koviloor Digital Library

இரங்கும் பசு போல தோற்கன்றுக்கும் இரங்கிப்பால் தருவதுப்போல இறைவன் நமக்கு அருள்வான் திருபாவையின் பெருமை அளவிட முடியாதது. இன்றும் தமிழ் நாட்டைத் தவிர பல நாடுகளிலும், பல மொழியாளர்களும் பாடி வழிபட்டு திருமாலின் திருவருளைப் பெற்று உய்யுகிறார்கள். பாவை நோன்பின் பயனாக திருமாலை வழிபட்டு இறைவனின் இறையருளைப் பெறுவது குறித்து இக்கட்டுரையில் ஆராயப் பெற்றுள்ளது.

துணை நின்ற நூல்கள்

1. அனுமந்தன். கி., பார்த்தசாரதி.ஆர்., வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 40-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098
2. சீனிவாசன்.ம.பெ., திவ்வியப் பிரபந்த இலக்கிய வகைகள், மெய்யப்பன் தமிழாய்வகம், 53. புதுத்தெரு, சிதம்பரம் - 608 001
3. பன்முக நோக்கில் வைணவ இலக்கியம், டுடே பப்னிக்கேஷன்ஸ், 192- பெல்ஸ் ரோடு, எஸ்.ஆர் காம்ப்ளக்ஸ், சேப்பாக்கம், சென்னை - 600 005
4. ராம சுப்ரமணிய சர்மா, பொன்னம்மாள்.ஆர்.(உ.ஆ)இ, ஸ்ரீ நாலாயிர திவ்விய பிரபந்தம் முதலாயிரம், கங்கை புத்தக நிலையம், 21. தீனதயாளுத் தெரு, தியாகராய நகர் - 600 017
5. வைத்தியநாதன்.ஞான., பன்னிரு ஆழ்வார் கதைகள், பிரேமா பிரசுரம், 59 ஆற்காடு சாலை, கோடம் பாக்கம், சென்னை 600 034
6. திருப்பாவை விளக்கம், கீதா பிரஸ் கோரக்பூர், கோபிந்ததபவன் கல்யாணயா, கல்கத்தா, உத்தர பிரதேசம் - 273005
7. சிற்பி பாலசுப்பிரமணியம் மார்கழி பாவை கபிலன் பதிப்பகம், 101, 3ஆம் முதன்மைச் சாலை, மகாவீர் நகர் புதுச்சேரி - 605008

Koviloor Digital Library

திருக்களம்பூர் கதலிவனேஸ்வரர் வரலாறும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளும்

திருமிகு ஆறு.செல்வமணி
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

முன்னுரை

இறைவனைத் திருவுருமாக எழுந்தருளச் செய்து மக்கள் எளிதாக வழிபடுவதற்குத் தோன்றியதே திருக்கோயில் வழிபாடாகும். இவ்வழிபாடு கடவுளுக்காகச் செய்யப்படுவதில்லை கடவுளை முன்னிட்டு செய்யப்படுவதாகும். இதன் பயன் கடவுளுக்கு நன்மை பயப்பதில்லை. உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்குப் பயன் நல்குவதாகும்.

நம்பிக்கைகள் கடவுள் வழிபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன. அவ்வகையில் புதுமையான வரலாறுகளையும் வழிபாடுகளையும் உள்ளடக்கிய திருககளம்பூர் கதலிவனேஸ்வரர் திருக்கோயிலின் வரலாறுகளையும் வழிபாட்டு முறைகளையும் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

கோயில் அமைவிடம்

இத்திருத்தலம் புதுகோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி வழி செல்லும் தேசியப் பெருவழித்தடத்தில் திருககளம்பூரில் அமைந்துள்ளது.இவ்வூருக்கு கிழக்கே சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் திருப்பத்தூரும், மேற்கே சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் பிரான்மலையும், வடக்கே சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் வேந்தன்பட்டியும், தெற்கே சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் சதுர்வேத மங்கலமும் அமைந்துள்ளன.

திருக்கோயில் அகச்சான்றுகள் உணர்த்தும் தோற்ற வரலாறு

இக்கோயிலின் வரலாற்றினை இதன் தலபுராணமும் பாண்டியர் காலக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. தலபுராணத்தில் வால்மீகி முனிவர் தவம் செய்த நிகழ்வும் இராமன் போரிட்ட நிகழ்வும் சுட்டப்பெறுகின்றன.

Koviloor Digital Library

திருக்களம்பூர்

பாண்டிய மன்னர்கள் காலத்தில் திருக்குளம்பூர் என வழங்கப்பட்ட இவ்வூர் பிற்காலத்தில் திருக்களம்பூர் என மருவியிருக்க வேண்டும். இன்று இவ்வூர் ஆவணங்களில் திருக்களம்பூர் என்றும் மக்களின் பேச்சு வழக்கில் திருக்களாம்ம்பூர் என்றும் குறிக்கப்பெறுகின்றது. திருக்குறும்பூர் மரைமான விக்கிரமபாண்டிய நல்லுர் ஆகியன இவ்வூர் பற்றிக் கல்வெட்டுகள் குறிப்பிடும் பெயர்களாகும்.

வாழையின் சிறப்பும் அதன் வழிபாடும்

இக்கோயில் உட்பிராகரத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் செழித்து வளர்ந்து காணப்படுகின்றன. இவ்வாழை மரங்களே நன்கு விளைந்து சுயம்புவாக மாறியது என்பதால் இவ்விறைவனைக் கதலிவனேஸ்வரர் என வழங்குகின்றனர்.

இத்திருக்கோயிலின் திருச்சுற்றறை நோக்கினால் வாழைமரமே லிங்கமாய் விளைந்திருக்கிறது என்பதைக் காட்டி விடும். இக்கோயிலின் கருவறையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் வாழை மரங்கள் நெருக்கமாகச் செழித்திருக்கின்றன. காலங்காலமாக ஒன்றிலிருந்து ஒன்றாய் ஓரிடத்திலேயே இவை வளர்வதால் இலையும் காயும் சிறுத்தும் மரமும் மெலிந்துள்ளன.

நாள் வழிபாடு

ஆகமங்கள் கோயிலில் நடைபெறும் வழிபாடுகளை நித்யம், நைமித்தியம், காமிகம் என மூன்றாக வரையறுக்கின்றன. நித்யம் என்பது நாள்தோறும் செய்யப்படும் வழிபாடு, நைமித்தியம் என்பது வாரம் தோறும் செய்யப்படும் வழிபாடு, காமிகம் என்பது புண்ணிய காலங்களில் செய்யப்படும் நற்பேறு அடைவதற்கு செய்யப்படும் வழிபாடு ஆகும்.

நாள்தோறும் செய்யப்படும் பூசை நாள் வழிபாடு ஆகும். ஆகமங்கள் நாள் வழிபாட்டினை நித்ய பூசை என்று கூறுகின்றன. பூசை என்னும் சொல் பூஜா என்னும் வட சொல்லின் திரிபாகும். "இதற்குப் பூமியில் கலவாதபோக போக்கியங்களை உண்டு பண்ணுவது" என்று பொருள். பெருங்கோயில்களில் ஆறுகால பூசைகள் நிகழ்த்தப் பெறுகின்றன. இக்கோயிலில் நான்கு கால

Koviloor Digital Library

பூசைகள் நடத்தப் பெறுகின்றன. அவை பின்வருமாறு,

1.	கால சந்தி	-	காலை	7.30 - 8.30
2.	உச்சிக்காலம்	-	முற்பகல்	11.00 - 12.00
3.	சாயரட்சை	-	பிற்பகல்	5.30 - 6.00
4.	அருத்தசாமம்	-	இரவு	8.00 - 8.30

ஒரு காலத்தில் பாண்டிய மன்னனொருவன் திருக்களம்பூர் பகுதியில் குதிரையில் ஏறி வேட்டையாட வந்தான். அவ்வாறு வந்த பொழுது குதிரையின் காலில் ஏதோ ஒரு பொருள் இடரக் குதிரை நின்றது.

மன்னன் குதிரையினை விட்டுக் கீழே இறங்கிப் பார்த்த பொழுது அவ்விடத்தில் இருந்த இலிங்கத்தினை தலை பிளவுபட்டு அதிலிருந்து குருதி வெளிப்பட்டது.

இதனைக் கண்ட மன்னனுக்குச் சிறிது நேரத்தில் கன்னின் ஒளி மங்கிக் கண்பார்வை தெரியவில்லை. உடனே மன்னன் ஏதோ அபச்சாரம் நடந்து விட்டது என்று புலம்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது வயதான முதியவர் ஒருவர் மன்னன் படும் துன்பத்தினைக் காணப்பொறாமல் பச்சிலை மருந்தினைக் கொடுத்தார் அப்பச்சிலை மருந்தின் மூலம் மன்னன் கண்பார்வை பெற்றான்.

மேலும் அம்முதியவர் இவ்விடத்தில் ஓர்ஆலயம் அமைக்கவும் என உத்தரவிட்டு மறைந்துவிட்டார். சிறிது நேரத்தில் வந்நத முதியவர் காணாமல் போகவே வந்தவர் இறைவன் தான் என்று அறிந்து கொண்டான் மன்னன். பின்னர் தன் பரிவாரங்களுடன் தலைநகர் சென்று அமைச்சாரிடம் சுயம்புவாகத் தோன்றி-யிருந்த இறைவனின் உச்சந் தலையில் குதிரையின் குளம்பு பட்டு இரத்தம் பீறிட்ட செய்தியைச் சொல்லி இறைவனே தன்னை ஆட்கொள்ள வந்ததை உணந்து அவ்விடத்தில் திருக்கோயில் கட்ட ஆணையிட்டான்.மன்னனின் ஆணையை நிறைவேற்ற அமைச்சர் இப்பகுதிக்கு வந்தபோது மன்னன் குறிப்பிட்ட இடத்தை விட்டுவிட்டு அதற்கு கிழக்காய் இருந்த இடத்தில் இந்த இடந்தான் இறைவன் சுயம்புவாகத் தோன்றியிருக்கும் இடம் என்று நினைத்து அவ்விடத்தில் திருக்கோயில் ஒன்றைச் சமைத்து விட்டார்.

Koviloor Digital Library

அவ்வாலயத்திற்கு திருஒளீசுவரர் எனப் பெயாரிட்டார். அரசனுடைய விழிகளுக்குப் பார்வை கொடுத்து ஒளிமயமாக மாற்றியதால் அப்பெயரினை வழங்கினார். அத்திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு வந்த மன்னன் தான் குறிப்பிட்ட இடம் இது அன்றுஇ வாழைத்தோட்டம் நிறைந்த இடம் தான், தான் குறிப்பிட்டது என்று கூற அமைச்சர் மனம் மிக வருந்தினார்.

வாழைத் தோட்டங்கள் நிறைந்த அப்பகுதியில் சுயம்புவாகத் தோன்றிய அவ்விறைவனுக்கு வேறொரு கோயில் அமைக்கும்படி அமைச்சருக்கு ஆணையிட இவ்வாணையைச் சிரமேற்கொண்டு விரைவில் வேறொரு திருக்கோயிலை, ஸ்ரீகதலிவனேசுவரருக்கு எழுப்பிக் குடமுழுக்கும் செய்துவைத்தார். சுயம்புவாகத் தோன்றிய அப்பெருமான் அன்று முதல் ஸ்ரீகதலிவனேசுவரர் என்ற பெயரால் அருள்பாலித்து வருகிறார்.

அமைச்சரால் பின்னால் கட்டப்பட்டதாகக் கூறப்படும் கோயிலில் உள்ள இறைவன் திருவளர் ஒளீசுவரர் என்றும் இறைவி சவுந்தரநாயகி என்றும் அழைக்கப்படுகின்றார். இக்கோயிலின் அமைப்பைப் பார்க்கும் பொழுது அது பிற்காலத்தில் கட்டப்பட்டது போலவே தோன்றுகிறது. இக்கோயில் இப்பொழுது தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.

கோயில் பழமை

இத்திருக்கோயில் வரலாற்றுப் புகழும் சமயச் சிறப்பும் மிக்கதாக விளங்குகின்றது. இக்கோயிலில் காணப்படுகின்ற பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுச் செய்திகள் இதன் பழமையை உணர்த்துகின்றன. இக்கோயில் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதனைக் சிவலிங்கத்தில் உள்ள சதுர வடிவ ஆவுடையார்அமைப்பு உணர்த்துகிறது. இங்குள்ள துவாரபாலகர் இருவரும் கோயிலின் பழமையினைச் சுட்டும் வகையில் விளங்குகின்றனர்.

திருக்கோயில் கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் பன்னிரெண்டு கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. அவற்றுள் முதன்மை வாய்ந்த கல்வெட்டாக விளங்குவது முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில்

Koviloor Digital Library

அதாவது கி.பி.1268-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டது ஆகும். இக்கல்வெட்டில் திருக்கொடுங்குன்றம் என்றழைக்கப்படுகின்ற பிரான்மலை என்ற ஊரின் தலைவனான கேரள நிசதராஜனுக்கு அளிக்கப்பட்ட ஓர் அன்பளிப்பினைப் பற்றிய செய்தி உள்ளது.

முடிவுரை

நம்பிக்கைகள் கடவுள் வழிபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன. சமயங்கள் தோற்றம் பெறவும் பொலிவு பெறவும் நம்பிக்கைகள் காரணமாக அமைகின்றன. இக்கோ-யிலில் உள்ள கல்வெட்டுகள் இக்கோயிலின் தொன்மையை உணர்த்தும் சான்றுகளாக உள்ளன. பாண்டிய மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட கோயில்களுள் திருக்களம்பூர் கதலிவனேஸ்வரர் முக்கியமான கோயில்களாகும். பல்வேறு வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்ட திருத்தலமாக கதலிவனேஸ்வரர் திருத்தலம் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

பைரவர் வழிபாடு

முனைவர் க. சொல்லேருழவன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா அரசு கலைக் கல்லூரி,
காரைக்குடி.

முன்னுரை:

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்வதால் இவர் பைரவர் என்றும், அடியவர்களின் பயத்தை, பாவத்தை நீக்குவதால் இவருக்குப் பைரவர் என்றும் பொருள் கூறப்படுகிறது. மூன்று முக்கிய இறையருள் தொழில்களைச் செய்து உயிர்களைக் காப்பதால் இவருக்கு திரிசூலம் ஆய்தமாக அளிக்கப்பட்டது. உடுக்கை படைத்தல் தொழிலையும், கபாலம் காத்தல் தொழிலையும், விபூதி அழித்தல் தொழிலையும் குறிக்கும். இவர் ஆனந்த பைவராக இருந்து உலகைப் படைக்கின்றார். கால பைவராக உலகைக் காக்கின்றார், காலாக்கினி பைரவராக உலகை ஒடுக்குகின்றார். இத்தகைய சிறப்பு மிக்க இப்பைரவரின் வழிபாடு குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

அறுபத்து நான்குவித பைரவ மூர்த்திகள்

அறுபத்து நான்கு பைரவ அவதாரங்களைச் சிற்பநூல்களும், சிவாகமங்களும் குறிப்பிடுகின்றன. அறுபத்து நான்கு காலங்களிலும் அறுபத்து நான்கு பணிகளை ஏற்றுச் செயல்படும் போது அறுபத்து நான்கு வடிவங்களாகத் தோற்றமளிக்கின்றார். கங்கைக் கரையில் அறுபத்த நான்கு கட்டங்களில் அறுபத்து நான்கு பைரவர் உள்ளனர். அவை,

*1.*நீலகண்ட பைரவர், *2.*விசாலாஷ பைரவர், *3.*மார்த்தாண்ட பைரவர், *4.*முண்டனப்பிரபு பைரவர், *5.*ஸ்வஸ்ந்த பைரவர், *6.*அதிசந்துஷ்ட பைரவர், *7.*கேர பைரவர், *8.*ஸம்ஹார பைரவர், *9.*விஸ்வரூப பைரவர், *10.*நானரூப பைரவர், *11.*பரம பைரவர், *12.*தண்டகர்ண பைரவர், *13.*ஸ்தாபாத்ர பைரவர், *14.*சிரீட பைரவர், *15.*உன்மத்த பைரவர், *16.*மேகநாத பைரவர், *17.*மனோவேக பைரவர், *18.*க்ஷேத்திர பைரவர், *19.*விருபாஷ

Koviloor Digital Library

பைரவர், 20.கரால பைரவர், 21.நிர்பய பைரவர், 22.ஆகர்ஷண பைரவர், 23.ப்ரேசத பைரவர், 24.லோகபால பைரவர், 25.கதாதர பைரவர், 26.வஞ்ரஹஸ்த பைரவர், 27.மகாகால பைரவர், 28.பிரகண்ட பைரவர், 29.ப்ரளய பைரவர், 30.அந்தக பைரவர், 31.பூமிகர்ப்ப பைரவர், 32.பீஷ்ண பைரவர், 33.ஸம்ஹார பைரவர், 34.குலபால பைரவர், 35.ருண்டமாலா பைரவர், 36.ரத்தாங்க பைரவர், 37.பிங்களேஷ்ண பைரவர், 38.அப்ரரூப பைரவர், 39.தாரபாலன பைரவர், 40.ப்ரஜா பைரவர், 41.குல பைரவர், 42.மந்திர நாயக பைரவர், 43.ருத்ர பைரவர், 44.பிதாமஹ பைரவர், 45.விஸ்ணு பைரவர், 46.வடுகநாத பைரவர், 47.கபால பைரவர், 48.பூதவேதாள பைரவர், 49.த்ரிநேத்ர பைரவர், 50.திரிபுராந்தக பைரவர், 51.வரத பைரவர், 52.பர்வத பைரவர், 53.சசிவாகன பைரவர், 54.கபால பூஷ்ண பைரவர், 55.ஸ்ரவேத பைரவர், 56.ஈசான பைரவர், 57.ஸர்வபூத பைரவர், 58.கோரநாத பைரவர், 59.பயங்க பைரவர், 60.புத்திமுக்தி பைரவர், 61.பயப்த பைரவர், 62.காலக்னி பைரவர், 63.மகாரௌத்ர பைரவர், 64.தட்சணா பிஸ்திதி பைரவர்,

ஒன்பது வகையான பைரவர்களும் உப சக்திகளும்

மேற்குறித்த அறுபத்து நான்கு பைரவர்களில் நவக்கிரக பைரவர்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு. அவர்கள் சுவர்ணகர்ஷண பைரவர், கபால பைவரவர், சண்ட பைரவர், உன்மத்த பைரவர், அசிதாங்க பைரவர், ருரு பைரவர், குரோதன பைரவர், சம்ஹார பைரவர், பீஷண பைரவர் என ஒன்பது பைரவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவர்களின் உப சக்தியாக பைரவி, இந்திராணி, கௌமாரி, வராஹி, பிராமஹி, மகேஸ்வரி, வைஷ்ணவி, சண்டிகை, சாமுண்டி ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

அஷ்ட பைரவர்களும் வாகனங்களும்

அறுபத்து நான்கு பைரவ மூர்த்திகளை விட நவக்கிரக பைரவ மூர்த்திகளை விட அஷ்ட பைரவ மூர்த்திகளுக்குத் தான் சிறப்பு. அவ்அஷ்ட பைரவர்கள் யாரெனின் அசிதாங்க பைரவர், ருரு பைரவர், சண்ட பைரவர், குரோதன பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர்;, பீஷ்ண பைரவா,;;; சம்ஹார

Koviloor Digital Library

பைரவர் ஆகியோர் ஆவர். இவர்களின் வாகனங்களாக முறையே அன்னம், ரிஷபம், மயில்;, கருடன், குதிரை, யானை, சிம்மம், நாய் ஆகியனவாகும். சுவர்ணாகர்ஷண பைரவர் நீங்கலாக எட்டு பைரவரின் வாகனங்கள் சுட்டப்பட்டாலும் தமிழகத்தில் திருவான்மியூர், பேரூர், வேதாரண்யம், திருவிற்கோலம் ஆகிய ஆலயங்களில் வாகனம் இன்றி பைரவர் காட்சி தருவது நோக்குதற்குரியது.

பைரவரின் சிறப்பு வடிவங்கள்

பைரவரின் மேனி நீல நிறமுடையது. காலில் சிலம்பு அணிந்திருப்பார். பாம்புகள் பொருந்திய திருஅரையும், மார்பு தலைமாலை உடையதாயும், கரங்கள் சூலம், மழு, பாசம், உடுக்கை ஏந்தியதாகவும், முக்கண்ணன் போன்ற மூன்று கண்களைப் பெற்றவராயும், இரண்டு கோரைப் பற்களை உடையவராயும், செஞ்சடை உடையவராயும், கோபச் சிரிப்பும், உக்கிர வடிவமும் கொண்டவராயும் காட்சி அளிப்பார் என்று புராணங்கள் கூறுகின்றன. உடற்பற்றை நீக்கயபடியால் நிர்வாண கோலத்துடனும் காவல் தெய்வம் ஆகையால் காவல் குறியீடான நாயை வாகனமாகக் கொண்டுள்ளார். இந்த நாயாவது பைரவருக்குப் பின் புறம் குறுக்காவும், இடப்புறம் நேராகவும் இருக்கும். நகரத்தார் கோவில்களில் இரு நாய் வாகனங்கள் காணப்படுவதும், அஷ்ட பைரவர் வடிவங்கள் மாறுபட்டுக் காணப்படுவதும் நோக்கற்பாலது.

நாவுக்கரசர் பாடிய தேவாரத்தில் பைரவர்

திருவாரூர்க்கு அருகில் உள்ள திருச்சேறைத் தலத்தில் உள்ள சாரபரமேஸ்வரர் ஆலயத்தில் கால பைரவர் காணப்படுகின்றார். அவரை வழிபட்ட திருநாவுரசர் போற்றிப் பாடிய திருப்பதிக மானது,

"விரித்த பல்கதிர் கொள் சூலம் வெடிபடு தமருகம் கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகிய வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மேனி வாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்செந்நெறிச் செல்வனாரே" (712)

என்பதாகும்.

Koviloor Digital Library

பைரவர் வழிபாடும் சிறப்புகளும்

மூன்று தொழில்களைச் செய்யும் பைரவரின் வழிபாடு வடக்கில் இருந்து வந்த கபாலிக வழிபாட்டின் ஒரு பகுதியாகும். எல்லாச் சிவாலாயங்களிலும் பரிவாரத் தெய்வழிபாடாக இருக்கும் இவ்வழிபாடு இல்லங்களில் சூலவழிபாடாக காணப்படும். சிவன் கோவில்களில் வழிபாடானது சூரியனிடமிருந்து ஆரம்பித்து அர்த்தசாமப் பூசையாகப் பைரவருடன் முடிவடைகிறது. இரவு அர்த்தசாம பூசை முடிந்ததும் பைரவருக்கான சிறப்பு வழிபாடுகள் செய்து கோவில்களின் கதவுகளை மூடி கோவிலின் சாவிக்கொத்தை அவரின் காலடியில் வைப்பர். கோவில்களில் நடைபெறும் வருடாந்திர பிரமோற்சவத்திற்கு முன்னும் பின்னும் பைரவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படும். முக்கிய தினங்களில் இவருக்கு நெய் அபிசேகம் செய்யப்படும். இந்நாளில் எட்டுவித பட்சணங்களும், எட்டுவித அன்னங்களும் எட்டுவித மலர்மாலை அர்ச்சனையும் செய்யப்படும்.

பைரவ வழிபாட்டிற்கு உரிய நேரம்

நள்ளிரவு, பைரவ வழிபாட்டிற்கு உரிய நேரமாகும். இந்த நேரத்தில் பராசக்தியான பைரவி நடனமாடுவாள் என்பது நம்பிக்கை. அவளுடன் பைரவரும் தலத்தை வலம் வருவார். ஆதலால் சித்தர்கள் அந்நேரத்தில் பைரவரையும் பைரவியையும் தியானம் செய்வா

மாதங்களும் பைரவ வழிபாடும்

பன்னிரண்டு ஆதித்தியர்கள் இணைந்து சூரியனாகி செயல்படுவதாகவும், சூரியன் பன்னிரண்டு தன்மைகளுடன் ஒவ்வொரு மாதமும் செயல்படுவதாகவும் நம்புவது வழக்கம். இச்சூரியனைத் தனக்குள் கொண்ட சர்வேஸ்வரரின் வடிவமான பைரவரும் இருப்பதால் அவரைப் பன்னிரண்டு மாதங்களில் சித்திரை மாதத்தில் சண்ட பைரவரையும், வைகாசி மாதத்தில் ருரு பைரவரையும், ஆனி மாதத்தில் உன்மத்த பைரவரையும், ஆடி மாதத்தில் கபால பைரவரையும், ஆவணி மாதத்தில் ஸ்வர்ணாகர்ஷண பைரவரையும், புரட்டாசி மாத்ததில் வடுக பைரவரையும், ஐப்பசி மாதத்தில் சூத்திர பைரவரையும்,

Koviloor Digital Library

கார்த்திகை மாத்தில் பீஷ்ண பைரவரையும், மார்கழி மாதத்தில் அசிதாங்க பைரவரையும், தை மாதத்தில் குரோதன பைரவரையும், மாசி மாதத்தில் ஸம்ஹார பைரவரையும், பங்குனி மாதத்தில் சட்டநாத பைரவரையும் வழிபடவேண்டும்.

பைரவ வழிபாட்டிற்கு உரிய நாட்களும் ராசிக்காரர்களும்

சிம்ம ராசிக்காரர்கள் ஞாயிற்றுக்கிழையும், கடக ராசிக்காரர்கள் திங்கட்கிழமையும், மேஷம், விருச்சிக ராசிக்காரர்கள் செவ்வாய்க் கிழமையும், மிதுனம் கன்னி ராசிக்காரர்கள் புதன்கிழைமயும், தனுசு மீன ராசிக்காரர்கள் வியாழக்கிழைமயும், ரிஸபம் துலாம் ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமையும், மகரம் கும்ப ராசிக்காரர்கள் சினிக்கிழமையும் வழிபடுவது சிறப்பு.

பைரவக் கோவில்கள்

காலபைரவர் எழுந்திருக்கும் ஊர்களாக காசி, ராமகிரி, காஞ்சிபுரம், சூத்திரபாலபுரம், தில்லையாடி, ஆடுதுறை, சிவபுரம், மதுரை, திருமயம், முறப்பநாடு, சீர்காழி, சேலம் ஆகியன அறியப்படுகின்றன. சூரசூளாமணி பைரவர் திருவொற்றியூரில் மட்டும் காணப்படுகின்றார். அஷ்ட பைரவர் எழுந்திருக்கும் ஊர்களாக சீர்காழி, காஞ்சிபுரம் ஆகியன காணப்படுகின்றன. ஸ்வர்ணாகர்ஷண பைரவர் எழுந்திருக்கும் ஊர்களாக தேவகோட்டை, அந்தியூர், தாடிக்கொம்பு ஆகியன குறிக்கப்படுகின்றன. மகா பைரவர் வைரம்பட்டியிலும், யோக பைரவர் திருப்பத்தூரிலும், வடுக பைரவர் இலுப்பைக்குடியிலும், ஸ்வர்ணகால பைரவர் திருவண்ணாமலையிலும், பஞ்சமுக பைரவர் தாத்ஐயங்கார்பேட்டையிலும், ஸ்வர்ணஆக்ரஸ்ண பைரவர் படப்பை, திருப்பதி ஆகிய இடங்களிலும், அகோர பைரவர் சேந்த மங்கலத்திலும், வீர பைரவர் முறப்பநாடு, அந்தியூரிலும், ஆசனபைரவர் திருவாஞ்சியிலும், சர்வபைரவர் திருச்சேறையிலும், கஷ்டநிவாரணபைரவர் திருப்பாசேத்தியிலும், சம்ஹாரபைரவர் நாகையிலும், பாதாள பைரவர் காளஹஸ்தியிலும், விஜயபைரவர் பழநியிலும் எழுந்தருளியுள்ளனர்.

முடிவுரை

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைத் தீர்த்துவிட மனம்

Koviloor Digital Library

விரும்புகிறது. துன்பத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் அமுத மொழியாக மக்கள் கூட்டத்தில் யாரும் இல்லாத நிலையில் அவர்களுக்கு இறை என்ற உளவியல் தேவைப்படுகிறது. மனித வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களுக்கு எல்லாம் நவக்கிரகங்களின் வக்கிரம் தான் காரணம் என்று ஆன்மீக சோதிடத்தில் சொல்லப்படுகிறது. கடுமையான தோசங்களின் காரணமாக வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் போக்க அவரவர் ஜாதகத்தில் உள்ள கிரக திசா புத்தி அடிப்படையில் அதற்குரிய பைரவரை வழிபடவேண்டும். கிரகங்களின் தொல்லையிலிருந்து மீள பைரவர் வழிபாடு சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன. கிரகங்களின் பிராணனாக உள்ள பைரவரின் மந்திரத்தையும், அந்த பைவரவரின் உபசக்தி மந்திரத்தையும் சேர்த்து துதித்து வந்தால் துன்பங்கள் தீரும் என்பது நம்பிக்கை.

Koviloor Digital Library

நல்லாங்குடி அருள்மிகு வேம்புடைய அய்யனார் திருக்கோயிலின் வழிபாடும், விழாக்களும்

திருமிகு சி.தவமணி,
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை-3

முன்னுரை:

தமிழ் மக்களின் வாழ்வில் கோயில்கள் பேரிடம் பெற்றவையாகும். கோயில் வழிபாட்டு மரபில் சிறுதெய்வ வழிபாட்டு மரபு, பெருந்தெய்வ வழிபாட்டு மரபு என்ற இரு நிலைகளைக் குறிப்பிடுவர். சமுதாய வளர்ச்சியையொட்டி மேல்நிலையாக்கம் பெற்ற கோயில்களுள் ஒன்று நல்லாங்குடி அருள்மிகு வேம்புடைய அய்யனார் திருக்கோயிலாகும். இக்கோயிலின் வழிபாடும் விழாக்களும் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

வழிபாடு:

வழிபாடு என்பது மக்கள் தங்கள் குறைகளைக் கூறி அவையாவும் மாறவும், வரங்கள் வேண்டவும் உதவுவதாகும். நாம் எப்பொழுதும் ஒரு செயலைத் தொடங்க வேண்டுமென்றால் அவை எவ்விதத் தடங்கலுமின்றி நிகழும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். வழிபாடென்பது நாள்வழிபாடு, வாரவழிபாடு, மாதவழிபாடு, ஆண்டு வழிபாடு, தனிவழிபாடு, கூட்டுவழிபாடு என பலவகைப்படும்.

பூசை:

'பூசை' என்றால் அனைத்துச் சிறுதெய்வக் கோயில்களிலும் காலை பூசை, மாலைபூசை என இரண்டு காலப் பூசைகள் நடைபெறும்.

காலைப் பூசையின் போது அர்ச்சகர் நன்றாக நீராடி நெற்றியில் திருநீறு பூசி தூய ஆடைகள் அணிந்து கோயிலுக்கு வருவார். முதலில் அய்யனாருக்குப் பூசை நிகழ்த்துவார். அப்பொழுது தீப, தூப ஆராதனைகள் நடைபெறும். பூசையின் போது சர்க்கரைப்

Koviloor Digital Library

பொங்கல் நைவேத்தியமாகப் படைக்கப்பெறும். கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கொண்டு வரும் பால், தயிர், இளநீர், சந்தனம் போன்றவை அபிடேகம் செய்யப்பெறும்.

மாலைப் பூசையின் போது ஒவ்வொரு நாளும் மாலை ஆறு மணியளவில் மூலவருக்கும் பிற தெய்வங்களுக்கும் பூசை நிகழ்த்தப்பெறும். இப்பூசையின் போதும் தீப, தூப ஆராதனைகளும் நைவேத்தியமும் படைக்கப்பெறும்.

நித்திய பூசை:

நாள்தோறும் செய்யும் பூசைமுறை நித்திய பூசை வழிபாடாகும். இதனை நாள்வழிபாடு என்றும் கூறுவர்.

நைமித்திய பூசை:

ஒரு குறிப்பிட்ட தெய்வத்திற்குரிய குறிப்பிட்ட படையல் பொருட்களுடன் வழிபடுவது 'நைமித்திய பூசை' ஆகும். இதனைப் புண்ணிய காலங்களில் செய்வர். இவ்வழிபாட்டைச் சிறப்பு வழிபாடு என்றும் கூறுவர்.

காமிய பூசை:

தனிப்பட்டவரின் விருப்பம் நிறைவேறச் செய்யும் வழிபாடு காமிய பூசையாகும். திருக்கோயில்களில் நிகழும் வழிபாடு, விழாக்கள் குறித்து ஆகம நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. மனிதன் மனமொன்றி இறைவனை வழிபடுவதற்குரிய இடம் ஆலயம் ஆகும். ஆன்மா வயிக்குமிடம் ஆலயம் என்பர். வழிபாட்டுமுறை கோயிலின் பொருளாதார நிலைக்கேற்ப விரிந்தும் சுருங்கியும் அமையும்.

நாள்வழிபாடு:

தினந்தோறும் நிகழும் வழிபாட்டிற்கு நாள்வழிபாடு என்று பெயர். நல்லாங்குடி அருள்மிகு வேம்புடைய அய்யனார் கோயிலில் ஒரு நாளைக்கு ஒரு காலப் பூசை நடைபெறும். குறிப்பிட்ட நேரத்தில் என்றில்லாது எப்பொழுதாவது ஒரு நேரத்தில் செய்யப்படுகிறது. அருள்மிகு வேம்புடை அய்யனாருக்கும் அபிடேகம் நடைபெறும் பின் அலங்காரம், தீப தூப ஆராதனைகள் செய்யப்படுகின்றன.

Koviloor Digital Library

விழாக்கள்:

'விழா' என்பது 'விழவு' என்ற சொல்லின் திரிபாகும்.

'விழவும் உழந்தன்று முழவுள் தூங்கின்றது' (நற்றிணை 30)

எனப் பண்டைக் காலத்தில் நடந்த விழவு பற்றி நற்றிணை சுட்டுகிறது.

பண்டைக் காலத்திலேயே விழாக்கள் நடந்திருக்கின்றன என்பதற்குச் சான்றாக பல இலக்கியங்களைக் காட்டலாம். சிலப்பதிகாரத்தில் இந்திரனுக்கு எடுத்த விழா பற்றி இந்திரவிழவு ஊர் எடுத்த காதையில் சுட்டப்படுகிறது.

விழா என்பது 'விழை' என்ற அடிச்சொல்லால் உருவானதாகும். இதற்கு விருப்பு, அன்பு செலுத்து என்ற பொருளாகும். விழாவைக் கொண்டாட்டம் என்றும் கூறுவர்.

இவ்வுலகில் வாழ்கின்ற மக்கள் இம்மை இன்பமும் மறுமை இன்பமும் எளிதில் பெற்றுத் தமக்கு இறைவன் அளித்த பிறவியைத் தூயதாக்கிக் கொள்வதற்காகவே இறையோடு தொடர்புடைய திருவிழாக்கள் நிகழ்த்தப்படு கின்றன எனக் கூறுவர். மதக்கொள்கைகளை இறவாமல் காப்பற்கும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

சிறப்பு வழிபாடு:

அருள்மிகு வேம்புடைய அய்யனார் கோயிலில் சிவராத்திரி, தைப்பொங்கல், திருக்கார்த்திகை, சித்திரை வருடப்பிறப்பு, பௌர்ணமிவிழா, மார்கழிமாத திருப்பள்ளி எழுச்சி, விநாயகர் சதுர்த்தி போன்ற நாட்களில் சிறப்ப வழிபாடு நிகழ்கின்றன.

புரவி எடுப்பு:

இக்கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை பங்குனி மாதம் புரவி எடுப்பு 15 நாட்கள் திருவிழாவாக நிகழும். முதல்நாள் காப்புக் கட்டுதல் எனும் நிகழ்ச்சியுடன் குதிரை எடுப்புத் துவங்கும். அன்றிலிருந்து அய்யனாருக்கு விசேச பூசைகள் நடைபெறும். குதிரையினை வேளாளர்கள் செய்வர். சுமார் ஐந்தடி உயரத்திற்குக் குதிரை செய்வர்.

Koviloor Digital Library

ஒரு புரவியானது தயார் நிலையில் இருக்கும். புரவி எடுப்பு ஒரு நாளைக்கு முன்னதாகவே "குதிரைகளின் பக்கங்களில் கம்புகள் வைத்துக் கட்டித் தூக்கிச் செல்வதற்கு ஏற்றவாறு தயார் செய்வர். அதற்கான வைக்கோல், கயிறு, மூங்கில் அல்லது கம்புகள் போன்றவற்றைக் கிராமத்தினரே காலையில் கொண்டு வந்த வேளாளரிடம் சேர்ப்பித்துவிடுவார்கள். நேர்த்திகடன் குதிரைகளுக்கான இத்தகைய பொருட்களை வேண்டுதல் உள்ளவர்களே கொண்டு வந்து கொடுப்பர்" என்று கூறுவர். இவற்றைக் குதிரைகளில் பக்குவமாகக் கட்டித் தயார்நிலையில் வைத்திருப்பர்.

வெள்ளிக்கிழமையன்று குதிரையினை எடுத்து வந்து நாடக மேடைக்கு எதிரே உள்ள புரவி எடுப்பு மேடை என்ற மேடையில் வைத்துவிடுவர். அதற்குப் பூசைகள் நிகழ்த்தி விடுவர். குதிரைகள் கொண்டு வரும் போது தீப்பந்தத்தைக் கையில் பிடித்திருப்பர். பிராத்தனைக்காக மக்களும் குதிரை எடுப்பர். அந்தக் குதிரைகளும் புரவிகளுடன் சேர்ந்துவரும். சுமார் 450 புரவிகளைப் பிராத்தனைப் புரவிகளாக மக்கள் எடுத்து வருவர். புரவி எடுப்பில் எல்லா இன மக்களும் கலந்து கொள்கின்றனர்.

குதிரைகள் கோயிலுக்கு வந்தவுடன் குலவைச் சத்தமும், வேட்டுச் சத்தமும், கொட்டுச் சத்தமும் அதிகரிக்கும். குதிரைகளுடன் கோயிலை வலம் வந்த பின்னர் கோயிலின் வெளிப்புறங்களில் நிறுத்துவார்கள். குதிரைகளுக்கு போடப்படும் வேட்டி துண்டுகள் முதலியவற்றை வேளாளர் எடுத்துக்கொள்வர்.

முடிவுரை:

இக்கட்டுரையில் கோயிலில் நடைபெறும் பூசை முறைகள் சிறப்பு வழிபாடுகள் மற்றும் முக்கிய விழாவாக கருதப்படும் புரவி எடுப்பு முறைகளும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. அய்யனார் கோயிலுக்கே உரிய அனைத்து வழிபாட்டு முறைகளையும், விழாக்களையும் பெற்று இக்கோயிலானது திகழ்கின்றது என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

Koviloor Digital Library

வெற்றித் திருவிழா

திருமிகு. நா. தனலெட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

முன்னுரை

இந்து மதம் என்பதை ஒரு மதம் என்று கூறுவதை விட ஒரு வாழ்க்கை முறை என்றே கூறலாம். உலகம் தோன்றியதற்கான உண்மையான காரணத்தை அறிவதற்கான ஒரு நெறி முறை என்றும் கூறலாம். நம் முன்னோர்களின் வாழ்வியல் முறைகளும் பண்டிகைகளும் திருவிழாக்களும் வழிவழியாகப் பின்பற்றப்படுவது தான் நமது இந்து மதத் தத்துவங்களை நமக்குத் பறைசாற்றும் ஆதாரங்களாக உள்ளன. அந்த வகையிலே சக்தி வழிபாடாகிய நவராத்திரி விழாவைத் தொடர்ந்து வரும் விஜயதசமி என்னும் திருவிழாவைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

விஜயதசமி என்னும் வெற்றித் திருவிழா

இந்துமதக் கொள்கைகள் தத்துவங்கள் அனைத்திற்கும் காரண காரியத்தைச் சொல்லும் புராணக் கதைகள் உண்டு. இந்து மதத்தில் எந்த ஒரு திருவிழாவோ பண்டிகையோ அவை யாவும் அடிப்படையான தத்துவத்தை விளக்குவதாகவே காணப்படுகின்றன.

பக்தனின் மனதைப் பக்குவப்படுத்தும் விழாக்களும் விரதங்களும் ஆன்ம சுத்தியை ஏற்படுத்தி ஆண்டவனோடு நம் மனித இனத்திற்குத் தொடர்பு ஏற்படுத்தும் அற்புத சக்தி கொண்டவை. கல்வி செறிந்த வீரமும், வீரம் செறிந்த செல்வமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவை மூன்றும் நிறைந்த ஒரு வாழ்வையே நிறைவான வாழ்வாகக் கருதுவர். இம்மூன்று செல்வங்களின் அம்சங்களாகக் கொண்டாடப்படும் சக்தி தேவி வழிபாடாகிய நவராத்திரி வழிபாடும் அதைத் தொடரந்து தீமையை ஒழித்து நன்மையை நிலைநிறுத்தும் வெற்றித் திருவிழாவாம் விஜயதசமி வழிபாடும் புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பிறகு வரும் பத்து நாள் திருவிழாவாகும்.

Koviloor Digital Library

நவராத்திரி என்பது கலைத்திருவிழா. சக்தி வழிபாட்டை உயர்நிலையாகக் கொண்டது. முப்பெரும் சக்திகளாகிய கல்விக் கடவுள் கலைமகளும், செல்வத்திருமகள் அலைமகளும், வெற்றித் திருமகள் மலைமகளும் கொண்டாடப்படும் விழாவே நவராத்திரித் திருவிழா. நவ என்பதற்கு ஒன்பது என்று பொருள். நவ தானியம் என்பது ஒன்பது வகையான தானியங்களைக் குறிக்கும். அது போல நவராத்திரி என்பது ஒன்பது நாள் திருவிழா ஆகும். முதல் மூன்று நாட்கள் மலைமகளாம் துர்க்கை வழிபாடும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை அள்ளித்தரும் திருமகள் வழிபாடும், கடைசி மூன்று நாட்கள் கல்விக் கடவுள் கலைமகள் வழிபாடும் நடைபெறும்.

இம்மூன்று தெய்வங்களின் அருட்கொடைகளாகிய கல்வி, செல்வம், வீரம் இவற்றைப் பெற்றமையை ஆனந்தக் களிப்புடன் கொண்டாடும் வெற்றித் திருவிழாவாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. ஒன்பது நாட்கள் சக்தியாக நின்ற அன்னை பத்தாம் நாள் சிவத்துடன் ஒன்றாகி விடுகிறாள் என்பதுதான் நவராத்திரிச் சிறப்புச் செய்தி. இத்தகைய விஜயதசமித் திருவிழா திருவோணத்தில் அமைந்தால் மேலும் சிறப்புடையதாகிறது.

விஜயதசமி சிறப்புச் செய்திகள்

வேத காலத்திற்கு முன்பே சக்தி வழிபாடு இருந்தது. 'இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி ஸ்வரூபிணி' என்று லலிதா சகஸ்ரநாமம் கூறுகிறது. இச்சா சக்தியை (துர்க்கை) மகா காளி என்றும், ஞான சக்தியைக்(சரஸ்வதி) கலைமகள் என்றும், கிரியா சக்தியைத் (லட்சுமி) திருமகள் என்றும்கூறுவர். இம்மூன்று தத்துவங்களும் ஒன்றுபட்ட ஒரே சக்தி சொரூபமாக விளங்குவதே சண்டிகா தேவியாகும். இதனால்தான் நவராத்திரியில் சண்டி ஹோமம் செய்கின்றனர். சண்டன்,முண்டன்,சும்பன், நிசும்பன் போன்ற அரக்கர்களை மாய்த்து உலகத்திற்கு நன்மை செய்தவள் துர்கா தேவி.காட்டெருமை போன்று திரிந்த அசுரர் சக்திக்கு மும்மூர்த்திகள் கூட ஒதுங்கினர். மூன்று தேவியரும் ஒன்று சேர்ந்து ஒரே நாமத்தோடு வாளேந்திப் போர் புரிந்து அன்னை துர்கை வெற்றி பெற்றாள். வெற்றி பெற்ற தினமே விஜயதசமி என்று அழைக்கப்படுகிறது.

Koviloor Digital Library

விஜயதசமி ரத யாத்திரை- மகர்நோன்பு திருவிழா விளக்கம்

சக்தி சொரூபமாக துர்கா தேவி மகிஷாசுரனுடன் எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாம் நாள் போரின்போது மகிஷாசுரனை வதம் செய்தாள் என்றும் இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூசை செய்து கொண்டாடியபடியால், விஜயதசமி என்றும் வழங்கலாயிற்று என்று சொல்வது உண்டு. இன்றும் இவ்விழா மகர்நோன்பு அம்பு விடுதல் என்னும் வைபவமாக விஜயதசமியன்று திருக்கோயில்களில் கொண்டாடப்படுகிறது. மூன்று தேவியரின் அம்சமாகப் பெண் குழந்தைகளை தேவியராக அலங்காரம் செய்து மகிழும் நோன்பு என்னும் பொருளில் மகள்நோன்பு என்பது மருவி மகர்நோன்பு என்றாகி இருக்கலாம். தேவியானவள் அசுரனை வதம் செய்ததை நினைவு கூரும் விதமாக சுவாமி மற்றும் அம்பாள் ஊர்வலமாக வரும் தேர்களில் அமர்ந்திருக்கும் அர்ச்சகர்கள் நாலாதிசையிலும் அம்புகளை எய்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதாக ஐதீகம். அவ்வாறு விடப்பட்ட அம்புகளிலிருந்து வரும் பாணங்களைப் பெற்றவர்கள் அவற்றைத் தமது பூசை அறைகளில் வைத்துப் பூசிப்பது சிறப்பாகக் கருதப்படுகிறது. சிவ, விஷ்ணு மற்றும் சக்தி ஆலயங்களில் இவ்விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படும்.

கன்னி வாழை வெட்டல்

ஆலயங்களில் விஜயதசமி அன்று வன்னி மரத்துடன் கூடிய வாழை வெட்டுவது வழமை. பண்டாசுரனுடன் தேவி போர் செய்து அவனை அழிக்கமுடியாமல் சிவபிரானை வழிபட்டு விஜயதசமியில் போர் செய்யும் போது அவன் வன்னி மரத்தில் ஒளிந்தான். தேவி வன்னி மரத்தை சங்கரித்து அசுரனைச் சங்காரம் செய்தாள் என்பர். இதுவே நாளடைவில் கன்னிவாழை வெட்டு என்று மருவி வழங்கலாயிற்று. அசுரனைச் சங்கரித்த நேரம் மாலை வேளை, செங்கட் பொழுதில் இதனை ஞாபகப்படுத்தும் முகமாக வாழை வெட்டுவது வழக்கம்.

நவராத்திரி விரத நியதிகள்

- புரட்டாதி மாத வளர்பிறை பிரதமைத் திதியில் கும்பம் வைத்து நவமி வரை பூசை செய்தல் வேண்டும்.

Koviloor Digital Library

- வீடுகளிலும் ஆலயங்களிலும் கொலுவைத்தல் வேண்டும்.
- விரதம் கைக்கொள்ளுவோர் அமாவாசையில் ஒரு வேளை உணவு உண்டு பிரதமை தொடக்கம் முதல் எட்டு நாட்களும் பகல் உணவின்றி இரவு பூசை முடிந்தபின் பால் பழம் அல்லது பலகாரம் உண்பது நல்லது.
- ஒன்பதாவது நாளாகிய மகாநவமி அன்று பட்டினியாய் (உபவாசம்) இருந்து மறுநாள் விஜயதசமியன்று காலை ஒன்பது மணிக்கு முன் பாறணை செய்தல் வேண்டும். இயலாதவர்கள் முதல் எட்டுநாளும் பகல் ஒருவேளை உணவருந்தி ஒன்பதாம் நாள் பால் பழம் மட்டும் உட் கொள்ளலாம்.
- விஜயதசமி அன்று காலையில் சுவையுள்ள உணவுப் பதார்த்தங்கள் தயார் செய்து சக்திக்கு நிவேதித்து நவமியில் வைத்துள்ள புத்தகம் இசைக்கருவிகளைப் பாராயணம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் பாராயணத்தைப் பூர்த்தி செய்யலாம்.
- இவ்விரதத்தை ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுட்டித் தல் வேண்டும்.

முடிவுரை

நவராத்திரியில் திருமகளைத் துதித்து வழிபடு வோர்களுக்கு தேவியானவள் சகல சௌபாக்கியங்களையும் நல்குவாள் என்பது மட்டுமல்லாமல் வீட்டுப்பேறாகிய முக்தியையும் நல்குவாள் என்று காரணாகமம் கூறுகின்றது[தனி வழிபாட்டு அடிப்படையிலேயே இந்து மதம் அமைந்திருந்தாலும் கோயில் உற்சவம், பஜனை போன்ற கூட்டு வழிபாட்டு முறைகளும் மேலோங்கிக் காணப்பெறுகின்றன. "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்பது இந்த அடிப்படையில் கூறப்பட்டதாகும். பூசைகள் இறைவனின் மனத்தைக் கனிய வைக்கும். பக்தனின் மனத்தைப் பக்குவப்படுத்தும். உற்சவம் உற்சாகத்தைத் தரும். அவ்வகையில் வெற்றித் திருவிழாவும் தமிழக மக்களால் தவறாது கடைபிடிக்கப் பெறும் விழாவாக விளங்குதல் சுட்டப் பெற்றது.

Koviloor Digital Library

ஸ்ரீ இராஜாளி அய்யனார் வரலாறும், வழிபாட்டு முறைகளும்

முனைவர் ம. தனலெட்சுமி,
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

நுழைவாயில்

அய்யனார் ஒரு நாட்டுப்புறக் காவல் தெய்வம் ஆகும். பழங்கால முதல் அய்யனார் வழிபாடு தமிழரிடையே இருந்து வருகிறது. சிவனுக்கும் மோகினி உருவத்தில் இருந்த விட்ணுவுக்கும் பிறந்தவர் அய்யனார் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நாட்டுத்தெய்வமான அய்யனார் ஒரு சில சமூகத்தாருக்குக் குலதெய்வமாகவும் உள்ளது. அய்யனார், வெற்றியாண்டவர், சொரிமுத்து அய்யனார் போன்ற பல்வேறு பெயர்களில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. அவ்வடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டம் நெம்மேலிப்பட்டி என்ற கிராமத்தில் அருள்வழங்கும் ஸ்ரீ இராஜாளி அய்யனாரின் வரலாறு, வழிபாட்டு முறைகள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

நெம்மேலிப்பட்டி

புதுக்கோட்டையிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவில், தஞ்சாவூர் செல்லும் சாலையில் பெருங்களூர் என்ற கிராமப்புறநகரமான ஊரொன்று உள்ளது. அந்த, பெருங்களூரிலிருந்து கிழக்கு நோக்கி ஐந்து கிலோமீட்டர் பயணித்தால் நெம்மேலிப்பட்டி என்ற கிராமத்தை அடையலாம். இது, புதுக்கோட்டை மாவட்டம், வாராப்பூர் வட்டத்தைச் சேர்ந்த நெம்மேலிப்பட்டிப் பஞ்சாயத்து ஆகும்.

புதிய கோட்டையை வடிவமைத்துத் தனி அரசாகப் புதுக்கோட்டை என்ற பெயரில் தொண்டைமான் பரம்பரையினர் ஆண்டு வந்தனர். மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் புதுக்கோட்டையை ஆண்டுவந்த பொழுது,

Koviloor Digital Library

நெம்மேலிப்பட்டியைச் சேர்ந்த மூ.தொ.முனியாண்டி என்ற பெருஞ்செல்வந்தர் தங்கள் ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குக் கோவில்கள் கட்டுவதும், மக்களின் பயன்பாட்டிற்குக் குளங்களை வெட்டிவதுமான பல நல்லறங்களைச் செய்துவந்துள்ளார். அவ்வகையில், கி.பி.1910 ஆம் ஆண்டில் பெருங்களூரிலுள்ள தனக்குச் சொந்தமான 5 ஏக்கர் 98 செண்ட் நிலத்தில் ஒரு ஊருணியை வெட்டி, அதன் கரையில் விநாயகர் கோவிலையும் கட்டுவித்துள்ளார்.

ஊருணிக்கரையிலுள்ள விநாயகர் ஆலயம் ஊருணிக்கரை-யிலுள்ள பிடாரியம்மன் ஆலயம்

முனியாண்டி ஆதிதிராவிடர் பிரிவைச் சார்ந்தவராதலால், சாதியப் பாகுபாடு மிகுந்த அக்காலத்தில் அவரின் நல்லறங்களைப் போற்றாமல், அதற்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். பெருங்களூரில் உள்ள மற்ற சாதியப் பிரிவினர் அனைவரும் ஒன்றிணைந்து, கந்தர்வகோட்டைக்கு அருகில் உள்ள கள்ளாகோட்டை ஜமீன்தாரிடம், “தங்களுக்கு இணையான ஜமீன்தார்போல் முனியாண்டி நடந்துகொள்கிறார்” என்று பொறாமை ஏற்படும்படி கூறியுள்ளனர். மேலும், பெருங்களூரில் உள்ள நிலங்களை ஊர்ப்பஞ்சாயத்தில் சேர்த்துக்கொண்டுள்ளனர். இச்சூழலில், புதுக்கோட்டை மன்னரிடம் வழக்குச் சென்றுள்ளது. வழக்கில் முனியாண்டி வெற்றிபெறவும், அவ்வூரிலுள்ளவர்கள் ஒன்றிணைந்து, சூழ்ச்சியால் அவரின் நிலங்களைக் கைக்கொள்ள முடிவுசெய்துள்ளனர்.

ஐந்தாறு தலைமுறைகளுக்கு முன்பு, பெருங்களூர் நாட்டிலுள்ள முக்கியமானவர்களுடன் காவிரியாற்றில் சில சடங்கு முறைகளைச் செய்யச் சென்றபோது சிலை ஒன்று கிடைத்ததாகவும், அதை எடுத்துவந்து காலங்காலமாக இக்குளக்கரை அருகில் வைத்து வழிபட்டு வருவதாகவும் கூறியுள்ளனர். மேலும், இரண்டு நாள்களுக்கு முன்பு இக்கடவுள் கனவில் தோன்றி, “இனி, உங்களுடன் இவ்வூரில் இருக்கமாட்டேன். ஒரு தாழ்த்தப்பட்ட நீசனிடம் கொடுத்து, என்னை வழிபடச்சொல்லுங்கள்” என்று கூறியதாக முனியாண்டியிடம் கூறிவிட்டு தற்பொழுது, நெம்மேலிப்பட்டி கிராமத்தில் உள்ள அய்யனார் சிலையை

Koviloor Digital Library

அவர் கையில் கொடுத்துள்ளனர்.

அய்யனார் இருந்த இடத்தில் பெருங்களூர் நாட்டின் எல்லைக்காவல் தெய்வமான பிடாரி அம்மனுக்கு ஆலயம் எழுப்பவேண்டும் என்று முனியாண்டியிடம் கோரிக்கை வைத்துள்ளனர். கையில் வாங்கிய சிலையைத் திரும்பக் கொடுக்க மனமின்றி, அக்குளக்கரையை ஒட்டிய தன் சொந்த நிலமான 5 ஏக்கர் 98 செண்ட்டைப் பிடாரியம்மன் கோவில் கட்டிக்கொண்டு பெருங்களூர் நாட்டைச் சேர்ந்த பதினெட்டுப்பட்டி கிராமத்தார்களும் கொண்டாட அனுமதியளித்துள்ளார். இன்றும் அந்நிலம் முனியாண்டியின் பெயரில்தான் அரசு ஆவணப்பதிவுப்பட்டியல் உள்ளது. ஆனாலும், விநாயகர் ஆலயமும், குளமும் அவர் வாரிசுகள் பராமரிப்பில் உள்ளது. மற்ற இடங்கள் பிடாரிகோயிலுக்கான திருவிழாக்கூடுமிடமாகவும், ஊர்பொதுமக்கள் வந்து செல்லும் பொதுவிடமாகவும் உள்ளன.

குலதெய்வமான ஸ்ரீ இராஜாளி அய்யனார்

முனியாண்டி தனக்குக் கிடைத்த அய்யனார் சிலையைச் சொந்த ஊரான நெம்மேலிப்பட்டிக்குக் கொண்டு வந்துள்ளார். அதைத் தன் வீட்டின் முன்புறமுள்ள மேற்குப்பகுதியில், அய்யனார் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்குமாறு வைத்துக் கோவில் கட்டியுள்ளார். அக்கோவிலில் வைக்கப்பட்ட அய்யனாருக்கு 'இராஜாளி' என்று பெயர்சூட்டியுள்ளார். இராஜாளி என்றால் 'சிங்கம்' என்ற பொருளுண்டு. விலங்கினத் தலைவராகக் காட்டிற்கு இராஜாவாகச் சிங்கம் இருப்பதுபோல, தன்னை வழிபடுபவரை இராஜாவாக இருந்து ஆளும் தன்மை கொண்ட கடவுள் என்ற நோக்குடன் இப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். பறவைகளில் சிறந்ததாகப் போற்றப்படுவது 'இராஜாளி' (கழுகு வகை) என்பது இங்கு எண்ணத்தக்கது.

1912-இல் முனியாண்டியின் வீட்டருகே உள்ள நிலத்தில் இக்கோயில் கட்டப்பட்டபின், அவரின் உடன்பங்காளிகளான மூக்காண்டி இனத்தார், மற்ற பங்காளி உறவினர்களான உசாடி, சொனங்கன் ஆகிய பட்டங்களை உடைய, பதினெட்டுப்பட்டிகளில் உள்ளவர்களுக்கும் கோவில்

Koviloor Digital Library

பூசைகளிலும் மற்ற சடங்குகளிலும் பங்கெடுக்கும் உரிமையைக் கொடுத்து, மூன்று பட்டத்தாருக்கும் குலதெய்வமாக்கியுள்ளார்.

இராஜாளி அய்யனாரின் பரிவாரத் தெய்வங்களாகப் பேச்சியம்மன், திருமியம்மன், கொசுவாயிஅம்மன், சின்னப்பிரம்மன், பெரியபிரம்மன் போன்றோர் உள்ளனர். வாயிலில் இருபுறமும் விநாயகர், முருகன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான அய்யனார், அய்யப்பனின் மறுவடிவமாகக் கருதப்பட்டு (பாலசாஸ்தா) அக்கோ-யில்களில் பெண்களை அனுமதிப்பது இல்லை. இங்குள்ள இராஜாளி அய்யனார், பெண்தெய்வமில்லாமல் துறவற நிலையில் இருக்கின்றார். எனவே, இதனைச் சுற்றிலும் பரிவாரத் தெய்வங்களை வைத்து வீட்டுக்கோவிலாகவும், ஊர்எல்லையில் இதுபோன்றதொரு மற்றொரு கோவில் எழுப்பி பெண்கள் செல்லாதவாறு அதனைக் காட்டுக்கோவிலாகவும் வழிபட்டுவந்துள்ளனர். இக்கோவில் எழுப்பி ஓராண்டு முடிவடைவதற்குள், அருகிலுள்ள போரம் கிராமத்தில் முனியாண்டி பஞ்சாயத்து ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்த சமயம் பார்த்துக் கள்ளாகோட்டை ஜமீன்தார் தன் ஆட்களுடன் வந்து, முனியாண்டியின் வீட்டிலுள்ள செல்வங் களைக் கைப்பற்றிக்கொண்டு வீட்டை நெருப்பிட்டுக் கொளுத்தியுள்ளார். அது பனையோலையால் வேயப்பட்ட சுத்துக்கட்டு வளைவு (இன்றைய மாளிகைக்குச் சமமான வீடு) என்பதால், நீண்டநேரம் எரிந்ததில் அனைத்து பொருள்களும் சேதமாகியுள்ளன.

பஞ்சாயத்திலிருந்து வந்த முனியாண்டி, இதைக்கண்டு மனம் நொந்து, எரிந்த வீட்டை மூன்றுமுறை வலம்வந்து, அங்குள்ள இராஜாளி அய்யனாரைப் பார்த்து "நீயே இதற்குச் சாட்சி" என்று கூறிவிட்டு, தன் தலையில் கட்டியிருந்த வெண்பட்டுத் துண்டை எரிந்து கொண்டிருந்த வீட்டு நெருப்பில் தூக்கிப் போட்டுவிட்டு, 'இந்தியாவில் இனி இருக்கவேண்டாமென்று எண்ணி' பிழைப்பிற்காக முன்பு சென்ற இலங்கைக்குச் சென்றுள்ளார். இலங்கை சென்ற முனியாண்டி, அங்கு வாழ்ந்த தன் நான்கு பிள்ளைகளிடமும் செய்தியைக்கூறி, தன் சொந்த ஊரிலுள்ள சொத்துக்களைப் பராமரிப்பதற்காக, மூத்தமகனான மு.நடேசன் என்பவரை நெம்மேலிப்பட்டிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

Koviloor Digital Library

பழையவீட்டின் மேற்குப்புறத்திலிருந்த இராஜாளி கோவிலுக்கே இடமுழுவதும் கொடுத்துவிட்டு, ஊரில் கடைசிப்பகுதியிலுள்ள தன்நிலத்தில் புதியவீட்டைக் நடேசன் கட்டி வாழ்ந்துள்ளார். இன்றும் அவரின் வாரிசுகள் அங்கு வசிக்கின்றனர். இக்கோவில், 2016 - ஆம் ஆண்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது.

வழிபாட்டு முறைகள்

இராஜாளி அய்யனாருக்கு ஒவ்வொரு ஆண்டும், மாசி மாதம் வரும் சிவராத்திரியன்று, திருவிழா நடைபெறுகிறது. சிவராத்திரியன்று இரவில் அக்கோவிலைக் குலதெய்வமாக உடையவர்களும், அவ்வூரிலுள்ள மற்ற உறவினர்களும் ஒன்றிணைந்து, தேங்காய், பழங்களைக் கொண்டு பச்ச அரிசியால் அய்யனாருக்குப் படையலிடுகின்றனர். இதனைப் 'பச்சபரப்புதல்' என்கின்றனர். இவ்விழாவில், அய்யனாரை முனியாண்டியிடம் கொடுத்த ஊரைச் சேர்ந்த ஊர்அம்பலகாரர்களும், நெம்மேலிப்பட்டியிலிருந்து கள்ளாகோட்டைச் ஜமீனுக்கு உளவு சொன்ன வேறுசாதியினைச் சேர்ந்தவர்களும் வந்திருந்து, பூசையில் கலந்துகொண்டு பிரசாதமாகத் திருநீறும், தேங்காய் பழங்களும் பெற்றுச் செல்வது இன்றும் வழக்கமாக இருந்துவருகின்றது. இதன்காரணம், இராஜாளி அய்யனார் பெருங்களூரிலிருந்து நெம்மேலிப்பட்டிக்கு வந்ததன் அடையாளமாகவும், தனக்குக் கோயில்கட்டி வழிபாடு செய்தவருடைய செல்வங்களைக் கொள்ளையிடக் காட்டிக் கொடுத்தவருக்குச் சந்ததியினர் இல்லாமலும், தொடர்ந்து பல உயிர்கள் பலிவாங்கிக் கொண்டும் இருந்ததன் விளைவாகத் தன் தவறு உணர்ந்து இறைவனிடம் மன்றாடி தன் குலம்தழைக்க வேண்டியதன் காரணமாகவும், இருவரும் வந்து திருவிழாநாளில் கண்டிப்பாகப் பிரசாதம் பெற்றுக்கொள்கின்றனர்.

மறுநாள், காலையில் பரிவாரதெய்வங்களுக்கு ஆட்டுக்கிடாய் வெட்டி பலியிடுகின்றனர். அதைச்சமைத்து திருவிழாக் காண வந்திருக்கும் அனைவருக்கும் விருந்துபரிமாறுவர். அன்றிலிருந்து எட்டாம் நாள் இரவு அக்கோவிலுக்கு உரிமையுடைய ஆண்கள் மட்டும் ஒன்றிணைந்து காட்டுக்கோவிலில் இருக்கும் இராஜாளி அய்யனாருக்கு ஆடுவெட்டி ஒளி பூசை போடுகின்றனர். (ஒளிபூசை

Koviloor Digital Library

என்பது நள்ளிரவில் நெருப்பை மட்டுமே ஒளியாகக்கொண்டு பூசை செய்வது) அதன்பின், ஆண்கள் மட்டும் பலியிட்ட ஆட்டிறைச்சியைச் சமைத்து சாப்பிட்டுவிட்டு விடிவதற்குள் இலைகளை அக்கோயிலின் ஒதுக்குப்புறத்திலுள்ள ஓரிடத்தில் புதைத்துவிட்டு வீடுவந்து சேர்வார்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இராஜாளி அய்யனாருக்கு இவ்வாறுதான் திருவிழா எடுக்கப்படுகின்றது.

நிறைவாக

புதுக்கோட்டை மாவட்டம் வாராப்பூர் வட்டத்திலுள்ள நெம்மேலிப்பட்டிக் கிராமத்தில் அருள்வழங்கும் ஸ்ரீ இராஜாளி அய்யனாரைப் பற்றி ஆராய்ந்ததில் தெரிந்த தகவல்களின் தொகுப்பு இங்கு முன்வைக்கப்படுகின்றது.

- தனி ஒரு மனிதனின் முயற்சியால் உருவான இராஜாளி அய்யனார் கோவில், இன்று அந்த இனக்குழுவிற்குக் குலதெய்வமாக இருந்து அருள்வழங்குகின்றது.
- இராஜாளி அய்யனாரைக் கோவில்கட்டி வழிபட்டவரின் குடும்பத்திற்குக் கடும் இன்னல் விளைத்தவர்களை அத்தெய்வம் தண்டிக்கும் என்ற நம்பிக்கை அம்மக்களிடையே இருந்து வருகிறது.
- வீட்டுத் தெய்வமாக(குலதெய்வம்) இருக்கும் இராஜாளி அய்யனார், சமைக்காமல் பெறப்பட்ட அரிசி, பழங்களைப் படையலாக ஏற்றுக்கொள்கின்றார். இங்கு பரிவாரத் தெய்வங்களுக்குத்தான் ஆடு பலியிடப்படுகிறது.
- அதே தெய்வம், காட்டில் எல்லைத் தெய்வமாக இருக்கும்பொழுது ஆடு பலியிடப்படுகின்றது.

சான்றாதாரம்:

1. இராஜாளி அய்யனார் வரலாறு – மூ.தொ.முனியாண்டியின் பேரன் திரு. ந.மணிவேல், (தலைமை ஆசிரியர் (ஓய்வு) அவர்களிடமிருந்து தகவல் பெறப்பட்டது.
1. வழிபாட்டுமுறைகளைக் களஆய்வின் மூலமும், தகவல் பெறப்பட்டதன் அடிப்படையிலும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

சக்கதேவி வழிபாடு

முனைவர்.வே.தனுஜா
தமிழ் உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ.எஸ்.ஆர்.என்.எம்.கல்லூரி, சாத்தூர்.

முன்னுரை

"இறைவழிபாடு தோன்றுவதற்கு எதிரிகளைப்பற்றிய அச்சஉணர்வே காரணம்" என்ற கருத்தும், பிராய்டின் "மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்றஉணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது"[1] என்ற கருத்தும் பொருந்துவனவாக அமைந்துள்ளன. 'வழிபாடு என்பது உலகம் முழுவதும் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பெயர்களோடும் பல்வேறு முறைகளோடும் நிலைபெற்று மக்கட் சமுதாயத்திற்கு இன்றியமையாத வாழ்வியற் பண்புகளாக விளங்குகின்றன'[2] என்பர்.

வழிபாடு

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனின் பெருமையை உணர்ந்து அவனை வழிபடுதல் வேண்டும். மனிதன் இவ்வுலகத் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று நல்வாழ்வு வாழ விரும்புகிறான். அதற்கு உறுதுணையாக ஓர் ஆற்றல் வேண்டும் என நினைக்கிறான். "கடவுள் என்ற ஆற்றலே பிறர் தரமுடியாததைத் தனக்கு அளிக்குமெனக் கருதி இவ்வாற்றலை வழிபடுகிறான்"[3] என்பவர்.

பொதுவாக மனிதன் மகிழ்ச்சியான நேரத்தில் இறைவனை வழிபடுவது இல்லை.. துன்ப நேரங்களில் மட்டுமே இறைவனை வழிபடுகிறான். வேறு எதனையும் சிந்திக்காது இறைவனுடன் ஒன்றிவிடுகிறான். "இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுவதுதான் வழிபாடு"[4] என்று தி.சா.ராசு குறிப்பிடுகிறார்.

வழிபாடு என்பது அடிப்படையில் ஒருவகை விருப்பத்தின் வெளிப்பாடேயாகும். "ஆன்மீகக் கூட்டு வழிபாட்டை இன்று இச்சொல் உணர்த்தினாலும் மதிப்பு மிக்க சமயமும் ஒரு

Koviloor Digital Library

வேண்டுதலையே வெளிப்படுத்துவதாகச்" சமயமும் அறமும் பற்றிய கலைக்களஞ்சியம் கூறுகிறது.

கம்பளத்து நயக்கர் வழிபடும் தெய்வங்கள்

கம்பளத்து நாயக்கர்கள் பெரும்பாலும் சக்கம்மாளை வழிபட்டு வருகின்றனர். இது தவிர அய்யனார், பாவம்மாள், அக்கம்மாள், மொட்டடத்தாத்தா, காளியம்மன் போன்ற சிறு தெய்வங்களையும் வழிபட்டு வருகின்றனர். மேலும் முருகன், சிவன், பெருமாள் எனப் பெருந்தெய்வங்கள் உறையும் கோவிலுக்குச் சென்றும் வழிபட்டு வருவர்.

பொது வழிபாடு

நாள்தோறும் இறைவனை எண்ணி வழிபடுவது பொது வழிபாடாகும். இவ்வழிபாடு எல்லாக் கோவில்களிலும் நடைபெறுகிறது.

சக்கம்மாள் கோவிலில் தினமும் மக்கள் வெளியிலிருந்து கும்பிட்டுச் செல்வர். ஏனெனில் கார்த்திகை, மாசிமாதத் திருவிழா நாள்தவிர பிறநாட்களில் கோயிலைத் திறக்கக் கூடாது என்பது ஊர்க்கட்டுப்பாடு என்று கூறுவர்.[6] இதுதவிர அய்யனார், பாவம்மாள், மொட்டடத் தாத்தா, கோவில்களில் சிலை உண்டு. அக்கோவில்களைத் தினந்தோறும் வழிபட்டு வருகின்றனர். அக்கம்மாள் கோவிலில் கம்பம் உண்டு. காளியம்மனுக்குச் சிலை கிடையாது. ஆடிமாதம் மந்தையில் வைத்து வழிபடுவர்.[7] மொட்டடத் தாத்தா வேட்டையில் கடுமையானவர். இவர்கள் வேட்டையாடுதல் உண்டு. அந்நேரங்களில் மொட்டடத்தாத்தாவைக் கும்பிட்டு வேட்டையாடினால் வேட்டையில் நிறைய விலங்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இவர்களிடம் காணப்படுகிறது. அக்கடவுளுக்கு வேட்டையில்கிடைத்த விலங்குகளின் தலை, ஈரல், இவற்றைப் படைத்து வழிபடுவர்[8] என்பர்.

சிறப்பு வழிபாடு

திருவிழாக் காலங்களில் இறைவனை வழிபடுவது சிறப்பு வழிபாடாகும். இவைதவிர சிறப்பான நாட்களிலும் இறைவனை வழிபடுதலும் உண்டு. மக்கள் தம் துன்பங்களை இறைவனிடம்

Koviloor Digital Library

விண்ணப்பித்தால் அத்துன்பங்கள் நீங்க வழி கிடைக்கும் என்றும், இதற்கான வழியை இறைவனே அமைத்துக் கொடுப்பான் என்றும் நம்புவதால்தான் அவர்கள் நிலையாகத் திருவிழாக்கள் நடத்துகின்றனர்.

திருவிழாக்கள்

சக்கம்மாள் கோவிலில் மட்டும் வருடந்தோறும் திருவிழா நடைபெறும். இக்கோவிலில் கார்த்திகைத் தீபத்திருவிழாவும், மாசிமாதச்சிவராத்திரி திருவிழாவும் சிறப்பானவையாகும். மேலும் 'பெரிய கும்பிடு' எனும் விழா [12] வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுகிறது.

கார்த்திகைத்தீபத்திருவிழா

கார்த்திகை மாதம் வரும் பௌர்ணமி நாளிலும் அதற்கு முன்னும், பின்னும் உள்ள இருநாட்களிலும் இவ்விழா நடைபெறும். இம்மூன்று நாட்களிலும் வீட்டில் தீபமேற்றி வழிபடுகின்றனர். இதுதவிர சக்கம்மாள்கோவிலுக்குச் சென்று தீபமேற்றி வழிபடுகின்றனர். இம்மூன்று நாட்களும் கோயில் திறந்து வைக்கப்பட்டிருக்கும். யார் வேண்டுமானாலும் சென்று வழிபடலாம். மூன்று நாட்களிலும் சொக்கப்பானைக் கொளுத்திச் சிறப்பகாகக் கொண்டாடுகின்றனர்.

இளைஞர்கள் தங்களால் முடிந்த அளவு அதிகமாகக் கம்புத்தட்டை கட்டிக் கொண்டு வருவர். அதைக்கூம்புபோல் நிறுத்திக் கொளுத்துவர். மூன்றாம் நாள் மிகவும் அதிகமாக வைத்துக் கொளுத்துவர். அது எரிந்து முடிந்தபின் பெண்களும் ஆண்களும் சேர்ந்து அதைச்சுற்றிக் கும்மியடித்துத் தங்கள் கால்களாலேயே அத்தீயை அணைப்பர்.9 மேலும் ஆண்கள் இரவுமுழுவதும் சிலம்பம், கபடி போன்ற விளையாட்டுக்களை விளையாடுவர். எரிந்ததீ சக்கம்மாள் அருளால் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யாதென்பர். அந்தச் சாம்பலை வீட்டிற்கு எடுத்துச்சென்று விவசாய நிலங்களில் இடுவர். அதனால் விளைச்சல் பெருகும் [10] என்பர்.

சிவராத்திரிவிழா

சிவராத்திரி விழா, மாசிமாதம் கொண்டாடும் விழாவாகும். இவ்

Koviloor Digital Library

விழா மாசிமாதம் சிவராத்திரி அன்று கொண்டாடப்படுகின்றது.

வரியிடுதல்

முதலில் ஊர்க்கூட்டம் போடுவர். ஊர்க்கூட்டம் ஊர்மந்தையில் இருக்கும் பெரிய திண்ணையில் கூட்டப்படுகிறது. கோயில் பூசாரி ஊர்ப்பெரியவராவர் அவரும் ஊர்ப்பெரியவர்களும் சேர்ந்து எவ்வளவு வரிவிதிக்க வேண்டும் என்றும், எப்படிச் செய்ய வேண்டுமென்றும் பேசி முடிவெடுப்பர். இவ்விழாவிற்கு முக்கியத் தேவை கரும்பாகும்.

விழாவிற்குத் தேவையான கரும்பு, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு போன்ற பல பொருட்களை வரிகளில் இருந்து வாங்கிவருவர். ஒவ்வொரு வீட்டிற்கும் தேவையான கரும்பிற்கு ஏற்ப வரியும் அதிகமாகும்.

வேலி அமைத்தல்.

கோயிலைச் சுற்றி இலந்தைமுள்ளால் ஆனவேலி அமைத்திருப்பர். அவ்வேலிக்குள் உசிலைமரம் உண்டு. இக்கோவிலில் காணப்படும் இலந்தைமுள் வருடந்தோரும் புதிதாக வெட்டி வருவதாகும். விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பே இம்முட்களை வெட்டி வேலி அமைத்திடுவர். இவ்வேலி அமைக்கக் காரணம் என்னவெனில், “சக்கம்மாள் முன்பு தன் ஆடுகளைக் கிடை அமர்த்திச் சுற்றிலும் இலந்தைமுள்வேலி அமைத்த காரணத்தினால் இன்னும் அம்முறை பழக்கத்திலுள்ளதாகச் சுட்டுகின்றனர்”.[11]

பூசை முறைகள்

விழாவன்று இரவு பத்துமணியளவில் பூசாரி வீட்டில் வாங்கிவைத்த பூசைப்பொருட்களை மூங்கில் கூடைகளில் எடுத்துக் கொண்டு கோவிலுக்கு வருவர். கட்டியங்காரன் தீபம் கொண்டு உடன் வருவான். உருமிக்காரரர்கள் உருமி அடித்துக் கொண்டு வருவர். இளைஞர்கள் ஒயிலாட்டம், சிலம்பாட்டம் ஆடிக்கொண்டே வருவர். சக்கம்மாவைப் பூக்களாலும் எழுமிச்சம்பழ மாலைகளாலும் அலங்கரித்துப் பூசைகள் நடத்துவர்.

Koviloor Digital Library

கம்பளத்து நாயக்கர் 12 மணிக்குமேல் இரவில்சாமி கும்பிடுவர். முதலில் அவர்கள் இனத்தவர் சாமிகும்பிட்டு விடுவர். பின் விடிந்ததும் பக்கத்து ஊரிலிருக்கும் அனைத்து இனமக்களும் சக்கம்மாளைச் சென்று வணங்கி வருவர். செல்பவர்களுக்குப் பிரசாதமாகத் திருநீறும், கரும்பும் வழங்குவர்.

பகலில் கம்பளத்து நயக்கர் இளைஞர்கள் ஒயிலாட்டம், சிலம்பாட்டம் ஆடுவர். உருமிக்கேற்ப ஒயிலாட்டம் ஆடுவர். இக்குலப் பெண்கள் எவரும் சட்டை அணியக்கூடாது. வெள்ளைச் சேலை அல்லது புளியமுத்துக் கண்டாங்கி எனப்படும் சேலை மட்டுமே அணிய வேண்டும்[12] என்பவர்.

இப்பகுதியில் தொடர்ந்து கம்பளத்து நாயக்கர்கள் சிவராத்திரி விழாவைச் சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றனர்.

பெரியகும்புடுவிழா.

'பெரியகும்புடு', 'பெரியதம்பிரான்' (பெத்தமொக்கு) என்றழைக்கப்படும் இவ்விழா 12 வருடத்திற்கு ஒருமுறை கொண்டாப்படுகிறது. பாலவார்இன மக்கள் வாழும் பிற பகுதிகளில் அவ்விழாக் கொண்டாப்படுவதில்லை.

சக்கம்மாள் கோவிலில் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். இது வருடத்தில் ஆடி மாதத்தில் நல்ல நாள் பார்த்துக் கொண்டாடுகின்றனர். இவ்விழா ஒரு வாரம் நடைபெறும். அச்சமயத்தில் கோவிலுக்கு வந்து செல்பவர்க்கு உணவு வழங்குவர்.

இவ்விழாவும் சிவராத்திரி விழாவைப் போன்றே வரிவிதித்து அலங்கரித்துப் பூசைகள் நடத்துவர்.

மாடுகள் விரட்டுதல்

இவ்விழாவில் முக்கியமானதொரு நிகழ்ச்சி மாடுகளை விரட்டுதலாகும். இதற்கான மாடுகளைத் தேனி மாவட்டத்தில் இருந்து கொண்டு வருவர். அங்குக் கோயில் மாடுகள் அதிகம். அதை இவ்விழாத் தொடங்க ஒரு மாதத்திற்கு முன் மேயத்துக்கொண்டு வருவர். அவ்விழாக் கொண்டாடுவதைத் தவிர்க்க வேண்டிப் பிற வட்டார மக்கள் மந்திரத்தால்

Koviloor Digital Library

சூழ்ச்சி செய்து மாடுகளைக் களைந்தோடச் செய்வர். ஆனால் விழாக் கொண்டாடுவோர் முன்னெச்சரிக்கையாக இருந்து அதைக் கண்டறிந்து எதிர் மந்திரத்தால் அதை அழியச் செய்து மாடுகளைக் களைந்து ஒடாமல் இருக்கச் செய்வர்[13]

இவ்வாறு கொண்டுவரப்பட்ட மாடுகள் ஒட்டத்திற்குப் பழக்கப்பட்ட மாடுகளாயிருக்கும். சக்கம்மாள் கோவிலின் முன்பு பூசைக்குரிய பழங்கள், பொருட்கள் யாவும் நிறைத்து வைத்திருப்பர். மாடுகளைச் சுமார் நான்கு கிலோமீட்டருக்கு அப்பால் நிறுத்தி அங்கிருந்தபடி விரட்டி வருவர். இருபக்கமும் அவ்வினமக்கள் நிறைந்திருப்பர். ஏனெனில் வேடிக்கை பார்க்க ஒரு காரணம் உண்டென்றாலும் நாய், பன்றி, ஏதாவது நுழைந்துவிட்டால் அவ்விழா அத்துடன் நின்றுவிடும். அடுத்து கொண்டாடக் கூடாது என்பர். இக்காரணத்தால்தான் பிறபகுதிகளில் இவ்விழாக் கொண்டாடுதல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆகையால் இருபக்கமும் உள்ள மக்கள் நாய், பன்றி, நுழைந்துவிடாதவாறு பாதுகாத்துக்கொள்வர். அம்மாடுகள் விரைந்து வந்து அங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களைத் தாண்டிச் செல்லும். அவ்வாறு தாண்டும்போது முதலில் தாண்டிய மாட்டின் நிறம், தாண்டியவிதம், தாண்டியபோது நேரம் ஆகிய இவற்றைக் கொண்டு அவர்களது வாழ்வின் நிலை எவ்வாறு அமையும் எனக் கணக்கிடுவர். கணக்கிட்டுக் கூறியபடியே வாழ்வும் துல்லியமாக அமையும்[14] என்பர். இங்கு இது முக்கியமானதொரு நிகழ்ச்சியாகக் கொண்டாப்படுகிறது.

இது குறித்து எட்கர் தாஸ்டன், "பன்னிரெண்டாண்டுகளுக்கு ஒருமுறை பெருஞ்செலவில் நடத்தப்படும் 'மாலே வழிபாடு' ஆகும். இந்த வழிபாடு நடைபெற உள்ளது என்பதைப் பக்கத்து ஊராருக்கும் இவர்கள் முன்கூட்டியே தெரிவிப்பர் உரிய நாளில் எல்லாச் சாதியினரும் நிறைய எருதுகளை ஒட்டிக்கொண்டு வருவர். எருதுகளுக்குத் தீவனம், சமைக்கப் பானைகள், கரும்பு ஆகியனவற்றை வழங்குவர். கரும்பினை விருந்தினருக்குத் தரவில்லையாயின் அது விழாச் சடங்கின் நடைமுறை தோல்வியுற்றதாகக் கருதுவர். வழிபாடு முடிந்தபின் எருதுகளைப் போட்டியிட்டு ஒடும்படி விரட்டுவர். எந்த எருது மாலேயை

Koviloor Digital Library

முதலில் வந்து அடைகின்றதோ அதனை அலங்கரித்துப் பாராட்டுவதோடு அதன் உரிமையாளருக்கு ஆடை, பணம் முதலியன தருவர்"[15] எனக் குறிப்பிடுகிறார்.

பொங்கலிடுதல்

இவ்விழா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடுவதால் பெரும்பாலும் அனைவரின் வீடுகளிலும் பொங்கலிடுவர். இரண்டு பொங்கல் வைப்பது வழக்கம். முந்தைய விழாவில் நேர்ந்து சில காரணங்களால் பொங்கலிடாமல் விட்டவர், அதற்கும் சேர்த்து நான்கு பொங்கலாகச் சேர்த்து வைப்பர்.[16]

இவைதவிர சிலம்பாட்டம், ஒயிலாட்டம், உருமியடித்தல் போன்ற பல நிகழ்ச்சிகளைத் தருவர். இவ்வாறு இவ்விழா அவ்வினத்தாருள் கொண்டாடப்படும் முக்கியமானதொரு விழாவாக உள்ளது.

நேர்த்திக் கடன்கள்

மக்கள் தங்கள் வாழ்வில் துன்பங்களையும், இழப்புக்களையும் குறைகளையும் காணுகையில் அவற்றைப் போக்குமாறு தெய்வத்தை வேண்டுகின்றனர். அத்தெய்வங்கள் குறைகளைத் தீர்த்தால் அதற்கு ஈடாகத் தான் செய்வதாகக் கூறும் கடன்களை நிவர்த்திக்கடன் "[17] என்று கருதுகின்றனர். தங்களின் துன்ப நீக்கத்திற்காகச் செய்யப்படுவதால் நிவர்த்திக்கடன் எனவும் தாங்கள் நேர்ந்து கொண்டாதால் நேர்த்திக்கடன் எனவும் கூறலாம்,

கம்பளத்தாரின் நேர்த்திக்கடன்களுக்கு அடிப்படையாக அவர்களின் நம்பிக்கைகள் உள்ளன. இவர்களிடம் முடி-யிறக்குதல், காணிக்கை செலுத்துதல், பொங்கலிடுதல், பட்டெடுத்தல், கரும்புத் தொட்டிலில் ஆகிய நேர்த்திக்கடன்கள் குறிப்பிடத்தக்கனவாக காணப்படுகின்றன.

முடியிறக்குதல்.

முடியிறக்குதலை 'மொட்டைபோடுதல்' என்பவர். என்னுடைய ஆணவத்தையும் அகங்காரத்தையும் இராச போகத்தையும் உன்முன்னால் இறக்கி வைக்கிறேன் என்ற கருத்திலேயே முடியிறக்குகின்றனர்'[9] என்பர். மொட்டை

Koviloor Digital Library

போடுவதில் வயது வேறுபாடோ ஆண் பெண் என்ற வேறுபாடோ இல்லை. சிறியவர்களும், பெரியவர்களும் பெண்களும் மொட்டையிட்டுக் கொள்கின்றனர். சக்கம்மாள் கோயில்களில் பாலவார் இன மக்கள் நேர்ந்து கொண்டு மொட்டையிடுகின்றனர். வாழ்வில் நோய் ஏற்படும் போது அதை நீக்கினால் மொட்டை போடுகிறேன், என வேண்டிப் பின் விழா நாட்களில் மொட்டையிடுகின்றனர். இவ்வகை நேர்த்திக்கடன் பெரும்பயன் விளைவிப்பதாக நம்புகின்றனர்.[20]

பொங்கலிடுதல்

தங்கள் வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுமாயின் தெய்வத்திற்குப் பொங்கலிடுவதாக வேண்டுவர். இப்பொங்கலிடுதல் பெரும்பாலும் விழாக்காலங்களிலேயே நடைபெறும். காளியம்மன் கோவிலில் ஆடிமாதப் பௌர்ணமி அன்று பொங்கலிடுவர். சக்கம்மாள் கோவில்களில் நேர்ந்து கொண்டவர்களும் பொங்கலிடுவர். 'பெரிய கும்பிடு' நாளில் வீடுதோறும் இரண்டு பானைகளில் பொங்கலிடுவர். இவை தவிர பிற கோயில்களிலும் மக்கள் தங்கள் விருப்பம் போல் நேர்ந்து பொங்கலிடுகின்றனர்.

காணிக்கை செலுத்துதல்

காணிக்கை என்பது மக்கள் தங்களால் இயன்ற அளவு பணமாகவோ, பொருளாகவோ, தெய்வத்திற்குச்செலுத்துதலாகும். இது பல வழிகளில் கோயிலுக்குச் செலுத்தப்படுகின்றது. பாலவார் இனமக்கள் வழிபடும் கோயில்களிலும், பணம் விளக்கு, மணிகள் போன்றவற்றைக் காணிக்கையாகவும் செலுத்துகின்றனர். மக்கள் தமது துன்பங்களை நீக்கினால் இது போன்ற பல பொருட்களைக் காணிக்கையாகச் செலுத்துவதாக வேண்டிக் கொள்கின்றனர்.

பட்டெடுத்தல்

இறைவன் தங்கள் குறைகளைத் தீர்த்தால் பட்டெடுத்துப் போர்த்துவதாக நேர்கின்றனர். தங்கள் செயல்கள் நிறைவேறினால் கோவில்களுக்குப் பட்டெடுத்துத் தங்கள் நேர்வை நிறைவு செய்கின்றனர். மேலும் எலுமிச்சம்பழ மாலைகளைச் சார்த்தியும் நேர்வை நிறைவு செய்கின்றனர்.

Koviloor Digital Library

கரும்புத் தொட்டிலிடல்

இருகரும்பின் நடுவில் வெள்ளைத் துணிகட்டி அதில் குழந்தைகளை இட்டெடுத்தல் ஆகும். சிறு குழந்தைகளுக்கு நோய் ஏற்படும் காலத்து அதை நீக்கினால் கரும்புத் தொட்டிலிடுகிறேன் என வேண்டிக் கொள்கின்றனர் பின் சிவராத்திரி விழாவன்று அந்நேர்வை நிறைவு செய்கின்றனர். இந்நேர்ச்சையும் தொடர்ந்து நேர்ந்து மக்கள் நிறைவேற்றி விடுவதைக் காணமுடிகின்றது இது தவிர ஆடு, கோழி வெட்டுதல் போன்ற நேர்த்திக்கடன்களும் உண்டு.

எனவே கம்பளத்து நயக்கர் தொடர்ந்து பொதுவழிபாடு மற்றும் சிறப்பு வழிபாட்டுக்களை நிகழ்த்தி வருவதைக் காணலாம். சக்கம்மாளைச் சிறப்புத் தெய்வமாக வணங்குவதோடு, அய்யனார், பாவம்மாள், அக்கம்மாள், காளியம்மாள், மொட்டத் தாத்தா போன்ற பிறதெய்வங்களையும் சிறப்பாக வழிபட்டு வருவதைக் காண முடிகின்றது. கார்த்திகைச் சிவராத்திரி திருவிழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுவதோடு இறைவன் மீது உள்ள பற்றினாலும் நம்பிக்கையாலும் பலவகை நேர்ச்சைகளையும் நேர்ந்து அவற்றை முறையாகச் செலுத்தி வழிபடுவதையும் காணலாம்.

குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம், தொகுதி, 6, ப. 451.
2. கே. பாலசுப்பிரமணியம், நலம் தரும் தமிழகத் திருக்கோ-யில்கள், ப. II
3. இரா. சீனிவாசன், சக்திவழிபாடு, பக்.2-3
4. தி.சா.ராசு. பாரதி ஒரு வாழ்வுநெறி, ப.32
5. .... P.662
6. தகவல் : ச. முங்கரசாமி, க. பாறைப்பட்டி
7. தகவல் : வெடிமுத்துநாயக்கர், க. பாறைப்பட்டி
8. தகவல் : மு. முத்தையா நாயக்கர், க. பாறைப்பட்டி
9. தகவல் : நி. சுப்பையா, ஜமீன் கல்லம நாயக்கர்பட்டி
10. தகவல் : வெடிமுத்துநாயக்கர், ஜமீன் கல்லம நாயக்கர்பட்டி
11. தகவல் : ச. பெத்தையா நாயக்கர், ஜமீன் கல்லம நாயக்கர்பட்டி
12. தகவல் : ச. முத்தாலம்மாள், கோதைநாச்சியார் புரம்

Koviloor Digital Library

13. தகவல் : சின்னப்ப நாயக்கர், கோதைநாச்சியார் புரம்
14. தகவல் : முனியாண்டிநாயக்கர், கோதைநாச்சியார் புரம்
15. எட்கர் தர்ஸ்டன், தென்னிந்திய மானிடஇனஇயல், பக், 103–104
16. தகவல் : புல்லம்மாள், கோதைநாச்சியார் புரம்
17. கண்ணதாசன், இறைவனின் நீதி மன்றம், ப.5
18. தகவல் : ச. சக்கையா, க. பாறைப்பட்டி
19. தகவல் : கு. சுப்பையர், க. பாறைப்பட்டி
20. தகவல் : வீரசக்கம்மாள், க. பாறைப்பட்டி

Koviloor Digital Library

இரவுசேரி அருள்மிகு ஆதீனமிளகி ஐயனார் பத்திரகாளியம்மன் வரலாறும் வழிபாடும்

முனைவர் பா. தியாகராஜன்,
முதுகலைத் தமிழாசிரியர், 25-32, சுப்பிரமணியபுரம்,
தேவகோட்டை.

முன்னுரை

தமிழகக் கோயில்கலை வரலாற்றில் சிறுதெய்வ வழிபாட்டு மரபு, நாட்டுப்புறச் சமயத்தையும், நாட்டுப்புற வாழ்வியலையும் அடிப்படை அலகாகக் கொண்டு எழுந்ததாகும். பொதுவாகச் சிறுதெய்வங்கள் பல்வேறு படிநிலைகளைப் பெற்று வளர்ச்சி பெறுவது கண்கூடு. அவ்வகையில் இரவுசேரி அருள்மிகு ஆதீனமிளகிஐயனார் பத்திரகாளியம்மன் தோற்ற வரலாற்றினையும் வழிபாட்டினையும் விளக்குவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

திருக்கோயில் அமைவிடம்

சிவகங்கை மாவட்டத்திலுள்ள தேவகோட்டை என்னும் ஊரின் கிழக்கே ஒருகிலோ மீட்டர் தூரமுள்ள சாலையில் சென்றால் இத்திருக்கோயிலை அடையலாம். இந்த இரவுசேரிக் கிராமம் தேவகோட்டையில் ஒருபகுதியாக விளங்குகிறது இரவுசேரி, கீழக்குடியிருப்பு, தேவகோட்டையின் கிழக்குப் பகுதிகள் போன்றவை பெருங்காடாக விளங்கியது. இதற்கு கள்ளன் புறம்போக்குக் காடு என்ற பெயர் இருந்து வந்துள்ளது. இக்காட்டினைத் திருத்தியே இன்று தேவகோட்டை நகரமாக மாறியுள்ளது. இவ்வூரில் அமைந்திருக்கும் இரவுசேரி அருள்மிகு ஆதீனமிளகி ஐயனனார் பத்திரகாளியம்மன் திருக்கோயிலின் நாற்புறமும் மேற்குப்புறம் மந்திர மூர்த்தி விநாயகர், மும்முடி நாதர் கோயில்களும் வடக்கே யோகீசுவரர், கூத்தாடிப் பெரிய நாயகி, குருநாதன் காளிகோயில்களும் கிழக்கே நல்லாங்குடி வேப்புடைய ஐயனார் கோயிலும் தெற்குப் புறம் கீழக்குடி-யிருப்பு கோட்டையம்மன் கோயிலம் அமைந்து அரண்களாகத் திகழ்ந்து காணப்படுகின்றது.

Koviloor Digital Library

ஊரும் பேரும்

இரவு சேரி என வழங்கப்பெற்று வரும் இவ்வூரின் பெயர்பற்றிச் செவிவழிச் செய்தி ஒன்று கூறப்படுன்றது. இவ்வூரின் பெயர்க்காரணம் இராமாயணத்தடன் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது. இராவணன் சீதையை இலங்கைக்குக் கடத்திச் செல்லும்போது இவ்வழியாகச் சென்றதாகவும், அதனைக் கண்ட சடாயு சீதையை மீட்கும் பொருட்டே இராவணனுடன் போரிட்டதாகவும் அவ்வாறு போரிடும் போது இராவணனால் சடாயுவின் இருபுறமும் உள்ள இறகுகள் வெட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு சடாயுவின் இறகுகள் வெட்டப்பட்டு விழுந்த இடம் இறகுசேரி எனப்பட்டது. அதன்படியே இன்றும் இவ்வூர் இரவுசேரி என்ற பெயராலேயே வழங்கப்பெற்று வருகிறது.

ஐயனார் பெயர்க்காரணம்

ஐயனார் என்ற சொல்லைத் தொல்காப்பியம் ஐயர் என்று குறிப்பிடுவதனை,

> **பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
> **ஐயர் யாத்தனர் கரணம் என்ப** (தொல். 1091)

எனக் கூறுகிறது. ஐயர் என்பதற்குத் தலைவன், தமையன்மார் என்பது பொருள். குறிஞ்சி நிலக்கடவுளாக முருகன் விளங்குதலின் முருகனை ஐயன் என்று வணங்குவர். மேலும், ஐயன், ஐயர், ஐயை முதலிய சொற்கள் தலைமைப் பொருட்பட உருவாயின. இவ்வாறு காலப்போக்கில் தாம் காவற்கடவுளும் ஐயனார் என்று அழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனலாம்.

ஆதீனம் + மிளகி = ஆதீனமிளகி. ஆதீனம் என்பதற்கு உரிமை என்று பொருள். மிளகி என்பதற்கு மிளகு + மிளகுச் சம்பா என்று பொருள். முன்பு இவ்வூர் வழியாக நகரத்தார்கள் வியாபாரத்திற்காக மிளகு, உப்புமூட்டைகளை வண்டியில் ஏற்றிச் சென்றனர். அப்பொழுது திருடர்கள் பயத்தால் ஐயனாரை வேண்டி உப்பு, மிளகு இரண்டினையும் காணிக்கையாக வழங்கினர். இதனால் ஏராளமான மிளகு சேர்ந்தது. மிளகுக்கு உரிமையுடையவர் என்னும் பொருளில் இவ்விறைவனுக்கு

Koviloor Digital Library

ஆதீனமிளகி ஐயனார் என்ற பெயரும் வழங்கப்பெற்றது. மேலும், இத்திருக்கோயிலில் மூலவராகிய ஆதீனமிளகி ஐயனாரைத் தொடக்ககாலத்தில் திருக்கோயிலின் வடக்குப் புறத்தில் உள்ள குளத்தின்கரையில் வைத்து மக்கள் வழிபட்டு வந்தனர். பிறகு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தற்போதுள்ள இடத்தில் திருக்கோயில் கட்டப்பட்டது.

பத்திரகாளியம்மன் பெயர்க்காரணம்

அம்மனின் பெயர் பத்திரகாளி. "துருவாச முனிவரால் கொடுக்கப்பட்ட சாபத்தால் மடலோலை என்ற பெண்ணுக்கு இரண்டு அசுரக் குழந்தைகள் பிறந்தன. அக்குழந்தைகளை அம்பரன், அம்கண் என்று பெயரிட்டு அழைத்தனர். இவர்கள் சுக்கிரலியம் என்னும் அசுரக் குலக்குருவிடம் கல்வி கற்று மிதமிஞ் சிய சக்தியினையும் பலத்தையும் பெற்றனர். இந்தச் சக்தியையும் வலிமையையும் வைத்து இவ்வசுர குமாரர்கள் வையகத்தில் வாழும் மக்களுக்குத் துன்பம் விளைவித்தனர். தேவர்களின் மனைவிகளுக்குக் கூடத் தொல்லை கொடுத்தனர். அவர்களது தொல்லைகளுக்கு அளவில்லாமல் போகவே தேவர்கள் சிவனிடம் முறையிட்டார்கள். சக்திகளிலேயே அதிபலம் பொருந்திய சக்தியான காளி அவதாரத்தை அன்னை பராசக்தி எடுக்க அவருக்குத் துணையாகத் திருமாலும் சென்றார். திருமால் தன்னை ஒரு வயோதிகப் பிராமணனாகவும், காளி தன்னை ஓர் அழகிய இளம்பெண்ணாகவும் மாற்றிக் கொண்டு அசுர சகோதர்கள் வாழும் இடத்தை அடைந்தனர். அழகிய இளம்பெண்ணைக் கண்ட அசுர சகோதரர்கள் இருவருமே அவளை விரும்பி மணம்கேட்டு வயோதிக அந்தணரை அணுகினர். அந்தணரோ இருவருக்கு ஒரு பெண்ணை மணம் செய்து கொடுக்கக் கூடாது என்றும் இருவரில் யார் பலசாலியோ அவர்களுக்குத் தன் பெண்ணை மணம் செய்விப்பதாகவும் கூறினார். உடனே, இரு அசுர சகோதர்களும் தங்களுக்குள் சண்டையிட்டு இளைய சகோதரன் அம்பனை மூத்தவன் கொன்று விட்டான். மூத்த சகோதரன் அந்தணரை அணுகித் தான் வலிமையுடைவன் என்று கூறிப் பெண்ணைக் கேட்க, உடனே அழகிய இளம் பெண்ணான காளி பத்திரகாளியாக மாறி அம்பரனோடு மோதினாள்.

Koviloor Digital Library

உக்கிரமாக மாறி அம்பரனோடு போரிட்டதால் பத்திரகாளி என்று அழைக்கப்பெற்றாள். அவ்வாறு இரவுசேரியில் அன்னை பராசக்தியே இங்கு தீமைகளை அழிப்பதற்காக காட்சி தருகிறாள்.

திருவுருவமைதி

1. ஐயனார்

மூலவராகிய ஐயனார் பூரணி, புட்கலையுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஐயனார், பூரணி, புட்கலை ஆகிய மூவரும் ஒரே பீடத்தின்மீது எழுந்தருளியுள்ளனர். ஐயனார் இடது காலை மடக்கி, வலதுகாலைத் தொங்கவிட்டவாறு காட்சி தருகிறார். ஐயனாரில் வலது கையில் சாட்டையும், இடதுகை முழங்காலின்மீது வைத்தபடியும் உள்ளது. ஐயனாருக்கு வலப்புறம் பூரணியும், இடப்புறம் புட்கலையும் வீற்றிருக்கின்றனர். பூரணி இடது காலை மடக்கி வலது காலைத் தொங்க விட்டு அமர்ந்த கோலத்தில் உள்ளார். இவர்தம் இடது கையில் தாமரை மலரும் வலது கை தொங்கியவாறும் அமைந்துள்ளது. புட்கலை வலது காலை மடக்கி இடது காலைத் தொங்கவிட்டவாறு உள்ளார். புட்கலையின் வலதுகை தாமரை மலரை ஏந்தியவாறும் இடது கை இடது முழங்காலின்மீது வைத்தவாறும் உள்ளன.

2.. பத்திரகாளியம்மன்

தெய்வங்களின் குணநலன்களுக்கேற்ப அவற்றின் உருவ அமைப்பும் இருக்கும். கொடூரத் தெய்வங்களுள் முதன்மையானது காளி. இங்குள்ள காளியானவள் சதுர வடிவப் பீடத்தின் மீது வடக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் உள்ளாள். வடதுகால் குத்திட்டு, இடது கால் கீழே அசுரனை மிதித்தவாறு அமைந்துள்ளது. பற்கள் நீண்டு நாக்கை வெளியே தொங்கவிட்டுக் கோபத் தோற்றத்துடன் அச்சம்தரும் காளி உருவெடுத்திருக்கிறாள். அவ்வாறு இத்திருக்கோயிலிலுள்ள பத்திரகாளியம்மனும் எட்டுக் கரங்களுடன் காட்சியளிக்கிறாள். எட்டுக் கைகளிலும் முறையே கத்தி, கேடயம், வில், அம்பு, அங்குசம், சூலம், கபாலம், மணி ஆகியவற்றை ஏந்தியிருக்கிறாள். காளியின் கையிலுள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறியீட்டை உணர்த்துகின்றன. தலையில் சுடர்மகுடம் கொண்டு வீற்றிருக்கிறாள்.

Koviloor Digital Library

3.பரிவார தெய்வங்கள்

இத்திருக்கோயிலின் பரிவார தெய்வங்களாக விநாயகர், தண்டாயுதபாணி, மோகினியம்மன், பைரவர், பெரிய கருப்பர், பால்பழக்கருப்பர், ஊமைக்கருப்பர், உளிவீரன் போன்ற பரிவார தெய்வங்கள் இக்கோயிலில் அமைந்து காணப்படுகின்றன. இத்திருக்கோயில் திருவுருவ அமைப்பாக, கருவறை இடைநாடி, அர்த்த மண்டபம், முன்மண்டபம், சிறிய யானை, பலிபீடம், கிணறு, உக்கிரானம், மடைப்பள்ளி, சேமங்குதிரை போன்றவை இத்திருக்கோயிலின் அமைப்புக்கு வலுச்சேர்க்கின்றன. திருக்கோ-யிலின் திருச்சுற்றில் தெற்குப் பகுதியில் தலவிருட்சமாக விலா மரம் அமைந்துள்ளது.

பால்பழக் கருப்பர்

இக்கோயிலின் சிறப்பாய் வேறு எங்கும் இல்லாத கருப்பர் இங்கு அமைந்துள்ளார். "பொதுவாக கருப்பர் என்றாலே உயிர்ப்பலி இருக்கும். ஆனால், இக்கருப்பருக்குப் பலிப்பொருளாக பால்பழம் மட்டுமே படைக்கப்படுகிறது. எனவே இக்கருப்பரைப் பால்பழக்கருப்பர் என மக்கள் போற்றி வணங்குகின்றனர். இவர், வடக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். இவருக்கு இரண்டு கரங்கள். வலக்கரத்தில் அரிவாளும் இடக்கரத்தில் கீழூன்றிய கதாயுதத்தைப் பற்றியவாறும் உள்ளது. தலையில் சடாமகுடம் உள்ளது. முறுக்கு மீசையும் காதில் குண்டலங்களும் கூடிக் காணப்படுகின்றன. கழுத்திலே அணிகலன்கள் அணிசெய்கின்றன. முன்கையில் கடகமும், தோளில் தோள்வளையும் சிறந்து விளங்குகின்றன.

கோயில் வழிபாடு

இரவுசேரி ஆதீனமிளகி ஐயனார் சிறுதெய்வக் கோயில் நாள்வழிபாடு வாரவழிபாடு, சிறப்பு வழிபாடு ஆகிய முறையில் விளங்குகிறது. அவ்வகையில் சாதாரண நாட்களில் ஒருகாலப் பூசையும் விழாக்காலங்களில் இரண்டு காலப்பூசையும் நடைபெறுகின்றன.

ஆடிப்பூரம், தீபாவளி, திருக்கார்த்திகை, மார்கழித் திருப்பள்ளியெழுச்சி, தைப்பொங்கல், மகாசிவராத்திரி போன்ற

Koviloor Digital Library

நாட்களில் சிறப்பு வழிபாடு பின்பற்றப்பட்டு வருகின்றது. விழாக்களில் பலியிடுதல் சூளாட்டுப் பூசை, காவடியெடுத்தல், தொட்டில் கட்டுதல், பேய், பிசாசுகளை விரட்டுதல் போன்றவை கோயில் விழாக்களில் நிகழ்த்தப் பெறும் முக்கிய நிகழ்வாகும்.

முடிவுரை

ஊர்கள்தோறும் விளங்கும் சிறுதெய்வங்கள் - அவற்றிற்கான வழிபாட்டு முறைகள் மிகவும் தொன்மையான பின்புலத்தைக் கொண்டுள்ளன. அவற்றுக்குப் பின்னால் ஒரு கதையும் தத்துவமும் அடங்கியுள்ளது. அவ்வகையில் இரவு சேரி ஐயனார் கதையும், பத்திரகாளியம்மனும் இக்கிராமத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். இந்தக் கோயிலின் அமைப்பு முறையும், திருவிழாக்களும் நாள் உற்சவங்களும் இன்றும் அவ்வூருக்குரிய மரபோடு கொண்டாடப்பட்டு வருகின்றன.

Koviloor Digital Library

கம்போடியாவில் தமிழர் வழிபாடு

முனைவர் வெ திருவேணி
உதவிப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம். காரைக்குடி - 630 003

பண்டைத் தமிழ் மன்னர்கள் தங்கள் தாய்நாடுகள் மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் உரைக்கின்றன. அயல்நாடுகளில் சிங்கப்பூர், மலேசியா, பர்மா, மொரீசியஸ் போன்ற ஊர்கள் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளாக அமைகின்றன. அங்கு அவர்கள் குடியுரிமை பெற்று நிரந்தர மாகவும், சிலர் பணி நிமித்தமாகவும் வேலை செய்து வருகின்றனர். அவர்கள் நாகரிகம், பண்பாடு கலைகள், தொழில்கள் எனத் தாங்கள் சென்ற நாட்டிலும் பின்பற்றியுள்ளனர். அவ்வாறு பின்பற்றிய பண்பாடுகளில் ஒன்று கோயில் பண்பாடு. தமிழ்நாட்டில் இருப்பதைப் போன்ற கோயிலை அங்கும் வடிவமைத்து இன்றளவும் வழிபட்டு வருகின்றனர். அவ்வகையில் கம்போடியாவில் தமிழர் உருவாக்கிய கோயில்களைப் பற்றியும், அக்கோயிலில் நடைபெறும் வழிபாடுகளையும் பற்றிக் காண்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

கம்போடியா அமைவிடம்

கம்போடியாவின் எல்லைகளாக மேற்கிலும் வட மேற்கிலும் தாய்லாந்து நாடும், வடகிழக்கில் லாவோஸ் நாடும், கிழக்கு மற்றும் தென்கிழக்கில் வியட்நாம் நாடும், தெற்கில் தாய்லாந்து வளைகுடாவும் அமைந்துள்ளன. கம்போடியாவின் முக்கியப் புவியியல் கூறுகளாக திகழ்வன இந்நாட்டில் பாயும் மீக்கோங் ஆறும், தொன்லே சாப் ஏரியும் ஆகும்.

கம்போடியா பெயர்க்காரணம்

பிரதேஹ் கம்பூச்சியா என்பதுதான் பூர்வீகப் பெயர். வடமொழி பிரதேஷ் கம்போடிய மொழியில் பிரதேஹ் என்கிறார்கள். அதாவது கம்போடிய நாடு என்பதாகும். பிரெஞ்சுக் காரர்கள்

Koviloor Digital Library

பாம்போஜ் (Combodge) என்றும், ஜெர்மானியர் 'Kampuchea' என்றும் அழைத்தனர். கம்போடியா என்ற பெயர் கீமர் வம்சத்தைச் சார்ந்த கம்புஜா (Kampuja –Kamboja-Kambuja-desa) என்ற பழங்கால மன்னனின் பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. 'கம்பு தேசா' என்ற பழங்குடியினரும் அவர்களது தொன்மைப் படைப்பாளியான 'கம்பு சுயம்புவ்' என்பவரின் பெயர் திரிந்து கம்போச்சியர் என்று மாறியிருக்கலாம் என்ற கம்போடிய வரலாற்று ஆய்வாளர்கள் 'இந்திய வம்சா வழியினர்' என்பதை ஒப்புக்கொள்கிறார்.

ஆனால் இங்கு வாழ்கின்ற மக்கள் 'ஸ்ரோக் கீமர்' அதாவது 'கீமர் நாடு' என அழைப்பதையே விரும்புகிறார்கள். 'பிரதேஷ்' என்ற வார்த்தைக்கு ஈடான வார்த்தை 'ஸ்ரோக்'. எனவே கீமர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பெருமையாகப் பறை சாற்றிக் கொள்கின்றனர்.

வழிபாடு

கம்போடியாவில், இந்தியாவிலிருந்து புகுந்த இந்து மதம் மன்னர்களையும் பிரபுக்களையும் மதகுருமார்களையும் தனது பிடிக்குள் வைத்திருந்தது. மக்களில் ஒரு பகுதியினர் பேய்வழிபாடு, விலங்கு வழிபாடு போன்றவற்றைச் செய்து கொண்டிருந்தனர். வேத வேள்வி வழிபாடு, திருவிழாக்களில் ஆடம்பரமாக நடந்தேறின. திருக்கயிலையில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதைக் குறிக்கும் முதன்னான் சிவபெருமானை 'ஸ்ரீசிகர ஈஸ்வரன், ஸ்ரீகிரி ஈஸ்வரன்' என்றும் அழைத்தனர்.

சிவ வழிபாடு மட்டுமின்றி, திருமால் வழிபாடும் இணையான சிறப்பைப் பெற்றிருந்தது. கல்வெட்டுக் குறிப்புகளில் 'குணவர்மசாமி' - என்று திருமால் அழைக்கப்பட்டார். முக்தி, வைகுந்தம், ஊழ்வினை, பிரபத்தி ஆகியன பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. சிவனும் திருமாலும் சேர்ந்த சங்கர நாராயணன், சம்பு- விஷ்ணு, ஹரிஹரன் என்ற பல பெயர்களில் வழிபாடு நடந்தது. இந்தியாவில் ஐயனார் வழிபாடாகவும், ஹரிஹரன் வழிபாடாகவும் விளங்குகிறது. உமை, துர்க்கை, பகவதி, சதுர்புஜதேவி, இலக்குமி, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்களையும் கெமர்கள் வழிபட்டு வந்தனர்.

Koviloor Digital Library

ஆகம வழிபாடு

கம்போடியா சர்க்காரின் ஆட்சிப் பகுதியாகத் தாய்லாந்தின் பாதிப்பகுதி இருந்தபோது பஞ்சராத்திர விஷ்ணு ஆகம வழிபாடு - தாய்லாந்திற்குப் பரவியிருக்கிறது. விஷ்ணு ஆகம வழிபாடு - தாய்லாந்திற்குப் பரவியிருக்கிறது. விஷ்ணு உருவச் சிலைகள் கம்போடியாவில் கடைத்தது போன்ற உருவ ஒற்றுமையுடன், தாய்லாந்திலும் கிடைத்திருக்கிறது. அபயஹஸ்தா தோற்றத்தில் வைத்து வழிபடப்பட்ட விஷ்ணு சிலை கி.பி ஏழு எட்டாம் நூற்றாண்டுகளில் வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. பிரிருப் ஸ்டேல்லி கல்வெட்டில் ஒரு சமஸ்கிருதப் பாட்டு எழுதப்பட்டுள்ளது. பரசத்வராஜஸ்தமங்கம் அபியே நித்யன் நிவிஸ்தா' என்று தொடங்கும் ஸ்லோகமும், பிரசாத் சோக் போ கல்வெட்டில் நமஸ்கதுர் புஜங் கஸ்து என்று தொடங்கும் சுலோகமும், விஷ்ணுவை எங்கும் இருக்கும் தன்மையுடையவரென்றும், ஆதி புருசன் என்றும், சத்வம். ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் கொண்ட விஷ்ணுவும், லட்சுமியும் தான் மூல காரணங்கள் என்ற தந்துவத்தையும் போதிக்கிறது. விஷ்ணு நான்கு கைகளையுடைய கடவுள் என்றும் ஸ்தூல வாசுதேவர் என்றும் வியூக வாசுதேவர், சம்கர்சனர் என்றும், சதுர் பிரம்மன் என்றும் இறுதியில் பஞ்ச பிரம்மனாக விஷ்ணு குணங்களை உடையவர் என்வும் உடற் சார்பற்ற குணங்கள் பிறப்பெடுப்பதாக இந்தக் கல்வெட்டு கூறுகிறது.

பயோன் கோவிலில் சிவவழிபாடும் திருமால் வழிபாடும்

ஆங்கோர் தோமில் 'பயோன் கோவில்' மூன்று அடுக்குகளைக் கொண்ட பட்டையான விமானங்களை உடையதாகும். இதில் உள்ள தலைகள் சிவனுடையது எனவும் பிரம்மனுடையது எனவும் கருத்துகள் உள்ளன. இங்கு ஆடல்மகளிரின் அற்புதப் பாவனை வெளிப்படுத்தப்படுகிறது. இக்கோவிலில் புத்தாண்டுக் கேளிக்கை, அறுவடை நாள் விழாக்கொண்டாட்டம், கழைக்கூத்தாடி, வேடர்கள் வேட்டையாடும் காட்சி ஆகியன சிலைப் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பயோனில் உள்ள கோவிலில் புராண வரலாற்றை நினைவு படுத்தும் வகையில் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இராமன்

Koviloor Digital Library

மாயமானை விரட்டுவது, வாலி சுக்ரீவன் போர், சீதையின் அக்னிப் பிரவேசம், கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபெருமான் காமனை எரித்தல், பாற்கடலைக் கடைதல், அசுரர்கள், தேவர்கள் ஆகிய சிற்பங்கள் உயிர்த்துடிப்புடன் காணப்படுகின்றன.

சிவ வழிபாடு

'கம்பு சுயம்பு' என்ற முனிவர்தான் கீமர்களின் மூதாதையர் என்றும் அந்த முனிவருக்குச் சிவபெருமான் தேவர் உலகத்து மங்கை ஒருத்தியை மனைவியாக அளித்ததால் உருவான வம்சம் என்றும் பெருமை கொள்கிறார்கள். கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட், பயோன் ஆகிய கோவில்கள் தமிழ்நாட்டுக் கோவில்களின் ஒத்த வடிவத்தில் கட்டப்பட்டன. 'சிவநடராச வடிவம்' கம்போடியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்தே தென்னிந்தியரான தமிழர்கள் அந்தக் காலத்தில் குடியேறி விட்டனர் என்று 'நீலகண்ட சாஸ்திரி' அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கம்போடியாவில் பலவர்மன் காலத்தில் செதுக்கப்பட்ட சமஸ்கிருத கல்வெட்டில் 'சிவலிங்கம் அமைத்து திருப்பணி செய்தது குறிப்பிடப்படுகிறது. சாமபேதத்தினை நன்கு கற்ற வேத விற்பன்னர்கள் 'சோமவர்மன்' என்ற பெயரில் ராஜகுருக்களாக இருந்தனர். இவர்கள் இச்சிவலிங்கத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள சிவன் கோயில்களில் எவ்வாறு வழிபாடு நடைபெறுமோ அதைப் போன்ற வழிபாட்டை இங்கும் நிகழ்த்துகின்றனர்.

காம்போஜ நாட்டில் உள்ள கோவில்களில் தமிழ்நாட்டைப் போன்றே சடங்குகளும் சம்பிரதாயங்களும் நடத்தப்பட்டன. சிவபெருமானை 'ஸ்ரீசிகர ஈசுவரன்' என்றும், கோவில்கள் மேருமலையைப் போன்று உயரமுடையதாக இருக்கவேண்டும் என்றும் எண்ணினர்.

தேவார காலத்து சிவபெருமானின் அட்டமூர்த்தி வடிவம் காம்பூச்சிய மக்களால் வழிபடும் உருவமாயிற்று. 'சிவயக்ஞம்' என்ற யாகம் சிவபெருமானுக்கு நடத்தப்பட்டது.

காரைக்கால் அம்மையார் வழிபாடு

காரைக்கால் நகரில் தோன்றிய புனிதவதி என்ற பெயருடைய

Koviloor Digital Library

சைவத்துறவி. 63 நாயன்மார்களில் காலத்தால் முந்திய நகரத்தார் பெண்மணி ஆவார். கி.பி5ஆம் நூற்றாண்டின் பெண் தொண்டரான இவர் 'அற்புதத் திருவந்தாதி', 'திருவிரட்டை மணிமாலை' ஆகிய பக்தி இலக்கியங்களை இயற்றினார். கடல்கடந்து வாணிகம் செய்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும், நாவாய் சொந்தக்காரர்களும் காரைக்கால் அம்மையாரின் பேய் வடிவத்தை வழிபட்டனர். இவர்கள் அம்மையாரை 'காரைக்கால் பேய்' என்றழைத்துக் கொண்டார்கள். காம்பூச்சியாவிலும் பேய் வழிபாடு தொடர்ந்தது. காம்பூச்சியா சென்ற வணிகர்கள் தங்களுடன் குலதெய்வமான காரைக்காலம்மையாரின் சிலைகளை எடுத்துச் சென்றனர்.

கம்பூச்சியா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் உள்ள கோயில்களில் காரைக்காலம்மையாரின் சிலை கல்லிலும், செம்பிலும் செதுக்கப்பட்டு கோயில்களில் வைக்கப்பட்டன. சம்பாவில் போஸ்குலே என்னும் கோவிலில் அம்மையாரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. ஈசான வர்மன் காலத்திலும், சூரியவர்மனின் காலத்திலும் அம்மையாரின் சிலைகள் கோயில்களில் நிறுவப்பட்டதாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. 11ஆம் நூற்றாண்டு வரை அம்மையார் வழிபாடு நடந்ததற்கான அடையாளங்கள் தென்படுகின்றன.

மணிமேகலை வழிபாடு

கடல் வணிகன் வம்சத்தில் பிறந்த மணிமேகலையைக் கடல்வழி தெய்வமாக, மின்மேகலா' என்ற பெயரில் தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் வழிபட்டனர். இந்த வழிபாடுகள் வழக்கில் இருந்ததை டாக்டர்.பிலியேகசா குறிப்பிடுகின்றார்.

அகத்தியர் வழிபாடு

கி.பி ஏழாம் நூற்றாண்டில் தாய்லாந்திலும் கம்போடியாவிலும் அகத்தியர் வழிபாட்டு முறை வழக்கத்தில் இருந்தது

நாக வழிபாடு

கம்போடியாவில் நாக வழிபாடு செய்திருக்கின்றனர். இந்தியாவில் உள்ள திராவிடர்கள் இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் பரவி வாழ்ந்தார்கள் என்பதற்கு இன்னொரு

Koviloor Digital Library

அடையாளம் நாகவழிபாடு ஆகும். கெமர்களில் கலாச்சாரத்தில் ஒன்பது தலை நாகம் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. காம்பூச்சிய அரசு நாக கன்னிகைகளின் வழிவந்ததாகவே கருதுகின்றது. ஆகவே நாக வழிபாடு கம்போடியாவில் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது.

முடிவுரை

கம்போடியாவில்தமிழர்பரவியிருந்த பகுதிகளில்தெய்வங்களை வணங்குவதற்காகத் தமிழ்நாட்டில் அவர்கள் வணங்கிய தெய்வங்களையே வழிபட்டுள்ளமையை அறியமுடிகிறது. இதில் சிவவழிபாடு, விஷ்ணு வழிபாடு, காரைக்காலம்மையார் வழிபாடு, மணிமேகலை வழிபாடு, அகத்தியர் வழிபாடு, நாக வழிபாடு போன்றவை வழிபாட்டிற்குரிய தெய்வங்களாக இடம்பெறுகின்றன. இதில் நாக வழிபாடு மக்களால் அதிகம் வழிபடப்படுவதை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. தென்கிழக்காசிய நாடுகளில் தமிழர் பண்பாடு, க.த.திருநாவுக்கரசு
2. பல்லவர் வரலாறு – டாக்டர் மா.இராசமாணிக்கம், செல்லப்பா பதிப்பகம், மதுரை
3. தாய்லாந்தில் தமிழர் பண்பாட்டுக் கூறுகள், முனைவர் எஸ்.நாகராஜன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4. Brief History of Combodia – Jaya Varman VII, CGF Newspaper - 2011

Koviloor Digital Library

ஊட்டத்தூர் நடராஜர் கோயில் (சுத்தரத்தினேஸ்வரர்)

முனைவர் திருமதி. சு. நாகேஸ்வரி,
தமிழ்த்துறை விரிவுரையாளர்,
அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) புதுக்கோட்டை.

உடல் தூய்மைக்கு ஓடும் ஆற்று நீரில் நீராடினால் சிறப்பு. உள்ளத்தூய்மைக்கு இறை வழிபாடே சிறப்பு. நம் முன்னோர்கள் எந்தவொரு செயல்பாட்டையும், காரண காரியமின்றி செயல்படுத்தவும் இல்லை. காரணமில்லாமல் அக்காரியத்தை நடைமுறைக்கு கொண்டு வரவில்லை எனலாம். கோயில் வழிபாடு இன்றைய காலகட்டத்தில் பணம் பறிக்கும் வழிகளில் முன்னேறிக் கொண்டிருந்தாலும், தொன்று தொட்டு அவை மனிதனின் அகத்தை தூய்மை ஆக்கும் வழியாகவும், மன அமைதியை ஏற்படுத்தும் சிறப்பு பெற்ற இடமாகவும் விளங்குகிறது. நம் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு திருத்தலங்களும் ஏதேனும் ஒரு வகையில் சிறப்பையும், தனித்தன்மையும் பெற்று திகழ்கிறது.

அவ்விதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், ஊட்டத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள சுத்தரத்தினேஸ்வரர் திருக்கோயிலின் சிறப்பு, தனித்தன்மை, தலவரலாறு, காலம், பெயர் காரணம், கோயில் அமைப்பு ஆகியவற்றை பதிவு செய்யும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற வைப்புத்தலம் இந்த ஆலயம், தனிப்பாடல் என்ற இல்லாமல் மற்றொரு பாடலில் வைத்து பாடப் பெறுவது வைப்புத்தலம். ஆசியா கண்டத்திலேயே அபூர்வமாக கிடைக்கும் 'பஞ்சந்தன கல்லால்' ஆன பஞ்சந்தன நடராஜர் சிலையைக் கொண்ட சிறப்பு மிக்கத் தலம் ஆகும்.

இக்கோயில் கி.பி.7-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. மாமன்னர் இராஜராஜசோழர் காலத்தில் இக்கோயில் புனரமைக்கப்பட்டுக் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பிறகு அவரது மகன் இராஜேந்திரசோழன், மற்றும் பேரன் இராஜாதிராஜன் ஆகியோரால் இக்கோவிலுக்கு கொடை அளிக்கப்பட்டுள்ளன. 50 கல்வெட்டுகளில் சோழ மன்னர்களின் திருப்பணி பதிவுகள் செய்யப்பட்டு இக்கோயில் வளாக சுவர்களில் இடம் பெற்றுள்ளன.

தல வரலாறு

ஒரு காலத்தில் வில்வ மரங்கள் அடர்ந்து செழித்து வில்வ மரங்கள் நிறைந்த வனமாக விளங்கியிருக்கிறது ஊட்டத்தூர். இவ்வூருக்கு மேற்கே சோழீஸ்வரம் என்னும் கோயிலை அமைத்த மாமன்னர் இராஜராஜசோழன் அடிக்கடி அந்தக் கோயிலுக்குச் சென்று ஸ்ரீசோழீஸ்வரரைத் தரிசித்து வருவது வழக்கம். அவ்வாறு அடிக்கடி வரும் சமயத்தில் மன்னர் வருகைக்காக பாதையைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படும். அவ்வாறு மன்னர் செல்லும் பாதையில் உள்ள புல்லைச் செதுக்கி, இடையூறுகளை நீக்கிக் கொண்டிருந்தனர். பாதையைச் சரிசெய்யும் பணியில் மண்வெட்டியால் புல்லைச் செதுக்கிக் கொண்டிருக்கும்போது ஓரிடத்தில் எதிர்பாராதவிதமாக இரத்தம் பீறிட்டெழுந்தது. இச்செய்தி மன்னரிடம் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக விரைந்து வந்த இராஜஇராஜசோழன் அந்த இடத்தைச் சோதித்துப் பார்த்தபோது அங்கே காத்திருந்தது பேரின்ப அதிர்ச்சி. உச்சியில் இரத்தம் வழிய மண்ணிலிருந்து சுத்த மாணிக்கமாக (சுத்த ரத்தினம்) சூரியகோடி பிரகசாத்துடன் ஜொலித்தபடி சுயம்புவாக வெளிவந்தது லிங்கரூபம். அந்த சிவலிங்கத் திருமேனியை வெளியே பிரதிஷ்டை செய்து, மாமன்னர் இராஜஇராஜன் கட்டிய கோயில்தான் ஊட்டத்தூர் சுத்தரத்தினேஸ்வரர் திருக்கோயில் புல்லைச் செதுக்கும் போது மண் வெட்டியால் வெட்டுப்பட்டதால் மூலவர் சிவலிங்கத்தின் தலைப்பகுதியில் (முடியில்) மண்வெட்டி வடு இருப்பதால் கூறப்படுகிறது. சுத்தரத்தினேஸ்வரர் கருவறையில் நவரத்தினங்களில் ஒன்றான ரூபி கற்கள் பதிக்கப்பட்டுள்ளதால் மகா ஆரத்தி சமயத்தில் மிக ஜொலிப்பாக சுயம்பு லிங்கம் காட்சி அளிக்கிறது. பூமிக்குக் கீழே மண்ணில் புதையுண்டு இருந்த சுத்தரத்தினேஸ்வரர் சுயம்புவாக வெளிவந்த வரலாறு இதுவே ஆகும். ஸ்ரீசுத்தரத்தினேஸ்வரருக்கு

Koviloor Digital Library

மட்டுமல்லாமல் இங்கே இருக்கும் ஒவ்வோர் அற்புதத்துக்குப் பின்னும் ஒரு வரலாறு உள்ளது.

பெயர்க் காரணம்

சுத்த மாணிக்கமாக சுயும்பு லிங்கமாக வெளிவந்ததால் சுத்தரத்தினேஸ்வரர் என்ற திருநாமத்துடன் ஊட்டத்தூரில் வீற்றிருக்கிறார். திருமேனி முழுவதுமே ரத்தினமாக ஜொலிப்பதால் தூயமாமணி, மாசிலாமணி, துகுமாமணி போன்ற வேறு பல நாமங்களும் இவருக்கு உண்டு.

கோவில் அமைப்பு முறை

நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வரும் வைப்புத் தலக் கோவில்களில் ஊட்டத்தூர் சுத்தரத்தினேஸ்வரர் ஆலயமும் நன்றாகும். கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரத்துடன் ஆலயம் அமைந்துள்ளது. அடுத்துள்ள 2-வது நுழைவாயில் மேற்புறம் ரிஷிப வாகனத்தில் சிவன், பார்வதி, அருகில் நால்வர் இருபுறமும் விநாயகர், முருகன் ஆகியோர் காட்சியளிக்கின்றனர். 2-வது நுழைவாயில் கடந்து உள்ளே சென்றால் உருவத்தில் சற்றே பெரியதாக உள்ள நந்தியை தரிசிக்கலாம். கருவறை சுற்றுப் பிராகாரத்திற்குள் வலம் வரும்போது விநாயகப் பெருமான், தட்சணாமூர்த்தி, சூரியபகவான், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், அறுபத்துமூன்று நாயன்மார்கள், அதிகாரநந்தி, துர்க்கை, கஜலெட்சுமி, சரஸ்வதி, சிவகாமசுந்தரி, வீரபத்ரேஸ்வரர், காலபைரவர் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். தட்சிணாமூர்த்தி கல்லால மரத்தின் கீழ், முயலகன் காலடியில் கிடக்க அழகிய சிற்ப வடிவில் காட்சி அளிக்கிறார். இந்த சிலையை லேசாகத் தட்டிப் பார்த்தால் "ஓம்" என்ற ஓசை எழும்பும் பக்கத்தில் சற்றுப் பார்வையைச் சாய்த்து சுவாமியைப் பார்ப்பது போன்ற அமைப்புடன் சிவகாமசுந்தரி எழுந்தருளியுள்ளார். இதை அடுத்துள்ள மற்றொரு சந்நிதியில் தனிச் சபையில் நடராசரும், சிவகாமியும் எழுந்தருளியுள்ளனர். இந்தக் கோயிலில் உள்ள துர்க்கை கோரைப்பற்கள் வெளியில் தெரியுமாறு காட்சியளிக்கிறது. ஆலயத்தின் தீர்த்தமான பிரம்மதீர்த்தம் கிணறு வடிவில் ஆலயத்தின் உள்ளே இருக்கிறது.

Koviloor Digital Library

நூற்றுக்கால் மண்டபம் இக்கோவிலின் தனிச்சிறப்பை எடுத்துரைக்கிறது. இக்கோயிலில் சுத்தரத்தினேஸ்வரரை நோக்கி ஒரு நந்தி வீற்றிருக்கிறது. அதே நேரத்தில் மற்றொரு நந்தி ஆலய தீர்த்தமான பிரம்மதீர்த்தத்தை நோக்கியவாறு கிழக்கு முக நந்தி தேவராக அமைந்துள்ளது.

அகிலாண்டேஸ்வரி சன்னதி இரண்டாவது பிரகாரத்தில் சுத்தரத்தினேஸ்வரர் சன்னதிக்கு பின்புறம் இருக்கிறது. ஒரு திருக்கோயில் எவ்விதம் அமைய வேண்டும் எனப் புராதன நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளதோ அதன்படியே அமைந்துள்ளது. சுயம்புமூர்த்தியாக அருள்பாலிக்கும் சுத்தரத்தினேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் 12, 13, 14 ஆகிய மூன்று தேதிகளில் சூரியஒளி கர்ப்பகிரகத்தில் உள்ள மூலவர் மீது விழுமாறு காட்சியளிக்கிறது. சூரியகதிர்கள் மூலவர் மீது, நேரடியாகபடும்போது சூரிய பூசை நடத்துவது சிறப்புக்குரியதாகும். வைகாசி மாதம் விசாக திருவிழாவின்போதும் சூரியனின் கதிர்கள் சுத்தரத்தினேஸ்வரர் மீது 3 நிமிடங்கள் படுகின்றன.

இக்கோயிலில் வானளாவிய பெரிய ராஜகோபுரம் உள்ளது. இக்கோவிலில் உள்ள சுரங்கப்பாதை வழியே ஊரின் உள்ள மற்றொரு கோயிலான பெருமாள் கோயிலுக்கு பிரம்மதீர்த்தம் எடுத்து சென்றதாக வரலாறு கூறுகிறது. நான்கு புறமும் பெரிய மதில் சுவர் உள்ளது.

பிரம்மதீர்த்தம்

மகா மண்டபத்தைத் தாண்டி சன்னதியினுள் சென்றால் நோய்களைத் தீர்த்து ஆயுளை அதிகரிக்கச் செய்யும் சக்தி வாய்ந்த பிரம்மதீர்த்தம் உள்ளது. இப்பிரம்மதீர்த்தம் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டது. அதன் அருகே காட்சி அளிக்கிறார் நந்திப் பெருமாள்.

நந்தியாறு

மற்ற சிவ தலங்களில் இல்லாத சிறப்பாக இங்கு நந்திதேவர் கிழக்கு முகமாக காட்சியளிக்கிறார். கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சிந்து, துங்கப்பத்திரா ஆகிய நதிகளில் யார்

Koviloor Digital Library

பெரியவர் என்ற தகராறு ஏற்பட்டு இங்கு வந்து சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும்படி சிவபெருமான் நந்திதேவருக்கு கட்டளையிட்டார். இவ்விதம் சிவபெருமான் தீர்ப்பு கூறிய பிறகு நந்தி 7 நதிகளையும் விழுங்கிவிட்டு கிழக்கு நோக்கி படுத்திருந்ததாகவும், அப்போது கங்கை மட்டும் வெளியே வந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றன. அதுவே நந்தி ஆறு எனப் பெயர் பெற்று கொள்ளிடம் வரைப்பெருகிச் சென்றது. இவ்வூரின் வடக்குப் பகுதியில் இந்த நந்தியாறு கடலுடன் கலக்கிறது.

இறந்தவர்களின் அஸ்தியை இந்த நந்தி ஆற்றில் கரைத்தபோது அவை மலர்களாக மாறியது. காசித் திருத்தலத்தில்கூட அஸ்தியைக் கரைக்கும்போது அதிலுள்ள எலும்புகள் எலும்பாகவே காட்சித் தந்தன. ஆனால் ஊட்டத்தூர் நந்தி ஆற்றில் கரைத்த அஸ்திகள் மட்டும் மலர்களாக மலர்ந்தன. அதனால் காசியைவிட ஒரு குன்றுமணி அளவு ஊட்டத்தூர் நந்தியாறு உயர்ந்தது எனப் பெரியோர்கள் கூறுவர். எனவே "காசிக்கு வீசம் அதிகம்" எனப்படும் நந்தியாறு ஆகும்.

கட்டடக்கலை

மூலவருக்கு முன்னே இரண்டு நந்திகள் மூலவர் சந்நிதியில் பிரம்மதீர்த்தம் என்ற வற்றாத தீர்த்தக் கிணறு. ஆசியாவிலேயே இங்கே மட்டுமே காணப்படும் பஞ்சநதன நடராஜர். அவரையே பார்த்தபடி ஒயிலாகச் சாய்ந்திருக்கும் சிவகாமி அம்மன்.

கொடிமரத்துக்கு அருகே மேலே விதானததில் செதுக்கப்பட்டுள்ள 27 நட்சத்திரங்கள், 12 ராசிகள் மற்றும் 9 நவக்கிரகங்கள், 15 திதிகள், தத்ருபமாக வடிவமைக்கப்பட்டுள்ள "காசிக்கு வீசம் அதிகம்" எனப்படும் நந்தியாறு எனக் இத்தலத்தில் உள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் தனிச்சிறப்பை பெற்றுள்ளது.

பஞ்சநதன நடராஜர்

திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற இந்த ஆலயம் ஆசிய கண்டத்திலேயே அபூர்வமாக கிடைக்கும் பஞ்சநதன கல்லால் ஆன பஞ்சநதன நடராஜர் சிலையைக் கொண்ட சிறப்பு

Koviloor Digital Library

மிக்கதாகும். பஞ்சநதனக்கல் எனும் அரிய வகைக் கல்லால் செய்யப்பட்ட எட்டுஅடி உயர நடராஜர் பெருமாள் சிலை வழிபாட்டில் உள்ளது.

பஞ்சநதனக் கல்லால் உருவாக்க்பபட்டதால இந்நடராஜர், பஞ்சநதன நடராஜர் என அழைக்கப்படுகிறார்.

பஞ்சநதன நடராஜர்

ஆசியாவிலேயே மிகவும் அரிதான பஞ்சநதன கல்லால் செய்யப்பட்ட நடராஜர் திருமேனி. இந்த கற்கள் சூரியனில் இருந்து வெளிவரும் ஆரோக்கிய கதிர்வீச்சினை சேமித்து வைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையன. இந்த வகை கற்சிலை தற்போது எங்குமே கிடையாது என்கிற தகவல் கோயில் குருக்கள் மூலம தெரியவந்தது. சிறுநீரகம் மற்றும் சிறுநீரக கல் தொடர்பான நோய்களுக்கு இந்த நடராஜர் மருந்தாக திகழ்கிறார். சுமார் ஒரு கிலோ வெட்டி வேரினை 48 துண்டுகளாக எடுத்துக் கொண்டு அவற்றை ஒரு மாலையாக கட்டி இந்த நடராஜருக்குச் சாற்றி அர்ச்சித்து பின்னர் அந்த 48 துண்டுகளை நாளொன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் (48 நாள் என்பது ஒரு மண்டலம் எந்த ஒரு நாட்டுமருந்தினையும் நோய்க்கு மருந்தாக எடுக்கும்போது 48 நாட்கள் தொடர்ந்து உண்டுவர கண்டிப்பாக பலன் கிடைக்கும் 48 துண்டு, 48 நாட்கள் என்று கூறியிருக்கிறார்கள்) ஒரு கோப்பை நீரில் இரவு ஊற வைத்து அதிகாலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள நோய் தீர்வது இன்றும் நடைபெறும் அதிசயமாக உள்ளது.

பஞ்சநதனக் கல்

பஞ்சநதனக் கல் என்பது பார்ப்பதற்கு வழக்கமான கருங்கல்லைப் போன்ற தோற்றம் கொண்டதுதான். எனினும் சாதருணங்களில் கருநீலமாகவும், கரும்பச்சை வண்ணத்திலும் காட்சியளிக்கும். பலகோடி சூரியன்களின் சக்தியை உள்ளடக்கியது. இந்தக் கல் என்பது சித்தர்கள் வாக்கு. அது எப்படி என்று கேட்கத் தோன்றும் கண்ணக்குத் தெரியாத ஒரு நுண்ணிய அளவுக்குள் எவ்வளவு மகத்தான அணுசக்தி புதைந்திருக்கிறது. அண்டத்தையே அழிக்கவல்ல ஆற்றல். ஓர் அளவுக்குள்

Koviloor Digital Library

இருக்கிறது என்பதையே நாம் அரைநூற்றாண்டக்கு முன்புதானே அறிந்தோம். அதுபோலத்தான் பஞ்சந்தனப் பாறையின் சக்தியும். இந்த வகைப் பாறைகள் அரிதினும் அரிதானவை. பத்து லட்சம் கோடி பாறைகள் உருவாகும்போது அவற்றுள் ஒன்றே ஒன்றுதான் பஞ்சநதனப் பாறையாக மாறும் வாய்ப்பு உண்டு என்றும் சித்தர்கள் விளக்கியுள்ளார்கள். சூரியனிலிருந்து பூமிக்கு வரும் கிரணங்களில் பலவகை உண்டு. அவை ஒவ்வொன்றும் ஒருவித ஆற்றலுடன் திகழும், பூமியில் வாழும் உயிர்கள் அந்தக் கதிர்களை கிரகித்து, தமக்குத் தேவையான சக்தியை அதிலிருந்து பெற்று உயிர் வாழ்கின்றன. அவ்வகையில் சூரியனிலிருந்து வெளிப்படும் சிற்பபேச கதிர்களை தனக்குள் ஈர்க்கிறது பஞ் சநதனப் பாறை பக்தியில் மூழ்கித் திளைத்து பரமாத்மாவைத் தரிசிப்பவருக்கு இதை உணரமுடியும்.

பஞ்சநதனப் பாறை

பஞ்சநதனப் பாறைகளால் பஞ்ச ஸ்வரங்களையும் உருவாக்க முடியும். இந்தப் பாறையைத் தட்டினால் இசையின் அடிநாதமான சப்த ஸ்வரங்களில் ஐந்து ஸ்வரங்களை கேட்க முடியும். பஞ்சநதனப் பாறையின் இன்னோர் அபூர்வமான சிறப்பு. மனிதச் கரங்களால் இதைச் செதுக்கி சிலைகள் செய்ய முடியாது. சித்தர்களின் ஆன்மீகச் சக்தியால், பஞ்சநதனப் பாறைகளில் இறைவனின் உருவங்கள் தானாகவே உருவாகும் என்று சொல்லப்படுகிறது. நவலிங்கப் பூசை எனப்படும் ஒன்பது விதமான பூசைகளை நிறைவு செய்த பின்னரே, பாறையில் பஞ்சநதன நடராஜர் உருவம் தோன்றும் என்றும், அதன் பிறகுதான் மானிடர்கள் தரிசனம் செய்யமுடியும் என்றும் கூறுவர். ஆகவேதான் பஞ்சநதனப் பாறையும் அதில் உருவான நடராஜமூர்த்தியின் தரிசனமும் சாந்நித்தியம் மிகுந்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்வகையில் ஊட்டத்தூரில் அருள்பாலிக்கும் ஆடல்வில்லாளின் விக்கிரகம், உளிஇல்லாமல் செதுக்கப்பட்டது என்கிறார்கள். இனப் போல பல கோ-யில்களில் அருள்பாலிக்கும் நந்தி உருவங்கள் தெய்வீக சக்தியால் உருவாக்கப்பட்டியிருக்கின்றன என்றாலும் பஞ்சநதனக் கல்லில் உருவான மூர்த்தி ஊட்டத்தூர் நடராஜர் மட்டுமே எனலாம்.

Koviloor Digital Library

பாறைகளின் சிறப்பு

ஆலிங்க நதனம், பஞ்சநதனம், சிங்கநதனம், யானை நதனம், யாழிநதனம் என்று 5 வகையான சிலாக்கற்கள் உள்ளன. இதில் பஞ்சநதனம் என்ற பாறை தெய்வீக ஒளிவீசும் என்பது சிற்பக்கலை வல்லுநரால் கூறப்பட்டுள்ளது.

நவரத்தின மோதிரம் அதன் ஒளிகளால் எப்படி நம் கவனத்தை ஈர்க்கிறதோ அதைப் போலத்தான் இந்தப் பஞ்சநதன கற்களும் சிறப்பு பெறுகின்றன. சூரிய பிரகாசத்தை தருகின்ற இந்தப் பஞ்சநதன பாறைகளால் இவ்வூர் நடராஜர் சிலை வடிவமைக்கப்பட்டு உள்ளது. நடராஜர் சிலைக்கு அருகில் இறைவி சிவகாமசுந்தரியின் உருவ அமைப்பு வணங்குவதற்கு மட்டுமில்லாமல் ரசனைக்குரியதாகவும் இருப்பது தனிச்சிறப்பாகும். அந்த அன்னை தன்முகத்தை வியந்து பஞ் சநதன நடராஜரைப் பார்ப்பதுபோல் காட்சியளிக்கிறார்.

ஆசிய கண்டத்திலேயே அபூர்வ நடராஜர் திருக்கோவிலான இந்தக் கோவில் திருச்சியில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பாடாலூரில் இருந்து புள்ளம்பாடி வழித்தடத்தில் இலால்குடி தாலுகா, ஊட்டத்தூர் கிராமத்தில் அமைந்துள்ளது இத்திருக்கோவில். மிகப்பழமையான இத்திருக்கோவிலுக்கு 96 ஆண்டுகள் கழித்து 2005-ல் கும்பாபிடேகம் நடைபெற்றுள்ளது.

(குறிப்பு: இணையதளத்தின் மூலம் செய்திகள் திரட்டப்பட்டது

Koviloor Digital Library

நாட்டுப்புற வழிபாட்டில் படையல் மரபுகள்

முனைவர் மு.பஞ்சவர்ணம்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்.

நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாட்டு மரபுகளில் படையல் மரபு குறிப்பிடத்தக்கதாகும். நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு நித்திய பூசைகள் நடைபெறுவதில்லை. நாட்டுப்புற மக்களின் வசதிக்கேற்ப மாதத்தில் ஏதாவது ஒரு கிழமையில் பூசை நடைபெறுகின்றது. சில கோயில்களில் வெள்ளி செவ்வாய் மட்டுமே படையல் செய்து வழிபடுவர். இவ்வகையில் நாட்டுப்புற வழிபாட்டில் படையல் மரபின் சிறப்பைப்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தெய்வ வழிபாட்டில் படையலிடுதல் சிறந்ததாகும். படை, படையல் என்பன பலி என்பதன் அடிப்படையில் வந்தன. படை என்பதற்குச் சிருஷ்டித்தல், செய்தல், நிவேதனம் செய், படைத்தல் எனப்பல பொருளுண்டு (தமிழ்லெக்சிகன் சென்னைப்பல்கலைக்கழகம் ப.244) என்று பொருளுரைக்கின்றது தமிழ்லெக்சிகன்.பலி என்ற சொல்லிற்கு தேவதை முதலியோருக்கு இடும் உணவு. சோறு, திருநீறு (தமிழ்லெக்சிகன் சென்னைப்பல்கலைக்கழகம் ப.2537) என்று விளக்கமளிப்பதன் மூலமும் படையல் குறித்த செய்திகள் வெளிப்படும். இதிலிருந்து விருப்பமான தெய்வத்திற்கோ, மனிதனுக்கோ விரும்பிய உணவுப்பொருட்களைப் படைத்தல் படையல் எனப்படும். இப்படையல் மூலம் அவ்வப்பகுதி மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் மரபுகளையும் அறிய இயலும்.

படையல் வகைகள்

நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் படைக்கப்படும் பொருட்கள் சைவப்பொருட்கள் என்றும் அசைவப் பொருட்கள் என்றும் இருவகைப்படும். சைவப்பொருட்களில் சில அனைத்துச் சிறு தெய்வங்களுக்கும் படைக்கப்பெறுகின்றன. சில தெய்வங்களுக்கு விருப்பமான பொருட்களை மட்டும் படைக்கின்றனர்.

Koviloor Digital Library

சைவப்படையல்

பொதுவாகக் கிராமப்புறத் தெய்வங்களுக்குத் தேங்காய், வழைப்பழம், எலுமிச்சம்பழம், மாலை, வெற்றிலை, பாக்கு, சூடம், சாம்பிராணி, பத்தி, சந்தனம், திருநீறு, குங்குமம் ஆகிய பொருட்களும், சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், புளியோதரை ஆகிய உணவு வகைகளும் படைக்கப்படுகின்றன. இவற்றுள் தேங்காய், வாழைப்பழம், மாலை, வெற்றிலை, பாக்கு, சூடம், சாம்பிராணி, பத்தி ஆகியவை பொதுவாக ஆண் பெண் இரு தெய்வங்களுக்கும் அருச்சனைப் பொருளாகப் படைக்கப்பெறுகின்றன.

பூப்பள்ளயம்

படையல் என்பதைக் கிராமிய வழக்கில் பள்ளயம் என்கின்றனர். பள்ளயம் என்பதற்கு உண்கலம் சிறுதெய்வங்களுக்குப் படைக்கும் நிவேதனம் என்று பொருளுரைக்கின்றது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி. தெய்வங்களுக்குப் படைக்கும் பொருட்களில் மலர்களைப் படைப்பதும் ஒருவகைப் படையல் முறையாகும். பெருந்தெய்வக் கோயில்களில் மலர்களைப் பலியாகக் கொடுப்பதும் உண்டு. இதனை மலர்ப்பலி என்பர். காரைக்குடி வட்டம் குருந்தம்பட்டு கிராமத்தில் உள்ள பெரியநாச்சியம்மன், காளியம்மன், சன்னாசி, அரசர், கருப்பர், பேச்சி, மறவர், சோனையா ஆகிய தெய்வங்களுக்கு மாதவிழாவின் பொழுது பூப்பள்ளயம் படைக்கின்றனர். இங்கு படையல் பள்ளயம் என்று வழங்கப்படுகின்றது. இக்கோயிலின் முன் உள்ள பூவரச மரத்தின் இலைகளைப் பறித்து அதன் மீது விபூதி குங்குமம் பல்வகை மலர்கள் ஆகியவற்றை எல்லாத் தெய்வங் களுக்கும் படைக்கின்றனர். இந்த தெய்வங்களுக்கு நாள்தோறும் மலர்மாலை அணிவிக்காத குறையைத் தீர்த்துக்கொள்ள இவ்வாறு படைக்கின்றனர்.

பாப்பள்ளயம்

மேற்கூறியவாறு பூவைப்படைத்து வழிபட்டபின் பாப்பள்ளயம் படைக்கின்றனர். இது பால், சர்க்கரை, பச்சரிசி ஆகிய மூன்றும் சேர்த்துப் பக்குவம் செய்யப்பெறுவதாகும். இப்படையல்

Koviloor Digital Library

பெரியநாச்சியம்மன்இ சன்னாசிஇ அரசன் ஆகிய மூன்று தெய்வங்களுக்கு மட்டும் படைக்கப்பெறுகின்றது. இதற்குக் காரணம் மூன்று தெய்வங்களும் சைவம் சார்ந்தவை என்கின்றனர். இங்கு பெரியநாச்சியம்மன் தலைமை தெய்வமாகும். இதனால் பாப்பள்ளயத்துடன்இ பச்சரிசி மாவால் செய்யப்பெற்ற களியும் அவியரிசி என்ற அரிசியையும் சேர்த்துப்படைக்கின்றனர். இவற்றை உட்குழிவுடைய பனையோலையால் செய்யப்பெற்ற பட்டைகளில் தனித்தனியாகப் படைக்கின்றனர்.

தளுகைப்பள்ளயம்

தளுகைப்பள்ளம் என்பது தலைவாழை இலையில் தெய்வத்திற்கு நிறைவான பொருட்கள் அனைத்தையும் படைப்பதாகும் இப்பள்ளயம் புரட்டாசி மாதத்தில் பெருந்தெய்வமான பெருமாளுக்குப் படைப்பதுண்டு. இது சைவப் படையலைச் சார்ந்ததாகும். இத்தளுகைப்பள்ளயம் சிறுதெய்வக் கோயிலான பெரியநாச்சியம்மன் கோயிலில் அசைவப்படையலாகப் படைக்கப்பெறுகின்றது. படையலுக்குப் பனையோலையைப் பயன்படுத்துகின்றனர். ஓலையை உட்குழிவுடைய பட்டையாகப் பிடிக்காது அப்படியே வைத்து அதன் மீது சமைக்கப்பெற்ற சோற்றையும் ஆட்டுக்கறியையும் வைத்துப்படைப்பதாகும். இங்குள்ள கருப்பருக்கும் காளியம்மனுக்கும் தளுகைப் பள்ளயம் படைக்கப்பெறுகின்றது. இதில் கருப்பருக்கு சோற்றுடன் அவருக்கென்று வெட்டப்பெற்ற கிடாயினது தொடையையும் கிடாய்க்கறியையும் வைத்துப் படைக்கின்றனர். காளியம்மனுக்குச் சோற்றுடன் மூன்று தொடையையும், கிடாய்க் கறியையும் வைத்துப் படைக்கின்றனர்.

சட்டிப்பள்ளயம்

மண்சட்டியில் சோற்றுடன் கறியையும் சேர்த்துப் படைப்பது சட்டிப்பள்ளயம் ஆகும். இக்கோயிலில் பேச்சியம்மனுக்குச் சோற்றுடன் ஒரு கோழிக்கறியைச் சட்டியில் வைத்துச் சட்டிப்பள்ளயம் கட்டுகின்றனர். இங்குள்ள மறவரும் சோணையனும் ஆண் தெய்வங்கள் என்பதால் சேவற் கறியை வைத்துச் சட்டிப் பள்ளயம் கட்டப்பெறுகின்றனர். பெண் தெய்வங்கள் சேவற் கறியை சாப்பிடமாட்டார். அதனால்இ

Koviloor Digital Library

அக்கறியை பெண்தெய்வங்களுக்குப் படைப்பதில்லை. இன்றும் ஸ்ரீரங்கத்துப் பெருமாளுக்குச் சட்டியில் பொங்கல் படைக்கப்பெறுகின்றனர். ஒரிசா மாநிலத்திலுள்ள பூரிக்கோ-யிலிலும் படையலுக்கு மண் சட்டியையே பயன்படுத்துகின்றனர். இங்கு ஒவ்வொரு சட்டிக்கும் ஒவ்வொரு பிரசாதம் என ஐம்பத்தாறு வகைப் பிரசாதம் படைக்கப்பெறுகின்றது. இவற்றையெல்லாம் கொண்டு நோக்கும்பொழுது பண்டுதொட்டே படையலுக்கு மண்சட்டியைச் சிறுதெய்வக் கோயில்களிலும் பெருந்தெய்வக் கோயில்களிலும் பயன்படுத்தியமை விளங்கும்.

பொங்கல் படையல்

பொதுவாகப் பெருந்தெய்வக் கோயில்களில் சர்க்கரைப் பொங்கல் படைக்கப்பெறுகின்றது சிறுதெய்வக் கோயில்களிலும் சர்க்கரைப் பொங்கலைப் படைக்கின்றனர். பெரியநாச்சியம்மன் கோயிலில் வாரந்தோறும் செவ்வாயக்கிழமை மட்டும் சர்க்கரைப் பொங்கல் படைக்கப்பெறுகின்றது. பெருந்தெய்வக் கோயில்களில் தனியாக மடைப்பள்ளி என்னும் சமயலறை அமைத்துச் சமைப்பர். ஆனால் இக்கோயில் முன் புறத்தில் அவரவரே சமைத்துக் கொடுத்துப் பூசாரியைப் படையல் போடச் சொல்கின்றனர். இங்கு பூசாரி படையலைப் பனையோலைப்பட்டையில் படைக்கும் போதும் படைத்தபின் தீபாராதனை காட்டும்போதும் மூக்கையும் வாயையும் துண்டால் கட்டிக்கொள்கின்றனர். இதற்குக் காரணம் படையல் பொருள்மீது தனக்கு இச்சை ஏற்பட்டு எச்சில் வந்து விழுந்து விடக்கூடாது என்பதாகும்.

தொகுப்புரை

படையல்சைவப்படையல்- அசைவப்படையல்என இருவகைப் படும். இவை சிறுதெய்வ வழிபாட்டில் இடம்பெறுகின்றன. இவ்வகையில் பெரியநாச்சியம்மன் கோயிலில் பூப்பள்ளயம், பாப்பள்ளயம் சைவம் சார்ந்த தெய்வங்களுக்கும், அசைவம் சார்ந்த தெய்வங்களுக்கும் படைக்கப்பெறுகின்றன. தளுகைப்பள்ளயமும், சட்டிப்பள்ளயமும் அசைவம் சார்ந்த தெய்வங்களுக்குப் பயன்படுத்தப்பெறுகின்றது. மண்சட்டியைப் பெருந்தெய்வக் கோயில்களில் படையலுக்குப் பயன்படுத்துவது மிகவும் குறைவு. சிறுதெய்வக் கோயில்களில் பயன்படுத்துவது பழமரபு சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Koviloor Digital Library

கீழ்மேல்குடி அருள்மிகு வழக்குடைய அய்யனார், சோனையா திருக்கோயில்

திருமிகு. அ.ரா.பானுப்பிரியா,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

முன்னுரை

பழந்தமிழர்கள் தொன்றுதொட்டே தெய்வ வழிபாடு கொண்டிருந்தனர். அது அவர்களின் இன்பம், துன்பம், கோபம், மகிழ்ச்சி முதலிய பல உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இவ்வுலகில் தன்னைவிடப் பெரிய, தன்னை இயக்கும் சக்தி ஒன்று உண்டு என நம்பினர். இதன் விளைவாக தெய்வவழிபாடு தோன்றியது. இவ்வழிபாடானது இயற்கை வழிபாடு, இறந்த முன்னோர் வழிபாடு, நடுகல் வழிபாடு என வளர்ச்சியடையலாயிற்று. பழந்தமிழரின் வரலாற்று முறைகளில் முதன்மையானது சிறுதெய்வ வழிபாடு ஆகும். இவ்வழிபாடு நாட்டுப்புற மக்களுக்குரியது. அவர்களின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குவது. இச்சிறுதெய்வ வழிபாட்டில் முதன்மையான தெய்வங்களாக விளங்குபவை அய்யனார், சோனையா, காளியம்மன், கருப்பர் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களாகும். இத்தகைய தெய்வங்கள் அமைந்துள்ள கோயில்களில் கீழ்மேல்குடி அருள்மிகு வழக்குடைய அய்யனார், சோனையா திருக்கோயில் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருக்கோயில் தோற்றமும், வளர்ச்சியும்

பொதுவாகப் பெருந்தெய்வக் கோயில்கள் ஊரின் மத்தியில் அமைதல் உண்டு. "சிறுதெய்வக் கோயில்கள் மரத்தின் கீழும், நீர் நிலைகளுடனும் தொடர்பு கொண்டிருக்கும். பெரும்பாலான அய்யனார் கோயில்கள் ஊருக்குப் புறமான நீர்நிலைக்கரைகளில், சோலைகளில் இருப்பதை இன்றும் காணலாம். ஊரிலுள்ள பொது இடங்களிலும், மந்தை வெளிகளிலும் சிறுதெய்வங்களுக்கான கோயில்களைக் காணலாம்" (நாட்டுப்புற வாழ்வியல், ப.44)

Koviloor Digital Library

என்பார் இரா.பாலசுப்பிரமணியன். இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் கீழ்மேல்குடி அய்யனார் சோனையா திருக்கோயில் ஊரின் புறத்தே சோலை சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது.

அமுதம் பங்கிட்ட மோகினியுடன் சிவன் சேர்ந்து பிறந்தவர் அய்யனார் என்றும், "தாருகாவனத்தில் முனிவர்களின் கர்வத்தை அடக்குவதற்காகத் திருமால் மோகினி உருவம் எடுத்தார் என்றும் அம்மோகினியுடன் சிவன் சேர்ந்து அரிகரபுத்திரனாகிய அய்யனார் பிறந்தார்" (அருஞ்சுனைகாத்த அய்யனார், ப.30) என்றும் அய்யனாரின் தோற்றம் பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன.

கீழ்மேல்குடியில் மக்களுக்குப் பிரச்சனை என்றால், சோலையில் உள்ள அய்யனாரிடம் சென்று தமது வழக்குகளை எடுத்துரைப்பர். அவர் பல வழக்குகளைத் தீர்த்து வைத்துள்ளார். காலப்போக்கில் அவரின் பெயர் வழக்குடைய அய்யனார் என ஆயிற்று. அவரைச் சில இனத்தவர்கள் குலதெய்வமாகக் கொண்டு பூசை செய்து வழிபட்டு வந்தனர்.

ஒருநாள் அவ்வூரில் வாழும் மக்களுக்குக் காலரா, அம்மை போன்ற நோய் பரவி ஊரே நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. அப்போது வழக்குடைய அய்யனாருக்கும் பூசை செய்ய யாரும் முன்வரவில்லை. அப்படியே விட்டுவிட்டால் தெய்வ சாபத்திற்கு ஆளாகிவிடும் என எண்ணி, இடைக்காட்டூர் என்னும் ஊருக்குச் சென்று அங்கு இருளப்பவேளார் என்பவரைப் பூசை செய்வதற்காக அழைத்து வந்தனர். அவர் பூசை செய்து அவ்வூர் மக்களுக்குத் திருநீறு பூசியவுடன், அம்மக்களின் நோய்கள் குணமாகின. தொடர்ந்து அவரே அவ்வூரில் தங்கிப் பூசை செய்து வந்தார். அதன்பின் மலையாளத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சோணையா திருவுருவம் ஒன்றும் வைத்து வழிபடப்பட்டது.

இருளப்ப வேளார் பரம்பரையைச் சார்ந்த ஒருவர் கோபம் கொண்டு மலையாளம் (கேரளா) சென்றுள்ளார். மலையாள பெண்கள் பில்லி, சூனியம் செய்வதில் வல்லவர்கள். அவர்கள் சோணையா என்பவரைக் கல்லாக வைத்துள்ளனர். அக்கல்லின்மீது

Koviloor Digital Library

அவர் சென்று படுத்துள்ளார். என்மீது ஏன் படுக்கின்றாய் என அக்கல் கேட்டவுடன், பயம் கொண்டு எழுந்துள்ளார். அவர் எழுந்தவுடன் அக்கல் மனித உருவில் மாறி தனது கதையைக் கூறியுள்ளது. உடனே அவர் நீ என்னோடு வா என சோணையாவை அழைத்து வந்து வழக்குடைய அய்யனார் கோயில் முன்பு தங்க வைத்துள்ளார்.

வழக்குடைய அய்யனார் கோயில் வழி, வழக்கமாகச் சிவகங்கை ராசா குதிரையில் செல்வார். சோணையா வந்த பிறகு அவர் எப்போதும் போல் இயல்பாகக் குதிரையில் சென்றுள்ளார். அக்குதிரை கோயில் வாசல் முன்பு கல்லாக மாறி படுத்துக்கொண்டது. சோணையா தெய்வத்தை அழைத்து வந்தவர் பூசை செய்து, குதிரைக்குத் திருநீறு பூசியவுடன் அக்குதிரை எழுந்து புறப்பட்டது. ராசாவுக்கு என்னவென்று புரியவில்லை. இக்கோயிலின் பெயர் என்ன என வினவிய போது பயந்து போய் பூசாரி வழக்குடைய அய்யனார் எனக் கூறுவதற்குப் பதில் விளக்குடைய அய்யனார் எனக் கூறியுள்ளார்.

பச்சைத் தண்ணீரில் விளக்கு எரியும் என பூசாரி கூறியுள்ளார். சரி ஒரு வாரம் கழித்து வருவேன் நீ பச்சைத் தண்ணீரில் விளக்கேற்றி காண்பிக்க வேண்டும். இல்லையெனில் உனது கண், மூக்கு அறுபடும் என கூறிச் சென்றுள்ளார். அவர் பயம் கொண்டு கள்ளிச்செடிக்குள் சென்று மறைந்து கொண்டார். சொன்ன நாள் ராசா வந்து, அவரிடம் நீ செய்து காண்பி எனக் கூறியுள்ளார். அதனைப் போல அவரும் குளத்தில் இருந்து நீரினை எடுத்து வந்து திரிபோட்டு பற்ற வைத்தவுடன் விளக்கு எரிந்துள்ளது. ஆச்சர்யம் கொண்ட ராசா அவ்விளக்குடன் அவரை ஓடச்செய்துள்ளார். அவர் எதுவரை ஓடினாரோ அதுவரை கோயிலுக்குரிய நிலமாகக் கொள்க எனக்கூறி தானமாகக் கொடுத்துள்ளார். பின்னர் சோணையாவுக்கும் திருவுருவம் வைத்து வழிபடப்பட்டது.

இத்திருக்கோயிலிருக்கும் அக்னி வீரபத்திரன், முத்துக்கருப்பர், முனிஸ்வரர், பேச்சியம்மன், பத்திரகாளியம்மன், பெரியகருப்பர், ராக்காயி அம்மன், சமயனசாமி, சப்பாணி, இருளப்பசாமி, இருளாயி போன்ற தெய்வங்கள் தொடக்கத்தில் இல்லை. அவ்வூரில் இருந்தவர்கள் காலப்போக்கில் தங்கள் குலதெய்வமான

Koviloor Digital Library

இத்தெய்வங்களை வைத்து வழிபடலாயினர். கோயில் விரிவடையக்கருதிய மக்கள் தங்கள் ஊர்களில் இருக்கும் பல்வேறு இனத்தார்களின் குலதெய்வங்களைப் பிரதிட்டை செய்தனர். சோணையா கோயிலின் காவல் தெய்வமாக வீற்றிருக்கிறார்.

ஒவ்வொரு கோயிலிலும் தொன்றுதொட்டு வருவது தலவிருட்சம் ஆகும். இக்கோயிலின் தலவிருட்சமாக அரசமரம் விளங்குகிறது. தீர்த்தமாகக் குளம் விளங்குகிறது. இத்திருக்கோயிலில் இரண்டுமுறை குடமுழுக்கு நிகழ்ந்துள்ளது. குடமுழுக்கு என்பது இறைத்திருவுருவங்களுக்கு ஆற்றலை அதிகப்படுத்துவதற்காகச் செய்யப்பெறும் கிரியை என்னும் சடங்கு ஆகும். கும்பாபிடேகம் செய்வதன் மூலம் இறைவனின் அருளாற்றல் புதுப்பிக்கப்பெற்று மக்களைப் போய்ச் சேருகிறது. திருக்கோயில்களில் குடமுழுக்கு, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயம் நிகழ்த்த வேண்டும். பண வசதிக்கு ஏற்பவும் நிகழ்த்தப்பெறும். இத்திருக்கோயிலில் 2015-ஆம் ஆண்டிற்குள் இரண்டுமுறை குடமுழுக்கு நிகழ்த்தப் பெற்றள்ளது. குதிரையின் கால் உடைந்து போயிற்று, அதனைச் சரி செய்து முதல் குடமுழுக்கு நிகழ்த்தப்பெற்றது.ஒட்டுக் கூரை அமைப்பினை மராமத்துப் பணிகள் செய்து இரண்டாம் குடமுழுக்கு நிகழ்த்தப்பெற்றது.

தெய்வத்திற்குப் பலியிடும் மரபு பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகிறது. பண்டைக் காலத்தில் மறிப்பலி கொடுத்தமையை,

"அணங்கறி காங்கிற் கோட்டாங் காட்டி,
வெறியென அனந்த உள்ளமொட மறியறுத்து" (நற்.ப.147)

என சங்கப்பாடல் சுட்டும். பல கோயில்களில் பலி கொடுக்கும் மரபு இன்றும் உள்ளது. அதில் சிறு தெய்வக் கோயில்கள் குறிப்பிடத்தக்கதாகும். இக்கோயிலில் திருச்சுற்றுக்கு உள்ளே உள்ள அய்யனார், அக்னிவீரபத்திரன், முத்துக்கருப்பர் சைவ சாமியாகவும், திருச்சுற்றுக்கு வெளியே உள்ள சோணையா, இருளப்பசாமி, இருளாயி, முனீஸ்வரர், பெரியகருப்பர் போன்றோர் அசைவ சாமியாகவும் உள்ளனர். வெளியேயுள்ள தெய்வத்திற்கு மட்டும் ஆடு, கோழி பலியிடும் மரபு உள்ளது.

Koviloor Digital Library

வழிபாடும் விழாக்களும்

வழிபாடு என்பது வழிபடு என்னும் சொல்லில் இருந்து பிறந்தது ஆகும். இவ்வழிபாடானது நாள்வழிபாடு, வாரவழிபாடு, சிறப்பு வழிபாடு, ஆண்டு வழிபாடு எனப் பல வகைப்படும். இக்கோயில் நாள்தோறும் காலைப்பூசை நடைபெறுகிறது. சூரியன் உதித்த பின் 8 மணி முதல் 10 மணிக்குள் இக்கோயிலில் இப்பூசை நடைபெறுகிறது. முதலில் வழக்குடைய அய்யனார் திருவுருவத்தையும், ஏனைய திருவுருவங்களையும் நீரினால் தூய்மை செய்து ஆடைகள் சாற்றித் தீப ஆராதனைகள் நிகழ்த்துவார். இப்பூசையின் போது 'வெண்பொங்கல்' நெய்வேத்தியமாகப் படைக்கப்பெறும்.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நிகழும் பூசை வாரவழிபாடு ஆகும். இந்நாட்களிலும் ஒரு காலப்பூசை நடைபெறும். எனினும் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் காலைப்பூசையின் போது இறைவனுக்கும், ஏனைய தெய்வங்களுக்கும் எண்ணெய்க்காப்புச் சாத்தப்பட்டு அதன்பின் தீப ஆராதனைகள் நிகழும். இப்பூசையின் போது 'சர்க்கரைப் பொங்கல்' நெய்வேத்தியமாகப் படைக்கப்பெறும்.

இத்திருக்கோயில் சிறப்பு வழிபாடு, மகா சிவராத்திரியின் போது நிகழ்த்தப்பெறும். சிவதலங்களில் சிவனுக்குச் சிறப்புச் செய்தல் போல இத்திருக்கோயில் சிவராத்திரியின் போது அய்யனார், சோணையா போன்ற ஏனைய தெய்வங்களும் சிறப்புப் பூசைகள் நிகழ்த்தப்பெறும்.

ஆண்டு வழிபாடு என்பது ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும். இக்கோயிலில் களரித் திருவிழா வைகாசி மாதம் 40 நாட்கள் நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கு என்று தனி நாள் கிடையாது. கிராம மக்கள் ஒன்று கூடிப் பேசி கோடை காலத்தில் குறிப்பாக வைகாசி மாதத்தில் விழா எடுக்க முடிவெடுப்பர். காப்புக் கட்டுதல் என்று சொல்லப்படும் திருவிழா முதல் நாள் தொடங்கப்படும். இதனைக் கொடிவளைதல் என்று கூறுவர்.

கோயிலுக்கென்று கொடிமரம் முன்பு இல்லை. திருவிழாக் காலத்தில் புளியமரம் ஒன்று வெட்டப்பட்டு அய்யனாரின்

Koviloor Digital Library

சன்னதிக்கு நேர் ஊன்றப்படும். அவ்வாறு ஊன்றிய புளியமரத்தில் வைக்கோலினால் பிரிசெய்து அதனுள் தென்னம்பாலை, மாவிலை, வேப்ப இலை ஆகியவற்றைத் தொங்கவிட்டு நான்கு திசைகளிலும் தோரணமாகக் கட்டுதல் கொடிவளைதல் நிகழும். இக்கொடிவளைதலின் போது கொடிமரத்திற்குப் பூசை செய்து கிடாய் ஒன்று பலியிடப்படும். முதலாம் நாள் முதல் 39-ஆவது நாள் வரை ஊர்மக்கள் அனைவரும் அசைவ உணவு உட்கொள்ளமாட்டார்கள். முதலாவது நாள் கொடிமரத்தின் மேல் ஒரு சேவலைக் குத்தி வைத்து அதன் மேல் ஒரு எழுமிச்சைப் பழத்தைச் சொருகி வைப்பார்கள். அச்சேவல் கடைசி நாள் வரை உயிரோடு இருக்கும்.

கடைசி நாளான 40 ஆவது நாள் திருவிழாக் கொண்டாடப்படும். அன்று கொடிமரத்தில் அறையப்பட்ட சேவலை எடுத்துச் சோணையாவிற்குப் பலி கொடுப்பர். பின்னர் ஆடு, கோழி பலி-யிடுவார்கள். கோயிலேயே சமைத்து உண்ணவார்கள். அன்று சிலபேர் பூக்குழி இறங்குதல், நேர்த்திக்கடனாக முடிஇறக்குதல் போன்ற செயல்களில் ஈடுபடுவர்.

கோயில் நிருவாக முறை

கோயில் நிர்வாகமானது பரம்பரை நிருவாகம் ஆகும். இங்கு நான்கு பங்காளிகள் இருக்கின்றனர். மாதத்தின் 30 நாட்களில் முதல் பங்காளிக்கு 15 நாட்கள், இரண்டாம் பங்காளிக்கு ஐந்து நாட்கள், மூன்றாம் பங்காளிக்கு ஐந்து நாட்கள், நான்காம் பங்காளிக்கு ஐந்து நாட்கள் என பிரித்துக் கொண்டு திருக்கோயிலின் பூசைகளையும், நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்கின்றனர்.

முடிவுரை

சிறுதெய்வக் கோயில்களின் அமைப்பு சிற்றூர் மக்களின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள், பொருளாதார வளம் ஆகியவற்றை விளக்கவதாக அமைகிறது. மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ அந்த நிலையில் தான் அவர்கள் வழிபடும் தெய்வமும் இருக்கும். மனித வாழ்க்கை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கை மனிதனது மூன்றாவது கையாகும். இறைவன்மேல் நம்பிக்கை வைத்தால் எண்ணியது நடக்கும் என நம்புகின்றனர்.

Koviloor Digital Library

பெருந்தெய்வ வழிபாட்டில் சைவம் (உத்திரகோசமங்கை திருத்தலம்)

திருமிகு. போ. பிரபா,
உதவிப் பேராசிரியை (தமிழ்),
மார்னிங் ஸ்டார் மகளிர் கலைக் கல்லூரி. பசும்பொன்

முன்னுரை:

இயற்கையின் ஆற்றலை கண்டு அஞ்சிய மனிதன் இயற்கையை வணங்குவதன் மூலமாகத் தங்களுக்கு வரும் துன்பங்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் வாயிலாகத் தோன்றியதுதான் இறைவழிபாடு. தொடக்க நிலையில் இடி, மின்னல், விலங்குகள், நெருப்பு போன்றவற்றைக் கண்டு அச்சம் கொண்டு அவற்றை மனிதர்கள் வழிபடத் தொடங்கினர். காலப்போக்கில் இறந்தவர்களையும் அதன்பின் இறந்தவர்களுக்கு உருவம் கொடுக்கும் பான்மையில் நடுகல் வழிபாடு தோற்றம் பெற்றது. இவ்வழிபாடு பின்னாளில் உருவ வழிபாடு முறையின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. பண்டைய காலத்திலிருந்தே தோன்றி வளர்ந்த வழிபாட்டு முறை நிலையினைக்கொண்டதாக விளங்கியது. மரபு வழிபட்ட பெருந்தெய்வ வழிபாட்டுமுறை திட்டமிட்ட கோயில் அமைப்பு, திருவிழாக்கள், தெய்வ உருவங்கள், முதலியவற்றை பெற்று விளங்கியது. இப்பெருந்தெய்வ வழிபாட்டில் சைவ-வைணவம் என இரு பிரிவுகள் உள்ளன. அவற்றில் சைவ வழிபாட்டில் திருஉத்திரகோசமங்கையில் அருள்பாலிக்கும் மங்களநாத சுவாமியின் கோவிலின் வழிபாட்டு முறையை பற்றி கூறுவதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

பெருந்தெய்வங்கள் :

சமுதாயத்தில் உயர்ந்தோர் - தாழ்ந்தோர், மேலோர் - கீழோர், பெரியவர் - சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்திருப்பதைப் போலவே தெய்வங்களின் வழிபாட்டுத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு தெய்வ வேறுபாடுகள் அல்லது பிரிவுகள் தோன்றியிருக்கும் என்பதை

Koviloor Digital Library

அறிய முடிகிறது. தமிழ் மக்களின் வாழ்வை பிரதிபலிக்கும் கண்ணாடியாக இலக்கியம் திகழ்கிறது. மிகப்பழமை வாய்ந்த இலக்கியமான தொல்காப்பியத்தில் "பெருந்தெய்வம்" என்ற சொல் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. மேலும், பெருந்தெய்வம் என்ற சொல் புறநானூற்றில் காணப்படுகிறது. இரண்டு வேந்தர்களையும் நன்றாகக் கண்ட புலவர் "இரு பெருந்தெய்வமும் உடன் நின்றா".[1]

பெருந்தெய்வ வழிபாட்டில் சைவ நெறி:-

சைவ சித்தாந்தம் சிறந்த தத்துவ கருத்துக்களைக் கொண்டு விளங்குகிறது. வேறு எந்த சமயத்திலும் அவ்வாறு இல்லை. சைவ சமயம் மிக்க தொன்மை வாய்ந்தது. சிறப்பு வாய்ந்தது. சைவ சித்தாந்தம் தமிழருக்கே உரியது. தனித்து இயங்கும் தன்மையது. அனைவராலும் கற்றற்குரியது. இந்திய மக்களின் சிறந்த எண்ணங்களுக்கும் வாழ்க்கை நெறிக்கும் ஓர் எடுத்துக்காட்டாக, கலங்கரை விளக்கமாக இலங்குகின்றது.

சைவ வழிபாடு பழமை வாய்ந்த சைவ சமயத்தில் கடவுள் வழிபாடும் அதன் பயன்களும் நன்கு வரையறுக்கப்பட்டுள்ளன. வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற நியதிக்கு உட்பட்ட நமது விதிகள் மூன்று மூலங்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1) பதி (கடவுள்) 2) பசு (உயிர்) 3) பாசம் (பற்று) இம்மூன்றில் பசுவாகிற உயிர் பாசமாகிய பற்றில் இருந்து விடுபட்டு பதியாகிய கடவுளை (சிவனை) அடைவதே வழிபாட்டின் நோக்கம் ஆகும். அப்படி உயிர் கடவுளை அடையும் நிலையே "ஞானம்" எனப்படுகிறது.

சைவ நெறியின் சிவவழிபாட்டின் நோக்கம் ஞானத்தை பெறுவதே ஆகும். "பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே"[2] என்ற சிவபுராணத்தின் வரிகள் சிவவழிபாட்டின் நோக்கத்தை விளக்குகிறது. சைவ சமயமானது கடுமையான சுயகட்டுப்பாடுகளைக் கொண்டது. மேலும் கோயில்களில் வழிபாடு, யோகா, தியானம் போன்ற வழக்கங்களைக் கொண்டது. திருநீறை நெற்றியில் பூசுவது சைவர்களின் சிறந்த அடையாளமாகக் கருதப்படுகிறது.

Koviloor Digital Library

முதலில் தோன்றிய சிவன் கோவில் (உத்திரகோசமங்கை) :

சைவ சமய வழிபாட்டில் முழுமுதற் கடவுளாக வணங்கப்படுபவர் சிவன். சிவபெருமான் வீற்றிருக்கும் புண்ணியத் தலங்களில் ஒன்று உத்திரகோசமங்கை திருத்தலம். உலகிலேயே முதலில் தோன்றிய சிவன் கோவில் இது என்று கூறப்படுகிறது. "மண் தோன்றியபோதே மங்கை தோன்றியது" என்பார்கள்.

சிவபெருமான் பார்வதிதேவிக்கு வேதாகாமங்களின் ரகசியங்களை உபதேசம் செய்த இடம் இதுவாகும். உத்திரன் (ருத்திரன்) + கோசம் + மங்கை. மங்கைக்கு உத்திரன் உபதேசம் செய்த இடம் ஆதலால் உத்திரகோசமங்கை என்றானது. இலந்தை மரம் இவ்வாலயத்தின் தலவிருட்சமாக விளங்குகிறது. "நீத்தல் விண்ணப்பம்" என்னும் திருவாசகம் பகுதி இத்தலத்தில் பாடப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. திருவாசகத்தில் 38 இடங்களில் இத்தலத்தைப் போற்றி பாடியுள்ளார் மாணிக்கவாசகர்.

ஆதி சிதம்பர நடராஜர் வழிபாடு :

இத்தலம் ஆதி சிதம்பரம் என்றும் அழைக்கப்படுகிறது. அம்பிகைக்காக இங்கு அரையில் ஆடிய திருத்தாண்டவத்தைத்தான் நடராஜ பெருமான், தில்லை அம்பலத்தில் முறைவர்களுக்காகவும், பக்தர்களுக்காகவும் ஆடுகிறார். எனவே, இந்த ஆலயத்தில் உள்ள நடராஜர்தான் ஆதி நடராஜர் என்று கூறப்படுகிறது.

இந்தப் பழமையான மரகத நடராஜர் சிலையில் சிறப்பு அது முழுவதும் மரகதத்தால் செய்யப்பட்டிருந்ததுதான். பொதுவாக "எல்லா ஆடலரசன் சிலைகளிலும் இடக்கால் தூக்கியபடி (குஞ் சிதபாதம்) அந்தரத்தே நிற்கும். வலது காலில் தான் முயல குறும்பனை நசுக்கிக் கொண்டிருப்பார். (மதுரையில் கால் மாறி ஆடிய நிலை தவிர). ஆனால் இங்கோ தூக்கிய திருவடி தன் நுனி வாலால் நட்டமாக நிற்கும் பாம்பின் தலைப்படத்தில் வைத்திருப்பது போல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.[3]"

"மத்தளம் முழங்க மரகதம் உடைபடும்" என்பதால் ஒளி ரூ ஒலி அதிர்வுகளில் இருந்து காப்பதற்காக மரகத நடராஜர் சிலை

Koviloor Digital Library

மீது ஆண்டு முழுவதும் சந்தனக் காப்புப் பூசப்பட்டிருக்கும். சிவனுக்கு உகந்த நாளான திருவாதிரைக்கு முதல் நாள் இந்த சந்தனக் காப்பு களையப்பட்டு பக்தர்களின் வழிபாட்டிற்கு வைக்கப்படும்.

சிவபூசையில் தாழம்பூ வழிபாடு:

சிவபெருமானுக்கு இத்தலத்தில் மட்டுமே தாழம்பூ சாத்தப்படுகிறது. ஈசனின் அடி முடியைக் காண விஷ்ணுவும் பிரம்மாவும் சென்றபோது சிவபெருமானின் திருவடியைக் காணமுடியவில்லை என்பதை விஷ்ணு ஒப்புக்கொண்டார். ஆனால், பிரம்ம தேவர் சிவனின் முடியைக் கண்டதாக தாழம்பூவின் சாட்சியுடன் பொய் கூறினார். இதனால், தாழம்பூவை சிவ பூஜையில் சேர்த்துக்கொள்வதில்லை என்றும், பிரம்மனுக்கு பூலோகத்தில் ஆலயங்கள் இருக்காது என்றும் சிவபெருமான் சாபமிட்டார். இதையடுத்து மனம் வருந்திய பிரம்மதேவரும் தாழம்பூவும் ஈசனை வேண்டி இத்தலத்தில் வழிபட்டு சாப விமோசனம் பெற்றனர். எனவேதான் தாழம்பூ இத்தல ஈசனுக்கு சாத்தப்படுவதாக தலபுராணம் கூறப்படுகிறது.

பைரவர் வழிபாடு :

இரட்டை கால பைரவர் தனிச்சன்னதியில் அருள்பாலிக்கிறார். நான்கு திருக்கரங்கள் ஒரு பைரவரின் இடையில் மிகப் பெரிய தண்டம் உள்ளது. இவரை அஷ்டமியில் மட்டுமல்ல அனைத்த நாள்களிலும் வழிபடலாம். இத்தல சிவபெருமானை வழிபட்டதன் காரணமாக, பிரம்மதேவரின் கோப குணம் விலகியது. எல்லா சிவலாயங்களிலும் அர்த்த ஜாம பூஜை-யின்போது பாடக்கூடிய "திருபொண்ணூஞ்சல்" பாடல் திருஉத்திரகோசமங்கை திருத்தலத்தில் தோன்றியது என்பர்.

கிரிவல வழிபாடு :

கிரிவலம் (கிரி-மலை) மலையைச் சுற்றுதல் என்பது பொருள். உத்திரகோசமங்கையில் ஒன்றும் கிரி-மலை இல்லைதான். ஆனால், மலைபோன்ற இறைவன் இருப்பதாக நம்பிக்கை.

பளகிலா தோங்கும் பளிக்குமி மலையே
வளமெலா நிரைந்த மாணிக்க மலையே

Koviloor Digital Library

மதியுற விளங்கு மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே
உரைமனங் கடந்தாங் கோங்கு பொன்மலையே
சூரியமேல் வெளியிற் ஜோதி மலையே

எனவே இத்திருத்தலத்தில் கிரிவல வழிபாடு நடக்கிறது.

முடிவுரை :

இரு பெருந்தெய்வ வழிபாடுகளில் ஒன்றான சைவ வழிபாட்டின் மிகச் சிறந்த திருத்தலமான திருஉத்திரகோசமங்கையின் வழிபாட்டை இக்கட்டுரையில் கண்டோம். மேலும், இக்கோவிலின் சிறப்பு வழிபாடுகளான மரகதக் கல்லினால் அமைந்த நடராஜர் வழிபாடு, பைரவர் வழிபாடு, சிவ பூஜையில் தாழம்பூ போன்ற வழிபாடுகள் பற்றி இக்கட்டுரை அமைந்தது.

நூற்பட்டியல் :

1. புறநானூறு (பாடல் எண்.58) பாடியவர் – காவிரிப் பூம்பட்டிணத்து காரிக் கண்ணனார்.
2. சிவபுராணம் 64 (பாடல் வரி) (மாணிக்கவாசகர்)
3. உத்திரகோசமங்கை திருத்தல வரலாறு – ஆசிரியர் தங்கவேலு

Koviloor Digital Library

மன்னார்குடி அருள்மிகு ஜெயங்கொண்ட நாதர் திருக்கோயில் - ஓர் ஆய்வு

திருமிகு. ப. பிரபாகரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
வரலாற்றுத்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

முன்னுரை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே" என்று கூறினார் ஔவை மூதாட்டி தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு கோயிலாவது இருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்கள் உள்ள ஊர்கள் அதிகளவில் உள்ளன. திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கோயில் இல்லாத ஊரை "காடு"என்று கூறுகின்றார்.

பெயர்க்காரணம்

இவ்வூருக்குத் தொடக்ககாலத்தில் தென் துவாரகை செண்பகாரண்யம், வண்டு வராபதி, ராஜாதி ராஜா குலோத்துங்க சோழ விண்ணகரம்,மன்னவர்குடி, மன்னர்குடி, ராஜமன்னார்குடி, மன்னார்குடி, மண்ணை என்று பல பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது. குஜராத் வடதுவாரகை என்றும் இவ்வூரில் ராஜகோபாலன் குடி கொண்டுள்ளதால் "தென் துவாரகை" என்று அழைக்கப்பட்டு வந்தது.

சிறப்பு

இவ்வூர் கோயில் பாதி, குளம் பாதி என்று அழைக்கப்படுகிறது. 64 கோயில்களும், 64 குளங்களும் உள்ளதாக அறியப்படுகிறது. மன்னார்குடி மதிலழகு என்றும் மண்ணில் மிக்கதோர் மன்னார்குடி என்றும் அழைக்கப்பட்டு வருவது அதன் சிறப்பைக் காணலாம்.

மன்னார்குடி என்று அழைக்கப்பெறும் ஊரின் பெயர் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை மன்னார்கோயில் என்றே அழைக்கப்பட்டது.

Koviloor Digital Library

கோயிலின் அமைப்பு

பாமணி ஆற்றின் வடகரையில் மண்ணை நகரத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க ஜெயங்கொண்ட சோழீச்சுரம் என்னும் ஜெயங்கொண்ட நாதர் திருக்கோவில் திகழ்கின்றது கிழக்கு நோக்கி இக்கோயிலுக்கு சுமார் 30 அடி உயரமுள்ள மூன்று நிலைகளையுடைய ராஜகோபுரம் தலை வா-யிலாக விளங்குகின்றது. கோயிலுக்கு முன்பாக திருக்குளம் அமைந்துள்ளது. உயர்ந்த திருமதில் உட்புறம் கிழக்கு, தென்கிழக்கு, மேற்கு, வடமேற்குப் பகுதிகளில் திருச்சுற்று மாளிகைப்பத்தி அமைந்துள்ளது. இம்மாளிகைப் பத்தியின் வடமேற்குப் பகுதியில் தனித்த சிற்றாலயம் ஒன்று இணைந்துள்ளது

மூலவர் கருவறை எழில்மிகு விமானத்தோடு அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றுடன் விளங்குவதோடு மகா மண்டபத்தின் வடபுறம் நடராஜர் எழுந்தருளி இருக்கும் சபா மண்டபமும் அம்மன் சன்னதி இணைந்து திகழ்கின்றன. இவை அனைத்தும் மாடக் கோயிலாகும் உயர்ந்த மேடை மீது அமைந்துள்ளது.

தீர்த்தங்கள்

ஜெயங்கொண்டநாத தீர்த்தம் கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்குளம் ஆகும். இதன் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் 29 செண்ட்.

பாம்பணி ஆறு காவிரி கிளை நதி. இது கோயிலுக்கு தென் கிழக்கு நோக்கி ஓடி ப்பிறகு தெற்கு நோக்கி செல்கிறது. இத்தீர்த்தங்களில் நீராடி வழிபடுவோர் சித்திகளை பெறுவர்.

தலப்பெருமைகள்

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்பு வேதவியாசர் நான்கு வேதங்களையும் வெளிப்படுத்த தகுந்த ஆற்றலைப் பெறுவதற்கு அவரால் சிவலிங்க பிரதிஷ்டை செய்யப்பட்டது. ராஜராஜசோழன் முதலிய சோழப் பரம்பரை-யினர் வழிபடப்பெற்றது.

இக்கோயில் திரட்டுப்பால் ஆராதனை நடைபெற்று வந்தது வைகாசி மாதம் ரோகிணி நாளில் பசும்பாலில் பலர்

Koviloor Digital Library

வாசனைப்பண்டங்களைச் சேர்த்துக் காய்ச்சி திரட்டுப்பால் ஆக்கிப் பின்புறம் உள்ள வியாசலிங்கத்திற்கு ஆராதனை செய்து பெரியகோயிலில் ராஜகோபாலப் பெருமாளுக்கு அனுப்புவது வழக்கம்.

சிற்பங்கள்

இக்கோயில் மாடக் கோவிலாக உள்ளது. உள்மண்டபம் மேடையில் அமைக்கப்பெற்றுள்ள்து. மூலத்தானம் படிப்படியாக உயர்ந்து செல்கிறது. கோயிலுக்கு எதிரில் திருக்குளம் நந்தவனமும், அலுவலகமும், வாகன மற்றும் அலங்கார மண்டபமும் உள்ளன. கோயில் உள்மண்டபத்தில் உள்ள மகா கணபதி சங்கு சக்கரத்துடன் கூடிய விஷ்வச் ச்சேனராய் காட்சி தந்து அருள் பாலிக்கிறார். அதுபோல சந்நிதியில் மகாவிஷ்ணு அருள்பாலிப்பது மிகச் சிறப்பாகும் இது சைவ வைணவ ஒற்றுமையை உணர்த்துகிறது. தெற்குப் பிரகாரத்தில் எழுந்தருளியுள்ள குருபகவான் வட விருட்சத்தில் ஆலமரம் கீழே அமர்ந்து தியானம் செய்கின்ற அரிய காட்சி இத்தலத்தின் சிறப்பு அம்சமாகும். இக்காட்சி தென்னாட்டில் சில தலத்தில் மட்டுமே காண முடியும். அது போல சனீஸ்வரன் தன் தந்தை சூரிய பகவான், குருவாகிய காலபைரவர் இங்கு மேற்கு நோக்கி அருள்பாலிக்கின்றனர். வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகன் திருமேனி மிகவும் அழகுற அமைந்துள்ளது. மகாலட்சுமி, சரஸ்வதி ,துர்க்கை அம்மன் சண்டிகேஸ்வரர், நவகிரகம் ஆகிய திருமேனிகளும் விள்ங்குகின்றன.

உள் மண்டபத்தில் பழைய மணியை வீட புதியதாய் பெரியமணி அமைக்கப்பட்டுள்ளது. பூசை நேரங்களில் மண்ணில் மிகப்பெரும் கொடிமரத்து விநாயகர் சண்டிகேஸ்வரர் மற்றும் சுக்கிரன் முதலிய திருமேனிகள் பின்ன பட்டதால் புதியதாகத் தற்போது வைக்கப்பட்டது.

கல்வெட்டுக்கள்

ஜெயங்கொண்ட நாதர் கோயிலில் இருந்து 1887ஆம் ஆண்டு ஏழு கல்வெட்டுக்களை இந்திய தொழில்துறையினர் எடுத்து 1887 ஆம் ஆண்டு கல்வெட்டு ஆண்டறிக்கையில் எண்ணங்கள் 85, 86,

Koviloor Digital Library

87, 88, 89, 90 உள்ள கல்வெட்டாக பதிவு செய்துள்ளனர்.இந்த கல்வெட்டுகளை தென்னிந்திய கல்வெட்டுச் சாசனங்கள் தொகுதி 35,36,37,38,39,40,41 ஆகிய எண்கள் உள்ள் சாசனங்களாக வெளியிட்டுள்ளனர்.அங்கே காணப்படும் சாசனம் எழுதிய கிரந்த எழுத்துக்களை தமிழில் மாற்றம் செய்து அனைவரும் படிக்கும் வகையில் இங்கு தரப்படுகின்றது. ராஜகோபுரத்தில் உள்ள முதல் கல்வெட்டுக்கள் தவிர மற்ற கல்வெட்டுக்களை தற்போது பார்க்க இயலாது பிற்காலத்தில் பணிகளின்போது அழிந்துவிட்டன.

செப்பேடுகள்

மன்னார்குடி ஜெயங்கொண்டம் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடை செய்திகள் குறிக்கப்பட்ட இரண்டு செப்பேடுகளை 1920 - 21ம் நூற்றாண்டு மைய அரசின் தொல்லியல் துறையினர் படி எடுத்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்ட ஆலயங்களில் நிர்வாகக் குழு உறுப்பினராக விளங்கிய அப்பாசாமி வாண்டையார் அவர்கள் மூலம் செப்பேடுகளைப் படி எடுத்துள்ளனர். அரசின் துறைகள் இத்தன்மையை கொண்டே செப்பேடுகளில் வெளி-யிடப்பட்டன.

தாமரை மொட்டுப் போன்ற அழகிய கைப்பிடி உடைய நாதன் லிங்க வடிவில் உள்ளார். மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. லிங்க வடிவத்திலும் இரண்டு கரங்களுடன் ஒரு கையில் மலர் ஏந்தி நிற்கிறார். இடையில் முத்தலை சூலம் பெரிதாக பொறிக்கப்பட்டுள்ளது .இக்காட்சி நான்கு புறங்களிலும் உள்ளது. ஒரு செப்பேட்டின் இறுதியில் கூட்டு ஓவியத்தில் காமதேனு பால் சொரியும் பசுவின் காட்சி மிக மிக அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டு செப்பேடுகள் பாப்பாநாடு ஜமீன்தார் வளநாடு,ராசராச சோழவள நாடு, பொய்யூர் கூற்றத்து பாப்பாகுடி நாடு ,சிறுநெல்லி கோட்டை, நெல்வேலி வாடியலிருக்கும் நல்லவன் விசையாக தேவர் மகன் ராமலிங்க தேவர் காணியாக இருக்கும் மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர்க்கு அளித்த கொடையை கூறுகின்றனர்.

சமுதாயத்தில் கோயிலின் பங்கு

திருக்கோயில் சமுதாயத்தில் முக்கியமான இடம் பெறுவதற்குக்

Koviloor Digital Library

காரணம் இவைகள் சமயம் வளர்வதற்கு உறுதுணையாகவும், வழிபாட்டு இடங்கள் மட்டுமல்லாமல் சமூக நிலையங்கள் இருந்தன மனித சமுதாயம் வளர மென்மேலும் முன்னேற வேண்டும் என்ற மக்களின் கொள்கை உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கொள்கை என்பது யாது என்று கேட்கலாம் தந்தை பெரியாரின் கொள்கையில் எந்த கொள்கையும் அதாவது மனிதன் படிப்படியாக உடையவர் ஆவார் ஒருவனுடைய பார்வை அந்த வீட்டின் எல்லைக்குள் அடங்கும் வீட்டுக் கூரையின் மேல் என்று பார்ப்பவன் அந்த வீதி முழுவதும் பார்ப்பான் கோபுரத்தின் மேலேறி விட்டுக் குறையும் என்பது அந்த ஊர் முழுவதையும் பார்க்கும் பார்வை உடையவனாக இருப்பான்.

முடிவுரை

ராஜாதிராஜனுடைய சிறப்புப் பெயராக ஜெயங்கொண்டான் என்ற பெயரில் ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் உடையார் என்ற சிவாலயமும் எடுக்கப்பட்டது. இக்கோயிலில் பல முறை திருப்பணிகளுக்கும் உட்பட்டதால் சோழர் கல்வெட்டு சாசனம் எதையும் காண முடியவில்லை. மேலும் இக்கோயில் பற்றிய அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர் அதன் சிறப்பு கோயிலில் திருமணம் செய்து கொண்டால் அனைத்து தோஷங்களும் நீங்கி அருள் பெறலாம் என்ற நம்பிக்கை உள்ளது. மிகப் பழமை வாய்ந்ததும் சிறப்பு பெற்றதுமான இத்தலத்தில் ஸ்ரீரங்கநாத சுவாமி தரிசனம் செய்தால் அனைவரும் தோஷங்கள் நீங்கி அருள் பெறலாம் குறிப்பாக அருள்மிகு ஜெயங்கொண்ட தரிசனம் செய்யும் பெண்களுக்கு தடைபெற்ற திருமணம், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கைகூடும் என்ற நம்பிக்கையும் அனைத்து மத மக்களிடம் உள்ள அனைத்து சாதி மதம் பார்க்காமல் மக்கள் ஒற்றுமையாக இக்கோயிலுக்கு வருவதைப் பார்க்கலாம் அனைத்து நாட்களிலும் பூசைகள் மிகவும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது புயல் வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் இடமாகவும் அருள்மிகு ஜெயங்கொண்ட சுவாமி தலம் விளங்குகின்றது.

Koviloor Digital Library

இலக்கியத்தில் வழிபாட்டு நெறிமுறைகள்

பேரா. சே. செந்தமிழ்ப்பாவை,
இயக்குநர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

திருமிகு. **லெ.பொ.பிரியா,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

சங்ககாலத் தமிழர்கள் பண்பாட்டின் வாழ்வியல் கூறுகளை எடுத்துக் கூறும் சான்றாதாரங்களுள் முதன்மையானவையாகச் சங்க இலக்கியங்களும் சங்க இலக்கிய வரலாற்றுக் கூறுகளும் திகழ்கின்றன. இவற்றைக் கொண்டு அக்கால பண்பாட்டையும் பண்பாட்டின் படிநிலை வளர்ச்சியையும் அறிய முடிகின்றது. இவ்வாறு பண்பாட்டுக் கூறுகளுள் ஒரு பகுதியான சமயம் குறித்த வழிபாட்டு நெறிமுறைகளை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வழிபாடு

வழிபடுதல் என்ற சொல் வழிபாடாகும். பேராற்றல் மிக்க வழிபாட்டு நம்பிக்கைகளுக்கு அடிப்படையானவை 1.குலக்குறி வழிபாடு, 2. ஆவி வழிபாடு, 3. இயற்கை வழிபாடு என்னும் மூன்று வகையாகும்.

குலக்குறி வழிபாடு

மனிதன் தனக்கும் ஒரு குறிப்பிட்ட பொருளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று நம்பினான். அப்பொருளே குலக்குறியாக மனிதனுக்கு அமைகிறது. ஒவ்வொரு சமூகத்தைச் சார்ந்தவர்களும் ஒரு குறிப்பிட்ட தாவரம், விலங்கு ஆகியவற்றிலிருந்து தமது குலம் தோன்றிதாக நம்பினர். இப்பொருட்களைக் குலத்தின் வளர்ச்சிக்குரிய முக்கியப் பொருளாகக் கருதினர். இத்தகைய

Koviloor Digital Library

குலக்குறிப்பொருட்கள் வாழ்க்கையில் எல்லா நிலையிலும் முதன்மை பெற்று விளங்கின. வளமை குறித்த சிந்தனையும் குலக்குறி வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்தது. செழிப்பு உற்பத்தி குறித்த சிந்தனையே இதற்கு அடிப்படையாயிற்று முல்லை நிலத்து மக்கள் திருமணக் சடங்கில் பெண் எருமையின் கொம்பை நட்டு வழிபாடு செய்தனர் என்பதை முல்லைக்கலி வாயிலாக அறியமுடிகின்றது.[1]

ஆவி வழிபாடு

உயிர் இனங்கள் பிறந்து வாழ்ந்து மடிகின்றன என்று ஆதி மனிதன் எண்ணினான் இறப்பையும் தொடர்ந்து நடைபெறுவதைக் கண்டான். இறந்த உயிரினங்கள் மீண்டும் பிறக்கின்றன என்று கருதினான். அவ்வாறாயின் இறந்த உடைவிட்டுப் புலனறிவிற்கு எட்டாத ஒன்று பிரிந்து செல்கிறது என்று கருதி அதற்கு ஆவி என்று பெயரிட்டு அழைத்தான். ஆவியுலகக் கோட்பாட்டே ‘கடவுள் கொள்கைக்கும் அதன் மேல் எழுப்பட்டுள்ள மத மாளிகைக்கும் அடிப்படை என்று ஆவியுலகக் கோட்பாட்டிற்கும் சமய நம்பிக்கைக்கும் உள்ள உறவினைக் கூறுவர்.[2]

இலக்கியத்தின் ஆவி வழிபாடு

ஆவி ஆற்றல் கூறுகளாகத் தெய்வங்கள் அணங்கு, சூர், பூதம்ஜீ, கூற்றுவன், பேய் என்று குறிப்பிடுவர். பண்டைய இலக்கியத்தில் முருகன், கொற்றவை, மாயோன், வருணன், வேந்தன் போன்ற தெய்வங்களை வழிபட்டது மட்டுமல்லாமல் மேற்குறித்த மீவியல்பு ஆற்றல்களான ஆவியையும் வழிபட்ட செய்தியை அறியமுடிகிறது.

அணங்கு

“அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சுலா அச்சம் நான்கே”[3]

எனத் தொல்காப்பியர் அணங்கு என்பது காண்பவருக்கு அச்சத்தை உண்டாக்கக் கூடியது என்பர். அதே சமயத்தில் அது வேண்டிய நேரத்தில் வேண்டிய உருவம் எடுக்கவல்லது என்பதை கூட்டுகிறது.

Koviloor Digital Library

அணங்கே தெய்வம்

பரதவர் உவா நாளிலே தம்முடைய மகளிரொடு கூடி குடியிருப்பு நடுவில் உள்ள மனையிடத்தே சிறிய வலிய தெய்வங்காரணமாக மலர் மாலைச் சூட்டிப் பனையில் கள்ளையும் நெற்கள்ளையும் உண்டு விழா எடுத்தமையினை,

"சினைச் சுறவின் கோடுகட்கு
மனைச் சேர்த்திய வல்வணங்கினான்
மடற்றாழை மலர் மலைந்தும்
———————————————
பாயிரும் பனிக்கடல் வேட்டள் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்" (குறுந்.362:3-7)

விளக்கும், அதாவது அணங்கு தெய்விலை எய்தியதையும், தொழில்சார்ந்த நிலையில் அணங்கு பயன்பட்டதையும் தொழிலில் வெற்றிகிடைக்கவும் தற்காப்பு வேண்டியும் உயிர்ப்பலியிட்டு வழிபாடாற்றிய நிலை புலனாகிறது. இவ்வாறு அணங்கு தெய்வநிலையிடைந்து வழிபாட்டிற்குரிய ஒன்றாக இருந்ததை அறியமுடிகிறது.

சூர்

பண்டை இலக்கியத்தில் அணங்கு போன்றே ஆற்றல்மிக்க தெய்வம் சூர், இதனை

"சூரா மகளி ராடுஞ் சோலை" (அகநா.98:5)

சுட்டும். சூர் மற்றும் அணங்கு, பேய் போன்றவை சிறுதெய்வங்கள் என்று திருமுருகாற்றுப்டை சுட்டுகிறது. (திருமுருகு.41)

தலைவன் சூள் பெய்த்தமைக்காகத் தலைவி தோழியுடன் சென்று சூர்த் தெய்வத்திற்குப் பலியிட்ட நிலையை

"கணங்கெழுகடவுட்குயிர் பலி து.உய்ப்
பரவினம் வருகஞ் செம்மோ தோழி" (அகநா.198:16-17)

என்ற பாடலடிகள் விளங்குகின்றன. இத்தகைய சூர் மகளிர் மலையுச்சி, குளிர்ந்த அருவி சோலை, மலைப்பக்கம் ஆகியவற்றில் உறைந்ததாகவும் அந்த இடத்திற்குப் பண்டைய மக்கள் பலி கொடுத்த நிலையினையும்,

Koviloor Digital Library

"கொடுங்கட் காக்கை கூர்வாய்ப் பேடை

ஓதிலருமன் பேரிசைச் சிறுகுடி" (நற்.358:6-7)

அறியலாம். இவ்வாறு சூர்மகள் அக்கால மக்களால் வழிபாடு செய்யப்பட்டது புலனாகிறது.

இயற்கை வழிபாடு

மனிதனுக்குப் புரியாமல் இயக்கிவரும் இயற்கைக் கூறுகள் தொடக்கத்தில் மனிதனால் வணங்கப்பட்டன. தீ. காற்று, நீர், மழை, இடி சூரியன் போன்றவைகளாகும்.

சங்க இலக்கியத்தில் இயற்கை வழிபாடு

சங்க இலக்கியத்தில் கிடைக்கின்ற சான்றுகளைக் கொண்டு இருவேறு வகையான வழிபாட்டு முறைகளைக் காணமுடிகின்றது. அவையாவன, 1. இயற்கைப் பொருள் வழிபாடு, 2. இயற்கை மனித வடிவம் பெற்ற வழிபாடு என இருவகைப்படும்.

இயற்கைப் பொருள் வழிபாடு

இயற்கைப் கூறுகளான சூரியன் சந்திரன், தீ, மழை போன்ற இயற்கைப் பொருட்கள் மட்டுமல்லாது மலை, கடல் போன்றவைகளை வழிபடும் வழக்கம் பண்டைய மக்களிடம் நிலவியது.

சூரியன் வழிபாடு

ஒவ்வொரு நாளும் கீழ்த்திசையில் கீழ்க்கடலில் தோன்றி வான்வெளியில் இயக்கம் பெற்று மண்ணில் தோன்றிய உயிர்களுக்கெல்லாம் வாழ்க்கையை அளித்து மேலைக் கடலில் மறையம் தன்மை உடைய சூரியன் வழிபாடானது தொண்மையானது. இதனை,

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும்பு ஊர்தர" (கலித்.6:1)

என்ற கலித்தொகைப் பாடலின் மூலம் அறியலாம்.

இவ்வாறு உலகத்தின் இருளை அகற்றிப் பகலைக் கொடுத்து மக்களுடைய தொழிலை தடைபடாமல் செய்யும் தன்மையினை

Koviloor Digital Library

"விளங்கு பகல் உதவிய பல்கதிர் ஞாயிறு" (Üèï£.91:1)

என்ற அடி உணர்த்துகிறது. மேலும் சூரியன் உயிர்திணைக்குரிய தெய்வமாக வணங்கப் பட்டமையினை,

"செங்கதிர்ச் செல்வன்" (நற்.164:2)

"பகல்செழு செல்வன்" (நற்.215:2)

என்ற அடைமொழிகள் விளங்குகின்றன. எனவே பண்டைய கால மக்களிடம் வணங்கப்பட்டமை புலனாகிறது.

திங்கள் வழிபாடு

சந்திரனுக்குத் திங்கள் என்ற பெயர் பண்டைக் காலத்தில் நிலவியது இதனை

"ஞாயிறு திங்கள் சொல்லென உருஉம்"[4]
"ஞாயிறு திங்கள் அறிவே நானே"[5]

என்ற நூற்பா சுட்டும்.

சங்க கால மகளிர் நல்ல கணவனைப் பெற வேண்டுமென்று திங்களை வழிப்பட்டனர் என்பதனை,

"ஒள்ளிழை மகளிர் உயிர்பிறை
புல்லென் மாலை" (அகநா.239:9-10)

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும் பிறையை தொழுவதன் மூலம் உலகத்திற்குத் தன்மையுடைய ஒளியைக் கொடுத்து உலக மக்களின் உயரிய வாழ்க்கைக்கு வித்திட்டக் காரணத்தால் வணங்கப்பட்டமையினை,

"தொழுது கான் பிறையின் தோன்றியாம் நமக்கு
அரியமாகிய காலை" (குறுந்.304:2-4)

என்ற குறுந்தொகை பாடல்களின் வழி அறியலாம்.

தீ வழிபாடு

சங்க காலத்தில் தீ வழிபாடு இருந்தமைக்கான சான்றில்லை.

"அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து
செந்தீச் செல்வழல் தொடங்கு" (கலித்.2:10-11)

Koviloor Digital Library

எனக் கலித்தொகை கூறுவன் மூலம் சங்க காலத்திற்கு பின் பண்டைய மக்களிடம் வேள்விகளோடு கூடிய தீ வழிபாடு இருந்தமை புலனாகிறது.

மழை வழிபாடு

கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் மேற்கொள்ளும் வழிபாடு மழைவழிபாடாகும்.

இதனை, **"நறுங் ஐம்பால் மகளிராடும் தைஇ தண்கயம் போல"** (ஐங்குறு.84:1–2) என்ற பாடலடி சுட்டும் இவ்வழிபாடு முடிந்தவுடன் உணவினை மேற்கொண்டனர். என்பதனை

"கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவினை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்லவரை ஏறி

தைமுன் இருக்கையில் தோன்றும் நாடன்" (நற்.22:3–7)

என்ற பாடல் விளக்கும். இவ்வாறு மழையைக் கட்டுப்படுத்த பண்டைய மக்களால் வழிபாடு செய்யப்பட்டது எடுத்துரைக்கப் படுகின்றது.

மனித வடிவம் பெற்ற வழிபாடு

தம்மை மீறிய பேராற்றல் இயற்கைப் பொருளை இயக்குகிறது என்ற எண்ணம் மக்களிடையே தோன்றியபோது இயற்கையைத் தெய்வமாகப் போற்றும் நிலை உருப்பெற்றுவிட்டது. இயற்கைக்கும் மனிதனால் போன்றே ஆசைகள் உணர்வுகள் உண்டு என்று நம்பியபோது இயற்கையையும் மனிதனையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கும் எண்ணமும் தோன்றிவிட்டது. இதனால் இயற்கையை மனித உருவத்தால் நோக்கும் எண்ணமும் தோற்றம் பெற்றுவிட்டது.

முல்லைக்குரிய கடவுள் திருமளாகவும் குறிஞ்சிக்குரிய கடவுள் முருகனாகவும் மருதத்திற்குரிய கடவுள் வேந்தனாகவும் நெய்தலுக்குரிய வருணனாகவும் எனத் திணையடிப்படையில் தெய்வத்தை இயற்கைச் சூழலோடு படைத்துக் காட்டி உள்ளார் தொல்காப்பியர்.

Koviloor Digital Library

நானிலச் சமயம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்கு நிலத்தின் அடிப்படையிலே மக்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. இவ்வாறு இயற்கைக்கு மனித வடிவம் கற்பிக்கப்பட்டபோது நானிலச் சமயம் தோற்றம் பெற்றது.

முடிவுரை

வழிபாடு குலக்குறி வழிபாடு, ஆவி வழிபாடு இயற்கை வழிபாடு எனப் பல்வகை வளர்ச்சி பெற்றது. குறிப்பிட்ட தாவரம், விலங்கு ஆகியவற்றிலிருந்து தமது குலம் தோன்றியதாக நம்பினர். இப்பொருட்கள் குலக்குறி வழிபாடாக தோற்றம் பெற்றது. மனித ஆன்மா குறித்த சிந்தனையே ஆவியாக வழிபாட்டிற்கு வித்திட்டது. இயற்கைப் பொருட்களின் இயக்கம் மற்றும் இயற்கையின் நிகழ்வுகள் ஆகியவற்றிற்குத் தன்னை மீறிய ஆற்றலே காரணம் என்று கருதியபோது இயற்கை வழிபாடு தோன்றியது இவ்வாறு சங்க மக்களிடையே வழிபாட்டு நெறிமுறைகள் வளர்ச்சிப் பெற்றது என்பது மேற்கூறிய செய்திகளின் வழி புலனாகிறது.

சான்றெண் விளக்கம்

1. கலித்தொகை, ப.13
2. க.கிருட்டிணசாமி, கொங்நாட்டு நாட்டுப்புறப்பாடல்கள், ப.181 (தொகுப்பு - 2)
3. தொல்.பொருள் 252
4. தொல்.சொல் (கிளவி) 57
5. தொல். பொருள்.513

Koviloor Digital Library

பரமத்தி வேலூர் பகுதி சிறுதெய்வக் கோயில்கள் வழிபாடும் பண்பாடும்

முனைவர் க.பூபதி
தமிழ் உதவிப்பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் கோயில்கள் உண்டு. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியும் உண்டு. சிறு தெய்வ கோயில்கள், பெருந்தெய்வ கோயில்கள் என பல கோயில்கள் உள்ளன. சிறு கல்லை நட்டுக் கூட அதை தெய்வமாக வழிபடும் வழக்கம், பண்பாடு நம் தமிழர்களிடம் உண்டு. இதை தமிழகம் முழுவதும் காணமுடியும். சிறு தெய்வங்கள் என்று எடுத்துக் கொண்டால் அவை எண்ணில் அடங்கா. கோயில் இல்லா தெய்வங்கள், மரத்தடித் தெய்வங்கள், கோயில் தெய்வங்கள் என்று சிறு தெய்வங்கள் தமிழகத்தில் எங்கும் காணப்படுகிறது. கோயில்கள் உள்ள சிறு தெய்வ வழிபாடு, பண்பாடுகளை இக்கட்டுரையில் காண்போம்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் பகுதியில் பல சிறு தெய்வங்கள் உள்ளன. அம்மன் பெயரில் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. மாரியம்மன், காளியம்மன், பகவதியம்மன், பச்சையம்மன், பெரியக்காண்டியம்மன், எட்டிக்கையம்மன், பச்சைநாச்சியம்மன், கவுண்டிச்சியம்மன், படைவெட்டியம்மன், வெங்கரையம்மன், முத்தாலம்மன், பட்டத்தரசியம்மன் (பரட்டத்தலச்சியம்மன்) செல்லியம்மன், செல்லாண்டியம்மன், அங்காளம்மன், எல்லையம்மன் என்று இன்னும் பல அம்மன்கள் உள்ளன. இதுபோல், முனீஸ்வரன், கருப்பனார், கருப்பண்ணசாமி, அண்ணமார்சாமி, கோட்டையண்ணன்சாமி, மதுரைவீரன் போன்ற ஆண் தெய்வங்களும் இருக்கிறது. இதுபோல் பொட்டுசாமி, தங்காயி, ராசாயி, கன்னிமார், பொம்மக்கா, நடுகல், என பல சிறு தெய்வங்கள் உள்ளன. இத்தெய்வங்களை ஊர்த்தெய்வம், குல தெய்வம், கிராம தெய்வம், காவல் தெய்வம், பிடிமண் தெய்வம் என்று இப்பகுதியில் பல வழிமுறைகள் கொண்டு வழிபட்டு வருகிறார்கள்.

Koviloor Digital Library

மாரியம்மான்

பரமத்திவேலூர் பகுதியில் உள்ள மாரியம்மன் கோயில்கள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. பெரும்பாலும் கோயில் மண்டபம் போல் முன்பகுதி அமைந்திருக்கும் அதற்கு அடுத்து உள்பகுதியில் கருவறையில் சாமி சிலை முக்கோண வடிவில் கல்லிலும் சில கோயில்களில் சிலையாகவும் வைக்கப்பட்டு இருக்கிறது. கல்லில் உருவம் இல்லாச் சிலைக்கு வெண்கலத்தில் ஆன சாமி சிலை வைத்து திருவிழாக்காலங்களில் அலங்காரம் செய்து வைப்பார்கள். சாமி இருக்கும் இடம் சிறிய அமைப்பிலும், முன் மண்டபம் பெரிய அமைப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. சாமி இருக்கும் கருவறைப் பகுதியின் மேல் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் கலசங்கள் வைக்கப்பட்டு இருக்கிறது. காலை மாலை நாள்தோறும் பூசை நடைபெறும். கோயிலுக்கு முன்பகுதியில் பலிபீடம், குதிரைகள், ஊஞ்சல் அமைக்கப்பட்டு இருக்கிறது. இப்பகுதியில் பெரும்பாலும் சித்திரை மாதத்தில் மாரியம்மன் திருவிழா நடைபெறும். சாமி சாட்டுதலில் (பூசாட்டுதல்) ஆரம்பித்து, மஞ் சள் நீர் விளையாட்டில் முடியும். ஒன்பது நாள் திருவிழாவாக அமையும். சாமி சாட்டியதில் இருந்து கம்பம் நட்டு ஒவ்வொரு நாளும் கம்பத்திற்கு காவிரி ஆற்றில் இருந்தும் அல்லது கிணற்றில் இருந்தும் தண்ணீர் எடுத்து வந்து கம்பத்திற்கு ஊற்றுவார்கள். திருவிழாவில் கடைசி மூன்று நாட்கள் சிறப்பாக இருக்கும் இதில் முதல்நாள் “முப்பாட்டு மாவிளக்கு” பூசை நடைபெறும். முப்பாட்டு மாவிளக்கு என்பது திணையை இடித்து மாவாக பிசைந்து பச்சைமாவை விளக்காக வைத்து பசும் நெய்விட்டு முப்பாட்டு பேழையில் வைத்து தீபம் ஏற்றுவார்கள். இதைச் செய்ய வம்சாவழியாக முப்பாட்டுக்காரர் ஒருவர் இருப்பார். அந்த ஊரிலேயே அவருக்கு தனிமதிப்பும் சிறப்பும் உரிமையும் உண்டு. ஊரில் அனைவரும் அவரை முப்பாட்டுக்காரர் என்றே அழைப்பர். அவர் முன்னிலையில் தான் இந்த பூசை நடைபெறும். திருவிழாவிற்கும் முதல் நாள் பூக்குழி (தீ மிதித்தல்) இறங்குதல் நடைபெறும். கோயிலுக்கு முன்பாக சுமார் இருபது முப்பது (கோயிலுக்கு உள்ள வழக்கப்படி) அடி நீளம் மூன்றடி அகலத்தில் குழி வெட்டி அதில் மரங்களைப் போட்டு தீ

Koviloor Digital Library

மூட்டி நெருப்பாக்கி (தணல்) அதில் ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு நெருப்பில் நடந்து வருவார்கள். இப்படி பூக்குழி இறங்குபவர்கள் அந்த ஒன்பது நாளும் விரதம் இருப்பார்கள். அதோடு அலகு குத்துதல் வேண்டுதலும் செய்வார்கள். நாக்கில் உலோக ஊசிகளால் குத்திக்கொள்வதாகும். இதில் நாக்கு அலகு, முதுகு அலகு, காவடி அலகு, வயிற்று அலகு, விமான அலகு, பறவை அலகு என்று பல வகைகள் உண்டு. திருவிழாவன்று பொங்கல் வைத்து மாவிளக்கு எடுப்பார்கள். பச்சரிசியில் பொங்கல் வைப்பார்கள். பச்சரிசியை மாவாக இடித்து அதில் சக்கரைப்பாகு ஊற்றி பதமாக பிசைந்து அதில் எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றி ஊர்வளமாக வந்து கோயில் முன்வைத்து பூசை நடைபெறும். “மாவிளக்கு” என்பது ஒரு தாம்பளத்தில் (ஒரு பெரியதட்டு) அரிசிமாவு விளக்கு, இரண்டு சீப்பு வாழைப்பழம், இரண்டு தேங்காய், சூடம், பத்தி, பிடிமாவு, விசிறி பூ ஆகியவை இருக்கும். மாரியம்மன் கோயில் பதினெட்டுப் பட்டிக்கு அல்லது எட்டுப்பட்டிக்கு ஒரு கோயில் என்ற அளவில்தான் அமைந்துள்ளது. “பட்டி” என்பது ஒரு சிற்றூரைக் குறிக்கும்.

காளியம்மான்

காளியம்மன் கோயில்கள் பெரும்பாலும் ஊருக்கு வெளியே அமைந்துள்ளது. பதினெட்டுபட்டிக்கு ஒரு கோயில்தான் உள்ளது. இந்தக் கோயில் கிராமங்களில் உள்ள ஊர்களுக்கு காவல் தெய்வமாக போற்றப்படுகிறது. காளியம்மன் கோயில்கள் அனைத்தும் வடக்குத் திசையை நோக்கியே கட்டப்பட்டுள்ளது. கோயிலுக்கு முன்பு ‘குறிஞ்சி’ என்று சொல்லக்கூடிய நான்கு தூண்கள் அமைந்த சிறுமண்டபம் அமைந்துள்ளது. காளியம்மன் கோயிலுக்கு இப்பகுதியில் பூக்குழி இறங்குவது இல்லை. இக்கோயில்களில் நாள்தோறும் காலை மாலை பூசை நடைபெறுகிறது. செவ்வாய்க்கிழமை விளக்குப் போடுதல் நன்மைதரும் என்பது வழக்கமாக உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறைதான் திருவிழா நடைபெறும். அமாவாசை, பௌர்ணமிகளில் சிறப்பு பூசை நடைபெறும். வழிவழியாக உரிமை கொண்ட பூசாரிதான் விரதம் இருந்து வழிபாடு செய்வார். வேல் எடுத்தல் அவருக்கு உரிமையாகும். திருவிழாவன்று வேல்

Koviloor Digital Library

எடுத்துக் கொண்டு கோயிலை சுற்றி வரும் போது ஆடு, கோழி போன்ற உயிர்பலி கொடுப்பார்கள். தெய்வ அருள் ஏறிய அவர் இரண்டு பட்டா கத்தியை பிடித்துக் கொள்வார்கள் அதன் கூர்மையான பகுதியின் மீது ஏறி நின்று அருள்வாக்கு கூறுவார். காளியம்மன் கோயில்களிலும் முப்பாட்டு மாவிளக்குப் பூசை, திருவிழாவில் பொங்கலிட்டு மாவிளக்கு எடுத்தல் என்ற வழிபாடுகள் அனைத்து நடைபெறும்.

பகவதியம்மன்

பகவதியம்மன் பரமத்தி வேலூர் பகுதியில் உள்ள அனைத்துச் சிற்றூர்களிலும் இக்கோயில் உள்ளது. ஒரு சில ஊர்களில் மட்டும்தான் இக்கோயில் இல்லை. இந்தக் கோயில் அனைத்தும் கிழக்கு திசையில் அமைந்துள்ளது. கருவறையின் மேல் கோபுரம் அமைந்து கலசங்கள் வைக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு முன் பெரிய மண்டபம் அமைந்துள்ளது. கோயிலுக்கு முன் ஒரு கல் நட்டிருப்பார்கள். அது பகவதியம்மனுக்கே உரித்தானதாகும். திருவிழாவின் போது அந்த கல்லை எடுத்துவிட்டு சதுரமாகவோ அல்லது செவ்வகமாகவோ குழி வெட்டி பூசை முடிந்தபின் எருமை கிடா வெட்டி, (பலியிட்டு) அதில் போட்டு மூடிவிடுவார்கள். அதன் மையப் பகுதியில் இந்த கல்லை நட்டு வைப்பார்கள். எருமைகிடா வெட்டுதல் எல்லா கோயில்களிலும் நடைபெறும். பகவதியம்மனுக்கு மட்டுமே எருமைக்கிடா பலியிடுவார்கள். 'வடிசோறு' அல்லது 'வடிசோத்து மாவிளக்கு' என்ற பூசை திருவிழாவிற்கும் ஒருநாளைக்கு முன் நடைபெறும். அரிசி சோறு வடித்து எடுத்துக் கொண்டு அதற்கு கத்திரிக்காய், கருவாட்டுக் குழம்பு மற்றும் வேகவைத்த முட்டை (அவிச்ச முட்டை) படப்பு போட்டு (படையல்) சாமிக்குப் பூசை செய்வார்கள். இந்த பூசை இரவு நேரத்தில் நடைபெறும் வடிசோறுடன் மாவிளக்கும் வைப்பார்கள். அதனால் இதை வடிசோத்து மாவிளக்கு என்று அழைக்கப்படுகிறது.

தங்காயிசாமி

இந்தப் பகுதியில் தங்காயி கோயில் சில ஊர்களில் கட்டப்பட்டுள்ளது. பல ஊர்களில் கோயில் இல்லாமல் தங்காயி கதை வைத்து, பொங்கல் வைத்து திருவிழா

Koviloor Digital Library

கொண்டாடுவார்கள். இது பொன்னர் சங்கர் வாழ்க்கை வரலாற்றுக் கதையாகும். இவர்களை அண்ணன்மார் என்று அழைக்கப்படும். இவர்கள் வீரப்பூர் பகுதியை ஒரு காலத்தில் ஆட்சி செய்தவர்கள். அவர்களின் வீர வரலாற்றை இன்றும் அப்பகுதியில் சான்றுகளுடன் கோயில்கள் உள்ளது. அவர்களைத் தெய்வங்களாக வழிபடுகின்றனர்.

தங்காயி கோயில்களில் அண்ணன்மார் பொன்னர் - சங்கர் மற்றும் தங்காயி தெய்வமாக இருந்தாலும் பெரியகாண்டியம்மன் சிலையை முதன்மையாக வைத்து வழிபடுகிறார்கள். அண்ணன்மார் வாழ்ந்தபோதே பெரியகாண்டியம்மனை வழிபட்டு உள்ளார்கள். கிராமப்புறங்களில் கோயில்களில் முதன்மையாக பெரியகாண்டியம்மன், பொன்னர்-சங்கர், தங்காயி, சாம்புவன் ஆகிய தெய்வங்களுக்குக் கல்லை சிலையாக வைத்து வழிபட்டு வருகிறார்கள். சாம்புவன் மட்டும் தனியாக ஒரு கூடாரம் அமைத்து வழிபாடு செய்கிறார்கள். கோயில் கிழக்கு நோக்கியும், கோபுரம் இல்லாமலும் அமைந்துள்ளது.

அண்ணன்மார்கதை அல்லது தங்காயி கதை என்று இங்கு உள்ளவர்கள் அழைப்பார்கள். பொன்னர்-சங்கர் பிறப்பு முதல் இறப்புவரை கதைப்பாடல் மூலமும், நாடகமாகவும், இரண்டும் கலந்தும் கோயில் முன் மணல் பரப்பி அதில் நடைபெறும். இதற்கென்றே வீரப்பூரில் தனியாக கதை பாடுவோர் இருக்கின்றனர். உடுக்கை அடித்துக் கொண்டு தான் இந்தக் கதைப்பாடலைப் பாடுவார்கள். முன்பெல்லாம் ஒரு மாத காலத்திற்கு மேல் இக்கதை நடைபெறும். இப்போது ஒரு வாரம், பத்து நாள் என்று குறைந்த நாட்களிலேயே நடத்தி முடித்து விடுகிறார்கள். இக்கதையில் முக்கிய நிகழ்வுகள் என்றால் பிறப்பு, திருமணம், போர் செய்தல், கம்பம் நடுதல், மதகு தாண்டுதல், பன்றிகுத்துதல் படுகளம், தங்காயி புலம்பல் போன்றவையாகும். இறுதிப் போரில் வெற்றி பெற்றாலும் இருவரும் இறந்துவிடுவார்கள். இறுதிப் போரில் எதிரிகளை வெட்டி வீழ்த்தியதால் அங்கு இரத்த ஆறு ஓடியதாகக் கூறுகிறார்கள். வெற்றி பெற்ற போதிலும் தண்ணீர் தாகம் எடுத்து குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் தவிப்பர். அப்போது மாயவர் வந்து அம்பு விட்டு சங்கரை கொல்லுவார். பிறகு பொன்னர் மீதி

Koviloor Digital Library

இருந்த எதிரிகள் அனைவரையும் அழித்துவிட்டு தம்பி சங்கர் இறந்து கிடப்பதைப் பார்த்து, தம்பி இல்லாமல் வாழ விரும்பாத அவர் வாளை மேலே தூக்கிப்போட்டு நெஞ்சில் வாங்கி உயிரை விடுவதாக கதை முடியும். திருவிழாவின் போது வேம்பமரத்து கிளையை நட்டு வைத்திருப்பார்கள் "மாயவர் அருள் வந்த" ஒருவர் பொம்மையாக உள்ள அம்பு எய்து சங்கரை கொல்லுவார். போரின் வெற்றிச் சிறப்பையே திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். இரவு திருவிழா முடிந்தவுடன் கதை தொடரும் அப்போது தான் பொன்னர், சங்கர் இறப்பும் நிகழ்ச்சி நடைபெறும். அப்போது அந்த ஊரில் உள்ள ஆண்கள் சிலருக்கு அருள் வந்து உருண்டு பிரண்டு கிழே விழுந்து அப்படியே கை,கால் அசைவில்லாமல் கிடப்பார்கள். இந்த அருள் வருவதற்கு கதை பாடுவோர், வீரமுழக்கமிட்டு உடுக்கை அடிப்பார்கள். அருள் வராத சிலருக்குகூட அருள் வந்து விடும். அசைவற்று கிடப்பவர்களை வெள்ளைத் துணியால் மூடி வைத்துவிட்டு பருவம் அடையாத பெண் பிள்ளைகளை அமர வைத்து உடுக்கை அடித்து அருள் வரவைத்து அவர்களை ஊர் கிணற்றுக்கு அழைத்துச் சென்று சிறு குடத்தில் தீர்த்தம் (தண்ணீர்) எடுத்து வந்து தெளித்தால் தான் அசைவற்று கிடப்பவர்கள் அருளுடன் எழுவார்கள். இந்த நிகழ்வு நடக்கக் குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும். இவ்வாறு அசைவற்று இருப்பதைத்தான் "படுகளம்" என்பார்கள். படுகளம் போடுதல் என்பதுதான் திருவிழாவில் முக்கியமான நிகழ்வாகும். இது இரவில் நடைபெறும். படுகளம் முடிந்தவுடன் ஆடு, கோழி கிடா வெட்டுதல் (பலியிடல்) நடைபெறும். அடுத்தநாள் காலை கம்பம் பிடுங்குதல் நிகழ்ச்சி நடைபெறும். கதை பாட ஆரம்பித்தவுடன் ஒரு நாள் பச்சையாக நீளமான மூங்கிலை வெட்டி வந்து நட்டு வைத்து அதைச்சுற்றி நவ தானியங்கள் போட்டு நீர் ஊற்றி வளர்ப்பார்கள். அதை புடுங்கி எடுத்து ஊர் கிணற்றில் விடுவார்கள்; காவிரி அருகில் உள்ளவர்கள் ஆற்றில் விடுவார்கள். அன்று இரவு தங்காயி புலம்பல் நடைபெறும் அண்ணன்மார் பொன்னர், சங்கர் இறந்துவிடுவதால் அதை எண்ணி அழுவதை தங்காயி புலம்பல் என்று கதையின் கடைசி நிகழ்வாக நடைபெறும்.

Koviloor Digital Library

குலதெய்வங்களாக வனங்கக்கூடிய வெங்கரையம்மன், அங்காளம்மன், கவுண்டிச்சியம்மன், படைவெட்டியம்மன், பச்சையம்மன், செல்லாண்டியம்மன் போன்ற கோயில்களும் இருக்கின்றன. அனைத்து கோயில்களின் வழிபாட்டு முறையும் திருவிழா கொண்டாட்டமும் ஒரே மாதிரி இருந்தாலும் ஒரு சில வேறுபாடுகளும் தனிவழிபாடும் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு தனிச்சிறப்பு இருப்பதைக் காணமுடிகிறது.

திருவிழா

குலதெய்வமாக இருந்தாலும் அம்மன் தெய்வமாக இருந்தாலும் வருடத்திற்கு ஒரு முறை தான் திருவிழா நடைபெறும். திருவிழாவில் விரதம் இருந்து பூக்குழி இறங்குதல், அக்னிச்சட்டி எடுத்தல், அலகு குத்தல், மொட்டையடித்தல், கரகம் எடுத்தல் போன்ற வழிபாடுகள் நடைபெறும். பூக்குழி இறங்குபவர்கள் மஞ்சள் ஆடை அணிவது வழக்கம். திருவிழா நாள் அன்று மாவிளக்குப் பூசை முடிந்தவுடன் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கரகாட்டம், கூத்து, நாடகம், திரைப்படம், பாட்டுக்கச்சேரி, பட்டிமன்றம், ஆடல்பாடல் நிகழ்ச்சி விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். வேண்டுதலுக்காக ஆடு, கோழி போன்றவை பலியிடுவார்கள். நோய்வாய்ப்பட்டிருந்தால், திருமணம் நடைபெற, தொழில் சிறப்பாக அமைய, வயலில் விளைச்சல் பெருக என்று பல வேண்டுதல்கள் வைத்து திருவிழா காலங்களில் பலியிடுவார்கள். அதனால் உற்றார் உறவினர்கள், நண்பர்களை அழைத்து திருவிழாவின் அடுத்த நாள் கிடாவெட்டு (கறிவிருந்து) நடைபெறும். மஞ்சள் நீர் விளையாட்டோடு திருவிழா நிறைவடையும்.

இவ்வாறு பரமத்தி வேலூர் பகுதியில் உள்ள சிறு தெய்வ கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் வெறும் வழிபாட்டு முறைகளோடு இல்லாமல் காலங்காலமாக மரபாகவும், பண்பாடாகவும் கடைபிடித்து வருகிறார்கள். இந்தப் பண்பாடுகள் கோயில் அமைப்பு முறையிலும், வழிபாட்டு முறையிலும் காணமுடிகிறது. மக்கள் வாழ்வியல் முறையில் கலந்து, அவர்கள் கடைபிடிக்கும் பண்பாடாகவே இன்றளவும் உள்ளது.

Koviloor Digital Library

கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீசுவரர் கோயில் சூரிய பீடம்

முனைவர். பா. பெருந்தேவி,
உதவிப் பேராசிரியர்,
முதுகலை மற்றும் ஆராய்ச்சி வரலாற்றுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, முசிறி

முதலாம் இராசேந்திரசோழன் தமிழக வரலாற்றில் தனியிடம் பெற்ற மன்னன். கங்கை முதல் கடாரம் வரை வெற்றிகொண்ட மாமன்னன் முதலாம் இராசேந்திர சோழன் ஆவான். கங்கை வரை படையெடுத்து வெற்றி பெற்று- தான் பெற்ற வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரை உருவாக்கி, கங்கை கொண்ட சோழிச்சுவரம் என்னும் சிவாலயத்தை பெரிய அளவில் உருவாக்கி, சோழர் காலக் கலை மற்றும் கட்டடக்கலையின் உன்னதநிலையை உலகிற்கு உணர்த்தினான். இக்கோயில் நுண்ணிய வேலைப்பாடு மிக்க நூற்றுக்கணக்கான சிற்பங்களைக் கொண்ட சிற்பக் கருவூலமாக திகழ்கிறது. இது மட்டுமில்லாமல் தான் வெற்றி கண்ட நாடுகளிலிருந்து வெற்றியின் அடையாளமாகச் சிற்பங்களை எடுத்து வந்து இங்கு வழிபாட்டில் அமைத்தான். அவ்வாறு கொணரப்பட்ட வெற்றிக் கலைச்சின்னங்களில் கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள சூரியபீடம் எனும் சிற்பதொகுதி குறிப்பிடத் தகுந்ததாகும்.

சூரியபீடமானது நவக்கிரகமாக வணங்கப்படுகிறது. இக்கோ-யிலின் மகாமண்டபத்தின் வடகிழக்கு மூலையில் சூரிய பீடம் காணப்படுகிறது. மலர்ந்த தாமரை வடிவில் அமைந்துள்ள சூரியனை அழகிய தேர் போல் உருவகித்து ஏழு குதிரைகள் இழுத்துச் செல்வது போல் அமைக்கப்பட்டுள்ள இச்சிற்பம் இந்தியச் சிற்பங்களிலேயே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது எனலாம். சூரிய வழிபாடு மற்றும் நவகிரகவழிபாடு என்பது தமிழகத்தில் தொன்மையாகக் காணப்படும் ஒன்றாகும். வேதகாலம் முதற்கொண்டே நவக்கிரக வழிபாடு கடைபிடிக்கப்பட்டது.

Koviloor Digital Library

வடஇந்தியாவில் மத்திய காலத்தில் 'கிரகயாகா' என்ற பெயரில் நடத்தப்பட்ட விழாக்கள் நவக்கிரக வழிபாட்டை வெளிக்கொணர்கின்றது. குப்தர்கள் காலத்திலும் இவ்வழிபாடு மேற்கொள்ளப்பட்டதைப் பல்வேறு புராணங்களும் தெரிவிக்கின்றன. தென்னிந்தியாவிலும் இவ்வழிபாடு சங்க காலம் தொட்டு சீரிய முறையில் இருந்துள்ளது. தொல்காப்பியத்திலும் சூரியவழிபாடு மற்றும் நவகிரக வழிபாட்டைக் குறித்து பலக் குறிப்புகள் காணப்படுகின்றன. திருஞானசம்பந்தர் எழுதிய கோளறு திருப்பதிகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

வேயுறு தோளி பங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணைத் தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பி ரெண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே[1]

சூரியன், சந்திரன், செவ்வாய் (அங்காரகன்), புதன், குரு (பிரகஸ்பதி), சுக்கிரன், சனி, ராகு மற்றும் கேது ஆகிய ஒன்பது தெய்வங்களே ஒன்பது கோளிற்குரிய தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. நவக்கிரகங்களால்தான் உலகத்தின் ஒவ்வொரு செயல்பாடுகளும் இருப்பதாக நம்பப்படுகிறது. ஒவ்வொரு நாளும் நல்லது கெட்டதுகளின் நகர்வுத்தன்மையே நவக்கிரகங்களிடம் இருப்பதாகக் கருதப்படுகிறது. தென்னிந்தியாவில் பெரும்பாலான சிவன் கோவில்களில் நவக்கிரகங்கள் ஆகம விதியின் படி கருவறையின் வடகிழக்குப் பகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சூரியனை நடுவில் அமைத்து மற்ற கிரகங்கள் சுற்றிலும் அமைக்கப்படுகின்றன. சூரியன் கிழக்கு நோக்கியும் மற்ற கிரகங்கள் ஒன்றையொன்று நோக்காமல் ஒவ்வொரு திக்குகளிலும் அமைக்கப்படுகின்றன.

இந்த ஒன்பது கிரகங்களில் சூரியனே முதன்மையான இடத்தை பெறுகின்றார். சூரிய வணக்கம் பழமையான தொன்றுதொட்ட வழக்கமாக உலகெங்கிலும் நிலவி வந்துள்ளது. சூரியனை வழிபடவேண்டிய முறைகளை வகுத்தளித்தவர் ஆதிசங்கரரே ஆவார். சூரிய புராணம் சூரிய பகவானை ஆதிதேவர் என்று

Koviloor Digital Library

சிறப்பித்துக் கூறுவதால் ஆதித்யன் என்ற சிறப்பு பெயரும் ஏற்படலாயிற்று, ஆதித்யன் என்றால் முதன்மையானவர் என்று பொருள். சங்கத் தமிழ் இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கதிரவனை ஞாயிறு என்று அழைத்துப் போற்றுகிறார்.

"உலகம் உவப்ப வலன் ஏற்பு திருதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு"[2]

என வாழ்த்தியே பாடலைத் தொடங்குகிறார். சிலப்பதிகாரத்திலும் இளங்கோ அடிகள் கதிரவனை வாழ்த்தித் தொடங்குகிறார்.

"ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்! காவிரி நாடன்
திகிரிபோற் பொற்கோட்டு மேறு வலந்திரிதலான்"[3]

சூரியன் ஆதித்தன், கதிரவன், ஞாயிறு, தினகரன், பகலவன் என அழைக்கப்படுகிறார். உலகெங்கிலும் சூரியவழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. சூரியனின் சிற்பங்கள் தமிழகத்தில் கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கப் பெறுகின்றன. பல்லவர்கள் காலத்தில் திருச்சிராப்பள்ளி மற்றும் மாமல்லபுரம் குடைவரைக் கோயில்களில் சூரியனின் சிற்பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. சோழர்கள் காலத்தில் சூரிய வழிபாடு உச்சநிலை எட்டியது. ஏனெனில் சோழர்கள் தங்களை சூரியனின் வழிவந்தவர்களாக கருதினார்.[4] கோயில்களில் அமைக்கப்படும் பரிவார தேவதைகளில் ஒன்றாக சூரியனை அமைத்தனர். கங்கை கொண்ட சோழபுரத்தில் கிடைக்கப்பெற்ற பன்னிரண்டு ஆதித்தர்களின் (துவாதச ஆதித்தர்கள்) சிலைகளின் மூலம் சோழர்கள் காலத்தில் சூரிய வழிபாடு சீரிய முறையில் இருந்ததை அறிந்துக்கொள்ளமுடிகிறது.[5] முதலாம் குலோத்துங்கசோழன் காலத்தில்தான் சூரிய கடவுளுக்கென தனிக்கோயில் அமைக்கப்பட்டது. அக்கோயில் சூரியனார்கோவில் என அழைக்கப்பட்டு தற்போதும் வழிபாட்டில் சிறப்புப்பெற்று விளங்குகிறது.

ஆகமங்களில் சூரியன் சிவந்த நிறமுடையவராகவும், மூன்று கண்கள், நான்கு கைகள் உடையவராகவும், தாமரை மலர்களை ஏந்தியவராகவும், ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தினை உடையவராகவும் சித்தரிக்கப்படுகிறார். சூரியன் மற்றும்

Koviloor Digital Library

நவக்கிரக உருவமைதிகள் இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு சிவாலயங்களிலும் காணப்படுகின்றன. அவற்றுள் கங்கை கொண்ட கோழபுரத்தில் காணப்படும் நவக்கிரக அமைப்பு தனித்துவம் பெற்றதாகும்.[6]

கங்கைகொண்ட சோழபுரத்தில் காணப்படும நவக்கிரக மண்டலமானது, கமலயந்திரம் அல்லது சௌரபீடம் என அழைக்கப்படுகிறது. சூரியனுடைய தேர், திக்பாலகர்கள் மேலே எட்டுக்கிரகங்கள் நடுவில் தாமரை பீடம் ஆகிய அனைத்தும் ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பீடமானது ஒரு தேரின் வடிவைக் கொண்டுள்ளது. தேர்த்தட்டின் மேல் சூரியன் ஓர் அலர்ந்த தாமரை உருவத்தில் காட்சியளிக்கிறான். அதன்மேல் எட்டுக்கிரகங்கள் திசைக்கு ஒன்றாக உள்ளன. தேரின் அடிப்பகுதி சக்கரங்களைக் கொண்டுள்ளது. தேரினை ஏழுக்குதிரைகள் இழுத்துச் செல்வதுதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. ஏழு குதிரைககள் வாரத்தின் ஏழு நாட்களைக் குறிக்கின்றன. ரதத்தை அருணன் ஓட்டும் காட்சி அழகுற வடிக்கப்பட்டுள்ளது. ரதத்தின் இருப்புறங்களிலும் கந்தவர் கின்னரர் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. தேரின் சக்கரங்கள் பன்னிரண்டு பூவிதழ்களைப் பிரித்தது போல் செதுக்கப்பட்டுள்ளன. இது ஆண்டின் பன்னிரண்டு மாதங்களைக் காட்டுகிறது. இச்சிற்பத்தின் கலைத்திறனும் அழகும் மெச்சும் வண்ணம் அமைந்துள்ளன.[7]இச்சிற்பம் சாளுக்கியரின் சிற்பத்திறனைக் காட்டுகிறது. இது இராசேந்திர சோழன் சாளுக்கியரைப் போரில் வென்றபின் எடுத்து வந்த சிற்பமாக இருக்கலாம் என டாக்டர் இரா.நாகசாமி கருதுகிறார்.[8] இராசேந்திர சோழன் கோயில் எடுத்த காலம் முதல் இன்று வரை இச்சூரிய பீடம் வழிபாட்டில் உள்ளது.

இக்கோயிலில் பீடத்தை தவிர, சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பல சிற்பங்கள் காணப்படுகின்றன. சூரியபீடத்தின் அருகில் தெற்குதிசை நோக்கிய வண்ணம் சிம்மத்தின் மீது அமர்ந்து காணப்படும் துர்க்கையின் சிற்பமும் துர்க்கையின் அருகிலுள்ள சூரியனின் சிற்பமும் சோழர்வெற்றியின் நினைவாக சாளுக்கிய நாட்டிலிருந்து

Koviloor Digital Library

கொண்டுவரப்பட்டதாகும்.[9]

இராசேந்திரசோழன், இராசாதிராசன், குலோத்துங்கன் முதலிய சோழப் பெருவேந்தர்கள் பல நாடுகளில் இருந்துகொண்டு வந்த வெற்றிச் செல்வங்களை ஒரே இடத்திலின்றி பல இடங்களில் பரவலாகத் தம் வெற்றியின் நினைவுச் சின்னங்களாக நிறுவியுள்ளனர். சோழவேந்தர்கள் வடநாட்டு வெற்றியைக் குவிப்பதற்காகத் தோளோடு தோள் நின்ற தளபதிகள், சேனாதிபதிகள், வீரர்கள் போன்றோர் தோன்றிய இடங்களில் ஆங்காங்கே அவற்றை வெற்றியின் அடையாளமாக விட்டு வைத்துள்ளதை இன்றும் காணமுடிகிறது. அவற்றைத் தன் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள செங்கமேடு, மண்மோடு, மெய்காவல் புத்தூர், வீராரெட்டிதெரு, கணக்கு விநாயகர் கோயில், திரிலோகி, கும்பகோணம், திருவதிகை, அரியலூர் போன்ற இடங்களில் நிறுவியுள்ளதை நாம் காணமுடிகிறது.[10]

அனைத்து வெற்றிச்சின்னங்களிலும் சூரியபீடம் மிகவும் சிறப்பு பெற்றதாகவும் புகழ்பெற்றதாகவும் கருதப்படுகிறது. பிற்காலங்களில் தோன்றிய ரத மண்டப அமைப்புகளுக்கு முன்னோடியாகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டின் கலை, காலத்தையும் தேசத்தையும் கடந்து, பிறவற்றோடு தொடர்பு கொண்டு தானும் செழித்துப் பிறவற்றையும் செழிக்கச் செய்யும் என்பதற்கு இச்சிற்பம் சிறந்த சான்றாக திகழ்கின்றது.

அடிக்குறிப்புகள்

1. திருநாவுக்கரசர், தேவாரம், தர்மபுரம்: ஆதின வெளியீடு, 1963. ப.62.
2. சோமசுந்தரனார், றி.கூஷி. (ப) திருமுருகாற்றுப்படை, சென்னை: தென்னிந்திய சைவசிந்தாந்த நுற்பதிப்பு கழகம், 1960, ப.34
3. நரசிம்மன்.நி., சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் சமயங்கள், சென்னை: ஈஸ்வரி ஆர்ட்ஸ், 1990, ப.9.
4. சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச்சோழர் வரலாறு, அண்ணாமலை நகர், அண்ணாமலை பல்கலைக்கழகம், 1974, பக்-312-13.
5. ஸ்ரீதர், ஷி., சந்திரமூர்த்தி, கங்கை கொண்ட சோழபுரம்,

Koviloor Digital Library

தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை, 2005, ப.18

6. சுப்ரமணியன், தி.நா, கங்கை கொண்ட சோழன், சென்னை, விவேக போதினி காரியாலயம், 1949, ப.12.
7. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி ஆறு, தஞ்சை, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், ப.310
8. கலைக்கோவன், இ.ரா., கலைவளர்த்த திருக்கோவிலூர், சென்னை, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1984, ப.43.
9. நாகசாமி, ஸி.,, வசந்தி, கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு, சென்னை, தமிழ்நாடு அர• தொல்லியல் துறை, 2012, ப.12.
10. தாத்தாசார்யா, கங்கைகொண்ட சோழபுரம், சென்னை: விவேகபோதினி காரியாலயம், 1949, ப.29.

Koviloor Digital Library

பூசை முறைகள்

திருமிகு. மோ.மஞ்சு அருமைத்தாட்சி
உதவிப்பேராசிரியர்
இதயா மகளிர் கல்லூரி, சருகனி

முன்னுரை

இறைவனின் கருணையைப் பெறுவதற்கும் அவன், அவன் திருவுள்ளம் அறிவதற்கும், மனிதனோடு இறைமைக்குள்ள தொடர்பைச் சுட்டவும் ஒன்றுபடுத்தவும், நெறிமுறையான வாழ்விற்கும் ஆன்மீகச் சிந்தனைக்கும் சமயம் சார்ந்த பூசை முறை அவசியமாகிறது. தெய்வத்திற்கு நன்றி தெரிவிப்பதன் மூலமாக அவன் இயற்கை சார்நத பொருட்களைக் கொண்டே நடைபெறுகிறது. மனிதன் தன்னுடைய வசதிக்கேற்ப பூசை முறைகளை மாற்றியுள்ளான். பூசை என்பது இந்து வழிபாட்டு முறைகள் ஒன்றாகும். பொதுவாக தெய்வத் திருவுருங்களை பற்றி உணர்வுடன் வழிபடுதலே பூசை அல்லது பூசனை என்று கூறப்படுகிறது. அதோடு குருமார்கள், மகான்கள் போற்றுதலுக்குரிய பெரியோர்கள், முன்னோர்கள், பெற்றோர் ஆகியோரை வழிபாட்டுணர்வுடன் தொழுவதும் பூசை என்பதில் அடங்கும்.

பூசை முறைகள்

ஒவ்வொரு கோயில்களிலும் பொருளாதாரத்திற்கேற்ப பூசை நியமங்கள் மாறிவருகிறது.

பஞ்சசுத்தி

பூசை செய்பவர் உடல் சுத்தமும் உளச்சுத்தமும் உடைய வராக இருத்தல் வேண்டும் உடல் சுத்தத்திற்கு நீராடுதல் சுத்தமான ஆடை உடுத்ததல், விபூதி, உருத்திராக்க அணிதல் நாமதாரணம் துளசிமணி மாலை அணிதல் முதலியன இன்றியமையாதவையாகும். உளச் சுத்தத்திற்கு ஐம்புலஅடக்கமும், தீக்கை பெறுதலும் அவசியமானவை. பூசை முறைகளைக் காரிய காரணத்தோடு அறிந்திருத்தல் நலம். இவ்வித சுத்திகளை பஞ்

Koviloor Digital Library

சசுத்தி எனக்கூறுவர் பஞ்ச சுத்தி, என்பது ஆத்மசுத்தி, ஸ்தானசுத்தி , திரிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தியென ஐந்து வகைப்படும். ஆத்மசுத்தியில் அந்தர்யாகமும் சமாதியும் அடங்கும்.

ஆத்மசுத்தி

பூசை செய்யும் ஆசாரியின் தனது உடம்பை திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனிபோல சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தான சுத்தி (பூசை இடத்தைச் சுத்தம் செய்தல்)

பூசிக்கும் ஆலயமும், மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பகிரகமும், இதர மூர்த்திகள் வீற்றிருக்கும் இடங்களும் எப்பொழுதும் சுத்தமானதாக இருக்கச் செய்யவேண்டும்

திரவியசுத்தி (பூசைக்குரிய பொருள்களைச் சுத்தம் செய்தல்)

பூசைக்குரிய பாத்திரங்களை நன்றாகக் கழுவி சங்கநீர் முதலிய பூசைக்குரிய பதார்த்தங்களில் அர்க்கிய நீரைத் தெளித்து சுத்தம் செய்ய வேண்டும் என்பதை நாவுக்கரசர் திருத்தாண்டகத்தில்,

"ஆவாகி அவினில் ஐந்துமாகி அறிவாகி ஆழலாகி அவியுமாகி
நாவாகிநாவுக்கோர் உரையமாகி நாதனாய் பேவதத்தின் உரையுமாகி
பூவாகிப்பூவக்கோர் நாற்றமாகிப் பூக்களில் வாசமாய் நின்றானாகித்
தேவாதித் தேவர்முதலுமாகிச் செழுஞ்சுடராய் சென்றடிகள் நின்றவாறே

என்று திருநாவுக்கரசர் பொது நின்ற திருத்தாண்டகத்தில் பாடுவார்

மந்திரசுத்தி

பிஜாஷர மந்திரத்தை சுழுமு னை நாடியில் அடக்கி அந்தந்த மூர்த்திக்குரிய மூலமந்திரத்தைப் பத்துமுறை கூற வேண்டும்.

இலிங்கசுத்தி

அபிஷேக பாத்திரத்தில் நீர்நிரப்பி கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களை அதில் ஆவாகனம் செய்து இலிங்கத்தில்

Koviloor Digital Library

அபிசேகம் செய்யவேண்டும். விக்கிரகங்களில் ஒட்டிக் கிடக்கும் மெழுக்கினைக் களைந்து சுத்த ஆடை கட்ட வேண்டும்.

சோட சோபசாரங்கள்

இது இறைவனுக்குரிய பூசையில் செய்யப்படும் பதினாறு உபசாரங்களாகும்

ஆவாகனம் (நிலைநிறுத்தல்)

இறைவனை வரவழைத்து நேர்முகப்படுத்தி விக்கிரகத்தில் சேர்ப்பதற்கு ஆவாகனம் என்று பெயர் இது மூலதாரத்திலுள்ள ஜீவசைதன்யத்தை எடுத்துச் சுஷம்னை வழியாக மேலேற்றிக்கொண்டு வந்ததாகச் சங்கற்பம் செய்தல்

ஸ்தாபனம்

இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்து பீடத்தில் உள்ள விக்கிரத்தில் இறைவனை அமர்த்துதல்

சந்திதானம்

இது பூசிக்கப்படும் மூர்த்தி நமக்கு அனுக்கிரகம் செய்யும் முறையும் பூஜகன் அருள் பெரும் முறையுமாகும்.

சந்திரோதனம்

இறவீவா! அடியேனிடம் என்றும் கருணையோடு இருக்க வேண்டும் என வேண்டி பூசை முடியும்வரை சாந்நித்யம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதலாகும்.

அவகுண்டனம்

விக்கிரத்தைச் சுற்றிக் கவசமந்திரத்தில் மூன்று அகழ் உண்டாக்கித் தடைகள் வராமல் அம்மந்திரத்தாலேயே அதனை மூடவேண்டும்.

அபிடேகம்

எண்ணெய், மாப்பொடி, நெல்லி முள்ளி, மஞ்சள் பொடி, தயிர், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தேன், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சைப்பழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி,

Koviloor Digital Library

சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் இவற்றை வரிசைப்படி அபிசேகம் செய்ய வேண்டும். அபிசேகத்திற்கு தேனு முத்திரை காட்டவேண்டும். தேனு முத்திரை என்பது பசுவின் அகடு போன்ற முத்திரையாகும்.

பாத்யம்

சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருள்களையும் பாத்திய நீரில் கலந்த பாதய்த்தில் விட வேண்டும்.

ஆசமநியம்

நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைகற்பூரம் நாவற்பழம், ஜாதிக்காய் குங்கமப்பூ என்ற பொருள்களை இட்டுச் சம்ஹிதா மந்திரம் சொல்லி பாதத்தினடியில் வைக்கவேண்டும்.

அர்க்கியம்

இறைவனுக்கு மூலமந்திரங்களைக் கூறி எள், யவநெல், தர்பபைநுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு முதலியவற்றைக் கலந்த நீரால் அலீக்கியம் கொடுக்க வேண்டும்.

மாலை சாத்தல்

அழகிய பூக்களால் இறைவனை அலங்கரித்துக் கண்கள் குளிரக் கண்டகளிக்கவேண்டும் இதனை நாவுக்கரசர்

“அட்ட மரமலர் சூடியடும்பொடு
வட்டப்புன் சடைமரமறைக் காடரோ
நட்டமரடியும் நான்மறைபாடியும்
இட்டமாக இருக்கு மிடமீது” (திருநாவுக்கரசர் 5ம் திருமுறை)

தூபம்

சந்நிதியல் சாம்பிராணிப் புகை புகைத்தல் தூபம் எனப்படும். இது கிரியாசக்தியைக் குறிக்கும். இவை பலமான அஞ் ஞானத்தை கிரியா சக்தியால் அகற்றலாம் என்பது தத்துவம். அகில், கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் முதலியவை தூபப்பொருள்களாகும் தூபம் பாபங்களை அகற்றும்.

Koviloor Digital Library

தீபம்

தீபம் ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கின்றது. தீபத்திற்குத்திரி கற்பூரம், துணி, நூல்பஞ்சு இவைகளில் எதையாவது உபயோகிக்கலாம். பசுவின் நெய் உபயோகிப்பது உத்தமம். எண்ணெய் மத்திமம். தீபத்தை ஏற்றி நீரிஷணம் செய்து பூக்களால் அர்ச்சித்துத் தீபமுத்திரைக் காட்டி மணி அடித்து மந்திரங்கள் கூறி கிரீடம் முதல் பாதம் வரை காட்டவேண்டும்.

நைவேத்தியம்

இதற்கு நெல்லரிசி, கோதுமை, முளை அரிசி இவை உத்தமம் வெள்ளை அரிசியைவிட சிறந்த நெல்லரிசி நிவேதனத்துடன் மிக உத்தமம். நெல் கல், உமி, ரோமம் இவை அரிசியில் கலந்திருக்கக் கூடாது. சுத்த அன்னம், பயாசம், பொங்கல் முதலிய சித்திரான்னங்களும் நிவேதனத்துக்கு உகந்தவையாகும். ஆத்மாவின் குணமாகிய அகங்காரம், சங்கற்பம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்கும் சமர்ப்பிப்பதை இது குறிக்கிறது.

பாநீயம்

வாசனையுள்ள தீர்த்தத்தை ஈசுவரப் பிரீதிக்காகச் சமர்ப்பித்தலாகும்

சமர்ப்பணம்

மூலமந்திரத்தை நூற்றெட்டுமுறை உருவேற்றி அதை ஈசுவனுக்குச் சமர்ப்பிக்கவேண்டும் ஜபம், பூசை, ஹோமம் முதலிய எல்லாப் புண்ணியச் செயல்களையும் அர்ச்சகர் ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பகவான் அதனை ஏற்றுக் கொண்டு பத்தி, முத்திகளை நமக்கு அருளுகிறான்.

தீபஆராதனை

பலவித தீபங்களை ஈசுவர சந்நதியில் காட்டிச் செய்யும் ஆராதனைக்குத் தீபாராதனை என்று பெயர். தீபாரதனை வேளையில் உண்டாகும் மேலதாளங்கள் மணி ஒலிகளும் சங்க நாதங்களும் அரக்கர் பிசாசர் பிரம ராஷஸர் முதலியோரை வெகு

Koviloor Digital Library

தொலைவில் ஓட்டுகின்றன. தீபாராதனை பதினாறு வகைப்படும் அவையாவன

*1.*தூபம் *2.*புஷ்பதீபம் *3.*நாகதீபம் *4.*விருஷதீபம் *5.*மேடுதீபம் *6.* புருஷாமிருகதீபம் *7.*கும்பதீபம் *8.*ஆராத்தரிகம் *9.*நஷத்திரதீபம் *10.*கற்பூரதீபம் *11.*பஸ்மோபசாரம் *12.* கண்ணாடி காட்டல் *13.*கடைபிடித்தல் *14.*கொடிகாட்டல் *15.*சாமரம் வீசுதல் *16.*விசிறிவீசுதல்

தீபாலங்காரங்களின் தத்துவம் ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி இறுதியல் கற்பூரதீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றி விடுதலே ஆகும்.

குண்டலினி ஆறு ஆதாரங்களின் வழியாக மேலேறிச் செல்லும் பொழுது அந்தந்த ஆதாரங்களில் உண்டாகும் அனுபவங்கள் ஒளி, ஓசை, தீபம், ருசி, தரிசனம் முதலியவற்றைத் தீபம், வாத்தியம் அலங்காரம், நைவேத்யம் மூர்த்தி என்று விளக்கப்பட்டுள்ளது. அர்ச்சகர்கள் ஞான ஒளியால் இறைவனைக் காட்ட ஜீவன் இறைவனைக் கண்டுகளிக்கின்றான்.

முடிவுரை

கோயில்களில் நடக்கும் விரிவான பூசைகளில் இத்துடன் இசைபாடுதல், இசைக்கருவிகளை முழக்குதல், நடனமாடுதல் ஆகிய செயல்களும் இடம் பெறுகிறது. இதுகருதியே பல பெரிய இந்துக் கோயில்களில் பாடகர்கள், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், போன்ற கருவிகளில் வல்ல இசைக்கலைஞர்கள் நடனமாதர்கள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர் . ஆனால் இன்று அவசர உலகில் இருக்கின்ற மக்களால் கோயில்களில் நடக்கும் பூசை முறைகளில் கலந்து கொள்ள முடியவில்லை. இறைவனுக்கு நடைபெற்ற பூசை முறைகள் மக்களுக்கு தகுந்தாற்போல மாறி வருகிறது.

Koviloor Digital Library

புறநானூற்றில் சமயம்

முனைவர் பி.மலர்விழி
இணைப்பேராசிரியர் - துறைத்தலைவர்
பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர்

பழந்தமிழர் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது சங்க இலக்கியங்களிலிருந்து தெரிகிறது. சமயம், மதம் ஆகிய இரு சொற்களுக்கும் விளக்கம் கூறும்பொழுது தேவநேயப் பாவாணர்,"ஒரு தெய்வத்தை அல்லது இறைவனை மதித்து வழிபடுவது மதம்; இறைவனை இம்மையிலேனும் மறுமை-யிலேனும் அடைவதற்குச் சமைவது சமயம்" என்று குறிப்பிடுகிறார்.(தமிழர் மதம் பக்.3) புறநானூற்றில் சிவன், முருகன், திருமால், பலராமன், அருந்ததி, எமன் ஆகிய கடவுளர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிவன்

புறநானூற்றில் கடவுள் வாழ்த்துப் பாடலிலேயே சிவனைப் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. சிவபெருமான் முக்கட்செல்வர் கறைமிடற்றண்ணல், நீலமணிமிடற்றோன், எனப் பலபெயர்களால் அழைக்கப்பெறுகிறான்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கண்ணனார் வாழ்த்துங்கால் பகைவர் அரண்களைக் கைப்பற்றி, அங்கிருந்து கொள்ளப்பட்ட நல்ல அணிகலன்களைப் பரிசிலர்க்கு நல்கி, முனிவர்களால் தொழப்பெறும் முக்கண் படைத்த இறைவனது கோயிலை வலம் வரும் பொருட்டு நின்தலை வணங்குவதாக எனச் சிவனை வழிபடுமாறு அறிவுறுத்துகிறார்.

"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த" (புறம் 6:18-19)

என்பன அப்புலவர் மொழிகள். இவை சிவபெருமானை வழிபடும் மரபு உண்டு என்பதை உணர்த்துகின்றன. மூவேந்தருள்ளும் மிகச் சிறப்பெய்தி விளங்கிய இலவந்திகைப்

Koviloor Digital Library

பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடும் மருதனிள நாகனார்

கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல (புறம் 55 :1,2–5)

என முப்புரம் எரித்த சிவபெருமானின் நெற்றிக்கண் பகைவரை அழிப்பதில் எத்துணை ஆற்றல் உடையதோ அத்துணையாற்றல் உடையவன் பாண்டியன் எனப் பாராட்டுகிறார்.

நீலமணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே (புறம் 91:5–7)

என அதியமான் இடையூறுகளைக் கடந்து நெடுங்காலம் வாழ அழிவற்ற பரம்பொருளாகிய சிவபெருமானை உவமையாகக் கூறுகிறார்.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனைப் புகழ்ந்துரைக்கும் ஆவூர் மூலங்கிழார்

தொன்றுபுரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதுநூல் (புறம் 166:1–4)

என வேதங்கள் சிவபெருமானின் நாவில் எப்போதும் நிலைத்திருக்கும் என்கிறார். வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் என்ற புலவர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் செல்வம் என்றும் நிலைபேறுடையது என்பதை "ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம்" என உவமையாகப் பாடுகிறார்.

முருகன்

புறநானூற்றில் முருகனைப்பற்றிஒன்பது பாடல்களில் பாடப் பெறுகின்றது. போரில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் சீற்றம் முருகக்கடவுளின் சீற்றம் போலக் கடுமையானதும் அஞ் சத்தக்கதுமாகும் என்பதை

"முருகற் சீற்றத் துருகெழு குருசில்" (புறம் 16:12)

என்ற தம் பாடலடியின் வாயிலாகப் பாண்டரங்கனார் என்ற புலவர் குறிப்பிடுகிறார். இங்கு முருகக் கடவுளின் சீற்றம் உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் இயல்புகளைப் பாடும் கல்லாடனார் நெடுஞ்செழியனின் வீரர்கள் முருகனின் சுற்றத்துக்கு ஒப்பானவர்கள் என்கிறார்.

"கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்
சூர்நவை முருகன் சுற்றத்தன்ன நின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" (புறம் 23: 3-5)

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடும், மதுரை இளநாகனார் என்ற புலவர்

வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய,
வடு ஆழ் எக்கர் மணலினும் பலவே!" (புறம் 55 : 19-24)

என முருகன் திருச்செந்தூரில் உறைவதைக் குறிப்பிடுகிறார். தேர்வண் மலையனைச் செவ்வேளுக்கு ஒப்பிடும் வடமவண்ணகன் பெருஞ்சாத்தனார்.

"ஒருநீ ஆயினை பெரும! பெரு மழைக்கு
இருக்கை சான்ற உயர்மலைத்
திருத்தகு சேஎய் நிற் பெற்றிசி னோர்க்கே! (புறம் 125: 18-20)

எனப் புகழ்கிறார். கபிலரோ செருவெஞ்சேய் என்று பாரியை முருகவேளுக்கு ஒப்பிடுகிறார்.

திருமால்

புறநானூற்றில் இரண்டு பாடல்கள் திருமாலின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றன. பொதுவாக அரசர்களைத் திருமாலுக்கு ஒப்பிடுவது புலவர் வழக்கம் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் திருமாலுக்கொப்பான புகழ்சான்றவன் என்பதை,

..........மாயோனன்ன
உரைசால் சிறப்பிற் புகழ்சால் மாற!

என்று காரிக்கண்ணனார் பாடும் வரிகளால் அறியலாம். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும்

Koviloor Digital Library

பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டு காரிக்கண்ணனார் மகிழ்ந்து, அக் காட்சி பால்நிற மேனியும் பனைக்கொடியுமுடைய பலராமனும் நீலமேனியும் ஆழிப்படையுமுடைய திருமாலும் ஒருங்கிருத்தல்போல உள்ளதைப்

"பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்கு" (புறம் 58 : 14-16)

எனப் புகழ்ந்துரைக்கிறார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைச் சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் ஆகிய கடவுளர்களோடு ஒப்பிட்டு நக்கீரனார் பாடுகிறார். சிவனையும் வலிமையால் பலராமனையும் புகழால் பகைவரைக் கொல்லும் திருமாலையும் கருதியது முடித்தலால் முருகனையும் ஒத்தவன் என நன்மாறனின் ஆற்றல், வலிமை, வீரம், நினைத்தது நிறைவேற்றல் ஆகிய சிறப்பியல்புகளை எடுத்துரைக்கிறார்

அருந்ததி

மலையமான் திருமுடிக்காரியின் மனைவியின் கற்பைப் பாடவந்த கபிலர்

"வடமீன் புரையும் கற்பின் மடமொழி" (புறம் 122:8)

என வடதிசையில் விளங்கும் அருந்ததியைப் போன்று கற்பொழுக்கத்தில் சிறந்தவள் என்கிறார்.

திருமகள்

இல்லறத்தாருக்கே செல்வநாட்டம், தவத்தின்பால் ஈடுபட்டோர் செல்வத்தை நாடார் என்பதை

"விட்டோரை விடாஅள் திருவே
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே" (புறம் 358:6-7)

என்று வான்மிகியார் பாடுகிறார். மேலும்,

"மாமறுத்த மலர்மார்பிற்" (புறம் 7:5)

என்று கருங்குழலாதனார் திருமகள் நிலைத்திருக்கும் கரிகாலனின் செல்வ வளத்தைக் குறித்துப்பாடுகிறார்.

Koviloor Digital Library

திருமகள் செல்வக் கடவுளாக கருதப்படுகிறாள் அதனால் திரு என்ற பெயராலும் மா என்ற பெயராலும் புறநானூற்றில் குறிப்பிடப்படுகிறாள்.

எமன்

கூற்றுவனைப்பற்றிய குறிப்பு புறநானூற்றில் இருபதுக்கும் மேற்பட்ட பாடல்களில் இடம்பெறுகிறது.

"மருந்தில் கூற்றம்" (புறம் 3,180) என எமன் குறிப்பிடப்படுவ-திலிருந்து என்ன தான் மருத்துவம் வளர்ந்து இருந்தாலும் தொழில்நுட்பம் சிறந்திருந்தாலும், இறந்தவனை உயிர்ப்பிக்க எப்போதும் வாய்ப்பில்லை என்ற உண்மையை உணர்த்தும் வகையில் இத்தொடர் புலவர்களால் கையாளப்பட்டுள்ளது. சான்றுக்குச் சில இடங்கள் பின்வருமாறு:

"நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண் டன்ன முன்பொடு
மாற்று இரு வேந்தர் மண்நோக் கினையே" (புறம் 42:22-24)

முடிவுரை

சங்க இலக்கியமாகிய புறநானூற்றின் பல பாடல்களில் சமயம் குறித்தும் சமயக் கடவுள் குறித்தும் பாடப் பெற்றிருப்பதை இதன் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

Koviloor Digital Library

வைத்தீசுவரன் என்னும் மருந்தீசுவரர்

பேரா. சே. செந்தமிழ்ப்பாவை
இயக்குநர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

திருமிகு. வ.மீனாட்சி
முனைவர் பட்டஆய்வாளர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி -3

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முனிவர்களும் ரிஷிகளும் வாழ்ந்து இறைவனை உணர்ந்து முக்தியடைந்த நாடு பாரதம். அதனால் தான் பல எண்ணற்ற கோவில்கள் இந்த நாடு முழுவதும் நிறைந்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சிவலாயங்களில் குறிப்பிடத்தக்கதும் ஏறக்குறைய 1500 ஆண்டுகள் பழமையானதுமான சென்னை மருந்தீசுவரர் திருக்கோயிலாகும். இக்கோயிலானது ஏழாம் நூற்றாண்டில் சோழர்களால் கட்டப்பட்ட தொண்டை மண்டலத் தலமாகும். அகத்தியர் மற்றும் வால்மீகி முனிவர்கள் வந்து வணங்கிய தலமாகும். அப்பர் சம்பந்தரால் பாடல்பெற்ற தலமாக விளங்கும் இத்திருத்தலத்தைப் பற்றியும் அதன் வழிபாட்டு முறைகள், தலவரலாறு, திருவிழாக்கள், சிறப்புகள் பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

திருக்கோயில் அமைவிடம்

திரிபுரசுந்தரி உடனாய மருந்தீசுவரர் திருக்கோயிலானது சென்னை - புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்துள்ளது. சென்னை புறுநகர் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 18கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

திருவான்மியூர் பெயர்க்காரணம்

வான்மீகம் என்று சொல்லப்படும் புற்றுகள் நிறைந்த இடம் என்பதால் இது வான்மியூர் என்றானது என வரலாறு கூறுகிறது. இராமாயணம் எழுதிய வால்மீகி முனிவர் திருடனாக இருந்து

Koviloor Digital Library

திருந்திய பின்பு சாபங்கள் நீங்க இங்கு உள்ள இறைவனை வந்து வழிபட்டுள்ளார் என்பதால் இவ்விடம் வான்மீகியூர் என்றானது என்றும் வரலாறு கூறப்படுகிறது. வால்மீகி தனது சாபம் நீங்க கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ள வன்னி மரத்தடியில் தவமிருந்து ஈசனைத் தரிசித்து சுயம்பு லிங்கத்தை பெற்றதாகவும் அந்த லிங்கம் இன்றும் ஆலயத்தின் வெளிப்புறம் கிழக்குக் கடற்கரை சாலையின் ஆரம்பத்தில் இருக்கும் வால்மீகி முனிவரின் சமாதியில் இன்றும் இருக்கின்றது என்றும் கூறப்படுகிறது. இறைவனிடம் சாபம் நீங்கப் பெற்ற வால்மீகி வேண்டியதற்கேற்ப அவரது பெயரிலேயே இத்தலம் விளங்குகிறது. வான்மீகியூர் என்பதே மருவி வான்மியூர் என்றானது.

மருந்தீசுவரர் திருக்கோயில்

மூலவர்;	- அருள்மிகு மருந்தீசுவரர்
உற்சவ மூர்த்தி	- தியாகராச பெருமான், சந்திரசேகரர்
தாயார்	- திரிபுரசுந்தரி (சொக்கர்நாயகி)
தலவிருட்சம்	- வன்னி மரம்
தீர்த்தம்	- பாவநாசினி, காமநாசினி
புராணப்பெயர்	- திருவான்மீகியூர்

வழிபாட்டு நேரம்

காலை 5.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை
மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை

தல வரலாறு

வசிஷ்டமுனிவர்செய்தசிவபூசைக்காகஇந்திரன்தன்னிடமிருந்த காமதேனுவை அனுப்பி வைத்தான். பூசை நேரத்தில் காமதேனு பால்சுரக்காமல் தாமதம் செய்யவே கோபம் கொண்ட முனிவர் அதனை புனிதத்தன்மை இழந்து காட்டுப்பசுவாக மாறும்படி சபித்தார். கலங்கிய காமதேனு தனக்கு விமோசனம் கேட்க இத்தலத்தில் உள்ள வன்னி மரத்தடியில் சுயம்புலிங்கமாக உள்ள சிவனை வணங்கினால் விமோசனம் உண்டு என்றார். அதன்படி இங்குவந்த காமதேனு சுயம்புவாக இருந்த சிவலங்கத்தின் மீது தினசரி பால் சுரந்து விமோசனம் பெற்றது. இதனால் இங்குள்ள இறைவன் பால்வண்ணநாதர் என அழைக்கப்படுகின்றார்.

Koviloor Digital Library

கொள்ளைக்காரனாக இருந்த வால்மீகி திருந்திட எண்ணம் கொண்டு இங்குள்ள சிவனை வணங்கி வந்தார். ஒருமுறை அவர் சிவனை தரிசிக்க வந்த போது அவரைக் கண்டு பயந்த காமதேனு ஓடியது. அப்போது இங்கிருந்த லிங்கத்தை அறியாமல் மிதித்ததில் சுவாமியின் மேனியில் தடம் பதிந்தது இன்றும்கூட சுவாமியின் மீது பசு மிதித்த தடம் இருக்கிறது.

இத்தலம் தற்போது இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

மருந்தீசுவரர் பெயரக்காரணம்

அகத்திய முனிவர் இங்கு வந்து சுவாமியை வணங்கி தவம் செய்தார். அதனால் முனிவருக்குக் கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ள வன்னி மரத்தடியில் காட்சி தந்தார். பிறகு உலகில் தோன்றியுள்ள நோய்களுக்கு உண்டான மருந்துகளைக் குறித்தும் மூலிகைகளின் தன்மைகள் குறித்தும் அகத்தியருக்கு உபதேசித்தார். எனவே இத்தலத்து ஈசன் மருந்தீசுவரர் என அழைக்கப்படுகிறார்.

மேற்கே திரும்பிய சிவன் (மூலவர் சன்னதி)

அபயதீட்சிதர் என்னும் பக்தர் ஒருவர் சுவாமியைத் தரிசிக்க வேளச்சேரியிலிருந்து தினமும் வருவார். ஒருநாள் கடும்மழை பெய்ததால் கோவிலுக்குள் வெள்ளப்பெருக்கு ஏற்படவே தீட்சிதரால் நீரைக்கடந்து சுவாமியைத் தரிசிக்க முடியவில்லை. மேற்குக் கோபுர வாசலில் நின்று பார்க்கும் போது சுவாமியை காணமுடியவில்லை. எனவே வருத்தம் கொண்டு சிவனே! உன்முகம் கண்டு தரிசனம் செய்ய அருளமாட்டாயோ என வேண்டினார். அவரின் வேண்டுதலை ஏற்ற சிவபெருமான் மேற்கே திரும்பி காட்சி தந்தார் என வரலாறு கூறுகின்றது. இதனால் இங்குமட்டும் சிவன் மேற்கு நோக்கி காட்சி தருகிறார். அம்பாள் சுவாமிக்கு பின்புறமாக தெற்கே நோக்கியும் முருகன் விநாயகர் கிழக்கு நோக்கியும் காட்சி தருகின்றனர். சிவலிங்கத்திற்குப் பால் அபிடேகம் மட்டுமே செய்யப்படுகிறது. பஞ்சாமிர்தம் முதலான பிற அபிசேகங்கள் அனைத்தும் ஆவுடையாருக்கே செய்யப்படுகின்றன.

Koviloor Digital Library

அம்மாள் சன்னதி

அருள் வழங்கு அன்னை உமையவள் இங்கு சொக்கநாயகி எனும் திரிபுர சுந்தரியாக நின்ற கோலத்தில் தெற்கு நோக்கி காட்சி தருகிறாள். பாசம் அங்குசம் தாங்கி அபயவரத ஹஸ்தம் காட்டும் திருக்கரங்களோடு அடைக்கலம் தந்து அருளுகிறார். அம்பாள் சன்னதியின் வெளிப்புறத் தூணில் சரபேஸ்வரரும் உக்ர நரசிம்மரும் காட்சி தருகின்றனர்.

கேதாரீசுவரர்

கேதாரீசுவரர் இங்கு உள்ள சுவாமி சன்னதியின் பிரகாரத்தில் அருள்பாலிக்கன்றார். கேதார கௌரி விரதம் இருப்பவர்கள் வணங்கும் இறைவன் ஆவார். இவரை வாரம் தோறும் திங்கட்கிழமை, தீபாவளி நாட்களில் வழிபட்டு வந்தால் பித்ரு சாபங்கள் தீர வழிவகுக்கும். இங்கு தீபாவளி நன்னாளில் வடமாநிலத்தவர் உட்பட பலரும் வந்து அபிசேகம் செய்து வழிபடுகின்றனர்.

சரபேசுவரரும் நரசிம்மரும்

அம்பாள் சன்னதியின் முன்பக்க தூணில் ஒருபக்கம் சரபேசுவரரும் மறுபக்கம் உக்ர நரசிம்மரும் அருள்பாலிக்கிறார்கள். சரபேசுவரர் எட்டு கால்களுடனும், நான்கு கைகளுடனும், மிகக்கூரிய நகமும், உடலின் இருபுறங்களில் இறக்கைகளும், சிங்கத்தினைப் போன்ற நீண்ட வாலும், கருடனைப் போன்ற மூக்கும், யானையைப் போன்ற கண்களும், கோரப் பற்களும், யாளியைப் போன்ற உருவமும் உடையவர். சரபேசுவரர் நரம்பு சம்பந்தமான நோய்கள், வறுமை, கடன் முதலியவற்றை நீக்கும் வல்லமை கொண்டவர். தீய சக்திகள் எதிரிகளால் ஏவப்படும் பில்லி, சூனியம், மாந்திரீகம், பேய், பிசாசு போன்றவைகளை முறியடிக்க சரபேசுவரரை வணங்குவதே சிறந்ததாகும். இங்குள்ள சரபேசுவரர் மிகுந்த சக்தியுள்ளவராவார். சரபேசுவரருக்கு பின்புறம் உக்கிர நரசிம்மர் காட்சிதருகிறார். இவருக்குப் பானகம் படைத்து வழிபட வேண்டியது நடக்கும், சத்ரு பயம் நீங்கும் என்றும் கூறுகின்றனர்.

பைரவர்

மருந்தீசுவரர் சன்னதியின் பிரகாரத்தில் காட்சிதருகிறார்.

Koviloor Digital Library

இவருக்கு இங்கே நாய் வாகனம் இல்லை. நூற்றியெட்டு சிவலிங்கங்கள் சூழ பைரவர் காட்சி தருகின்றார். தேய்பிறை அஷ்டமி தினத்தில் மாலை வேளையில் காலபைரவருக்குச் சிறப்பு அபிசேகம் நடைபெறுகிறது. இத்தல பைரவரை வழிபட உடல் நோய்கள் உடனே குணமடைவதாகக் கூறுகிறார்கள். இத்தலத்தில் பைரவர் மற்றும் பலிபீடத்தை அஷ்டமி நாட்களில் நறுமண மலர்கள் சூட்டி, நெய்தீபம் ஏற்றி வழிபட கடன், வறுமை, தரித்திரம் அகலும் என்கின்றனர்.

அகத்தியருக்கு திருமணக் காட்சி

கயிலை மலையில் சிவன் பார்வதி திருமணம் நடைபெறும் சமயம் திருமணத்தைக் காண அனைவரும் அங்கு கூடியதால் வடக்கே தாழ்ந்து தெற்கே உயர்ந்தது. அதனை சமன் செய்ய சிவபெருமான் அகத்திய முனிவரை தென்திசை அனுப்பினார். தெற்கே சென்றால் தன்னால் தெய்வத் திருமணத்தைக் காண இயலாமல் போய்விடுமே என்று சிவனிடம் முறையிட இறைவனும் அகத்தியர் விரும்பும் போது திருமணக் கோலம் காட்டி அருள்வதாகக் கூறினார். அதன்படி திருவான்மியூர் தலத்தில் அகத்தியருக்கு இக்கோயிலில் உள்ள வன்னி மரத்தடியில் காட்சி தந்தார்.

தலவிருட்சம்

ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் உள்ள வன்னி மரமே இத்தலத்தின் தல விருட்சமாகும். இந்த மரத்தடியில் அகத்திய முனிவருக்காக ஒரு முறையும் வான்மீகி முனிவருக்காக ஒரு முறையும் என இறைவன் இரண்டு முறை இந்த வன்னி மரத்தடியில் காட்சி கொடுத்துள்ளார். இம்மரத்தை சுற்றி வணங்கி வந்தால் முக்தி திடைக்கும் என்பது நம்பிக்கை.

திருக்கோயில் அமைப்பு

திருக்கோயிலின் கிழக்கு இராஜகோபுரம் வழியாக உள்ளே நுழைந்தவுடன் ஒரு விசாலமான திறந்த வெளியும் வலது புறத்தில் தியாகராஜ மண்டபமும் இடது புறத்தில் கோவில் தீர்த்தமும் உள்ளது. மூலவர் மருந்தீசுவரர் சன்னதிக்கு வலப்புறம் தியாகராசர் சன்னதி உள்ளது. மருந்தீசுவரர் சன்னதியை ஒட்டிய

Koviloor Digital Library

பிரகாரத்தில் வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியரும் (முத்துக்குமார சுவாமி) அருணகிரிநாதரும் உள்ளனர். அதற்கு அடுத்து கஜலட்சுமி, நடராசர் சன்னதியும் 108 சிவலிங்கங்கள் சூழ கால பைரவரும், கேதாரீசுவரர், இராமநாதேசுவரர், சுந்தரரேசுவரர் உண்ணாமுலையம்மை, ஜம்புகேசுவரர், 67 நாயன்மார்களும் காட்சி தருகின்றனர். மூலவர் கருவறையின் வெளிப்புற சுவற்றில் துர்க்கை விட்ணு, தட்சினாமூர்த்தி, விநாயகர் ஆகியோரும் உள்ளனர். மேற்குக் கோபுரத்தின் முன்பு நுழைந்தவுடன் கொடிமரம் பலிபீடம் நந்தி ஆகியவை வரிசையாக காணப்படுகின்றன.

தேவாரம், திருப்புகழ் பாடப்பெற்ற தலம்

இத்திருக்கோயில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் அகியோரால் பாடப் பெற்ற திருத்தலமாகும். தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இது 25ஆவது தலமாகும். சிவனின் தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 258ஆவது சிவாலயமாகும்.

"கரையுலாங் கடலிற் பொலிசங்கம் வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழி மீனுகளுந் திருவான்மியூர்
உரையுலாம் பொருளாயுல காளுடையீர் - சொலீர்
ö¬ரயுலா மடமாது உடனாகிய மாண்பதே"

(சம்பந்தர் தேவாரம் -2 திருவான்மியூர்.04)

"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு செர்பொழில் வான்மியூர் ஈசனே"

(அப்பர் தேவாரம் -5 திருவான்மியூர்-1)

என்பன திருவான்மியூர் பற்றிய பாடல்கள் ஆகும்.

திருவிழாக்கள்

ஆடி, தை மாதங்களில் திருவிளக்கு வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தில் பெருவிழா (பிரம்மோட்சவம்) நடைபெறுகிறது. இத்தலத்து இறைவனை சூரியன் அர்த்தசாமத்தில் வழிபட்டதாக வரலாறு உள்ளதால்

Koviloor Digital Library

பெருவிழாவில் கொடியேற்றம் அர்த்தசாமத்தில் நடைபெறுகிறது. கிருத்திகை, பௌர்ணமி முதலிய விசேசங்களும் இரவில் தான் இக்கோயிலில் வழிபாடு நடத்துகின்றனர். பங்குனி பௌர்ணமியில் தான் வான்மீகி முனிவர் வழிபட்டு முக்தி பெற்றதாகச் சொல்லப்படுகிறது. விழாக்காலங்களில் சுவாமி புறப்பாடு காலை மாலை வேளைகளில் சந்திரசேகரரும் பஞ் சமூர்த்திகளும் மட்டுமே கோயிலில் இருந்து வெளிவருவார்கள். ஆனால் தியாகராசர் புறப்பாடு பகலில் கிடையாது இரவில் மட்டுமே நிகழ்கிறது.

பங்குனி பெருவிழா பன்னிரெண்டு நாட்கள் நடைபெறுகிறது. இதில் சந்திரசேகரர் இரண்டாம் நாள் சூரிய பிரபையிலும் மூன்றாம் நாள் அதிகார நந்தி வாகனத்தில் சூரியனுக்கு காட்சியளிக்கிறார். ஏழாம் நாள் காலை தேர்த் திருவிழாவும் மாலை தியாகராசர் திருவீதி உலாவும் நடைபெறுகிறது. எட்டாம் நாள் காலை சந்திரசேகரர் நான்கு மறைகளுக்கு அருளல் நிகழ்ச்சியும் மாலையில் பரிவேட்டையும் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் காலை கல்யாணசுந்தரர் திருக்கல்யாணமும் இரவு வன்னி மரத்தடியில் அகத்தியருக்கு திருமணக் காட்சி கொடுத்ததும் நடைபெறும். பத்தாம் நாள் காலையில் சந்திரசேகரர் கடல் நீராடலும் இரவில் தியாகராசர் - திரிபுரசுந்தரி திருமணவிழாவும் அதன்பிறகு கொடியிறக்குதலும், வான்மீகி முனிவருக்கு 18 திருநடனக் காட்சி அருளி வீடுபேறு அளித்தலும் நடைபெறும். பதினோராம் நாள் தெப்பத் திருவிழாவும் வெள்ளியங்கிரி வாகனத்தில் சுவாமி வீதி உலாவும் நடைபெறும். பன்னிரெண்டாம் நாள் திரபுரசுந்தரிக்கு தியாகராசர் அருளல் காட்சி நடைபெறுகிறது.

சிறப்புகள்

சந்திரனும் சூரியனும் ஒருசேர இங்கு வந்து வழிபட்டதால் இக்கோயிலில் நவகிரக சந்நதி கிடையாது.

வருடம் 365 நாட்களும் மாலை வேளையில் சமய சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. ஆன்மீக நூலகமும் உள்ளது.

Koviloor Digital Library

கண்ணபிரான் தன்னுடைய பாவம் நீங்க இங்குள்ள பாவநாசினி தீர்த்தத்தில் நீராடியுள்ளார் என்கின்றனர்.

கோபூசையில் தொடர்ந்து 21 நாட்கள் தவறாமல் கலந்து கொண்டால் நம் கர்ம வினைகள் அகன்று வாழ்வில் நலம் பிறக்கும்.

செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை மாலையில் இங்கு அபிராமி அந்தாதி முற்றோதுதல் நடைபெறுகிறது.

இங்கு வழங்கப்படும் அபிசேகப் பால் சகல நோய்களுக்கும் மருந்தாக பக்தர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சுவாமிக்குப் பாலாபிசேகம் செய்து வணங்கி விபூதி பிரசாதம் உண்டால் தீராத நோய்கள் பாவங்கள் தீரும்.

பதினொரு பௌர்ணமியில் இங்கு வந்து கருவறை தீபத்தில் பசுநெய் சேர்த்து வழிபட சரும நோய்கள் அகலும்.

சுவாமிக்கும் அம்மனுக்கும் புது வஸ்திரம் அணிவித்து வணங்குதலே நேர்த்திக்கடனாகும்.

முடிவுரை

காலம் அறிய முடியாத காலத்திலேயே அகத்தியருக்குச் சித்த மருத்துவ முறைகளை சித்துக்களின் நாயகராம் சிவனாரே வந்து போதித்த இடம் தான் திருவான்மியூர். இவர் தொண்டை நாட்டு வைத்தீசுவரனாவர். அகிலத்தின் நாயகன் ஓர் ஆவின் பாலை உண்டு செழித்து நின்ற இடம் இத்திருக்கோயிலாகும். தன்னை தரிசிக்க வந்த பக்தருக்காக மேற்கே திரும்பி காட்சி கொடுத்தவர். பழைமை வாய்ந்த கோவிலாகவும் பலவகையான சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட கோவிலாகவும் திகழுகின்றது. தினமும் மாலையில் சைவ சமய சொற்பொழிவுகளும் இத்திருக்கோயில் நடைபெறுகிறது. அனைத்து விழாக்களும் இரவிலேயே சிறப்பாக நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவில் வழிபாட்டுமுறை

திருமிகு. வே.முத்தமிழ்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை.

கிராமங்களில் உள்ள நாட்டுப்புற காவல் தெய்வங்களில் மிகவும் புகழ்பெற்றது அய்யனார். பாண்டியர் சோழ மன்னர்கள் காலத்தில் இந்த அய்யனார் வழிபாடு நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அவர்களின் ஆட்சிக்குட்பட்ட எல்லை கிராமங்களில் மிக நெடுங்காலமாக அய்யனார் வழிபாடும் அவரது வாகனமான குதிரையை எல்லையில் வைத்து வழிபடுவதும் நடைபெற்றுவந்துள்ளது. குளமங்கலம் பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவில் வரலாற்றையும், வழிபாட்டு முறையையும் இக்கட்டுரையில் காண்போம்.

பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவில்

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி வட்டத்தில் உள்ள குளமங்கலம் என்ற கிராமத்தில் இக்கோவில் அமைந்துள்ளது. 1954 -ஆம் ஆண்டு ஓடு வேய்ந்து புரணமைக்கப்பட்டுள்ளது. பல அய்யனார் கோவில்களைப் போலவே இந்தக் கோவிலும் ஊரின் எல்லையில் வில்லுனி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. கோவிலில் தினந்தோறும் வழக்கமான பூசைகள் நடைபெறுகின்றன. திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் அதிகமான மக்கள் கோயிலுக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

கோவில் உருவான கதை

கோவிலின் தோற்ற வரலாறு 18-ஆம் நூற்றாண்டிற்கு முந்தையதாக உள்ளது. கோவில் கட்டப்பட்ட ஆண்டு சரியாகத் தெரியவில்லை. கோவிலின் தோற்ற வரலாறு தொடர்பான செய்திகள் வாய்மொழிக் கதைகளின் வழியேதான் அறியப்படுகின்றன. தற்தொழுது கோவில் இருக்கின்ற பகுதி முழுவதும் முன்னர் அடர்ந்த காரைச் செடிகளாகவே

Koviloor Digital Library

இருந்திருக்கின்றன. அதனைச் சுற்றிய வயல் வெளிகளில் விவசாயம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இவ்வயல் வெளிகளில் அறுவடை முடியும் காலத்தில் இவ்வூரைச் சேர்ந்த சிறுவர்கள் ஆடுமாடுகளை கொண்டுவந்து மேய்ப்பது வழக்கம். அவ்வாறு ஆடுமாடு மேய்க்கக்கூடிய சிறுவர்கள் வயல்வெளிகளில் சிதறிக் கிடக்கும் நெற்கதிர்களைப் பொறுக்கி வந்து ஒரு காரை மரத்தடியில் அடுப்பு வைத்துப் பொங்கலிட்டு களிமண்ணால் செய்யப்பட்ட தெய்வத்திறகுப் படைத்துவிட்டு விளையாடினர். கடவுளுக்கு ஆடு பலியிடுவதைப்போல சிறுவர்கள் செய்துகாட்ட விழைந்து களிமண்ணால் கத்தி செய்து தாங்கள் மேய்த்த ஆட்டினை கொண்டுவந்து பொங்கல் படையலின் முன் நிறுத்தினார்கள். ஒரு சிறுவன் பூசாரி போல் களிமண் கத்தியால் ஆட்டின் தலையில் வெட்ட தலை தனியாகச் சென்று படையலில் விழுந்தது. இந்நிகழ்வை பார்த்து பெரியோர்களும் அதிசயித்தனர். ஆனால் மக்களுக்குப் பயம் உண்டாகியது. பின்னர் ஊர்மக்கள் அனைவரும் இணைந்து ஊர் சாமியாடி ஒருவரிடம் குறிகேட்க அங்கே அய்யனார் சுயம்புவாக எழுந்தருளி இருப்பதாகக் கூறினார்.

காரை மரத்தடியின் கீழ் எழுந்தருளியதால் ஸ்ரீபெருங்காரையடி மீண்ட அய்யனார் எனப் பெயர் பெற்றதாக வரலாறு செல்லப்படுகிறது. பிற்காலத்தில் அந்தக் காரைமரத்தை மையமாகக் கொண்டு கோவில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் கோவிலின் முன்னால் ஒரு குதிரை சிலையும், யானை சிலையும் கட்டப்பட்டதாகவும், பிற்காலத்தில்ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் யானை சிலை விள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றன. இந்தச் சிலைகளை கண்பார்வையற்றவர்கள் வடிவமைத்ததாகவும் வாய்மொழிக் கதைகளில் கூறப்படுகின்றன.

திருவிழா

இக்கோவிலில் ஆண்டுதோரும் மாசிமாதம் மகம் நட்சத்திரம் வரும் நாளில் நடைபெறும் மாசிமகம் எனப்படும் திருவிழா சிறப்புடையது. இதில் தமிழகம் முழுவதும் இருந்து லட்சக் கணக்கான மக்கள் பங்கேற்பர். மாசிமகத் திருவிழாவிற்கு வர இயலாதவர்கள் பங்குனி உத்திரத்திற்கு வந்து நேர்த்திக்கடனைச்

Koviloor Digital Library

செலுத்துகிறார்கள்.

குதிரைக்கு நேர்த்திக்கடனாக மாலை செலுத்துதல்

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சி இக்கோவிலில் உள்ள பெரிய குதிரை சிலைக்கு அதே உயரத்தில் காகிதப்பூ மாலைகள் அணிவிப்பதுதான் சிறப்பானதாகும். இக்குதிரை சிலை 33 அடி உயரமுள்ள மிகப் பெரிய சிலை ஆகும். முன்கால்கள் காற்றிலும் மற்றவை தரையிலும் உள்ளன. இது ஆசியாவின் மிக உயரமுள்ள மிகப்பொரிய சிலையாகக் கருதப்படுகிறது. குதிரைக்கு நேர்த்திக்கடனாக மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி மாசிமகத்தின் முதல் நாளே தொடங்குகிறது. தமிழகத்தின் பல மாவட்டங்களில் இருந்தும் நேர்த்திக்கடன் செய்துகொண்ட பக்தர்கள் காகிதப்பூ மாலைகளை பலவிதமான வாகனங்களில் கொண்டுவந்து நீண்ட வரிசையில் நின்று அணிவிக்கின்றனர். சில பக்தர்கள் நாட்டிய குதிரைகளின் நாட்டியம், மேளதாளம், வாத்திய இசையுடன் வந்து மாலை அணிவிக்கினறனர்.

குதிரைக்கு நேர்த்திக்கடனாக மாலை அணிவிப்பது குறித்து கோவில் பரம்பரை பூசாரியான சாமியப்பன் பின்வரும் நிகழ்வைக் கூறினார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தம்பதியர் கோவிலுக்கு வந்து அய்யனாரை வழிபட்டுவிட்டு கேரிவிலிலேயே அமர்ந்து இருந்தார்கள். பூசாரி காரணம் கேட்க அதற்கு அவர்கள் தங்கள் பெண்ணிற்குப் பல வருடங்களாக திருமண முயற்சி செய்தும் திருமணம் ஆகவில்லை என கூறி அழுதார்கள். உடனே உங்கள் பெண்ணிற்கு அய்யனார் மாலை எடுத்துக் கொடுக்கணும் என்ற கோரிக்கையை மனமுருகி வேண்டிக்கொள்ளுங்கள். பெரிய குதிரைக்கு மாலை போடுகிறதா வேண்டிக்கொள்ளுங்கள் என்று கூறி அவர்களை அனுப்பி உள்ளார். ஆறுமாதம் கழித்து மீண்டும் கோவிலுக்கு வரும்பொழுது அவர்கள் மகளுக்குத் திருமணமாகி-யிருந்தது. அவர்கள் மேலதாளம் முழங்கக் குதிரைக்கு மாலை போட்டுவிட்டு மனநிறைவோடு சென்றார்கள் எனப் பரம்பரை பூசாரி தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். இவ்வாறு திருமணமே ஆகாது என்று வந்த பல பேருக்கு குதிரைக்கு மாலைபோடுதல் வேண்டுதல் வைத்தால் உடனே திருமணம் நடந்து உள்ளது. பக்தர்கள் தங்கள் நோத்திக் கடனாக காவடி

Koviloor Digital Library

எடுத்தல், பரவைக்காவடி எடுத்தல், அலகு குத்துதல், ஆணி மிதியடியுடன் நடத்தல், கரும்புத்தொட்டில் கட்டுதல் பால்குடம் எடுத்தல் எனப் பல்வேறு விதமாக நேர்த்திக்கடன் செய்கின்றனர்.

அன்னதானம்

பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவிலின் மற்றொரு சிறப்பு இங்கு நடைபெறும் அன்னதானம் ஆகும். அன்னதானம் செய்வதையும் ஒரு வேண்டுதாலாகவே செய்கின்றனர். இது பழங்காலந்தொட்டே இருந்து வருவிறது. முற்காலங்களில் வீடுகளில் சமைத்து உணவை மாட்டுவண்டிகளிலோ, கால்நடையாகவோ எடுத்து வந்து கோவிலில் அன்னதானம் செய்தனர். கோவிலுக்கு வரக்கூடிய அத்துனைபேரும் அன்னதானத்தில் பங்கேற்று கோவில் பிரசாதமாகக் கருதி உணவருந்தி மகிழ்வோடு செல்கின்றனர்.

இக்கோவில் அமைந்திருக்கும் குளமங்கலம் கிராமத்தைச் சுற்றி 10 கி.மீ. தொலைவிற்குமேல் பெரிய கடைவீதியோ உணவகங்களோ இல்லாத சூழலில் பல ஊர்களில் இருந்து வரக்கூடிய மக்களுக்கு இந்த அன்னதானம் மிகப் பயனுடையதாக அமைந்துள்ளது. மக்கள் உணவு கொடுப்பதை ஒரு வேண்டுதலாகவும் நினைக்கின்றனர். இக்கோவிலில் அமர்ந்து உண்பதையும் பெரும் பேறாகக் கருதுகின்றனர்.

பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும்

குழமங்கலம், கொத்தமங்கலம், கீரமங்கலம், பனங்குலம், மறமடக்கி, அறையப்பட்டி, திருநாளூர் என கோவிலைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் அய்யனாரை குலதெய்வமாகக் கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இரண்டாம் நாள் திருவிழாவாக தெப்பத் திருவிழா நடைபெறும் நாளன்றுதான் அசைவ உணவு சமைத்து உறவினர்களுக்கும் விருந்தோம்பல் செய்கின்றனர். அய்யனாருக்கு ஆடு, கோழி பலியிடுவதாக வேண்டிக்கொண்டவர்கள் இரண்டாம் நாளன்று கோவிலில் பலியிட்டு வீட்டிற்கு கொண்டுவந்து சமைத்துப் பரிமாறுகின்றனர். பல வருடங்களுக்கு முன்பு திருவிழாக்காலத்தில் பலர் மாட்டுவண்டிகளிலோ, கால்நடையாகவோ குடும்பம்

Koviloor Digital Library

குடும்பமாக வந்து கோவிலில் தங்கி வழிபட்டுச் சென்றனர். இன்றும் பலர் அந்தப் பழமை மாறக்கூடாது என்பதற்காக வெயிலையும் பொருட்படுத்தாமல் மாட்டுவண்டிகளிலும், நடந்தும் கோவிலுக்கு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இக்கிராமப்புறத்தில் விவசாயமே முதற்தொழிலாக உள்ளது. விவசாயிகள் காய்கறிகளோ, தானியங்களோ விளைந்தால் முதல் அறுவடையை அய்யனார் கோவிலுக்கு அளிக்கின்றனர். அதனால் தங்கள் விவசாயம் மேம்படுவதாக நம்புகின்றனர்.

திருமணம், குழந்தை'கீவரம் வேண்டுதல், கல்வி, வேலை என மக்களின் அனைத்துத் வேண்டுதலுக்கும் குதிரை தெய்வத்திற்கு மாலை செலுத்துவதாக வேண்டிக்கொள்வதால் நிச்சயம் நிறைவேறும் என நம்புகின்றனர். தங்கள் விருப்பம் நிறைவேறியவுடன் உற்றார் உறவினரோடு மேளதாளம் முழங்க மகிழ்வோடு குதிரைக்கு மாலை அணிவித்துச் செல்கின்றனர். ஒவ்வோர் ஆண்டிற்கும் குதிரை தெய்வத்திற்கு அணிவிக்கும் மாலையின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. குளமங்கலம், கொத்தமங்கலம், மறமடக்கி ஆகிய பகுதிகளில் குதிரைக்கு மாலை கட்டும் தொழிலை 20-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் செய்துவருகின்றன. மாலை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் பண்டிகை தொடங்குவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே மாலை கட்டத் தொடங்குகிறார்கள். இவர்கள் மாலைகட்டும் மொழிலையும் இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி மனத்தூய்மையோடு செய்கின்றனர்.

மக்களிடம் ஓங்கிய பண்பாடு

உறவுகளை வேற்றுமை, பகமை மறந்து இணைக்கும் பாலம் திருவிழாக்கள் என்பது நாம் அறிந்த உண்மையே. திருவிழாகள் மக்களிடம் மனிதநேயத்தையும், கொடைப்பண்பையும் வளர்ப்பதாக உள்ளது. அய்யனார் கோவிலுக்கு நேரடியாக பேருந்து வசதி இல்லை. திருவிழாக் காலத்தில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இருப்பினும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லக்கூடிய அந்த இரு நாட்களில் பொதுமக்கள் பலர் இலவச வாகன வசதி செய்துகொடுக்கின்றனர். நான்கு

Koviloor Digital Library

சக்கர வாகனம் வைத்திருக்கக்கூடிய மக்கள் பலர் கோவிலுக்கு வருவோருக்கு இலவசமாகக் வாகன வசதி செய்கின்றனர். அவர்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டவராக இல்லாவிடினும் கோவிலுக்கு வருவோருக்கு இலவசமாக வாகனம் ஓட்டுவதை ஒரு தொண்டாகக் கருதுகின்றனர். கோவிலுக்கு செல்லும் வழிநெடுகிலும் இலவசக் குடிநீர், மோர்ப் பந்தல், குளிர்பானப் பந்தல் அமைத்துப் பொதுமக்களுக்கு அளிக்கின்றனர். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை இச்சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் செயல்படுத்திவருகின்றனர்.

Koviloor Digital Library

திருக்கோயில்கள் உணர்த்தும் பண்பாடு

முனைவர். ந.முத்துமணி,
உதவிப்பேராசிரியர்,
இதயா மகளிர் கல்லூரி, சருகணி.

பண்டைக் காலந்தொட்டுத் தமிழர்களின் வாழ்வில் ஊடுருவிப் பரந்து நிலைத்தவை கோயில்கள் ஆகும். இக்கோயில்களை ஆராய்வதன் மூலம் தமிழர்களின் பண்பாட்டைப் புரிந்து கொள்ள முடியும். பண்பாடு என்பது மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது ஆகும். மனிதன் தனக்கு மேல் ஒரு இறை சக்தி இருப்பதாகக் கருதி அதற்குப் பயந்து தனது வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டான். கோயில்கள் கலைகளை வளர்க்கும் கலைக்கூடமாகவும் பொருளாதார நிலைக்களன்களாகவும் பண்பாட்டுப் பெட்டகமாகவும் விளங்கின.

பண்பாடு - விளக்கங்களும் வரையறையும்

உலகில் மக்கள் இனம் தோற்றம் பெற்று இன்று வரை வந்துள்ள வளர்ச்சி நிலைகளுக்கு, அடிப்படையாக அமைவது பண்பாடு ஆகும். அவரவர் நிலத்தின் தன்மைக்கும் பருவ நிலைக்கும் ஏற்றவாறு உலகம் முழுவதும் பல்வேறு பண்பாடுகள் உருவாகி நிலவி வருகின்றன.

“பண்படுவது பண்பாடு, பண்படுதல், சீர்ப்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருந்திய தமிழைப் ‘பண்பட்ட செந்தமிழ்’ என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்.”[1]

“ஆங்கிலத்தில் கல்சர் என்று சுட்டுவதற்கு நேராகவே ‘பண்பாடு’ என்பது ஆளப்படுகின்றது. இச்சொல்லை இப்பொருளில் முதன்முதலில் ஆண்ட பெருமை டி.கே. சிதம்பரநாத முதலியாருக்கே உரியது என்பர். பண்படு என்னும் சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது இச்சொல்லாகும்.”[2]

Koviloor Digital Library

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், பண்பாடு என்ற சொல்லுக்கு "பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும் நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பலபல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை மனத்தைப் பற்றிய தூய்மைநிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்"3 என்று விளக்குவர்.

"பண்பாடு என்பது தேங்கிப் போனதோ, நிலையானதோ அல்ல. அது தொடர்ந்து வளர்கதியில் மாறிவருகிறது. மனிதன் தனது முழு மனிதாயப் பரிமாணங்களையும் மேலெழுந்து எட்டுவதைச் சாத்தியமாக்கும் உரிமைகளையே பண்பாடு"5 என்பர் எரிதழல்.

"உலகத்தில் உயிரினங்கள் பலவாகக் காணப்படினும் மக்கள் இனத்திற்கே பண்பாடு என்பது பொருந்துவதாக எண்ணுகின்றனர். பண்பாடு என்பது பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெறுகிறது எனலாம்"6 என விளக்குவார் எஸ்.வைத்தியலிங்கன்.

சமூகத்தின் மரபு காரணமாக மனிதன் மீது வந்து சேர்கிற தவிர்க்க முடியாத வாழ்வியல் பண்புகளையும் காலமாற்றத்திற்கு ஏற்பப் புதிதாக உருவாக்கிக் கொள்ளக்கூடிய வாழ்வியல் பண்புகளையும் பண்பாடு என வரையறை செய்து கொள்ள இயலும்.

கோயில் பண்பாடு

தமிழர்களின் மேம்பட்ட வாழ்விற்கு 'கோயில் பண்பாடு' பெரிதும் காரணமாக அமைந்துள்ளது. கோயில்கள் மக்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்து நிலைத்தன. எனவே தான் தமிழர்கள், கோயிலைச் சுற்றிலும் குடியிருப்புப் பகுதிகளை அமைத்துக் கோயிலோடு நிலைத்து வாழும் முறையைக் கையாண்டனர்.

Koviloor Digital Library

தமிழர்கள் கோயில்களோடு கொண்டுள்ள தொடர்பால், சமய வாழ்க்கை பல சிறப்புக் கூறுகளைப் பெற்றிருந்தது. தமிழர்களின் பண்டைக் கலைகளும் இலக்கிய வளங்களும் வழிபாடு போன்ற செயல்பாடுகளும் பக்தி நெறியையும் சமயப் பண்பாட்டையும் உயர்த்துவனவாகும். பண்டைக்காலந்தொட்டுத் தமிழர்களின் வாழ்வில் ஊடுருவிப் பரந்து நிலைத்தவை கோயில்கள் ஆகும். தமிழ் இலக்கியங்களில் ஒரு பெரும்பிரிவான பக்தி இலக்கியங்கள் கோயில்களால் வளர்க்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மனதை ஒன்று படுத்தி, சிந்தனைகளைச் சிதறவிடாது, ஒரு ஏகாந்தமும் அமைதியும் கிட்டுமாறு இருந்தால்தான் இறைவனை அடையமுடியும் என்பது தமிழரின் நம்பிக்கையாகும். இந்த ஏகாந்தமும் அமைதியும் ஏற்படும் வகையில் தான் தமிழர்களின் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இறைனை அடைவதற்குப் பாசங்கள் தடையாகும். பாசங்கள் அறுபடின் இறைபதம் எளிதில் கிட்டும். எனவே தான் தமிழர்களின் கோயில்கள் அனைத்திலும் ஆசைகளைப் பலியிடப் பலிபீடங்கள் அமைத்தனர்.

எங்கெல்லாம் அழகுணர்ச்சி இருக்கின்றதோ அங்கெல்லாம் இறைமை இருக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கையாகும். எனவே தான் தமிழர்களின் கோயில்கள் கலைவளம் மிக்கனவாக அமைக்கப்பட்டன.

கோயிலோடு தொடர்புடையவர்களின் மனநிலை, ஆர்வம், பண்பாடு இவைகளுக்கு ஏற்ப வழிபாடு அமைகிறது. சாத்வீகப் பண்புடையவர்கள் தொடர்பு கொண்டுள்ள சைவ, வைணவக் கோயில்களில் அமைதி வழிபாடும் சிறுதெய்வக் கோயில்களில் பலி முதலியன நேர்ந்து வீர வழிபாடும் நடத்துவதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

தான் விரும்புகின்றவர்களுக்குத் தான் பெரிதாக விரும்பியவற்றையே கொடுக்கும் பண்பு தமிழர்களுக்கு உண்டு. மக்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றக் கூடியது, இறை சக்தி ஒன்றே என்பது தமிழர்களின் நம்பிக்கையாகும். நோய்க்கு ஆட்படாமலும் இயற்கை வளந்தரவும் மக்கட்பேறு முதலிய உண்டாகவும் இறைவனை முழுவீமாக நம்பினர். மேலும் இறைவனை உண்மையாக நம்புகின்ற போது புறச் செயல்கள் ஏதும்

Koviloor Digital Library

தம்மை பாதிக்காது என்ற நம்பிக்கையின் விளைவாகத் தம்மையே வருத்திக் கொள்கின்ற நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டனர். தொன்று தொட்டு வரும் தமிழர்களின் சமய நம்பிக்கையில் பேரின்ப வீடுபேறு அடைய இம்மையில் சிற்றின்பங்களைத் துறந்து தியாகங்கள் பல செய்து. தம்மையே வருத்திக் கொள்வது தலையாயது. அகத்தை ஒருமைப்படுத்துவதோடு புறத்தையும் ஒருமைப்படுத்தச் சில சோதனைகளை மேற்கொண்டனர். இதன் விளைவாக வந்த நேர்த்திக் கடன்களே தீமிதித்தல், அலகு குத்திக் கொள்ளுதல், காவடி எடுத்தல், அங்கப் பிரதட்சணம் போன்றவை. அதோடு ஒரு பேரின்பத்தை அடைய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும்போது துன்பத்தையும் இழப்பையும் தாங்குகின்ற ஒரு மனநிலை ஏற்பட வேண்டும் என்ற தத்துவத்தை நேர்த்திக் கடன்கள் விளக்குகின்றன.

விழாக்கள் முழுக்க முழுக்க சமயத் தொடர்பான ஒன்றாக இருப்பினும் அவற்றில் தமிழர்களின் பல பண்பாடுகள் வெளிப்படுகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுவுடமைப் பண்பாடு தமிழர்களுக்கே உரியதாகும். விழாக்கள் பொருட்டு வேறு ஊர்களிலிருந்து வருவோரையும் உறவினர்களையும் நண்பர்களையும் அரவணைத்து உபசரித்து உறவு கொண்டனர். இவை தமிழர் பண்பாட்டை விளக்குவதாக அமைகிறது.

நம்பிக்கைகள்

தொன்று தொட்டு வழிவழியாக வருகின்ற சிந்தனைகளும் அனுபவங்களும் நம்பிக்கையின் வழியே தோன்றின. நம்பிக்கைகள் மனித இனத்தோடு ஒன்றிய பொருண்மையாகக் கருதப்படுகின்றது. இத்தகைய நம்பிக்கைகள் அறிவின் முதிர்ச்சியாலும் அனுபவ உண்மைகளாலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. மக்களின் வாழ்வானது நம்பிக்கையின் பாற்பட்டதாக உள்ளது. ஒவ்வொரு இனத்தின் பண்பாட்டு நிலைக்கேற்றவாறு காலம், இடம், சமுதாயச் சூழல் இவற்றின் மரபிற்கேற்ப நம்பிக்கைகளின் வெளிப்பாடு அமைகின்றது. ஏதாவது ஒரு நிகழ்வின் மீது ஈடுபாடு கொண்ட மனிதன் அதனை நம்பிக்கையெனக் கருதினான்.

Koviloor Digital Library

காலம்காலமாகக் காரண காரியங்களின் அடிப்படையில் உருவாகிய கருத்துருவாக்கமானது நாளடைவில் நம்பிக்கையாக உருப்பெற்றது. மனிதன் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை நம்பிக்கை என்ற கருத்தும் நிலவுகின்றது. அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின் தோற்றத்தினையும் செயல்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புகளோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன. நன்மையின் மீதுள்ள ஆர்வமும் தீமையின் மீது ஏற்படும் அச்சமும் நம்பிக்கையின் அடிப்படைகளாகும்.

இத்தகைய நம்பிக்கையாகத் தோன்றிக் காலப்போக்கில் சமூகத்தால் ஏற்று கொள்ளப் படுகின்ற நிலையில் சமூக நம்பிக்கையாகத் தோற்றம் கொள்கின்றது. பழக்கமானது கால ஓட்டத்தில் வழக்கமாக மாறுவது போல மக்களின் மனதில் தோன்றும் நம்பிக்கை காலப்போக்கில் பண்பாடுகளாகப் பரிணமிக்கத் தொடங்கின. நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுகின்றன.

அறிவு அல்லது உணர்வின் அடிப்படையில் ஒன்றின் மேல் ஈடுபாடு கொள்கின்ற நிலையே நம்பிக்கை எனப்படுகின்றது. தமிழரின் நம்பிக்கைகள் பரந்துபட்டவை காலங்காலமாக மக்களிடையே வழக்கில் பயின்று வருபவை. இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ள நம்பிக்கைகளை விடத் தனிமனித வாழ்வில் கருதப்படுகின்ற நம்பிக்கைகளே பலதரப்பட்டவைகளாக உள்ளன.

திருக்கோயில்களும் நம்பிக்கைகளும்

பண்டுதொட்டு இன்றுவரை கோயில்களும் மக்கள் வாழ்வும் பிரிக்கமுடியாத வகையில் அமைந்துள. பலகிராமங்களில் கோயிற்கிணறுகளே மக்கள் உயிர்வாழ்வதற்கு உதவும் தண்ணீரைக் கொடுப்பதைப் பார்க்க முடிகின்றது. கோயில்களில் உள்ள குளங்கள் ஊரின் நீர்ப்பஞ்சத்தை நீக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. கோயில்களில் வழங்கப்படும் உணவு பலகுடும்பங்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் பக்தர்களுக்கும் பசியைப் போக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

Koviloor Digital Library

ஊர்தோறும் உள்ள கோயில்களில் பலர் பணியாற்றுகின்றனர். சில ஊர்களில், கோயில் பணியைவைத்தே பல குடும்பங்கள் வாழ்வு நடத்துகின்றன. கோயிலின் பொருளாதாரம் இத்தகைய பல பணியாளர் குடும்பங்களைத் தாங்கும் நிலையில் உள்ளது. இங்ஙனம் பொருளாதார நிலைக்களனாக மட்டுமின்றிக் கோயில்கள் கலைவளர்க்கும் கல்லூரிகளாகவும் விளங்கின. விளங்குகின்றன. இசையும், இயலும், நாடகமும் கோயிலில் இடம்பெற்றன. தேவாரம் போன்ற இனிய சமயப்பாடல்களை இசை பொருந்தப்பாடும் பல 'ஓதுவார்கள்' கோயில்தோறும் இசைபாடுகிறார்கள். இதனால் கலைப்பண்பாடு வளர்கிறது. பண்பாடு கல்விப்பண்பாடு, கலைப்பண்பாடு, சமூகப்பண்பாடு எனப்பல நிலைகளில் அமையும்.

திருக்கோயில் மண்டபங்கள் கலைகளை வளர்க்கவும் திருச்சுற்றுகள் நாடக சாலைகளாகவும் அரங்கேற்று மண்டபங்களாகவும் விளங்கின. ஆயிரங்கால் மண்டபம் போன்றவை ஊர்மக்கள் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடத்தவும் பயன்பட்டன. இன்றும் நடுத்தரமக்கள் பெரிய மண்டபத்திற்குக் கட்டணம் செலுத்தித் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் செய்ய முடியாத நிலையில் கோயில்களில் நடத்தப்படுகின்றன.

கலையையும் பொருளாதாரத்தையும் சமயத்தையும் வளர்த்ததோடமையாது கோயில்கள் நாட்டில் நலத்துறையும் சுகாதாரத்தையும் கூட வளர்த்தன. கோயில்களில் தயாரிக்கப்படும் உணவு நோயற்று வாழ வழிகாட்டும் வகையில் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் மிளகும் நெய்யும் பயன்படுத்தப்படுகின்றது. இவை உடம்பிற்கு நல்ல ஆரோக்கியத்தைத் தருகின்றன. மக்கள் நலம் கெடுக்காத நல்உணவுக் களஞ்சியங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன.

கோயில்கள் பண்பாட்டு உறைவிடமாக விளங்குகின்றன. மக்களிடையே கோயில் தொடர்பாக எழுந்த நம்பிக்கையே பண்பாடாக மாறியது. மக்கள் தங்களை இறைவன் துன்பத்திலிருந்து மீட்டெடுப்பார் என்று கருதி இறைவனுக்குப் பல்வேறு நேர்த்திக்கடன்களைச் செய்து வழிபடுகின்றனர்.

Koviloor Digital Library

முடிவுரை

உலகில் உயிரினங்கள் பலவாகக் காணப்படினும் மக்கள் இனத்திற்கே பண்பாடு என்பது பொருந்துவதாக அமைகின்றது. பண்பாடு என்பது மனித மனத் தொடர்பானது. மாறக்கூடியது. நாகரிகம் என்ற பொருளிலும் வழங்கப்படுவது. மனித வாழ்க்கையைத் திருத்துவது அல்ல. செம்மைப்படுத்துவது. அந்தந்தச் சமூகத்திற்கேற்ப மாறக்கூடியது. தமிழர்களின் மேம்பட்ட வாழ்விற்குக் கோயில்களோடு அவர்கள் கொண்டுள்ள தொடர்பு பெரிதும் காரணமாக அமைகின்றது. கோயில்களும் மக்கள் வாழ்வும் பிரிக்க முடியாத வகையில் அமைந்துள்ளன.

சான்றெண் விளக்கம்

1. ஞா.தேவநேயப்பாவாணர், பண்டைத்தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.6.
2. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பணபாடும், ப.4.
3. மேலது, ப.5.
4. கா.சிவதம்பி, தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும், ப.14.
5. எரிதழல், பண்பாடும் புரட்சியும், ப.16.
6. செ.வைத்தியலிங்கன், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ப.1.

Koviloor Digital Library

வரலாறு, பண்பாட்டு ஆவணமாக விளங்கும் கொங்குநாட்டுத் தலபுராணங்கள்

முனைவர் சி.யசோதா
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி -1.

2500 ஆண்டுகளுக்கு மேலாக மக்களின் பேச்சுமொழியாக வழங்கியும், உலகச் செம்மொழியாகவும் அமைந்து விளங்குவது தமிழ்மொழியேயாம். இதற்குச் சான்றாக அமைவன இம்மொழியிலுள்ள இலக்கியங்கள்.

புராணங்கள்

புராணம் என்பதற்கு 'முன் நிகழ்ந்தது' என்பது பொருளாகும். இன்னும் மக்களிடையே சொல்லப்பெற்று வழங்கும் பழமையான வரலாறுகள் புராணம் எனப்படும்.1 வடமொழிப் புராணங்கள் அனைத்தையும் (1) மகாபுராணங்கள், (2)உபபுராணங்கள், (3) அதிபுராணங்கள் என மூன்று வகையாகப் பிரிப்பர். இவற்றுள் மகா புராணங்கள் சமயத்தைப் பொதுநிலையில் பேசுவன. உபபுராணங்கள் தனித்தனித் தெய்வங்களைப் புகழ்வன. அதிபுராணங்கள் பிற்காலத்தவை. இவை விரதம், தீர்த்தம், தலம் பற்றிப் பேசுவனவாகும்.

தமிழில் புராணங்கள்

தமிழில் இடைக்கால இலக்கிய வளர்ச்சியில் புராணங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை வனப்புகளுள் 'தொன்மை' என்னும் வனப்பின் இலக்கணத்தைப் பெற்று வருவன தமிழ்ப்புராணங்கள். "தொன்மைதானே உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே"2 என்பது தொல்காப்பிய நூற்பா. புராணங்களைப் பொருள் அடிப்படையில் ஆறாகப் பகுக்கிறார் வே.இரா.மாதவன். அவற்றுள் ஊர்ச்சிறப்பை எடுத்துரைக்கும் புராணங்கள் தலபுராணங்கள் எனப்படுகின்றன.

Koviloor Digital Library

தலபுராணங்கள்

ஒரு தலத்திலுள்ள இறைவன் புகழை விரித்துச் சொல்வது தலபுராணம் ஆகும். ஊர்ப்பெயரில் அமைந்த இவ்வகைப் புராணநூல்கள் தலத்தின் பெருமையையும் மூர்த்தி, தீர்த்தத்தின் பெருமைகளையும் கூறி, வரலாற்றை எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு ஊர் மக்களும் தங்கள் ஊர், நாடு பற்றிப் பெருமைகொண்டு, சிறந்த சமயப்பற்றுடன் வாழ வழிசெய்வன தலபுராணங்கள்.

தலம்

தலம் என்பது 'ஸ்தலா' என்ற வடசொல்லின் தமிழ் வடிவமாகும். தலம் என்பதற்கு இடம், பூமி, உலகம், புண்ணியபூமி என்ற பொருளில் தலம் எனவும் ஷேத்திரம் எனவும் கூறப்படுகின்றது. தலம் என்பது சிறப்பாகக் கோவில்களையே குறிக்கின்றது எனலாம். தலங்களின் சிறப்பை விளக்கவே தலபுராணங்கள் உருவாயின. இத்தலபுராணங்களைப் பயணநூல்களோடு ஒப்பிட்டு ஆராய இடமுண்டு.

தமிழில் தலபுராணங்கள்

தமிழில் கி.பி.12 முதல் 19ம் நூற்றாண்டுவரை எண்ணற்ற தலபுராணங்கள் இயற்றப்பட்டுள்ளன. கலைகள் வளருமிடம் கோவில்களானமையால் திருக்கோவில்களுடன் தொடர்புகொண்டு புராணங்கள் தலபுராணங்களாக உருவா-யின. இது தமிழுக்கே உரித்தான தனிச்சிறப்பாகும்.

தலபுராணங்களின் நோக்கம், உருவ வழிபாட்டின் பயன்களை அனுபவப்பூர்வமாக உணர்த்துவதும், பழைமையான வரலாற்றுச் சிறப்புகளை விவரிப்பதுமாகும். தலபுராணங்கள் மூர்த்தி(இறைவன்), தலம்(ஊர்), தீர்த்தம்(புனிதநீர்), விருட்சம்(கோவில்மரம்) ஆகிய நான்கு பொருள்களைச் சிறப்பாகப் பேசுவனவாகும்.

கொங்கேழ் தலங்கள்

கொங்கு நாட்டில் கொங்கேழ் தலங்களான திருஅவிநாசி, திருமுருகன்பூண்டி, திருநணா(பவானிமுக்கூடல்), திருக்கொடி

Koviloor Digital Library

மாடச் செங்குன்றூர்(திருச்செங்கோடு), திருவெஞ்சமாக்கூடல், திருப்பாண்டிக்கொடுமுடி, திருக்கருவூர் ஆனிலை ஆகிய ஏழுதலங்கள் குறித்தும் தலபுராணங்கள் தமிழில் உண்டு. இத்தலங்கள் தேவாரமூவர் பாடல் பெற்ற தலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(1) அவிநாசித் தலபுராணம்

தேவாரப் பாடல் பெற்ற இத்தலத்தின் பெயர் திருப்புக்கொளியூர். அவிநாசி என்பது இறைவன் பெயர். இறைவன் பெயரே கோவிற்பெயராயிற்று. அவிநாசி - விநாசம் இல்லாதது எனப் பொருள்படும். சுந்தரமூர்த்தி நாயனார் முதலைவாய்ப் பிள்ளையை மீட்கப் பாடிய தலமிது.

400ஆண்டுகளுக்கு முற்பட்ட இளையான் கவிராயர் இயற்றிய இந்நூலில் 13சருக்கங்களுடன் 1020செய்யுட்கள் உள்ளன. கடவுள்வாழ்த்துப் பகுதியில் 30பாடல்கள் உள்ளன. சுரந்தரர் சருக்கம் 340பாடல்களில் மிக நீண்டதாகப் பாடப்பட்டுள்ளது.

(2) திருமுருகன்பூண்டித் தலபுராணம்

அவிநாசியிலிருந்து சிறிது தொலைவிலுள்ள தலம் திருமுருகன்பூண்டி. முருகப்பெருமான் வழிபட்ட தலமிது. செட்டிபாளையம் வித்துவான் வாசுதேவ முதலியார் பாடியதே திருமுருகன்பூண்டித் தலபுராணம் ஆகும். இந்நூல் 11சருக்கங்களுடன் 618செய்யுட்களைக் கொண்டதாகும். இத்தலம் மாதவிவனம் எனப்படுகிறது. ஒருமுறை சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வழியே வந்தபோது, இறைவன் தன் பூதகணங்களை வேடர் வடிவில் ஏவி, சேரமான் பெருமாள் சுந்தரர்க்களித்த செல்வங்களைப் பறிக்கச் செய்தார். பின் இறையருளால் அப்பொருட்களை மீட்டார் சுந்தரர். மேலும் இத்தலத்தில் அகத்தியர், மார்க்கண்டேயர், துர்வாசர் ஆகியோர் வழிபட்டதாகக் கூறுவர்.

(3) பவானிகூடற் புராணம்

திருநணா என்னும் பவானித்தலம் பவானியாறு காவிரியில் கூடுமிடத்தில் இத்தலம் அமைந்துள்ளது. இவ்வூர் பத்மகிரி, நாககிரி(திருச்செங்கோடு), சங்ககிரி, மங்கலகிரி, வேதகிரி

Koviloor Digital Library

என்னும் ஐந்து மலைகளால் சூழப்பெற்றது. இத்தலத்தில் வழிபடுவோருக்கு ஒரு தீங்கும் நண்ணாமல் காக்கும் ஊர் ஆதலால் திருநணா என வழங்கப்படுகிறது. குபேரன், விசுவாமித்திரர், இத்தலத்தின் வரலாற்றைப் பவானிக்கூடற் புராணமாகப் பாடியவர் வித்துவான் வாசுதேவமுதலியார். இந்நூல் 18சருக்கங்களையும் 901 பாடல்களையும் கொண்டது.

(4) திருச்செங்கோட்டுப் புராணம்

45சருக்கங்களில் 1223பாடல்களால் வீரகவிராச பண்டிதரால் பாடப்பட்ட இப்புராணம் முருகனின் சிறப்புகளைப் பேசும். திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரத் தலமாகும். சிவத்தலமா-யினும் முருகப்பெருமானுக்கு மிக விருப்பமான தலமிது. சிவந்தநிற மலைமீது கோவில் உள்ளது. மேலமாட வீதியிலிருந்து பார்த்தால் இம்மலை நாகம் போல் காட்சியளிப்பதால் 'நாககிரி' எனவும் இவ்வூர் வழங்கப்படுகிறது. விறன்மிண்டநாயனார் பிறந்த- திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட ஊரிது. சிவ அடியார்களுக்கு ஏற்பட்ட 'நளிர் காய்ச்சலை'ப் பதிகம் பாடி, சம்பந்தர் போக்கிய ஊரிதுவாகும்.

(5) திருவெஞ்சமாக்கூடற் புராணம்

அமராவதியின் கிளை ஆறான சிற்றாறு அமராவதியுடன் கூடுமிடத்தில் உள்ள ஊர் ஆனதாலும் வெஞ்சமாக்கூடல் என இத்தலம் பெயர் பெற்றது. கொங்குமண்டலச் சதகப் பதிப்பிலுள்ள மேற்கோள் இத்தலத்திற்குரிய தலபுராணம் குறித்துச் சுட்டுகிறது.

(6) திருப்பாண்டிக்கொடுமுடிப் புராணம்

இத்தலம் மூவர் பாடல் பெற்ற தலமாகும். ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் நடந்த போட்டியில் ஆதிசேடன் சுற்றிய மேருவின் ஆயிரம் சிகரங்களுள் ஒன்று, ஐந்து மணிகளாக உடைபட்டுச் சிதறியது. அவற்றுள் சிவப்புமணி திருவண்ணாமலையாகவும், மரகதம் ஈங்கோய் மலையாகவும், மாணிக்கம் திருவாட்போக்கியாகவும், நீலம் பொதிகையாகவும், வைரம் கொடுமுடியாகவும் ஆயின என்பர். மேருமலையின் ஒரு கொடுமுடி(சிகரம்) இங்கு வீழ்ந்ததால் இப்பெயர் வந்தது என்பர். பாண்டிய மன்னனின் விரல் வளர்ந்து குறைதீர்ந்த தலமாதலால்

Koviloor Digital Library

பாண்டிக்கொடுமுடி (அங்கவர்த்தனபுரம்) என்றாயிற்று. இத்தலத்தை வழிபட மூவரருளும் கிடைக்கும் என்பதால் இதனை மும்மூர்த்திதலம் என்பர். இதனை இயற்றியவர் சாமக்குளம் வேங்கடரமணதாசர் ஆவார். இந்நூலில் 12சருக்கங்களும் 819 பாடல்களும் உள்ளன.

(7) கருவூர்ப்புராணம்

காமதேனு வழிபட்டுப் படைத்தல் தொழில் புரிய வரம் பெற்று, அனைத்தையும் படைத்த தலம் ஆதலால் இத்தலம் கருவூர் என்றும், இறைவன் பசுபதி என்றும், கோவில் ஆனிலை என்றும் அழைக்கப்படுகின்றன. சோழத்தலைநகர்களுள் ஒன்று இது. பாடியவர் பெயர் தெரியவில்லை. தமது குருநாதர் பெயர் சத்தியஞானி என்று குறிப்பிடுகிறார் இந்நூலாசிரியர். இந்நூல் கி.பி.1618ல் அரங்கேற்றப்பட்டுள்ளது. இதில் 21சருக்கங்களும் 1131பாடல்களும் உள்ளன. கருவூர்த்தேவரின் விரிவான வரலாற்றைப் பதிவு செய்துள்ள நூல் இது.

பிற தலங்கள்

கொங்கேழ் தலங்கள் மட்டுமின்றி, திருப்பேரூர், குரக்குத்தளி, சேவூர் ஆகிய வைப்புத் தலங்களும், திருத்துடிசை, பழனி, அப்பிரமேயம், திருவெள்ளூர், சேலம், தீர்த்தகிரி, கரபுரம், சிவமலை, தென்சேரிகிரி, தாராபுரம், திரிமூர்த்திமலை, அன்னியூர், கோயிற்பாளையம், காரமடை, சென்னிமலை, பூந்துறை ஆகிய தலங்களும் புகழ்பெற்று விளங்குகின்றன. இத்தலங்களுக்கும் தமிழில் தலபுராணங்கள் உள்ளன.

முடிவுரை

கொங்குநாட்டில் பாடல்பெற்ற தலங்கள் ஏழுக்கும் தலபுராணங்கள் இயற்றப்பட்டிருப்பதும், இவை தவிர வேறு 19 கொங்குநாட்டுத் தலங்களுக்கும் தலபுராணங்கள் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கொங்குநாட்டின் வரலாற்றினை ஆராய்வதற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் பிறவும் இருக்க, நூல்வழிச் சான்றுகளாகத் தலபுராணங்கள் பெரிதும் பயன்படுகின்றன. கொங்குநாட்டுத்

Koviloor Digital Library

தலபுராணங்கள் அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்து நோக்கின் பல வரலாறுகள் தெளிவடையும் என்பது உண்மை.

குறிப்புகள்

1. பிரம்மபுராணம், பகுதி –1,
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா.549
3. வே.இரா.மாதவன், தமிழில் தலபுராணங்கள், தொகுதி –1, ப.25

Koviloor Digital Library

நவநீதசேவை - சிறுதெய்வ வழிபாட்டில் வைணவத் தாக்கம்

முனைவர் சா. இரமேஷ்,
தமிழ் உதவிப்பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி (தன்.),
கும்பகோணம்.

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருள்மிகு நாடியம்மன் வடக்குவாய்ச் செல்வியாக வீற்றிருந்து தன்னை நாடி வருபவர்க்கெல்லாம் அருட்செல்வத்தை வாரி வழங்குபவளாகத் திகழ்கின்றாள். இவ்வன்னைக்கு எடுக்கப்படும் விழாக்களில் பிரம்மோத்சவ விழா குறிக்கத்தக்கச் சிறப்புடையது. பத்து நாள்களிலும் காலை, இரவு இரு பொழுதுகளிலும் நாடியம்மன் உற்சவர் திருமேனி அழகுற அலங்காரம் செய்யப்பெற்று திருவீதி உலா வருகிறது.

எட்டாம்நாள் திருவிழாச் சிறப்பு

நாடியம்மன் திருவிழாவில் எட்டாம் நாள் விழா செவ்வாய்க் கிழமை கொண்டாடப் பெறுவதாகும். எட்டாம் நாள் காலை இறைவி நாடியம்மன் கிருஷ்ணனாகத் திருக்கோலம் புனைந்து உலா வருவாள். அல்லோரை அழித்து நல்லோரை வாழ்விக்கும் நாடியம்மன், முற்காலத்தில் கொடூர தெய்வமாக விளங்கி அம்மை போன்ற பல வெப்பு நோய்களை மக்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படுத்தி அச்சுறுத்தி உயிர்ப்பலி பெறும் தகைமையவள். அழிப்பவளாக விளங்கும் இவ்வன்னை எட்டாம் நாளில் கிருஷ்ணலங்காரத்தில் காப்பவளாகத் திகழ்கிறாள்.

நவநீத சேவை

நாடியம்மனின் கிருஷ்ணாலங்காரத்தை நவநீத சேவை என்பர். மக்கள் வட்டார வழக்காக வெண்ணெய்த் தாழி வைபவம் என்றழைப்பர். மக்கள் நாடியம்மனைக் கிருஷ்ணனாக அழகு செய்து அவன் திருடித் தின்னும் வெண்ணெயைக் கொண்டு வந்திணைத்து இத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

Koviloor Digital Library

நவநீதம் என்ற சமச்கிருதச் சொல் புது வெண்ணெய் என்ற பொருளுடையது. சேவை என்ற சொல் வணங்குதல் என்ற பொருளைத் தருகிறது. இச்சொல் வைணவத் திருத்தலங்களில் மிகுதியாகப் புழங்கும் சொல்லாகும். இன்றும் அரையர் சேவை, கருடசேவை என்று திருமால் கோவில்களில் வழங்குதலைக் காண முடியும். ஆனால், ஊர்ப்புற மக்களோ இவ்விழாவை வெண்ணெய்த் தாழி என்றழைப்பர். கிருஷ்ணனாக வேடம் பெற்ற அன்னையின் இடுப்பில் தாழி(குடம்)யை வைத்திருப்பதால் இது வெண்ணெய்த்தாழி என்று பெயர் பெற்றது. கிருஷ்ணனுக்கு வெண்ணெய் விருப்பமானது. அரச குலத்தில் பிறந்து ஆயர் பாடியில் வளர்ந்த கிருஷ்ணன் வெண்ணெய்த் திருடி உண்டதைப் பெரியாழ்வார்,

"வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை
வெற்பிடை யிட்டுஅத னோசை கேட்கும்
கண்ண பிரான்கற்ற கல்வி தன்னைக்
காக்ககில் லோம்உன் மகனைக் காவாய்"

(9ஆம் திருமொழி, பா.எண்.202)

என்று பாடுவார். மகனைக் காவாய் என்று அண்டை வீட்டு மக்கள் யசோதையிடம் முறையிடுவதை இப்பாடல் காட்டும்.

நாடியம்மன் திருவருளால் பட்டுக்கோட்டை முழுமையும் உழவுத்தொழிலும் ஆடுமாடுகள் வளமும் பெருகிய பகுதி. உழவுத்தொழிலுக்கும் அதற்கு அடிப்படையான கால்நடைகளுக்கும் எவ்வகையான அழிவும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில் அம்மையைத் திருமாலாக்கி அழகு செய்து வழிபடுகின்றனர். இவ்விழா முழுக்க முழுக்க வைணவத் தொடர்புடைய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பங்குனியில் நடைபெறும் இவ்விழாவைப் போன்று மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலிலும் வெண்ணெய்த் தாழி வைபவம் நடைபெறுவது குறிக்கத்தக்கது. மராட்டியர் காலத்தில் பட்டுக்கோட்டை, மன்னார்குடி ஆகியன் சுபாக்களாக இருந்தன. தஞ்சை மராட்டிய மன்னர்கள் திருமால் வழிபாட்டில் மிக்க ஈடுபாடு காட்டினர். இவ்விரு திருக்கோயில்களுக்கும் நிவந்தங்கள் வழங்கியுள்ளனர்.

Koviloor Digital Library

பங்குனியில் 18 நாட்கள் பிரம்மோற்ஸவம் நடக்கிறது. கிருஷ்ணருக்காக அமைந்த கோயில் என்பதால் 18க்கு முக்கியத்துவம் கொடுத்து இவ்விழா நடத்தப்படுகிறது இவ்விழாவை, "பார் புகழும் பங்குனி பிரம்மோற்ஸவம்' என்று குறிப்பிடுகிறார்கள். இவ்விழா நடக்கும் நாட்களில் கிருஷ்ணனின் 32 லீலைகளில், சுவாமியை அலங்காரம் செய்வது விசேஷம். பிரம்மோற்ஸவத்தின் 16ம் நாளில் "வெண்ணெய் தாழி' உற்சவம் நடக்கிறது. அப்போது சுவாமியை தவழ்ந்த கோலத்தில், கையில் வெண்ணெய்ப்பானையுடன் வீதியுலா செல்கிறார்.அந்நேரத்தில் சுவாமிக்கு வெண்ணெயை பிரதான நைவேத்யமாக படைக்கின்றனர். அலங்காரம் முடிந்து இவர், ஊருக்குள் உள்ள மண்டபத்திற்கு செல்கிறார். அப்போது வழிநெடுகிலும் பக்தர்கள் இவர் மீது வெண்ணெயை வீசுகிறார்கள். அன்று மாலையில் இவர் குதிரை வாகனத்தில் அங்கிருந்து சன்னதிக்கு திரும்புகிறார். (அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில், தங்க. செல்வகுமார்) எனும் ஆசிரியரின் கூற்று பழமை மரபு மன்னார்குடி கோவிலில் இவ்விழா இருந்து வருவதை உறுதிப்படுத்துகிறது. மன்னார்குடி திருவிழாவில் வெண்னெய்த் தாழி விழா மற்றும் ஏழூர் சப்ததான விழாவில் பதுமை பூப்போடும் விழா இவ்விரண்டு விழாக்களையும் அன்றைய தஞ் சாவூர் ஜில்லா போர்டு தலைவரான ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளை அவர்கள் தமது வாழூரான பட்டுக்கோட்டையில் கொண்டு வந்து இணைத்துச் சிறப்பித்தார் என்று செவிவழிச் செய்தியால் அறிகின்றோம்.

கிருஷ்ணன் அலங்காரம்

பொதுவாக, சிறுதெய்வக் கோவில்களில் நாள் பூசை செய்யும் வேளாளரே திருவிழாக்களிலும் அம்மனுக்குச் சாத்துப்படி(அலங்காரம்) செய்வர். ஆனால் நாடியம்ம்னைப் பத்துநாளகளும் சிவன் கோவில் அய்யர் ஆடை, அணிகலன்களை அணிவித்து அழகு செய்கிறார்.

நாடியம்மன், கிருஷ்ணன் வேடத்தில், தவழ்ந்த நிலையில் வெண்ணெய்க் குடத்தை அணைத்துக் கொண்டிருக்குமாறு அலங்காரம் செய்யப் பெற்றிருக்கும். கிருஷ்ணனின்

Koviloor Digital Library

முன்னலங்காரம் மிகச்சிறப்பாகச் செய்யப்பெற்றிருப்பதைப் போல பின்னலங்காரமும் நேர்த்தியாகச் செய்யப் பெற்றிருக்கும். கிருஷ்ணனின் இருபுறக் காட்சிகளையும் அடியவர்கள் வணங்கி மகிழ்வர்.

திருக்கோவில் திருவிழாக்களில் இரைவன் இறைவியைப் பல்வேறு கோலங்களில் அலங்கரிப்பதற்கு என்றே பல பொருள்கள் இருக்கும். உற்சவர் திருவுருவத்தை வைத்து நடமாடுவது போலவும் உட்கார்ந்திருப்பது போலவும் அழகு செய்வர். இதற்குத் துணிச்சுருள், வெல்வெட்டுத் துணிகள் அஸ்தம் பாதம்(தங்கத்தாலோ செம்பாலோ செய்யப்பெற்ற கைகால்கள்) போன்ற துணைப்பொருள்கள் இருக்கும். இவற்றையும் துன்ணிகளையும் வைத்து அலங்காரம் செய்வர். அம்மன் கிருஷ்ணலங்கார்த்தில் முன்புறம் குடத்தைத் தாங்கிய நிலையிலும் பின்பகுதி கிருஷ்ணன் தவழ்வது போன்றும் அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும்.

பட்டு சாத்துதல்

கிருஷ்ணனாக வீதியுலா வலம் வரும் நாடியம்மனுக்கு அடியவர்கள் அவரவர் வீட்டு செதிரில் வரும்போது பட்டு சாத்தி வெண்ணெய் இட்டுத் தேங்காய் பழம் வைத்து அர்ச்சனை செய்வர். மக்கள் வீட்டுக்கு வரும் உயர்ந்தோரை வரவேற்பது போல அம்மையை வரவேற்றுப் பட்டு அணிவிக்கின்றனர். இத்திருவிழாவில் வெண்ணெய்ச் சார்த்தி மக்கள் வழிபதுதல் புதுமைத் திருவிழாவாக அமைகிறது. காளியம்மன் கோவில் விழாக்களில் இறுதி நாளன்று சப்த வாரணம் என்று கொண்டாடப்படும். அன்றைய தினம் அம்மன் இடுப்பில் மஞ்சள் நீர்க்குடத்தை ஏந்தி வருவாள். ஆனால், நாடியம்மன் கோவில் எட்டாம் நாள் திருவிழா வெண்ணெய்த் திருவிழாவாக வேறு எந்த அம்மன் கோவிலும் காண முடியாத விழாவாகத் திகழ்கிறது. அம்மை திருமாலின் தங்கை. எனவே, அம்மை அண்ணனைப் போலாலங்காரம் பூண்டு அடியவர்க்கு அருள் செய்தல் பொருத்தமே. வெண்ணைத் தாழி வைபவம் ஸ்ரீமான் நாடிமுத்துப்பிள்ளையின் வி.என்.சத்திரத்தாரால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தற்காலத்தில்,

Koviloor Digital Library

பட்டுக்கோட்டை பகுதியைச் சார்ந்த கிராம நிர்வாக அதிகாரிகள் சங்கத்தினரால் இரவு பாட்டுக் கச்சேரி மற்றும் கோர்ட் அருகில் சிறப்பான பூசைகள் செய்யப்பட்டு வருகிறது.

வெண்ணையும் வெப்பு நீக்கமும்

வெண்ணெய் உடல் உஷ்ணத்தை நீக்குவது. பொதுவாக கொடூர தெய்வங்களின் கொடுமையைத் தணிக்க வெண்ணையை அவற்றின் உடலில் பூசுவது தமிழக வழிபாட்டு மரபுகளில் ஒன்று. நாடியம்மனை வழிபடுகின்ற மக்கள் அனைவரும் அவளின் நல்லருள் பெற வெண்ணையினை அவள் இடுப்பில் ஏந்திய குடத்தில் சாத்தி வழிபடுகின்றனர். மன்னார்குடி திருவிழாவில் வெண்ணை உருண்டைகளைக் கிருஷ்ணன்மீது வீசி எறிந்து வழிபடுவர். அதுபோல, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அருள்பாலிக்கும் அக்கினி விரபத்திரர் திருவுருவின் மீதுவெண்ணை உருண்டைகளை வீசி எறிகின்றனர். இங்கு உலா வரும் அம்மன் மீது வீசியெறிதல் உகந்ததன்று என்று கருதி அவளைக் கிருஷ்ணனாக்கித் தாழியில் இடுகின்றனர். நாடியம்மன் தாழியில் நிறைவது போன்று பட்டுக்கோட்டை வாழ் மக்களின் வீட்டுத் தாழிகளிலும் வெண்ணை பெருகி பால்வளம் பெருக வேண்டும். பால் பெருகிப் பசுவளம் பெருக வேண்டும் என்பது மக்களின் நோக்கமும் விருப்பமுமாகும்.

Koviloor Digital Library

கோயில் வழிபாட்டு முறைகள்

முனைவர் துரை. இரவிக்குமார்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்

முன்னுரை

திருக்கோயில்களால் சிறப்புற்றது தெய்வத்தமிழ் திருநாடு. திருக்கோயில்கள் சமயம் சார்ந்தவை. சமயம் சமுதாயத்தின் ஓர் அங்கமாகும். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் திருக்கோயில்கள் ஆன்மீக வளர்ச்சிக்குரிய நிறுவனமாக மட்டுமின்றி பண்டைத்தமிழரின் கலைக் களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன. ஆடல், பாடல், இசை, கூத்து, சிற்பம், ஓவியம் ஆகிய அனைத்து விதக்கலைகளும் திருக்கோயில்களில் இடம்பெற்று பண்பாட்டு பெருமைகளைப் பகர்வனவாக உள்ளன. இவ்வாறு இறையருளுடன் கலையழகும் கூடியிருக்கும் காரணத்தால் திருக்கோயில்கள் ஆன்ம இலயப்படும் இடமாயின.

திருக்கோயில் அமைப்பு

ஆன்மா உறையுமிடம் ஆலயம் என்பர். கோ - அரசன், இல் - இல்லம், என்று கோயில் உருவானதற்கு விளக்கம் தருவர். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் முதுமொழிக்கேற்ப ஊர்களுடன் கோயில்கள் தொடர்பு கொண்டிருந்தமையை அறியமுடிகிறது. இத்திருக்கோயில்கள் விதிமுறைகளைப் பின்பற்றி அமைக்கப்படும். அவ்விதி முறைகளைக் குறித்து ஆகமங்கள் சிற்ப சாத்திரங்கள் போன்றவை விரிவாகப் பேசுகின்றன.

" வாஸ்து நூல்களானவை கோயிற் கட்டிட அமைப்பிலக்கணங்களையும் அக்கோயில் கட்டடத்தில் வைத்து வழிபடுவதற்கேற்றதான கடவுள்படிமங்களின் அமைப்பு, இலக்கணங்களையும் விளக்கிப் பேசும் வாஸ்து நூல்வழி நின்று கட்டுவித்த கோயில்களையும் வடித்திட்ட படிமங்களையும் மரபு வழிப்பட்ட சடங்குகளின் வாயிலாகத் தூய்மைப்படுத்தியும் நிலைப்படுத்தியும், வழிப்பாட்டிற்கு உரியனவாக்கியும் தருவன

Koviloor Digital Library

ஆகமநூல்கள்".

திருவுருவமைதி

சிந்திக்க இயலாத அன்பு மனம் கொண்டவர்களுக்குச் சிந்திப்பதற்குப் பற்றுக் கோடாக விளங்க வேண்டும் என்றே இறைவன் திருவுருவங்கள் அமைந்தன. அமைக்கப்பட்டன என்பர் நாகப்பா நச்சியப்பன்.

திருக்கோயில்களில் இத்தகைய திருவுருவங்கள் அமைப்பது குறித்து ஆகமங்களும் சிற்ப சாத்திரங்களும் விதிமுறைகளை வகுத்துள்ளன. பெருந்தெய்வக்கோயில் மரபுகளில் இவ்விதி முறைகளைப் பின்பற்றி திருவுருவ அமைதி கோயில்களில் இடம்பெறுகின்றன. இத்திருவுருவங்களை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவையாவன,

1. மூலப்படிமங்கள் (கருவறையில் உள்ள திருவுருவங்கள்)

2.. பரிவாரப் படிமங்கள் (திருச்சுற்றில் உள்ள திருவுருவங்கள்)

3. உற்சவப் படிமங்கள் (செப்புத் திருமேனிகள்)

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனுக்கு திருவுருவம் அமைத்து வழிபடுவது மனிதனின் பக்குவப்பட்ட நிலையை விளக்குகின்றன.

திருக்கோயிலின் வழிபாட்டு முறைகள்

திருக்கோயிலை எழுப்பித் திருவுருவங்களை எழுந்தருளச் செய்தால் மட்டும் திருக்கோயில் முழுமை பெற்றதாக அமையாது. தினமும் வழிபாடு நடைபெற வேண்டும். கடவுள் வழிபாடு என்பது ஒரு பயிற்சி முறை. உண்மையான வழிபாடு என்பது சடங்குகள் மட்டுமன்று கடவுள் நெறியில் தம்மை வழிப்படுத்திக் கொள்ளுதலாகும் என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுவார்கள்.

வழிப்பாட்டின் வகைகள்

" பூசை என்பதற்கு ஞானத்தை உண்டாக்கக் கூடிய சாதனம் என்பர் ச.மெய்யப்பன். பூவினைக் கொண்டு செய்யப்படுவது பூசை என்றும், பூசுதல் (அலங்காரம்) என்ற அடிப்படையில் பிறந்த சொல் பூசை என்றும் குறிப்பிடுகின்றனர். அப்பூசை

Koviloor Digital Library

வழிப்பாட்டில் பல வகைகள் உண்டு." இறைவனுக்கு நாள்தோறும் செய்யப்பெறும் பூசைக்கு நித்தியம் என்றும், விசேட காலங்களில் செய்யப்படும் பூசை நைமித்திகம் என்றும் கூறுவதுண்டு. நித்திய பூசையில் குறைபாடுகள் ஏற்படலாம். அவை நைமித்திக பூசையில் நீக்கப்பெறும். நாள் வழிபாடு நித்திய பூசை என்றழைக்கப்படுகிறது. பெருந்தெய்வக் கோயில்களில் பெரும்பாலும் ஆறுகாலப் பூசைகள் நிகழும்.

நாள் வழிபாடு

காலை முதல் நண்பகல் வரை திருவனந்தல், காலசந்தி, உச்சிக் காலம் ஆகிய மூன்று காலப் பூசையும், மாலை முதல் இரவு வரை சாயரட்சை, இரண்டாம் காலப்பூசை, அர்த்த சாமம் ஆகிய மூன்று காலப் பூசைகளும் நடத்தப்படுகின்றன.

திருவனந்தல்

காலை 4 மணி முதல் ஆறு மணிக்குள் இப்பூசை நிகழ வேண்டும். குருக்கள் காலையில் எழுந்து கடமைகளை முடித்து உருத்திராட்சம், விபூதி அணிந்து தூய சிந்தையராய் திருக்கோயிலை அடைவர். பின் துவாரபாலகர்களை வணங்கி பூத சுத்தி புரிந்து, பைரவரை வணங்கி அவரிடம் இருந்து திறவு கோலைப் பெற்று கோயிலை திறந்து இறைவன், இறைவி நிர்மாலியங்களைக் களைந்து பாதசுத்தி, அர்ப்பணம், அசவனியம் என்ற முறையில் வழிபாடு செய்வர். பள்ளியறையைத் திறந்து இறைவனையும் இறைவியையும் பல்லக்கில் ஏற்றி மூலத்தானத்தில் நிறுத்தி நீராட்டி வழிபாடு செய்வதே திருவனந்தல் பூசையாகும். இதனை உஷக்காலப் பூசை என்றும் கூறுவர், இது அனைத்துத் திருக்கோயில்களிலும் பின்பற்றப்படும் முறையாகும்.

காலசந்தி

சூரியன் உதித்த பிறகு ஏழரை நாழிகைக்குள் இப்பூசை நிகழ்தல் வேண்டும் என்பர். சில திருக்கோயிலில் காலப்பூசை 8.30 மணிமுதல் 9.30 மணி வரை நிகழ்கிறது. சூரியன், விநாயகர், சுவாமி, அம்மன் மற்றும் பரிவாரத் தெய்வங்கள் எல்லாவற்றிற்கும் இவ்வேளையில் பூசை நடைபெறும்.

Koviloor Digital Library

உச்சிக்காலப் பூசை

நண்பகலில் இப்பூசை நடைபெறுவது மரபு. உச்சிக்காலப் பூசை 12 மணி முதல் 12.30 மணிக்குள் நிகழ்த்தப்படுகிறது. இப்பூசையின்போது குருக்கள் நித்திய கடன்களை முடித்து, விக்னேசுவர பூசை முதலிய பூர்வங்க கிரியைகளை முடித்து, மூலவரை வணங்கி சுவர்ண பூசை நிகழ்த்தி, ஆதர சக்தி முதல் மானசாபிடேகம் வரை நிகழ்த்துவர். எண்ணெய்க் காப்பு முதல் பற்பல அபிடேகம் நடத்திப் பின்னர் அர்ச்சனை செய்வர். பிறகு தீப ஆராதனைகள் நிகழ்த்தி சிவ நிர்மானியங்களை சண்டிகேசுவரிடம் ஒப்படைப்பர். இத்துடன் இப்பூசை நிறைவு பெறும்.

சாயரட்சை பூசை

இப்பூசை சூரியன் மறைவதற்குள் 3 3\4 நாழிகைக்கு முன் நிகழ்த்தப்பட வேண்டும். இப்பூசையானது துவாரபாலகரில் இருந்து தொடங்கி விநாயகரோடு நிறைவு பெறுகிறது. இவ்வேளையில் முக்கியமாக விநாயகரையும் மூலவரையும், பின் சிவபெருமானுடைய ஏனைய மூர்த்தி உருவங்களையும் அம்மையையும் உரியவாறு பூசிப்பது இப்பூசையின் முக்கிய அம்சமாகும்.

இரண்டாங்காலப் பூசை

வினாயகர் பூசை, மூலவருக்கு அபிடேகம், ஆராதனை, தீபம், நெய்வேத்தியம், படையல் போன்றவைகள் செய்யப்பட்டு பூசை நடைபெறுகிறது. பின்பு பரிவாரத் தெய்வங்கள், நித்தியாக்னி கார்யம், நித்யோத்சவ பலி ஆகிய பூசை நடைபெற்று சண்டேசுவர பூசையுடன் இரண்டாங்காலப் பூசை நிறைவடைகிறது.

அர்த்தசாமப் பூசை

இரண்டாம் காலப் பூசைக்குப் பின் 3 3\4 நாழிகைக்குப்பின் அதாவது 8 1\2 மணியளவில் நிகழக்கூடியது அர்த்தசாமபப் பூசை. முதலில் பள்ளியறை பூசை நிகழும். பின்பு சுவாமிக்கும், அம்மனுக்கும் பூசை நிகழ்த்தி பள்ளியறைக்கு எடுத்துச் செல்வர். அதன்பின் சண்டிகேசுவரர் பூசை இடம்பெறும். இப்பூசை முடிந்தபின் பைரவர்க்கு முறைப்படி பூசை நிகழ்த்தி திறவுகோலை

Koviloor Digital Library

அவர் முன் வைத்து கோயிலின் காவல் பொறுப்பினை பைரவரிடம் ஒப்புவிப்பர். இவ்வாறு நாள்தோறும் பூசை நடைபெறும்.

நைவேத்தியப் பொருட்கள்

திருவனந்தல் முதல் சாயரட்சை வரை திருக்கோயில்களின் வருமானத்திற்குகேற்ப நைவேத்தியங்கள் படைக்கப்படும். அர்த்தசாமப் பூசையில் மட்டும் எல்லாக் கோயில்களிலும் பாலும் பழமும் நைவேத்தியமாக இடம்பெறும். ஒவ்வொரு காலத்திலும் திருமஞ்சனமாட்டி ஆடைகள், மலர்கள் சார்த்தி அலங்கரித்து தீபாரதனைகள் செய்து வழிபாடு நிகழ்த்தப் பெறுகிறது.

நாள் வழிபாட்டு நிகழ்வுகள்

ஒவ்வொரு பூசை நேரத்திலும் கடவுளரின் பழைய அலங்காரங்களைக் களைந்து அபிடேகம் செய்வர். எண்ணெய், நெய், பால், நீர், பன்னீர், இளநீர், மஞ்சள் பொடி, திரவியப்பொடி ஆகியவற்றால் அபிடேகம் செய்வர். மீண்டும் ஆடை, அணி, மாலை, சந்தனம் முதலியவற்றால் அழகு செய்வர். அதன் பின்னர்,

1. அபிடேகம், 2. வஸ்திரம், 3. சந்தனம், 4. பூக்கள், 5. தூபம், 6. தீபம், 7. நிவேதனம், 8. தாம்பூலம், 9. முகவாசம், 10. வாத்யம், 11. கீதம், 12. நிருத்தம், 13. ஹோமம், 14. பலி, 15. நித்யோத்யசவம், 16. ஸ்வஸ்திபாட்டு என்ற பதினாறுவகையான உபச்சாரங்கள் நிகழும். இச்சமயத்தில் பலவகையான இசைக்கருவிகள் ஒலிக்கும். வேதங்கள் ஓதப்பெறும். இதன்பின் தீபாரதனைகளும், நைவேத்தியமும் நிகழும். ஆறுகாலப் பூசையில் காணப்படும் பொதுவான கூறுகள் சில உண்டு. அவற்றுள் முதற்கண் குறிக்கத்தக்கது அபிடேகம் ஆகும். அபிடேகத்திற்கு என இரு நாழிகைகள் ஒவ்வொரு பூசையிலும் ஒதுக்கப்பட வேண்டும் என ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

சிறப்பு வழிபாடுகள்

வ.எண்	மாதம்	வழிபாடு
1	சித்திரை	வருடப் பிறப்பு
2	வைகாசி	விசாகம்
3	ஆனி	திருமஞ்சனம்
4	ஆடி	ஆடி வெள்ளி

Koviloor Digital Library

5	ஆவணி	விநாயகர் சதுர்த்தி
6	புரட்டாசி	நவராத்திரி விழா
7	ஐப்பசி	தீபாவளி, சூரசம்காரம், திருக்கல்யாணம்
8	கார்த்திகை	கார்த்திகை தீபம், சோமாவாரம், துளசி திருக்கல்யாணம்
9	மார்கழி	திருப்பள்ளி எழுச்சி, ஆருத்ரா தரிசனம்
10	தை	தைப் பொங்கல், தைப்பூசம்
11	மாசி	மகா சிவராத்திரி
12	பங்குனி	பங்குனி உத்திரம்

தொகுப்புரை

ஆலயங்கள் மக்களோடும் மக்களின் உணர்வுகளோடும் தொடர்புடையன. பன்னெடுங்காலந் தொட்டு இறை வழிபாடு சிறப்புற்று விளங்கிவருகிறது. கோயில்கள் ஒரு அமைப்பு முறைக்குள் வந்தபின், ஆகமங்கள் தோற்றுவிக்கப்பட்டு, ஆலயங்கள் நிர்மானிக்கப்பட்டன. ஆகம விதிப்படி பூசை முறைகள் உருவாக்கப்பட்டன. பெருந்தெய்வக் கோயில்களில் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சில கோயில்களில் பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப பூசைகள் நடைபெறுகின்றன. வருடந்தோறும் முக்கிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

Koviloor Digital Library

பெருங்குளம் கிராமப்புற சிறுதெய்வ வழிபாடும் திருவிழாக்களும் - ஒரு சிறப்புப் பார்வை

திருமிகு. அ. ராதா,
முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

முன்னுரை

சிறுதெய்வம் தமிழ்ச் சமூகத்தில் பெரும்பாலான மக்களால் வழிபடப்பெறும் தெய்வமாகும். சிறுதெய்வங்களை வழிபடும் மரபும் அதற்கான சூழலும் அச்சமூக மக்களின் உளம்சார்ந்த ஒன்றாகவே இருந்து வந்தது. தங்களோடு வாழ்ந்தவர்கள் இறந்து போன பின்பு அவர்களின் நினைவை மனப்பதிவின் வழியே சுமப்பதைக் காட்டிலும் அந்நினைவுகளை மீள் உருவாக்கம் செய்யவும் அச்சமூகத்தை ஒருங்கிணைக்கவும் சிறுதெய்வங்கள் பெரிதும் துணையாக நிற்கின்றன. அந்த வகையில் பெருங்குளம் கிராமத்தில் காணப்படுகின்ற சிறுதெய்வங்கள் பற்றிய தரவுகள் மூலம் இக்கிராம மக்களின் வழிபாட்டு முறைகள் மற்றும் தொன்மை மரபுகளையும்நாட்டுப்புறச்சிறுதெய்வங்கள்ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏன் தேவையாக இருக்கின்றன என்பதனையும் வழிபாட்டு முறைகளையும் ஆவணப்படுத்துவது முக்கிய நோக்கமாக அமைகிறது. மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள இவ்வூர் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தாலுகாவின் மேற்கில் 10கி.மீ. தொலைவிலும், ஏரல் கிழக்குப்புறத்தில் 5கி.மீ தொலைவிலும், சாயர்புரம் வடக்குப்புறத்தில் 7கி.மீ தொலைவிலும், மணவாளக்குறிஞ்சி தெற்குப்புறத்தில் 3கி.மீ தொலைவிலும் இச்சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரில் தன்விலைப்புதூர் ஆலடி நடுவூர் ஊராயி போன்ற ஊர்களின் சிறுதெய்வ கோயில்களில் நடைபெறும் வழிபாடும் மற்றும் திருவிழாக்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு களப்பணித் தரவுகளோடு விளக்கப்படுகின்றன.

நாடோடியாக வாழ்ந்த மக்கள் நிரந்தரமாக ஓரிடம் தங்கி, வேளாண்மை செய்தனர். வேளாண் குடிகளாக மாறியதும்

Koviloor Digital Library

நிலத்தை பெண்கடவுளாக கருதி வழிபட்டுள்ளனர். மேலும் சிந்துசமவெளியில் கிடைத்த முத்திரை வடிவத்தையும், குப்தர்காலச் சுடுமண் வடிவம் ஒன்றையும் இதற்கான சான்றுகளாக அறிஞர்கள் முன் வைக்கின்றனர். இந்த முத்திரையில் பெண்ணொருவரின் பிறப்புறுப்பிலிருந்து செடியொன்று முளைத்து வருவதாகக் காட்டப்பட்டுள்ளது. சுடுமண் வடிவத்தில் பெண்ணின் கழுத்திலிருந்து தாமரை முளைத்துள்ளது என்று அறிஞர்கள் கூற்றாக இரா.கலைக்கோவன் கூறுகின்றார். இவை இரண்டுமே பெண்ணின் தாய்மைப் பண்பையும் வளமைப் பண்பையும் உணர்த்துவதாக உள்ளன. பூமி விதையைச் செடியாக வளர்க்கும் திறனுக்கும், பெண் குழந்தையைப் பெறும் சக்திக்கும் தொடர்பு உண்டு என்று தொல்குடி மக்கள் கருதினர். இதன் அடிப்படையில் பெண்ணின் தாய்மைப் பண்பை போற்றும் விதமாகத் தாய்த்தெய்வ வழிபாடு தோன்றியது எனலாம். இவ்வாறு அறிஞர்களின் கூற்றுகளுக்கு ஏற்பத் இக்கிராமத்தில் சிறுதெய்வங்களை வளமையான குறியீடாக வைத்து மக்கள் வழிபட்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

மாரியம்மன்

பழந்தமிழர்கள் மழை பெய்யாவிட்டால் மாரியம்மனை வேண்டி விழா எடுப்பர். மழை மிகுதியாகப் பெய்தாலும், அது நிற்கும்படி தெய்வத்தை வேண்டிக் கொள்வர். இவ்வழக்கமானது தமிழ் மக்களிடம் இருந்துள்ளது. இதனை,

"மலைவான் கொள்கென உயிர்ப்பலி தூஉய் மாரி ஆன்று, மழைமக்கு உயர்க எனக் கடவுள் பேணிய குறவா மாக்கள் பெயல்கண் மாறிய உவகையர்"

இதனைப் போன்றே இன்றும் இக்கிராம மக்கள் மழைத் தெய்வமாக மாரியம்மனை வழிபடுகின்றனர். மழை பெய்யாத வறட்சிக் காலங்களில் வீடுவீடாகச் சென்று அரிசி, வெல்லம், மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களைப் பெற்று வருவர். அவ்வாறு பெற்று வரும் பொருட்களைக் கொண்டு நீர்நிலைகளின் அருகில் பொங்கல் வைத்து வழிபட்டு மாரியம்மனை வேண்டுகின்றனர்.

Koviloor Digital Library

வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

பண்டைய மக்கள் தன்னைச்சுற்றி நடைபெறக்கூடிய செயல்களுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தனர். பிறகு உய்த்தறிதலின் மூலமாக ஒவ்வொன்றிற்கும் காரணங்களைக் கண்டுபிடித்தனர். அதற்குப் பரிகாரங்களையும், நேர்த்திக் கடன்களையும் செய்தனர். அவை காலப்போக்கில் நம்பிக்கைகளாக மாற்றம் பெற்றன. மக்கள் கொண்ட நம்பிக்கைகள் பழக்கவழக்கங்களால் சடங்குகளாக மாற்றம் பெற்றுள்ளன. இவற்றில் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் மிகுந்த தொடர்புடையவைகளாக உள்ளன. மக்களால் வழிவழியாகப் பின்பற்றப்பட்டவையே நம்பிக்கை எனப்படுகிறது. மக்களின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் மக்களிடம் தோன்றும் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை. மக்களின் அன்றாட வாழ்வியல் செயல்களிலிருந்து அனைத்துக் கூறுகளிலும் நம்பிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இந்நம்பிக்கைகளையும் இதனைத் தொடர்ந்த வழிபாடுகளையும் பெருங்குளம் பகுதிகளில் உள்ள அனைத்துச் சிறுதெய்வக் கோயில்களும் வளர்ப்பனவாக உள்ளன.

இக்கிராமங்களில் உள்ள மாரியம்மன், காளியம்மன், பச்சையம்மன் போன்ற தெய்வங்கள் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமான வடிவங்களில் காணப்படுகின்றன. இத்தெய்வங்களை மக்கள் தங்கள் குறைதீர்க்கும் தெய்வங்களாக நம்புகின்றனர். ஊரைக் காப்பதற்காக காளியம்மனையும், மழைக்காக மாரியம்மனையும், பயிர் பசுமைக்காக பச்சையம்மனையும், பயிர்களை பாதுகாக்க முனியப்பன், வேடியப்பன், கருப்பர், அய்யனார் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர்.

இச்சிறுதெய்வ வழிபாடுகளுக்கான பூசைகள் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகின்றன. கோயில்களில் அவரவர் விருப்பத்திற்கேற்ப அபிசேகம் செய்தல், சந்தனக் காப்புச் சார்த்துதல், பூக்கேட்டுப் பார்த்தல், திருமணம் பேசுதல், காதணி விழா நடத்துதல், முடியெடுத்தல், உண்டியலில்

Koviloor Digital Library

காணிக்கை செலுத்துதல், வேல், வெண்கல மணி செய்து வைத்தல் போன்ற பலவகையான நம்பிக்கைகள் மக்களிடம் பரவியிருப்பதைக் காண முடிகின்றது.

உயிர்ப்பலியிடுதல்

பழங்காலத்திலேயே தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிட்டு வணங்கும் வழக்கம் மிகுதியாக இருந்துள்ளது. வேதகாலத்தில் பலியிடுவது உண்மையான பக்திக்கு அடையாளமாக் கருதப்பட்டது. பலிகொடுத்தல் என்பது சிறுதெய்வ வழிபாட்டுக் கூறுகளில் ஒன்றாகும். தெய்வத்தின் கடும் சீற்றத்தை நீக்குவதற்காக ஏற்படுத்தப் பெற்ற முறையாகும். உயிர்ப்பலி ஒன்றே இறைவனின் கோபத்தைத் தணிக்கும் என்று மக்கள் நம்பினர். இதனை,

"அணங்குஅறி கழங்கின் கோட்டம் காட்டி, வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து,"

எனும் நற்றிணைப் பாடலடிகள் மூலம் உணரலாம். இவ்வகையான பலியிடுதலை இக்கிராம மக்கள் குலதெய்வ வழிபாடு, பொதுத்தெய்வ வழிபாடு ஆகிய வழிபாடுகளில் பின்பற்றுகின்றனர். பொதுவாகப் பலியிடுதலை ஒருவகையான நேர்த்திக்கடனாகக் கடைப்பிடிக்கின்றனர்.

மாரியம்மன், காளியம்மன், முனியப்பன், வெள்ளையப்பன், போத்துவீரன், கருப்பர், அய்யனார் போன்ற தெய்வங்களுக்குக் கிடாய்வெட்டு என்ற சடங்கினைத் திருவிழாக்காலங்களில் நடத்துகின்றனர். இந்தக் கிடாய் வெட்டு என்பது ஒரே வெட்டில் ஆட்டுக்கிடாயின் தலையினைத் துண்டிப்பதாகும். துண்டிக்கப்பட்ட கிடாயின் இரத்தத்தை எடுத்து அத்தெய்வத்தின் நெற்றியில் திலகமிட்டு வழிபடுகின்றனர். முனியப்பன் கோயில்களில் முப்பூசை என்ற பெயரில் ஆட்டுக்கிடாய், சேவல், பன்றி என மூன்று உயிரிணங்களையும் பலியிடுகின்றனர். மேலும் புறநானூற்றுப் பாடலடிகள் மூலம் கடவுளுக்குப் புலால் உணவைத்தான் பண்டையத் தமிழர் படைத்துள்ளனர். அவ்வுணவை வைத்துப் பூசைசெய்வது தான் தெய்வத்திற்கு விருப்பமானது என்பதையும் இலக்கியங்களில் உணரமுடிகின்றது.

Koviloor Digital Library

விழாவில் பலி என்பது வழிபாட்டு முறைகளில் ஒன்று. விழாக் கொண்டாட்டத்தின் போது ஆடுகளைப் பலியிட்டு ஊருக்கு விருந்து கொடுத்ததற்கானப் பதிவுகள் பல உள்ளன.

தேர் இழுத்தலும் அலகு குத்துதலும் தனக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாகவும், தன்னைச் சார்ந்தவர்கள் நோய்வாய்ப்பட்டாலோ, அதனை நீக்குதல் பொருட்டு தெய்வத்திடம் வேண்டுதல்களை வைக்கின்றனர். நோய் உள்ளவர்கள் தெய்வத்திற்குப் பூந்தேர், வாகனத்தேர் இழுக்கின்றனர். இதனைப்போன்று ஆண், பெண் என இருபாலரும் சிறிய அளவிளான வேலாயுதத்தை நாக்கிலும், 5 அடி நீளம் முதல் 18 அடி நீளம் வரை உள்ள வேலாயுதத்தை வாயிலும் குத்தி நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர். இதற்கு அலகு குத்துதல் என்று பெயர். இந்நேர்த்திக்கடன் அனைத்து ஊர்களிலும் உள்ள மாரியம்மன், காளியம்மன் மற்றும் நடுவூர் காணியம்மன் திருவிழாவில் நடைபெறுகின்றது. இந்நிகழ்வுகள் இக்கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயில் திருவிழாக்களில் நடைபெறும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைகின்றது. இவ்வாறு தங்கள் உடல் உறுப்புகளை வருத்தி வேண்டிக்கொள்வதால் தாங்கள் நினைத்த காரியம் கைக்கூடுவதுடன் தெய்வம் மனமிறங்கி நன்மை செய்யும் என்ற நம்பிக்கையை வைத்துள்ளனர்.

திருமணம் தொடர்பான நம்பிக்கை

அம்மன் தெய்வங்களை வழிபட்டால் திருமணத்தடை நீங்கி விரைவில் திருமணம் நடைபெறுவதாக இக்கிராம மக்கள் நம்புகின்றனர். இத்தெய்வக் கோயில்களில் உள்ள தலவிருட்ச மரங்களில் சிறிய மஞ்சள் நூலில் மஞ்சள் கிழங்கைக் கட்டி வழிபட்டுச் செல்கின்றனர். அம்மனின் பெயர்களைக் காகிதத்தில் 108, 1008 முறை எழுதி அவற்றை மாலையாகத் தொடுத்தும் அம்மனுக்கு அணிவித்து தங்களது வேண்டுதல்களை வைக்கின்றனர். மேலும் தொட்டில் கட்டுதல் என்ற சடங்கின் மூலம் அரசமரத்தை அபிசேகம் செய்தல் தெய்வத்திடம் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறவும், துன்பங்கள் தீர்ந்து நன்மையடையவும் நேர்த்திக் கடன்களைச் செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இதன் அடிப்படையில் அபிசேகம் செய்ய விரும்புபவர்கள் பூசைக்குத் தேவையான

Koviloor Digital Library

பொருட்களைப் பூசாரியிடம் கொடுத்து அபிசேகம் செய்யுமாறு கூறி வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டின் மூலம் தாங்கள் நினைத்த காரியம் நன்றாக நிறைவேறும் என இக்கிராம மக்கள் நம்புகின்றனர்.

வேளாண்மை நம்பிக்கைகள்

மரபு வழியாக ஒவ்வொரு தொழிலிலும் பல நம்பிக்கைகள் காலங்காலமாகத் தொடர்ந்து வருகின்றன. வேளாண்மைத் தொழிலுக்கும் பெருங்குளம் கிராம மக்களுக்கும் சிறுதெய்வங்களுக்கும் இடையே உள்ள உறவு நிலையானது. விதை விதைப்பிற்குத் தேவையான மழைப்பொழிவைப் பெற மாரியம்மனையும், பயிர் பசுமையடைய பச்சையம்மையையும், அப்பயிர் எவ்வித சேதமும் இன்றி பாதுகாப்பாக வளர வேடியப்பன், முனியப்பன் போன்ற காவல் தெய்வங்களையும் வழிபடுகின்றனர்.இவ்வழிபாட்டின் மூலம் பயிர்களின் விளைச்சல், நோய் மற்றும் இயற்கையினால் பாதிப்பு அடையாமலிருக்கவும், விளைச்சல் பெருகவும் இத்தெய்வங்களை வழிபடுகின்றனர்.

தானியப்பயிர்கள் அறுவடை செய்யும் நிலையில் (நெல், வாழை, பருத்தி, நிலக்கடலை, கரும்பு) விளைபொருட்களை அப்பகுதியில் உள்ள தெய்வத்திற்கு அல்லது அவர்களது குலதெய்வத்திற்குப் படைத்து வீட்டிற்கு எடுத்துச்செல்வர். சில இடங்களில் வேண்டிக்கொண்ட தெய்வத்தை நினைத்து கூம்புவடிவில் பிடிமண் பிடித்து வைத்து அதற்குப் பூசை செய்து வழிபடுவர். அப்பொழுது வழிபாட்டிற்குரிய பூ, பழம், கற்பூரம், தேங்காய், பத்தி போன்ற பூசைப் பொருட்களுடன் அரிசி, அவல் கலந்தும் வழிபடுவர். வழிபடும் தெய்வம் இரத்தப்பலி பெறுபவையாக இருந்தால் சேவல் பலிகொடுத்தும் வழிபடுவர்.

அறுவடை செய்த தானியத்தில் கோயிலில் சென்று படைப்பதற்காக ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தை எடுத்து வீட்டில் உள்ள பூசையறையில் வைப்பர். இத்தானியத்தைத் திருவிழாக்களின்போது காணிக்கையாகச் செலுத்துவர். காணிக்கை செலுத்திய பிறகு அத்தானியத்தில் இருந்து ஒருபிடி மீண்டும் எடுத்துச்சென்று வீட்டிலுள்ள விதை தானியத்தில் கலந்து வைப்பர். அந்த தானியம் விதைக்கப்படும் போது விளைச்சல்

Koviloor Digital Library

அதிக அளவில் கிடைக்கும் என நம்புகின்றனர்.

மேலும் வேளாண்மைத் தொழில் செழிப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கும் கால்நடைகளின் பெருக்கமும் இன்றியமையாததாகின்றது. தாங்கள் வளர்க்கும் கால்நடைகள் பெருகுவதற்கும், நோய், இறப்பு போன்றவற்றிலிருந்து காப்பதற்கும் இத்தெய்வங்களை வழிபடுகின்றனர். அத்தெய்வங்களுக்கு நேர்த்திக்கடனாக விழாக்களின் போது சேவல், ஆடு போன்றவற்றைப் பலியிடுகின்றனர். இவ்வாறு தெய்வங்களுக்குப் (முனியப்பன், காளியம்மன்) பலிதருவதன் மூலம் இத்தெய்வங்களின் அருள் கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்துள்ளனர்.

திருவிழாக்கள்

ஆண்டு முழுவதும் உழைத்துத் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் மகிழ்ச்சியோடு இருக்க வைப்பதற்காகத் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். இவ்விழாக்கள் மக்களின் பொருளாதார வசதிக்கேற்ப அமைகின்றன. இவ்விழாக்களின் மூலமாக நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாட்டுக் கூறுகள் நம்பிக்கைள், சடங்குகள் மற்றும் அம்மக்களின் பண்பாட்டுக்கூறுகள் ஆகியன நன்கு புலப்படுகின்றன. மக்கள் தங்களின் கவலைகளை மறந்து உற்சாகமாக இருப்பதற்காகவே திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். பசியும், பிணியும், பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கப் பண்டைத் தமிழர்கள் திருவிழாக்களைக் கொண்டாடியதாகச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் குறிப்பிடுகின்றன.

விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும் என்கிறார் தாகூர். மனித சமுதாயம் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அனைத்துச் சமுதாய மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்கள் ஆகும். விழா என்பது வழிபாட்டின் இறுதி-நிலை. நாள்தோறும் நாம் தெய்வத்தை வணங்கினாலும் சிறப்பு வழிபாடாக இருப்பது விழா. உறவுகள் ஒன்றிணையவும், ஊர்மக்கள் அனைவரும் மகிழ்வைக் கொண்டாடவும் விழாக்களே முதன்மையாக அமைகின்றன. இன்று மக்களின் பண்பாட்டிணை

Koviloor Digital Library

அடையாளப்படுத்துவது விழாக்களாகும். அந்த விழாக்கள் தான் அன்று முதல் இன்றுவரை மனித சமூகத்தை உயிர்ப்போடு வைத்திருப்பது மட்டுமல்லாமல் ஓர் சமூகப் பின்னிணைப்பையும் உருவாக்கித் தருகின்றன. இத்திருவிழாக்களின் மூலம் மக்களின் சமுதாய ஒற்றுமையையும், பண்பாட்டு வளர்ச்சியையும் காணமுடிகின்றது. ஊர்விட்டு ஊர்ச்சென்று மக்கள் விழாவினைக் கண்டுகளித்தனர் என்பதனை,

"மூதூர் விழவுக்காணூ உப்பெயரும்" எனும் பதிற்றுப்பத்துப் பாடலடி உணர்த்துகின்றது.

விழாக்காலத்தில் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுடைய சொந்த ஊருக்கு விழாக்கொண்டாட வருவார்கள் என்பதை,

"சென்மோ, பெரும! எம் விழவுடை நாட்டு"

எனும் புறநானூற்றுப் பாடலடி உணர்த்துகின்றது. மக்கள் அனைவரும் தம் சொந்தஊரில் சிறுதெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நடத்தும்போது வந்துவிடுகின்றனர். அவ்வாறு கூடும்போது உறவுகள் அனைத்தும் ஒன்றினையவும், ஒற்றுமை உணர்வு மேம்படவும் விழாக்கள் உறுதுணை செய்கின்றன. மேலும் மக்கள் மகிழ்வோடும் ஆரவாரத்தோடும் விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்ததை நற்றிணைப் பாடலடிகள் உணர்த்துகின்றது.

இத்திருவிழாக்கள் சாமிகும்பிடுதல் என்னும் பெயரில் கிராமங்கள் தோறும் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் அம்மனின் அருள் வெளிப்படுவதுடன், மக்களின் செயல்கள் ஒவ்வொன்றும் முக்கியமான வாழ்வியல் குறிக்கோள்களை உள்ளடக்கியவையாக உள்ளன எனலாம். திருவிழாக்கள் உழைக்கும் மக்களின் வாழ்வியல் துன்பத்தைப் போக்கி இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரும் வகையில் அமைகின்றன. தம்மை வாழவைக்கும் தெய்வங்களுக்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் தாம் வழிபடும் தெய்வங்களுக்கு விழாக்களை எடுக்கின்றனர். திருவிழாக்காலங்களில் ஏழைப்பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகளும் சமுதாயப் பாகுபாடும் முதன்மை பெறுவதில்லை. கிராமமக்கள் அனைவரும்

Koviloor Digital Library

ஒன்றுகூடிக் கிராமத்தின் நன்மைக்காகத் தெய்வங்களுக்கு விழா எடுத்துச் சிறப்புச் செய்வது மக்களின் மனங்களின் இயல்பாக அமைகின்றது.

விழா நடைபெறும் காலமும் நாட்களும் இக்கிராமத்தில் பெரும்பாலும் சித்திரை, வைகாசி மாதங்களில் மாரியம்மன் கோயில்களில் திருவிழா நடைபெறுகின்றது. இம்மாதத்தில் வயல் வேலைகள் முடிந்து ஒய்வாக இருப்பதால் இம்மாதத்தை விழா நடத்துவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும் சில கிராமங்களில் தங்களின் வசதிக்கேற்ப ஆனிமாதம், ஆவணி மாதம் என வைத்துள்ளனர். ஒவ்வொரு ஆவணி மாதமும் கிராமப்புரங்களில் இரவு நேரத்தையே விழா நிகழ்ச்சிகள் நடத்துவதற்குத் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும் மக்கள் கோடை காலத்தில் திறந்தவெளியில் மகிழ்வுடன் இரவுப்பொழுதைக் கழிப்பதற்கு ஏற்ற வகையில் கோடைக்காலமான சித்திரை மாதத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். விழாக்கள் சிற்றூர்கள் முதல் பேரூர் வரை கொண்டாடப்பட்டன.

கிராமப்புறங்களில் பொதுவாக மூன்று நாட்கள் முதல் ஏழு நாட்கள்வரைதிருவிழாகொண்டாடுகின்றனர். செவ்வாய்க்கிழமை நாட்களில் கூழ்ஊற்றுதல், புதன்கிழமை மாவிளக்கு மற்றும் பலி-யிடுதல் நடைபெறுகிறது. வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மஞ்சள் நீராட்டு விழாவும் நடைபெறுகின்றன. இந்த விழா நிகழ்வுகளும், நாட்களும் ஊருக்கு ஊர் வேறுபடுகின்றன. திருவிழா நிகழ்வுகள் திருவிழா நடைபெறும் நாட்கள் ஊருக்கு ஊர் மாறுபட்டாலும் வழிபாட்டு முறைகளில் பெரிதளவு வேறுபாடு இருப்பதாய்த் தெரியவில்லை. கோயிலுக்குப் புதியதாகச் சிலை செய்யப்பட்டிருந்தால் அவற்றிற்கு கண் திறப்பது, கண் திறந்த சிலைக்கு வழிபாடு செய்தல், பொங்கல் வைத்துப் படையலிடுதல், கூழ்ஊற்றுதல், மாவிளக்கு வைத்தல், முளைப்பாரி எடுத்தல், நேர்த்திக்கடன் செலுத்துதல், அலகு குத்துதல், பூந்தேர் இழுத்தல், மாறுவேடம் அணிதல், அக்னிச்சட்டி எடுத்தல், பூமிதித்தல் ஆகிய நிகழ்வுகள் அனைத்துக் கிராமச் சிறுதெய்வக் கோயில்களிலும் நடைபெறுகின்றன.

Koviloor Digital Library

முடிவுரை

கோயில் பண்பாடுகளில் பெருங்குளம் கிராமப்புற சிறுதெய்வக் கோயில்களின் திருவிழாக்களும் வழிபாடுகளும் கிராம மக்களிடையே ஓர் உறவுப் பாலமாக அமைந்து கிராமியப் பண்பாட்டை வளர்க்கின்ற கருவியாக விளங்குகின்றன. சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற திருவிழாக்கள் மக்களின் மறுபக்கத்தைக் காட்டுகிற வெளிப்பாடாகத் தோன்றுகின்றன. கிராம மக்கள் தாங்கள் வணங்கும் தெய்வ வழிபாட்டு விழாக்களுக்குத் தங்கள் உறவினர்களை அழைத்துவந்து விருந்தோம்பல் செய்கின்றனர். அதே போல அவர்கள் ஊரில் நடைபெறும் தெய்வ விழாக்களுக்கு இவர்கள் சென்று விருந்து உண்டு உறவைப் பலப்படுத்துகின்றனர். இப்பண்பாட்டு மரபை இன்றும் இக்கிராம மக்களிடையே காணமுடிகின்றது. கோயில் விழாக்களின் மூலம் அன்பு, பண்பு, பழக்கவழக்கம், மனிதநேய உணர்வு, மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் பரந்த சிந்தனை முதலிய பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் காணமுடிகின்றது. இத்தகைய பண்பாட்டைச் சிறுதெய்வ விழாக்கள் உருவாக்கித் தருகின்றன. அந்த மரபை இன்றும் இக்கிராம மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர் என்பதுக் குறிப்படத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. நா.பாலுசாமி, வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 1, ப.எ:719.
2. ந.ப.துரைசாமி, தருமபுரி பாறை ஓவியங்களில் சிந்துவெளி எழுத்துக்கள், ப.எ:18.
3. நா.பாலுசாமி, வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 9, ப.எ:720. ப.எ:658.
4. தி.சுப்பிரமணியன், தமிழகத்தொல்லியலும் வரலாறும் ப.எ:192.
5. சி.எஸ்.தேவ்நாத், உலகமுக்கிய மதங்களும் அவை சொல்லும் உண்மைகளும் ப.எ:39.
6. க.கைலாசபதி, பண்டையத்தமிழர் வாழ்வும் வழிபாடு, ப.எ:32
7. மு.நளினி, பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், ப.எ:11.
8. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப.எ:83.

Koviloor Digital Library

தமிழகக் கோயில் கட்டிடக்கலை வளர்ச்சி

முனைவர். ரா.ராமேஸ்வரி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
இதயா மகளிர் கல்லூரி, சருகணி.

ஒரு இனத்தின் நாகரிகச் செழுமையினை எடுத்துக்காட்டும் சின்னங்களில் குறிப்பிடத்தக்கது கட்டிடக் கலையாகும். கட்டிடங்கள் அதிலும் கருங்கற்களாலான கட்டிடங்கள் படைத்தவர்கள் மாண்ட பின்னும் பன்னூற்றாண்டுகள் நிலைபெறச் செய்யும் கட்டிடக் கலைக்குத் தனியிடமுண்டு. கோயிற் கட்டிடக்கலை சிற்பமும் ஓவியமும் கலந்ததேயாகும். சங்ககால மக்கள் பல்வேறு தெய்வங்களை வணங்கினர். அத்தெய்வங்கட்குக் கோயில்களும் இருந்திருக்க வேண்டும். சிவபெருமான் கோயில் 'முக்கட் செல்வன்நகர்' என்று புறநானூற்றிற் சுட்டப்படுகிறது. சிதைந்து அழிவுக்குள்ளான ஒரு கோயில் பற்றி அகநானூறு குறிப்பிடுகிறது.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து" (அகம்.167)

இதனால் அறிவது கோயிலுக்கு உயர்ந்த சுவர்கள் இருந்தன என்பதும், மரவிட்டங்கள் இருந்தன என்பதுமாகும். சிலப்பதிகாரத்தும் மணிமேகலையகத்தும் பல்வேறு கோயில்கள் பேசப்பட்டுள்ளன.

காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
அருந்தவர்க் காயினும் அந்தணர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
...
குறியவும் நெடியவும் குன்றுகன் டன்ன
சுடுமண் நங்கிய நெடுநிலைக் கோட்டமும் (6:53-59)

என்பது மணிமேகலைப் பகுதியாகும்.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

Koviloor Digital Library

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் (5:169-173)

என்பது சிலப்பதிகாரப் பகுதியாகும்.

இங்ஙனம் சுதையாலும் செங்கலாலும் கட்டிய கோயில்கள் தவிர முற்காலத்தில் மரத்தாலேயே கோயில்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என அறிஞர் கூறுவர். கேரளத்தில் இன்றளவும் அத்தகு கோயில்கள் உள்ளன. குருவாயூரப்பன் கோயில் இத்தகையதே ஆகும். தில்லையிலுள்ள சிற்றம்பலமாகிய சபா மண்டபம் மரத்தாலானதே. அதன் கூரை கெடாமல் தடுப்பதற்காகவே அது பன்முறை பொன்னோடு வேயப்பட்டது. பல்லவன் இரணியவர்மனும் சோழர்களின் ஆதித்தன் மற்றும் சிலரும் தில்லைக்குப் பொன் வேய்ந்துள்ளனர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் வாழ்ந்த காலத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் இருந்துள்ளன. அவை யாவும் செங்கற்களால் ஆனவையே. சங்கத்து இறுதிக் காலத்தில் ஆண்ட கோச்செங்கணாள், சிவபெருமானுக்காக எழுபது கோயில்கள் எழுப்பியதாகத் திருநாவுக்கரசரும், திருமங்கையாழ்வாரும் பாராட்டியுள்ளனர்.

"இருக்கிலங்கு திருமொழிவாய் என்டோ ளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன்"

என ஆழ்வார் புகழ்வார். அப்பர் பெருமான் அவன் கட்டியவை எழுபத்தெட்டு என்று கூறுவதோடு அவற்றின் வகைகளையும் குறித்துள்ளது வியத்தற்குரியதாகும்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்

என்னும் ஏழு வகையான கோயில்களின் தமிழ்ப் பெயர்களே கரக்கோயில், ஞாழற்கோயில் முதலியன என்றும் திரு.மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் கூறுகின்றார்கள்.

Koviloor Digital Library

ஆலக்கோயில்

ஆலக்கோயில் என்பது ஆனைக்கோயிலென்பதும் மருஉ வென்றும், சிற்பநூல்கள் கூறும் கஜபிருஷ்ட விமானக் கோயில் அல்லது ஹஸ்திபிருஷ்ட விமானக் கோயில் என்றும் கூறுவர். யானையின் முதுகு போல் இதன் கூரை அமைந்தது என்பார்.

திருக்கச்சூர், திருவெற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு ஆகிய கோயில்கள் சான்றாகக் கொள்ளலாம்.

இளங்கோயில்

பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் பொழுது அதனருகே இறைவனை எழுந்தருளச் செய்வர் என்றும் அவ்வாறு எழுந்தருளச் செய்யும்போது அமையும் கோயில் இளங்கோயில் என்றும் கருதுவார். இதற்குப் பாலாலயம் என்றும் பெயருண்டு.

கரக்கோயில்

வட்டமான விமானமுடையது 'விஜயம்' என்னும் வகையினதென்னும் கரக்கோயில் என்பது இதுவாகும் என்கிறார். திருக்கடம்பூர்க் கோயிலை அப்பர் 'தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்' என்று குறிப்பதனையும், சுந்தரமூர்த்தி நாயனார் இதனைக் குறிப்பிட்டுள்ளதையும் எடுத்துக்காட்டுகிறார். திரு.டி.வி.சதாசிவப் பண்டாரத்தார். இரு சக்கரத்தோடு கூடிய தேர் வடிவமானது என்கிறார்.

ஞாழற்கோயில்

ஞாழல் மரத்தினால் அமைந்த கோயில் இப்பெயர் பெற்றது. திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கடை ஞாழற் கோயிலாகும் என்பார்.

கொகுடிக்கோயில்

ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம் என்பனவற்றில் வட்டமான சிகரம் கர்ண கூடத்தோடு அமையுமாயின் அது ஸ்ரீபோகமாகுமென்றும். அதுவே நடுவில் இலைவரிசையுடன் அமைத்தால் ஸ்ரீவிசாலம் என்றும் கூறுகிறார். கருப்பறியலில் உள்ள கோயிலைக் கொகுடிக் கோயிலென்று சுந்தரரும், அப்பரும் மொழிந்துள்ளனர்.

Koviloor Digital Library

மணிக்கோயில்

எட்டு அல்லது ஆறு பட்டையுடைய விமான அமைப்புடைய தாகலாம் என்ற ஊக்கத்தையும் கூறி 'ஸ்கந்த காந்தம்' என்னும் வகையினதாக இருக்கலாம் என்கிறார்.

பெருங்கோயில்

இவ்வகைக்கோயில் மாடக்கோயில் என்றும், செய்குன்று களின்மேல் அமைக்கப்பட்டவை என்றும் கூறுவர். இவை யானைகள் ஏறாவண்ணம் உயரமாகக் கட்டப்பட்டனவென்றும், யானை படுத்திருப்பது போல் தோன்றுவதால் தூங்கானை மாடம் எனப்படும்.

நன்னிலம், குடவாயில், வைகல், தண்டலைச்சேரி, பெண்ணாடகம் என்னும் ஊர்களில் இத்தகு கோயில்கள் உள்ளனவென்பர். இவற்றைப் பற்றி திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்களின் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்பனவற்றில் சுட்டுகிறார். இவ்வகையில் பழங்காலத்தில் கோயில்களின் இத்தனை வகைகள் இருந்துள்ளன என்பதை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

முடிவுரை

பல்லவர் காலமே கோயிற் கட்டிடக் கலையின் தொடக்ககாலம் எனலாம். பின்னால் வந்த கோயில்கட்கெல்லாம் முன்னோடியாக விளங்குபவை பல்லவர் காலத்துக் கோயில்களேயாகும். தமிழகக் கோயிற் கட்டிடக் கலை பல்லவர் காலத்தில் உருவாகிச் சோழர் காலத்திற் செம்மையுற்று, நாயக்கர் காலத்தில் முடிவுற்றது என்பது மிகவும் பொருத்தமாகும்.

Koviloor Digital Library

தமிழகத்தில் அய்யனார் வழிபாடு

முனைவர். **ஆ.இராஜாத்தி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை, தூயவளனார் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -2

முன்னுரை

தெய்வங்களை இரண்டு வகையினராகப் பகுக்கலாம். அவர்கள் சிறுதெய்வங்கள், பெருந்தெய்வங்கள். இதில் சின்னச் சின்னச் சிற்றூர்களில் கோயில் இல்லாமல் வெட்டவெளியில் கல்லாக நிற்கும் சாமிகள் உண்டு. இவர்கள் பீடமாகக் கட்டப்பட்டு வெயிலிலும், மழையிலும் மேற்கூரை கூட இல்லாமல் இருப்பதைக் காண்கிறோம். இவர்களுக்கென்று பெரியவீடு இல்லை. வேப்பமரத்தின் அருகில்ஒரு சூலாயுதத்தை நட்டுவைத்து வழிபடும் மரபு தமிழருடையதாகும். இதுபோலவே நாட்டுப்புறத் தெய்வங்களை வைத்து வழிபடுவர். இந்த நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு நாள்தோறும் பூசைசெய்து, படையல் இடும் வழக்கம் இல்லை. பொங்கல், சுண்டல் யாரும் வழங்குவதில்லை. ஆண்டுக்கு ஒருநாள் திருவிழா நடக்கும். நம் ஊர்களில் வெட்டவெளியில் வெயிலிலும் மழையிலும் இது போன்ற தெய்வங்களான, மாரியம்மன், காளியம்மன், மாடன், காடன், இசக்கி, சங்கிலிக்குப்பன், பூதத்தாள், தீப்பாஞ்சஅம்மன், குப்பாளம்மன், கருப்பன், கம்பராயன், முனி, பெரியாண்டவர், குட்டியாண்டவர், ஏழு கன்னிமார், மாத்தையன், இடும்பன் எனச் சிறுதெய்வங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். பெருந்தெய்வங்களுக்குப் பெரியபெரிய கோபுரங்கள் பிரகாரங்களோடு, கருவறையுடன் கூடியகோவில்கள் உண்டு. இவர்களுக்கு நாள்தோறும் பூஜைஉண்டு. அதுவும் காலை, மதியம், மாலை எனநேரம் தவறாமல் வழிபாடு, மந்திரம் அனைத்தும் நடக்கின்றது. பெருந்தெய்வம் உள்ள கோவில்களுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிவதும் உண்டு. உண்டியல் நிரம்பிவழிவதும் உண்டு. சிவன், கிருட்டிணர், பொருமாள், முருகன், விநாயகர் போன்றவர்கள் பெருந்தெய்வமாக உள்ளனர்.

Koviloor Digital Library

இஸ்லாத்திலும் கிறித்தவத்திலும் அல்லா ஏசு போன்றவர்களும் இந்தவரிசையில் வருவர்.

சிறுதெய்வங்களின் பிறப்பு

பொதுவாகத் தெய்வங்களின் பிறப்புக்குக் கதைகள் உண்டு. அவ்வகையில் சிறுதெய்வங்களுக்கும் நாட்டுப் புறக்கதைகள் உள்ளன. சிறுதெய்வங்களில் எத்தனைபேர் இருந்தாலும் அய்யனாருக்கு என்று ஒருதனிச்சிறப்பு இருந்துவருகின்றது. அவ்வகையில் அய்யனாரைப் பற்றி இக்கட்டுரைகாண விழைகின்றது. சிற்றூர்களில் ஊருக்கு வெளியே காடுகளிலும், கண்மாய்க் கரைகளிலும், குளக்கரைகளிலும் அய்யனார் சிலைஅமைத்து வழிபடுகின்ற முறையும், வழக்கமும் தமிழகத்தில் உள்ளது. அய்யனார் கிராமத்தைக் காப்பவராகவும், விளைச்சளைப் பெருக்குபவராகவும், கால்நடைகளைக் காப்பாற்றுபவராகவும் வைத்துப் போற்றப்படுகின்றார். இவரின் பிறப்பாகச் சொல்லப்பட்டுவரும் கதையானது, சிவன் பிட்சாடனர் உருவத்தில் இருந்த நிலையில், விஷ்ணு மோகினிஉருவம் கொண்டநிலையில், பிட்சாடனார் மோகினிமீது காதல் கொள்கிறார். காமுற்ற அவர் மோகினியை அடைய நினைக்கின்றார். அந்நிகழ்வு கண்மாய்க்கரையில் நடந்ததாகக் கூறப்பட்டு வருகின்றது. கண்மாய்க்கரையில் பிறந்தவர் அய்யனார். மாசிமாதம் முதல்நாள் சிவராத்திரி அன்று பிறந்தார் என்றும் நாட்டார் வழக்காற்றில் அய்யனார் கதை இடம்பெற்றுள்ளது. ஆனால், பேராசிரியர் நெடுஞ்செழியன் அய்யனார்பற்றி ஆராய்ச்சி செய்து சிலகருத்துக்களை முன்வைக்கின்றார். அவற்றில், அய்யனார் ஆசிவகம் என்ற சமயத்தைத் தோற்றுவித்துள்ளார். மகாவீரருடன் வாழ்ந்தவர் அய்யனார். அவருடன் துறவறத்தில் இருந்துஞானம் பெற்றுள்ளார். பிறகுஅவருடன் கருத்துவேறுபாட்டினால், அய்யனார் விலகிவந்துள்ளார் என்றும், அய்யனார் மொத்தம் மூவர் உள்ளனர். அந்த மூவர்களும் சித்தன்னவாயில் குடைவரைக் கோயிலில் உள்ளனர் என்றும் குறிப்பிடுகிறார். இந்த மூவரில் ஒருவர் தான் மகாவீரருடன் இருந்தவர் ஆவார். சித்தன்னவாயில் சைனக் கோயில் அல்ல என்றும் கூறுகின்றார். சமணர்கள் அய்யனாரை வணங்கக் கூடாது எனவும் கூறியுள்ளனர்.

Koviloor Digital Library

அதாவது ஹரிஹரனையும் பூரணனையும் வணங்கக் கூடாதுஎன்றுசமணர்கள் வலியுறுத்தியுள்ளதைக் குறிப்பிடுகிறார். ஹரிஹரன் என்பதற்குப் பொருள் ஆதிநாதன் என்பதாகும். ஆதிநாதரின் மகனாக வருபவர்தான் அய்யனார். அய்யனாரில் திருமணம் ஆகாதவர் ஒருவர், திருமணம் ஆனநிலையில் ஒருவர் உள்ளார். புறநானூற்றில் நக்கீரர் அய்யனாரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அறப்பெயர் சாத்தன் என்கிறார். அவரைத்தான் தர்மசாஸ்தா என்கிறோம். பூரணம் பொற்கலையுடன் கூடிய அய்யனார் தான் இருமனைவியருடன் காணப்படுகின்றவர் ஆவார். இவர்கள் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டாகும். அய்யனார் புத்தர் காலத்தவர். புத்தரைவிடசெல்வாக்குப் பெற்றவர் ஆவர். பூரணர், அய்யனார், பக்குடுக்கைநன்கணியார், இவர்களுடன் இன்னும் நால்வர் மொத்தம் ஏழு பேர் கூடி உருவாக்கிய சமயமே ஆசீவகம் என்கிறார் பேராசிரியர் நெடுஞ் செழியன். மூன்றாவதாகச்சொல்லப்படுகின்ற அய்யனார் செம்முனி,வாழ்முனி என்றும் குறிப்பிடுகின்றார்.

சித்தன்ன வாயிலில் மூன்று மாங்கனிகள் உள்ள ஓவியம் உள்ளது. இந்த மாங்கனிகள் உள்ள ஓவியத்திற்கும் அய்யனாருக்கும் தொடர்புள்ளது என்கிறார். அடிமதிக்குடிஅய்யனார் பிள்ளைத்தமிழ் என்றநூலில் அய்யனார் சித்து விளையாடும் திறன் பெற்றவர் என்ற குறிப்பு உள்ளது. வாகைமரத்தில் மாங்காய் வரவழைத்தவர். ஆதலாலேஅய்யனார் கோ-யில்களில் வாகைமரமும், மாமரமும் உள்ளன என்றசெய்தியை இந்நூல் எடுத்துரைக்கின்றது. பாலாற்றங்கரை தென்கரையில் அய்யனார் கோயிலில் வாகைமரமும் மாமரமும் இருக்கின்றன. அங்கே வாழ்முனி செம்முனியும் இருப்பதைக் காணலாம். அதேபோல் நத்தம் அருகே கரந்தமலை அய்யனார் படகு என்னும் இடத்தில் வாகைமரமும், மாமரமும் உள்ளது. இதற்கெல்லாம் அடிநாதமாகச் சித்தன்னவாயிலில் ‘வாகைதனில் மாங்காய் வரச்செய்தோன்’ எனஅய்யனார் பிள்ளைத்தமிழ் எடுத்துரைக்கின்றது. புதுக்கோட்டை அருகே உள்ள சித்தன்னவாயிலில் மூன்று உருவங்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. ஆனால், அங்குள்ள மூவரில் ஒருவர் உயிர் துறந்துள்ளார். இவற்றின் நினைவாக, அவ்வூரில் இன்றும் பாடைத்திருவிழா

Koviloor Digital Library

கொண்டாடப்பட்டு வருகின்றனர். பாடை என்பது மரணத்தைக் குறிப்பதாகும். பேராசிரியரின் ஆய்வு இவ்வாறு எடுத்துரைப்பது பலபுதியதகவல்களைத் தருவதுடன் மட்டுமில்லாமல், அய்யனார் பற்றிய ஆராய்ச்சிக்கு வழிகாட்டுகிறது.

அய்யனார் வடிவம்

அய்யனாரின் தோற்றப்பொலிவானது, அய்யனார் கிழக்குத் திசைநோக்கி அமர்ந்திருக்கின்றார். அவர் மார்பில் பூணூல் அணிந்து இளைஞரைப் போன்று காட்சியளிக்கின்றார். தலையில் கிரீடமும் வலதுகாதில் குழையும் இடதுகாதில் குண்டலமும் அணிந்திருக்கின்றார். வலதுகையில் தண்டம் அல்லது தடிவைத்தும் உள்ளார். இடதுகையை இடதுகாலின் மீதுசார்த்தியதுபோல் அமர்ந்தும், இடதுகாலை மடித்துப்பீடத்தில் வைத்துக்கொண்டு வலதுகாலை கீழேதொங்கவிட்டவாறு அமர்ந்துள்ளதைக் காணலாம். சில இடத்தில் யானையின் மீதும் பெரும்பாலான இடங்களில் குதிரையின் மீதும் அமர்ந்துள்ளார். கண்மாய்க்கரை இல்லாத இடங்களில் அய்யனார் நின்றபடி இருப்பதையும் பார்க்கலாம்.

அய்யனாரிடத்திலுள்ள பரிவாரதெய்வங்கள்

இந்திரன், அக்னி, எமதர்மன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன், சித்தர்கள், வித்யாதரர்கள், கின்னரர்கள் முதலியோரும் அய்யனாருடன் இருக்கின்றனர். ஆனால், சிலஊர்களில் இம்முறை இல்லை. அய்யனாரின் பரிவாரதெய்வங்களாகக் கருப்பண்ணசாமி, வீரபத்திரர், இடும்பன், சின்னான், சன்னாசி, மூக்கன் மற்றும் சோணை முதலிய ஆண் தெய்வங்களும், செல்லியாயி, காளி, நீலி, ராக்காயி, கருப்பாயி, சடைச்சி, இருளாயி, செகப்பி, மூக்காயி, பேச்சி, சப்தகன்னியர்கள் முதலியபெண் தெய்வங்களும் பரிவாரதெய்வங்களாக உள்ளனர். நாய், ஆடு, மயில், கோழி இவைகளும் அய்யனாருடன் உள்ளன.

கோயில் பூசாரி

பூணூல் அணிந்த அசைவம் உண்ணும் வழக்கம் உடைய வேளாளர் பட்டம் பெற்ற குயவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அய்யனாருக்குக் கோயில்களில் பூசாரிகளாக இருந்து

Koviloor Digital Library

வருகின்றனர். சிவராத்திரி அன்று அய்யனார் பிறந்தவர் என்று சொல்லப்படுகின்றது. அன்று வழிபாடுகள் நடைபெறுகின்றன. அன்றையதினம் அய்யனாரைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் வழிபாடுசெய்துவரும் வழக்கம் தமிழகத்தில் இருந்துவருகின்றது. சிலவிடங்களில் இந்நிகழ்வு மாறியும் வழக்கத்தில் உள்ளன.

அய்யனாருக்குப் புரவிஎடுத்தல்முறையுள்ளது, அன்றையநாளில் அய்யனார் கோயிலில் உள்ள சேமக்குதிரைகளைப் போலச் சிறியமண் குதிரைகளைச் செய்து மக்கள் அனைவரும் திருவிழா அன்று அய்யனாருக்கு நேர்த்திக்கடன் செய்யும் வழக்கம் இன்றளவும் வழக்கத்தில் இருந்துவருகின்றது. சிலஊர்களில் முளைப்பாரி எடுக்கும் வழக்கமும் உள்ளது. ஆடு மாடுகள் நன்றாக இருக்கவேண்டும் என்று காளைக் கன்றுகளை நேர்ந்துவிடுகிற வழக்கமும் இருக்கிறது. அக்காளைமாடுகளைக் கோயில்மாடு எனச் சிற்றூர்களில் அழைப்பர். திருவிழா அன்றுவிரதமிருந்து காவடிஎடுக்கும் வழக்கமும் உள்ளதைப் பார்க்கமுடிகின்றது.

அய்யனாரை மக்கள் தங்களின் ஊருக்கு ஏற்றவாறு பல பெயர்களில் அழைக்கின்றனர். அடைக்கலம் காத்த அய்யனார், முத்துபெரமஅய்யனார், வழிவிடுஅய்யனார், சொரிமுத்து அய்யனார், பச்சைபெருமால் அய்யனார், நீர்காத்தஅய்யனார் என்று பலபெயர்களுடன் அய்யனார் விளங்குகிறார். இவ்வாறு அந்தந்த ஊர்ப்பெயர்களுடன் அய்யனார் விளங்கியும் வருகின்றார்.

முடிவுரை

தமிழர்கள் பலருக்கும் குலதெய்வமாக அய்யனார் விளங்கிவருகின்றார். ஊரைக் காக்கும் காவல் தெய்வமாக விளங்குகிறார். ஊரின் எல்லையில் இருந்துகாவல் தெய்வமாக இருக்கும் அய்யனார் வழிபாடு எப்போது தோன்றியது எனக் கணிக்க முடியாவிட்டாலும் தமிழகத்தின் பெருபாலான ஊர்களிலும் அய்யனார் காவல் தெய்வமாக உள்ளார். மக்கள் மனதில் உள்ளார் என்பதையாராலும் மறுக்கமுடியாது. நாட்டுப்புற மக்களைக் காப்பாற்றும் தெய்வமாகவும் உள்ளார். பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்களின் ஆராய்ச்சியையும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. மேலும் இது போன்ற ஆய்வுகள்

Koviloor Digital Library

தொடர அவரின் ஆராய்ச்சி துணைபுரிகின்றது. தமிழகத்தில் மக்கள் அய்யனாருக்கு உரியமரியாதையையும், சடங்கையும் செய்துவருவது உண்மையில் பெருமைக்குரியதாகும். 'ஐ' என்பதற்குத் தலைவன் எனப் பொருள். தமிழரின் தலைவன் அய்யனார் என்பதே சிறப்பாகும்.

Koviloor Digital Library

கட்டிவயல் அருள்மிகு திருவிருந்த ஐயனார் திருக்கோயிலின் வழிபாட்டு மரபுகள்

முனைவர் மா.ரெத்தினேஸ்வரி,
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை-3

முன்னோர் காட்டிய வழியில் செல்லுதல் என்பதே வழிபாடு ஆயிற்று. வழிபாடு என்ற சொல் இன்று தொழுதல், வணங்குதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகிறது. இவ்வழிபாடு என்பது தினந்தோறும் திருக்கோயில்களில் நடைபெறுதல் வேண்டும். முறைப்படி வழிபாடு நிகழ்த்தப் பெறாவிடின் ஊருக்கும், மக்களுக்கும், கேடு நிகழும் என்பது நம்பிக்கையாகும்.

அதனால் "கடவுள் வழிபாடு என்பது ஒரு பயிற்சி முறை. உண்மையான வழிபாடு என்பது சடங்குகள் மட்டுமின்றி கடவுள் நெறியில் நம்மை வழிப்படுத்திக் கொள்ளுதலாகும்" என்பர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

இந்நியதியை நன்கு அறிந்தே பெரும்பாலான கோயில்களில் வழிபாடுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. அம்முறையில் கட்டிவயல் திருவிருந்த ஐயனார் திருக்கோயிலின் வழிபாட்டு முறைகளைப் பற்றி விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

வழிபாட்டின் வகைகள்

வழிபாடு நாள் வழிபாடு, வார வழிபாடு, சிறப்பு வழிபாடு, ஆண்டு வழிபாடு எனப் பல வகைப்படும்.

நாள் வழிபாடு

சிறுதெய்வ வழிபாட்டில் நாள்தோறும் ஒரு வேளை அல்லது செவ்வாய், வெள்ளிகளில் வருடத்தில் ஏதாவது ஒரு நாள் என்ற நிலையில் வழிபாடுகள் நடைபெறும். கட்டிவயல் அருள்மிகு திருவிருந்த ஐயனார் திருக்கோயிலில் நாள்தோறும் இரண்டு காலப் பூசை நிகழ்கிறது.

Koviloor Digital Library

நாள் பூசை

இக்கோயிலில் நாள்தோறும் காலப்பூசை மாலைப்பூசை ஆகிய இரண்டு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. முதலில் திருவிருந்த ஐயனாருக்கு தீப, தூப ஆராதனை செய்து பின், பதினெட்டாம்படிக்கருப்பர், காளி, இராக்காச்சியம்மன், சப்தகன்னிகள், லாடசந்நியாசி, முன்னோடி, விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரை வழிபடுவது பொது வழிபாட்டு முறையாகும்.

காலைப்பூசை

சூரியன் உதித்த பின் 8 மணி முதல் 9 மணிக்குள் இக்கோ-யிலில் இப்பூசை நடைபெறுகிறது. இப்பூசையின் போது பூசாரியாக விளக்குபவர் நீராடி, தூய ஆடைகளை அணிந்து, நெற்றியில் திருநீறு பூசிக் கோயிலுக்கு வருவார். முதலில், ஐயனார் திருவுருவத்தையும பின் ஏனைய திருவுருவங்களையும் நீரினால் தூய்மை செய்து ஆடைகளைச் சாற்றி தீப, தூப ஆராதனைகளை நிகழ்த்துவர். காலைக் பூசையில் நைவேத்தியமாகப் பொங்கல் படைக்கப்படுகிறது.

மாலைப்பூசை

இதனை சாயங்காலப்பூசை என்று அழைப்பர். மாலை 5 மணி முதல் 8 மணி வரை இப்பூசை நடைபெறுகிறது. இப்பூசையின் போது ஐயனாருக்கு மாலை அணிவித்து தீப, தூபத்துடன் வழிபாடு நடைபெறும். பின் மற்ற பரிவார தெய்வங்களுக்கும், இம்முறையிலேயே வழிபாடு நிகழ்த்தப்பெறும்.

வாரவழிபாடு

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நிகழும் பூசையே வாரவழிபாடு ஆகும். இந்நாளிலும் இரண்டு காலப் பூசையே நடைபெறும். எனினும் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் காலைப் பூசையின் போது இறைவனுக்கும், ஏனைய தெய்வங் களுக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தப்பட்டு அதன்பின் தீபாரா தனைகள் நிகழும். மாலையில் நடைபெறும் பூசையில் ஏராளமான பக்தர்கள் முன்னிலையில் பாலாபிடேகம் ஐயனாருக்கு நிகழ்த்தப் பெறும்.

Koviloor Digital Library

சிறப்பு வழிபாடு

இத்திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு சித்திரா பௌர்ணமியின் போதும், மகா சிவராத்திரியின் போதும் நிகழ்த்தப் பெறுகின்றது. மேலும், தைத்திருநாள், தமிழ் வருடப்பிறப்பு, தீபாவளிப் பண்டிகை ஆகிய நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் உண்டு.

ஆண்டு விழா

ஆண்டு விழா என்பது ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் விழாவாகும். இக்கோயிலில் சித்திரா பௌர்ணமி விழா, சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. பத்துநாள் காப்புக்கட்டி விழா நடைபெறுவதால் இது பத்துநாள் விழா என்றும் கூறப்படும்.

பத்து நாளும் மண்டகப்படிதாரர்களின் உபயத்தால் இறைவனுக்குப் பால், சந்தனம், இளநீர், விபூதி, தேன், பஞ் சாமிர்தம், பன்னீர் ஆகிய பொருட்களில் அபிடேகங்கள் நிகழும். 4, 5, 6 ஆம் நாட்களில் அபிடேக ஆராதனையும், 7ஆம் நாள் இலட்சார்ச்சனையும், ஐயனார், கருப்பர் ஆகியோருக்குச் சந்தன அலங்காரம், மஞ்சள் அலங்காரம் ஆகியவையும் சிறப்பாக நடைபெறும்.

காளிக்கு அலங்காரம் செய்யும்போது சிவப்பு, மஞ்சள், ஊதா, பச்சை என எட்டு நாளும் எட்டுவித நிறங்கள் கொண்ட புடவையைக் கொண்டு சிறப்பாக அலங்காரம் செய்வர்.

மகாசிவராத்திரி

சிவதலங்களில் சிவனுக்குச் சிறப்பு செய்தல் போல இத்திருக்கோயிலில் சிவராத்திரியின் போது, ஐயனார், கருப்பர், காளி ஆகியோருக்குச் சிறப்பான பூசைகள் நடைபெறும். அன்றைய தினம் பச்சை போடுதல் நிகழும். பச்சை போடுதல் என்பது பச்சரிசி, பாசிப்பருப்பு, கொண்டைக்கடலை, அவல் ஆகியவற்றை அவித்துப் படைப்பது ஆகும்.

தைத்திருவிழா

உழவர் திருநாளாம் பொங்கல் திருநாள் தை மாதம் முதல் தேதியில் கொண்டாடப்படுகிறது. இத்திருநாளில் இறைச்சந்நி-

Koviloor Digital Library

தியின் முன்பு புதிய பானையில் மஞ்சள் கொத்தைக் கட்டி அடுப்பில் ஏற்றிப் பாலும், நீரும் ஊற்றி அரிசி, சர்க்கரை, பருப்பு, இட்டுப் பொங்கவிடுவர். இப்பொங்கல் ஐயனார், கருப்பர், காளி ஆகிய தெய்வங்களுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்பட்டு பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும்.

தமிழ் வருடப்பிறப்பு

சித்திரை ஒன்றாம் தேதி தமிழ் வருடப்பிறப்பின் போது, இறைத்திருவுருவங்களுக்குச் சிறப்புப் பூசைகள் செய்யப்படும். இந்நாளில் ஊர் மக்கள் அனைவரும் இத்திருக்கோயிலில் வந்து வழிபட்டுச் செல்வர்.

தீபாவளிப் பண்டிகை

தீபாவளிப் பண்டிகையின் போது இறைத்திருவுருவங்கள் அனைத்திற்கும் எண்ணெய்க் காப்பு சாத்தப்பட்டு, அதன்பின்பு அபிடேகம் செய்வித்து புத்தாடைகள் அணிவிக்கப்பெற்று வழிபாடு நிகழ்த்தப்பெறும்.

புரவி எடுப்பு

இக்கோயிலில் புரவி எடுப்பு என்பது முன்பு இருந்தது. நேர்த்திக்கடனாளர்கள் பிடிமண் எடுத்து வேளாளர்களிடம் கொடுத்து குதிரைகள் செய்யச் சொல்வர். குறிப்பிட்ட தேதிக்குள் வேளாளர்கள் குதிரைகளைச் செய்து அதில் நேர்த்திக் கடனாளர்களின் பெயர்களை எழுதி வைப்பர். பின்னர், குறித்த நாளில் மேளதாளங்கள் முழங்க, பக்தர்கள் குதிரைகளைக் கோயிலுக்கு எடுத்துச் செல்வர். பின்னர் பூசைகள் நடைபெறும். இதுவே புரவி எடுப்பு என்பதாகும். தொடக்கத்தில் இத்திருக்கோயிலில் இவ்விழா கொண்டாடப்பட்டது. தற்போது இல்லை.

முடிவுரை

இவ்வாறாக கட்டிவயல் திருவிருந்த ஐயனார் திருக்கோயிலின் வழிபாட்டு மரபுகள் என்பது அனைத்து மரபுகளையும் தன்னகத்தே பின்பற்றி சிறப்பாகத் திகழ்கின்றது. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு நாளும் இம்முறையிலேயே வழிபாட்டு முறைகள் நடைபெற்று தனித்தன்மை வாய்ந்ததாக அப்பகுதியை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

Koviloor Digital Library

முத்துமாரியம்மன் கோயில் வழிபாட்டுச் சொற்கள்

திருமிகு. ஜ.ரெஜினா பேகம்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப்பண்பாட்டு மையம் அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.3

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை:

சிறுதெய்வ வழிபாடுகளுள் ஒன்று முத்து மாரியம்மன் வழிபாடாகும். தமிழகத்தில் முத்துமாரியம்மன் கோயில்கள் மிகுதியாகக் ாணப்படுகின்றன. அவ்வகையில் சீர்மிகு சிவகங்கை மாவட்டமான காரைக்குடியில் உள்ள மீனாட்சிபுரம் என்னும் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் திருக் கோயிலின் வழிபாட்டுச் சொற்களைப் பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சக்தி வழிபாடு:

சக்தி வழிபாடு என்பது பழங்காலந் தொட்டே வழிவழியாக இருந்து வருகின்றது."யாவற்றையும் கடந்த பரம்பொருள் தம்முடைய உருவமற்ற நிலையிலிருந்து இறங்கி ஆலயங்களில் பெண்ணாகவும், ஆணாகவும் உருவம் கொள்கிறது"[1] என்கிறார் டி.எல். ராமச்சந்திரன். இப்பெண் உருவ வழிபாடே சக்தி வழிபாடாகக் கருதப்படுகிறது.

கோயில் வழிபாடு:

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஆன்றோர் வாக்கு. மக்களுக்கு மன அமைதியையும், மனதை ஒரு நிலைப்படுத்தவும் சிறந்த இடமாகவும் விளங்குகின்றன. இக்கருத்தையே "வாழ்க்கைக் கடலில் அகப்பட்டு கரைகாண முடியாமல் துன்பப்படும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கமாக விளங்குகிறது."[2] என்றுடி.என். ராமச்சந்திரன்

Koviloor Digital Library

உரைக்கின்றார். கோயில்கள் ஒற்றுமைக்கு வழிகாட்டும் தலமாகவும் விளங்குபனவாகும்.

தலவரலாறு:

1956 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் எட்டாம் நாள் லலிதா என்ற பெயரைக் கொண்ட ஒன்பது வயது நிரம்பிய சிறுமி, மேனி முழுவதும் அம்மை படர்ந்த கோலத்துடன் தனியாக மீனாட்சிபுரத்தை வந்தடைந்தாள். இச்சிறுமியை, மு.தான்தோன்றிப் பெருமாள் என்பவர் தன் இல்லத்தில் வைத்துப் பராமரித்தார். சிலநாளில் சிறுமியின் திருமேனியில் பதிந்த சிறுமுத்துக்கள் முதிர்ந்து பெருமுத்துக்களாக மாறின. இடைவெளியில்லாது மாறி, மாறி நெருங்கி ஒளி பொழிந்த முத்துக்களால் அச்சிறுமி சமனப்படுக்கை கொண்டாள். சிறுமியின் பேச்சு வார்த்தை மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை தந்தன.அன்பால்அனைவரும் கவர்ந்தாள்.அனைவருக்கும் தெய்வச் சிறுமியாக தோன்றிய லலிதா - ஒரு நாள் தன்னைச் சுற்றி இருப்பவர் அனைவரிடமும், நான் மகாமாரியாக மாறி, என் ஆலயம் வரும் அனைவருக்கும் அருள் பாலிக்கப் போகிறேன், எனக் கூறி, ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காண்பித்து, நான் மறைந்த பிறகு அந்த இடத்தில் எனக்கு ஒரு ஆலயம் அமைத்து வழிபடுங்கள் எனக் கூறி முக்தி அடைந்தாள். அவளுக்காக அமைக்கப்பட்டதே முத்துமாரியம்மன் திருக்கோயில்.

வழிபாட்டில் திருவிழா:

விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கம் சாதி, சமய வேறுபாடின்றி எல்லோரும் ஒன்று சேர்வதாகும். விழாவில் ஏழை, எளியோர் என்ற பாகுபாடின்றி, அனைவரும் சேர்ந்து மகிழ்கின்றனர். இத்தகு விழாக்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ்நாட்டில் இருந்ததை,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி"[3]

என்ற பாடல் வழி சிலப்பதிகாரம் புலப்படுத்தும்.

மாத விழாக்கள்: சித்திரை:

சித்திரை மாதம் தமிழ் வருடப்பிறப்பு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

Koviloor Digital Library

ஆடிமாதம்:

ஆடிமாதம் முதல் செவ்வாயில் தொடங்கி, ஐந்தாவது வெள்ளிக்கிழமை முடிய அபிழி~கம்,பால்குடம், பூசை எனப் பல நடைபெறுகின்றன. ஆடி மாதம் பூரம் நட்சத்திரமன்று, அம்மனுக்கு வளையல் அலங்காரம் செய்கின்றனர்.

ஆடியில் அம்மனை குளிர்விப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பச்ச மஞ்சள் அபிழி~கம் நடக்கின்றன. இதற்காக பெண்கள் முந்தைய நாளிலிருந்து 37 அம்மியில்251 கிலோ மஞ்சளை அரைக்கின்றனர்.

புரட்டாசி மாதம்:

புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவைக் கொண்டாடுகின்றனர்.

கார்த்திகை:

கார்த்திகை மாதம் முதல் செவ்வாயில் அன்னையின் அவதார தினவிழா, அன்னதானம், லட்சுமி அலங்காரம் போன்றன நிகழ்த்தகின்றனர்.

மார்கழி:

மார்கழி மாதம் திருப்பள்ளியெழுச்சி நடைபெறும்.

தை மாதம்:

தைப்பூசம், அம்மாள் நான்கு நாள்கள் திருவீதி உலா வரும்.

பெருவிழா:

வருடத்திற்கு ஒரு முறை சிறப்பாக நடைபெறும் விழா பெருவிழாவாகும். மாசி மாதம் கடைசிச் செவ்வாய்க் கிழமை ஆரம்பித்து, பங்குனி மாதம் முதல் செவ்வாய்க் கிழமை வரை இவ்விழாவைச் சிறப்பாக மக்கள் கொண்டாடுகின்றனர். இவ்விழா பத்து நாள்கள் நடைபெறுகின்றன. மாசிக் கடைசிச் செவ்வாயில் பூச்சொரிதல், கொடியேற்றம், காப்புக் கட்டுதல் ஆகியன நடைபெறும்.

பூச்சொரிதல்:

பூச்சொரிதல் என்பது விழாக்காலங்களில் மட்டும்

Koviloor Digital Library

மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சியாகும். பூ அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் அலங்கரித்து வைக்கப்பட்டு வீதி உலா வருகின்றபொழுது அனைவரும் பலவகை உதிரிப்பூக்களைக் கொட்டி வழிபடுவது பூச்சொரிதல் எனப்படும். இதைமக்கள் 'பூத்தட்டு' என்றும் கூறுவர். பூச்சொரிதலில் வாடாமல்லி, செவ்வந்தி பூக்கள் முக்கியமாகக் கருதப்படுகிறது. வுலீடாமல்லி அம்மனின் திலகத்தின் குறியிடாகக் கொள்ளப்படுகிறது.

கொடியேற்றம்:

பூச்சொரிதல் முடிந்த இரண்டாவது வாரம் விழா தொடங்கியதை அறிவிக்கும் பொருட்டு கொடியேற்றம் நடைபெறுகிறது. காலை 5.45 மணிக்கு கொடிமரத்தக்குப் பூசை செய்து, பின்னர் 6.15 மணிக்கு மேளதாளம் முழங்க கொடியேற்றப்படுகிறது. அதனைத் தொடர்ந்து காப்பு கட்டும் நிகழ்ச்சியும், அன்னை மாரிக்குச் சிறப்பு வழிபாடும் செய்யப்படுகின்றது. காப்பு கட்டிய பிறகு மக்கள் வெளியூர் செல்லுதல் கூடாது என்ற விதிமுறையைப் பின்பற்றுகின்றனர். சென்றால் தீமை நேரும் என நம்புகின்றனர். சிலம்பில் கொடியேற்றப்பட்ட நிகழ்ச்சி குறிக்கப் பெற்றுள்ளன. இந்திர விழாரெடுத்த காதையில் வரும்,

"தங்கிய கொள்கை தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற எடுத்து"4

என்னும் அடிகள் இதனை நன்கு விளக்கும்.

காப்புக் கட்டுதல்:

கோயிலில் கொடியேற்றியவுடன் பூசாரிக்குக் காப்பு கட்டுவார்கள். இதை'கங்கனம்' எனக் கூறுகின்றனர். மஞ்சள் நீரில் நனைத்த மஞ்சள் துண்டினை மஞ்சள் கயிற்றுடன் இணைத்துப் பூசாரிக்கு வலக் கையில் கட்டுவர். பூசாரிக்குக் கெட்ட ஆவியோ, நோயோ, எந்த துன்பமும் ஏற்படக் கூடாது எனக் கருதி செய்யப்படுவதாகக் கூறுகின்றனர். பின்னர் நேர்த்திக் கடனைச் செலுத்தக் கூடிய அனைத்து மக்களுக்கும் காப்பு கட்டப்பபுகிறது.

Koviloor Digital Library

பங்குனி மாதம் முதல் செவ்வாயில் (எட்டாம் நாள்) பொங்கல் வைத்தல், மதுக்குடம், முளைப்பாரி, கரகம் ஆகியன எடுக்கப்படுகின்றன.

மதுக்குடம்:

ஒரு குடத்தினுள் மஞ்சள் நீரை ஊற்றி அதனுள் தென்னம்பாளையைச் சொருகி, அலங்கரித்து தலையில் சுமந்து கொண்டு வருவது'மதுக்குடம்' ஆகும்.இதனை பூசாரி மனைவி எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

கரகம்:

அழகர் கோவில், இராமேசுவரம், சமயபுரம் போன்ற கோயில்கள் உட்பட ஏழு அல்லது ஒன்பது கோயில்களின் தீர்த்தங்களைக் குடத்தினுள் ஊற்றி, அதன் மேல் முத்துமாரி அம்மனின் உற்சவ சிலையை வைத்து அலங்கரித்து, பூசாரி தலையில் சுமந்து வருவது கரகம் எனப்படும். இதைக் கோயில் நிர்வாகம் சார்பாக பூசாரி எடுப்பது முக்கியமாகக் கருதப்படுகின்றது.

முளைப்பாரி:

முளைப்பாரி சுபச் சடங்குகளில் 'நவதானிய விதைகளை முளைக்கவைக்க' முன்னோர்கள் குழுவாகச் சேர்ந்து கூட்டு முயற்சியாக செய்தது தான் 'முளைப்பாரி'திருவிழாவாகும்.

தமிழர் பண்பாட்டில் ஓர் அங்கமான பெண் தெய்வங்களுடனும், பெண்களுடனும் தொடர்புடைய, இன்னும் மரபு மாறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிபாட்டுச் சடங்கு முளைப்பாரி வளர்த்தலாகும்.இதை'முளைப்பாலிகை' எனவும் கூறுவர்'. இந்நிகழ்வு பெண்களால் நடத்தப்படுவதால் 'வளமைக் குறியீட்டுச் சடங்கு' என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு பொது இடத்தில் ஓடு, மூங்கில், பனை ஓலை, நெகிழித் தொட்டி போன்றவற்றில் நெல், சோளம்,தட்டைப்பயறு, பாசிபயறு,கேழ்வரகு போன்ற பயிறு தானிய வகைகளை வண்டல் மண், காய்ந்த பசு, சாணம், ஆட்டு உரம் முதலியவற்றில் பரப்பி சாணிப்பால், பஞ்சகாவியம் ஆகியவற்றில்தோய்த்து விதைப்பர்.இதை'முளைப்பரத்துதல்' என்கின்றனர்.

Koviloor Digital Library

சிலர் விதைகளைஈரமான சணல் மூட்டையில் இறுகக்கட்டி முளை வந்தவுடன் ஓடுகளில் பரப்புவதும் உண்டு. இதற்கு 'முளைகட்டுதல்' எனப்படும். முளைத்த விதைகளைப் பரப்புவதற்கு முன் ஓடுகளில் மண் உரக்கலவையை நிரப்பி அதில் பரப்புகின்றனர்.இதை சூரிய ஒளிபடாத இடத்தில் வைத்து வளர்ப்பர். ஏனெனில் ஒளிபட்டால் முளையின் இலை பசுமையாகி தண்டு வளராமல் அடுத்த வளர்ச்சி, நிலைக்குப் போய்விடும் என்பதால், சூரியஒளி படாமல் நீர்தெளித்து, பனை ஓலைப் பெட்டியினால் முளைப்பாரியைமூடி வைப்பர். இதற்கு 'முளைப்பெட்டி'என்ற பெயர் அழைக்கப்படுகின்றது.

முளைப்பாரி வளர்ப்பவர்கள் சுத்தமாகவும், சைவ உணவு அருந்தியும், காலை, மாலை நீர் தெளித்து வருகின்றனர். வீட்டினுள் நுழைய வெளி நபருக்கு அனுமதி கிடையாது. முளைப்பாரி வளர்க்கும் வீட்டின் முகப்பில் வேப்பிலை தோரணம் கட்டி அடையாளப்படுத்துகின்றனர்.

முளைப்பாரி வளர்க்கும் வீடு மற்றும் கோயிலின் முன்னர் 'கும்மி' கொட்டி ஆடுவதைச் சடங்காகக் கொண்டு நிகழ்த்துகின்றனர்.

" ஒண்ணாம் நாள் ஒட்டு முளை
ஓங்கி வளர்வதைப் பாருங்கடி
இரண்டாம் நாள் இரட்டை முளை
இணைந்து வளர்வதைப் பாருங்கடி
மூன்றாம் நாள் மொட்டு முளை
முளைத்து வளர்வதைப் பாருங்கடி
முத்து முத்தாய் மழைபொழிய
முளையெடுக்க வாரிங்களோ"[5]

என்னும் முளைப்பாரி பாடலை, அனுபவம் மிக்க முதிய பெண்மணி ஒருவர்பாட அப்பாடலைப் பின்பாட்டாகப் பாடிக் கொண்டே வட்டமடித்தும்,குதித்தும் குனிந்தும் கைகொட்டி ஆடுவார்கள்.இதனால் கும்மி ஓசை எழுவது மிபுலில் முளைப்பாரியும் முளைத்து வெளிவரும் எனவும் மக்கள் நம்புவதாகக் கூறுகின்றனர். பொழுதுபோக்கு மற்றும் பக்தி வெளிப்பாடு எனவும் சிலர் கூறுவர்.

Koviloor Digital Library

முளைப்பாரி வளர்ப்பது, வெப்பம் காரணமாக உருவாகும் அம்மை நோயிலிருந்து விடுபடவும், தடுக்கவும் செய்வதாகக் கூறுகிறார்கள்.

அம்மன் கொடிய நோய்களைப் போக்கி அருள் தருவாள் எனவும் மக்கள் நம்புகின்றனர். கன்னிப் பெண்கள் விரதமிருந்து முளைப்பாரி வைத்து வழிபட்டால் அவர்கள் வாழ்வில் நல்ல கணவன், நல்ல குழந்தை மற்றும் பிற செல்வங்கள் கிடைக்கும் என்றும் நம்புகின்றனர்.

முளைப்பாரி வைத்த பெண்கள் திருமணமாகி சென்று விட்டால். அவர் நினைவாக அவர் பயன்படுத்திய முளைப்பாரிப் பொருள்களை இல்லங்களில் பாதுகாக்கின்றனர்.

முதல் நாளில் முத்து போன்று முளை வந்த விதைகள் எட்டாம் நாள் சூரியஒளி தேடி நீண்டு வளர்ந்து அழகாகக் காட்சியளிப்பது முளைப்பாரியின் தனிச்சிறப்பாகக் கருதப்படுகின்றது.

புதன்கிழமை ஒன்பதாம் நாள் அக்னிச்சட்டி எடுத்தல், பால்குடம் எடுத்தல் மற்றும் பூக்குழி இறங்குதல் ஆகியன நடத்தப்படுகின்றன.

அக்னிச்சட்டி எடுத்தல்:

இறைவழிபாட்டில் ஒரு பகுதி தன்னை வருத்திக் கொண்டு வழிபடுவதாகும். தீச்சட்டி எடுத்தல் திருவிழாக் காலங்களில் மிகுதியாகவும். மற்ற நேரங்களில் குறைவாகவும் நடைபெறு கின்றது. நோய்வாய்ப்பட்டோர், அம்மை வயப்பட்டோர் இவ்வழிபாட்டை மேற்கொள்கின்றனர். அக்னிச் சட்டி வளர்த்தலை "தீச்சட்டி எடுத்தல்" எனவும் கூறுவர்.

ஆண், பெண் இருபாலரும் எடுக்கின்றனர். இந்நிகழ்வு பகல், இரவு இரு நேரங்களில் நடைபெறும். அகலமான மண்சட்டியை மாரியம்மனுக்கு பூசாரியைக் கொண்டு அபிடேகம் செய்வர். பிறகு மண்சட்டியினுள் வேப்பங்குச்சிகளைப் பரப்பி எண்ணெய் இடுவர். இதற்கு 'எண்ணெய் விட்டு வளர்த்தல் அல்லது தீச்சட்டி வளர்த்தல்' என்று கூறப்படுகிறது. தீச்சட்டி எடுப்பவர் மஞ்சள் நிற ஆடையை அணிய வேண்டும் என்பது முக்கியக் கருத்தாகும்.

Koviloor Digital Library

பால்குடம் எடுத்தல்:

பால்குடம் எடுத்தல் என்பது விழாக்காலங்களுக்குரிய சிறப்பு வழிபாடாகும். பால்குடம் எடுப்பவர் பத்து நாள்கள் , சைவ உணவை உண்டு விரதம் இருப்பர். ஒரு குடத்தினுள் பாலை ஊற்றி, அதன் வாயில் வெள்ளைத் துணியால் மூடுவர். இந்நிகழ்வு பகல் நேரங்களில் நடைபெறுகின்றன. பால் குடத்தை தலையில் சுமந்து கொண்டு வரும்பொழுது பால் பொங்கி வழிந்தால் இறையருள் என்றும், நன்மை விளையும் எனவும் மக்கள் கருதுகின்றனர்.

திருவிழாவுக்கு முன்தினம் கரகம், மதுக்குடம், முளைப்பாரி ஆகியன இரவு நேரங்களில் தாரை. தப்பட்டை, மேளவாத்தியம், வானவேடிக்கைகள் முழங்க, முத்தாளம்மன் கோயிலில் இருந்து ஊர்மக்கள் தலையில் சுமந்து கொண்டு முக்கிய வீதிகள் வழியாக மீனாட்சிபுரம் முத்துமாரியம்மன் கோயிலுக்கு ஊர்வலமாக கொண்டு வந்து, கோயில் மண்டபத்தில் வைப்பர்.பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெறும்.

திருவிழா அன்று காலையில் முத்தாளம்மன் கோயில் ஊரணியில் நீராடிவிட்டு, பால்குடங்களை தலையில் ஏந்தி, கொப்புடையம்மன் கோயில் வீதி,செக்காலை ரோடு, முத்துப்பட்டிணம் வழியாக முத்துமாரியம்மன் கோயிலை அடைகின்றனர். அச்சமயம் சிலர் பூக்குழி இறங்குதலையும் மேற்கொள்கின்றனர்.

பூக்குழி இறங்குதல்:

கடுமையான நோய்வயப்பட்டோர் இவ்வேண்டுதலை மேற்கொள்கின்றனர். இது திருவிழா காலங்களில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குழியில் மரக்கட்டைகளை அடுக்கி, எண்ணெய் விட்டு நெருப்பு இடுவர்.தீக்களம் கொழுந்து விட்டு எரிந்தபின்,நேர்த்திக்கடன் செய்பவர் குழியில் இறங்கி, காலால் உழுது கொண்டே செல்வர்.ஆண், பெண் இருபாலரும் இறங்குவர். நெருப்புகளால் நிறைந்த இடத்தைப் பூக்குழி என மங்கலமாகச் சொல்கின்றனர். பூக்குழி இறங்குவர்

Koviloor Digital Library

ஒருமாதம் திட உணவு உட்கொள்வதைத் தவிர்த்து, பால், பழம் மட்டுமே உட்கொள்வதாக அறியப்படுகிறது. பூக்குழி இறங்குவதை மக்கள் 'பூமிதித்தல்' எனவும் உரைக்கின்றனர்.

திருவிழாவின் போது அன்னதானம் , மோர், குளிர்பானம் வழங்குவதை இந்நகர மக்கள் பாக்கியமாகக் கருதுகின்றனர்.

திருவிழாவன்று மாலை மது, முளைப்பாரி ஊரணியில் செலுத்துதல், இரவு காப்பு பெருக்குதல் நடைபெறும்.

மது, முளைப்பாரி கரைப்பு நிகழ்வானது திருவிழாவின் நிறைவு நாளைக் குறிப்பதாகும். நன்றாக செழித்த முளைப்பாரியை ஓடும் ஆறு, குளம் ஆகியவற்றில் கரைப்பர்.இதனுடன் இருக்கும் மண், உரம், முளை முதலியன நீர்பாயும் இடங்களிலெல்லாம் பரவி அந்நிலத்தைச் செழிக்கச் செய்யும் எனவும், விவசாயிகளுக்கு துணைபுரியும் நீர்நிலைகளின் அவசியத்தை நினைவில் நிறுத்தவதற்காகவும் நடத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

நேர்த்திக் கடன்கள்:

தனக்கு வேண்டியவற்றை அடையும் பொருட்டும், நோய்வாய்ப் பட்டவர்களும் நேர்த்திக் கடன்களை மேற் கொள்கின்றனர். பால்குடம் எடுத்தல், பூக்குழி இறங்குதல், அக்னிச்சட்டி, காவடி, முளைப்பாரி, மது எடுத்தல் எனப் பலவகையாகக் கூறப்படுகின்றத. இளநீர், நீர்மோர், அன்னதானம். பொங்கல், கஞ்சி சாற்றுதல் மற்றும் அன்னையின் திருவிளையாடலில் ஒன்றான தக்காளிப்பழ காணிக்கையும் நேர்த்திக் கடனாகச் செலுத்துகின்றனர்.

முடிவுரை:

தமிழ்நாட்டில் வாழும் சிறுதெய்வ வழிபாடுகளுள் ஒன்றான முத்துமாரியம்மன் வழிபாடு சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. காரைக்குடியில் மீனாட்சிபுரம் பகுதிகள் முத்துமாரியம்மனின் அருளால் சிறந்த இறைத்தலமாகக் காணப்படுகின்றது. மக்கள் செலுத்தும் நேர்த்திக் கடன்கள் சிறந்தவையாகவும், பயனளிக்கும் வகையிலும் விளங்குகின்றன. தக்காளிப்பழக் காணிக்கை வியக்கத் தக்கனவாக உள்ளன.முளைப்பாரி முதல் மக்களிடையே காணலாகும் பலவகையான வழிபாட்டுச்

Koviloor Digital Library

சொற்களை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

சான்றெண் விளக்கம்:

1. லலிதாம்பாள், கண்கண்ட தெய்வம் கருமாரி –ப.40.
2. டி.என்.இராமச்சந்திரன், நாம் வணங்கும் தெய்வங்கள் – ப.10
3. புலியூர் கேசிகன் உரை,சிலப்பதிகாரம் இந்திர விழாவூரெடுத்த காதை – பக்.70,72.
4. மேலது – பக்.76,145.
5. 2018 ஜுலை 28, மாலை மலர் நாளிதழ் – ப.4.

(இந்தக் கட்டுரை ரூசா – கட்டம் 2.0 (நிதி ஒப்புதல் கடித எண்: F.24-51/2014-U,Policy (TNMulti-Gen) கல்வித்துறை, இந்திய அரசு, நாள்: 09.10.2018) ஆய்வுத் திட்டத்திற்காக எழுதப் பெற்றது.)

Koviloor Digital Library

இறகுசேரி சுடலைமாடன் கோயில் வழிபாட்டு மரபுகள்

திருமிகு. சு. லாவண்யா,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

(அழகப்பா பல்கலைக்கழக ரூசா 2.0 நிதி ஆய்வுத் திட்டத்தின்கீழ் எழுதப்பட்ட கட்டுரை)

முன்னுரை

நாட்டுப்புறக் கோயில்கள் மக்களின் வாழ்வியலோடு மிகவும் நெருங்க அமைந்தவை. இதில் சுடலைமாடன் வழிபாடு தனித்துவம் உடையது. அவ்வகையில் இறகுசேரி சுடலைமாடன் வழிபாட்டு மரபு குறித்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கோயில் அமைவிடம்

சுடலைமாடன் திருக்கோயில் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்தில், தேவகோட்டையின் அருகில் இறகுசேரி என்னும் ஊரில் அமைந்துள்ளது.

இறகுசேரி ஊர்ப்பெயர்

இறகுசேரி என்பதற்கு, "இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் போது, சீதையை மீட்பதற்காக வந்த கருடனின் (ஜடாயு) சிறகுகளை இராவணன் வெட்டினான். அவ்வாறு வெட்டப்பட்ட சிறகுகளில் உள்ள இறக்கைகள் சிதறி விழுந்த இடம் மக்களால் 'இறகுசேரி' என்று அழைக்கப்பட்டு வந்தது. நாளடைவில் அது மருவி 'இறகுசேரி' என்றாயிற்று என்றும், கருடனின் வெட்டப்பட்ட சிறகுகளை ஒன்றாகப் பொறுக்கி எடுத்த இராமன், இவ்வூர் இறகுசேரி என்று ஆயிற்று என்று கூறுவர்.

சுடலைமாடன் பெயர் விளக்கம்

Koviloor Digital Library

சுடலைமாடன் குறித்து எச்.ஆர், பேட் குறிப்பிடுகையில், 'நெல்லைகுமரி' மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் சுடலைமாடசாமிக்குப் 'பீடங்கள்' காணப்பட்டாலும் நெல்லையிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சீவலப்பேரியிலுள்ள சுடலைமாடசாமியே முதன்மையானதாகக் கருதப்படுகிறது. அங்கிருந்து அவ்வழிபாடு பரவியுள்ளது எனலாம். பிராமணர்கள் இவ்வூரில் பீடம் போட்டு வீட்டுத் தெய்வமாகக் கும்பிடுகின்றனர். முண்டன், கருப்பன், இருளப்பன், சிவனனெஞ்ச பெருமாள் ஆகியன முக்கியமான தெய்வங்கள், சுடலைமாடன் தலைமையானவன். சுடலைக்கு எல்லாப் பேய்க் கோயில்களிலும் மரியாதை உண்டு பல வடிவங்களாக காட்சி தருவான். பீடமாகவோ அல்லது உருவமாகவோ இருக்கும். இடது கையில் கதையும் (ஆயுதம்) வலது கையில் கத்தியும் இருக்கும். யானை அல்லது வெள்ளைக் குதிரை மேல் அமர்ந்திருக்கும் மனிதன் வெள்ளை எருதாக, பன்றியாக, கரடியாக வடிவம் உடையவன், அடிக்கடி மாறும் பல வடிவங்களுடையவன், இரவு நேரம் உலவுபவன், உரத்த குரலில் கத்தல், அவனுடைய சகோதரனாகிய முண்டனை அழைப்பதாக இருக்கும். தீங்கு விளைந்தால் ஒரு கொடை கொடுக்கப்படும். ஆடு, பன்றி போன்றவற்றின் வலியினை விரும்புவான் என்பார்.

கோயில் தோற்றம்

சுடலைமாடன் 300 ஆண்டுகளுக்கு முன்பு கேரளாவில் இருந்து குற்றாலம் வந்து பின் இறகுசேரியில் உள்ள வடபத்திரகாளி-யிடம் உத்தரவு கேட்டு அனுமதி பெற்று இங்கு தங்கியதாகச் செவிவழிக்கதை ஒன்று உளது.

கோயில் வளர்ச்சிநிலை

இறகுசேரியில் சுடலைமாடனின் கோயில் வீரக்குடி வெள்ளார் நமச்சிவாயப் பிள்ளை என்ற ஒரு தனி ஒருவரால் கட்டப்பட்டது தற்பொழுது கட்டடக்கலையில் மேம்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பலர் நன்கொடையும் அளித்துள்ளனர்.

சுடலைமாடன் திருவுருவம்

சுடலைமாடன் நின்ற கோலத்தில் உள்ளார். அவர் கையில்

Koviloor Digital Library

சுக்கு மாதடியும், அரிவாளும் இடம்பெற்றுள. தலைமுடி ஆண்டாளின் கொண்டை போன்று விளங்கும். கீரிடத்தை அணிந்திருப்பார். பெரிய நீண்ட அச்சத்தைத் தரக்கூடிய வகையில் சருண்ட மீசையும், வீரப்பல்லும் பெற்று இப்பார். காலில் தண்டை அணிந்திருப்பார். கால் செருப்புகள் ஆணியால் குத்தப்பட்டு அதன்முன் கால் பதிந்திருக்கும். மார்பில் மணிச்சங்கிலி குறுக்காக இடம் வலமாக அணிந்திருக்கும்.

சிறப்பு வழிபாடு

இறகுசேரி சுடலைமாடன் கோயிலில் பூசாரியாக உள்ளவர் சாமியாடும் முறை உள்ளது. சாமியாடும் போது ஊர்மக்கள் அவரிடம் வந்து அருள்வாக்குக் கேட்கின்றனர். சாமியாடுபவரும் தெய்வவாக்கு உரைப்பவராக இருக்கின்றார். இக்கோயிலில் சாமியாடியாக உள்ள திரு.சீனிவாசன் பிள்ளை, பிள்ளை சமூகத்தவர் ஆவர். மேலும் இக்கோயிலில் மக்கள் அங்கப்பிரதட்சனம் செய்தல், அலகு குத்துதல், பால்குடம் எடுத்தல், முடி எடுத்தல், காதுகுத்துதல், பெயர் சூட்டடல் போன்றவைகளை மேற்கொள்ளுகின்றனர்.

மாசித்திங்களில் சுடலைமாடன்

ஆண்டில் மாசித்திங்களில் அமாவாசை கழிந்த இரண்டாம் நாள் சுடலைமாடன் கோயிலுக்குள் (காப்புகட்டுதல்) நிகழும். மறுநாள் தட்டைபயிறு, பாசிப்பயிறு இவைகளைக் கலந்து பச்சரிசியை ஊரவைத்து இதனுடன் இரண்டுவகை பயற்றையும் கலந்து பூசை செய்து வணங்குவர்.

மறுநாள், 'சுடலைமாடன் சுடுகாட்டிற்குச் செல்லும் பொழுது பண்டையக் காலத்தில் சுடுகாட்டில் சாமிக்குரிய வேட்டைப் பொருட்களில் பன்றியையும், வெட்டப்படும் ஆட்டையும் பறையர் சமூகத்தைச் சார்ந்தவர் சுடலைமாடசாமியுடன் எடுத்துச் செல்வர். இவ்வாறு பல ஆண்டு சாமி செல்லும் போது சுடுகாட்டில் நடைபெறும் காலத்தில் இயற்கையாக இறந்து எரியூட்டும் மனித உடலை எடுத்துத் தின்னும் முறை இருந்துள்ளது.

இவ்வாறு இக்கோயிலில் நடைமுறை இருந்த காலத்தில் இராமநாதபுரத்து அரசர் ஒருவருக்கு பிள்ளை பேறு இல்லை.

Koviloor Digital Library

அரசனின் கோடாங்கி ஒருவன் அவருக்கு குறி சொல்லியதில் மன்னருக்கு குழந்தைப்பேறு கிட்டுவதற்கு அருள்வாக்கு கூறினார். கோடாங்கியின் அருள்வாக்கில் மன்னரிடம், இராமநாதபுரம் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கும் சுடலைமாடன் சாமி மயானக்கொள்ளைக்குச் சென்று வருகின்ற மாடனின் காலில் வீழ்ந்து வணங்கினால், மாடனின் அருளால் தங்களுக்கு குழந்தைப்பேறு கிடைக்கும் என்று சொன்னான். கோடாங்கியின் அருள்வாக்குக் கேட்ட அரசனும், மயானக் கொள்ளைக்குச் சென்று வந்த மாடசாமியின் காலில் வீழ்ந்து வணங்கினார். அரசருக்கு மாடசாமி கொடுத்ததை அரசர் பெற்று தின்று குழந்தை வரம் பெற்றார். மாடனின் அருள்வாக்கில் மன்னருக்குப் பெண் குழந்தை பிறக்கும் என்று சொன்னது. அதன்படியே பெண் குழந்தையும் பிறந்தது. மன்னரும் வேண்டுதல் கடனாக மாடசாமிக்கு செம்பியன் வயலில் ஒரு பகுதியை இக்கோயிலுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கு எழுதிக் கொடுத்தார். அந்த நிலம் இன்றும் 'அன்னதான வாய்க்கால்' என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நிலத்தை யாரும் வாங்கவும் முடியாது, விற்கவும் முடியாது. அந்த நிலத்தை வாங்கியவர்கள் கூட கோயிலுக்கென அதைத் திரும்ப கொடுத்துவிட்டனர்.

மயானக்கொள்ளை செல்லுதல்

சுடலைமாடன் மயானக் கொள்ளைக்குப் போகும்போது தாரை, தப்பட்டை, கொம்புடன், தீச்சட்டியுடன் கரகத்தைத் தூக்கிப் புதியன்சாமி முன்னால் செல்லும், புதியன் சாமியின், பின்னால் இருளப்பர்சாமி, மாடன், பேய்ச்சி, பத்திரகாளி என்று தெய்வங்கள் தொடர்ந்து செல்லும். பண்டையக் காலத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மாடன் மயானக் கொள்ளைக்குச் செல்லும் பொழுது சுடலைமாடன் உடலில் கருப்புடை அணிந்து தீப்பந்தம் ஏந்திச் செல்வார். உடன் செல்வோரில் அம்பட்டயர் தன் கையைக் கிழித்து ஒழுகும் குருதியைச் சோற்றில் விட்டு பிறகு அதை மேலே எறிவார்கள். அந்த சோற்றை சாமி கவ்விச் சாப்பிடுவதாக ஐதீகம். அவ்வாறு எறியும் சோற்றையே 'எறிசோறு' என்பர். இப்பூசையானது சித்திரைத் திங்களில் நடைபெறும். அப்பொழுது சாமி அழைப்பதும் பதினொறு ஆட்டுக் கிடாயினை

Koviloor Digital Library

வெட்டிப் பூசை செய்வதும் நிகழும். வெட்டப்படும் ஆட்டை 'துவலைக்கிடாய்' என்பர். அதாவது 'பால் மறந்த பருவ ஆடு' என்பதாகும். இந்த கிடாயைச் சமைத்து அன்று இரவு இரண்டு மணிக்குப் படையல் இட்டுப் பூசை செய்யப்படும். அக்கிடாய் வயிற்றை கிழித்து அதில் உள்ள ஈரலை பள்ளயத்தில் வைத்து குருதியைச் சோற்றுடன் சேர்த்து எறிசோறு எறிவர். அதுதான் மயானக் கொள்ளைவிடுதலாகும். இந்தப் பூசையின் போது அங்கு பெண்கள் யாரும் இருப்பதில்லை. இவ்விழாக்காலத்தில் கணியான் கூத்து, வில்லுப்பாட்டு போன்றவைகள் நடைபெறும்.

முடிவுரை

சீதையை மீட்பதற்காக வந்த கருடனின் இறகுகள் வெட்டப்பட்டு வீழ்ந்த இடம் என்ற காவியக் கதையோடு தொடர்புடைய இறகுசேரியில் உள்ள சுடலைமடன் என்னும் தெய்வவழிபாட்டில் மயானக்கொள்ளை என்னும் நிகழ்வு பிறவழிபாட்டு மரபிலிருந்து மாறுபட்டதாகும். இறந்தவர்களைப் புதைக்கும் சுடுகாட்டுடன் தொடர்புடையதாக இவ்வழிபாடு இருத்தல் சுட்டத்தக்கது.

Koviloor Digital Library

சிறு தெய்வக் கோவில் வழிபாட்டு மரபுகள்

திருமிகு. ரா. லோகநாதன்,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

முன்னுரை:

தமிழரின் காலங்காலமான பண்பாட்டுத் தொன்மைகளில் இன்றியமையாத ஒன்று இறை வழிபாடாகும். அறிவியலும், ஆன்மீகமும் கலந்ததே இறைநம்பிக்கை ஆகும். இவை குழுக்களுக்கேற்ப குல தெய்வ முறையாகவும், சிறுதெய்வம், பெருதெய்வம் எனும் முறையிலும் வழிபடப்படுகின்றன. இதில் நாட்டார் தெய்வங்களாகிய சிறு தெய்வ கோவில் வழிபாட்டு மரபுகள் மற்றும் முறைகளை கூறும் வகையில் இக்கட்டுரையானது அமைகிறது.

சிறு தெய்வப் பெயர்கள்:

வட ஆற்காடு மாவட்டத்தில் பெண் தெய்வங்களாகிய மாரியம்மன், நாகலம்மன், காளியம்மன், நோண்டி மாரியம்மன், பச்சையம்மன், முத்துமாரி, தேசத்துமாரி, வெட்காளியம்மன். ஆண் தெய்வங்களாகிய முனீஸ்வரன், முனியப்பன், கருப்பன், வீரபத்திரசாமி, வேடியப்பன் மற்றும் பல சிறு தெய்வங்கள் வழிபடப்படுகின்றன.

சிறு தெய்வ வழிபாட்டு முறையின் மரபுகள்:

இயற்கையினை வழிபட்ட மக்கள் காலச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் இயற்கையை வழிபட்டுள்ளனர். இயற்கையோடு இணைத்து நிலம், நீர், தீ, காற்று, வானம் போன்ற இயற்கை-யினை வழிபட்டு வந்துள்ளனர். காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்தவர்கள் தமக்கு அச்சம் தரும் உயிரினங்களையும் வழிபட்டு வந்திருக்கலாம். அவ்வாறு வழிபட்டு வந்த உயிரினம் பாம்பு, முதலை, சுறா போன்றவைகளாகும். சில உயிரினங்களைப் போரிட்டு வெற்றி பெற்று வந்திருக்கலாம். அவ்வாறு வெற்றி கொண்ட உயிரினங்கள் சிங்கம், புலி, யானை,

Koviloor Digital Library

மான் முதலியன. மக்கள் காலப்போக்கில் தாக்கள் பயன்படுத்தி வந்த கருவிகளை வழிபட்டு வருகின்றனர். அவ்வகை ஆயுதத்தை இன்று பிள்ளையார் என்று கூறுகின்றனர். கருவியினை வழிபடுவதன் எச்சமாகப் பார்க்கும் பொழுது அக்கருவி பழைய கற்காலக்கற்கோடரி போன்றே வடிவம் பெற்றுள்ளது.

வேட்டையாடிய மக்களின் நினைவாகவும் அவர்கள் பயன்படுத்திய வேட்டைக் கருவியினை வழிபடும் நோக்கில் வில், அம்பு வைத்து வழிபடுகின்றனர். அதுமட்டுமின்றி வேட்டையாடிய காட்டு எருமைக் கொம்பு, மான் கொம்பு போன்றவற்றை வீட்டில் வைத்திருப்பதைக் காணமுடிகிறது. சிலை வைத்து வழிபாடு செய்யும் மக்கள் சிலையின் பிற்பகுதியில் அம்பு போன்று செய்து அலங்காரம் செய்யும் பொருளாகவும், குடை அல்லது பூவினை வைக்கவும் அம்பினை இன்றும் பயன்படுத்தி வருகின்றனர்.

வழிபாட்டு முறைகள்:

சிறு தெய்வங்களுக்குப் படையல் படைக்கும் பொழுது ஊன் உணவுவகைகள், மது, பீடி, காய்கறிகள், தாம் பருகும் கூழ், துணிமணிகள், கண்ணாடி, கயிறு, குங்குமம், சந்தனம், மஞ்சள், வெற்றிலைபாக்கு போன்ற பல்வேறு பொருள்களைப் படையல்களாகப் படைத்தது வழிபடுவது சடங்காக உள்ளது. வைதீக மரபைச் சேர்ந்த சிறுதொண்டர், கண்ணப்ப நாயனாரின் பக்தி அளவிடற்கரியது என்பர். கண்ணப்பன் ஒரு வேட்டுவகுலத்தைச் சேர்ந்தவனாக இருப்பினும் கடவுளின் கண்களில் இரத்தம் வடிந்த குருதியைத் துடைக்க வேலால் (அ) அம்பினால் தன் விழியைக் குத்தி எடுத்தார் என்பதாகவும் பலி சோற்றினைப். போடுவர். பலியிட்டவர்களுக்குத் தலைப்பாகை கட்டிப் பூமாலை சூட்டுவர். பலியிட்டுப் பலிசோறு போடுவது நாட்டு தெய்வங்களுக்கு விருந்து அளித்து அனுப்புவதாகவும் கூறுகிறனர். அவ்வாறு பலி சொறிட்டத்தை,

"புலவு நாற்றத்த பைந்தடி
பூ நாற்றத்த புகை கொளீஇ யூன்றுவை களி சோறு உண்டு"

என்ற புறநானுற்று பாடல் விளக்குகிறது.

Koviloor Digital Library

கோவிலிலிருந்து சாமி வீட்டடிற்கு வரும் வழியில் ஆட்டக் கலைகள் பல நடைபெறும். சாமி செல்கின்ற போது கோமார் என்ற மரத்தின் நாரை எடுத்து மீசை, தாடி, இடுப்பிலும் கட்டிக் கொண்டு கோமாளி வேடமிட்டுச் செல்கின்றனர். சாமியின் சீர்வரிசைக் கூடையினுடனும் இக்கோமாளி செல்வார். இலக்கிய அமைப்பில் பாவை விளக்கு எடுத்து வருவது போன்று இன்றும் பல கிராமத்தில் கருடகம்பம் (அ) கருடவிளக்கு என்ற விளக்கை உடன் எடுத்துச் செல்கின்றார்கள். இதனையே,

"நான்மறை முதுநூல் முக்கட் செல்வ
னால முற்றங் கவின் பெற்றதை இய
பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளீர்
கைசெய் பாவைத் துறைக் கணிக்கறுக்கும்"

என்ற அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

ஆண் தெய்வத்திற்குத் தனியாகவும், பெண் தெய்வத்திற்குத் தனியாகவும் படையலிட்டு நேர்த்திக்கடன் செலுத்தியும் வழிபடுகின்றனர். பெண் தெய்வத்திற்குப் பலியிடல், மாவிளக்கு எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், பூக்குழி இறங்குதல் (அ) நெருப்பில் இறங்குதல், தொட்டில் கட்டுத்தல், ஈரத்துணியுடன் மண் பொம்மை கொண்டுவந்து வைத்தல், அணிகலன்கள் வழங்குதல், கூழ் எடுத்தல் போன்ற பல்வேறு சடங்குகள் செய்கின்றனர். ஆண் தெய்வத்திற்குக் கால் நடைகளை அழித்தல், பலியிடுதல், பால்குடம் எடுத்தல், ஆணி செருப்பு அணிதல், தலையில் தேங்காய் உடைத்தல், தீப்பந்தத்தை மார்பில் அடித்து வருதல் போன்ற நிகழ்வு ஆண் தெய்வத்திற்குச் செய்யும் சடங்காக உள்ளது. மந்திரம் கூறி அகிலத்தை ஒன்றிணைக்கவும் சாமி அழைக்கவும் மக்களை ஒன்றிணைக்கின்றனர்.

சாமி ஊர்வலம் வரும் பொழுதும், கோவிலுக்குச் செல்லும் பொழுதும் அக்னியைப் பந்தமாகக் கொண்டு செல்கின்றனர். இவர்களுக்குள் சைவ, வைணவ தீவிரப்பற்றோ, புராணக்கதைகளோ, பின்னனணியோ இம்மக்களிடத்தில் இல்லாமலிருந்தது. தற்போது சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பெருத்தெய்வங்கள் வந்து சேர்ந்துள்ளது என்பதனை அறியமுடிகிறது. நாட்டார் சாமிகளுக்குப் பூசை

Koviloor Digital Library

செய்யும் பொழுது மந்திரங்கள் (சுலோகங்கள்) கிடையாது. மக்கள் கற்பூரம், தேங்காய், வெற்றிலைபாக்கு, வாழைபழம், சோறு, காய்கறி வகைகள் இவற்றை வைத்துப் படையலிடுகிறனர். பெருபான்மையாக மருத்துவ குணமிக்கப் பூக்களையும், இலைகளையும் கொண்டு அலங்கரிக்கின்றனர். அருகம்புல், நித்தியக்கல்யாணி, வில்வ இலை, செம்பருத்தி, செண்டுமல்லி, வேப்பிலை, துளசி போன்ற பல்வகைப் பூக்களைக் கொண்டு அலங்கரித்துப் பூசை செய்து வழிபடுகிறனர். ஊர் மக்களிடையே தெய்வங்களுக்கு ஆடு, கோழி, எருமைக்கடா, பன்றியினைப் பலியிட்டு வழிபடும் வழக்கம் உள்ளது. அத்தகைய சமயகளில் அனைத்து பெருதெய்வம் மற்றும் சிறுதெய்வங்களின் பெயர்களை கூறி வர்ணிப்பதும் உண்டு. அப்போது பூசாரி கைகளில் சாட்டையை வைத்து பக்தர்களின் கைகளை நோக்கி சுழற்றி அடிப்பார். இதன்மூலம் தங்களின் மீதுள்ள தீயசக்திகளும், பாவங்களும் நீங்கும் என்பது இம்மக்களின் மிகப்பெரிய நம்பிக்கையாகும்.

முடிவுரை:

சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றம், மக்களின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவதாகவும் அடிப்படைத் தேவைகளைக் கொண்டு அச்சத்தின் காரணமாகவும் பல உயிரினங்களை வழிபட்ட செயலே சிறுதெய்வ வழிபாடானதாகும். நாட்டார் இன மக்கள் பெருந்தெய்வ வழிபாட்டைத் தவிர்க்கும் ஆகம விதியினைப் பின்பற்றாமல் மக்கள் வாழ்விற்கு ஏற்ப மரபினையும் பின்பற்றுகின்றனர். தமக்கு மேலான ஒரு சக்தி உள்ளதாகவும் அதுவே தம்மை அனைத்துவிதமான இன்னல்களிலிருந்தும் காக்கிறது. என்பது மக்களின் ஆணித்தனமான நம்பிக்கை அதையே இன்றளவும் மரபாக மக்கள் கடைபிடித்து வருகின்றனர்.

Koviloor Digital Library

இராமேசுவரம் ஸ்ரீ இராமநாதசுவாமி கோவில் திருவிழாக்கள்

முனைவர் வாகை மு பாண்டியன்
உதவி பேராசிரியர் வரலாற்றுத்துறை,
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவுக் கல்லூரி,
கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.

முன்னுரை:-

புகழ்பெற்ற இதிகாசமான இராமாயணத்தோடு தொடர்புடைய தலமாக இராமேசுவரம் விளங்குகிறது. இலங்கைக்கு இங்கிருந்து இராமனின் ஆணையின் பேரில் வானரசேனைகள் சேது என்ற பாலத்தினை அமைத்தன. இலங்கைக்கு இராமன் செல்வதற்கு முன்பாக சேதுக்கரையில் சிவனை வழிபட்டுச் சென்றான் என்று இராமாயணம் கூறுகிறது.

இடைக்காலத்தினைச் சார்ந்த மற்றொரு நூலான அத்தியாத்ராமாயணம் சேதுவின் (பாலம்) தொடக்கத்திலுள்ள இராமேஸ்வரத்தில் (இராமேசுவரர்) என்ற சிவனது வடிவத்தைப் பிரதிஷ்டை செய்து இராமன் வழிபட்டான் என்கிறது. அதன் பின்னர் கங்கையிலிருந்து புனிதநீர் கொண்டுவந்து இராமலிங்கத்தினை நீராட்டி வழிபடுகின்றவர்களின் பாவம் தீர்ந்து முக்தியும் அடைவர் என்று உலகத்தினர் அனைவருக்கும் இராமன் அறிவித்ததாகவும் அத்தியாத்மராமாயம் கூறுகிறது.

தமிழ்நாட்டில் கிடைக்கும் இலக்கியங்களில், கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர், ஞானசம்பந்தர் ஆகியோரின் தேவாரத்திலேயே முதன்முதலில் இராமேசுவரம் கோயில் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

மதுரையை ஆண்ட நாயக்கர் ஆட்சியில் இராமேசுவரம் இருந்தது. இப்பகுதியில் இருந்த சேதுபதிகள் மதுரை நாயக்கர்களுக்குக் கட்டுப்பட்டு இராமேசுவரத்தைக் காத்து வந்தனர். மதுரை நாயக்கர் ஆட்சியில் இராமேசுவரம் பல வளர்ச்சிகளைக் கண்டது.

Koviloor Digital Library

திருமலைநாயக்கர் தொடங்கிய இரண்டாம் பிரகாரத்தின் தென்பகுதியை முடித்து வைத்தவர் திருமலைசேதுபதி ஆவார்.

கி.பி. 1713 இல் விஜயரகுநாதசேதுபதி (கி.பி.1710 - 1720) கோவிலுக்குள் நடத்திவந்த அன்னதானச் சாலைக்காகச் சில இடங்களை அளித்தார். கி.பி. 1714 இல் விளத்தூர் சமஞ்சூர் சின்னத் தொண்டி முதலிய ஊர்களையும் மேலும் சில ஊர்களின் நிலங்களையும் இராமநாதசுவாமி கோயிலுக்கு அளித்தார்.

விஜயரகுநாதசேதுபதி (கி.ப்பி.1729-3.5) மிகவும் மதிப்பு வாய்ந்த அறக்கொடைகளைக் கோயிலுக்கு அளித்தார். கீழக்கரை, திருப்புல்லாணி, திருவுத்திரகோசமங்கை முதலியஊர்களையும் கோயிலுக்குக் கொடுத்தார் 180 கி.பி.1733 இல் தானமாகத் தந்தார்.

இராமேசுவரம் கோயிலுக்குச் சிவகங்கைப் பகுதியில் இருந்த இல்லக்கல்வனேரி, மாயவாரி, கண்டுகொண்டமாணிக்கம், சம்பந்தனேந்தல், முத்துராமலிங்கபுரம், புள்ளங்குடி, புதுவயல், அன்னவாசல், முதலிய ஊர்கள் கி.பி.1750 இல், விஜயகோபால் சேதுபதியால் அளிக்கப்பட்டன.

இராமசாமிசேதுபதி (கி.ப. 1829-30) இராமேசுவரம் கோயிலுக்கு அதிக அளவு அறக்கொடைகள் அளித்தார். மீண்டும் கி.பி.1846 வரை சேதுபதி வரலாற்றில் பின்னடைவு ஏற்பட்டது. பொன்னுச்சாமித்தேவர் (கி.பி. 1862 -73) இராமேசுவரம் செல்லும் பக்தர்களுக்கு வழிப்பறி, கொள்ளை போன்ற தொல்லைகளிலிருந்து பாதுகாப்பு அளித்தார்.

திருவிழாக்கள்

இந்துக் கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறுவது என்பது பொதுவானதும் இயல்பானதும் ஆகும். திருவிழாக்காலங்களில் இறைவன் இறைவியரது திருமேனிகளை நகரின் நான்கு முக்கிய தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்வது முக்கிய நிகழ்ச்சியாக் கருதப்படுகின்றது. இத்தருணத்தில் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் இத்திருவிழாவினைக் கண்டுகளிக்க வருவது வழக்கம். இதன்பால் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஒன்றுகூடவும் திருமணங்கள் பேசி முடிக்கவும் வழி ஏற்படுகின்றது. உதாரணமாக விருதுநகர் மாரியம்மன் கோயில் திருவிழாவின்போது

Koviloor Digital Library

பெண்பார்த்தல் எனும் சடங்கு இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இத்திருவிழாக்கள் தச்சர்களுக்கும், ஓவியர்களுக்கும், ஆசாரியருக்கும், கலைஞர்களுக்கும், மாலை செய்வோருக்கும் இன்ன பிறருக்கும் வேலைவாய்ப்பினைக் கொடுப்பதோடு, வியாபாரிகளுக்குக் கணிசமான வருவாயைத் தேடித் தருகின்றன.

இராமேசுவரம் கோயிலில் காலந்தோறும் திருவிழாக்கள் நடத்தப் பெறுகின்றன. அவை சைவரையும், வைணவரையும் ஈர்க்கின்றன. திருவிழாக்காலங்களில் இத்தீவு முழுவதுமே வியாபார மையமாகச் நடைபெறுகின்றது.

பிரதோச பூசை

ஒவ்வொரு தமிழ் மாதமும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை இராமநாதரின் பொன் திருமேனி மூன்றாவது பிராகராத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இதற்குப் பொன்னாலான ரிஷபவாகனம் பயன்படுத்தப்படும். இது மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை நடைபெறும். இந்தப் பிரதோசபூசை திரயோதசி திதியின் முடிவில் தொடங்கி சதுர்த்தி திதியின் தொடக்கம் வரை நடத்தப்பெறுகின்றது. இவ்விழா சிவபெருமானுக்கும் நந்திக்கும் நடைபெறும். இச்சமயம் சிவபெருமானை வழிபட்டால் துன்பம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது.

மாதத் திருநாட்கள்

ஒவ்வொரு தமிழ் மாத்த்திலும் வரும் கார்த்திகை நட்சத்திர தினத்தன்று (கார்த்திகை நட்சத்திரம் சுப்பிரமணியரின் பிறப்பு நட்சத்திரமாகும்) சுப்பிரமணியரின் திருவுருவம், அவரது மயில் வாகனத்தில் இரவு 9 மணி முதல் 10 மணிவரை ஊர்வலமாக நான்கு இதர வீதிகளிலும் எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ்க் கார்த்திகை மாதம் வரும் திருக்கார்த்திகைத் திருநாள், ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக்க் கொண்டாடப்படுகின்றது. இந்நாள் குறைகளைத் தீர்க்கும்படி எமதேவனை வணங்குவதற்கு உகந்த நாளாகும்.

ஆண்டுத் திருவிழாக்கள்

ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்களில் குறிப்பிடத் தக்கவை மகாவிசராத்திரி விழா, இராமலிங்கப் பிரதிண்டை விழா, ஆடித் திருக்கல்யாண விழா, நவராத்திரி விழா

Koviloor Digital Library

போன்றவையாகும். தவிர வசந்த உற்சவம், கந்த சஷ்டி உற்சவம் மற்றும் ஆருத்ராதரிசனம் போன்ற விழாக்களும் இராமேசுவரத்தில் நடத்தப்படுகின்றன.

மகாசிவராத்திரி

மகாசிவராத்திரி என்பது சிவபெருமானின் சிறப்புவாய்ந்த இரவு என்பதாகும். இந்த நாளில் தான் தேவர்களாலும் அசுரர்களாலும் திருப்பாற்கடலில் அமுதல் வேண்டிக் கடைந்தபோது உண்டான விசத்தைச் சிவபெருமான் உண்டார். தேவர்களைக் காப்பதற்கே அவர் அவ்வாறு செய்தார். இதனைக் கொண்டாடும் இத்திருவிழா தமிழ் மாசி மாதம் (பிப்ரவரி மார்ச்) நடைபெறும். இவ்விழா பௌர்ணமிக்கு அடுத்த ஆறாவது நாள் தொடங்கி அமாவாசை அன்று முடிவடைகின்றது.

இத்திருவிழா அனைத்து முக்கிய சிவன் கோயில்களிலும் நடைபெறுவது வழக்கம். இருப்பினும், அவற்றில் குறிப்பிடத் தக்கவை வாரணாசி, இராமேசுவரம், மதுரை மற்றும் பிற ஜோ-திலிங்க ஸ்தலங்களாகும். பன்னிரண்டு ஜோதிலிங்கங்களும் சிவபெருமானின் அவதாரங்கள் என்று சிவபுராணம் கூறுகின்றது. இராமேசுவரத்தில் மகாசிவராத்திரி பன்னிரண்டு நாள் நடைபெறும். இது ஒன்பதாவது நாளில் களைகட்டும். இத்தருணத்தில் ரிஷபவாகனமும் வெள்ளி இரதமும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். வட இந்தியாவிலிருந்து வரும் புனிதப் பயணிகள் தனிப்பாத்திரத்தில் கங்கை நீர் கொண்டு வருவர். பல்வேறு கோயில்களில் கங்கா அபிஷேகம் நடைபெறுவது உண்டெனினும் இராமேசுவரம் கோயிலில் இது தனிச்சிறப்புப் பெற்ற ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இத்திருவிழா அமாவாசையன்று தொடங்குகிறது. அன்று இரவு முழுவதும் பால், தயிர் வெண்ணெய் மற்றும் தேன் கொண்டு மூன்று மணி நேரத்திற்கொன்றாக நான்கு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

திருக்கல்யாண விழா

திருக்கல்யாண விழா ஆடி மாதம் (ஜுலை - ஆகஸ்டு) நடைபெறும். இது நெடுந்தூரத்திலிருந்து வரும் பயணிகளையும்

Koviloor Digital Library

கவரும் தெய்வீகத் திருமணக் காட்சியாகும். இந்த விழா நாட்களில் வேதபாராயணம் நடைபெறும். கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இத்திருவிழாவை விஜயரகுநாத சேதுபதி தொடங்கி வைத்ததாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இத்திருவிழாக்காலத்தில் மேற்குக் கோபுர மண்டபத்திலிருக்கும் அவரது சிலைக்கு மரியாதை நடைபெறும்.

நவராத்திரி விழா

புரட்டாசி மாதம் வரும் ஒன்பது முக்கிய இரவுகளைக் கொண்டாடுவது கோயில்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இது பார்வதி அசுரனுடன் போர் தொடங்கும் நிகழ்ச்சி-யிலிருந்து ஆரம்பமாகும். இது தாய்த்தெய்வ வழிபாட்டோடு தொடர்புபடுத்தப் பட்டதாகும். பத்து நாட்கள் நடைபெறும் இவ்விழா நடத்துவதற்காக சங்கர குருக்களுக்கும் அவரது துணையாளர்களுக்கும் இரகுநாத சேதுபதி காத்தத்தேவர் கொடையளித்தார்.

முடிவுரை:

பூசைகளும் விழாக்களும் பற்றிய இக்கட்டுரையின் மூலம் இராமேசுவரம் ஆண்டு முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டிருப்பதை உணரமுடிகிறது. வெள்ளிக்கிழமை விழாவும், இராமலிங்க பிரதிஷ்டையும் தலபுராணத்தின் அடிப்படையில் ஏற்பட்டவையாகும். திருவிழாக்களும், நித்திய பூசையும் இங்கு முறைப்படி திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.

துணை நூற்பட்டியல்

1. A Topographical List of the Inscriptions - Rangachariya V., of the modras Presidency (Collected till 1915)
2. Travancore inscriptions - Vasudeva Poduva R,Topographical List
3. .Historical Inscriptions of - Krishnasawmy Iyengar South India Collected till 1925
4. இராமப்பையன் அம்மானை – தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையம் தஞ்சாவூர் 1978
5. தேவாரம் (ஏழு திருமுறைகள்) – தருமபுர ஆதினம், தருமபுரம்

Koviloor Digital Library

மந்திரகிரி வேலாயுத சுவாமி தலவரலாறு

திருமிகு. ச. விசாலாட்சி
முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 6.

முன்னுரை

நம் தென் தமிழ்நாடு என்னும் கொங்கு வள நன் நாட்டில் தெய்வ மணம் கமழும் திருத்தலங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் தென்சேரிகிரி மலையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அருள்மிகு மந்திரகிரி வேலாயுத சுவாமி திருக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மும்மை சிறப்பு அமைந்த திருத்தலம் ஆகும்.

தெய்வத்தமிழ் முனிவர்களான அருணகிரிநாதர் மற்றும் நக்கீரரால் பாடல் பெற்ற சிறப்புடையது. கொங்கு வள நன்னாட்டில் கோயமுத்தூர் மாவட்டத்தில் பல்லடம், வட்டத்தில் தென்சேரிகிரி என்னும் திருப்புகழில் அருணகிரி நாதரால் பாடல் பெற்ற திருத்தலம். தென்சேரி மலை செஞ் சேரிமலை என்று வழங்கலாயிற்று. பொள்ளாச்சி பல்லடம் ராஜபாதையில் பொள்ளாச்சியில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும் பல்லடத்தில் இருந்து 12 கிலோ மீட்டர் தூரத்திலும் சுல்தான் பேட்டையில் இருந்து 5 கிலோமீட்டர் தெற்குத்திசையில் இரு குன்றுகள் தோன்றும். ஒரு குன்று தென்சேரிமலை மற்றொன்று சின்னமலை. சின்னமலையில் சுந்தரராஜப் பெருமாள் திருமலைசாமி வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். தென்சேரிமலையில் குன்றுதோறும் குமரக்கடவுள் பன்னிரெண்டு கரங்களுடன் ஆறுமுகங்களுடன் வள்ளி தேவ சேனாதிபதியாக நின்று அருள்பாலிக்கிறார். இத்திருக்கோயிலின் தலவரலாற்றைப் பற்றி எடுத்துக் கூறும் படியாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திருக்கோயில்

செஞ்சேரிமலை அருள்மிகு மந்திரகிரி வேலாயுத சுவாமி

Koviloor Digital Library

திருக்கோயில். கல்வெட்டுகளிலிருந்து இவ்வாலயம் கரிகாலச் சோழனால் கட்டப்பட்டது என அறிகிறோம். பின்னர் மைசூர் ஹோய்சால மன்னர் மூன்றாம் வீர பல்லாலா என்பவரால் திருப்பணி செய்யப்பட்டது என்றும் அறியமுடிகிறது.

மூலவர்

அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசுவாமி வள்ளி தேவசேனையுடன் சண்முகர் பன்னிரெண்டு கரங்களுடன் சுமார் 5 அடி உயரத்தில் கம்பீரத்தோற்றத்துடன் காட்சி அளிக்கிறார்.

மற்ற மூலவர்கள்

ஸ்ரீ பாத விநாயகர், ஸ்ரீ தண்டபாணி, சந்தனகணபதி, ஸ்ரீ விநாயகர் அருள்மிகு கைலாச நாதர்,அருள்மிகு பெரிய நாயகி அம்மன்,அருள்மிகு மகாவிஷ்ணு, உற்சவர்கள் ஸ்ரீ முத்து குமார சுவாமி வள்ளி தேவசேனுவுடன், ஸ்ரீ நடராஜர் சிவகாமி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமி, ஸ்ரீ மாணிக்கவாசகர், ஸ்ரீ விநாயகர், வீரபாகுவதர், அஸ்ததேவர், தனி அம்பாள் சந்திரசேகரர், தஷிணாமூர்த்தி, சண்டிகேசுவரர், சிவதுர்க்கை, நவநாயகர்கள், துவாக கணபதி, பைரவர், கன்னிமார், இடும்பர், குழந்தை வேடவர் மற்ற மூலவராகக் காட்சி தருகின்றனர் .

தல விருட்சம்

முன்பு பேரில்லாமரம் என்றும், தற்பொழுது கருநொச்சி தல விருட்சமாக உள்ளது. இது மிகுந்த மருத்துவக் குணம் உடையது.

தென்சேரிகிரித் தலமும் இருப்பிடமும்

"தென்சேரி கிரியில் வளர் பெருமானே" என்றும் தலபுராணத்தில் "தென்சேரி நகர்குகனே" எனவும் வழங்குகிறது. தற்போது செஞ்சேரிமலை என்று வழங்கப்பெறுகிறது.

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம் சுல்தான் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தென்சேரிமலை திருக்கோயில் மலப்பாளையம் ஊராட்சியில் மத்தியில் 150 அடி உயரக்குன்றின்மேல் மதில்களால் சூலப்பெற்றிருக்கும் மிக அழகான தோற்றத்துடன் அற்புதமான கோபுரங்ளுடன் காட்சி

Koviloor Digital Library

அளிக்கிறது.

கிழக்குபார்த்த சந்நிதி அடிவாரம் அகன்ற நுழைவு வாயிலை கடந்து நமக்கு முதலில் காட்சி அளிப்பவர் பாத விநாயகர் சுமார் 8 அடி உயரமுடைய கம்பீரமான பாத விநாயகப் பெருமானை வணங்கி வலமாக வந்து இடதுபுரம் தெண்டபாணிபழனி ஆண்டவர் கோலத்துடன் காட்சி அளிக்கிறார். அவரை வணங்கி சந்தகணபதியை தரிசித்துப் படிவழியாக சுமார் 208 படிகளைக் கடந்து பாறையில் குழந்தை வடிவேலர் சந்நதி இடும்பர் சந்நதி சப்த கன்னிமார்கள் சந்நதிகளை வணங்கினால் பின்பு சைலோதகம் என்னும் ஞான தீர்த்த சுனையைப் பார்க்கலாம்.

இச்சுனை நீர் அருமை வாய்ந்த தண்ணீர் இனிமை வாய்ந்தது. மனநோயாளிகளை இச்சுனைநீரை எடுத்து குளித்து மலை (கிரி வலம் வந்தும் சுவாமிக்குப் படைக்ககூடிய நெய்வேத்தியத்தை உப்பு காரம் இன்றி சுவாமிக்கு அபிடேகமான பஞ்சாமிர்தத்தைக் கலந்து சாப்பிட்டால் நோய்கள் குணமாவது உறுதி என்று இன்றும் நம்புகின்றனர். சுனையைத் தரிசித்து விட்டு வந்தால் வடபுறம் சரஸ்வதி தீர்த்தம் பிரம்ம காணச்சுனை இவைகளை பார்த்துவிட்டு 25 படிகள் மேலே சென்று வடக்கு வாசல் வழியாக உள்ளே நுழைந்து கிழக்கு முகமாகச் சென்றால் பிரகாரத்தை அடையலாம். அங்கு அருண கிரியார் தென்சேரி கிரிப் பாடலில் குறிப்பிட்டது போன்று("சிங்காரச் செம்பொன் திளதலங்கார சந்திர கலை தவழ் தென்சேரி குன்றில் இனிதுறை பெருமானாகிய மந்திரகிரி வேலவரையும் வெண்கொடியும் விதானமும்") அமைந்திருக்கும். பிரகாரத்தில் தெட்சினா மூர்த்தி சண்டிகேஸ்வரர் சிவதுர்க்கை நவக்கிரகம், சூரியன் நடுவில் விற்றிருக்க சூரியனை பார்த்தபடி மற்றகிரகங்கள் இருப்பது இத்தல விசேஷம் இது ஆகமப் பிரதிட்டை (மற்ற இடங்களில் உள்ள நவக்கிரகங்கள் வைதீகப்பிரதிட்டை) என வழங்கப்பெறும்.

இத்திருக்கோயிலில் வாயுதிசையில் மலையில் பெரிய கதவு களுக்கு இடையே சுமார் 1/2 கிலோ மீட்டர் தொலைவிற்கு கீழ் இருந்து மலைக்கு வர தார் சாலைகள் அமைந்துள்ளது. இதனை குமாரபாளையம் நடைவீடு த.வேல்சாமிகவுண்டர் அவர்கள் குடும்பத்தார் சுமார் 2 லட்சம் செலவில் மலைபாதை அமைத்துக்

Koviloor Digital Library

கொடுத்துள்ளார்கள். பின் பிரதான தென்புறம் பெரிய நுழைவு வாயிலைகடந்து 90 * 40 அடி மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றவுடன் கணபதி சந்நிதி கிழக்குமுகமாக உள்ளார்.

அவரை வணங்கி கைலாசநாதர் பெரியநாயகி அம்மன் முத்துக்குமார் மகா விஷ்ணு சந்நதிகளை கடந்து ஒராறு முகமும் ஈராறு கரமும் உடைய தென்சேரிகிரிப் பெருமான் மந்திரகிரி வேலவரை தரிக்கிறோம். அருமையாக வடித்தெடுத்த சண்முகர் வள்ளி தேவசேனையுடன் கிழக்கு நோக்கி நின்ற வடிவில் மயில் வாகனத்துடன் நமக்கு காட்சி அளிக்கும் செஞ்சேவற் கையுடைய செஞ்சேரிகிரி சண்முக பெருமான் காட்சி அளிக்கிறார். அழகிய வேலாயுதம், சேவற்கொடியுடன் நம்மை காக்கும் கடவுளாக தென்படுவது நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

தலபுராணம்

சிவபெருமான் கையிலாயத்தில் வீற்றிருந்தபொழுது பார்வதி தேவியார் சிவனிடத்தில் சூரன் மாயையின் மைந்தன், மாயாஜாலங்களில் வல்லவன், அபார தவம் இருந்து சாகா வரம் பெற்றவன். நம் இளம்பாலகனான முருகப் பெருமான் அற்புத சக்தி வாய்ந்தவனை எங்ஙனம் வெல்ல முடியும். என்னும் அச்சத்தை சிவபெருமானிடம் தெரிவித்தாள். சிவபெருமான் என்னால் உருவாக்கப்பட்ட என் வடிவுடைய தென்சேரிகிரியில் முருகனுக்கு என்னால் மந்திரம் தீட்சை உபதேசிக்கப்பெற்று, அம் மந்திர தீட்சை உபதேசத்தில் சூரனின் மாயா சக்தி இழந்து விடும் பின் முருகப் பெருமான் சூரனை எளிதில் வெல்லமுடியும் என கூறினார். தென்சேரிமலைவந்து இந்திரன் முதலிய தேவர்கள் மந்தாரம் முதலிய நறுமண மலர்காளால் ஆசனம் அமைக்க முருகப் பெருமான் தென்சேரிமலையில் தவமிருந்து தீட்சை மந்திரம் உபதேசம் பெற்ற பின் திருச்செந்தில் சேவகனாக திருச்செந்தூரில் சம்ஹாரம் செய்து சூரனை வென்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இத்திருக்கோயில் தலபுராணம் நந்தி தேவர் மார்க்கண்டேய முனிவருக்கு வடமொழியில் சொன்னதாகவும் அம்மையப்பா என்னும் பெயரினார் தென்சேரிகிரி தலபுராணத்தை எழுதிப் பெயரிட்டதாகவும் ஒலைசுவடிகளில் இருந்து தெரியவருகிறது.

தீர்த்தம்

Koviloor Digital Library

அகத்திய மாமுனிவரால் முருகப்பெருமானிடம் பெற்ற தீர்த்தமே சைலோதசம். நான் தீர்த்த சுனை மனகவலை மனநோய் தீர்க்க வல்ல சிறப்புடையது. சரஸ்வதி, லட்சுமி, பிரம்ம , காணாச்சுனை தீர்த்தங்கள் உள்ளன. அருகில் உள்ள கிராமங்களில் உள்ள கோயில்களுக்கும் தீர்த்தம் முத்திரித்து அருள்வேண்டி அங்கு அபிடேகம் செய்கிறார்கள். அவைகளாவன,

1. சைலோதகம் (நான தீர்த்தம் அனை)
2. சரஸ்வதி தீர்த்தம் (வட்டசுனை)
3. லட்சுமி தீர்த்தம் (தர்கைசுனை)
4. பிரம்ம தீர்த்தம் (மேட்டுச்சுனை)
5. காணாச்சுனை (கண்ணாடி சுனை அரை சந்திரன் வடிவில் அமைந்துள்ளது.)

வழிபட்டோர்

சூரிய தேவர், சரஸ்வதி, இந்திரன் முதலிய தேவர்கள் வழிபட்டனர். நக்கீரர், அருணகிரி நாதர் முதலியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டு திருப்புகழ் முதலிய தெய்வத்திருமறைகள் தந்துள்ளனர். தந்தை தாய் சொல்லைத் தட்டி நடப்போரும் அறத்தை அழித்தோரும். பொய் சொன்னபாதகரும் குழந்தைக் கருவு அழித்தோரும் கற்புடைய கனியைப் பறித்தோரும் அகிலம் சிறக்க துறவியின் தவத்தைக் கலைப்போரும் மறையோர்க்கு துன்பம் செய்தோரும் ஆவினுக்கு அழிவுசெய்தவரும் இம்மலையைக் கிரிவலம் வந்து மந்திராசல பதியை தெரிசித்தால் நிச்சயம் முக்தி பெறுவர்.

இத்தல மகிமையைப் புகல்வோரும், அன்பாகக் கேட்போரும் இவ்வுலகில் பாவங்கள் நீங்கிப் பெருவாழ்வுடனும், செல்வச் சிறப்புடனும் வாழ்வார். மேலும் அவர்கள் வறுமையிலும் கந்த வெற்பில் முருகப் பெருமானது அடியார்கள் குழுவில் கலந்து மகிழ்ந்தால் கந்தப் பெருமானுடைய சுழல் நிழல் புகுவர் என்பது நிச்சயம்.

சமயப்பணிகள்

இத்தலத்தில் புகழ் மிக்க நாதஸ்வர கலைஞர்கள் பலர் வாழ்ந்தார்கள் ஆகம சாஸ்த்திரத்தில் விற்பனர்களான

Koviloor Digital Library

ஈசானசிவாச்சாரியார் பழனி அவர்கள் இத்தலவரலாறு நேபாளத்தில் உள்ள நூலகத்தில் பார்த்தும் அதனை இத்திருக்கோயிலின் முன்னாள் ஸ்தானிகர் சிவத்திரு. ஷி.கல்யாண சுப்பிரமண்ய சிவாச்சாரியார் பெற்றுவந்து முந்தைய தமிழ் நாடு அண்ணாமலை பல்கலைக்கழகத் தமிழ் ரீடர் ஆ.அருணாசலம் பிள்ளை அவர்கள் திருத்திக்கொடுத்து அச்சேற்றப்பட்டது என்று கூறுகின்றனர்.

சுற்றுக் கோயில்கள்

இத்தலத்தின் மேற்கில் சின்னமலை எனவழங்கும் சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலும், ஈசான திக்கில் காவல் கடவுளாம் மாகாளியம்மன் ஆலயமும், கிழக்கில் 5 கல் தொலைவில் ஜே. கிருஷ்ணாபுரம் கல்யாண வெங்கட்ரணம சுவாமி ஆலயமும், அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சித்தர்வாழ் குகைநாதர் கோயிலும், திருநாவுக்கரசு நத்தவமைடாலயமும் இத்திருக்கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது.

திருவிழாக்கள்

ஒவ்வொருமாத அமாவாசை பெருந்திரன் கூடும் கிருத்திகை சஷ்டி பிரதோஷம் சங்கடகர சதுர்த்தி மாத வருட விவேஷங்கள் சிறப்பாக நடைபெறுகிறது. தைப்பூசம் 10 நாட்கள் சுவாமி அடிவாரம் வந்து கவுண்டர்கள் மண்டபத்தில் தங்கி காலை மாலை திருவீதி உலா கல்யாண உற்சவம் திருத்தேர் வடம் பிடித்து நிறுத்துதல் தெரிசன மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. தைப்பூசத் திருவிழாவும் தைப்பூசத் திருவிழா. சூரசம்ஹாரமும் முக்கியமானவையாகும்.

திருப்பணிகள்

1963 -ல் தொடங்கி விநாயகர் கைலாசநாதர் மகாவிஷ்ணு பெரியநாயகி உற்சவர் முன்மண்டபம் திருப்பணிகள் செய்யப்பட்டது. பின் 1980-ல் சிரவை ஆதினம் தவத்திரு.சுந்தர சுவாமிகள் தலைமையில் அறப்பணிக்குழு என்ற அமைப்பின் மூலம் முன்மண்டபத்திருப்பணியும் கோவை சாயிபாபா காலனியை சேர்ந்த திரு.டி.தண்டபாணி அவர்களால் வஸந்த மண்டபத்திருப்பணியும் செய்விக்கப்பட்டுக் குமாரபாளையம் நடை வீடு றி. வேல்சாமிக்கவுண்டர் குடும்பத்தினரால்

Koviloor Digital Library

மலைப்பாதை அமைக்கப்பட்டது. பக்தர்கள் பேருதவியால் 1.4.1991-ல் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. தவத்திரு. சுந்தரசுவாமிகள் தேர்திருப்பணியை துவக்கி வைக்க அறப்பணிக் குழுவின் உதவியால் 5.11.1993-ல் 18 அடி உயரமுள்ள மரசிற்பத்தேர் சுமார் 12 லட்சம் மதிப்பில் செய்யப்பட்டது.

நிர்வாகம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் செயல் அலுவர் அறங்காவலர் குழுவின் நிர்வாகத்தில் செயல்பட்டு வருகிறது.

நித்திய பூசைகளும் சிறப்பு பூசைகளும்

காலை	7.00	மணிக்கு	நடை திறப்பு
காலை	9.00	மணிக்கு	காலசந்தி
பகல்	12.00	மணிக்கு	உச்சிக்காலம்
பகல்	12.30	மணிக்கு	நடை திருக்காப்பு
மாலை	4.30	மணிக்கு	நடை திறப்பு
மாலை	6.00	மணிக்கு	சாயரட்சை
இரவு	7.00	மணிக்கு	அர்த்தஜாமம்
இரவு	7.15	மணிக்கு நடை	திருக்காப்பு

பிரதி வெள்ளிக்கிழமைகள் விசேஷ பூசைகளும் மாத சுக்கில சஷ்டி, கிருத்திகை அபிஷேக ஆராதனைகள், மாலை 6 மணிக்கு கிருத்திகை தினத்தில் சுவாமி மலைமேல் திருஉலாவும் நடைபெறுகிறது. சித்திரை வருடப்பிறப்பு சித்திரை பௌர்ணமி சித்திரை திருவோணம் நடராஜர் அபிசேகம், சித்திரை சதயம், திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை, சித்திரை பின் ஏழு, வைகாசி முன்னேழு அக்னி நட்சத்திரத்தில் வைகாசி விசாகம் ஆலய குருத்துவரால் செய்யப்படுகிறது.

வைகாசி பால்குட அபிசேகம் சிறப்புற நடைபெறுகிறது. வைகாசி மூலம் திருஞானசம்பந்தர் குருபூசை ஆனி திருமஞ் சனம், நடராஜர் அபிசேகமும் ஆனி மகம் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி குருபூசையும், ஆடி சுக்கிரவாரம் ஆடி அமாவாசை ஆடிப்புரம் ஆடி 18 - ம் பெருக்கு கொங்குசெட்டியார் சமூகம் லட்சுமிநாயக்கன்பாளையம் அவர்களால் நடத்தப்படுகிறது. ஆடிசுவாதி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமி குருபூசை ஆவணி விநாயகர்

Koviloor Digital Library

சதுர்த்தி விழாவும் ஆவணி அவிட்டம் ஆவணி சிராவணம் நடராஜர் அபிசேகமும், புரட்டாசி நடராஜர் அபிசேகமும் நவராத்திரி அம்புசேர்வை சரஸ்வதிபூசை விஜயதசமியும், ஐப்பசி பிரதமை முதல் சப்தமி வரை ஷி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களாலும் ஐப்பசி பௌர்ணமி அன்று கந்தர்சஷ்டி சூரசம்ஹாரம் திருக்கல்யாணம் நடராஜர் கார்த்திகை தீபோஸ்சவம் மார்கழி தனுர்மாதம் 30 நாட்கள் திருவெம்பாவை திருப்புர் ஷி.ழி. சாந்தலிங்கச் செட்டியார் திருவாதிரை உற்சவமும் நடைபெறுகிறது.

மகர சரங்கராந்தி பொங்கல் பண்டிகை தைப்பபூசத் தேர்த்திருவிழா தேரோட்டம் 10 நாட்கள் சிறப்புற நடைபெறுகிறது. மாசிமகம் மாசி நடராஜர் அபிஷேகம் மகாசிவராத்திரி பங்குனி உத்திரம் ஆலய ஸ்தானீகர் ஷி.ரி. நடராஜக்குருக்கள் அவர்களாள் சிறப்புற நடைபெறுகிறது.

காணிக்கைகள்

இத்திருக்கோயில் முக்கிய வருமானம் கட்டணச் சீட்டுகள் மற்றும் உண்டியல் வருவாய் மட்டும் தான். இவ்வாலயத்தில் பூக்கேட்டல் என்ற ஒரு வழக்கம் நிலவி வருகிறது. பக்தர்கள் இறைவனின் பனிரெண்டு கைகளில் ஏதாவது இரண்டை தேர்ந்தெடுத்து (வலது ஒன்றும், இடது ஒன்றுமாக) அவற்றில் பூ வைக்கின்றனர். ஐந்து நிமிடங்களில் வலக்கரத்தில் இருந்து மலர் விழுமாயின் நினைத்த காரியம் கைகூடும் என்றும், இடக்கரத்தில் இருந்து விழுமாயின் நிறைவேறாது என்றும் அறிகின்றனர். காலம் கடந்தும் விழவில்லை எனில் காலதாமதம் ஆகும் என்றும் கூறப்படுகிறது.

திருக்கோயிலை வணங்கும் முறை

திருக்கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் நீராடி, தோய்ந்துலர்ந்த ஆடைகளை அணிந்து, இறைவன் புகழை மனத்தில் எண்ணி செல்லுதல் வேண்டும். முதலில் மலை அடிவாரம் பிரணவ பொருளாம் சகல காரியங்களையும் முட்டின்றி முடித்துவைப்பவரும் மூத்த பிள்ளையார் ஆகிய ஸ்ரீ பாதவிநாயகப் பெருமானை மும்முறை குட்டிக் கும்பிட்டு, உலக சம்பந்தமான

Koviloor Digital Library

அஞ்ஞான எண்ணங்கள் நீங்கி மெஞ்ஞான எண்ணங்கள் நினைத்து மலைமேல் சென்று புராணத்தல புகழ்ந்து கூறிய திவ்ய தீர்த்தமாகிய சைலோதசத்தை வணங்கி சிரசில் தெளிந்து கொள்ள வேண்டும்.

ஆலயத்தை அடைந்து முதலில் விமானம் பின் பலிபீடம், கொடிமரம், நந்தியெம் பெருமான் இவர்களுக்கருகே சாஷ்டாங்கமாக மும்முறை விழுந்து வணங்கி திருக்கோயிலை மும்முறை வலவந்து நந்தியம் பெருமானிடத்தும் துவாலபால கரிடத்தும் அனுமதி பெற்று உட்செல்ல வேண்டும். முதலில் விநாயகர் கைலாச நாதர் பெரியநாயகி மந்திராசல வேலவராகிய அருமுதத்தன்னாலை வணங்கி நடராஜர் முத்துக் குமார் மகா விஷ்ணு சமயசாரியார்களை வணங்கி பின் தெஷ்ணா மூர்த்தி சண்டிகேஸ்வரர் வணங்கி சிவதுர்க்கை நவநாயகர்கள் கொடிமரம் பலிபீடம் நந்தியெம் பெருமான் இவர்களையும் வணங்கி மும்முறை நமஸ்கரித்து அமர்ந்து பஞ்சாஷரம் சடாசரம் இயன்ற வாரு ஜெபித்து இறுதியாக கால பைரவரை வணங்கி இல்லம் அடைதல் வேண்டும். இம்முறைப்படி வணங்கும் அன்பர்கள் இம்மையில் எல்லா பேறுகளையும் பெற்று மறுமையில் சிவகுஹப் பேரீன்பம் பெறுவாழ்வு வாழ்வார்கள் என்பது திண்ணம்.

தென்சேரிகிரி அமைப்பும் அத்தலம் பற்றிய விபரங்களும்

தென்சேரிகிரி, மந்திரகிரி என்ற இத்தலத்தின் பெயர்கள் தற்காலம் செஞ்சேரிமலை மலையடிப்பாளையம் என மருவி வழங்கிவருகின்றன. மேலும் இத்தலத்திருப்புகழில் செஞ்சேவற் செங்கையுடைய சண்முகதேவே என்று அருணகிரியார் ஆறு முகத்திறைவனைப்பாடிப் புகழ்ந்தபடி பன்னிருகைகளில் அன்பின் ஒரு கையில் சேவலைக் கொண்டுள்ளார். கயிலாயத்தில் அன்பின் திருவுருவாம் முருகன் பரமனையும் பார்வதியையும் வலம் வந்த காட்சியாக மயிலின் தலைப் பக்கம் வடக்கு நோக்கியும் மயிலின் முன்நின்ற காட்சி ஆகவும் இத்தலத்தில் இருக்கின்றார்.

இம்மலையின் மீதுள்ளதும், வடக்கு நோக்கிய மயிலால் கட்டிக் காண்பிக்கப்படுவதுமான சுனைகள் பலவுள்ளன. இச்சுனைகள் அருணகிரி, நக்கீராதி, மகான்களால் புகழ்ந்து பாடப் பெற்றன. இச்சுனைகள் வற்றாதவளமுடையதும், திவ்விய தீர்த்தம்

Koviloor Digital Library

மூழ்கினோர் பாவப்பிணியை நீக்கவல்லதும், செய்வினை பிரம்ம ஹந்தி பேய், பிசாசு, சூன்யம், பைத்தியம் முதலியவைகளில் சிக்குண்டோர் மூழ்கினால் உடனே அத்தீவணைகளை நீக்ககும் படியும் வன்மைபெற்றது. இத்தீர்த்தம் மிக்கசுவையைக் கொண்டுள்ளது. இத்தகைய எல்லாச் சிறப்பினையும் வற்றாத வளத்தினையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இவ்வருட்செல்வத்திற்குப் பண்டைநாள் தொட்டு இன்றைய நாள்வரை ஞானதீர்த்தச்சுனை என்ற திருநாமம் வழங்கிவருகிறது. மேலும் சுகாதாரத்திற்கு ஏற்றபடி கண்டார் வியப்பெய்தும்படி இச்சுனை அமைந்துள்ளது.

இங்குள்ள குகை மேற்கு நோக்கித்திறந்த அகன்ற வாயையுடைய மாபெரும் குகையாகும். இம்மந்திரகிரிக்கு மேற்கே இத்தலத்திருப்புகழ்ப்படி சிங்காரனாகிய திருமாலிக் மலையமைந்துள்ளத. அத்திருமால் மலையில் பூ, நீளா சமேத சுந்தரராஜப் பெருமாள் வீற்றிருந்து அருள் புரிகின்றார். இம்மலை விஷ்ணுமலை என்றும் சின்னமலை சிறியமலை என்றும் வழங்கிவரும் விஷ்ணுமலைக்குக்கிழக்கே பிரும்மகிரி என்னும் மலையும் ஈசானதிக்கில் குமாரபாளையம் பழையூரில் அனுமந்தராயசாமி திருக்கோயிலுமுள்ளன. இக்கோயிலுக்கு ஏராளமான நிலமானியங்கள் பண்டைய மன்னர்களால் விடப்பட்டுள்ளன. மந்திரகிரி மலையை அருணகிரியார் திருப்புகழில் புகழ்ந்து கூறும் பொழுது "சிங்காரச் செம்பொன் மதில லங்காரச் சந்திரகலை தலழ்தென்சேரிக்குன்றிலினி துறைபெருமாளே" என்று கூறியுள்ளார்.

இம்மலையின் படிகள் கட்டுப்படிகளாக அமையாது மலை-யிலேயே வெட்டப்பட்டன. 252 படிகள் அங்கு உண்டு. இத்தலம் மலையைச் சுற்றிலும் தோப்புகள் குவிந்து, அழகும், வளமும், குளிர்ச்சியும் நிறைந்திருக்கிறது. மலையைச் சுற்றிலும் நான்கு புறங்களிலும் தேரோடும் வீதிகள் அகன்றனவாகவும் 6 பர்லாங் அளவுள்ளனவாகவும் அமைந்துள்ளன.

சுவாமி மலை போல இன்னொரு மலை

தந்தைக்குத் தனயன் உபதேசித்தருளிய தலம் சுவாமி மலை சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசம் செய்து

Koviloor Digital Library

இன்பம் அருளித்தான் குமரன் இங்கு சிவபெருமான் மகிழ்ந்து முருகனை, "நீயே சுவாமி" என்று வாழ்த்தினார்.

சுவாமி மலையில் மகன் குருவாகவும் தந்தை சீடராகவும் தோன்றினர் எனில், செஞ்சேரிமலையில் தந்தை குருவாகவும், மகன் சீடராகவும் ஆகி இத்தலத்திற்கு பெரும் சிறப்பை நல்கினர். சூரபன்மனையும் அவனது கூட்டத்தினரையும் வெல்லும் பொருட்டு தோன்றியவரே வேலாயுதர். சக்தி வேலுடன் பதினொரு உருத்திரர்களையும் ஆயுதங்களாக அழித்துகந்தவேளுக்கு அருள்செய்து சூரனின் மாயாஜாலங்களிலிருந்து காக்க வேண்டுமென சிவபெருமானை வேண்டுகிறார் அம்பிகை. அருந்தவம் இயற்றிய கந்தவேளின் செவியில் மூலமந்திரத்தை மொழிந்து, சூரபன்மனை வென்று வருமாறு இறைவன் அருள் செய்தது இம்மலையில்தான். ஆதலால் இம்மலை "மந்திராச்சலம்", "மந்திரகிரி" எனப் பெயர் பெற்றது.

அகத்தியர், சாமதேவர், பிரமன், போகர், எல்லோரும் தவம் செய்த தலம் இது. அடிவாரத்திலிருந்து ஆலயத்திற்குச் செல்ல கைப்பிடி கவருடன் கூடிய படிக்கட்டுக் அமைந்துள்ளன. இவை எளிதில் ஏறக்கூடியவை, அடிவாரத்திலிருந்து மேலே வாகனங்கள் செல்வதற்காக ஓர் சாலையும் உள்ளது. இக்கோயிலில் மரப்பலகையில் எழுத்துகள் பொறிக்கப்பட்டு இருப்பது புதுமையான அம்சமாகும்.

முடிவுரை

மந்திரகிரி வேலாயுத சுவாமி திருக்கோயில் பல அற்புதக் கதைகளை உள்ளடக்கியது. திருக்கோயிலின் தல வரலாற்றின் மூலம் இத்திருத்தலத்தின் பெருமைகளையும், சிறப்புகளையும் அறிய முடிகிறது. சிவனின் அருளால் கந்தன் சூரனை வெற்றி பெற்ற விதத்தை எடுத்துக்துரைக்கும் படி இத்திருத்தலம் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

எட்டிமரத்துத் தோட்ட கருப்பண்ணசாமி

திருமிகு. உ.வினோதினி,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
அறச்சலூர், ஈரோடு மாவட்டம்

முன்னுரை:

கருப்புசாமி என்ற தெய்வம் தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. இடத்திற்கு இடம் இதன் வழிபாட்டு முறை சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றன. வரலாறும் சிறிது மாறுபட்ட முறையில் கூறப்படுகின்றது. வரலாறும் வழிபாட்டு முறையும் எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ளலாம்.

பெயர்க்காரணம்:

முன்பு இத்தோட்டம் முழுவதும் எட்டிமரங்கள் நிரைந்திருந்ததால் இத்தோட்டத்திற்கு எட்டிமரத்து தோட்டம் என்று பெயர் வந்தள்ளது. இத்தோட்டத்தில் கருப்புசாமி வீற்றிருப்பதால் இத்தோட்டப் பெயயரை முன்னொட்டாகக் கொண்டு எட்டிமரத்துத்தோட்டக் கருப்புசாமி என்று பெயர் வந்துள்ளது. எட்டிமரங்கள் இப்பொழுது முற்றிலும் அழிந்துவிட்டன. இங்கு எட்டிமரம் மட்டும் அல்லாமல் கூந்தப்பனை, பெறா போன்ற மரங்களும் ஆங்காங்கே உண்டு.

கோயில் அமைப்பு முறை:

முன்பு சுற்றிலும் கருங்கற்கள் அடுக்கப்பட்டு திறந்த நிலையில் கல்லுக்கட்டு கட்டமாக எட்டிமரம், பெறா, கூந்தபனை போன்ற மரங்கள் சூழ்ந்திருக்க கிழக்கு நோக்கி அமைந்திருந்தது. 2011 ஆண்டு புதிதாக கோயில் எழுப்பப் பட்டது. இத்திருக்கோயில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கருப்புசாமிக்கு மட்டும் சிறிதாக கருவரை அமைக்கப்பட்டுள்ளது. இதன் வலப்புறம் கன்னிமார்களுக்கென்று சிறு கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கருப்புசாமி, கன்னிமார்களுக்கு இங்கு உருவ அமைப்பு கிடையாது. கூழாங்கள் வைத்தே வழிபடுகின்றனர். கருவரைக்குப் பின்புறம் தல விருட்சமாக பெறா மரம் உள்ளது. கருவரை கன்னிமார்கள் கூடாரம் தலவிருட்சம் இவற்றைச் சுற்றி சிறிதாக மதிற்சுவர்கள் எழுப்பி வடக்கு மற்றும் கிழக்கு என்று இருதிசைகளில் வாயில்கள் அமைக்கப்பட்டு சிறியதாக கம்பிக்கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது.

வெளியே கோயிலின் வலப்புறம் மற்றொரு தலவிருட் சமான பனைமரம் அமைந்துள்ளது. கருப்புசாமிக்கு எதிர்புறம் அதன்காவலரான ஒண்டிவீரர் பெரிய வேலாகக் காட்சியளிக் கின்றார். கோயிலின் உள்ளே கருப்புசாமியை நோக்கியவாறு மக்கள் தங்கள் வேண்டுதலுக்காக வடித்துவைத்த வேல்கள் வரிசையாக நடப்பட்டுள்ளது.

கோயில் கருவறைக்கு மேல் கருப்புசாமி தலைபாகை அணிந்து, கம்பு, அரிவாள் வைத்துக் கம்பீரமாக நிற்கும் தோற்றத்துடன் கூடிய உருவம் உள்ளது. இது பார்போருக்கு அறிவிக்கும் விதமாக அமைந்தள்ளது. இக்கருப்புசாமி இவ்வூர் சாத்தந்தை குலமக்களின் காவல்தெய்மாக விளங்குகின்றார்.

கருப்புசாமி வரலாறு:

நல்லசாமி கவுண்டர் என்பவர் மயிலாடியைச் சார்ந்த சாத்தந்தை குலத்தவர். அவரும், அவரைச் சார்ந்த இரண்டு மூன்று குடும்பத்தினரும் பஞ்சம் பிழைப்பதற்காக அந்தியூர் அருகேயுள்ள சித்திரெட்டிபாளையம் கிராமத்திற்கு குடிபுகுந்துள்ளனர். இந்த சித்திரெட்டிபாளையம் ரெட்டியயார்கள் நிறைந்த பகுதியாகும். இங்கு வந்த பின்னர் அங்குள்ள நிலபுலன்களை விற்றுக்கொண்டு வந்த பணத்தை முதலீடாக வைத்து இவ்வூரில் ஆங்காங்கே சில நிலங்களை வாங்கியுள்ளனர். அந்தவகையில் எட்டிமரத்துத் தோட்டமும் அடங்கும்.

ஒருநாள் நல்லசாமி கவுண்டர் எட்டிமரத்துத் தோட்டத்தில் விதை விதைக்க உழுது கொண்டிருந்தாராம். அப்பொழுது ஒரு முதியவர் அங்கே வந்து அவரிடம் எனக்குப் பசிக்கிறது சாப்பிட எதாவது இருந்தால் கொடு என்றாராம். ‘உழுற எடத்துல

Koviloor Digital Library

என்ன இருக்கும் கொஞ்சம் அந்த மரத்தடியில ஒக்காருங்க எங்க ஊட்டுல கொஞ்ச நேரத்துல சோறு கொண்டுவருவா அப்பரம் சாப்படலாம்' என்று சொல்லிவிட்டு உழ ஆரம்பித்து விட்டாராம். அவர் ஒரு சுற்று வருதற்குள்ளே அவர் மனைவியும் வந்துவிட்டாராம். வந்தவரிடம் பெறா மரத்தடியில் ஒரு அய்யன் ஒங்காதிருப்பாரு அவர கூப்பிடு என்று கூற அவர் மனைவியே அய்யனா எந்த அய்ய அங்க யாருமே இல்லையே என்று கூறியுள்ளார். அங்கு பார்வையை செலுத்திய நல்லசாமி கவுண்டரோ 'என்ன இது இப்பதானே வந்தாரு நா அவரு அங்க ஒக்காந்ததையு பாத்த நா ஒருசுத்து வரதுக்குள்ள எங்க போயிருக்க முடியு இரு நா போயி அவரு எங்காயவது போயிருக்காரான பாக்ர' என்று சொல்லி நால புறமும் சுற்றிலும் தேடியுள்ளார். ஆனால் அவர் எங்கையுமே கண்ணிற்கு எட்டிய தூரம் தென்படவே இல்லை. திரும்பி வந்தவர் மனைவியிடம் இது என்ன அதி-சியமா இருக்கு ஒருவேல வந்தது பேயோ பிசாசோ இருக்குமா என்று சொல்லி தன் மனைவியிடம் புலம்பியுள்ளார். அப்போது ஒரு குரல் கேட்டுள்ளது நல்லசாமி நான்தான் கருப்புசாமி நான் தனியாக உன்னைவிட்டு இருக்க முடியவில்லை அதனால் நான் இங்கேயே வந்துவிட்டேன் எனக்கு இதே இடத்தில் கோயில் கட்டி வழிபடுங்கள் என்று கூறி மறைந்துவிட்டதாம். மயிலாடு துறையில் இருந்தபொழுது கருப்புசாமி கோயில் கட்டி வழிவழியாக இவர்களின் முதாதையர்களில் இருந்த வழிபாடு செய்து வந்துள்ளனர். மயிலாடு துறையில் பஞ்சம் நிலவ பலரும் அப்படி அப்படியே வெவ்வேறு ஊருக்கு குடிபெயர்ந்து விட இறுதியாக இவரும் சித்திரெட்டிபாளையத்திற்கு குடிபெயர்ந்துவிட்டார். குடிபெயர்ந்துவிட்ட போதிலும் இவர் கருப்புசாமியை வீட்டில் விளக்கு ஏற்றி தினமும் வழிபட்டு வந்துள்ளனர். இப்படி வழிபட்டு வந்த நிலையில்தான் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதன் பிறகு இவர் அதே இடத்தில் கருங்கல் கட்டம் கட்டி கோயில் எழுப்பியுள்ளார்.

சிறப்பு நிகழ்வுகள்:

வீரமுத்துக்கவுண்டர் என்பவர் அவரின் தங்கையின் குலதெய்வத்துக்குப் பூந்துறை சென்று திரும்பி வரும்

Koviloor Digital Library

வழியில் கோணவாய்க்கால் என்ற இடத்தில் கள்வர்களால் தாக்கப்பட்டு ஒரு மாதம் கழித்து மருத்துவ சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டாராம். அவருக்கு திருமணமாகிய இருமகள்கள் மற்றும் 16 வயதில் ஒரு மகனும் இருந்துள்ளனர். அவர் மகனின் பெயர் முத்து வேலப்ப கவுண்டர்.

சிலகாலம் சென்று அவருக்கு திருமணம் ஆகியுள்ளது. அவருக்கு திருமணம் ஆகியதில் இருந்து அவரின் தாயார் பாவாயம்மாள் தனியாகத்தான் சாலையில் படுத்துக்கொள்வாராம். அப்படி படுத்துக்கொள்பவருக்குச் சில மாதங்களாகவே படுக்கையில் இருந்து கீழே விழுந்து ஏதோ உளறவும் செய்வாரம். இப்படி ஒருநாள் உளரியவரைக்கண்ட அவரின் மகன் இந்த அம்மாவிற்கு வேறு வேலையே கிடையாது. இதற்கு பேயோ பிசாசோ பிடிச்சிருக்கு மாட்டுக்குது ஒருநாள் நல்லா சாட்டை அடி குடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று சத்தமாகவே சொல்லியுள்ளார். இதைக்கேட்ட அந்த அம்மாள் அப்பா நான்தான் உன் அப்பா வீரமுத்துக் கவுண்டார் நான் கருப்புசாமி கோயிலில்தான் தஞ்சம் அடைந்துள்ளேன். நீ ஒரு நாள் விடியற்காலையில் தண்ணீர் கட்டும்பொழுது கூட தண்ணீ வடிந்துவிட்டது என்று கூட சத்தம் போட்டேனே ஞாபகம் இருக்கிறதா என்றாராம். அப்போது முத்துவேலப்ப கவுண்டர் அது யாரோ கோயிலுக்கு வாக்குக் கேட்க வந்தவர்கள் சப்பதமிட்டு இருப்பார்கள் என்று நினைத்துள்ளார். அதன் பிறகு அவரின் அம்மா உழருவதை நிறுத்திவிட்டாராம். அடுத்த நாளில் இருந்து அவர் தொடர்ந்து அவர்களின் வீட்டில் இருந்து யாராவது முடிந்த போதெல்லாம் மாலை குளித்துவிட்டு கருப்புசாமி கோயிலுக்கு தீபம் இட்டு வருகின்றனராம் இது இன்று வரை தொடர்கிறது என்று ஒரு புன் சிரிப்போடு முத்து வேலப்ப கவுண்டர் தன் அனுபவங்களை கூறினார். மேலும் அவர் நல்ல ஆத்மாக்கல் கோயிலில் தஞ் சமடையும் என்ற ஒரு செய்தியையும் கூறினார்.

கோணவாய்க்கால்(பவானியில் இருந்து ஈரோடு செல்லும் வழித்தடத்தில் உள்ள இடம்) என்ற இடத்தைப்பற்றி சொல்லும் பொழுது 45 ஆண்டுகளுக்கு முன்பு அந்த இடத்தில் சுடப்படும் சட்டி இட்டலி வெகு சுவையாக இருக்குமாம். அடியில் ஒரு

Koviloor Digital Library

சட்டியில் தண்ணீர் ஊற்றி அதில் மற்றொரு குட்டி சட்டியை வைத்து ஒரு வெள்ளைத்துணியில் மாவை ஊற்றி குச்சியில் கட்டி இரண்டாவது சட்டியின் வரும்பின் மேல் குச்சியை பொருத்தி அதற்கு மேல் ஒரு தட்டையை வைத்து விறகில் வேக வைத்து சட்டினி அரைத்து தருவார்களாம் ஒரு இட்டலியே சாப்பிட முடியாதாம் அவ்வளவு பெரியதாக இருக்குமாம் ஆனால் சுவையாக இருக்குமாம்.

இக்கோயில் திருநீரை பேய்பிடித்தவர்கள் வைக்க மாட்டார்களாம். ராணி என்பவரின் மகளுக்கு பேய் பிடித்துவிட்டதாம் அப்போது அவர் கருப்புசாமி கோயிலுக்கு அந்த குழந்தைக்கு தெரியாமலே சென்று வந்தாலும் நீ இன்னைக்கு கருப்புசாமி கோயிலுக்கு போயிட்டு வந்துருக்க என்று சரியாகக் கூறிவிடுமாம். அந்த திருநீரையும் வைக்காதாம். அங்கு சென்று வந்தாலே அன்று அந்த குழந்தை எனக்குப் பயமாக இருக்கிறது என்று கூறுமாம். பேய் அந்த குழந்தையை விட்டு சென்றவுடன் அங்குழந்தையே அந்தக் கோயிலுக்கு போலாம் என்று கூட்டிச் சென்றதாம்.

தேவராஜ் என்பரின் கனவில் ஒரு நாள் இரவில் கருப்புசாமி பனைமரம் வேறோடு சாய்ந்து என்னை அழுத்திக்கொண்டுள்ளது என்று கூறியதாம். இது என்னடா இப்படி ஒரு கனவு என்று சொல்லி கனவு கண்டவர் எழுந்துவிட்டு மீண்டும் படுத்துவிட்டாராம். காலையில் எழுந்தவர் எதற்கும் கோயிலுக்கு சென்று பார்க்களாம் என்று பார்த்தால் அங்கு பனைமரம் சாய்ந்து கருப்புசாமியை அழுத்திக்கொண்டிருந்ததாம்.

இக்கோயில் திருவிழாசெய்ய வசூல் செய்த பணத்தில் திருவிழா செலவு போக 500 ரூபாய் மீதம் இருந்ததாம் இருபது வருடத்திற்கு முன்பு. அதை மாரியம்மன் கோயில் திருவிழாவின் போது பண்டுவிட்டாராம். அது பின்பு இரண்டு இலட்சமாகப் பெருகியதாம். அதை வைத்துதான் 2011 ஆண்டு புதியதாக ஒன்றைலட்சம் மதிப்பில் கோயில் கட்டினாராம். ஊரின் பெரிய புள்ளிகள் கோயில் கட்டுவதை தடுக்க பல முயற்சிகள் செய்தும் தடுக்க முடியவில்லையாம்.

Koviloor Digital Library

வழிபாட்டுமுறை:

வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய சிறப்பு தினங்களில் மாரியம்மன் கோயில் பண்டாரம் மூலம் பூசை நடைபெறுகின்றன. இப்பகுதி கொங்குவேளாளக் கவுண்டார்களும் தாங்கள் விரும்பினால் அவர்களே பூசை செய்யும் உரிமை உண்டு. மற்றபடி அனைத்து இன மக்களும் வழிபடுகின்றனர்.

இக்கோயிலில் பல்லிவாக்குக் கேட்டல் சிறப்பான வழிபாட்டு முறையாக உள்ளது. அதிகாலையில் 3.30 - 5.30 மணிவரை, மாலை 6 - 6.30 மணிவரை மக்கள் வாக்குக் கேட்கும் நேரமாகும். இவ்வூர் மக்கள் எந்த ஒரு செயலுக்கு முன்பும் கருப்புசாமியிடம் வாக்குக் கேட்டே செய்கின்றனர். பல்லி கிழக்கு, வடக்குப் பக்கம் சொன்னால் இராம வாக்கு நல்லது என்றும், மேற்கு தெற்கு சொன்னால் உத்தரவாக்குச் சரியன்று என்றும் எடுத்துக் கொள்கின்றனர்.

சாத்தந்தை குலத்தாரின் சிறப்பு வழிபாட்டு முறை:

சித்திரெட்டிபாளைத்தில் உள்ள சாத்தந்தை குல மக்கள் கருப்புசாமி செய்தல் என்ற ஒருவழிபாட்டுமுறையை செய்கின்றனர். திருமணமாகி வரும் மருமகளுக்காக ஆடிமாதம் செய்யும் வழிபாடு இது.

முதலில் சாமி செய்வோர்கள் தங்கள் குடும்ப பெரியோரிடம் அனுமதி பெறவேண்டும். பின்பு வெள்ளோடு இராசக்கோயில் சென்று பண்டாரத்திடம் தாங்கள் சாமி செய்யவிரும்புவதை தெரிவித்து ஆடிமாதம் சாமிசெய்வதற்கான தேதியைக் குறித்து வருவார்கள்.

சாமிசெய்யும் தம்பதிகள் இருவரும் சாமிசெய்யும் நாள் அன்று முழுநாளும் விரதம் இருப்பார்கள். அவர்களின் தோட்டக்கிணற்று மேட்டில் பச்சை தென்ன ஓலையில் பந்தல் போடுவர். இராசாக்கோயில் பூசாரி அன்று இரவு பத்துமணிக்கு மேல்வந்து இராசசாமி நல்லமங்கை, கருப்புசாமி வெள்ளித்திருவுருவம் கொண்டுவந்து அலங்காரம் செய்து தம்பதிகள் குழந்தைகள் என குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் அமரவைத்து பூசைசெய்வார்கள். இது செவ்வாய் இரவு நடைபெறும்.

Koviloor Digital Library

வீட்டில் பூசைமுடிந்ததும் கோயிலில் போடப்பட்டுள்ள பச்சைபந்தலில் அதே போன்று சாமிவைத்து அலங்கரித்து தம்பதிகளுக்கு நன்னீராட்டி புதுக் கருப்பாடை அணியச்செய்து பூசை செய்வர். பின்பு ஒரு கருப்புக்கிடாய் கருப்புக் கோழி ஆகியவை பழியிடப்படும். ஆட்டின் ஈரல் எடுத்து தென்னம்பாலை விரித்து வைத்துக் கருப்புசாமிக்குப் பூசை செய்வர்.

பூசைசெய்த பின்பு கோழிக்கறி சமைத்து தம்பதிகளுக்கு முதலில் போடப்படும். பின்பு மீதமுள்ளது உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் விருந்தாகப் அடைக்கப்படும். இதன் பின்பு அவர்கள் வீட்டிற்கு சென்று விடுவார்கள். இராசாக்கோயில் பூசாரி மட்டும் பூதங்களுக்கு காவுசோறு போட்டுவிட்டு அவர்களும் சென்றுவிடுவார்கள்.

மறுநாள் காலை புதன் அன்று ஆட்டுக்கிடாய் விருந்து சமைத்து விருந்துபடைப்பார்கள். இந்த அசைவம் மீதமானால் வேறு யாராவதற்கு தானமாக கொடுத்துவிடுவார்கள். வீட்டிற்கு எடுத்துவரமாட்டார்கள். இந்த விருந்து மண்டபம் அல்லது கோயில் இடம் அல்லது கிணற்றுமேட்டில் நடைபெறும். வீட்டில் மட்டும் நடைபெறாது.

திருவிழா:

ஐப்பசிமாதம் இரண்டாம் செவ்வாய் இரவு 12 மணி அளவில் பூசைதொடங்கி விடியவிடிய 4 மணி வரை அவ்வூர் பொட்டுசாமி, எல்லை முனியப்பம், கருப்புசாமி என்று மூவருக்கும் சேர்த்து பூசைசெய்து பொங்கல் வைத்து ஊர்பொதுவில் கிடாய் வெட்டப்படும். மறுநாள் புதன் அன்று கிடாய்க்கறி அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். பின்பு மாலை மறுபூசைசெய்து திருவிழாவை நிறைவு செய்துகொள்வார்கள். இதில் அனைத்து மக்களும் கலந்து கொண்டாலும் கவுண்டர் இனத்தவர்கள் மட்டுமே வரி செலுத்துகின்றனர். மற்றவர்களிடம் வரி வாங்குவது இல்லை. அவர்கள் திருவிழாவில் மட்டும் பங்குகொள்கின்றனர்.

முடிவுரை:

எட்டிமரத்துக்கருப்புசாமி மற்ற இடங்களில் உள்ள

Koviloor Digital Library

கருப்புசாமியைக் காட்டிலும் சற்று மாறுபட்ட வகையில் தானே தன் குலத்தவருக்காக சுயம்புவாகத் தோன்றிய தெய்வமாக இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் ஊருக்கே காவல்தெய்வமாக இருந்து அவ்வூர் மக்களைக் காத்துவருகிறார்.

தகவலாளர் பட்டியல்

1. முத்துவேலப்பக் கவுண்டர் வயது : 74 ஊர் : கந்தாம்பாளைம் தொழில் : விவசாயம்
2. தேவராஜ் வயது : 40 வயது : கந்தாம்பாளைம் தொழில் : விவசாயம்
3. முத்துச்சாமி வயது : 42 ஊர் : நாயக்கந்தோட்டம் தொழில் : விவசாயம்
4. இராசு வயது : 50 ஊர் : அந்தியூர் தொழில் விவசாயம்
5. ராணி வயது : 49 ஊர் : சித்திரெட்டிபாளையம் தொழில் : விவசாயம்
6. சின்னசாமி வயது : 80 ஊர் : பாப்பாந்தோட்டம் தொழில் : விவசாயம்

Koviloor Digital Library

கோயில் பண்பாட்டில் சைவம் பெறும் இடம்

திருமிகு. கா.வைரலெட்சுமி,
உதவிப்பேராசிரியர்,
இதயா மகளிர் கல்லூரி, சருகணி - 630411

முன்னுரை:

இந்து மதத்திலே சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயமாகும். இது தமிழரின் பழம்பெரும் சமயம் எனலாம், ஆதியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் சிவவழிபாடு சிறப்புற்றிருந்தது. பல சிவலிங்கங்கள் சிதைவுகளிலிருந்து கண்டெடுக் கப்பட்டுள்ளன. தீய நிலையில் அமர்ந்த ஓராண் தெய்வமும் கண்டெடுக்கப்பட்முன்னுரை:டுள்ளது. அதனை சுற்றியும் பல விலங்கு உருவங்கள் காணப்படும். சிவபெருமான் உயிர்களுக்குத் தலைவன் என்பதை விளக்கும் நிலையில் உள்ளது. மனித வாழ்க்கையில் சிவனே சிறந்த கடவுளாகப் போற்றப்பட்டார் என்பதை இக்கட்டுரை வழி அறியலாம். தொல்காப்பியத்தில் சிவபெருமான் குறிக்கப்படவில்லை. நானில மக்களுக்கும் பொதுவான முதல் கடவுளாகையால் நிலத்தெய்வங்கள் பற்றிக் கூறும்பொழுது சிவனைக் கூறவில்லை என்பர். இக்கருத்தின் உண்மையை சங்க நூல்களும், சிலம்பும், மணிமேகலையும் நிறுவுகின்றன. சங்கப்பாடல்களிலும் 'சிவன்' என்ற பெயர் காணப்படவில்லை. ஆயினும் அவரது பல்வேறு இயல்புகள் கூறப்படுகின்றன. புறம்-56-ஆம் செய்யுளில் சிவன், முருகன், திருமால், வாலியோன் என்னும் நாற்பெருந் கடவுளரும் புகழப்படுகின்றன. இதில் சிவனுக்கே முதன்மை வழங்கப்படுகிறது.

சங்க காலத்திற்குப் பிறகு சைவம் வேத நெறியையும் தழுவி புத்துருவம் பெற்றது. அறுபத்து மூன்று நாயன்மார்களும் இப்புதிய சமயத்துக்குப் பெருந்தொண்டுபுரிந்து வளர்த்தனர். மூவர் முதலிகளும் ஊர் ஊராகச் சென்று ஆடியும் பாடியும் சிவனை வணங்கினர். "நாளும் இன்னிசையால் தமிழ்ப்பரப்பும்

Koviloor Digital Library

ஞானசம்பந்தரும்" தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன் என நாவுக்கரசரும், ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய் என சுந்தரரும் இசையினால் இறைவனை வழிபட்டனர் என்பதை நாடறியும் பகத் வெள்ளம் எங்கணும் பரந்து தமிழகத்தையே தன்னுள் ஆழ்த்தியது. பல்லவ மன்னர் பலர் சிறந்த சைவராக விளங்கினர். பல கோயில்களைக் கட்டினார். ஆடலும் பாடலும் கோயில்களில் இடம்பெற்றன. சமணமும், பௌத்தமும் சைவ வைணவத்தின் பேராற்றலால் நலிவுற்றன. தொண்டை நாட்டில் அப்பரும், சோழ பாண்டிய நாடுகளில் சம்பந்தரும் சைவத்தின் பெருமையை நிலைநாட்டின மகேந்திரன் கூன்பாண்டியன் போன்றோர் சமயம் மாறினார். இக்காலத்தில் பல சமயப்பூசல்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் சைவத்தில் பல பிரிவுகள் தோன்றின. வைரவர், கபாளகர், களாமுகர், பாசுபதர் என்னும் பிரிவினர் இருந்தனர். பாசுபதர் என்போர் மயேச்சுரர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் சிவனை நினைத்து உடல் முழுவதும் நீறு பூசுவர் சிவனே முழுமுதல் கடவுள் என்பர். இலிங்கத்தையும் சிவா மூர்த்தங்களையும் வணங்குவர். தலைமுடியைக் கத்தரித்தலும், மொட்டையடித்தலும் உண்டு. தவத்தில் ஈடுபடுபவர், மக்களை பலியிடுபவர் அவ்விறைச்சியை சிவனுக்குப் படைப்பவர் கபாலிகர் பைரவரை வணங்குவர். மண்டையோடு மாலையை அணிவர், மயிர்ப்பூணூல் அணிவர், மனிதர் உட்பட எல்லா உயிர்களையும் பலி-யிடுவர். அவ்விறைச்சியோடு கள்ளையும் உண்பர். பெண்ணை ஆதிசக்தியாக வழிபடுவர். இப்பிரிவில் பெண்பாலரும் உண்டு என்பதை அறிய முடிகிறது.

சைவமும் கலைகளும்:

சைவ சமயம் கலைகளை போற்றிய பெரும் சமயமாகும். நாயன்மார்கள் சமணர் பிரச்சாரத்தால் நலிவுற்றுக் கிடந்த கலைகளைத் தட்டி எழுப்பி வாழ்வித்தனர். தேவார பாடல்கள் தமிழிசைக்குக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. பக்தி நெறிக்கு இசைக் கலையே வலிய கருவியாக விளங்கிற்று. ஏழிசையாகவும் இசையின் பயனாகவும் இறைவனை கண்டு போற்றினர். எனக்கு அருச்சனை பாட்டேயாகும். என்று சிவபெருமான் சுந்தரரிடம்

Koviloor Digital Library

கூறினாராம். தமிழகச் சிவன் கோவில்கள் வெறும் சமய சின்னங்களாக மட்டுமின்றி காலை சின்னங்களாகவும் நிற்கின்றன. சிவனுடைய பல்வேறு மூர்த்தங்களையும் கல்லிலும், செம்பிலும், பஞ்சலோகத்திலும் வடித்து வைத்தனர். கோபுரங்களிலும், தூண்களிலும், சுவர்களிலும் கண்கவர் சிலைகளை வடித்து வைத்தனர். வண்ண ஓவியங்களைத் தீட்டினர். சுருங்கச் சொன்னால் சமயம் கலைகளின் வளர்ப்பு தாயாக விளங்குகிறது எனலாம்.

சைவமும் இலக்கியமும் :

சைவ சமயம் தமிழுக்கு செய்த இலக்கியப்பணி அளவிடற்கரியதாகும். காரைக்காலம்மையார் முதன் முதலில் பக்திப் பெறுவலியை காட்டினார். அவரை தொடர்ந்து அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் ஆயிரக்கணக்கான பதிகங்களை பாடினர். அவற்றுள் பல அகப்பொருட்சுவை ஊறித்ததும்பும் அக்கால சமய, சமூக நிலைகளை அறியப்பெருந் துணையாக நிற்கின்றன. அவை முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. மாணிக்கவாசகரின் நெஞ்சுருக்கும் திருவாசகம் தமிழர் பக்தி திறனை உலகறிய செய்ததாகும். இதன் பெருமையை உலகறிய போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

ஒன்பதாம் திருமுறையாக அமைவது ஒன்பது சான்றோர் பாடிய தொகுதியாகும். இசை நலம் மிக்க இதனை திருவிசைப்பாக்கள் என்றே வழங்குவர். பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமூலரின் திருமந்திரமாகும். இதில் 3000 அருந்தமிழ் மலர்கள் விளங்குகின்றன. இந்நூல் சைவ சித்தாந்தத்தின் சிறப்பினையும், பல்வேறு சாதன முறைகளையும் யோகத்தையும் தெளிவாகக் கூறுகிறது. மேலும் மருத்துவம், உடலோம்பல் ஆகியவை பற்றியும் அன்புடைமை, அருளுடைமை, ஈகை, புலால் மறுத்தல் முதலிய அரண்கள் பற்றியும் கூறுகின்றது. பதினொருவர் பாடிய பல நூல்களின் தொகுப்பாக அமைவது பதினோராம் திருமுறையாகும். இதில் காரைக்கால் அம்மையார், சேரமான்பெருமான் நாயனார்.

நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், கல்லாடதேவர், அதிரா அடிகள், இளம் பெருமானடிகள், பட்டினத்தார்,நம்பியாண்டார்

Koviloor Digital Library

நம்பிகள் ஆகியோரின் பாடல்கள் அடங்கியுள்ளன. இத்தொகுப்பில் இரட்டை மணிமாலை, மாலை, உலா, கலம்பகம், திருமறம், திருவெழு கூற்றிருக்கை, ஒருபா ஒருபஃது, ஏகாதசமாலை முதலிய புது இலக்கிய வகைகள் அமைந்துள்ளன. சம்பந்தரின் சிறப்புக்களைக் கூறும் 6 நூல்கள் இதில் உள்ளன. திருக்கைலாய ஞான உலா ஆதியுலா என்று சிறப்பிக்கப் படுவது பல நூல்கள் அந்தாதியாக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

பன்னிரண்டாம் திருமுறை பெரிய புராணமாகும். பத்திச் சுவை நனி சொட்டப் பாடப்பட்ட இந்நூல் சைவப்பெரும் பயிர் தழைக்க உழைத்த 63 நாயன்மார்களின் வரலாற்றினைச் சுவைபட மொழியும் பெருங்கப்பியமாகும். அரிய வரலாற்றுச் செய்திகளை இந்நூல் கூறுகிறது. அக்காலச் சமூகநிலையைக் கண்ணாடி போல் காட்டுகின்றது. இந்நூல் சைவம் தமிழுக்குக் கொடுத்த அறிய மணியெனல் தகும். இவை மட்டுமன்றிச் சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறும் பல புராணங்களும் தோன்றின. பிற் காலத்தில் பல தல புராணங்கள் தோன்றின. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருவாலவாயுடையர் திருவிளையாடற் புராணம், பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

திருமுறைகள் பன்னிரண்டும் தோத்திரங்கள் எனப்படும். இவை தவிர சைவ சமயத்தின் தத்துவங்களைக் கூறும் பல நூல்கள் தோன்றின. இவை 14 சாத்திரங்கள் எனப்படும். மெய்கண்ட சாத்திரங்கள் என்று இவை அழைக்கப்படும். இவற்றில் முதன்மையானது பதி, பசு, பசங்களாகிய முப்பொருளைப் பற்றியும் 12 சூத்திரங்களில் கூறிடும் சிவஞான போதுமாகும். இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவராவார். அடுத்த சிறப்புடையது சிவஞான சித்தியாராகும். திருவுந்தியார்,திருக்களிற்றுப்படியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன்,வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது,உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகாரணம் என்பவை ஏனைய 12 நூல்களாகும்.

Koviloor Digital Library

சைவ சமயம் தமிழகத்திற்குத் தந்த விலை மதிக்க முடியாத அரும்பரிசு மடங்களாகும். குமரகுருபரர் பல இடங்களில் மடங்களை நிறுவினார். திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய இடங்களிலுள்ள சைவமடங்களும், இவற்றின் கிளை மடங்களும் சைவ நூல்களைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றன. இம்மடங்களைச் சார்ந்து அமைந்த கல்வி நிலையங்களில் கல்வி கற்றுயர்ந்தோர் எண்ணிலடங்கார். அயலவர் ஆட்சியின்போது தமிழைக் கட்டிக் காத்தவை இம்மடங்களே. மாதவச் சிவஞான யோகிகள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போன்றோர் இம்மடங்களில் இருந்து தமிழ் வளர்த்தனர். தமிழ் ஏட்டுச் சுவடிகளைக் கதவை இம்மடங்களே, இதுகாறும் கூறியவற்றால் சைவம் தமிழை வளர்த்த புகழ்மிக்க வரலாற்றை நன்கறியலாமன்றோ!

சைவமும் இல்லறமும்:

இல்லறத்தை நல்லறமாகப் போற்றிய தமிழகத்தில் இளமைத் துறவை வழக்கும் சமணம் புகுந்து அழைத்தது. இதனைக் கண்ணுற்ற ஸைனப் பெருமக்கள் இல்லறத்தாரும் இறைவனிடம் அன்புகொண்டு உய்யலாம் என்று என முழங்கினர். இறைவனையே அம்மையப்பராகக் கண்டனர். உலக வாழ்வுக்கும் வளச்சிக்கும் இல்லற நெறியே அடிப்படை என்பதனை விளக்கிட இறைவனே அவ்வாறு இருந்து கட்டுவதாகக் கூறினர்.

"பெண்பால் உகந்திலனேல் போதை இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவார்காண் "

என்றார் மாணிக்கவாசகர். சம்பந்தர் மணக்கோலத்தோடு சிவ சோதியில் கலந்தரல்லரோ? சுந்தரருக்கு இறைவனே இரண்டு மனங்களை முன்னின்று நடத்தி வைத்தாரல்லரோ! எனவே, தமிழரின் அடிப்படை நாகரீகத்தைக் கட்டிக்காத்தது சைவம் அல்லவே?

சைவமும் பெண்களும்:

சமணர்கள் பெண்களை இழிவு செய்தனர் அவர்களை அஃறிணையாகக் கருதினர்; வீடுபேற்றிற்குத் தகுதியானவர் என்றனர். சைவமோ பெண்ணை உயர்வு செய்தது. மங்கையர்க்

Koviloor Digital Library

கரசியரும், பிற நாயன்மார்களின் மனைவிமாரும் யாரும் பணிபுரிந்து வீடு போறடைந்தனரல்லரோ! இலைவன் அன்பிற்கு ஆண்பெண் என்ற வேறுபாட்டில்லையென்று பறை சாற்றிய சைவத்தின் பெருமையைச் சாற்றவும் ஒல்லுமோ!

சைவமும் சாதியும்:

நாயன்மார்கள் சமூகத்தில் சாதியிலும் குலத்தலும் ஏற்பட்ட தீய விளைவுகளைக் கண்டு உள்ளம் வருந்தினார்; சமயத்தின் பேரால் சாத்திரங்களை படைத்து அவற்றின் துணையுடன் குளம் சாதியம் பேசிக் காலத்தை வீணாக்கியோரைக் கடிந்துரைத்தனர். இறைவனது பிள்ளைகட்குள் இவ்வேற்றுமையும் இல்லையென்று எடுத்துரைத்தனர்.

"சாத்திரம் பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும்கொண் டென் செய்வீர்?
பாத்திரம் சிவமென்று பணிந்திரேல்
மாத்திரைக்குள் அருளுமாறு பேறரே"

என்பார் அப்பர். காழிப்பிள்ளையாரும் குளம் இறைவனுக்கு முன்பு இல்லையாகும் என்றும் யாவராயினும் எக்குலத்தவராயினும் இறைவன் அவர்க்கு நன்மை செய்வாரென்றும் கூறினார்.

"குலவராகக் குலமிலாறு மககுணம் புகழுங்கால்
உலகில் நல்ல கதிபெறுவர்"

அப்பர் பெருமான், சங்கநிதி பதுநிதி இரண்டும் தந்து தரணியோடுவணளத் தருவரேனெம், அவர் செல்வம் ஒரு பொருட்டன்று என்றும், அங்கமெல்லாம் அழுக்கிக் குறைத்து நலிவதோடு ஆவுரித்துத் தின்றுழலும் புலையராக விரும்பினேம் சிவபெருமானுக்கு அன்பு செய்தால் அவர்கள் தாம் வணங்கும் கடவுளாவார் என்றும் குறிப்பிட்டுள்ளார். நாயன்மார்கள் சாதி வேற்றுமை பாராட்டவில்லை. சுந்தரர், மன்னர் முதல் அனைவரையும் போற்றித் திருத்தொண்டத்தொகையருளினார். அவரே காணிக்கையையும், வேளாண்குலப் பெண்ணையும் மணந்தார். சிவநேசர் என்னும் வணிகர் தமது பெண்ணை மணந்து கொள்ளுமாறு அந்தணராகிய சம்பந்தரை வேண்டினார். அந்தணராகிய அப்பூதியார் வேளாளராகிய அப்பரைத் தம்

Koviloor Digital Library

கடவுளாகவே மதித்தார். நாமினிந்தியடிகள் புலையராகிய திருநீலகண்டரும் அவர் துணைவியாரும் தம்மில்லத்தில் தங்க ஏற்பாடு செய்தார். இதனால் சைவ சமயம் சாதி வேறுபாடற்ற சமூகம் அமைய உழைத்தது என அறியலாம்.

அன்பு நெறி: சைவம் உலகுக்குணர்த்தியது அன்பு நெறியே, அன்பே சிவம் என்பது சைவத்தின் உயிர் நாடிக் கொள்கை.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே!"

என்றார் திருமூலர். பிறர் துன்பம் கண்டு இரங்கி உதவிட முந்துவதே சமயநெறி, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று வலியுறுத்தினார். "தன் கடன் அடியேனையும் தங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பது" என்றார் அப்பர்.

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே!

என்றார் திருமூலரும்,

"இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்"

என்றார் அப்பர். வஞ்சனையும் வன் சொல்லும் கூடாது என்று வலியுறுத்தினர்.

முடிவுரை:

உயர்ந்த குறிக்கோள் ஒன்றைக் கொண்டு அதற்காக எதனையும் தியாகம் செய்ய முன்வரும் உறுதிப்பாட்டை வலியுத்துவதே பெரியபெரணம். சுருக்கமாகக் கூறினால் சைவ சமயம், தமிழருடைய அடிப்படைப் பண்பாட்டைக் காத்ததோடு, தமிழக கலைகளையும் வளர்த்து, தமிழர் நாகரிகத்தை வளப்படுத்தி வாழ வைத்துள்ளது என்பதைக் கட்டுரை வழி அறியலாம்.

Koviloor Digital Library

ஸ்ரீசரநாராயணப் பெருமாள் கோயிலின் சிற்பக்கலையும் கட்டிடக்கலையும்

முனைவர் சி. ஜெகதீசன்
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரி
நாமக்கல்.

முன்னுரை

கடலூர் மாவட்டம் பண்ருட்டி நகராட்சியின் ஒரு பகுதியில் உள்ள திரிபுரவதிகை என்னும் ஊரில் உள்ள ஸ்ரீசரநாராணப் பெமாள் கோவிலின் கட்டிக்கலையும் சிற்பக்கலையையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவனின் ஆற்றல் எங்கும் உண்டு எள்ளுக்குள் எண்ணெய்போல, மலருக்குள் மனத்தைப்போல, பாலில் நெய்யைப்போல எங்கும் நிறைந்துள்ள இறைவன் நம்மிடமும் நாம் உள்ள இடங்கள்தோறும் தங்கியுள்ளார். அவ்விறைவனை எளிதில் அறியும் ஆற்றல் நமக்கில்லை. ஆதனால் இறைவனை வழிபட்டு அருளைப் பெறுவதற்கு ஆலயம் இன்றியமையாததாகிறத.

சங்ககாலக் கோயில்களின் நிலை

சங்ககாலத்திலும் அதற்கு முந்தைய காலத்திலும் கோயில்கள் மரத்தடியிலேயே அமைந்திருந்தது என்பதை,

"கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி" (புறம். 260)

என்று புறநானூறும்,

"தெய்வம் சேர்ந்த பராரைவேம்பு" (அகம். 309)

என்ற அகநானூற்றுப் பாடல்களின் மூலமாகவும் அறியமுடிகிறது.

கோயிலின் மாற்றம்

பின்னர் மரத்தினாலும், களிமண்ணாலும் சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டங்களாக மாறின. இதனை,

Koviloor Digital Library

"சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்"

(பெரும்பாணாற்றுப்படை 402)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் கூறுகிறது. மேலும் மணிமேகலையும்,

"காடமர் செல்லி கழிபெருங்கோட்டமும்

குறியவும் நெடியவும் குன்று கண்டன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"

என்றும்,

"அழிந்த செங்கற் கோயிலொன்றை
இட்டிகை நெடுஞ்சவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மறந்சேர் மாடத்து"

என்ற அகநானூற்றுப் பாடலின் மூலமாகவும் அறியமுடிகிறது.

கட்டிடக்கலை வல்லுனர்கள்

சங்ககாலத்திலிருந்து கோயில்களைக் கட்டவும் கட்டிடங்களை அமைக்கவும் நூலறி புலவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இதனை நெடுநல்வாடை,

"நூலறிபுலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங்கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்கொப்ப மனைவருத்து"

என்று கூறுகிறது.

பல்லவர்கள் காலம்

பல்லவர்கள் காலத்தில் குடைவறைக் கோயில்கள் ஒற்றைக்கல் இரதங்கள், கற்றளிகளால் கோயில்கள் கட்டிடக்கலையில் வளர்ச்சிப்பெற்றன. பல்லவர்கள் காலத்தில் அமைக்கப்பெற்றதே சிறப்பு வாய்ந்த திரிபரவதிகை ஸ்ரீசரநாராயணப் பெருமாள் கோயிலாகும்.

கோயிலின் நுழைவுவாயில்

திருக்கோயிலின் நுழைவுவாயில் வேலைப்பாடுடன் கூடிய குடைவரைவாயில் அமைந்துள்ளது. குடைவரைவாயிலின் மேல்

Koviloor Digital Library

சாலகால விமானம் என்கிற அலங்கார வாயிலில் மூலவரைப் போன்றே சுதை உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பலிபீடமும் கொடி மரமும்

பலிபீடமும் கொடிமரம் என்பவையும் கோயில் உறுப்புகளாகும். இவை மூலவரின் கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கலசமும் கொடிக்கம்பத்தின் நுனியும் ஒரே நேர்க்கோட்டில் அமையம்படி கோபுரமும் கொடிக்கம்பமும் ஒரே உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

கருடன் சந்நிதி

கொடிமரத்திற்கு அடுத்து அமைந்துள்ள கருடாழ்வார் சந்நிதி எல்லா திருக்கோயிலிலும் கருடன் கைக்கூப்பி அஞ்சலியில் அஸ்தனாக இருப்பார். இக்கோயிலில் கைகட்டிக்கொண்டு சேவக பாவத்தில் இருப்பது சிறப்பானதாகும். இதன் விமானம் ஏகதளம் என்கிற ஒருநிலைக் கோபுரத்தை கொண்டதாகும். இது சதுரவடிவில் முகப்பத்திரம் என்கின்ற வேலைப்பாட்டுடன் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீசரநாராயணப் பெருமாள் சந்நிதி

ஆலயத்தின் அழகை மேம்படுத்திக் காட்டுகின்ற பகுதி மண்டபங்கள் ஆகும். திருக்கோயில்களில் மக்களின் வசதிக்கேற்பவும் விழாக்களுக்காவும் மங்கல வாத்தியங்கள் முழங்க இசைக்கலைஞர்கள் அமரவும், உற்சவமூர்த்திகளை அலங்காரம் செய்யவும் மண்டபங்கள் அர்த்த மண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம் வசந்த மண்டபம், திருக்கல்யாண மண்டபம், என பல்வேறு மண்டபங்கள் காலந்தோறும் வளர்ச்சியடைந்தன. இம்மண்டபங்களால் சிற்பக்கலை பெரிதும் வளர்ச்சியடைந்தது. இத்திருக்கோயிலில் மண்டபங்கள் கல்காரம் கருங்கல்லால் உத்திரமட்ட வேலைப்பாடுடன் செய்யப்பட்டுள்ளன.

கோபுரங்கள்

தமிழகத்தின் பண்பாடு, இறையுணர்வு மற்றும் தமிழக அரசின் சின்னங்களாக கோபுரங்கள் அமைந்துள்ளன. உடலைவிட ஆன்மாதான் சிறந்ததாகுகம். உடலழகில் மயங்கிவிடாமல்

Koviloor Digital Library

ஆன்மாவை நேசிக்க வேண்டும் என்பதை புறத்தேயுள்ள கோபுரங்களின் அழகிலே மயங்கிவிடாமல் ஆலயத்தின் உள்ளே இருக்கும் இறைவனைக் கண்டு அருள்பெற வேண்டும் என்ற கருத்தைக் கோபுரங்கள் உணர்த்துகின்றன.

கிழக்குத்திசை

கோபுரத்தின் கிழக்கு திசையில் பெருமாள் ஸ்ரீதேவியுடன் நின்ற கோலத்தில் உள்ளார் ஸ்ரீசரநாராயணப் பெருமாள் அவரின் இருபுறத்திலும் கோபுரம் தாங்கிகள் உள்ளனர். இரண்டாவது தளத்தின் திருப்பாற்கடலில் அனந்த சயனத்தில் உள்ளதுபோல் ஸ்ரீமகாவிட்ணு ஸ்ரீதேவியுடன் சுதை உருவமும் மூன்றாவது தளத்தில் பெருமாள் சக்ராயுதத்துடன் அமர்ந்த நிலையில் சுதை உருவம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குத்திசை

மேற்கு திசையின் முதல் தளத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீநரசிம்ப பெருமாள் காட்சியும் இரண்டாவது தளத்தில் ஸ்ரீஉக்கிர நரசிம்மன் ஹிரணியகசிபுவை வதம் செய்யும் உக்கிர மூர்த்தி காட்சியும் இருபுறமும் பிரகலாதன் அவர்தாய் லீலாவதியை வணங்கும் காட்சியும் சுதை உருவங்களாகச் செய்யப்பட்டுள்ளன.

வடக்குத்திசை

வடக்கு திசையில் கோபுரம் தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. கோபுரம் தாங்கியாகக் குழந்தையுடன் அமைக்கப்பட்டிருக்கும் தாயின் உருவம் தாய்மை உணர்வை வெளிப்படுத்துவது போல் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. இறை உருவங்கள் அடங்கிய கோயில் அதன் சிற்பங்கள் கலை வளர்ப்பனவாகவும் இறை உணர்வை ஊட்டுவனவானகவும் அமைந்திருக்கின்றன.

அர்த்த மண்டபம்

யமுனா நதியில் விடத்தை உமிழ்ந்த காளிங்கன் என்ற ஐந்து தலை அரவையின் வாலைக் கையில் பிடித்தபடி நர்த்தனம் ஆடும் ஸ்ரீகண்ணனின் சுதை உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

மகாமண்டபம்

இவ்விடத்தில் ஸ்ரீயோக நரசிம்ம பெருமாளும் நாரதரும் ஸ்ரீவராகரும் நின்றிருக்கும் சுதை உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீவைகுண்டவாசல்

வைகுண்ட வாசல் மண்டபத்தின் மேல் தூண்களில் சக்கரம், திருநாமம், சங்குடன் ஸ்ரீகருடனும், ஸ்ரீஅனுமனும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளனர்.

சபாமண்டபம்

இம்மண்டபத்தின் தூண்களில் ஸ்ரீஆஞ்சனேயர், ஸ்ரீவராகர், உருவங்கள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. சபாமண்டபத்தில் ஸ்ரீராமரின் பட்டாபிழி~க நிகழ்ச்சியை சித்தரிக்கும் சுதை உருவச்சினாகள் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

தாயார் சந்நிதி

தாயாரின் சந்நிதி செங்கல் சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதில் கல்காரம் பஞ்சாங்க வேலைப்பாட்டுன் கட்டப்பட்டுள்ளது.

முடிவுரை

ஸ்ரீசரநாராயணப் பெருமாள் திருக்கோயிலின் அனைத்துப் பகுதிகளும் கட்டிடக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

Koviloor Digital Library

கள்ளர் நாட்டுக் குலதெய்வக் கோவில்களும் மரபுகளும்

முனைவர்.க.ஜெயக்காளை,
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்நினைவுக் கல்லூரி,கமுதி,

முன்னுரை:

பழம்பெருமை வாய்ந்த பாரத தேசத்தில் பன்னெடுங்காலமாக பல்வேறு இனக்குழுக்களாக மக்கள் தனக்கென்று தனித்துவம் வாய்ந்த பாரம்பரியப் பண்பாட்டு அடையாளத்தோடு வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு இனக்குழு பின்பற்றப்படும் பழக்க வழக்கங்கள் அவ்வினக்குழுக்களின் பாரம்பரிய வாழ்வியல் செழுமையை வெளிக்கொணர்வதாக அமையப் பெற்றுள்ளது. தமிழகத்தில் வாழ்ந்து வரும் பல்வேறு இனக்குழுக்களில் கள்ளர் இனக்குழு மக்கள் தாங்கள் வாழும் பகுதியைப் பல்வேறு நாடுகளாகப் பிரித்து வாழும் பழக்கத்தைப் பாரம்பரியமாக கொண்டுள்ளனர். தமிழ்மண்ணின் பூர்வகுடியாகவும், கள்ளர் இனக்குழுவின் கிளை இனக்குழுவாக கருதப்படும் பிரமலைக் கள்ளர் இன மக்கள் தென் தமிழகத்தில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் வாழும் பகுதியை குலதெய்வ கோயில்களின் வழிபாட்டின் மரபை மையமாகக் கொண்டு எட்டு நாடுகள், மற்றும் இருபத்தி நான்கு உபகிராமங்களாக பிரித்து வாழ்ந்து வருகின்றனர். பிரமலைக்கள்ளர் இன மக்கள் தங்களுடைய திருமண உறவு முறையை குல தெய்வக்கோயில் வழிபாட்டு மூலமாக மேற்கொள்ளும் தனித்துவம்வாய்ந்த பாரம்பரியப் பண்பாட்டு அடையாளத்தோடு இன்றளவும் திகழ்கின்றனர். பிரமலைக்கள்ளர் நாடுகளில் வாழும் மற்ற சமுதாய இன மக்கள் அனைவரும் பிரமலைக்கள்ளர் குலதெய்வ கோயில்களில் பூசாரியாகவும், அக்கோயில்களில் மரபுகளை பின்பற்றுவதைப் பாரம்பரியமாக கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய சமூகப் பின்புலத்தோடு இந்த ஆய்வு கட்டுரை பிரமலைக்கள்ளர் குலதெய்வ கோயில்களில்

Koviloor Digital Library

பின்பற்றப்படும் கோயில் சார்ந்த பண்பாட்டு மரபுகளை வெளிக் கொணர்வதாக அமையப் பெற்றுள்ளது.

பிரமலைக்கள்ளர் நாடும் குலதெய்வங்களும்:-

மதுரைப் பகுதிகளில் வாழும் கள்ளர் இன மக்கள் தங்கள் வாழும் பகுதியைப் பத்து நாடுகளாக பிரித்து வாழ்ந்து வந்ததாக வரலாற்று ஏடுகளிலிருுருந்து அறிய முடிகிறது. அவை மேலநாடு, சிறுகுடிநாடு, வெள்ளளுர்நாடு, கந்தவேனின் நாடு, பிரன்மலைநாடு, தென்னிலை நாடு, பாகநேரி நாடு, மல்லாக்கோட்டை நாடு, கண்டரமாணிக்கம்நாடு பழையநாடு ஆகும். அதேபோல் கள்ளர் இனக்குழுவின் கிளை இனக்குழுவாக கருதப்படும் பிரமலைக்கள்ளர்வாழும் பகுதிகள் பிரமலை நாடுயென்று அழைக்கப்படுகின்றது. இந்த பிரமலைக்கள்ளர் நாடு மதுரைநகருக்கும், திருப்பரங்குன்றம் மலைக்கும் மேற்கு, நாகமலைக்கு தெற்கு, மேற்கு தொடர்ச்சி மலைக்கு கிழக்கு, குண்டாற்றிற்கும் வடக்கு இதற்குள்பட்ட நிலப்பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதிகளில் வாழும் பிரமலைக்கள்ளர்கள் தாங்கள் வணங்கும் குலதெய்வக் கோவிலை மையமாக வைத்து எட்டு நாடுகளாகவும் மற்றும் இருபத்தி நான்கு உப கிராமங்களாகவும் பிரித்து வாழ்ந்து வருகின்றனர். அவை சோனைக் கருப்பச்சாமியை குலதெய்வமாக கொண்டு திடியன்நாடும், கல்யாண கருப்புச்சாமியை வாலாந்தூர் நாடும், குமரகோயில் குருசாமியைப் புத்தூர் நாடும், மூனுசாமியைக் கருமாத்தூர் நாடும், ஆச்சிகிழவி ஒச்சாண்டம்மனைப் பாப்பாப்பட்டி நாடும், பேக்காமன் கருப்பசாமியைக் கொக்குளம் நாடும், புத்தூர்மலை பெருமாள்சாமியை வேப்பனூத்து நாடும், மற்றும் வைரவன் சாமியைத் தும்மக்குண்டு நாடும் குலதெய்வங்களாகக் கொண்டு நாடுகளாகப் பிரித்துத் தொன்மைக்காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றனர். மேலும் இப்பகுதியில் குலதெய்வ கோவிலின் வழிபாட்டு மரபை வைத்து 24 உபகிராமங்களாகவும் பிரித்து பிரமலைக்கள்ளர்கள் வாழ்ந்து வருகின்றனர். பிரமலைக்கள்ளர் நாட்டில் உள்ள ஒவவொரு கோவிலுக்கும் தொன்மக்கதைகள் உண்டு. இக்கதைகள் அந்தக் கோவிலை குலதெய்வமாக வழிபடும் மக்களின் தொன்மை வரலாறாக கருதப்படுகிறது.

Koviloor Digital Library

பிரமலைக்கள்ளர் குலதெய்வ கோயில் மரபுகள்.

பிரமலைக்கள்ளர்கள் தங்களுடைய மூதாதையர்களை தெய்வமாக வழிபாடு செய்வதைப் பாரம்பரியமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பிரமலைக்கள்ளர் குலக் கோயில்கள் அனைத்திலும் பூசாரி, கோடாங்கி, அய்யன்பிடுக்கி, சாமியாடிகள், மற்றும் தேவர்கள், இறுப்பர்கள், பூசாரிகள் நாள்தோறும் கோவில்களில் வழிபாட்டு பணிகளையும் மேற்கொள்வர். கோடாங்கி என்பவர்கள் சாமியருள் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்கள் கோவில்கள் வழிபாட்டு முறைகளுக்கு தகுந்த ஆலோசனை சொல்வதும், பொதுமக்களுக்கு அருள்வாக்கு வழங்குவார்கள். இவர்கள் கோவில் பூசாரிகளை பாரம்பரிய சமூக வழக்கப்படி தேர்வு செய்வார்கள். பிரமலைக்கள்ளர் கோவில் மரபுப்படி, தங்களுடைய உறவுமுறையை மையமாகக் கொண்டு பல்வேறு கூட்டங்களாகப் பிரித்து வாழும் பாரம்பரியம் கொண்டவர்கள். கோவில் விழாக்களை நடத்தவும், கோவிலை நிர்வாகம் செய்யவும் ஒவ்வொரு கூட்டத்திலிருந்து ஒரு தேவரை தேர்வு செய்வார்கள். இந்த தேவர்பட்டம் சூட்டியவர்கள் கோவில்களின் அனைத்து பணிகளையும் பெரியோர்களின் ஆலோசனைப்படி மேற்கொள்வார்கள். அய்யன்பிடிக்கி என்பவர்கள் கோடாங்கிகளின் அருள்வாக்குப்படி கோவில் பூசாரிகளை தேர்வு செய்வார்கள். பிரமலைக்கள்ளர் குலதெய்வ கோவில வழிபாட்டுமுறையைப் பராம்பரிய முறைப்படி செய்ய பூசாரியோ, கோடாங்கியோ, அல்லது தேவர்களையோ, தேர்வு செய்யும் பொழுது அந்தக் கோவிலை குலதெய்வமாக வழிபாடு செய்யும் பிரமலைக்கள்ளர் இனக்குழுவைச் சார்ந்த ஒவ்வொரு குடும்பத்தை சார்ந்த ஆண்கள் கலந்து கொள்வார்கள். இவர்களுக்கு யாருக்கு குலதெய்வ கோவில் வழக்கப்படி அருள் இறங்குகின்றதோ அவர்களை பூசாரியாகவோ, கோடாங்கியாகவோ சமுதாய பெரியோர்களின் முன்னிலையில் அய்யன்படிக்கியாள் தேர்வு செய்யப்படுகிறார்கள். பிரமலைக்கள்ளர்கள் குலதெய்வ நாட்டுக்கோவிலை தவிர ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டத்தை மையமாக வைத்து வீட்டு தெய்வ வழிபாடு செய்வதை மரபாக கொண்டுள்ளனர். அவை, சீலைக்காரி, ராக்கம்மாள், பேச்சி, மந்தையம்மன், ஊர்காத்த கருப்புச்சாமி, சின்னச்சாமியென்று பல

Koviloor Digital Library

பெயர்களில் இருக்கின்றனர். இந்த தெய்வங்களுக்கு வழிபாடு செய்ய ஒவ்வொரு ஊரிலும் தங்களுடைய கூட்டத்தை சேர்ந்த ஒரு பெண்களையோ அல்லது ஆண்களையோ தங்களுடைய கூட்டம் (வம்சம்) மரபுப்படி தேர்வு செய்கின்றனர். இவர்களை சாமியாடிகள் என்று அழைக்கின்றனர். இந்த சாமியாடிகள் குலதெய்வ நாட்டுக்கோவில் விழாக்களில் கலந்து கொண்டு சாமி ஆடி (கடவுள்நடனம்) பொதுமக்களுக்கு விபூதி கொடுத்து நல்லாசி வழங்குவார்கள். பிரமலைக்கள்ளர் கோவில் மரபில், பூசாரித்தனம், கோடாங்கித்தனம், அய்யன்பிடிக்கித்தனம் மற்றும் தேவர்தனம் போன்றவைகள் பெரியதனமாக கருதப்படுகின்றது. இந்த பெரிய தனங்களின் உரிமைகள் வாரிசு அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. ஒரு பூசாரியோ, அல்லது கோடாங்கியோ இறந்துவிட்டால் அந்த பெரிய தனங்கள் அந்தக் கோவிலை குலதெய்வமாக வணங்கக் கூடிய அடுத்த கூட்டத்திற்கு உரிமை வழங்கி ஒருவரை கோவில் வழக்கப்படி தேர்வு செய்வார்கள். பிரமலைக்கள்ளர் கோவில் தொன்மைக்கதையில் பிறப்பின் அடிப்படையில் மூத்த வாரிசு கூட்டம், இளைய வாரிசு கூட்டம் என்று பிரிக்கப்பட்டு பெரியதன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே ஒரு பெரியதன உரிமையை சுழற்சி மூலமாக அனைத்து பிரமலைக்கள்ளர் கூட்டத்திற்கு வழங்கி ஒருங்கிணைந்து வழிபாடு செய்யும் கோவில் மரபாக இருந்து வருகின்றது.

பிரமலைக்கள்ளர் குலதெய்வ கோவில்களில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் அனைத்தும் பெரியோர்களின ஆலோசனைப்படி சமுதாய குலவழக்கப்படி கொண்டாடப்படுகின்றது. இவர்களின் பாரம்பரிய மரபுப்படி திருவிழாக்கள் ஏற்பாடு செய்யும்பொழுது, பதினைஞ்சு நாள் கும்மம் கூட்டப்படுகின்றது. திருவிழாவிற்கு 15 நாட்களுக்கு முன்னால் அனைத்து பொதுமக்களும் கலந்து கொண்டு திருவிழா நடத்தும் முறையைப் பற்றி பொதுமக்களின சம்மதம் பெற கூட்டம் நடத்தப்படுகின்றது. இந்தக் கூட்டத்தில் பூசாரிகள், கோடாங்கிகள், தேவர்கள், அய்யன்பிடிக்கி, மற்றும் சாமியாடிகள் கலந்து கொண்டு கோவில் பராம்பரிய வழக்கப்படி திருவிழாவை நடத்த அருள்வாக்கு தருகின்றனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அனைத்து பொதுமக்களுக்கும் வெற்றிலை பாக்கு

Koviloor Digital Library

கொடுத்து மரியாதை செய்வதை மரபாக கொண்டுள்ளனர். பிரமலைக்கள்ளர் குலதெய்வ கோவில்களில் ஒவ்வொரு வருடமும் மகாசிவராத்திரி திருவிழா வெகுவிமர்சனமாக கொண்டாடப்படுகினறது. இந்த திருவிழா நாட்களில் பிரமலைக்கள்ளர் இனமக்கள் தங்களுடைய குடும்பத்தோடு சென்று குலதெய்வ கோவில்களில் வழிபாடு செய்வதைப் பாரம்பரிய மரபாகப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.

பிரமலைக்கள்ளர் கோவில் குல உறவுமுறை மரபுகள்:

பிரமலைக்கள்ளர் இன மக்கள் மதுரை மாவட்டத்திலுள்ள எட்டுநாடு மற்றும் 24 உபகிராமத்தில் மட்டுமின்றி தமிழகத்தில் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பாரம்பரிய மரபுகளின்படி குலதெய்வ கோவிலின் வழிபாட்டு முறையின் மூலம் அண்ணன், தம்பி, மற்றும் மாமன் மைத்துனர் உறவுமுறையை அடையாளப்படுத்தி திருமண உறவை பின்பற்றி வருகின்றனர். பிரமலைக்கள்ளர் இன மக்களின் திருமணங்கள் மற்றும் வீட்டில் நடக்கும் அனைத்து சுபநிகழ்வுகளும் குலதெய்வ பூசாரிகளின் முன்னிலையில் நடத்தப்படுவதைப் பாரம்பரியமாக கொண்டுள்ளனர். இந்த இன மக்கள் தங்களுக்கு பிறக்கும் குழந்தையின் முதல் குலதெய்வ காணிக்கையாக முதலில் தாய் வழிகுல தெய்வ கோவிலுக்குப் பொங்கல் வைத்து குழந்தையை மொட்டையெடுத்து முடியை காணிக்கையாகச் செலுத்துகின்றனர். பின்பு மூன்று அல்லது ஐந்து மாதங்கழித்து தந்தைவழி குலக்கோவிலில் மீண்டும் குழந்தைக்கு மொட்டையெடுத்து முடியை காணிக்கையாகச் செலுத்துகின்றனர். இவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு குலதெய்வப் பெயரைச் சூட்டுவதையே பழக்கமாக கொண்டுள்ளனர்.

பிரமலைக்கள்ளர் கோவிலும் சமூக ஒருமைப்பாடும்:

பிரமலைக்கள்ளர் இன மக்கள் தொன்று தொட்டு தங்களுடைய முன்னோர்களை தெய்வமாக வழிபாடு செய்து வருவதை மரபாக கொண்டுள்ளனர். இவர்கள் தங்களுடைய முன்னோர்கள் ஆண், பெண் தெய்வ வடிவில் வாழும் இடமாக கோவிலை வணங்கி வருகின்றனர். பிரமலைக்கள்ளர் குலக்

Koviloor Digital Library

கோவில்களின் பூசாரிகள், கோடாங்கிகள், அய்யன்பிடிக்கிகள், தேவர்கள் உருவத்தில் தங்களுடைய குலதெய்வங்கள் வாழ்வதாக நம்பிகளை கொண்டு கடவுளுக்கு நிகராகக் கருதி இவர்களை மரியாதை செலுத்தி வணங்கி வருகின்றனர். பிரமலைக்கள்ளர் இல்லத்தில் நடைபெறும் அனைத்து சுபநிகழ்ச்சிகளும் இவர்களின் முன்னிலையில்தான் நடைபெறும் இவ்வளவு மரியாதையும் தெய்வத்திற்குச் சமமாகக் கருதப்படும் பிரமலைக்கள்ளர் கோவில் பூசாரிகள், கோடாங்கிகள் அய்யன் பிடுக்கிகள் யாவரும் பிரமலைக்கள்ளர் சமுதாயத்தை சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல் வேறுபல சமுதாயத்தை சேர்ந்தவர்களும் பாரம்பரியமாக பூசாரியாகவும், கோடாங்கியாகவும், அய்யன்பிடுக்கியாகவும் இருந்து வருகின்றனர். பிரமலைக்கள்ளர்களின் கலாச்சார தலைநகராகவும், பிரமலைக்கள்ளர் நாட்டின் நான்காவது நாடாக திகழும் கருமாத்தூர் குடும்பத்தேவர் நாட்டின் நல்லகுரும்பன் கோவில் அய்யன் பிடிக்கியாக ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர்களே இருந்து வருகின்றனர். இந்த நாட்டின் பெரிய கோவிலாக கருதப்படும் காசிநாதன் மற்றும் பேச்சி விருமன் கோவில்களில் செட்டியார் இனத்தை சேர்ந்தவர்களே பூசாரியாக இருந்து வருகின்றனர். பிரமலைக்கள்ளர் நாட்டின் ஆறாவது நாடாக இருந்து வரும் கொக்குளம் பேக்காமன் நாட்டின் பெரிய பூசாரியாக ஆதிதிராவிட மக்களே இருந்து வருகின்றனர். மேலும் சித்தாலை சுந்தர வள்ளியம்மன் கோவில், ஆரியபட்டி கல்யாண கருப்புச்சாமி கோவில்களில் பண்டார இனமக்களே பூசாரியாக இருந்து வருகின்றனர். வாலாந்தூர் நாட்டின் குலதெய்வமாக விலங்கும் அங்காளபரமேஸ்வரி கோவிலில் செட்டியார் இன மக்களே பூசாரியாக இருந்து வருகின்றனர். தமிழினத்தின் பூர்வகுடியாக கருதப்படும் பிரமலைக்கள்ளர் இன மக்கள் தங்கள் வாழும் பகுதிகளில் அனைத்து இனமக்களோடு தொன்றுதொட்டு இணக்கமாக பண்பாட்டு உறவுமுறையை வைத்துக் கொண்டு தனக்கென்று தனி அடையாளத்தோடு வாழ்வதையே மரபாக கொண்டுள்ளனர். பிரமலைக்கள்ளர் குலக்கோவில்களின் மரபுகள் ஒட்டுமொத்த தமிழினத்தின் சமூக ஒருமைப்பாட்டிற்கு முன்னுதாரணமான பண்பாட்டு மரபாக இருந்து வருகின்றது.

Koviloor Digital Library

முடிவுரை:

செழுமையான தமிழர் பண்பாட்டின் அடையாளமாக கோவில்களும் மற்றும் கோவில் சார்ந்த மரபுகளுமே திகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோவிலும், அதன் மரபுகளும் அக்கோவிலை வழிபடும் மக்களின் வாழ்வியல் முறைகளை வெளிக்கொணர்வதாக அமையப் பெற்றுள்ளது. பிரமலைக்கள்ளர் நாட்டிலுள்ள குலதெய்வக் கோவில்கள் பிரமலைக்கள்ளர்களின் வாழ்வியலோடு ஒன்றுணைந்துள்ளது. பிரமலைக் கள்ளர்களின் எளிமையான வாழ்க்கை முறைபோல் அவர்களுடைய கோவில்களும் அமைந்துள்ளது. அதே சமயத்தில் பிரமலைக்கள்ளர் தங்களுடைய குலதெய்வ கோவில் மரபுகளை தொன்றுதொட்டு பாரம்பரிய சமூக வழக்கப்படி மாறாமல் பின்பற்றி வருகின்றனர். இந்த நவநாகரீக காலத்திலும் பிரமலைக்கள்ளர் தங்களுடைய குலதெய்வ கோவில் வழிபடும் முறையை பின்பற்றி தங்களுடைய திருமண உறவு முறையை மேற்கொண்டு வருவது தமிழர் கோவில் மரபில் பிரமலைக்கள்ளர் மரபு ஒரு தனித்துவ பண்பாட்டு அடையாளமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

துணை நூற்பட்டியல்:

1. பெ.முத்துத்தேவர், மூவேந்தர்குல தேவர் சமூக வரலாறு, மதுரை. 1994.
2. ஆர்.கே. கண்ணன், சேர, சோழ, பாண்டியர்கள் வாரிசுகளான தேவர்கள், வரலாறு, மதுரை. 2006.
3. ஆர்.கே. கண்ணன், கருமாத்தூர் மூனுசாமி வரலாறு, திருமங்கலம் 1998.
4. நா.மு. வேங்கடசாமி நாட்டார், கள்ளர் சரித்திரம், திருச்சிராப்பள்ளி 1923.
5. இரா.சுந்தரவந்தியத்தேவன், பிரமலைக்கள்ளர் வாழ்வும், வரலாறும் மதுரை. 2014.
6. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும், பண்பாடும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–2003

Koviloor Digital Library

அருள்மிகு வரத ஐயனார் திருக்கோயில் வழிபாட்டு மரபு

திருமிகு. வே.ஜெயமாலா,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

முன்னுரை:

உடலுக்கு உணவு இன்றியமையாதது. உயிருக்கு உள்ளத்து நெகிழ்ந்த வழிபாடு இன்றியமையாதது. வழிபாட்டில் தனக்காகவும், ஒருபடி மேலாகப் பிறர் நலனுக்காகவும் வேண்டுதல் முறையாகும். இத்தகைய வழிபாடு ஒவ்வொரு கோயிலிலும் நடைபெறுகின்றது. ஊரக்குடி அருள்மிகு வரத ஐயனார் திருக்கோயிலில் நடைபெறும் வழிபாடுகள், விழாக்கள் பற்றிக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வழிபாடு:

உலகம் இன்று ஒரளவாவது நியதியுடன், ஒழுங்குடன் செயல்படுவதற்குக் காரணம் நம்மை மீறிய ஒரு சக்தி இருக்கிறது என்று மக்கள் எண்ணுவது எனலாம். மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்ற உணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டுநெறிக்கு வித்திட்டது என்று கலைக்களஞ் சியம் கூறுகிறது.

மனத்தை இறைவனிடம் வழிபடுத்துவது வழிபாடு ஆகும். வழிபாடு என்பது ஒரு சடங்கு, ஓர் உயிர்ப்புள்ள முயற்சி, அறிவார்ந்த ஆள்வினை, மனிதன் எண்ணுதல், நினைத்தல் ஆகிய அகநிலைப் பயிற்சிகள் மூலம் தன்னை உயர்த்திக் கொள்வதற்குத் துணை செய்வது ஆகும்.

வழிபாட்டின் வகைகள்:

வழிபாடு என்னும் சொல்லுக்குத் தொழுதல், வணங்குதல் போன்ற விளக்கங்கள் உண்டு. இவ்வழிபாடானது நாள் வழிபாடு, வார வழிபாடு, சிறப்பு வழிபாடு, ஆண்டு வழிபாடு எனப் பல வகைப்படும்.

Koviloor Digital Library

நாள்வழிபாடு என்பது தினந்தோறும் நிகழும் பூசைகளைக் குறிக்கும். வாரவழிபாடு என்பது செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் பூசைகளைக் குறிக்கும். சிறப்பு வழிபாடு என்பது ஆண்டின் முக்கிய தினங்களில் நிகழும் பூசைகளைக் குறிக்கும். ஆண்டு வழிபாடு என்பது ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் விழாக்களைக் குறிக்கும்.

நாள்வழிபாடு:

சைவ ஆகம முறைப்படி ஒரு நாளைக்கு ஆறுகாலப்பூசைகள் சிவாலயங்களில் நடைபெற வேண்டும். இதை ஆறு காலப்பூசை அல்லது நித்திய வழிபாடு என்பர். பூசை முறையாவது ஒவ்வொரு நாளும் அவ்வக் கோயிலுக்குரிய வசதிகளுக்கும், மரபுகளுக்கும் ஏற்பப் பலமுறை நிகழும்.

சிறுதெய்வ வழிபாட்டில் ஒருவேளை அல்லது செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் வழிபாடுகள் நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

ஊரக்குடி வரத ஐயனார் கோயிலில் ஒரு நாளைக்கு ஒரு காலப் பூசையும், விழாக்காலங்களில் மூன்றுகாலப் பூசைகளும், சிவன்ராத்திரி போன்ற சிறப்பு நாள்களில் நான்கு காலப் பூசைகளும் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு நாளும் காலையில் ஒன்பது மணியளவில் இப்பூசை நடைபெறும். இப்பூசையின் போது அர்ச்சகர் நீராடி, தூய ஆடைகளை அணிந்து, நெற்றியில் திருநீறு பூசிக் கோயிலுக்கு வருவார். முதற்கண் வரத ஐயனாருக்குப் பூசை நிகழ்த்துவார். அப்போது தீப, தூப ஆராதனைகள் இடம்பெறும்.

தொடர்ந்து பரிவார தெய்வங்களாக வீற்றிருக்கும் சக்தி விநாயகர், முருகன், இடும்பன், முத்தையா, துளசியம்மன், காத்தாயி, ராக்காயி, பேச்சி, மாடன், சோனையா, கருப்பர், சின்னக்கருப்பர், பைரவர், பாட்டையா, ஆஞ்சநேயர் ஆகியோருக்கும் தீப, தூப ஆராதனைகள் நிகழ்த்தப்பெறும்.

இப்பூசையின் போது சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியமாகப் படைக்கப்பெறும். கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கொண்டு வரும் பால், தயிர், சந்தனம் போன்றவை அபிடேகம்

Koviloor Digital Library

செய்யப்பெறும். இக்கோயில் பூசாரி நாள்தோறும் காலை நேரங்களில் இப்பூசையை நிகழ்த்துவார்.

விழாக்கள்:

விழா என்பது விழைவு என்ற சொல்லின் திரிபாகும். வடமொழியில் இதனை உற்சவம் என்று அழைப்பர். "உத்" என்றால் படைத்தல் "ச" என்றால் காத்தல் "வ" என்பது அழித்தலையும் குறிக்கும். விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம்நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும் என்பர் இரவீந்திரநாத்தாகூர்.

இறைவன் மக்களைத் தேடி வருவதற்குத் திருவிழாக்கள் உறுதுணை செய்கின்றன. வயது முதிர்ந்தவர்கள், நோயுற்றோர், சாதி வேறுபாடுகள், மதவேறுபாடுகள் போன்ற சூழல்களால் கோயிலுக்குள் போக முடியாதவர்கள், இறைவன் உற்சவ மூர்த்தியாக உலா வரும்போது கண்டு தரிசனம் செய்ய ஒரு வாய்ப்பாக அமைகின்றது.

விழாக்கள் மக்கள் மகிழ்ச்சியோடு இருப்பதற்கும், இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் ஏற்பட்ட திருநாள்களாகும். திருவிழா ஒவ்வொன்றும் தீமையை அழித்து நன்மையை ஓங்கச் செய்த கடவுளின் பெருமையைக் கொண்டாடுகின்றன. மக்களுக்கு ஒரு ஆன்மீகச் சூழலையும், சுகத்தையும், ஆன்மாவைப் பண்படுத்தித் திருத்தி அமைக்கவும் வழிவகை செய்கின்றன என்பர்.

சிறப்பு வழிபாடுகள்:

சிறப்பு வழிபாடு என்பது நாள்தோறும் அன்றி விழாக் காலங்களில் மட்டும் நடத்தப்பெறும் பூசையாகும். இங்கு தமிழ் வருடப்பிறப்பு, ஆடிமாத விளக்குப்பூசை, தீபாவளிப் பண்டிகை, திருக்கார்த்திகை, திருப்பள்ளி எழுச்சி, தைப்பொங்கல், சிவன்ராத்திரி போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும்.

தமிழ் வருடப்பிறப்பு:

சித்திரை முதல் தேதி தமிழ் வருடப் பிறப்பின் போது இறைத் திருவுருவங்களுக்குச் சிறப்புப் பூசைகள் செய்யப்படும். இந்நாளில்

Koviloor Digital Library

ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் இத்திருக்கோயிலில் வந்து வழிபட்டுச் செல்வர். அவ்வாறு வழிபடுவதன் மூலம் ஆண்டு முழுவதும் ஐயனார் தம்மை மகிழ்வாக வைத்திருப்பார் என்பது பொதுமக்களின் நம்பிக்கை ஆகும்.

வருடப்பிறப்பு அன்று பூசாரியால் பொங்கல் வைக்கப்பட்டு, அப்பொங்கல் இறைப்படி மக்களுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்படும். அன்று ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் சார்பில் பல அப்டேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெறும்.

தீபாவளிப் பண்டிகை:

தீபாவளிப் பண்டிகையின் பொது இறைத்திருவுருவங்கள் அனைத்திற்கும் எண்ணெய்க்காப்பு சாத்தப்பட்டு அதன்பின்பு புத்தாடைகள் அணிவிக்கப்பெறும். அதன்பின் தீப, தூப ஆராதனைகள் செய்யப்பட்டு கோயிலின் முன் பட்டாசுகள் வெடித்துத் தீபாவளித் திருநாள் கொண்டாடப்படும்.

திருக்கார்த்திகை:

கார்த்திகை மாதத்தில் இவ்விழா நடைபெறும். கார்த்திகை நட்சத்திரம் கந்தனுக்கு உரியது. கந்தன் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன். கார்த்திகை நாளில் இறைவனை வழிபடுதல் சிறப்பானதாகும். இவ்விழாவை முன்னிட்டு இக்கோயிலில் சிறப்புப் பூசைகள் நடைபெறும். முருகனுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப் பெறுகிறது. மற்ற தெய்வங்களுக்கும் பூசைகள் நிகழ்த்தப்பெறும்.

திருப்பள்ளி எழுச்சி:

பண்டைக் காலத்தில் அரசன் இரவில் துயில் கொண்டு இருக்கையில் பாணர்களோ, புலவர்களோ இவர்களை அதிகாலையில் துயில் எழுப்புவார்கள். இதனை இலக்கண நூல்கள் 'துயிலெடை நிலை' என்று கூறும். இம்முறை நாளடைவில் இறைவனுக்கும், இறைவிக்கும் பின்பற்றப்பட்டது.

இக்கோயிலின் திருப்பள்ளி எழுச்சி, மார்கழி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை முன்னிட்டு மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. இறைவனுக்கு

Koviloor Digital Library

எண்ணெய்க்காப்பு சாத்துதல், அபிடேக ஆராதனை செய்தல் போன்றவையும் நிகழும். ஒரு நாள் பொழுதின் அதிகாலையில் நடைபெறும் பூசையே, திருப்பள்ளி எழுச்சி என்று சிறப்பாகப் போற்றப்படுகிறது.

தைப்பொங்கல் விழா:

உழவர் திருநாளாம் பொங்கல் திருநாள் தை மாதம் முதல் தேதியில் கொண்டாடப்படுகிறது. இத்திருநாளில் இறைச்சந்ததியின் முன்பு புதிய பானையில் மஞ்சள் கொத்தைக் கட்டி அடுப்பில் ஏற்றிப் பாலும், நீரும் ஊற்றிய பிறகு அரிசி, பருப்பு, சர்க்கரை இட்டுப் பொங்கலிடுவர். இப்பொங்கல் ஐயனார் மற்றும் பிற தெய்வங்களுக்கும் நைவேத்தியமாகப் படைக்கப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

சிவராத்திரி:

ஐயனார் மாசி மாதம் அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரியன்று பிறந்ததாக ஐதீகம். அதனால் தான் ஐயனார் கோயில்களில் சிவராத்திரி அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இவ்விழாவை முன்னிட்டு ஐயனார் கோயிலில் உபயதாரரர் களால் கீழ்க்கண்டவாறு நான்குகாலப் பூசைகள் தவறாமல் நடைபெறும்.

சிவராத்திரியன்று நடைபெறும் நான்குகாலப் பூசைகள்

வ. எண்	பூசைகள்	காலம்	நைவேத்தியம்
1.	காலசந்தி	சூரிய உதயத்திற்குப் பின் காலை 7.00 மணி முதல் 9.00 மணிவரை	சர்க்கரைப் பொங்கல்
2.	உச்சிக் காலப் பூசை	சூரிய உதயத்திற்குப் பின் காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை	சர்க்கரைப் பொங்கல்

Koviloor Digital Library

3.	சாய ரட்சை	சூரிய உதயத்திற்கு முன் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை	சுத்த அன்னம்
4.	அர்த்த சாமம்	சூரிய உதயத்திற்குப்பின் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரை	வெண் பொங்கல் தயிர்சாதம்

ஆண்டு வழிபாடு:

ஆண்டு வழிபாடு என்பது ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் விழாவாகும். இக்கோயில் புரவி எடுப்புத் திருவிழா ஆவணி மாதத்தில் பதினைந்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. இவ்விழா வருடந்தோறும் ஆவணி முதல் ஞாயிறு அன்று காப்பகக்கட்டி, அன்று முதல் பதினைந்தாவது நாளான ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

காப்புக்கட்டுதல் என்று சொல்லப்படும் திருவிழா முதல் நாள் தொடங்கப்படும். இதனைக் கொடி வளைதல் என்றும் கூறுவர். ஆவணி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று காப்புக்கட்டி, அதிலிருந்து பதினைந்து நாட்கள் திருவிழா நடைபெறும். ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் இருபது அல்லது இருபத்து ஒன்றாம் நாள் திருவிழா முடிவுக்கு வரும்.

ஆவணி மாதம் முதல் ஞாயிறு அன்று ஊரக்குடியில் காலை பத்து மணிக்கு ஊர்மக்கள் ஊர்ப்பொதுவிடத்தில் அனைவரும் ஒன்றாகக்கூடி வைக்கோல் பிரி திரிந்து, வேப்பிலை, மாவிலை போன்றவற்றையும் சேர்த்து ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் தலைமையில் காப்புக்கட்டுவர்.

பின் ஐயனார் கோயிலில் உள்ள கருப்பர் என்ற கருப்பையாவிற்குத் தாங்கள் கொண்டு வந்த வெள்ளாட்டுக் கிடாயை வெட்டிப் பலி கொடுத்து, தீப, தூப ஆராதனைகள் செய்து வழிபடுவர். கருப்பர் சந்நிதியில் கிடாய் வெட்டும் போது ஐயனார் சைவம் என்பதால் அவரது சந்நிதியைத் திரைபோட்டு மறைத்துவிடுவர். இந்த நிகழ்ச்சியோடு காப்பகக்கட்டுதல் நிகழ்ச்சி முடிவடையும்.

காப்புக் கட்டியதில் இருந்து பன்னிரண்டு நாள் கழித்து பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து ஆகிய மூன்று நாட்கள்

Koviloor Digital Library

வரத ஐயனாருக்குத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

குதிரைக்குக் கண் திறக்கும் நிகழ்ச்சி

மூன்று நாள் திருவிழாவில் முதல் நாளான வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணி அளவில் ஊர் அம்பலகாரரர், பஞ்சாயத்துத் தலைவர், ஊர்ப் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஊர்ப் பொதுவிடத்தில் ஒன்றுகூடி அங்கிருந்து கொட்டு, மேள, தாளத்துடன் வரத ஐயனார் கோயிலின் பூசாரி வீட்டிற்குச் செல்வர்.

அங்கு தயார் நிலையில் செய்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு குதிரைகள் உட்பட, நேர்த்திக் கடனுக்காகப் பக்தர்கள் வாங்கும் குதிரைகள் அனைத்திற்கும் சேவலைப் பலி கொடுத்து தீப, தூப ஆராதனைகள் செய்து குதிரைகள் அனைத்திற்கும் வேட்டி கட்டிக் கண் திறப்பர்.

பின் அக்குதிரைகளைத் தூக்கிக் கொண்டு ஊரக்குடி ஊர் முழுவதும் சுற்றி வந்து ஊர்ப் பொதுவிடத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் புதிய இலை மெத்தை இருக்கையில் இறக்கி வைப்பர்.

சனிக்கிழமை காலை பத்து மணி அளவில் ஊரக்குடி பொதுவிடத்தில் பூசாரி அரிவாளை தூக்கிக் கொண்டு சாமி ஆடிக் குறி சொல்வார். சுமார் ஒரு மணி நேரம் இந்நிகழ்ச்சி நடைபெறும். பின் குதிரைகளின் முன் ஒரு கிடாயை வெட்டிப் பலி கொடுத்து, தீப, தூப ஆராதனைகள் காட்டிப் பின் குதிரைகள் இரண்டையும் முன்னே தூக்கிச் செல்வர்.

பின் மற்ற நேர்த்திக்கடன் குதிரைகள் அனைத்தையும் இரண்டு குதிரைகளுக்குப் பின்னே கோயிலை நோக்கித் தூக்கிச் செல்வர். அப்போது கொட்டு, மேள தாளம் முழங்க பஞ் சாயத்துத் தலைவர், அம்பலகாரரர் உட்பட ஊர்ப்பொதுமக்கள் அனைவரும் குதிரைக்குப் பின் செல்வர்.

தூக்கிச் சென்ற குதிரைகளை வரத ஐயனார் கோயிலின் முன்புறம் கொண்டு சென்று கொட்டு மேளம், குலவைச் சத்தங்கள், மணி ஓசைகள் முழங்க இறக்கி வைப்பர்.

Koviloor Digital Library

ஞாயிற்றுக் கிழமையான இறுதிநாளே மூன்றாம் நாள் திருவிழா ஆகும். அன்று காலை பத்து மணி அளவில் ஊரக்குடி கிராமத்து மக்கள் ஐயனார் கோயிலுக்கு முன் சர்க்கரைப் பொங்கல் வைத்து, ஐயனார் மற்றும் அனைத்துப் பரிவார தெய்வங்களையும் தாங்கள் நல்வாழ்வு பெற வேண்டுவர்.

அன்று மாலை நான்கு மணி அளவில் ஊர்ப் பொதுவிடத்தில் கிராமத்து மக்கள் அனைவரும் ஒன்று கூடி, அங்கிருந்து கொட்டு, மேள தாளத்துடன் அம்பலகாரர், பஞ்சாயத்துத் தலைவர் உட்பட அனைவரும் காட்டுப் பகுதியில் இருக்கும் கருப்பையா கோயிலுக்குச் சென்று, அங்கு ஆட்டுக்கிடாய் ஒன்றை வெட்டிப்பலி கொடுத்து, சாமி கும்பிட்டுவிட்டு வருவர்.

பின் கருப்பையா கோயிலில் இருந்து அக்காட்டுப் பகுதியிலேயே உள்ள முனீஸ்வரர் கோயிலுக்கு வருவர். அங்கு வந்து ஓர் ஆட்டினை வெட்டிப் பலி கொடுத்துவிட்டுச் சாமி கும்பிட்டு அங்கு ஏற்கெனவே தயார் நிலையில் வைத்திருக்கும் ஒரு காளைமாட்டினை அம்பலகாரர் அவிழ்த்துவிடுவார்.

பின் அதே கொட்டு, மேள தாளத்துடன் வரத ஐயனார் கோயிலுக்கு வருவர். ஐயனார் கோயிலில் ஒரு கோயில் மாடு கட்டியிருக்கும். அந்தக் கோயில் மாட்டையும் அம்பலகாரர் அவிழ்த்துவிடுவர். பின் ஊர்மக்கள் அவரவர் வீட்டிலிருக்கும் காளைமாட்டினை மஞ்சுவிரட்டுப் போல ஊர்ப் பொதுவிடத்தில் அவிழ்த்து விடுவர். பின் கோயிலுக்குள் சென்று ஊர்மக்கள் அனைவரும் சாமி கும்பிடுவர். பின் நேர்த்திக்கடனான வாழைப் பழங்கள் சூறைவிடப்படும். பின் கிராமத்து மக்கள் சாமி கும்பிட்டுவிட்டு அவரவர் வீட்டிற்கு கிளம்பிச் செல்வர்.

முடிவுரை:

மனிதன் ஆண்டு முழுவதும் உழைத்து ஓய்வு பெற்ற நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவது இயல்பு. கோயில் என்றாலே திருவிழா, திருவிழா என்றாலே கோயில் என்ற நினைவு வரும்.

Koviloor Digital Library

வள்ளலார் சுட்டுகின்ற தீபவழிபாடு

முனைவர் **கோ.வேதாகமம்**,
துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி

உயிர்கள் இறைநிலையை அடைவதற்காகச் சமயவாதிகளாலும் மதவாதிகளாலும் பற்பல முறைகள், கருவிகள் ஆக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உயிரும் தாம் விரும்பும் கருவியை, முறையைப் பின்பற்றி, இறைவனுடைய திருவடி நீழலில் சேருகின்றன.

'வழிபாடு என்பது முன்னோர்கள் காட்டிய வழியில் வழிப்படல், பின்பு வழிபடல் என்றாயிற்று. வழிபாடு என்ற சொல் இன்று தொழுதல், வணங்குதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது" (நாகப்பா, நாச்சியப்பன், திருக் கோயில் வழிபாடு, ப.20)

அவ்வகையில், இறைவனடி அடைவதற்காக ஏற்படுத்திக் கொண்ட மனம் உருகித் தொழுகின்ற கோயிலிலும் இல்லத்திலும் சில பல சடங்குகளோடும் வணங்குகின்ற இம்முறைக்கே வழிபாடு என்று பெயராம்.

வழிபாட்டின் பயன் உயிரை உய்விக்கச் செய்வதாம். உயிரில் பதிந்திருக்கின்ற இருள் நீங்குவதற்கு வழிபாடு துணைசெய்கிறது.

அகலிடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத்து என்றைப் போகவிட்டானைப்
பகலிடத் தும்இர வும் பணிந்து ஏத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே (திருமந்திரம், பா.4)

மெய்ப்பொருளான இறைவனை வழிபட்டு இருளாகிய ஆணவம், மாயை, கன்மம் ஆகியவற்றை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். ஆகவே, இரவும் பகலுமாய் வழிபடுவதன் நோக்கம் உயிரில் பதிந்துள்ள இருளை நீக்குவதற்காகும்.

வள்ளலார் சுட்டும் வழிபாடு

வழிபாடு செய்கின்றபோது, உயிர், உள்ளம், உடல் மாறுபாடு

Koviloor Digital Library

அடைகின்றன. இம்மாறுபாடானது இறைவனை நோக்கிய பயணமாக அமைகிறது. அதாவது, இறைத்தன்மைக்குள் உயிர் இணைந்துகொள்ளக் காரணமாக அமைகின்றது. இப்படிப்பட்ட இறை- உயிர் இணைவை எளிதில் வயப்படுத்தி உயிரை உய்விக்கச் செய்வது தீப வழிபாடாகும் என்பது வள்ளலார் சுட்டும் வழிபாடாகும். ஒளியாகிய சோதியே தனக்குச் சாகாக் கல்வியைப் பயிற்றுவித்தாகக் கூறுகிறார்.

சாகாக் கல்விஎனக்குப் பயிற்றித் தந்த சோதி யே
தன்னேர் முடிஒன் றெனது முடியில் தரித்த சோதி யே
ஏகாக் கரப்பொற் பீடத்தென்னை ஏற்று சோதி யே
எல்லாம் வல்ல சித்திஆட்சி ஈய்ந்த சோதி யே.

(திருவருட்பா, ஆறாவது திருமுறை, மெய்யருள்வியப்பு)

வள்ளலார் தொடக்கக் காலத்தில், சைவசமயப் பற்றுடையவராக இருந்து, பற்பல சமயப் பாசுரங்களைப் பாடி-யிருந்தாலும், சித்தியடையும் காலத்தில் அவர் உபதேசித்தவையே வள்ளலாரின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படுகிறது.

"யோகிகள் வனம், மலை, முழை முதலியவற்றிற்குப் போய் நூறு, ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ்செய்து இவ்வுஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள். இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும் இதைவிடக் கோடிப்பங்கு பத்துக் கோடிப்பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம்." (வள்ளலார் அருளிய உரைநடைப் பகுதி- பேருபதேசம்) என்று குறிப்பிடுகிறார். முனிவர்கள், யோகியர் பெறுவனவற்றை ஒவ்வொருவரும் தத்தம் வீட்டிலேயே அதனைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு ஜாம நேரம் (மூன்று மணிநேரம்) மனதில் இகவிசாரம் இன்றி, (உலகியல் சிந்தனை இல்லாமல்) இறைவனை நினைத்துக்கொண்டிருந்தாலே இறைவருடைய திருவருளைப் பெறமுடியும் என்பதே வள்ளலார் சுட்டுவதாகும். அப்படி ஒரே இடத்தில் அமரும்போது அதற்கான ஒரு வழிபாட்டு முறையை விளக்குகிறார்.

"சித்தி வளாக வழிபாட்டு விதி, *1873*

Koviloor Digital Library

(வள்ளற்)பெருமானார் திருமுக வருடம் கார்த்திகை மாதத்தில் உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப் புறத்தில் வைத்து, "ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகின்றபடியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல் நினைந்து நினைந்து என்னும் தொடக்கமுடைய 28 பாசுரமடங்கிய- பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள்" (திருவருட்பா, உரைநடைப்பகுதி, ப.555) என்று வள்ளலார் தீப வழிபாட்டை மட்டும் குறிப்பிட்டு நெறிப்படுத்தியுள்ளது தெரிகிறது.

தீபத்தின் முன்னிலையில் தெய்வ பாவனையுடன் துதிக்க வேண்டிய பாசுரம்

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே

(திருவருட்பா, 6ஆம் திருமுறை,ஞானசரியை–1)

தீப வழிபாட்டு இலக்கணம்

தகரம் என்பது சரீரம்- தேகம்
கண்ணாடி என்பது மனம்- அந்தக் கரணங்கள்
சுடர் என்பது - ஜீவன்
அகல் விளக்கு- உடம்பு
நெய்- செந்நீர் (இரத்தம்)
திரி- விந்து ஆற்றல் (உடற்சத்தி)
சுடரொளி- உயிர் ஒளி

இவ்வாறான பாவனையை முதலில் வருவித்துக் கொள்ள வேண்டும். இப்பாவனையும் ஞான சரியைப் பரதரப் பாவனையும் இணைந்து தீபத்தை வழிபட்டு வந்தால் நாளடைவில் நல்ல பயிற்சி ஏற்பட்டு இறைவரிடம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். இதுவே, வள்ளற்பெருமான் சுட்டுகின்ற தீபவழிபாடு ஆகும்.

Koviloor Digital Library

ராஜயோகம் தரும் குச்சனூர் வடகுரு பகவான் - திருக்கோயில் தலபுராணமும் தலவழிபாடும்

பேரா, முனைவர் வே.மாணிக்காத்தாள் பிச்சை
சென்னை - 600 116.

முன்னுரை

தட்சிணாமூர்த்தி என்ற குருபகவான் வழிபாட்டைத் தமிழர்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே கடைபிடித்தனர் என்பதைச் சங்ககால வேதங்களாகிய நமது இலக்கியங்கள் காட்டுகின்றன. புறநானூற்றில் ஆலமர் கடவுள் பற்றி 'கடவுள் ஆலதத்து' (199) 'ஆலமர் கடவுளன்ன' (198) "பால்புரை பிறை நுதற்பொலிந்" சென்னி, நீலமணி பற்றன எனப் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன. கலித்தெகையில் ஆலமர்ச் செல்வன் (81), (83) என்றும் திருமுருகாற்றுப்படையில் 'ஆல் கெழு கடவுள்' (24 - 12) என்றும் மணிமேகலையில் 'ஆலமர் செல்வன்' (3-144) என்றும் போற்றி குருபகவான் வணங்கப்பட்டுள்ளார். அப்படிப்பட்ட பெருமைக்குரிய குருபகவான் வடக்கு நோக்கித் தேனி மாவட்டத்தில் குச்சனூரில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். இந்தக் குருதலத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருத்தலம் தோன்றிய வரலாறு

'செண்பக நல்லூர்' சனீஸ்வர பகவான் பூலோகத்தில் சுயம்புவாகத் தோன்றிய திருத்தலம் என்றெல்லாம் போற்றப்படும் பழமையும் பெருமையும் மிக்க குச்சனூர் சனிபகவான் திருக்கோயிலுக்கு அருகில் இந்த வடக்கு நோக்கிய தட்சிணாமூர்த்தி கோயில் உள்ளது. குச்சனூர் (தேனி மாவட்டம்) தேனியிலிருந்து 20கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

இவ்வாலயம் தோன்ற மூலகாரணமாக விளங்கியவர் முத்தானந்த சுவாமிகள். இவரது இயற்பெயர் முத்துச்சாமி. இவர் குச்சனூரைச் சேர்ந்த கருப்பண பிள்ளை - முத்தம்மாள் தம்பதியருக்கு 2ஆவது ஆண் மகனாகப் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் 4 பேர்.

Koviloor Digital Library

முத்துச்சாமிக்கு எட்டு வயது ஆகும் போது கோவிலூர் ஆதீனத்தில் இருந்து சோமசுந்தர சுவாமிகள் குச்சனூர் சனிபகவானைத் தரிசிக்க வந்தார். அப்போது முத்துசாமியின் முகத்தில் தெய்வீக ஒளி வீசுவதைக் கண்டு அவரைப் பெற்றோரின் அனுமதியுடன் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவா துறவறம் பூண்டார். முத்துசாமி முத்தானந்த சுவாமிகள் ஆனார். முத்தானந்த சுவாமிகள் பல்வேறு இடங்களில் இறைப்பணியாற்றி விட்டு இறுதியில் குச்சனூர் வந்தார். அங்கு ஆன்மீகப் பணிக்காக ஆதீனம் ஒன்றை உருவாக்கினார். அப்போது அவரது கனவிஜீல் சிவபெருமான் தோன்றி தனக்கு குச்சனூரில் ஆலயம் அமைக்கும்படியும் அங்கு வடதிசை நோக்கிய குருபகவானையும் பிரதிஷ்டை செய்யும்படியும் கூறினார்.

சிவனின் உத்தரவுப்படி ஆலயம் அமைக்கும் முயற்சியில் முத்தானந்த சுவாமிகள் ஈடுபட்டார். ஆனால் பணி பூர்த்தியாகும் முன் அவர் 1964 ஆம் ஆண்டு முக்தி அடைந்து விட்டார். அதன்பின் இப்போது கோதவில் முழுமை பெற்று விட்டது. இங்கு குருபகவான் வடக்குத்திசை நோக்கி யானை மீது அமர்ந்து ராஜயோகத்தில் அருள்பாலிக்கிறார். வடக்கு நோக்கி தனி சன்னதியில் அங்கு குருபகவான் இருப்பதால் இவரை வணங்குவோருக்கு எந்தத் தடையையும் முறியடிக்கும் வல்லமையைக் கொடுப்பார். மேலும் ராஜயோகத்தில் இருப்பதால் வாழ்க்கையில் முன்னேற்ற அம்சங்களைக் கொடுப்பார் என்று பக்தர்கள் நம்புகின்றனர். இக்கோயில் வளாகத்தில் கதலி வாழை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்குத் திருமணத்தடை உள்ளவர்கள் வாழைத் திருமணம் நடத்தி பரிகாரம் செய்து பயன்பெறுகின்றனர்.

"கதலி வாழை" மரம் - இத்திருத்தலத்தின் தலவிருட்சமாக விளங்குகிறது.

தலச்சிறப்பு

வாழ்க்கையில் திறமையிருந்தும் முன்னுக்கு வர முடியாமல் சிலர் திகைப்பதைப் பார்க்கிறோம். எவ்வளவு சம்பாதித்தாலும் போதாமல் பலர் திணறுவதைக் காண்கிறோம். நல்ல அழகும் வசதி வாய்ப்புகள் இருந்தும் பெண்களுக்குத் தகுந்த வரன்

Koviloor Digital Library

அமையாமல் தட்டிப்போகிறது. ஆரோக்கியத்தில் குறையற்ற சில தம்பதிகளுக்கும் குழந்தைச் செல்வம் கிடைப்பதில்லை. பலருக்குக் கடன் தொல்லையால் மூச்சுத் திணறுகிறது. வேறு சிலர் பிள்ளைகளின் ஒழுக்கக் குறைவான நடத்தையால் பேதலிக்கின்றனர். சிலர் தங்கள் முன்னோர் தேடிய சொத்தை விற்க முடியாமல் விரக்தியில் உள்ளனர். சிலருக்கு ஆர்வமும், திறனும் இருந்தும் கலைத்துறையில் கதவு தட்டினாலும் திறக்காத கற்கோட்டையாகவே இருக்கும்.

இப்படி எத்தனையோ வித இன்னல்களைப் பட்டியலிடலாம். பெரும்பாலும் ஜாதகத்தில் முன்னோர் வினை (பிதுர்தோஷம்) இருப்பதே இது போன்ற பல பெரும் பிரச்சினைகளுக்கும் காரணம் என்பது வல்லுநர்களின் கருத்து. இப்படிப்பட்ட தோசங்களை நிவர்த்தி செய்து நன்மை அளிப்பவர் தான் குச்சனூர் வடகுரு என நம்புகின்றனர்.

வடகுரு ராஜயோக பீடத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பகல் 12 மணிக்குள் தோஷ நிவர்த்தி பரிகாரம் பூசை செய்து கொள்பவர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கிறது. சுரபி நதியின் தீர்த்தம் பிருந்தவனத்தின் மண், சிவபெருமான் மற்றும் வடகுருபகவானின் பிரசாதம் ஆகிய மூன்றும் பரம்பொருளின் வடிவங்கள். சிவபெருமானுக்கு நவேதிக்கப்பட்ட உணவை உண்பவன் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபட்டுச் சுத்தமான மனம் உடையவனாக ஆகிவிடுவான் என்கின்றனர் அருளாளர்கள்.

சிவபெருமானே இந்த ராசயோக பீடத்தின் பிரதான மூர்த்தியாக இருப்பதால் பிரழிதூஷ பூசைகள் தவறாமல் நடந்து வருகிறது. திருமணத் தடங்கல் நீங்க, குடும்ப ஒற்றுமைக்காக, வியாபார விருத்திக்காக, குழந்தைப் பேற்றுக்காக, வழக்குகளில் வெற்றிபெற, குழந்தைகளின் கல்வி மேன்மைக்காக இத்திருத்தலத்தில் தோஷ நிவர்த்திப் பரிகார பூசைகள் நடைபெறுகின்றன. மேலும் பூசை முறைகள் தெய்வத் தமிழ் நெறியில் செய்து வேதங்கள் ஓதப்படுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகா மகத்திற்குச் சென்று தரிசனம் செய்யாதவர்கள் குச்சனூர் திருத்தலத்திற்குச் சென்று

Koviloor Digital Library

சுரபி நதியில் நீராடி சிவபெருமானையும் குருபகவானையும் ஒரே நேரத்தில் வழிபடுபவர்கள் வேண்டிய வரம் பெறுவர் என்பது முத்தானந்த சுவாமிகளின் அருள்வாக்கு என்கின்றனர். அருளாளர்கள் தேவர்களும் முனிவர்களும் தங்கியிருந்து தவம் செய்த புண்ணிய பூமி. சுருளி தீர்த்தம் சுருளி ஆண்டவர் என்று போற்றப்படும் முருகப் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் இத்திருத்தலத்திலிருந்து வரும் தீர்த்தம் சுரபி நதியில் கலந்து வருவதால் இது புண்ணிய நதியாகக் கருதப்படுகிறது. இதனால் தான் 200ஆம் ஆண்டு மகாமகமும் குருப்பெயர்ச்சியும் ஒன்று சேர வந்ததால் அந்த ஆண்டிலேயே இத்திருக்கோவிலுக்குத் தெய்வத்தமிழ் நெறியில் *01.02.2004* அன்று குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது. இதுவே இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பு.

கோரமான இந்த கலியுகத்தில் துன்பங்களால் கஷ்டப்பட்டு மனமுடைந்து கிடப்பவர்கள் ஒருமுறையேனும் குச்சனூர் திருத்தலம் சென்று மேற்படி வடகுருபகவானைத் தரிசிக்க வேண்டும். குருபகவானின் சன்னிதி நிம்மதியின் நிரந்தர இடம் என நம்புகின்றனர். விளையாட்டாக வந்து இந்த ஆலயத்தைத் தரிசிப்பவர்கள் கூட புனிதமடைகிறார்கள். இது பொய்-யில்லை வந்து பாரீர் என்று உறுதிபடக் கூறுகின்றனர் கோவில் நிர்வாகிகள்.

குருபகவான் பூசைமுறை

இங்குப் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் குருபகவானைத் தேங்காய், பழத்துடன் நெய் தீபம் அல்லது எண்ணெய் தீபம் ஏற்றியும் கொண்டைக்கடலை மாலை அணிவித்தும் வழிபடுவது சாலச்சிறந்த பரிகாரமாகும். முக்கியமாக குருவாரம் எனப் போற்றிப் புகழப்படும் வியாழக்கிழமைகளில் திருநீறு அணிந்து குருதோத்திரத்தைப் பதினெட்டு முறை பாராயணம் செய்வது நல்ல பலன்களை அளிக்கும் சக்தி கொண்ட துதி ஆகும். அந்த கிழமைகளில் உண்ணாமல் விரதம் இருப்பது மேலும் நற்பலன்களை அளிக்கும்.

நெற்றி மட்டும் உடலில் திருநீறு மங்காமல் பூசி மகிழ்ந்து சிவனை வணங்கி இறைவா இனி தவறு ஏதும் செய்யமாட்டேன்.

Koviloor Digital Library

நல்லதையே நினைப்பேன். நல்லதையே பேசுவேன் நல்லதையே செய்வேன் என்று முறையிட்டு பின்பு குரு தோத்திரத்தை பாராயணம் செய்ய வேண்டும்.

குரு தோத்திரம்

நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க


எனத் தொடங்கி போற்றித் திருத்தாண்டகம், கோளறுபதிகம், வடகுரு தோத்திரம் முதலிய தோத்திரங்களைப் பாராயணம் செய்வது நலம் என்கின்றனர்.

வியாழக்கிழமைகளில் கோவில்கள் சென்று குருபகவானை வழிபடுவதோடு தினமும் வீட்டில் குருபகவான் தோத்திரத்தைப் பாடுவதால் தோசம் குறைந்து நன்மைகள் பெருகி வருவதைக் காணலாம். காலை நேரத்தில் பூசை அறையில் மஞ்சள் பொடியில் 'சிவ சிவ' என்றும் 'குருவே சரணம்' என்றும் எழுதி விளக்கேற்றி மேற்கண்ட குருதொத்திரத்தைத் தொடர்ந்து 108 நாட்கள் மாமிசம், மது போன்றவற்றைத் தவிர்த்துப் பாராயணம் செய்துவர, கேட்ட வரத்தை இந்த வடகுருபகவான் தந்தருள்வான். மாமிசம், மது, பால், தயிர், நெய், ஹார்லிக்ஸ், போன்விட்டா போன்ற மாவுப் பொருள்களை விரத நாட்களில் தவிர்க்க வேண்டும் என்கின்றனர் குச்சனூர் ஆசிரம சைவ நெறியைச் (சிவ பக்தியை பாதுகாக்கவும் வளர்ப்பதற்குமான திருமடம் இது தனியார் பரம்பரைக்குச் சொந்தமான சைவ நிறுவனம். இங்கு உண்டியல் இல்லை, அர்ச்சனைச் சீட்டு இல்லை ஆதீனகர்த்தரின் (குருநாதரின்) அருளாசி பெறவும், வடகுருவின் அருளாசி பெறவும், முன் அனுமதி பெற்றுவர வேண்டும் பக்தர்களுக்குச் சனிக் கிழமையில் ஒரு வேளை உணவு வழங்குகிறார்கள். திருக்குறள், திருமுறைவழி திருமணம் செய்து வைக்கின்றனர்.

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 30296

Koviloor Digital Library

Koviloor Digital Library



‘கோயிலைச் சார்ந்த குடிகள்; குடிகளைச் சார்ந்த கோயில்’ என்பது தமிழரின் வாழ்வியல் நெறி. இதனைத் தமிழகம் முழுவதும் உள்ள நிமிர்ந்து நிற்கும் கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில் களும் அவற்றுள் எழுகின்ற நல்லிசை அரவமும், நான்மறை ஒலியும் நாள்தோறும் எடுத்துரைத்து வருதல் கண்கூடு. இக்கோயில்களில் ஏராளமான சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இப்பயன்பாட்டுச் சொற்களைத் தொகுத்துக் கலைச்சொல் அகராதி உருவாக்கும் பணியைத் தமிழ்ப்பண்பாட்டு மையம் மேற்கொண்டு வருகிறது.

கரிலன் பதிப்பகம்

ISBN 978-93-84428-37-2

9 789384 428372